
வந்துவிட்டார்! திகம்பர சாமியார்
மதன
கல்யாணி
3
வடுவூர் கே.துரைசாமி ஐயங்கார்

# மதன கல்யாணி

பாகம் – 3

வடுவூர் K. துரைசாமி ஐயங்கார்

ஜெனரல் பப்ளிஷர்ஸ்
244, (ப. எண்.) ராமகிருஷ்ணா மடம் சாலை,
மயிலாப்பூர், சென்னை – 600 004.

உரிமை பதிவு
ஜெனரல் பப்ளிஷர்ஸ்
முதற் பதிப்பு - 2004

© பதிப்பகத்தார்

மொத்த பக்கங்கள் : (2+272+2) = 276

**விலை: ரூ. 105.00**

Laser Typeset by - **Print Point Graphics,** Chennai - 20
Printed at - Jai Ganesh Offset Printers, Chennai - 600 004

# மதன கல்யாணி

★ ★ ★

## 27–வது அதிகாரம்

## எட்டு நாள் வாய்தா

**ப**சவண்ண செட்டியார் என்ற பொய்ப் பெயரை வகித்திருந்த கிருஷ்ணாபுரம் ஜெமீந்தார் முன்னோர் அதிகாரத்தில் துரைராஜா வினது பங்களாவிற்கு வந்து அவனோடு சம்பாஷித்திருந்து, அவனது உண்மையான யோக்கியதை எவ்வளவென்பதை அவனது வாய் மூலமாகவே உணர்ந்து கொண்டு, வக்கீல் அருணகிரிப் பிள்ளையினது ஜாகைக்குப் போய்க் கல்யாணியம் மாள் மதனகோபாலனது விஷயத்தில் அவதூறு சொல்லி அவனைக் கொல்ல முயன்றதைக் குறித்து அவளுக்கு ஒரு நோட்டீஸ் தயாரித்து அனுப்பியபின், வக்கீல் சிவஞான முதலியாரது ஜாகையை நோக்கிச் சென்றார் அல்லவா? முன்னதி காரத்தில் போலீஸ் இன்ஸ்பெக்டர் குலாம்ராவுத்தர் மாரமங்கலத் தாரது பங்களாவில் வந்திருந்து, கடைசியாக கல்யாணியம்மாளை யும், அவளது இரண்டு புத்திரிகளையும் மோட்டார் வண்டியில் வைத்து அழைத்துக் கொண்டு போன தினத்திற்கு முதல் நாளின் பிற்பகலிலே தான் பசவண்ண செட்டியார், முன் சொல்லப்பட்ட படி, சிவஞான முதலியாரது வீட்டிற்குச் சென்றது.

அவ்வாறு சென்ற பசவண்ண செட்டியார் அவரது ஜாகையை அடைந்து வாசலிலிருந்த வேலைக்காரனைப் பார்த்து, "ஏனப்பா! வக்கீல் ஐயா உள்ளே இருக்கிறார்களா? இருந்தால், அவர்களிடம் போய், மைசூரிலிருந்து ஒருவர் அவர்களைப் பார்க்க வந்து வெளியில் இருப்பதாகச் சொல்லிவிட்டு வா" என்று நயமாகக் கூறினார். அதைக் கேட்ட வேலைக்காரன் அவரது சிறப்பான தோற்றத்தைக் கண்டு அவர் யாரோ தக்க பெரிய மனிதர் என்று யூகித்துக் கொண்டு நிரம்பவும் பணிவாக எழுந்து நின்று, "சாமீ! எசமான் உள்ளறத்தான் இருக்கறாங்க. இதோ போயி சொல்லிப்

புட்டு வாறேனுங்க" என்று கூறிய வண்ணம் அவ்விடத்தை விட்டு விரைவாக மேன்மாடத்திற்குப் போய் சங்கதியைச் சொல்ல, அப்போதே தமது தினபடிக் கச்சேரி வேலையை முடித்துக் கொண்டு திருப்பி வந்து சாய்மான நாற்காலியில் சாய்ந்து, தமது மனைவியோடு சந்தோஷமாகப் பேசிய வண்ணம் இளைப்பாறிக் கொண்டிருந்த சிவஞான முதலியார், அதைக் கேட்டவுடனே திடுக்கிட்டு, "யாரது? மைசூரிலிருந்தா?" என்று கேட்டுக் கொண்டு நிமிர்ந்து உட்கார்ந்தார். அதுகாறும் சந்தோஷத்தினால் மலர்ந்திருந்த அவரது வதனம் உடனே சுருங்கியது. அவர் மிகுந்த சஞ்சலம் அடைந்தவர் போலக் காணப்பட்டார். வேலைக்காரன், "ஆமாங்க. மைசூருலே இருந்து தான் வந்திருக்காங்களாம்" என்றான். அந்த வார்த்தையைக் கேட்ட சிவஞான முதலியார் ஒருவித அச்சமும் கலக்கமும் திகைப்பும் அடைந்தவராய் இரண்டொரு நிமிஷ நேரம் மௌனமாக இருந்த பின், "சரி; நீ போய் அவரை மேலே வரச் சொல்" என்று கூறி, அவனை அனுப்பிவிட்டுத் தமது மனைவியை வீட்டிற்குள் போகச் செய்தபின் ஒருவாறு தம்மைச் சமாளித்துக் கொண்டு தமது சஞ்சலத் தோற்றத்தை மறைத்துக் கொண்டவராய் அந்த நாற்காலியிலேயே உட்கார்ந்திருந்தார். அடுத்த நிமிஷம் செட்டியார் மேன்மாடத்திற்கு வந்து சேர்ந்தார். அவரைக் கண்ட சிவஞான முதலியாரது சஞ்சலமும் கவலையும் உடனே விலகின. ஏனென்றால், அப்போது வரப் போகிறவர் கிருஷ்ணாபுரம் ஜெமீந் தார் என்று நினைத்தே வக்கீல் நிரம்பவும் கலக்கமடைந்திருந்தார். ஜெமீந்தார் மிகுந்த அழகும், வசீகரமும், சதைப்பிடிப்பான அங்கங்களும் பெற்றிருந்த சுந்தர புருஷர். அவர் எப்போதும் விபூதி பூசிக்கொண்டிருப்பார். ஆனால் இப்போது வந்தவர் சுருங்கித் தளர்ந்த சதையும், ஒட்டிப் போன தாடைகளும், மீசை தாடிகளும், கருத்துப் போன உடம்பும், கிழத்தன்மையும் அடைந் தவராகவும், நெற்றியில் பட்டையான நாமம் தரித்தவராகவும் இருந்ததைக் காணவே, இவர் கிருஷ்ணாபுரத்து ஜெமீந்தாரல்ல என்று சிவஞான முதலியார் எண்ணிக் கொண்டார். உடனே அவரது அச்சம் விலகியது; இயற்கை மனோதிடமும் உற்சாகமும் கம்பீரத் தோற்றமும் திரும்பின. அவர் தமக்கெதிராக நின்ற பசவண்ண செட்டியாரைச் சந்தேகமான பார்வையாகப் பார்த்து,

"வாருங்கள்; அதோ இருக்கும் நாற்காலியில் உட்கார்ந்து கொள்ளுங்கள். நீங்கள் மைசூரிலிருந்தா வருகிறீர்கள்? உங்களை கிருஷ்ணாபுரத்து ஜெமீந்தார் அனுப்பினாரோ?" என்று நயமாக மொழிந்தார்.

அதைக் கேட்ட பசவண்ண செட்டியார், அங்கே கிடந்த ஒரு நாற்காலியின் மேல் அமர்ந்தவராய், "ஆமாம்; அங்கே இருந்து தான் என்னை அனுப்பியது. வக்கீல் சிவஞான முதலியார் என்பது தாங்கள் தானே?" என்று அவரை அறியாதவர் போல வினவினார். சிவஞான முதலியார், "ஆமாம்; நான்தான் சிவஞான முதலியார்" என்றார்.

பசவண்ண செட்டியார் சந்தோஷமும் புன்னகையும் தமது முகத்தில் தோற்றுவித்து, "சரி; நெடுநாளாகத் தங்களைப் பார்க்க வேண்டும் என்று ஓர் அவா இருந்தது. இப்போது தங்களைக் கண்டது நிரம்பவும் சந்தோஷமாயிற்று. கிருஷ்ணாபுரத்து ஜெமீந் தார் தங்களுக்கு என் மூலமாக ஒரு கடிதம் கொடுத்தனுப்பி இருக்கிறார்கள். அது இதோ இருக்கிறது" என்று கூறிய வண்ணம் தமது சட்டைப் பைக்குள் கையை நுழைத்து, ஒரு கடிதத்தை எடுத்து, முதலியாரிடத்தில் மரியாதையாக நீட்ட, அவர் அதை வாங்கிக் கொண்டார். அவ்வாறு அவர் வாங்கிய போது, அவரது கைகள் வெடவெடவென்று ஆடின. முகமும் மாறுபட்டுப் போயிற்று. அவர் உடனே நிமிர்ந்து உட்கார்ந்து அந்தக் கடிதத்தைப் பிரித்தெடுத்து வைத்துக்கொண்டு படிக்கலானார். அது அடியில் வருமாறு எழுதப்பட்டிருந்தது:-

சென்னை மைலாப்பூரிலிருக்கும் ஜெமீந்தார் மகா-ா-ா-ஸ்ரீ சிவஞான முதலியார் அவர்களுக்கு,

மைசூரிலிருக்கும் கிருஷ்ணாபுரம் ஜெமீந்தார் சோமசுந்தர துரை எழுதிக் கொண்ட விக்ஞாபனம். உபயக்ஷேமம்.

இந்தக் கடிதத்தைக் கொண்டு வருகிறவரான மகா-ா-ா-ஸ்ரீ பசவண்ண செட்டியார் அவர்கள், நான் இந்த ஊரில் பல வருஷங் களாகச் செய்து வரும் சந்தனக்கட்டை வியாபாரத்தில், என்னோடு கூட்டாளியாக இருந்து வியாபாரம் செய்து வருபவர்கள்; இவர்கள்

தக்க பிரபுத்துவமும் கண்ணியமும் வாய்ந்த பெருத்த தனிகர்; எங்களுடைய வர்த்தகத்தை நடத்த சென்னப்பட்டணத்தில் ஒரு முதலாளி இருப்பது அவசியமாக இருப்பதால், இவர்கள் அங்கேயே ஜாகை வைத்துக் கொண்டு இருக்க வந்திருக்கிறார்கள்; இவர்களுக்கு அறிமுகமானவர்கள் அந்த ஊரில் எவருடை இல்லை ஆகையால், தாங்கள் இவர்களுக்குத் தேவையான சௌகரியங் களையும் சகாயங்களையும் செய்து கொடுக்குமாறு நிரம்பவும் கேட்டுக் கொள்ளுகிறேன்.

அது நிற்க, என்னுடைய குழந்தைகளினுடைய சவ்ரக்ஷணைக் காக நான் தங்களிடத்தில் ஒப்படைத்து வைத்திருக்க ஐந்து லட்ச ரூபாய்க்கு நான் கணக்குக் கேட்டதற்குத் தாங்கள் தருவதாக நெடுங் காலமாகச் சொல்லி கொண்டே வந்து, கடைசியாகத் தாங்கள் எனக்கெழுதிய கடிதத்தில், கணக்குகள் மிகவும் சிக்கலாக இருப்பதால், நாமிருவரும் நேரில் கண்டு பேசி அதை பைசல் செய்து கொள்வதே சௌகரியமானதென்றும், அப்படிப்பட்ட சந்தர்ப்பம் வாய்க்கும் போது; கணக்குகளை எல்லாம் ஒப்புக் கொடுப்பதாகவும் எழுதினீர்கள்; அப்படி நீங்கள் எழுதி ஐந்து வருஷ காலமாகிறது! என்னுடைய உயிருக்குயிராக இருந்த என் சம்சாரத்தையும், கந்தருவக் குழந்தைகள் போலிருந்த என் செல்வக் குதலையர்களையும் நான் பறிகொடுத்த இடமாகிய அந்த சென்னப் பட்டணத்தின் முகத்தில் நான் இனி விழிக்கிறதே இல்லை என்று உறுதி செய்து கொண்டிருந்தது பற்றி நானே நேரில் வந்து கணக்குகளைப் பைசல் செய்து கொள்ளக்கூடாமலிருக்கிறது; தாங்கள் இங்கே வருவதும், நான் எதிர்பார்க்கத் தகாத பெருத்த விஷயம்; ஆகவே, என்னுடைய நண்பரும் கூட்டாளியுமான இந்தச் செட்டியாரவர்களிடத்தில் தாங்கள் என்னுடைய கணக்கு களை எல்லாம் ஒப்புக்கொடுத்து மிகுதியுள்ள பணத்தையும் செலுத்திவிடக் கேட்டுக் கொள்ளுகிறேன். அடிக்கடி தங்களுடைய க்ஷேமத்தைப் பற்றியும் அறிந்து கொள்ள மிகுந்த அவாவுள்ள,

தங்களுடைய ஆப்த நண்பன்,
சோமசுந்தர-துரை

-என்று எழுதப்பட்டிருந்த கடிதத்தைப் படித்த சிவஞான முதலியார் தம் மனத்திற்குள் கவலை அடைந்தார் ஆனாலும், வெளித்

தோற்றத்திற்கு மிகுந்த மகிழ்ச்சி அடைந்தவர் போல நடித்து நலிந்த புன்னகை செய்தவராய் செட்டியாரை நோக்கி, "அப்படியா! தாங்கள் ஜெமீந்தாருடைய கூட்டாளியா! நிரம்பவும் சந்தோஷ மாயிற்று! தாங்கள் இந்த ஊருக்கு இன்றைய தினந்தான் வந்தீர்களோ?" என்றார்.

***பசவண்ண செட்டியார்:-*** இல்லை, இல்லை. நான் இந்த ஊருக்கு வந்து நாலைந்து நாட்களாகின்றன. வந்தவுடனே இங்கே வந்து தங்களைப் பார்க்க முடியாமல் போய்விட்டது. ஏனென்றால், நான் இருப்பதற்கு வசதியான நல்ல ஒரு பங்களாவைச் சொந்தத்திலேயே வாங்க வேண்டும் என்பது என்னுடைய அவா. அதற்காக ஜெமீந் தார் சில தினங்களுக்கு முன்னாகவே அவருடைய நண்பரான வேறொருவருக்கு எழுதியிருந்தார். நான் இங்கே வந்தவுடனே அந்த மனிதரைப் பார்த்தேன். அதிர்ஷ்டவசமாக இந்தச் சந்தர்ப் பத்தில் இரு பங்களா விலைக்கு வந்தது. அதை நேற்றைய தினந் தான் வாங்கினேன். அதன் சம்பந்தமாக இரண்டு மூன்று நாட்களாக அலைந்து கொண்டிருந்தேன். அது ஒருவிதமாக முடிந்தவுடனே புறப்பட்டுத் தங்களைப் பார்க்க வந்தேன்.

***வக்கீல்:-*** ஓகோ! அப்படியா! நிரம்பவும் சந்தோஷம்! அந்த பங்களா எங்கே இருக்கிறது?

***செட்டியார்:-*** இந்த மைலாப்பூரிலே சான்தோமில் கடற்கரையின் மேல் இருக்கிறது. அது கால் மயில் நீளம் கால் மயில் அகலம் இருக்கிறது. அதன் பெயர் மனோகர விலாசம் என்று வாசலில் செதுக்கப்பட்டிருப்பதை நீங்கள் கூடப் பார்த்திருக்கலாம்.

***வக்கீல்:-*** (பெரிதும் வியப்பும் சந்தோஷமு மடைந்து) அப்படியா சங்கதி! இந்த மனோகர விலாசத்தைத் தாங்களா வாங்கி இருக்கிறீர்கள்! நல்லதாயிற்று. எனக்கு மிகவும் சமீபத்திலேயே வந்துவிட்டீர்கள்! அது ஹைதராபாத் சமஸ்தானத்து மந்திரியின் அரண்மனையல்லவா? அதன் விலை எழுபத்தைந்து லட்சம் என்றல்லவா சொல்லிக் கொண்டிருந்தார்கள். பேஷ்! பேஷ்! நல்ல பெரிய இடமாக வாங்கி இருக்கிறீர்கள்! அப்படியானால் தாங்களும் பெருத்த கோடீசுவரர் என்றே நினைக்க வேண்டியிருக்கிறது. இப்படிப்பட்ட உன்னத

யான பிரபுக்களுடைய சிநேகம் சாதாரணமாகக் கிடைக்கக் கூடிய தல்ல. தங்களைக் கண்ட இந்த தினம் சுபதினம் என்றே நினைக் கிறேன். தாங்கள் அந்த பங்களாவை எவ்வளவுக்கு வாங்கினீர்கள்?

***செட்டியார்:-*** அறுபது லட்சத்துக்குத் தான் வாங்கினேன்; அதிக மில்லை. ஆனால் ஒரு பெருத்த அரண்மனை போல இருக்கும் அந்த பங்களாவை நான் வாங்கிவிட்டேனே யொழிய, எனக்கும் என்னுடைய கூட்டாளியைப் போல, பெண்டு பிள்ளைகள் எவரும் இல்லை. அப்படி இருந்தாலும், நல்ல முதல்தரமான இடமாவது ஒன்று இருக்க வேண்டும் என்ற ஒரு பைத்தியம் மாத்திரம் எனக்குண்டு. அதனால் நான் அதை வாங்கினேன்.

***வக்கீல்:-*** தாங்கள் செய்தது நல்ல காரியந்தான். அந்த இடம் சாதாரணமாக எல்லோருக்கும் கிடைக்கக் கூடியதல்ல. இதுவரை யில் அதை வாங்க, எத்தனையோ ராஜாக்களும், ஜெமீந்தார்களும் பிரயத்தனப்பட்டுப் பார்த்துவிட்டார்கள். எவருக்கும் கிடைக்க வில்லை. பத்திரமெல்லாம் முடிந்து போய்விட்டதா?

***செட்டியார்:-*** அதெல்லாம் நேற்றைய தினமே முடிந்து ரிஜிஸ்டரும் ஆகிவிட்டது. 60 லட்சம் ரூபாயையும் நேற்றைய தினந்தான் செலுத்தினேன். பங்களாவின் திறவுகோல் இதோ இருக்கிறது பார்த்தீர்களா? இன்றைய காலையிலேயே அதை ஒப்புக்கொண்டு புண்ணியாகவாசனமும் நடத்திவிட்டேன்; இப்போது நேராக அங்கே தான் குடி இருக்கப் போகிறேன்.

***வக்கீல்:-*** சரி; நிரம்ப சந்தோஷம். ஆனால் அப்படிப்பட்ட இடத்தில் பெண்களும் பிள்ளைகளும் ஏராளமாக இருந்தால், அது நிரம்பவும் ஆனந்தமாக இருக்கும். அது ஒன்று தான் தங்கள் விஷயத்தில் குறை; தாங்கள் தனியாகப் போகிறீர்கள்; தங்களுக்கு வேண்டிய ஆள்மாகாணங்களுக்கெல்லாம் ஏற்பாடு செய்திருக் கிறீர்களா?

***செட்டியார்:-*** ஓ! செய்திருக்கிறேன். எல்லாரும் இன்னம் ஒரு நாழிகையில் வந்து சேர்ந்துவிடுவார்கள்.

***வக்கீல்:-*** அப்படியானால் பரவாயில்லை. தாங்கள் இந்த நாலைந்து நாட்களாக எங்கே ஜாகை வைத்துக் கொண்டிருந்தீர் களோ?

***செட்டியார்:-*** கோமளேசுவரன் பேட்டையில் சுந்தர விலாஸம் என்று ஓர் இடம் இருக்கிறது; அதிலிருந்தேன்.

***வக்கீல்:-*** அதிலிருப்பவர் தான் தங்களுக்கு இந்த பங்களாவை வாங்கிக் கொடுத்த நண்பர் போலிருக்கிறது?

***செட்டியார்:-*** இல்லை, இல்லை. அதிலிருப்பது என்னுடைய கூட்டாளியைச் சேர்ந்த மனிதர். அவர் யார் என்பதையும், சுருக்கமாகச் சில வார்த்தைகளில் நான் உங்களுக்குச் சொல்லி விடுகிறேன். என்னுடைய கூட்டாளி பதினெட்டு வருஷங்களுக்கு முன் அவருடைய யௌவன சம்சாரத்தை இந்த ஊரில் இழந்த பின், அந்த விசனத்தைப் பொறுக்கமாட்டாமல் உண்மையிலேயே பைத்தியங் கொண்டவராக இருந்தாராம். அவர் இந்த ஊரைவிட்டு தூர தேசமாகிய வெளியூருக்குப் போயிருந்தால் அந்தப் பைத்தியம் நீங்குமென்று டாக்டர்கள் சொன்னார்களாம். அப்போது உயிர் ஒன்றும் உடலிரண்டுமென எவ்வளவு அன்னியோன்னியமான சிநேகிதர்களாக அவரும் நீங்களும் இருந்தவர்களாம். அவருடைய தங்கை, தம்பியின் குடும்பத்தார் முதலிய எல்லோருக்கும் அவருக்கும் மனஸ்தாபம் இருந்ததால், அவர் உங்களுடைய ஆதரவிலேயே இருந்தாராம். அவர்களுடைய சுந்தரமான குழந்தைகள் இரண்டும் தங்களுடைய பாதுகாப்பிலேயே இருந்தார்களாம். அப்போது டாக்டர்களின் புத்திமதிப்படி அவரைத் தாங்கள் மைசூருக்கு அனுப்பி வைத்தீர்களாம். குழந்தைகள் மாத்திரம் தங்களிடத்திலேயே இருந்தார்களாம். ஒரு வருஷ காலத்தில் அவருக்குப் பைத்தியம் தெளிவடைந்து போய்விட்டதாம். அவர் உடனே இங்கே வரவும், குழந்தைகளைப் பார்க்கவும் ஆசைப் பட்டாராம். குழந்தைகள் அவருடைய சம்சாரத்தைப் போல அதிக சுந்தரம் பொருந்தியவர்களாக இருந்ததனால், அவர்களைக் கண்டால் மறுபடியும் பைத்தியம் திரும்பி விடுமென்று டாக்டர்கள் சொன்னதாகவும், இன்னம் சில வருஷ காலம் அங்கேயே இருந்து வருவது நல்லதென அவருக்குக் கடிதம் எழுதினீர்களாம். அந்தச் சமயத்தில் தங்களுடைய விருப்பத்தின்படி குழந்தைகளின் சவரக்ஷணைக்காக அவர் உங்கள் பேருக்கு ஐந்து லட்சம் ரூபாய்க்கு உண்டியல் அனுப்பினாராம். அதன் பிறகு ஆறுமாச காலத்திற்குள், உங்களிடத்திலிருந்து வந்த கடிதத்தில், குழந்தைகளிரண்டும் ஒரே

தினத்தில் வாந்தி பேதி கண்டு இறந்து போய்விட்டதாகவும், பிரேதங்கள் கொளுத்தப்பட்டுப் போனதாகவும் எழுதினீர்களாம். அதைக் கேட்ட முதல் அவரது மனமும் தேகமும் இடிந்து பாழடைந்து போய், அவர் கேவலம் பைத்தியக்காரர் போலவே இருந்து வந்தார். அதற்கு இரண்டு வருஷ காலத்துக்குப் பிறகு ஓரிடத்திலிருந்து இரண்டு அநாதைக் குழந்தைகள் அவருக்குக் கிடைத்தார்கள். அண்ணனும் தங்கையுமான அந்தக் குழந்தைகள் அவருடைய குழந்தைகள் போலவே அதிக ரூபலாவண்ணியம் வாய்ந்தவர்களாக இருந்தமையால், அவர் அவர்களை வாங்கி, தம்முடைய வாஞ்சையையெல்லாம் அவர்களின் மேல் வைத்து வளர்த்து அவர்களை அபிமான புத்திரன் புத்திரியாக மதித்து வந்தார். அவர்கள் இருவரும் நற்குண நன்னடத்தைகளுக்கு இருப்பிடமாகவும், அழகும், விவேகமும் பரிபூரணமாக நிரம்பப் பெற்றவர்களாகவும் வளர்ந்தார்கள். சென்ற ஏழெட்டுமாச காலத்துக்கு முன் வரையில் அவர்கள் அங்கேயே இருந்தார்கள். ஆனால் அவர்களைப் பார்க்கும் போதெல்லாம், அவருக்குத் தம்முடைய மனைவி மக்களின் நினைவு வந்து வந்து அடிக்கடி போராடியதை கருதி இவர்கள் தம்மைவிட்டுப் பிரிந்து இந்த ஊரில் சொற்ப காலம் இருக்கும்படி அனுப்பி வைத்தார். இவர்கள் இருவரும் கோமளேசுவரன் பேட்டையில் அந்த சுந்தர விலாஸத்தில் இருந்து வந்தார்கள். நான் இப்போது அங்கே தான் இறங்கி இருந்தேன். ஆனால், அவர்களும் இனி என்னோடு இந்தப் புதிய பங்களாவில் வந்திருக்கப் போகிறார்கள். நாளைக்குக் காலையில் நாள் நல்லதாக இருப்பதால் அவர்கள் அப்போது தான் வரப் போகிறார்கள். ஆகையால் எனக்கு இந்தப் புதிய பங்களா அவ்வளவு தனிமையாகத் தோன்றாது.

**வக்கீல்:-** இந்த மாதிரி இரண்டு குழந்தைகளை வாங்கி அபிமான புத்திரன் புத்திரிகளாக வளர்த்து வந்த விஷயத்தைப் பற்றியாவது, அவர்களை இந்த ஊருக்கு அனுப்பிய விஷயத்தைப் பற்றியாவது அவர் எனக்கு இதுவரையில் தெரிவிக்கவே இல்லை. அவர் எனக்கு இதுவரையில் எத்தனையோ கடிதங்கள் எழுதி அனுப்பி இருக்கிறார். ஒரு கடிதத்திலாவது இந்தச் சங்கதியைப் பற்றி ஒரு கோடிகூடக் காட்டவில்லையே!

**செட்டியார்:-** அவருடைய பரிதாபகரமான நிலைமை தங்களுக்கு நன்றாகத் தெரிந்திருந்தும் தாங்கள் அவர்மேல் குறை கூறலாமா? அவருடைய அருமையான மனைவி மக்கள் எல்லோரும் அகால மரணமாகப் போய் அவரை ஆராத்துயரத்தில் ஆழ்த்திவிட்டார்கள், அவருக்கு உயிரோடிருக்கிற உறவினர்கள் எல்லோரும் சத்துருக் களாக இருக்கிறார்கள். அவருடைய சமஸ்தானமோ ஒரு பக்கத்தில் இருக்கிறது. அவரோ வேறோரிடத்திலிருந்து வனவாசம் பண்ணிக் கொண்டிருக்கிறார். இப்படிப்பட்ட சங்கடமான நிலைமையில், அவர் இந்த சந்தனக்கட்டை வர்த்தகத்தில் இறங்கினால், அவருடைய மனசும் நினைவும் அந்த விஷயத்தில் செல்லுவதால், அவருடைய பழைய நினைவை மறந்து பைத்தியங் கொள்ளாமல் இருப்பார் என்று நினைத்து அதைச் செய்து வருகிறார். அவருக்கு இப்போ திருக்கும் ஞாபகம் அடுத்த நிமிஷத்தில் இருக்கிறதில்லை. அவரைத் தாங்கள் நேரில் பார்ப்பீர்களானால் தாங்கள் அவர்மேல் இப்படி யெல்லாம் குறை கூறமாட்டீர்கள்.

**வக்கீல்:-** (சந்தோஷமும் புன்னகையும் காட்டி) சரி; எப்படி இருந்தாலும் கூட்டாளியல்லவா; தாங்கள் விட்டுக்கொடுத்துப் பேசலாமா; ஆகையால் தாங்கள் அவருக்காகப் பரிந்து பேசுவது நியாயந்தான். இப்போது தாங்கள் சொன்ன ஒரு சங்கதி முக்கிய மாக என் விஷயத்தில் பொருத்தமாக இருக்கிறது. அவருக்கு இந்த நிமிஷத்தில் இருக்கும் ஞாபகம் அடுத்த நிமிஷத்தில் இல்லை என்று சொன்னீர்கள் அல்லவா. அது சரியான பேச்சு; எப்படி என்றால், அவருடைய குழந்தைகளை போஷிப்பதற்காக அவர் ஐந்து லட்சம் ரூபாய் என்னிடத்தில் கொடுத்ததாகவும், அப்படிக் கொடுத்த ஆறுமாச காலத்துக்குள் குழந்தைகள் இறந்து போய்விட்ட படியால், அந்தப் பணத்தில் மிகுதி இருக்க வேண்டும் என்றும் அவர் சொன்னார் எனறீர்களல்லவா. அதையும் அவர் ஞாபகப் பிசகாகச் சொல்லி இருக்கிறார். அந்த ஐந்து லட்சம் ரூபாய் வந்த பின் ஆறுமாச காலத்தில் குழந்தைகள் இறந்தது உண்மைதான். ஆனால், அதற்கு முன் அவர் பைத்தியங் கொண்டிருந்த காலத்தில் டாக்டர்களுக்கெல்லாம் பணத்தை வாரி இறைத்த போது ஏற்பட்ட கடன்களே அபாரமாக இருந்தன. கடன்கள் இந்த ஐந்து லட்சத் திலிருந்து தான் கொடுக்கப்பட்டிருக்கின்றன. அதுபோக மிகுதி

இருந்த தொகை மிகவும் சொற்பமே. அது அநேகமாகக் குழந்தைகளுக்கே செலவு செய்யப்பட்டிருக்கிறது. அவருக்கும் எனக்கும் இருந்த சிநேகத்துக்கும், அவருக்கும் அவருடைய குடும்பத்தார்களுக்கும் வந்த பெருத்த விபத்துகளில் நான் பட்ட பாடுகளுக்கும், அவர் இந்த அற்பத் தொகை விஷயத்தில் இவ்வளவு கண்டிப்பாக இருப்பது தான் எனக்குச் சகிக்க முடியாததாக இருக்கிறது.

***செட்டியார்:-*** மெய்தான்; மெய்தான். தாங்கள் அவருடைய விஷயத்தில் நிரம்பவும் பாடுபட்டிருக்கிறீர்கள் என்று அவரும் நன்றியறிதலோடு அடிக்கடி சொல்லிக் கொண்டுதான் இருக்கிறார். அதனாலே தான் குழந்தைகள் இறந்து போய் சுமார் 15-வருஷ காலமாக அவர் பணத்தைப் பற்றிக் கண்டிப்பாகக் கேளாதிருந்தது. இதில் இன்னொரு விஷயமிருக்கிறது. இந்த ஐந்து லட்சம் ரூபாயை அனுப்பும்படி தாங்கள் அவருக்குக் கடிதம் எழுதினீர்கள் அல்லவா; அந்த கடிதத்தை அவர் இன்னமும் வைத்திருக்கிறார். அதை நானும் பார்த்தேன். அதில் என்ன எழுதப்பட்டிருக்கிறது தெரியுமா? அதற்கு முன் தங்கள் வசத்திலிருந்த அவருடைய பணங்களெல்லாம் டாக்டர்களுக்காகக் கொடுக்கப்பட்டுப் போய் விட்டன என்றும், அப்போது வேறே எவ்விதமான கடனும் இல்லை என்றும், அதற்கு மேல், குழந்தைகளின் போஷணைக்காக மாத்திரம் பணம் தேவை என்றும் தாங்கள் எழுதியிருக்கிறீர்கள்; அதனாலே தான், அவர் ஐந்து லட்சத்தில் மிகுதி இருக்க வேண்டும் என்று அபிப்பிராயப்படுவது; இரண்டு சிறிய குழந்தைகளுடைய அறுமாசகால போஜனைக்கு ஐந்து லட்சம் ரூபாய் பிடிக்குமா? மகாராஜாவின் வீட்டுக் குழந்தையாக இருந்தாலும், அவ்வளவு பெருத்த தொகையை எப்படித்தான் செலவழிக்க முடியும்! குழந்தைகளோ திடீரென்று வாந்திபேதியால் இறந்து போய் விட்டார்கள்; கொஞ்சகாலம் வியாதியாகப் படுத்திருந்து இறந்து போயிருந்தார்கள் என்றால், அதன் பொருட்டாவது பணச் செலவு பிடித்திருக்கு மென்னலாம்.

***வக்கீல்:-*** (கலக்கமும் கவலையும் அடைந்து) ஓகோ! அப்போது நான் எழுதின கடிதத்தில் உள்ள விஷயங்களை வைத்துக் கொண்டு சொல்லுகிறாரோ! அந்தக் கடிதம் இப்போது தங்களிடத்தில் இருக்கிறதா?

***செட்டியார்:-*** அது அப்போது என்னிடத்தில் இல்லை; அதைத் தாங்கள் பார்க்க வேண்டுமானால், அவருக்குக் கடிதம் எழுதி நான் அதை வரவழைக்கிறேன்.

***வக்கீல்:-*** சரி; அப்படியே செய்யுங்கள்; அதை நானும் பார்க்க வேண்டும்; நான் அவருக்கு எழுதிய கடிதங்களுக்கு நகல்கள் வைத்துக் கொள்ளவில்லை; அவர் சொல்லுகிறபடி நான் கடிதத்தில் ஏதோ எழுதியிருப்பது ஒரு பக்கமிருக்கட்டும்; நான் அன்றாடம் எழுதி வைத்துள்ள கணக்குகள் இருக்கின்றன. அவரால் எனக்கு எழுதப்பட்ட கடிதங்களும் இருக்கின்றன. அவர் குழந்தைகளுக்கு அனுப்பிய தொகையில் வேறே சில மனிதர்களுக்கும் சிலசில தொகைகள் கொடுக்கும்படி அவர் எழுதியிருக்கிறார். ஆகையால் நான் அந்தக் கடிதங்களையும், கணக்குகளையும் தேடி எடுத்து வைக்கிறேன். தாங்களும் அந்தக் கடிதத்தை வரவழையுங்கள். இப்போது தாங்கள் கணக்குப் பார்க்க வருவது ஒரு நாள் முன்னாக எனக்குத் தெரிந்திருந்தாலும், நான் எல்லா தஸ்தாவேஜுகளோடும் சித்தமாக இருப்பேன். ஆகையால் தாங்கள் இன்னொரு நாள் குறிப்பிட்டால, அன்றைய தினம் நாம் இருவரும் சந்தித்துக் கணக்கைப் பைசல் செய்துவிடலாம்.

***செட்டியார்:-*** சரி; அப்படியே ஆகட்டும்; பதினைந்து வருஷமாகப் பைசல் செய்யப்படாமலிருந்த இந்த விஷயமானது இன்னம் சில நாள்கள் இருப்பது ஒரு பெரிய காரியமா! நான் கடிதத்தை வரவழைத்தவுடனே தங்களுக்குச் செய்தி சொல்லி அனுப்புகிறேன். பிறகு நாம் சந்திப்பதற்கு ஒரு நாள் ஏற்பாடு செய்து கொள்ளலாம். இப்போது எனக்கும் நேரமாகிறது. தங்களுடைய அவகாசத்திலும் அதிக நேரத்தை நான் அபகரித்து விட்டேன். தங்களுக்கு எவ்வளவோ ஜோலி இருக்கும்; நான் உத்தரவு வாங்கிக் கொள்ளுகிறேன். நமஸ்காரம் - என்று கூறிய வண்ணம் எழுந்திருக்க, வக்கீலும் அவருக்கு பதில் நமஸ்காரம் செய்து, அவரது ஏற்பாட்டிற்கு இணங்க, செட்டியார் அவ்விடத்தை விட்டு வெளிப்பட்டார்.

வெளிப்பட்டவர் தமது வண்டியில் ஏறிக்கொண்டு நேராகக் கடற்கரைக்குப் போய், அங்கே இருந்த பிரம்மாண்டமான ஒரு

பங்களாவிற்குப் போய்ச் சேர்ந்தார். அவர் பங்களா வாங்கிய விஷயமாக சிவஞான முதலியாரிடத்தில் பேசிக் கொண்டிருந்த சங்கதிகள் யாவும் உண்மையானவை ஆகையால், அவர் அந்த பங்களாவை வாங்கிய வரலாற்றையெல்லாம் மறுபடியும் விரிவாகச் சொல்வது மிகையாகும். அவர் அன்றைய மாலை வரையில் அவ்விடத்திலேயே இருந்து ஒவ்வொருவராக வந்த புதிய வேலைக்காரர்களையும், வேலைக்காரிகளையும் அவரவர் களுக்குரிய இடங்களிலும் வேலைகளிலும் அமர்த்திய பிறகு அவ்விடத்தைவிட்டுப் புறப்பட்டு கோமளேசுவரன் பேட்டையி லிருந்த மதனகோபாலனது ஜாகையை அடைந்து, அன்றிரவு முழுதும் அங்கேயே இருந்து, மறுநாள் அதிகாலையில், மதன கோபாலனையும், மோகனாங்கியையும் அழைத்துக் கொண்டு மைலாப்பூரில் உள்ள தமது புதிய பங்களாவிற்கு வந்து சேர்ந்தார். கோமளேசுவரன் பேட்டையிலிருந்த பணிமக்கள் எல்லோரும் அங்கிருந்த தட்டுமுட்டுச் சாமான்களை எல்லாம் எடுத்துக் கொண்டு அந்த இடத்தைக் காலி செய்துவிட்டு ஒரு நாழிகை நேரத்தில் புதிய பங்களாவிற்கு வந்து சேர்ந்தனர்.

துப்பாக்கியால் சுடப்பட்டு மிகவும் கேவலமான நிலைமையி லிருந்த மதனகோபாலனை அவர்கள் எப்படி அழைத்து வந்தார்கள் என்ற சந்தேகம் நமது வாசகாகளுக்கு உணடாகலாம். துப்பாக்கியால் சுடப்பட்ட அன்றைய ராத்திரியே டாக்டர் அவனது காயத்திற்கு நல்ல மருந்தை வைத்துக் கட்டியதன்றி, அவன் அன்றிரவு முழுதும் ஓய்ந்து படுத்துத் தூங்கும்படி போதை கலந்த மருந்தைக் கொடுத்து வைத்திருந்தார் அல்லவா. அவ்வாறே அன்றிரவு முழுதும் அவன் உயிரற்ற பிணம் போலக் கிடந்தான் ஆனாலும், மறுநாட் காலையில், அவர் நன்றாகத் தெளிவடைந்து அவன் நன்றாகத் தெளிவடைந்து எழுந்து தனது படுக்கையில் சாய்ந்து கொண்டான். அவனுக்கு ஜுரம் முதலிய எவ்வித பாதையும் ஏற்படவில்லை. அப்போது அந்த டாக்டர் வந்து காயத்தின் கட்டை அவிழ்த்து, விலையுயர்ந்த அருமையான மருந்துகளை வைத்து மறுபடியும் கட்டி, இரத்தமுண்டாக்கும் ஜீவாமிருதத் துளிகளை உள்ளுக்கும் கொடுத்துவிட்டுச் சென்றார். அவன் சாதாரணமாக எழுந்து உட்காரவும், படுக்கவும், நடக்கவும் கூடிய ஸ்திதியில் இருந்தான்.

கிருஷ்ணாபுரம் ஜெமீந்தார் அன்றைய நடுப்பகல் வரையில் அவனோடிருந்து, அவனுக்கும் கண்மணியம்மாளுக்கும் நடந்த சம்பாஷணையின் விவரத்தை எல்லாம் கேட்டறிந்து கொண்ட பிறகே அங்கிருந்து புறப்பட்டு துரைராஜாவிடத்திற்கு வந்தார்; வந்தவர் துரைராஜா ஒருவேளை சுந்தர விலாசத்திற்கு வந்து மதனகோபாலனையும், மோகனாங்கி யையும் பார்க்க ஆசைப் படுவானோ என்றும், அவ்வாறு காணவிடாமல் தடுக்க வேண்டும் என்றும் நினைத்தே, அவன் மிகவும் கேவலமான நிலைமையில் இருக்கிறான் என்றும், ஜுரத்தினால் கண்ணைத் திறக்காமலே கிடக்கிறான் என்றும், சந்தர்ப்பத்திற்குத தகுந்தபடி ஒரு பொய் முகாந்திரம் சொல்லி, அவன் வராதபடி செய்து வைத்தார். அன்றைய தினம் முழுதும் எவ்விதமான சலனமுமற்றுப் படுத்திருந்தான் ஆகையால், மூன்றாவது நாட் காலையில், அவன் அநேகமாகக் குணமடைந்து சாதாரணமாக எவ்வளவு தூரம் வேண்டுமானாலும் நடக்கக்கூடிய நிலைமையை அடைந்து விட்டான். ஆனால் வலது காலின் ஆடு சதையில் மாத்திரம் ஒரு சிறிய காயமிருந்தது ஆகையால், அப்போதைக்கப்போது கொஞ்சம் நோவுண்டாகிக் கொண்டிருந்தது. அவன் நல்ல யௌவனப் பருவத்தினனாகையால், அவனுக்கு உதிர நஷ்டத்தினால் ஏற்பட்ட அயர்வும் பலவீனமும் இரண்டு நாளைய உட்பிர யோகத்தினா லேயே அநேகமாக விலகிப் போயினவாகையால், அவன் தனது பழைய உற்சாகத்தையும், முகத்தெளிவையும், சுறுசுறுப்பையும் அடைந்திருந்தான்; ஆனாலும் அடிக்கடி உட்கார்ந்து கொள்வதும், படுக்கையில் சாய்ந்து கொள்வதுமே அவனுக்குப் பிடித்தமாக இருந்தன. அந்த நிலைமையில் அவன் கிருஷ்ணாபுரம் ஜெமீந்தார் மைலாப்பூரில் புதிதாக வாங்கிய பெருத்த பங்களாவுக்கு வந்து சேர்ந்தான். அந்த பங்களா ஓர் அரசனது அரண்மனை போலச் சகலமான வசதிகளையும் சௌகரியங்களையும் உடையதாக இருந்தது. அதற்குள்ளிருந்த எண்ணிறந்த அந்தப்புரங்களும், மண்டபங்களும், உப்பரிகைகளும் வெகு அலங்காரமாக அமைக் கப்பட்டிருந்தன. எங்கும் மேஜைகளும், நாற்காலிகளும், சோபாக் களும், பஞ்சணைகளும், நிலைக் கண்ணாடிகளும், படங்களும், மின்சார விசிறிகளும், மின்சார விளக்குக் கொத்துகளும் நிறைந்து,

அது ஒரு கந்தருவலோகம் போல விளங்கியது. அப்படிப்பட்ட மகா சிறப்பான மாளிகையின் முன்பக்கத்திலிருந்த ஒரு பெருத்த மகாலில் மதனகோபாலன் ஒரு பஞ்சணையின் மேல் சாய்ந்து கொண்டிருந்தான். கிருஷ்ணாபுரம் ஜெமீந்தார் ஒரு சோபாவில் உல்லாசமாகச் சாய்ந்திருந்த வண்ணம் சந்தோஷமாகச் சிரித்துக் கொண்டு மதனகோபாலனிடத்தில் சம்பாஷித்துக் கொண்டிருந்தார். பக்கத்திலிருந்த ஒரு பளிங்கு மண்டபத்தில் மோகனாங்கி உட்கார்ந் திருக்க, தாதிகள் அவளுக்குக் குழல் வனைந்து கொண்டிருந்தனர். அந்த மகா உன்னதமான பங்களாவானது, மைலாப்பூரில் கடற்கரையை அடுத்துச் செல்லும் ராஜபாட்டையின் மீது கடற்கரைப் பக்கம் பார்த்ததாக அமைந்திருந்தது. ஆகவே அந்த பங்களாவிற்குள்ளிருந்த மகால்களில் மனிதர் உட்கார்ந்திருந்தால், கடலின் பரப்பும் ஆகாயத்தின் பிரிவும் நெடுந்தூரம் வரையில் தெரிவதனறி, கடலிலிருந்தெழும் மந்தமாருதமும் அந்த பங்களா விற்குள் நுழைந்து சதாகாலமும் ஜிலுஜிலென்று வீசி அதற்குள் இருப்போரை ஆனந்த சாகரத்தில் ஆழ்த்திக் கொண்டிருக்கும். அந்த பங்களாவின் முன்புறத்திலிருந்த ராஜபாட்டையின் மேல், கண்கண்ட தூரம் வரையில் பங்களாக்களும் பெருத்த பெருத்த கட்டிடங்களும், மின்சார விளக்குக் கம்பங்களும், கம்பிகளும், பூத் தொட்டிகளின் பந்திகளும், பூச்செடிகளின் பாத்திகளும், வெள்ளை வெளேரெனக் காணப்பட்ட மணலின் பரப்பும் ஒன்று கூடி அந்த இடம் கந்தருவர் முதலியோர் வசிக்கும் வானுலகமோ என்ற ஐயத்தை உண்டாக்கின.

அப்படிப்பட்ட மகா ரமணீயமான ஸ்தலத்தில், ஒப்புயர்வற்ற மகா சிங்காரமான அந்த மாளிகையிலிருந்த மதனகோபாலன், மோகனாங்கி, கிருஷ்ணாபுரம் ஜெமீந்தார் ஆகிய மூவரும் அன்றைய பகல் முழுதும் நிரம்பவும் குதூகலமாக இருந்தனர். மாலை நான்கு மணி சமயத்தில் கிருஷ்ணாபுரம் ஜெமீந்தார் தாம் வெளியில் போய்விட்டு ஒரு நாழிகை நேரத்தில் திரும்பி வருவதாக மதனகோபாலனிடத்தில் கூறிவிட்டு, அவனுக்கு விருப்பமானால், கடற்கரைக்குப் போய் சிறிது நேரமிருந்து வரலாம் என்று அனுமதி கொடுத்துவிட்டு வெளியிலே சென்றார்.

உடனே மதனகோபாலன், தான் கடற்கரைக்குப் போய், கொஞ்ச நேரம் இருந்துவிட்டு வருவதாக மோகனாங்கியிடத்தில் சொல்லி அவளது அனுமதி பெற்றுக்கொண்டு மெல்ல நடந்து அந்த பங்களாவின் உத்தியான வனத்தைக் கடந்து வெளியிலிருந்த ராஜபாட்டைக்கு வந்து சேர்ந்தான். வந்தவன் எதிரிலிருந்த கடற் கரையின் கண்கொள்ளா வனப்பையும், ராஜபாட்டையின் இரு புறங்களிலும் நெடுந்தூரம் வரையில் காணப்பட்ட வனமாளிகை களினது சிங்காரத்தையும் கண்டு பூரித்துப் புளகாங்கிதம் அடைந்த வனாய், தன்னைச் சுற்றிலுமிருந்த உன்னத சிருஷ்டியில் தனது கவனம் முழுதையும் செலுத்தி மெய்ம்மறந்து அவற்றிலேயே லயித்துப் போய்ச் சிறிது நேரம் நின்றபின், மோகனாஸ்திரம் போல மனதைக் கவர்ந்த அவ்வற்புதக் காட்சியால் வசீகரிக்கப்பட்டவனாய் ராஜபாட்டையோடு மெல்ல நடக்கத் தொடங்கினான். அந்தப் பாட்டையின் மேல் நெடுந்தூரம் இடைவெளி விட்டு பங்களாக்கள் அமைந்திருந்தமையாலும், அவற்றினுள் வசித்தோர் யாவரும் உட்புறத்திலேயே இருந்தமையாலும், அந்தப் பாட்டையின் மீது மனிதரது நடமாட்டம் சுத்தமாக இல்லாதிருந்தது. ஆனால் அப்போதைக்கப்போது இரண்டொரு மோட்டார் வண்டிகள் மாத்திரம் வந்து போய்க் கொண்டிருந்தது. மனிதர்கள் நடப்பதற் காக மணலோரமாகக் கட்டப்பட்டிருந்த குறட்டின் வழியாக மதன கோபாலன் நடந்து இடையிடையே வந்த ஒவ்வொரு பங்களாவின் உட்புறத்தழகையும் உன்னத அமைப்பையும் அதன் வெளியில் பலகைகளிலோ தகடுகளிலோ காணப்பட்ட அவற்றில் வசிப்போரது பெயர்களையும் கவனித்துக் கொண்டே சென்றான். அவ்வாறு சென்றது மதனகோபாலனுக்கு மிகுந்த உற்சாகத்தையும், ஆனந்தத்தையும் உண்டாக்கிக் கொண்டிருந்தது. அப்போது அவனுக்கெதிரில், கடற்கரையை அடுத்த சாரியில், ஒரு தென்னஞ் சோலையும், அதன் பக்கத்தில் ஓர் அழகிய பங்களாவும் இருந்தன. அந்தத் தென்னஞ் சோலையைச் சுற்றி நாற்புறங்களிலும் மதில் இருந்தது, அந்தத் தென்னஞ் சோலை, அதற்கப்பாலிருந்த பங்களாவிற்கே சேர்ந்ததாகக் காணப்பட்டது. அவன் அந்த வழியில் அதுகாறும் குறுக்கிட்ட அத்தனை பங்களாக்களையும் பார்த்ததில் அப்போது தென்னஞ் சோலைக்கருகில் காணப்பட்ட

பங்களாவே மிகவும் அழகானதாகவும், மனோகரமானதாகவும் காணப்பட்டது. சோலையைக் கடந்து பங்களாவின் வாசலை யடைநத மதன கோபாலனுக்கு அது யாருடைய பங்களா என்பதை அறிய வேண்டும் என்ற தடுக்க முடியாத ஓர் அவா உண்டாயிற்று. அவன் உடனே நிமிர்ந்து முன்புறச் சுவரில் அடிக்கப்பட்டிருந்த பளபளப்பான மூன்று பித்தளைத் தகடுகளைப் பார்த்தான். ஒரு தகட்டில் சாயுஜ்ய நிலையம் என்ற எழுத்துக்கள் காணப்பட்டன. "ஆகா! சரியான பெயர்தான! இந்த இடம் சாயுஜ்ய லோகத்தைப் போலவே காணப்படுகிறது" என்று நினைத்துக் கொண்ட மதனகோபாலன் மற்றொரு தகட்டை நோக்க, அதில் மிஸ் பாலாம்பாள் அம்மாள் என்ற பெயர் அழகான எழுத்துகளில் பெரிது பெரிதாகச் செதுக்கப்பட்டிருந்தன. "ஓகோ! இது யாரோ ஒரு தாசியினுடைய பங்களா போலிருக்கிறது" என்று யூகித்துக் கொண்ட மதனகோபாலன் மூன்றாவது தகட்டையும் பார்த்தான். அதில் மாரமங்கலம் மைனர் துரை என்ற எழுத்துகள் காணப் பட்டன. அதைக் கண்ட மதனகோபாலன் மிகுந்த வியப்பும் திகைப்பும் அடைந்தான். அப்போதே அவனுக்கு உண்மை இன்னதென்பது விளங்கியது. பாலாம்பாள் என்ற பெயருடைய ஒரு பெண் நாடகத்திலிருக்கிறாள் என்பதை மோகனாங்கி சொல்ல அவன் கேட்டிருந்தான். முன்னோர் அதிகாரத்தில் இந்த மைனர் நாடகக்காரியைத் தேடிக் கொண்டு அலைவதாகக் கண்மணியம்மாள் அவனுக்குத் தெரிவித்ததும் நன்றாக நினைவிருந்தது. ஆகவே, அந்த மைனர் பாலாம்பாளை அழைத்துக் கொண்டு வந்து கடற்கரை ஓரத்திலிருந்த அந்தப் பங்களாவில் வைத்திருக்கிறான் என்பதை மதனகோபாலன் யூகித்துக் கொண்டான். அதற்கு மேல் அந்த பங்களாவின் வாசலில் நிற்பதற்கு அவனது மனம் இடந் தரவில்லை ஆகையால், அவன் அதை விட்டு விசையாக நடந்து மேலும ராஜபாட்டை யோடு அரைக்கால் மயில் தூரம் நடந்து போனான். அப்போது மணி ஆறாகிவிட்டது. மாலை மங்கிக கொண்டு போனது. கிருஷ்ணாபுரம் ஜெமீந்தார் தனது பங்களா விற்குத் திரும்பி வந்திருப்பார் என்ற நினைவுண்டானதன்றி அவன் மெலிந்து போயிருந்த நிலைமையில் அவ்வளவு தூரம் நடந்து வந்தது ஒரு விதமான களைப்பையும் அயர்வையும்

உண்டாக்கியது. தனது உலாவை அவ்வளவோடு நிறுத்தித் திரும்பித் தனது ஜாகைக்கு வந்துவிட வேண்டும் என்ற எண்ணம் உண்டாயிற்று. ஆனால், மாரமங்கலம் மைனரும் பாலாம்பாளும் இருந்த பங்களாவின் வாசல் வழியே மறுபடியும் போவதற்கு அவனது மனம் கூசியது; ஆகையால் அவன் அதே வழியாகத் திரும்பி வராமல், கடற்கரையின் மணற்பரப்பின் பக்கமாக உள்வாயில் இறங்கி நூறு கஜத்திற் கப்பாலிருந்த தண்ணீரை நோக்கிச் சென்று, அலைகள் வந்து வந்து மோதித் திரும்பிய கரையின் ஓரமாக நடந்து வந்து கொண்டிருந்தான். ராஜ பாட்டையில் சிறிது தூரத்திற்கொன்றாக நிறுத்தப்பட்டிருந்த கரை பக்கங்களிலிருந்த மின்சார விளக்குகள் எல்லாம் கொளுத்தப்பட்டுப் போயின; சூரியன் மறைந்து போய் ஒரு நாழிகை நேரமாகி விட்டதாகையால், அந்தச் சந்தி வேளையில் வெளிச்சமெல்லாம் மழுங்கி இருளே மேலாடிக் கொண்டிருந்தமையால், நூறுகஜ தூரத்திற்கப்பால் வரும் மனிதரது அடையாளம் கண்டுகொள்ளக் கூடாததாக இருந்தது; அந்த இடத்தில், கண் கண்ட தூரம் வரையில் எந்தப் பக்கத்திலும் மனிதரே காணப்படவில்லை ஆகையால் அந்த இடம் நிருமானுஷ்யமாகவும், பயங்கரமாகவும் இருந்தது. அப்படிப்பட்ட நிலைமையில் தனியாக வந்து கொண்டிருந்த மதனகோபாலன் அடிக்கடி தனது காலடிவரையில் வந்து திரும்பிச் சென்ற அலைகளைக் கவனித்தபடியாக வந்தான். அந்த இடத்தில், மாரமங்கலம் மைனரும் பாலாம்பாளும் இருந்த பங்களாவின் பின்புறமும் அதற்கடுத்த தென்னஞ் சோலையின் பின்புறமும் சமுத்திரத்தின் கரையோரமாக வந்தனவாகையால், அலைகள் சென்று அவற்றின் பின்புறத்து மதிலில் மோதின. அந்த இடத்திற்கு வந்த மதனகோபாலன், காயம் கட்டப்பட்டிருந்த தனது காலில் அலைகள் மோதிவிடுமோ என்ற அச்சம் கொண்டவனாய், மதிலின் ஓரமாகத் தொற்றிக் கொண்டே மிகவும் ஜாக்கிரதையாக நடந்து போனான். அவ்வாறு போனவன், பங்களாவின் பின் புறத்தைக் கடந்து தென்னஞ் சோலையின் பின்புறமாக போன சமயத்தில், மதிலுக்கு அப்பால் அந்தச் சோலைக்குள் ஏதோ பெருத்த ஆரவாரமான கூக்குரல் கேட்டது. "ஐயோ! அப்பா அடிக்கறாங்களே! கொல்லறாங்களே! அடீ வாலாம்பா! என்னெ

அடிக்காதேடி! அடே பையா! எம் உசிரு போவுதடா! நான் சொம்மா வந்தேண்டா! திருடக்கிருடவல்லெயடா! ஐயோயப்பா! சாமீ! ஒன்னே கும்பிடறேண்டா!" என்று யாரோ ஒரு கிழவி கூக்குரலிட்டது நன்றாகத் தெரிந்தது. அதைக் கேட்ட மதன கோபாலனது நெஞ்சு திடுதிடுத்தது. உடம்பு கிடுகிடென்று ஆடியது. அவன் பிரமிப்பும் திகைப்பும் அடைந்து அதை நன்றாகக் கவனிக்கலானான். அப்போது உடனே ஒரு யௌவனப் ஸ்திரீயின் கீச்சுக் குரலும் அவள் ஒரு தடிக்கம்பை வைத்துக் கொண்டு படேர் படேரென்று கிழவியை அடித்த ஓசையும் கேட்டன. அந்த ஸ்திரீ மிகவும் அகங்காரமாக, "அடீகிழமுண்டை! எங்கேயடி வந்தாய் தோட்டத்துக்குள்? நேற்று ராத்திரி நீயும் அந்தக் கட்டையன் குறவனுமாக வந்து எங்களை எல்லாம் கட்டிப் போட்டுவிட்டுப் போன போது எங்களுக்கும் இபபடித் தானடி இருந்தது. ராத்திரி நீயும் அவனும் பத்திரத்தைக் கொண்டு போய் என் வாயில் மண்ணைப் போடப் பார்த்தீர்களே! அடீ! இப்போது மறுபடியும் எதற்காக வந்து இங்கே ஒளிந்து கொண்டிருக்கிறாயடி! எங்கள் தலைமேல் இன்னமும் கல்லைப் போடவா வந்திருக்கிறாய்? இனி நீ இந்தத் தோட்டத்தை விட்டு உயிரோடு வெளியிலே போகாமல் உன்னை இங்கேயே பலி போட்டுவிடுகிறேன்" என்று கூறிய வண்ணம் கிழவியை ஈவிரக்கமின்றி நன்றாக மொத்திக் கொண்டே இருக்க, அந்த அடிகளைப் பொறுக்கமாட்டாமல் அந்தக் கிழவி லபோ லபோவென்று வாயிலும் வயிற்றிலும் அடித்துக் கொள்ள, அதற்குள் மைனரும் பாய்ந்து பாய்ந்து அந்தக் கிழவியை தனது பலம் கொண்டமட்டும் உதைத்து, "அடீ அம்பட்ட நாயே! நீ இன்றைக்கு என்னிடத்தில் வசமாக மாட்டிக் கொண்டாய்! உன் வீட்டுக்கு என்னை வரவழைத்து என் பணங் களையும் பிடுங்கிக் கொண்டு திருடனிடத்திலும் என்னைக் காட்டிக் கொடுத்த முண்டையல்லவா நீ! அது போனால் போகிற தென்றால், அவனை நேற்றைக்கும் அழைத்து வந்து பத்திரத்தை எடுத்துப் போக உனக்கு அவ்வளவு துணிவா! உன்னையும் அந்தப் பத்திரத்தை எடுத்துவரும்படி உங்களைத் தூண்டிவிட்ட அந்தப் பட்டிச் சிறுக்கியையும் நான் என்ன பாடுபடுத்தி வைக்கிறேன் பார். பத்திரம் ரிஜிஸ்டராய்விட்டதென்று கண்டு

உன்னை இன்றைக்கும் அந்தத் தேவடியாள் அனுப்பினாளோ! நீ இனி அவளைக் காணாமலே இன்றோடு மாண்டு போகும்படி செய்து விடுகிறேன். கத்துகிறாயா! பேசாதே; வாயைத் திறக்காதே; கூச்சல் போட்டால் வாயைப் பார்த்து உதைப்பேன்" என்று கூறிய வண்ணம் அவளது முகத்திலும் மார்பிலும் ஓங்கி உதைக்க, அவளது வாயிலிருந்தும் மூக்கிலிருந்தும் இதர இடங்களிலிருந்தும் இரத்தம் ஒழுக ஆரம்பிக்க, அந்தக் கிழவிக்கு உடனே ரௌத்திரா காரமான கோபம் பொங்கியது. அவள் அதுவரையில் நயமாகக் கெஞ்சியதை விட்டு ஓலமிட்டுக் கதறித் தாண்டிக்குதித்துப் பாய்ந்து பாய்ந்து அவர்களோடு மடிபிடித்து யுத்தம் செய்யத் தொடங்கி, அவர்களை எட்டி உதைப்பதும், அடிப்பதும், குத்துவதும், கடிப்பதும், கூக்குரலிடுவதுமாக ஆரம்பித்து, "வாங்கடா! நீ ரெண்டு பேரு, நான் ஒரு கெயவி; ஒங்கிளுக்காச்சு எனக்காச்சு! எத்தினி நேரம் நீங்க என்னோடெ சண்டெ போடுவீங்களோ போடுங்கடா! அந்தக் கட்டையன் கொறவன் செத்துப்பூட்டானுன்னு பார்த்துக் கினீங்களா? இன்னம், சண நேரத்திலே அவன் இஞ்சே வந்து குதிச்சு ஒங்கக் கொடலைக் கிளிச்சி மாலையாப் போட்டுக்கப் போறான். பாருங்கடா! யாரையடா தேவடியாமுண்டையின்னு சொன்னே! அந்த மாதிரி சொன்ன நாக்கெ அறுத்துப்புடச் சொல்லறேன் இருடா! இதோ போவாமெ இறக்கறத்துக்குத் தாண்டா நாங்க இந்தப் பாடுபட்றோம். அடே கூறுகெட்ட நாயே! நீ எந்த எடத்துலெயோ கெடக்க வேண்டிய சின்னசாதிப் பயலெக் கொண்டாந்து நல்ல பதவியிலே வச்சா நீ தலெ காலு தெரியாமெ துள்ளி உளுந்துப் போறியேடா! வீணா அளிஞ்சு பூடாதேடா" என்று கூறிய வண்ணம், அவர்களோடு போராடத் தொடங்கினாள். அவளது தூஷணை வார்த்தைகளைக் கேட்ட மைனருக்கு ரௌத்தி ராகாரமான கடுங்கோபம் பொங்கி எழுந்தது. உடனே அவன் பக்கத்தில் கிடந்த பெருத்த தென்னமட்டை ஒன்றை எடுத்து ஆத்திரமாக ஓங்கி, "ஆகா! என்ன சொன்னாய்! நானா சின்னசாதிப் பயல்! கேவலம் அம்பட்டச்சாதி நாய்க்கு இவ்வளவு வாயா! உன்னை இன்றோடு கொன்று போட்டுவிடுகிறேன்" என்று கூறிய வண்ணம் அந்த மட்டையால் அவளது இடுப்பில் பலமாக ஓர் அடி கொடுக்க, அதைத் தாங்கமாட்டாத அம்பட்டச்சி, "ஐயோ! அப்பா!"

என்று பெருங் கூச்சலிட்டுத் துள்ளிக் குதித்து, "அடே! என்னெ இப்பிடித்தான் அடிப்பியாடா? நான் அம்பட்ட நாயிதாண்டா! நீ யாரு தெரியுமாடா? இந்த அம்பட்ட நாயோடே வவுத்துலே பொறந்த புள்ளெடா! ஒன்னே நான் செமீந்தாராக்கினேன்டா! நீ எனக்கும் ஒரு கொறவனுக்கும் பொறந்த இருபொறப்பு நாயிடா! அடே! நாம் மாத்ரம் உசிரோடே இருந்தேனுன்னா இன்னமே நீ செமீந்தாரா இருக்க உடமாட்டேண்டா! இன்னெக்கி எட்டா நாளைக்குள்ளற அந்த நெசமான செமீந்தாரு எங்ஙனே இருக்கிறா னுன்னு கண்டுபுடிச்சு, ஒம் வாயிலே மண்ணைப் போட்டுக் குத்த றேண்டா; அப்புறம் இந்த வங்களாவும் பாலாம்பாளும் போற எடந் தெரியாதுடா" என்று கூறிக் கதற, அந்தக் கூக்குரலைக் கேட்ட பாலாம்பாளும் மைனரும் முன்னிலும் அதிகமான ஆங்காரங் கொண்டு தடிகளால் அவளை மேன்லேும் அடிக்க, அவள் கடைசி யாக மயங்கி ஸ்மரணை தப்பிக் கீழே விழுந்து விட்டாள்.

அதன் பிறகு கொஞ்ச நேரத்தில் அவர்களது கோபம் தணிவடைந்தது. கிழவி இறந்து போய்விட்டாள் என்று நினைத்துக் கொண்ட இருவரும் அவளது பிணத்தை என்ன செய்வதென்று யோசனை செய்தனர். மைனர் அந்தத் தோட்டத்திலேயே ஒரு குழி தோண்டி அதற்குள் அதைப் போட்டுப் புதைத்துவிடலாம் என்றான். பாலாம்பாள் அப்படிச் செய்தால், பின்னால் எவராவது அதை கண்டு கொண்டால் சந்தேகம் நம்மீதே ஏற்படும் என்று சொல்லி, அதன் கைகளையும் கால்களையும் கட்டி சமுத்திரத்தில் எறிந்துவிட்டால், அந்த ராத்திரிக்குள் அந்தப் பிணத்தை மீன்கள் தின்று விடும் என்று கூறினாள். மைனர் அதை ஒப்புக் கொண்டு அவளது கைகால்களை எல்லாம் கட்டுவதற்காக கயிறுகள் கொண்டு வரும்படி பாலாம்பாளை அனுப்ப, அவள் போய் உடனே எடுத்து வந்தாள்.

மேலே விவரிக்கப்பட்ட விபரீதச் சண்டை நடந்த சமயத்தில் அங்கே வந்து மதிட்சுவரின் வெளிப்புறத்தில் நின்ற வண்ணம் அந்த அபூர்வமான சம்பாஷணைகளையும் அடிதடி சண்டையை யும் உணர்ந்து கொண்ட மதனகோபாலன், அளவிறந்த திகைப்பும் திகிலும் நடுக்கமும் அடைந்தவனாய், அப்படியே மதிலோடு

மதிலாய் ஒன்றி நின்று மனிதர்கள் ஒன்றுகூடி, வயதான ஒரு கிழவியைச் சித்திரவதைச் செய்வதைப் பார்த்துக் கொண்டு பொறுத்திருக்க மாட்டாமல் அவனது மனம் துடிதுடித்தது. அந்த மதிலின் மீது ஏறலாம் என்றால், காலில் புண்ணிருந்தபடியாலும், சுவரில் எவ்விதமான இடுக்காவது பிளவாவது இல்லாமல் மழமழப்பாக இருந்ததாலும், அவனால் ஒன்றும் செய்யக் கூடாமல் போய்விட்டது. அதற்குள் உட்புறத்தில் கிழவி கீழே வீழ்ந்து விட்டாள்; அவளைக் கட்டி எடுத்து சமுத்திரத்தில் போட்டு விடுவதென்ற தீர்மானம் செய்யப்பட்டதும் அவனது செவியில் விழுந்தது; அந்த மதிலில் ஒரு வாசற்படியும் கதவுமிருந்தன. அந்தக் கதவு மூடி உட்புறத்தில் தாளிடப்பட்டிருந்தது. அவர்கள் கிழவியை எடுத்துக் கொண்டு அந்த வழியாகவே வருவார்கள் ஆகையால், தான் அப்போது அங்கே இருப்பது கூடாதென நினைத்தவனாய் மதனகோபாலன் சிறிது அப்பால் போய் மதிலின் மூடக்கில் மறைந்து கொண்டான். அவன் நினைத்தது போலவே அடுத்த நிமிஷத்தில் மதிலின் வாசற்கதவு திறக்கப்பட்டது. மைனரும் பாலாம்பாளும் கைகால்கள் கட்டப்பட்டிருந்த கருப்பாயியைத் தூக்கிக் கொண்டு வந்து சமுத்திரத்தில் போட்டு விட்டு உள்ளே போய்க் கதவை மூடித் தாளிட்டுக் கொண்டனர். மதிலின் மூடக்கில் மிகுந்த பதைபதைப்போடு மறைந்திருந்த மதன கோபாலன் தனது பலவீனமான நிலைமையையும் காலில் கட்டப்பட்டிருந்த காயத்தையும் பொருட்படுத்தாமல் தனது ஆவேசத்தில் தன்னை மறந்தவனாய் ஒரே ஓட்டமாக ஓடி மதிலினது வாசலிற்கருகில் வந்து, தண்ணீர்ப் பக்கம் பார்க்க, அதற்குள் பிரம்மாண்டமாக வந்து திரும்பிய இரண்டு மூன்று அலைகளால் இழுத்துக் கொண்டு போகப்பட்ட கிழவியின் உடம்பு நெடுந்தூரத்திற்கப்பால் போயிருக்கக் கண்டான். காணவே, அது அதற்கு அப்பாலும் போய்விடாமல் அதைத் தடுத்து இழுத்துக் கொண்டு வரவேண்டும் என்ற எண்ணங் கொண்டவனாய், அலைகளுக்குள் விரைவாகப் பாய்ந்து, கிழவியின் உடம்பு கிடந்த இடத்தை அணுகினான். அப்போது பெருத்த பெருத்த அலைகள் எழுந்து உருண்டு புரண்டு உக்கிரமாக ஒன்றோடொன்று மோதிக் கொண்டிருந்தன ஆகையால், கிழவியின் உடம்பு கிட்ட வருவதும் உருண்டு

புரண்டு தூரத்தில் போவதும் தண்ணீருக்குள் மறைந்து வெளிப்படு வதுமாக மிகவும் உலப்பப்பட்ட வண்ணமிருக்க, அதைப் பிடித்துக் கொள்வதற்காக மதனகோபாலன் மார்பளவு தண்ணீர் இருந்த இடம் வரையில் போய் அலைகளால் மோதப்பட்டு அங்கு மிங்கும் உருண்டு புரண்டு நெடுநேரம் தத்தளித்துக் கடைசியாகக் கிழவியின் உடம்பைப் பிடித்துக் கொண்டான். கிழவி அடிபட்டு மூர்ச்சித்துக் கிடந்த நிலைமையில் தண்ணீரில் எறியப்பட்டவள் ஆதலால், தண்ணீரும் குளிர் காற்றும் உடம்பில் மோதவே, அவளது உணர்வு தெளிந்ததானாலும், தண்ணீரில் முழுகிய போதெல்லாம் வாய் மூக்கு காது முதலியவைகளினால் தண்ணீர் உள்ளே நுழைந்ததாகையால் அவள் மூச்சுவிட மாட்டாமல் தத்தளித்து வாயை மெதுவாகத் திறப்பதும் மூடுவதும் தண்ணீரை நிரம்பவும் குடிப்பதுமாகத் தனது உயிரை விடுத்துக் கொண்டிருந் தாள். அந்த நிலைமையில் அவளைப் பிடித்துக் கொண்ட மதனகோபாலன், அவள் உயிரோடிருக்கிறாள் என்பதைக் கண்டு மிகுந்த களிப்பும் நம்பிக்கையும் உற்சாகமும் கொண்டு, அவளது முகத்தை மாத்திரம் தண்ணீருக்கு வெளியே பிடித்தவண்ணம் கரையை நோக்கி வர முயன்றான். ஆனால் அடிக்கடி மேன்மேலும் வந்து வந்து சுருண்டு சுருண்டு மோதிய அலைகளினிடையில் மதனகோபாலன் அகப்பட்டுத் தண்ணீருக்குள் ஆழ்ந்து போனாலும், கிழவியை மாத்திரம் உயரத் தூக்கியபடியே தண்ணீருக்குள் இருந்து பாய்ந்து பாய்ந்து வெளிப்பட்டவனாய்க் கரையை நோக்கி சிறிது தூரம் வருவதும், அதற்கு இரண்டு மடங்கு தூரம் பின்னால் இழுக்கப்படுவதுமாகத் தத்தளித்துக் கொண்டிருந் தான். அவன் மிகவும் இளைத்து பலவீனம் அடைந்திருந்தவன் ஆகையால், அவனது கண்கள் அடிக்கடி இருண்டன. சிரம் சுழன்றது. அறிவு மயங்கியது. கைகால்கள் எல்லாம் சோர்ந்து கட்டிலடங்காமல் போயின. அப்படி இருந்தாலும், அந்தக் கிழவியின் உயிரை எப்படியாகிலும் தான் காப்பாற்ற வேண்டும் என்ற ஜீவகாருண்யத்தினால் தூண்டப்பட்டவனாய், அவன் தனது அற்ப பலத்தை நன்றாக வற்புறுத்தி உபயோகித்து, அந்த அலைகளினிடையில் கிடந்து கால் நாழிகை நேரம் வரையில் தவித்துக் கொண்டிருந்தவனாய்ப் பெரும் பாடுபட்டு அந்தக்

கிழவியைக் கரைக்குக் கொணர்ந்தான். அலைகள் மதில் வரையில் வந்து போய்க் கொண்டிருந்தன ஆகையால், அவ்விடத்தில் அவன் அவளை வைக்கக்கூடாமல் இருந்தது. அப்படி வைத்தாலும் ஒருகால் மைனரும் பாலாம்பாளும் மறுபடியும் வந்து அவருக்கு ஏதேனும் துன்பமிழைப்பரோ என்ற நினைவும் மதனகோபாலனது மனதில் தோன்றியது. ஆகையால், அவன் அந்தக் கிழவியின் கட்டுகளைக்கூட அவிழ்க்காமல் அவளைத் தூக்கித் தன் வலது தோளின் மேல் சார்த்திக் கொண்டவனாய்க் கடலோரமாக நடந்து, தென்னஞ்சோலைக்கப்பால் சென்றான். தண்ணீரில் அவனை இழுத்துக் கொண்டு வருவது சுலபமாக இருந்தமையால், அவன் தனது பலவீனமான நிலைமையில் ஏதோ ஜீவகாருண்யத்தைக் கருதி அவளை அலைகளுக்கு வெளியில் சுலபமாகக் கொண்டு வந்தான். ஆனால் அவன் அலைகளுக்கு நடுவில் கிடந்து நெடுநேரம் வரையில் போராடி முற்றிலும் சோர்ந்திருந்தவனாகை யாலும், அவனது உடைகளும், அவளது சேலையும் தொப்பலாக நனைந்து ஏராளமான தண்ணீரைத் தேக்கிக் கொண்டிருந்தமை யாலும், அவனது கேவலமான நிலைமையில், அவளைத் துணிகளின் சுமையோடு சேர்த்துத் தூக்கிக் கொண்டு மணலின் மீது நடப்பது மகா கடினமாகவும், அவனால் சிறிதும் சாத்தியம் இல்லாததாகவும் இருந்தது. அவனது தேகம் தட்டித் தடுமாறித் தள்ளாடியது. கால்கள் கட்டினில் நில்லாமல் பின்னி கண்கள் இருண்டன; உணர்வு பிறழ்ந்து கொண்டே இருந்தது. தென்னஞ் சோலைக்கப்பால் இருந்த மணல் பரப்பை அடைந்தவுடன் அதற்கு மேலும் செல்லமாட்டாமல், அவர் மூர்ச்சித்து அவளை கீழே போட்டுக் கொண்டு அப்படியே மணலில் சாய்ந்துவிட்டான். அவ்வாறு சாய்ந்தவன் உணர்வற்று அசைவற்று மூச்சுப் பேச்சற்று வீழ்ந்து கிடந்தான். கருப்பாயியும் தனது கட்டுகளோடு சோர்ந்து நித்திரையில் இருப்பவள் போலச் சற்று தூரத்தில் படுத்திருந்தால், அவ்வாறு ஒரு நாழிகை நேரம் கழிந்தது. கையில் லாந்தர்களோடு சில வேலைக்காரர்களை அழைத்துக் கொண்டு, "மதனகோபாலா! மதனகோபாலா!" என்று கூவிய வண்ணம் அவனைத் தேடிக் கொண்டு வந்த கிருஷ்ணாபுரத்து ஜெமீந்தார் அவ்விடத்தில் தண்ணீரில் நனைந்த கட்டைகள்போல இருந்த அவ்விருவரையும்

கண்டு சந்தேகித்து, ஆட்களோடு அங்கே வந்து சேர்ந்தார். சேர்ந்தவுடனே ஜெமீந்தார் லாந்தரை அவர்களது முகங்களிற்கருகில் பிடித்துப் பார்த்து, மதனகோபாலனும், ஒரு கிழவியும் நனைந்து போயிருந்த துணிகளோடு கிடந்ததைக் கண்டு பெரிதும் திகைப்பும், அச்சமும், கவலையும் கொண்டவராய், "மதனகோபாலா! மதனகோபாலா!" என்று இரண்டு மூன்று முறை கூப்பிட்டுப் பார்க்க, அவனாகிலும் கிழவி யாகிலும் பேசாமலும் அசையாமலும் இருந்ததைக் கண்டு, முன்னிலும் அதிக திகிலடைந்தவராய், மதனகோபாலனுக்கருகில் வந்து அவனது கையைப் பிடித்துப் பார்த்தார், நாடி நன்றாக அடித்துக் கொண்டிருந்தது; அப்போதே அவருக்கு நல்ல உயிர்ப்பும் துணிவும் திரும்பின. அவர் உடனே அந்தக் கிழவியின் நாடியையும் பிடித்துப் பார்த்து அவளும் உயிரோடிருக்கிறாள் என்பதை உணர்ந்து கொண்டார். உடனே அவர் தமது வேலைக்காரர்களை ஏவி, அவளது கட்டுகளை அவிழ்த்துவிடச் செய்தார். அவள் அதிகமான தண்ணீரைக் குடித்துவிட்டதால், அவளது வயிறு பெருத்த பானை போல் விரிந்திருந்தது. அந்த ஆட்களுள் ஒருவன் அவளைத் தூக்கித் தனது சிரசின் மீது வைத்துக் கொண்டு கால் நாழிகை நேரம் வரையில் சுற்ற, வயிற்றிலிருந்த ஜலமெல்லாம் வெளிப்பட்டது. உடனே இரண்டு ஆட்கள், அவர்களிருவரையும் தூக்கிக்கொள்ள, எல்லோரும் கிருஷ்ணாபுரம் ஜெமீந்தாரது புதிய பங்களாவை நோக்கி விரைவாக நடந்தனர். அப்போது ஜெமீந்தார் விவரிக்க ஒண்ணாத சஞ்சலமடைந்தவராய்ப் பற்பல யூகங்கள் செய்து கொண்டே சென்றார். துப்பாக்கியால் சுடப்பட்டு இரத்தத்தை இழந்து மெலிந்திருந்த நிலைமையில் அவனைத் தாம் தனியாக வெளியில் அனுப்பியதைக் குறித்து அவர் தம்மைத் தாமே வைதுகொண்டார். அந்தக் கிழவி யாராக இருப்பாள் என்றும், அவள் கைகால்கள் எல்லாம் கட்டப்பட்டுக் கிடந்ததன் காரணம் என்னவென்பதை யோசித்து யோசித்துப் பார்த்தார்; அந்தக் கிழவி எவர்களாகிலும் அவ்வாறு கட்டப்பட்டு சமுத்திரத்தில் போடப் பட்டிருப்பாளோ என்றும், அதைக் கண்டு மதனகோபாலன் சமுத்திரத்தில் வீழ்ந்து அவளைக் கொணர்ந்திருப்பானோ என்றும் ஒருவித சந்தேகம் கொண்டவராக நடந்தார். மிகவும் கேவலமான

நிலைமையிலிருந்த மதனகோபாலன் தண்ணீரில் வீழ்ந்து அவ்வளவு அதிகமாக உலப்பப்பட்டிருப்பதனால், அவனது தேகஸ்திதி எப்படியாகுமோ என்ற கவலையும் எழுந்து நிரம்பவும் வதைக்கத் தொடங்கியது; அந்தக் கிழவியின் கைகால்களை எல்லாம் அவ்வாறு கட்டி ஈவிரக்கமின்றி அவ்வளவு கொடிய மனதோடு போட வேண்டிய காரணம் என்னவாக இருக்கும் என்று ஜெமீந்தார் பலவாறு எண்ணமிட்டுக் கொண்டவராகச் செல்ல, யாவரும் கால் நாழிகை நேரத்தில் புதிய பங்களாவை அடைந்தனர்.

அவ்விடத்தில் மதனகோபாலனும், கிழவியும் வசதியான இரண்டு படுக்கைகளில் விடப்பட்டனர். உடனே டாக்டர் ஒருவர் வருவிக்கப்பட்டார். அவர்களுக்கு கோதுமைத் தவிட்டு ஒற்றிடம் கொடுக்கப்பட்டதோடு, உடம்பில், சூடுண்டாவதன் பொருட்டு, பலவகையான தைலங்களும் பூசப்பட்டன. மறுபடியும் மதன கோபாலனுக்கு நேர்ந்த விபத்தை உணர்ந்த மோகனாங்கி பணிவிடைகளைச் செய்தவளாய் அழுத கண்ணும் சிந்திய மூக்குமாக இருந்தனள். அவ்வாறு அவர்கள் இருவருக்கும் எண்ணிறந்த சிகிச்சைகள் செய்யப்படவே, அவர்களது உணர்வு சிறுகச்சிறுகத் திரும்பிவந்து கொண்டிருந்தது. அந்த இரவு முழுதும், அந்த பங்களாவில் இருந்தோர் எல்லோரும் தூங்காமலும், ஆகாராதிகளை நாடாமலும், மெய் வருத்தம் பாராமலும் இருந்து அரும்பாடுபட்டு அவர்கள் இருவரையும் நல்ல நிலைமைக்குக் கொணர்ந்தனர்.

மறுநாட் காலையில், அவர்கள் இருவரும் முற்றிலும் தெளி வடைந்தவராக கண்களை விழித்தனர். முதல் நாள் மாலையில் நேர்ந்த சம்பவமும், அதன் பிறகு பின்னிரவில் தமக்குச் செய்யப் பட்ட சிகிச்சைகளும் அவர்களுக்கு நினைவிருந்தனவேயன்றி, இடையில் தாம் அவ்வாறு அந்த பங்களாவிற்குக் கொண்டுவரப் பட்டோம் என்பது அவர்களுக்குத் தெரியாதிருந்தது; அம்பட்டக் கருப்பாயிக்கு அது கனவு போலவே இருந்தது. மைனரும் பாலாம்பாளும் தன்னை அடிக்கிற காலத்தில் தான் அதைத் தாங்கமாட்டாமல் மயங்கி அரைவுணர்வோடு கீழே வீழ்ந்திருந்த காலத்தில், அவர்கள் இருவரும் தம் கைகால்களை எல்லாம் கட்டித்

தன்னைத் தூக்கிக் கொண்டு போய் சமுத்திரத்தில் போட்டது அவளுக்கு அரையுணர்வாகத் தெரிந்தது. அதன்பிறகு தான் தண்ணீரில் கிடந்து தத்தளித்து உயிருக்கு மன்றாடிய தருணத்தில் யாரோ தன்னை எடுக்க முயன்றதும் கனவு போலப் புலப்பட்டது. அதன் பிறகு பின்னிரவில் தனக்குப் பலவகையான சிகிச்சைகள் செய்யப்பட்டதும் தெரிந்தது. ஆகவே, அவள் காலையில் தெளிவு பெற்று விழித்த காலத்தில், அவளுக்கு எல்லாம் வியப்பாகவே தோன்றியது. தேவேந்திரனது மாளிகை போலக் காணப்பட்ட ஓரிடத்தில் மிகவும் சொகுசான ஒரு படுக்கையில் தான் விடப் பட்டிருந்ததும், ஏராளமான பணிமக்கள் சூழ்ந்திருந்து அவ்வளவு சிறப்பான இடத்தில் வைத்துக் கொண்டு அவ்வளவு பட்சமாகவும் அருமையாகவும் காப்பாற்றுகிற மனிதர்கள் யார் என்பதை அறிந்து கொள்ளவும், தனது நன்றியறிதலின் பெருக்கை வெளிப்படுத்தவும் அவளது மனம் துடித்துக் கொண்டிருந்தது. தனக்கு உயிர்ப்பிச்சை கொடுத்தவர்களான அந்த மனிதர்களுக்கு எப்படிப்பட்ட கைம்மாறு தன்னால் செய்யக்கூடியதாக இருந்தாலும் தான் எப்படியும் செய்தே தீரவேண்டும் என்ற ஓர் உறுதியும் அவளது மனதில் அப்போதே உண்டாயிற்று. அவள் அவ்வாறு எண்ணமிட்டுக் கொண்டிருந்த சமயத்தில், அவர்கள் இருவருக்கும் மருந்துகளும் சுகமான ஆகாரங்களும் கொடுக்கப்பட்டன. மதனகோபாலன் படுக்கையை விட்டெழுந்து ஒரு சோபாவின் மேல் சாய்ந்து கொண்டிருந்தான். ஜெமீந்தார் அவனுக்கருகில் உட்கார்ந்து கொண்டிருந்தார். கருப்பாயி தனது படுக்கையிலிருந்த திண்டில் சாய்ந்த வண்ணம் சோர்ந்து கிடந்தாள். அப்போது மோகனாங்கி யும் மதனகோபாலனுக்கருகில் நின்று கொண்டிருந்தாள். பணி மக்கள் எல்லோரும் தங்களது அறைகளுக்குச் சென்று விட்டனர். அப்போது ஜெமீந்தார் மதனகோபாலனை நோக்கி முதல் நாள் நடந்த சம்பவத்தின் வரலாற்றைக் கேட்க, அவன் பங்களாவை விட்டுப் போன முதல், கருப்பாயியை எடுத்து வந்து மணலின் மேல் போட்டது வரையில் உள்ள விவரங்களையும் மைனரது தென்னஞ் சோலைக்குள் நடந்த சம்பாஷணைகளின் விவரத்தை யும் எடுத்துக் கூறினான். அதைக் கேட்ட ஜெமீந்தார் மதனகோ பாலனது காருண்ய குணத்தைப் பற்றியும் சௌரியத்தைப்

பற்றியும் மிகவும் புகழ்ந்ததன்றி, அங்கே நடந்த சம்பாஷணையில் வெளியான புதிய விஷயத்தைப் பற்றி அளவிலடங்காத வியப்பும் திகைப்பும் அடைந்து, சிறிது நேரம் வரையில், அது உண்மையாக இருக்குமோ என்பதை நம்பாமலே இருந்தார். பிறகு ஜெமீந்தார் கிழவியின் பக்கம் திரும்பி, "ஏ கிழவி! உன்னுடைய பெயரென்ன கருப்பாயியா?" என்று அன்பாக வினவினார்.

அதுகாறும் மதனகோபாலன் சொன்ன வரலாறுகளை எல்லாம் கேட்டு அவன் தன்னைக் காப்பாற்றியதைப் பற்றி மனங்கொள்ளா நன்றியறிதலின் பெருக்கை அடைந்து பொங்கிப் பொறுமியிருந்த கருப்பாயி, "ஆமாங்க எசமானே! எம்பேரு கருப்பாயிதானுங்க, நான் சாதியிலே அம்பட்டச்சி; இந்த நாயெ ஒரு பெரிய மனசியலெ மதிச்சு நீங்கள்ளாம் எனக்குச் சேஞ்ச ஒவகாரத்துக்கு நான் என்ன தான் செய்யப் போறேன்! ஒங்கிளுக்கு மின்னாலே கையெக்கட்டி வாயைப் பொத்திக்கினு நிக்க வேண்டிய புழுக்கைச்சியான நான் இப்பிடிக் குந்தியிருக்கிறது எம்மனசுக்குத் தாளெல்லெ; என்னாலே எந்திரிக்க முடியலீங்க. எசமான் கோவிச்சுக்கக் கூடாது" என்று அந்தரங்கமான நன்றியறிதலோடும், மரியாதையாகவும் உருக்க மாகவும் கூறினாள். முதல் நாள் மாலையில் அவள் பெற்ற அடிகளினாலும் காயங்களினாலும், கைகால்கள் கட்டப்பட்டு நெடுநேரம் கிடந்ததாலும், அலைகளினால் சித்திரவதை செய்யப் பட்டதாலும், அவளது நிலைமை நிரம்பவும் கேவலமாக இருந்த தாகையால், மதனகோபாலனது விஷயத்திலும் ஜெமீந்தாரினது விஷயத்திலும் அவளது மனதில் அபரிமிதமாகப் பொங்கி எழுந்த நன்றியறிதலின் பெருக்கையும், மன நெகிழ்வையும் தாங்க மாட்டாமல், அவள் மயங்கிப் போய் மறுபடியும் படுக்கையில் சாய்ந்து உறங்கி விட்டாள்.

அதைக் கண்ட ஜெமீந்தாரும் மதனகோபாலனும் அவள் விஷயத்தில் மிகுந்த இரக்கமும் பச்சாத்தாபமும் கொண்டவர்களாய் ஒருவரது முகத்தை ஒருவர் பார்த்துக் கொண்டனர்.

அப்போது மதனகோபாலன் ஜெமீந்தாரை நோக்கி, "நேற்று சாயுங்காலம் இவள் அந்த மைனரைப் பார்த்து தனக்கும் யாரோ ஒரு குறவனுக்கும் பிறந்த பிள்ளை என்றாளே! அது உண்மையாக

இருக்குமா? அல்லது, அவர்கள் அடித்ததைப் பொறுக்க மாட்டாமல் ஆத்திரத்தினால் சொன்ன வெறுந் தூஷணையாக இருக்குமா? அப்படி நிஜமாக இருந்தால், அவனைக் கல்யாணியம் மாள் தம்முடைய பிள்ளை என்று பாவித்து உலகத்தாரும் அப்படியே நினைக்கும்படி செய்திருப்பதன் காரணம் என்ன? இது நிரம்பவும் அபூர்வமான சங்கதியாக இருக்கிறதே!" என்றான்.

ஜெமீந்தார் ஒருவித மகிழ்ச்சியும் ஆனந்தமும் அடைந்தவராய், "இதைக் கேட்ட முதல் எனக்கும் ஆச்சரியம் தாங்க முடியவில்லை. கல்யாணியம்மாள் சாதாரணமான மனுஷியல்ல. அவள் உன் விஷயத்தில் எவ்விதமான சாகசமும் தந்திரமும் செய்தாள் பார்த்தாய் அல்லவா! அதன் பிறகு நீ பிராது கொடுக்காமல் இருப்பதற்காக உன்னைத் தொலைக்க வேண்டி வெள்ளைக்காரி போலப் போய் துரைராஜாவை ஏவிவிட்டவள் அல்லவா! இந்தக் காரியங்களை எல்லாம் வேறே எந்தப் பெண்பிள்ளையாவது துணிந்து செய்வாளா? ஒருகாலுமில்லை. இந்த அம்பட்டக் கிழவி சொல்லுவது நிஜமாகத்தான் இருக்க வேண்டும். இல்லாவிட்டால், இவ்வளவு தூரம் கட்டுப்பாடாக இவள் சொல்ல வேண்டிய காரணமில்லை. ஏதோ பத்திரத்தை இவள் அபகரித்துக் கொண்டு போய் கல்யாணியம்மாளிடத்தில் கொடுத்து விட்டாள் என்பதும், அது ரிஜிஸ்டர் செய்யப்பட்ட பத்திரம் என்பதும் தெரிகின்றன. அதை எல்லாம் பார்த்தால் இவள் கல்யாணியம்மாளுக்கு மிகவும் அந்தரங்கமான வேலைக்காரி என்பது தெரிகிறது. சுமார் பதினெட்டு வருஷ காலத்துக்கு முன் ஒரு வதந்தி உண்டாயிற்று. அப்போது தான் கல்யாணியம்மாளுடைய புருஷன் இறந்து போனான். எனக்கு துரைராஜாவென்ற தம்பி மகன் இருப்பது போல அவருக்குச் சின்ன துரை என்ற ஓர் அயோக்கியன் தம்பி மகனாக இருந்தான். அவன் இந்த ஜெமீனெல்லாம் தனக்கு வந்து சேர வேண்டும் என்று யாரோ ஆள்களைவிட்டு, கல்யாணியம் மாளுடைய ஆண்பிள்ளையைத் திருடிக் கொண்டு வரும்படி செய்து விட்டான். அந்த விசனத்தைத் தாங்க மாட்டாமலேயே கிழவர் இறந்து போய்விட்டார். அப்போது கல்யாணியம்மாள, அந்த சின்னதுரை வசித்துக் கொண்டிருந்த இடமான இந்த ஊருக்கு வந்து சொற்பகாலம் இருந்து காணாமற் போன குழந்தையைக்

கண்டு பிடித்து அழைத்துக் கொண்டு வந்தார் என்று ஜனங்கள் சொல்லிக் கொள்ளுகிறார்கள். நானும் அதைப் பற்றி அப்போது கேள்விப்பட்டிருக்கிறேன். இப்போது இந்தக் கிழவி சொல்வதைப் பார்த்தால், கல்யாணியம்மாள், இவளுடைய பிள்ளையை விலைக்கு வாங்கி வைத்துக் கொண்டு தன்னுடைய பிள்ளை என்று சொல்லி எல்லோரையும் ஏமாற்றிவிட்டாள் என்றே நினைக்க வேண்டியிருக்கிறது. காணாமற் போன பிள்ளையை அவள் கொண்டு வந்துவிட்டாள் என்பதைக் கேட்டவுடனே அந்த சின்னதுரை உடனே தற்கொலை செய்து கொண்டு விட்டானாம். இந்தச் சங்கதி நமக்குத் தெரிய நேர்ந்தது ஈசுவர சங்கற்பமேயன்றி வேறல்ல. நாம் இவளிடத்தில் கேட்டு உண்மையான வரலாறு களை எல்லாம் அறிந்து கொள்வோம். இவள் இன்னம் ஒரு வாரத் துக்குள் அவனை ஜெமீந்தார் பதவியிலிருந்து விலக்கப் போவ தாகச் சொன்னாள் என்றாயே? அதை எப்படிச் செய்வாள் என்பதையும் நாம் கேட்போம். அந்தப் பத்திரம் சமீபத்தில் ரிஜிஸ்டரானதாகவே தெரிகிறது. அதன் விவரத்தையும் இவளிடத்தில் கேட்டுக் கொண்டு சப் ரிஜிஸ்டிராரது கச்சேரியி லிருந்து அதற்கு ஒரு நகல் வாங்கிக் கொள்வோம். நான் கல்யாணி யம்மாள பேரில் செய்யப்போகும் வியாஜ்ஜியத்துக்கு இதெல் லாம் மிகவும் அனுகூலமாக இருக்கும்" என்றார்.

அந்த விவரங்களை எல்லாம் கேட்ட மதனகோபாலன் அளவிறந்த வியப்பும் திகைப்பும் அடைந்தவனாய், "இந்த விஷயம் புதுமையிலும் புதுமையாக இருக்கிறதே! உண்மை யிலேயே, தம்முடைய குழந்தை திரும்பாமலே போயிருந்தாலும், இப்படிப்பட்ட பெருத்த சமஸ்தானத்தின் எஜமானியாக இருக்கும் ஒரு ஸ்திரீ ஒரு குறவனுக்கும் அம்பட்டச்சிக்கும் பிறந்த குழந்தையை வாங்கித் தமது பிள்ளையென்று சொல்லி வைத்துக் கொண்டு சீராட்டி வளாத்து அவனுக்குப் பணிந்து நடக்க மனம் ஒப்புமா என்பது தான் நம்பத்தகாததாக இருக்கிறது" என்றான்.

ஜெமீந்தார், "அப்படி செய்யாவிட்டால், சமஸ்தானமும் சொத்து களும் செல்வாக்கும் அதிகாரமும் மற்ற எல்லா மேன்மையும் சின்ன துரையைச் சேர்ந்துவிடும் அல்லவா; அப்புறம் கல்யாணி யம்மாளுக்குச் சொற்பத் தொகை தானே ஜீவனாம்சமாகக்

கிடைக்கும். அதை வைத்துக் கொண்டு என்ன செய்கிறது. அதற்காகத் தான் அவள் இப்படிப்பட்ட படுமோசத்தில் இறங்கி இருக்கிறாள். ஆனால் அது இவ்வளவு காலந்தான் நீடித்திருக்க ஈசுவரனுக்குச் சம்மதம் போலிருக்கிறது. இனிமேல் இந்த விஷயம் எப்படியும் வெளியாகிவிடும். இந்த அம்பட்டப் பையன் இனி மேல் அடைப்பப் பையையாவது கன்னக்கோலையாவது எடுத்துக் கொள்ள வேண்டியது தான் அவனுடைய தலை எழுத்து" என்றார். மதனகோபாலன், "அப்படியானால் இந்த சமஸ்தானத்தின் கதி என்னவாகிறது? இப்படி ஆள்மாறாட்டம் செய்த குற்றம் எப்படி முடியும்?" என்றான்.

ஜெமீந்தார், "இந்தக் கல்யாணியம்மாள் தான் இருக்கிற வரையில் சமஸ்தானத்தை அனுபவித்துக் கொள்ளலாம், அதன் பிறகு இது தாயாதிகளைச் சேர்ந்துவிடும். ஆனால் இப்படி ஆள்மாறாட்டம் செய்த குற்றத்தை கவர்ன்மெண்டார் சும்மா விடமாட்டார்கள். ஏனென்றால், கலெக்டர் துரை விசாரணை செய்து உண்மையான வார்சுதார் பேரில் சமஸ்தானத்தை மாற்றுவார்கள். இந்த நாவிதப் பையன் தான் தன்னுடைய மகன் என்று கல்யாணியம்மாள் கலெக்டருக்கு முன் தப்பாக எழுதி வைத்திருப்பதால் அவளுக்குக் கடுமையான தண்டனை ஏற்படுவது நிச்சயம்" என்றார்.

அதைக் கேட்ட மதனகோபாலனது மனதும் கண்களும் கலங்கின; அவன் கல்யாணியம்மாளது விஷயத்தில் மிகுந்த இரக்கம் கொண்டவனாய், "ஐயோ! பாவம்! அந்த அம்மாளுக்கு என்னென்ன உபத்திரவங்கள் எல்லாம் உண்டாகின்றன! அடாடா! அந்த அம்மாள் என் விஷயமாகச் செய்துள்ள காரியங் களைப் பற்றி மேல்நடவடிக்கை நடத்தி அந்த அம்மாளைக் கச்சேரிக்கு இழுக்க எனக்குக் கொஞ்சமும் மனமில்லை. நீங்களோ அவர்களைச் சும்மா விட்டுவிடக் கூடியதென்கிறீர்கள். எப்படியாவது நீங்கள் பெரிய மனசு காட்டி அந்த அம்மாளை மன்னித்து இவ்வளவோடு விட்டுவிடுங்கள். ஏதோ பெண் புத்தியினால் தெரியாத்தனமாகச் செய்திருக்க வேண்டும். நாமேன் அவர்களுடைய வாயில் விழவேண்டும். ஆனால் உங்களுக்குத் தெரியாததற்கு நான் என்ன சொல்லக் கிடக்கிறது" என்று மனப்பூர்வமான உருக்கத்தோடு

கூறினான். அந்தச் சமயத்தில் அம்பட்டக் கருப்பாயி தனது கண்களை விழித்துக் கொண்டு அவர்களைப் பார்த்தாள் ஆகையால், ஜெமீந்தார் மதனகோபாலனுக்கு எவ்வித மறுமொழி யும் கூறாமல், அவளது பக்கம் திரும்பி, "கிழவீ! உனக்கு உடம்பும் மனமும் சரியான நிலைமைக்கு வரவில்லை போலிருக்கிறது. இன்று முழுதும் பேசாமல் படுத்துக் கொண்டிரு. சாயுங்காலத்திற்குள், எல்லாம் சரியாகப் போய்விடும்" என்று அன்பாக மொழிந்தார். அதைக் கேட்ட கருப்பாயி தனது படுக்கையில் சடக்கென்று எழுந்து உட்கார்ந்து, "இல்லீங்க. ஓங்க தயவினாலே என்னோடே ஒடம்பு சரியாப் போச்சுதுங்க. இனிமேலெ பயமில்லீங்க; இப்ப நான் கண்ணெ மூடிக்கினதெப் பாத்து, நான் தூங்கறேனுன்னு எண்ணிக்கிட்டீங்களா! இல்லெ இல்லெ; சொம்மா கண்ணே மூடிப் படுத்திருந்தேன், நாங்க ரெண்டு பேரும் பேசிக்கிட்டதை எல்லாம் நானும் கேட்டுக்கினுதான் இருந்தேன். சத்தியமாச் சொல்றேன். அந்தப் பையன் எம் வவுத்துலே பொறந்த மவந்தானுங்க; அவனை இம்பிட்டுப் பெரிய ஜெமீந்தாரு ஆக்கினவ நாந்தானுங்க; அவன் அந்தத் தேவடியாநாரி பாலாம்பாளோடெ சேந்து அளிஞ்சு பூட்றான்னு நாங்க அவனுக்கு நல்லது நெனச்சா, அவுனும் அவுளுமாச் சேந்துக்கினு, நேத்து என்னெ அடிச்சு குத்துசிரும் கொலெ உசிருமாப் பண்ணி கையையும் காலையும் கட்டி சமுத்திரத்துலெ எறிஞ்சுட்டாங்களே! என்னமோ அந்தக் கடவுளு தான் இந்த மவராசாவெ அந்தச் சமயத்திலே அங்ஙனே கொண்டாந்து விட்டு, என்னெக் காப்பாத்தி வுட்டாரு; எங்கப்பன், எனக்கு உசிரு குடுத்த மவராசா, இதோ படுத்திருக்காரே இவுரு தான் என்னெக் காப்பாத்தின புண்ணியவான். கடவுளு கிருவையாலெ இவுரு சானாகாலத்துக்கு சொகமா இருந்து பெத்துப் பெருகி வாளனுங்க. இவுங்களுக்கு மேலே நீங்க தயாள மனசுள்ளவங்களா இருக்கிறீங்க. நீங்க இவுங்களுக்கு என்னா ஒறவு மொறெ ஆவணுமோ தெரியலீங்க. நீங்க ரெண்டு பேரும் மவராச்சாக்களா ஆயிரங்காலம் சொகமா இருக்கணும்; நான் போறெனுங்க; நேத்து நடந்ததெ நெனெக்க நெனெக்க எம் ஒடம்பு பதறுதுங்க; நேத்தொடெ அந்த நாயிக்கும் எனக்கும் தீந்து

போச்சுங்க. இதுவரையிலெ நான் அந்தக் கல்லியாணி அம்மாளுக் காவ தாச்சணெ பாத்தேன்; இனிமேலே அதுகூடப் பாக்கப் போறதில்லெ; இதுனாலே அந்த அம்மாளுக்குத் தெண்டனை ஆவுமுன்து நீங்க சொன்னத்தெயும் நானு கேட்டுக்கினுதான் இருந்தேன்; அப்பிடி ஆனாலும் ஆயிட்டுப் போவுது; எனக்கு அதெப்பத்திக் கவலெ இல்லீங்க; ஏனுன்னா அவுங்க ஒங்ககிட்டக் கூட என்னமோ கெடுதலா நடந்திருக்காவ இன்னு சொன்னீங்கள்ள; என்னோடெ உசிரெ நீங்க காப்பாத்தினீங்கள்ள; அதுக்கு நான் ஏதாச்சும் வதிலு ஒதவி செய்யணும். அதுக்காவ, அந்த அம்மாளுக்கு அந்த தெண்டனெ கெடைக்கட்டும். நான் நேத்து சாயிங்காலமே எம்மவங்கிட்டச் சொல்லிப்புட்டேன் என்னன்னா, நாம் மாத்ரம் உசிரோடெ இருந்தா, இன்னம் ஏலுநாள்ளெ அவனோடெ ஜெமீந்தாருப் பட்டத்தெப் புடுங்கிப்புட்டு அவனுக்கு அடப்பப் பையெக் குடுக்கிறேனுங்க. அதெ நான் ஒடனே போயி நெறவேத்தணும். அவன் அம்பட்டப்பையன் இங்கற சேதி அந்த அம்மாளுக்கும், இன்னொரு பொம்புள்ளெக் கும், எனக்குந்தான் தெரியும்; ஆனா, கல்யாணி அம்மாளோடெ நெசப்புள்ளெயெ இன்னான் திருடினான், இன்னானுக்கு வித்தான் இங்கற சங்கதி எனக்கு ஒருத்திக்குத்தான் தெரியும்; மத்தவங்களுக்குத் தெரியாது. கல்லியாணி அம்மாளோடெ நெசப்புள்ளே சாவக்கீவ இல்லெ; அநேகமா அது உசிரோடெதான் இருக்கணும். நான் இப்ப போயி அந்தப்புள்ளேயெ வாங்கின மனிசன் எங்கனே இருக்கறானுன்னு கண்டுபுடிச்சு அந்தப் புள்ளெயெக் கொண்டாறேன். அப்பாலே பாருங்களேன் இந்த அம்பட்டக் கருப்பாயி செய்யற காரியத்தே" என்று மிகவும் ஆத்திரமாகப் பேசிய கருப்பாயி மறுபடியும் மயங்கி அப்படியே படுக்கையில் சாய்ந்து விட்டாள். அவள் தனது உடம்பு சௌக்கியம் அடைந்து விட்டதாகச் சிறிது நேரத்திற்கு முன் சொன்னாள் ஆனாலும், அவள் உண்மையில் மிகவும் கேவலமான ஸ்திதியிலேயே இருந்தாள். மைனரது விஷயத்தில் தான் செய்த சபதத்தை நிறைவேற்றி வைக்கப் போக வேண்டும் என்ற ஆவலினாலும் ஆத்திரத்தினாலும், அவள் அவ்வாறு கூறினாள். ஆனால், அவள் தனது மனவெழுச்சியைத் தாங்கமாட்டாமல் மறுபடியும் படுக்கையில் சாய்ந்து விட்டாள்.

அதைக் கண்ட ஜெமீந்தார் அவளது உண்மையான தேகஸ்திதி இன்னதென்பதை அறிந்து கொண்டவராய், அதற்கு மேல் அன்றைய மாலை வரையில் அவளிடத்தில் தாம் பேச்சுக் கொடுக்கக் கூடாதென்று உறுதி செய்து, கொண்டார். ஆனால், அவள் சொன்ன புதிய விஷயத்தைக் கேட்ட முதல் அவரும், மதன கோபாலனும் அடக்க இயலாத ஆவல் கொண்டவர்களாய், மற்ற சங்கதிகளையும் அவள் எப்போது சொல்லப் போகிறாள் என்று எதிர்பார்த்தவர்களாக இருந்தனர். கல்யாணியம்மாளது வயிற்றில் பிறந்த உண்மையான மகன் எங்கே இருக்கிறான் என்பதை அறிந்து கொள்ள வேண்டுமென்ற ஆவலே பெரிதாக எழுந்து அவர்களை வதைக்கத் தொடங்கியது. அவள் மறுபடியும் எப்போது விழிக்கப் போகிறாள் என்று அவர்கள் எதிர்பார்த்துக் கொண்டிருந்தனர்.

ஆனால், அப்போது கண்ணயர்ந்து படுத்தவள் அன்றைய தினம் காலை ஏழு மணிக்கே தெளிவடைந்து விழித்தாள். அவளுக்கு உடனே மருந்து ஆகாரம் முதலியவை கொடுக்கப் பட்டபின், காலையில் இருந்தது போல, அவர்கள் மூவரும் அந்த இடத்தில் தனியாக இருந்தனர். அப்போது, அவள் மறுபடியும் மிகுந்த உற்சாகத்தோடு பேசத் தொடங்கினவளாய், "இப்ப எனக்கு நல்லா சவுக்கியம் ஆயிப்போச்சு; எனக்கு உத்தரவுதானா?" என்றாள்.

அதைக் கேட்ட ஜெமீந்தார், "கிழவி! அவசரப்படாதே. உன்னுடைய உடம்பு இன்னும் சரியான நிலைமைக்கு வரவில்லை. நீ காலையில் பேசிக் கொண்டிருந்த போதே மயங்கி விழுந்தவள். இப்போது தான் எழுந்திருந்தாய். இந்த உடம்போடு நீ இந்த ராத்திரியில் போனால், எங்கேயாவது விழுந்து கிடக்கப் போகிறாய். ஆகையால், இன்று ராத்திரி முழுதும் இங்கேயே இருந்துவிட்டு நாளைய காலையில் போகலாம்; உடம்பை அலட்டிக் கொள்ளாமல் படுத்துக் கொண்டிரு; நீ சொல்லுகிற சங்கதி பதினெட்டு வருஷத்துக்கு முன்னால் நடந்த சங்கதி; அதை எட்டு நாளைக்குள் எப்படிக் கண்டுபிடிக்கப் போகிறாய்? கல்யாணியம்மாளுடைய நிஜமான பிள்ளையைத் திருடியது யார் என்பதைக் கண்டுபிடிக்க

வேண்டும். அவன் அந்தப் பிள்ளையை யாரிடத்தில் விட்டான் என்பது தெரியவேண்டும். அது தெரிகிறதாகவே வைத்துக் கொள்வோம். இத்தனை வருஷகாலமாக மைனர் என்று பாவிக்கப்பட்டு வரும் இவன் உண்மையான பிள்ளையல்ல என்பதும் உன்னால் கொண்டு வரப்படும் இன்னொருவன் தான் மைனர் என்பதும் ருஜுவாக வேண்டும். நீ மாத்திரம் சொன்னால் அதை யார் நம்புவார்கள்? உன்னைப் பைத்தியக்காரி என்று சொல்லுவார்களேயன்றி, அதை எவரும் நிஜமாக ஒப்புக்கொள்ள மாட்டார்கள். ஆகையால், நீ உண்மையான பிள்ளையைக் கண்டுபிடிப்பது மாத்திரம் போதாது; அவன் உண்மையான மகன் என்பதை ருஜுப்படுத்த வேண்டும்" என்றார்.

அதைக் கேட்ட கருப்பாயி, "அந்த தகிரியம் இல்லாமலா நான் இம்பிட்டுத் துணிச்சலாப் பேசறேன். கல்யாணியம்மாளோடெ புள்ளெயத் திருடிக் கொண்டாந்தவன் கட்டையன் கொறவ னுன்னு ஒருத்தன் இருக்கறான், ஆனா அவன் அந்தப் புள்ளெயெ வேற ஒருத்தன் கிட்ட ஆயிரம் ரூவாக்கி வித்துப்பூட்டானாம். அவன் வித்தபோது, அதெல வாங்கினவன் யாரு அவன் எங்கே இருக்கறான், அவன் பேரு எல்லாத்தெயும், அவனே ஒரு துண்டுக் கடுதாசியிலெ எளுதிக் குடுத்தானாம். ஆனாக் கட்டையன் கொறவன் அதெப் படிக்கவுமில்லெ அவனுக்கு அந்த வெவரமே ஒண்ணுந் தெரியாது. அந்தத் துண்டுக் கடுதாசியெ அவன் எங்கிட்டக் குடுத்துப் பத்தரமா வைக்கச் சொன்னான். நானு அதெ எடுத்துப் பாத்தா நெசம் கண்டுபுடிச்சுக்கல்லாம். அந்தப் பையன் ஒடம்புலே ஒரு அடெயாளம் இருக்குது. அந்த அடெயாளத்தெப் பேலே எம்மவன் ஒடம்புலே ஒரு டாக்குட்டரு திராவகத்தெ ஊத்தி சுட்டு அடெயாளம் பண்ணிக் குடுத்தாரு. அது இல்லாமெ, இன்னும் எத்தினியோ சங்கதியெல்லாம் இருக்குது. ஒங்ககிட்ட நானு இனிமே எதெயும் மறைக்க மாட்டேன். கல்யாணியம் மாளோடெ சங்கதி எல்லாம் உள்ளபடியே ஒங்ககிட்ட சொல்லிப்புட் றேன்; அந்தத் துண்டுக் கடுதாசியெயும் கொண்டாந்து குடுக்கிறேன். நான் ஒருத்தி இல்லாமெப் போனா இந்த நெசமெல்லாம் மறைஞ்சே பூடும்" என்று பேசிக் கொண்டே இருக்கையில் அங்கே ஒரு விபரீதமான சம்பவம் நிகழ்ந்தது. அந்த பங்களாவில் அவர்கள்

உட்கார்ந்திருந்த மகாலின் வெளிப்பக்கத்து வாசற்படிக்குப் பக்கமாகப் போடப்பட்டிருந்த கட்டிலில் கருப்பாயி படுத்திருந்தாள்; அவள் தனது ரகசியங்களைச் சொல்லிக் கொண்டிருந்த சமயத்தில், அந்த வாசலுக்கு உப்புறத்திலிருந்து யாரோ ஒரு மனிதன் திடீரென்று விசையாக உள்ளே நுழைந்து, தனது கையிலிருந்த பீச்சாங்கத்தியால் கருப்பாயியினது மார்பைப் பார்த்து ஒரே குத்தாகக் குத்திவிட்டு வெளியில் ஓடிவிட்டான். அதே நிமிஷத்தில் கருப்பாயி, "ஐயோ! அப்பா! குத்திப்புட்டானே!" என்று வீரிட்டுக் கூச்சலிட்டுக் கொண்டு கட்டிலின் மேல் விழுந்தாள். பொறித் தட்டியதைப் போல நடந்த அந்த நிகழ்ச்சியை கண்ட ஜெமீந்தார், "விடாதே; பிடி பிடி; ஆள் அதோ ஓடுகிறான்" என்று கூவிக் கொண்டே துரத்த, அவருக்குப் பின்னால் நாலைந்து வேலைக் காரர்களும் ஓடினார்கள். கருப்பாயியைக் குத்திவிட்டு ஓடியவன் பங்களாவை விட்டு ராஜபாட்டைக்குப் போய் அங்கே இருந்து சமுத்திரத்தின் மணல்பரப்பை நோக்கி ஓட, இவர்கள் எல்லோரும் பெருங் கூச்சலிட்டுக் கொண்டு துரத்த, அப்போது அங்கே வந்த போலீஸ் ஜெவானும் அவர்களோடு சேர்ந்து துரத்தலானான். அவ்வாறு எல்லோரும் துரத்தி முன்னால் ஓடின மனிதனைப் பிடித்துக் கொண்டனர். இரத்தம் கசிந்த கத்தியொன்று அவனது மடியில் இருந்தது. போலீஸ் ஜெவான் அவனைப் பிடித்துக் கொண்டு வந்து ஒரு மின்சார விளக்கண்டை நிறுத்த, ஜெமீந்தார் உடனே அவனது அடையாளத்தைக் கண்டு சகிக்க ஒண்ணாத வியப்பும் பிரமிப்பும் அடைந்தவராய், "அடடா! மாரமங்கலம் மைனரல்லவா இவன்! என்ன துர்ப்புத்தி இது! பெரிய இடத்தின் பெயரையெல்லாம் அநியாயமாகக் கெடுத்துவிட்டாயே! இது யார் செய்யக்கூடிய காரியம்! காலத்துக்கேற்ற புத்தி உண்டாகும் என்பது சரியாகப் போய்விட்டதே!" என்றார். அவ்வாறு கையும் மெய்யுமாகப் பிடிப்பட்ட மாரமங்கலம் மைனர் மருள மருள விழித்துக் கொண்டு நிற்க, அவனது கைகால்கள் எல்லாம் வெடவெடவென நடுங்குகின்றன.

★ ★ ★

28—வது அதிகாரம்

# திருட்டுக் கலியாணம், முரட்டு மாமியார்

கல்யாணியம்மாளையும் அவளது குமாரத்திகள் இருவரையும் போலீஸ் ஜெவான்களையும் மோட்டார் வண்டியில் வைத்து கொண்டு வாயுவேக மனோவேகமாகப் பறந்து சென்ற போலீஸ் இன்ஸ்பெக்டர் குலாம் ராவுத்தர் பின்புறம் திரும்பித் திரும்பிப் பார்த்தவராக அரைக்கால் மயில் தூரம் சென்று அவ்விடத்தில் குறுக்காக வந்த ஒரு பாட்டையின் வழியாக வண்டியைத் தெற்கு முகமாக திருப்பி மிகவும் வேகமாக விடுத்துக் கொண்டு போகிறார். இருள் எங்கும் சூழ்ந்திருக்கிறது. அரைக்கால் மயிலுக்கோரிடத்தில் நிறுத்தப்பட்டிருந்த முனிசிபல் விளக்குகளும் பாதையின் இருபுறங்களிலும் இருந்த மரப் பத்திகளும் அந்த வண்டிக்குப் பயந்து தலைதெறிக்கப் பின்னால் ஓடுகின்றன. எதிர்ப்பக்கத்தில் அப்போதைக்கப்போது வந்த வழிப்போக்கர்கள் எல்லோரும் கதி கலங்கி அங்குமிங்கும் சிதறியோடுகிறார்கள். வண்டியிலிருந்தோர் அனைவரும், அந்த இருளில் வழி தவறிப் போய், வண்டி மரங்களில் மோதிவிடுமோ என்றும், பள்ளம் படுகுழிகளில் வீழ்ந்து கவிழ்ந்து போகுமோ என்றும், மிகவும் அஞ்சி நடுநடுங்கித் தங்களது உயிரைப்பற்றி மிகுந்த கவலைக் கொண்டவராகத் தத்தளிக்கிறார்கள். பங்களாவிற்கு வெளியில் ஒளிந்திருந்து வெளிப்பட்ட திருடர்கள் தங்களது மோட்டார் வண்டியைத் தொடர்ந்து வருகிறார்களோ என்றும், அவர்களால் சிவஞான முதலியாருக்கும், பங்களாவிலிருந்த சிப்பந்திகளுக்கும், மற்ற சொத்துகளுக்கும் எவ்விதக் கெடுதல் சம்பவித்ததோ என்றும் கல்யாணியம்மாள் நினைத்துக் கரைகடந்த கலக்கமும் கிலியும் கொண்டவளாக இருந்தாள். கோமளவல்லியும் தனது தாயைப் போல மிகுந்த சஞ்சலமடைந்து தத்தளித்திருந்தாள் ஆனாலும், துரைஸானியம்மாள் மாத்திரம் எதையும் பொருட்படுத்தாதிருப் பவளாகக் காணப்பட்டாள். அவ்வாறு அரை நாழிகை வழி தூரம் வண்டி சென்றது. அந்த வழியில் வீடுகளே காணப்படவில்லை ஆனாலும், அரைக்கால் மயில் தூரத்திற்கோரிடத்தில் பங்களாக் களும், இடையிடையில் தோப்புகளும், வயல்களும், ஆறும் வந்து

கொண்டிருந்தன. கல்யாணியம்மாளது பங்களாவிற்கும் போலீஸ் கமிஷனரது கச்சேரிக்கும் சுமார் இரண்டு மயில் தூரம் இருக்கலாம் ஆதலால், அவ்வளவு தூரம் செல்ல அரை நாழிகை நேரமாகிலும் பிடிக்கும் என்று கல்யாணியம்மாள் நினைத்து அந்த விஷயத்தில் எவ்வித சந்தேகமும் கொள்ளாதவளாக இருந்ததன்றி, அந்த இன்ஸ்பெக்டர் தங்களைக் காப்பாற்றும் பொருட்டு அவ்வளவு பாடுபடுகிறாரே என்ற ஒரு வியப்பும், நன்றியறிதலும், மதிப்பும் விசுவாசமும் கொண்டவளாக இருந்தாள். அந்த நிலைமையில் மோட்டார் வண்டி ஒரு பங்களாவிற்குப் போய்ச் சேர்ந்தது.

அந்த பங்களா நிரம்பவும் சிறியதாகவும், நாற்புறங்களிலும் பூந்தோட்டமும் மதிட்சுவரும் உடையதாகவும் இருந்தது. அதன் முன்வாசலில் மின்சார விளக்குக் கம்பமொன் றிருந்தமையால், அவ்விடம் மிகவும் பிரகாசமான இருந்து. கையில் கத்தி துப்பாக்கி களோடு இரண்டு போலீஸ் ஜெவான்கள் வாசலில் பாராக் கொடுத்துக் கொண்டு நின்றனர். மதிட்சுவரில் **போலீஸ் கமிஷனர் கச்சேரி** என்ற எழுத்துகள் எழுதப்பெற்ற ஒரு பலகை மாட்டப் பட்டிருந்தது. அந்த பங்களாவிற்கருகில் மோட்டார் வண்டி வந்த போது, ஜெவான் ஒருவன் கதவைத் திறந்து வைத்தான். வண்டி வாசலிற்கருகில் போய் விசையைத் தளர்த்தித் திரும்பி உள்ளே சென்றது. அவ்விடத்தில் நின்ற போலீஸ் ஜெவான்களையும், ஆபீசின் பெயர் எழுதப்பட்டிருந்த பலகையையும் கண்டவுடனே கல்யாணியம்மாளுக்கும் கோமளவல்லிக்கும் உயிர் வந்தது; "அப்பாடா தப்பினோம்" என்று அவர்கள் தங்களது மனத்திற் குள்ளாகவே நினைத்து மகிழ்ச்சியும் மயிர்க்கூச்சலும் அடைந்தனர்.

வண்டி பூந்தோட்டத்தின் வழியாகச் சென்று கட்டிடமிருந்த இடத்தில் போய், முன்னாலிருந்த படிகளின் அண்டையில் நின்றது.

உடனே போலீஸ் இன்ஸ்பெக்டரும் ஜெவான்களும் கீழே குதித்தார்கள். வேர்த்து விருவிருத்து இறைத்த மூச்சாக விடுத்துக் கொண்டிருந்த இன்ஸ்பெக்டர் வண்டிக்குள்ளே இருந்த கல்யாணி யம்மாளைப் பார்த்துப் புன்னகை செய்து, "அம்மணீ! இனிமேல் கொஞ்சமும் பயமில்லை. எவனும் இங்கே வரமுடியாது. இன்று ராத்திரி முழுதும் நீங்கள் கொஞ்சமும் கவலையின்றி இங்கே

இருக்கலாம்" என்று கூறிய வண்ணம், வண்டியின் கதவைத் திறந்த விட்டவராய், "மெதுவாக இறங்குங்கள்". என்று அன்பாகக் கூறினார்.

அதைக் கேட்ட கல்யாணியம்மாள் நன்றியறிதலும் விசுவாசமும் பொங்கி எழுந்த மனத்தினளாய், "இன்றைய தினம் முழுதும் எங்களுக்காக நீங்கள் பட்டிருக்கும் பாட்டுக்கு நாங்கள் உங்களுக்கு என்ன தான் செய்யப் போகிறோம். இந்நேரம் நாங்கள் பங்களா விலேயே இருந்தால், எங்களுடைய கதி எப்படி முடிந்திருக்குமோ; நாங்கள் எப்படிப்பட்ட நரக வேதனைக்கு ஆளாகியிருப்போமோ! உங்களுடைய தயையினால் நாங்கள் பிழைத்தோம்; எங்களுக்கு ஏற்பட இருந்த இழிவு நீங்கியது" என்று கூறிய வண்ணம் கீழே இறங்கிய உடனே கோமளவல்லியம்மாளும், துரைஸானியம் மாளும் இறங்கி அன்னிய புருஷர்களிருப்பதைக் கருதி நாணமுற்ற வர்களாய்த் தங்களது தாய்க்குப் பின்புறமாக மறைந்து கொண்டனர்.

இன்ஸ்பெக்டர் முன்னும், அந்த மூன்று ஸ்திரீகளும் பின்னுமாக நடந்து படிகளில் ஏறி பங்களாவிற்குள் சென்றனர். அந்த பங்களா முழுவதும் மின்சார விளக்குகள் தொங்கி ஜெகஜ்ஜோதியாக எரிந்து கொண்டிருந்தன. படிகளிற்குமேல் அகன்ற வழுவழுப்பான தாழ்வாரம் இருந்தது. ஆனால், அந்தக் கட்டிடத்தில் இரண்டு ஹால் களும், அவற்றிற்குள் செல்ல இரண்டு வாசல்களும் இருந்தன. அந்த இரண்டு வாசல்களும் முன் பக்கத்தின் தாழ்வாரத்திலேயே இருந்தன.

முன்னால் சென்ற இன்ஸ்பெக்டர் அவர்களுக்கு வலது பக்கத்தி லிருந்த வாசலை நோக்கி நடந்து, "இப்படியே வாருங்கள். இந்த ஹால் தான் நீங்கள் இருப்பதற்கு வசதியாக இருக்கும். அந்த ஹாலுக்குள் குமாஸ்தாக்களுடைய மேஜை நாற்காலிகள் அடைத்துக் கொண்டிருக்கின்றன. இந்த ஹால் படுக்கை முதலிய எல்லாக் காரியங்களுக்கும் சௌகரியமாக இருக்கும்" என்று கூறிய வண்ணம் வலது பக்கத்து ஹாலின் வாசற்கதவண்டை சென்று அதைத் திறந்து வைத்தவராய், ஒரு பக்கமாக ஒதுங்கி நிற்க, வாசற் படியண்டை சென்ற கல்யாணியம்மாள் தனது பார்வையை

உட்புறத்தில் செலுத்தினாள். உட்புறம் மிகவும் விசாலமான கூடமாக இருந்தது. அவ்விடத்தில் இரண்டு சாய்மான நாற்காலி களும், இரண்டு பெருத்த சோபாக்களும், நாலைந்து கருங்காலி மேஜைகளும், சுவரோரமாகக் கிடந்த பீரோக்களும், மின்சார விளக்குகளும், மின்சார விசிறிகளும் காணப்பட்டன. அவர்கள் சம்சயிக்கவோ, லஜ்ஜைப்படவோ கூடிய வஸ்துக்கள் எதுவும் அந்தக் கூடத்தில் காணப்படவில்லை ஆகையால், அவர்களது மனதிற்கு அந்த இடம் மிகவும் திருப்திகரமாக இருந்தது. ஆகவே, கல்யாணியம்மாளும் அவளது செல்வச் சிறுமியர் இருவரும் உடனே அந்த ஹாலிற்குள் சென்றனர். அவ்வாறு அவர்கள் உட்புறத்தில் நுழைந்தவுடனே இன்ஸ்பெக்டர், சுவரிலிருந்த ஒரு விசையை அமுத்தி மின்சார விசிறிகளில் இரண்டைச் சுழற்றி விடவே, அந்த இடத்தில் ஜிலுஜிலென்ற சுகமான காற்று வீசியது. அப்போதும் அந்த ஹாலிற்குள் நுழையாமல் வெளித் தாழ்வாரத் திலேயே மரியாதையாக நின்று கொண்டிருந்த இன்ஸ்பெக்டர் கல்யாணியம்மாளை நோக்கி, "அம்மணீ! இது கச்சேரியாகையால், உங்களுக்குப் படுக்கை தான் சரியானதாக இருக்காது. அதற்குப் பதிலாக சோபாக்கள் இருக்கின்றன. எப்படியாவது இந்த ராப் பொழுதைக் கடத்துங்கள். பின் பக்கத்துக் கதவும், ஜன்னல்களின் கதவுகளும் மூடப்பட்டிருக்கின்றன. அவைகள் அப்படியே இருக்கட்டும். இந்தக் கதவையும் மூடி உட்புறத்தில் தாளிட்டுக் கொள்ளுங்கள்" என்று கூறிய போது, இரண்டு ஜெவான்கள் ஒரு தாம்பாளத்தில் கனிவர்க்கங்கள், பால், இளநீர், தாம்பூலம் முதலிய வஸ்துக்களைச் சுமந்து வந்து உட்புறத்தில் ஒரு மூலையில் வைத்துவிட்டு வெளியே வந்தனர். உடனே இன்ஸ்பெக்டர் கல்யாணியம்மாளை நோக்கி, "அம்மணீ! நீங்கள் எல்லோரும் இன்னம் போஜனம் செய்யவில்லை போலிருக்கிறது; இதோ கொஞ்சம் பழம் பாலெல்லாம் இருக்கின்றன. உபயோகப்படுத்திக் கொள்ளுங்கள். கதவை மூடிக்கொண்டு ஜாக்கிரதையாக இருங்கள். ஜெவான்கள் பத்துபேர் இந்த ஹாலைச் சுற்றிலும் இன்று ராத்திரி முழுதும் நிற்பார்கள். நான் மறுபடியும் உங்களுடைய பங்களாவுக் குப் போய், அவ்விடத்து சங்கதி எப்படி இருக்கிறதென்று பார்த்து விட்டு மறுபடியும் ஒரு நாழிகை நேரத்தில் வருகிறேன். நீங்கள்

கொஞ்சமும் பயப்படத் தேவையில்லை. ஏதாகிலும் வேண்டு மானால் **கோபாலா** என்று கூப்பிடுங்கள். இந்த வாசலில் நிற்கும் ஜெவான் உடனே வந்து உங்களுடைய உத்தரவை நிறைவேற்று வான்" என்றார்.

உடனே கல்யாணியம்மாள், "சரி; அப்படியே செய்யுங்கள். எங்களுடைய மன வேதனையில், இப்போது படுக்கையிலும் சாப்பாட்டிலும் மனசு செல்லவா போகிறது. எப்படியாவது இந்த ராத்திரி எவ்விதத் துன்பமுமில்லாமல் கழியுமானால், அதுவே போதுமானது. நீங்கள் நிரம்பவும் சிரமப்பட்டு எங்களுக்காகக் கொண்டு வந்திருக்கும் இந்தப் பழங்களை எல்லாம் நாங்கள் என்ன செய்யப்போகிறோம்" என்று மிகுந்த கிலேசத்தோடு நயமாகக் கூறினாள்.

உடனே இன்ஸ்பெக்டர், "பரவாயில்லை. சுத்தமாக ஏன் பட்டினி கிடக்க வேண்டும். ஏதாவது பிடித்ததை எடுத்துக் கொள்ளுங்கள். எனக்கு நேரமாகிறது. நான் போய்விட்டு வருகிறேன். கதவை மூடிக்கொள்ளுங்கள்" என்றார்.

உடனே கல்யாணியம்மாள் வாசற் கதவை மூடி உட்புறத்தில் தாளிட்டுக் கொண்டாள்.

உடனே இன்ஸ்பெக்டர் அந்தக் கதவின் வெளிப்புறத்திலிருந்தே தாளை மாட்டிப் பூட்டிக்கொண்டு அப்பால் போய்விட்டார்.

அவ்வாறு உட்புறத்தில் விடப்பட்ட மூவரும் அங்கே இருந்த பொருட்களையும் நாற்காலி மேஜைகளையும் சுற்றிப் பார்க்கத் தொடங்கினர். துரைஸானியம்மாள் ஒரு சோபாவின் மேல் உட்கார்ந்து சாய்ந்து கொண்டாள். கல்யாணியம்மாள் உடனே உட்கார்ந்து கொள்ளாமல் அந்த ஹால் முழுதும் சென்று ஆராய்ச்சி செய்யத் தொடங்கினாள். சுவரில் பல ஜன்னல்கள் இருந்தன. அவற்றின் கதவுகள் எல்லாம் மூடி வெளிப்புறத்தில் தாளிடப் பெற்றிருந்தன. சுவரின் ஓரமாக நாலைந்து பீரோக்கள் இருந்தன. சற்று தூரத்திற்கப்பால் ஒரு சிறிய அறை இருந்தது. அதற்குள் ஒரு மின்சார விளக்கு பிரகாசித்துக் கொண்டிருந்தது. அவ்விடத்தில் தண்ணீர் குழாயும், ஒன்றுக்குப் போக வசதியும் இருந்தன. அந்த

அறைக்குள் நுழைந்து பார்த்துவிட்டு வெளியில் வந்த கல்யாணி யம்மாள் அந்த ஹாலின் கடைசி வரையில் போய்ப் பார்த்தாள்; அவ்விடத்தில் பின்புறக் கதவு காணப்பட்டது. அந்தக் கதவும் வெளிப்புறத்தில் பூட்டப்பட்டிருந்தது. கல்யாணியம்மாள் அதற்கு உட்புறத்திலிருந்த தாளைப் போட்டுக் கொண்டு திரும்பி வந்தாள். அதுவரையில் கோமளவல்லியம்மாளும் தனது தாயுடன் கூடவே சென்று திரும்பினாள்.

அப்போது கல்யாணியம்மாள் கோமளவல்லியை நோக்கி, "நீயும் அக்காளும் ஏதாவது தாகத்துக்குச் சாப்பிடுகிறீர்களா?" என்றாள். அவள் துரைஸானியம்மாளிடம் போய் கேட்க, தனக் கொன்றும் தேவையில்லை என்று மறுமொழி கூற, கோமளவல்லி யும் அப்படியே சொல்லிவிட்டாள். உடனே கல்யாணியம்மாள் கோமளவல்லியை ஒரு சோபாவின் மேல் படுத்துக் கொள்ள சொல்லிவிட்டு, ஒரு சாய்மான நாற்காலியில் உட்கார்ந்து சாய்ந்து கொண்டாள். அந்த ஹாலில் இரண்டு மின்சார விளக்குகள் பளிச் சென்று பிரகாசித்துக் கொண்டிருந்தன. மின்சார விசிறிகள் சுகமான காற்றை உண்டாக்கிக் கொண்டிருந்தன. கோமளவல்லி ஒரு சோபாவிலும், துரைஸானியம்மாள் இன்னொரு சோபாவிலும் உட்கார்ந்து சாய்ந்து கொண்டிருந்தனர். தாங்கள் மிகவும் பாதுகாப் பான இடத்திலிருப்பதாகக் கோமளவல்லியும் கல்யாணியம்மாளும் நினைத்தார்கள் ஆனாலும், அவர்ளது திகிலும் கவலையும் அப் போதும் நீங்காமலேயே இருந்தமையால், அவர்கள் நன்றாக வாய் திறந்து ஒருவரோடொருவர் ஓங்கிப் பேசவும் அஞ்சி, அந்த மகா பயங்கரமான இரவு எப்போது கழியும் என்று மிகுந்த ஆவலும் கலக்கமும் கொண்டிருந்தனர். சுவரில் மாட்டப்பட்டிருந்த கடிகாரத் தில் மணி 8-40 ஆகியிருந்தது. தனக்கு வந்த கடிதத்தில் சரியாக ஒன்பது மணிக்குக் கலியாணத்தை முடிக்கப் போவதாக எழுதப் பட்டிருந்ததிலிருந்து, எதிரியின் ஆள்கள் அந்நேரம் தனது பங்களா வில் நுழைந்து, பெருத்த கலகம் விளைவித்துக் கொண்டிருப்பார்கள் என்றும், தனது பங்களாவில் உள்ள பொருட்களை எல்லாம் அவர்கள் கொள்ளையடித்திருப்பார்கள் என்றும், சிவஞான முதலியாரும் மற்றவர்களும் கொல்லப்பட்டிருப்பார்களோ என்றும் கல்யாணியம்மாளும் கோமளவல்லியம்மாளும் பலவாறு சிந்தித்த

வண்ணம் உட்கார்ந்திருந்தனர். ஆனால், துரைஸானியம் மாளை அவர்கள் அபகரித்துக் கொண்டு போகாமல், தாங்கள் காப்பாற்றிக் கொண்டதொன்றே போதும் என்று அவர்கள் நினைத்துத் தங்களுக்குள் மிகுந்த திருப்தியடைந்தவர்களாக இருந்தனர். கல்யாணியம்மாள் அடிக்கடி தனது பார்வையை துரைஸானி யம்மாள் இருந்த பக்கம் செலுத்தி, அவள் எப்படி இருக்கிறாள் என்று கவனித்தாள். மற்ற இருவரும் எவ்வளவிற் கெவ்வளவு சிந்தனையில் ஆழ்ந்து துயரமே வடிவாகவும் பரிதாபகரமான நிலைமையினில் இருந்தார்களோ அவ்வளவிற்கவ்வளவு துரைஸானியம்மாள் நெறியற்றவளாய், நிரம்பவும் அலட்சியமாகத் தனது சோபாவில் சாய்ந்தவளாய் ஏதோ ஒரு விஷயத்தில் தனது நினைவைச் செலுத்திக் கொண்டிருப்பவளாகக் காணப்பட்டாள். மற்றவர் இருவரும் அவ்வாறு விசனமுற்றுத் தங்களை அலட்டிக் கொள்வதைப் பற்றி, அவள் தமக்குள் புரளியாகவும் ஏளனமாக வும் மதிக்கிறாள் என்பதை அவளது முகத்தோற்றம் காண்பித்தது; ஆனால் கடிகாரம் 8-45-க்கு மேல் ஆனதைப் பார்த்து மற்ற இருவரும், தாங்கள் ஜெயித்து விட்டோம் என்று மிகுந்த பெருமை பாராட்டிக் கொள்பவர் போல அடிக்கடி துரைஸானியம்மாளது முகத்தை நோக்கினர். அவளோ அவர்களது கொடிய பார்வையை ஒரு சிறிதும் மதியாதவளாய் தனது முகத்தை அவர்களது பக்கம் திருப்பாமல் உட்கார்ந்திருந்தாள். தாங்கள் எவ்வளவு பாதுகாப் பான இடத்திலிருந்தாலும் இன்றிரவு முழுதும் தான் மாத்திரம் தூங்கக் கூடாதென்ற உறுதியைக் கொண்டிருந்த கல்யாணி யம்மாள், தனது நாற்காலியைத் தனது குமாரிகளிருந்த சோபாக் களின் பக்கம் திருப்பி வைத்து, அவர்களைப் பார்த்த வண்ணம் அதன்மேல் சாய்ந்து கொண்டிருந்த அவர் கதவுகள் எல்லாம் நன்றாக மூடப் பெற்ற அந்த ஹாலில் மிகவும் பிரகாசமான இரண்டு மின்சார விளக்குகள் எரிந்து கொண்டிருந்தது நெருப்பை அள்ளி வீசுவது போல அவர்களது தேகங்களில் சுருக்கென்று உரைத்துக் கொண்டிருந்தாலும், அந்த விளக்குகள், மின்சார சக்திக் குறைவினால் அடிக்கடி அணைந்தணைந்து இரண்டொரு நிமிஷம் நின்று மறுபடியும் பற்றி எரிந்தது அவர்களுக்கு ஒருவித ஆறுதலாக இருந்தது.

கல்யாணியம்மாளும, கோமளவல்லியும் அடிக்கடி கடிகாரத்தையும், அணைந்து போய் எரியும் விளக்கையும் பார்த்தவர்களாக இருந்தாலும் அவர்களது கவனம் முழுதும் தங்களது பங்களாவிலேயே சென்று லயித்துப் போயிருந்தது. கடிகாரத்தின் முட்கள் 8-45-க்கு மேல் நகரத் தொடங்கிய போது மறுபடியும் மின்சார விளக்குகள் அணைந்து போய்விட்டன. அதற்கு முன் நடந்தது போல, அவைகள் இரண்டொரு நிமிஷத்தில் மறுபடியும் பற்றிக் கொள்ளும் என்று அவர்கள் இருவரும் நினைத்திருந்தார்கள். அப்படி சுமார் 10-நிமிஷ நேரம் வரையில் அவர்கள் பொறுத்துப் பார்த்தனர். அவைகள் திரும்பவும் பிரகாசிக்கவில்லை. கல்யாணியம்மாளது மனதில் மிகுந்த கவலையும் கலக்கமும் ஏற்பட்டு விட்டன. ஒருநாளும் இல்லாமல் மின்சார விளக்குகள் அன்றைய தினம் அவ்வாறு மோசம் செய்வதை நினைத்து அவள் மிகவும் வருந்தினவளாய்த் தனது ஆசனத்தை விட்டெழுந்து வாசற் கதவண்டை போய் நின்று கொண்டு ஜெவான் கோபாலா என்று கூப்பிட, அவன் "ஏன் அம்மணீ! என்ன வேண்டும்?" என்றான். "மின்சார விளக்குகள் நின்று போய்விட்டமையால் எங்களுக்கு மெழுகுவர்த்தி விளக்காகிலும் சீமையெண்ணெய் விளக்காகிலும் ஒன்று கொணர்ந்து கொடுத்தால் அது உதவியாக இருக்கும்" என்று கல்யாணியம்மாள் கூற, அந்தச் சேவகன், ஆளை அனுப்பி வரவழைத்துக் கொடுப்பதாகச் சொல்ல, அதைக் கேட்டுக் கொண்ட கல்யாணியம்மாள் திரும்பி வந்து தனது நாற்காலியில் முன் போலவே உட்கார்ந்து கொண்டாள்.

அப்போது அவர்களிருந்த ஹாலுக்குப் பக்கத்தில் திடீரென்று ஓர் ஆரவாரம் கிளம்பியது. மேளக்காரர்களும் பாண்டு வாத்தியக்காரர்களும் தங்களது வாத்தியங்களை வைத்துக் கொண்டு பெருத்த முழக்கம் செய்யத் துவக்கினார்கள். மனிதர்களது குரலும் கேட்டது; அவ்வாறு திடீரென்று உண்டான சங்கீத முழக்கத்தைக் கேட்ட கல்யாணியம்மாளும் கோமளவல்லியம்மாளும் திடுக்கிட்டு மிகுந்த வியப்பும் திகைப்பும் அடைந்தார்கள். அந்த வாத்திய முழக்கம் பக்கத்து ஹாலிலே தான் உண்டானதென்பது நிச்சயமாகத் தெரிந்தது. சர்க்கார் கச்சேரியாக உபயோகப்படும் அந்த இடத்தில், அந்த முழக்கம் உண்டாக வேண்டிய காரணம் என்னவென்று

அவர்கள் யோசனை செய்கிறார்கள். ஒருகால் அந்த ஹால் யாருக் காவது வாடகைக்கு விடப்பட்டிருக்குமோ என்ற நினைவுண்டா யிற்று. அந்த இடத்தில் குமாஸ்தாக்களின் நாற்காலி மேஜைகளே நிறைந்திருக்கின்றன என்று போலீஸ் இன்ஸ்பெக்டர் சொன்னது நினைவிற்கு வந்தது. ஆகவே, அந்த முழக்கம் பக்கத்து ஹாலில் உண்டானதல்ல என்றும், அதற்கு அப்பாலிருந்த வேறொரு கட்டிடத்தில் உண்டானதென்றும் அவர்கள் நினைத்துக் கொண்டிருந்தனர்.

அந்தச் சமயத்தில் மின்சார விளக்குகள் பற்றிக் கொள்ளவே அவர்கள் இருந்த அறையில் சரியான பிரகாசம் மறுபடியும் உண்டாயிற்று. அதே நிமிஷத்தில் இன்னொரு சம்பவம் நிகழ்ந்தது. அவர்கள் இருந்த ஹாலுக்கும் பக்கத்திலிருந்த ஹாலுக்கும் மத்தியில் இருந்த சுவரில் பதிக்கப்பட்டிருந்த ஒரு ஜன்னலின் கதவுகள் படீரென்று திறந்து விடப்பட்டன. உடனே கல்யாணி யம்மாளும், கோமளவல்லியம்மாளும் தங்களுக் கெதிரில் இருந்த அந்த ஜன்னலின் வழியாகப் பக்கத்து ஹாலை நோக்கினர். இன்ஸ்பெக்டர் சொன்னபடி அதற்குள் நாற்காலி மேஜை முதலிய எவ்வித சாமான்களும் காணப்படவில்லை. அந்த ஹால் முழுதும் பல நிறங்களையுடைய மின்சார விளக்குகள் நிறைந்து ஜெகஜ் ஜோதியாக இருந்தன. வாழை மரங்களாலும் தோரணங்களாலும் படங்களாலும் அந்த இடம் மிகவும் சிங்காரமாக அலங்கரிக்கப் பட்டிருந்தது. நடுவில் முத்துக்களினால் கலியாணப் பந்தல் ஒன்று அமைக்கப்பட்டிருந்தது. பக்கத்திலிருந்த ஒரு புரோகிதர் கலியாணச் சடங்குகளை நடத்திக் கொண்டிருந்தார். சுமார் 15- மனிதர்கள் சூழ்ந்து கொண்டிருந்தனர். சற்று தூரத்தில் மேளக்காரர்களும், பாண்டு வாத்தியக்காரர்களும் உட்கார்ந்து தங்களது வாத்தியங் களை பம்பம்மென்று ஊதி முழக்கிக் கொண்டிருந்தனர். மிகுந்த யௌவனப் பருவமுள்ள மணமகளும் மணமகனும் மணையின் மேல் உட்கார்ந்து கொண்டிருந்தனர். ஆனால், அப்போது சுமார் 30-வயதுள்ள ஒரு தனிகரும், 20-வயதுள்ள அவரது யௌவன மனைவியும் குறுக்கே நின்று, தாரைவார்த்துக் கன்னிகாதானம் செய்து கொடுத்துக் கொண்டிருந்த சமயம் ஆதலால், மண மக்களினது முகங்கள் கல்யாணியம்மாளுக்கும் கோமளவல்லிக்கும்

தெரியாதிருந்தன. ஹோமத்தீக்கருகில் ஒரு வெள்ளித் தட்டில் கூறைச் சேலை, வஸ்திரம், திருமாங்கல்யம், பழம், தாம்பூலம் முதலியவை வைக்கப்பட்டிருந்தன. உடனே புரோகிதர் எழுந்து அந்தத் தட்டை எடுத்துக் கொண்டு புறப்பட்டு, எல்லோருக்கும் எதிரில் நீட்டிக் கொண்டே ஜன்னலண்டை வர, அதற்குள் கல்யாணியம்மாள் முன்னும், கோமளவல்லியம்மாள் பின்னுமாக ஜன்னலண்டையில் வந்து நின்றதைக் கண்ட புரோகிதர் அவர் களுக்குச் சமீபத்தில் வந்து, "சம்பந்தியம்மாள் தொட்டு ஆசீர்வாதம் பண்ணுங்கள்" என்று கூறிய வண்ணம், தட்டை நீட்டினார்; மேளவாத்தியங்களினது ஓசையில், அவர் சொன்ன வார்த்தை இன்னதென்பது தெரியாமல் மறைந்து போய் விட்டதாகையால், கல்யாணியம்மாள் அதை உணரவில்லை. அப்போது அவளது கைமாத்திரம் தானாகவே நீண்டு சென்று, மாங்கலியத்தைத் தொட்டுவிட்டு உள்ளே வந்தது. உடனே புரோகிதர் தாளங்களை ஜிஞ்ஜிஞ்ஜிஞ் என்று பலமாகத் தட்டும்படி சொல்லிக் கொண்டே அப்புறம் திரும்ப, வாத்தியக்காரர்கள் தெய்வ துந்துபிபோல முழக்கத் தொடங்கினார்கள். அதுகாறும் மணமக்களினது பக்கத்தில் நின்று மறைத்துக் கொண்டிருந்தவர்களும், தாரைவார்த்துக் கொடுத்தவர்களுமான இருவரும் அப்படியே நிற்க, புரோகிதர் திருமாங்கலியத்தை எடுத்து மணமகனிடத்தில் கொடுக்க, அவன், பெண்ணின் கழுத்தில் அதைக் கட்ட, அந்தச் சமயத்தில் மணி டாண்டாவென்று ஒன்பதடித்தது. பெண்ணையும் பிள்ளையையும் மறைத்துக் கொண்டிருந்த இருவரும் அந்த சமயத்தில் அப்பால் விலகினர். என்ன ஆச்சரியம்! என்ன கண்கட்டு வித்தை! மோகனரங்கனே மணமகனாகவும், பக்கத்திலிருந்த பெண் துரைஸானியம்மாளாகவும் இருக்கக் கண்ட கல்யாணியம்மாளும், கோமளவல்லியும் பேச்சு மூச்சற்று சித்திரப் பாவைகள் போல மாறி, இரண்டொரு நிமிஷ நேரம் பிரமித்து நின்றபின் தங்களது முகத்தைத் திருப்பி, தாங்கள் இருந்த ஹாலிற்குள் சற்று தூரத்தில் கிடந்த சோபாவை நோக்க, அதன்மேல் சாய்ந்திருந்த துரைஸானி யம்மாள் காணப்படவில்லை. அவர்கள் தங்களது கண்களை நம்பாமல் அவைகளைத் துடைத்துவிட்டுக் கொண்டு பார்த்தார். தாங்கள் ஒருகால் தூக்கத்திலாழ்ந்து, கனவு காண்கிறோமோ என்ற

நினைவைக் கொண்டு என்ன செய்வதென்பதை உணராமல் அவர்கள் இரண்டொரு நிமிஷ நேரம் இருந்தனர். உடனே அவர்கள் அவ்விடத்தைவிட்டு நடந்து சோபாவிருந்த இடத்தை நோக்கிச் சென்று அதை உற்று நோக்கி அதன்மேல் துரைஸானி யம்மாள் இல்லை என்பதை உறுதியாக நிச்சயித்துக் கொண்ட வர்களாய், அங்கே இருந்த கதவுகளை எல்லாம் ஆராய்ச்சி செய்து பார்த்தனர். சுவரில் ஜன்னலின் கதவுகள் காணப்பட்டன ஆனாலும், அவைகள் எல்லாம் நன்றாக மூடி வெளிப்புறத்தில் தாளிடப்பட்டிருந்தன. அவைகள் நிற்க, பின்புறக் கதவும் உட்புறத்தில் தாளிடப்பட்டபடியே இருந்தது. பூமியின் கீழே ஏதேனும் சுரங்க வழி இருக்குமா என்ற சந்தேகம் உண்டாயிற்று. ஆகவே அவர்கள் இருவரும் அந்த சோபாவிருந்த இடத்தைச் சுற்றிலும் இருந்த நன்றாகப் பார்த்தனர். எவ்வித புலமும் கிடைக்க வில்லை. அது பெருத்த கண்கட்டு வித்தைபோலத் தோன்றியது. தங்களது கண்ணிற்கெதிரில் உட்கார்ந்திருந்த துரைஸானியம்மாள் அந்த ஹாலை விட்டு எவ்வித ஓசையுமின்றி அடுத்த ஹாலுக்கு எப்படிப் போயிருப்பாள் என்ற பிரமிப்பும் மலைப்பும் எழுந்து அவர்களது அறிவை மயக்கின. ஏதோ மந்திர வித்தையின் சக்தியினாலே தான் அந்தக் காரியம் நிறைவேறி இருக்க வேண்டும் என்ற உறுதியோ அவர்களது மனதில் உண்டாயிற்று. சோபாவிருந்த இடத்தைவிட்டு மறுபடியும் ஜன்னலண்டை வந்து அங்கிருந் தோரைக் கூவியழைத்து உடனே ஆட்சேபனை செய்து அந்தக் கலியாணத்தை நிறுத்திவிட வேண்டும் என்ற எண்ணம் கல்யாணி யம்மாளது மனதில் உண்டாயிற்று. திருமாங்கலிய தாரணம் நிறைவேறியதை அவள் கண்ணாரக் கண்டாள் ஆனாலும், அந்தக் கலியாணத்தை அவள் உண்மைக் கலியாணம் என்றே எண்ண வில்லை ஆகையால், அதைத் தடுத்துவிட வேண்டும் என்ற உறுதி கொண்டவளாய் மிகுந்த ஆத்திரமும் கோபமும் அடைந்து ஜன்னலண்டை ஓடினாள். அதற்குள், அந்த ஜன்னலின் கதவுகள் மூடி முன்போலவே வெளிப்புறத்தில் தாளிடப்பட்டு போயிருந்தன. உடனே கல்யாணியம்மாளுக்கு ரௌத்திராகாரமான கோபம் பொங்கி எழுந்தது. அவள் கடுஞ்சினங் கொண்ட சிங்கம் போல மாறி, தனது கைகொண்ட மட்டும் அந்த ஜன்னலின் கதவுகளை

இடித்துப் பெருத்த ஆரவாரம் செய்து கதவைத் திறக்கும்படி நயமாகவும் பயமுறுத்தியும் கூக்குரல் செய்யத் தொடங்கினாள். அவ்வாறு கால்நாழிகை நேரம் கழிந்தது; எவரும் கதவுகளைத் திறந்ததாகத் தோன்றவில்லை. அவள் உடனே வாசற் கதவண்டை ஓடி, "அடே கோபாலா! கதவைத்திற" என்று பன்முறை கூவியும் கதவைத் தடதடவென்றிடித்தும் பார்த்தாள். கால் நாழிகை நேரம் வரையில் மறுமொழியே கிடைக்கவில்லை. அவள் அவ்வாறு ஒவ்வொரு கதவண்டையும் போய் இடித்திடித்துப் கதறிப் பார்த்ததெல்லாம் வீணாயிற்று. கடைசியாக, அவள் சோர்வடைந்து தனது எண்ணம் பலியாதென்று நினைத்துக் கொண்டவளாய் ஒய்ந்து சாய்மான நாற்காலியில் உட்கார்ந்து கொண்டாள். கோமளவல்லி என்னும் பேதைப் பெண்மணி துயரமும், திகிலும், கவலையும், வியப்பும் வடிவெடுத்து வந்த உயிரற்ற பதுமை போலத் தனது தாய்க்கருகில் வியர்த்து விருவிருத்து நடுநடுங்கி நின்று கொண்டிருந்தாள். பக்கத்து ஹாலில், அதற்குமேல் அரை நாழிகை நேரம் வரையில் வாத்தியங்களினது முழக்கம் கேட்டுக் கொண்டிருந்தது. புரோகிதர் எல்லா மந்திரங்களையும் அப்போதே சொல்லி கங்கண விசர்ஜனம் முதலிய முடிவுச் சடங்குகளையும் முடித்ததாகத் . தோன்றியது. அதன் பிறகு வாத்திய கோஷம் நின்றது. ஜனங்கள் நடமாடியதும் மெதுவாகப் பேசியதும் தெரிந்தன. கல்யாணியம்மாள் மறுபடியும் ஒருமுறை கதவை இடித்துக் கூவியழைத்துப் பார்த்தாள். மறுமொழியே கிடைக்க வில்லை. அவளும் கோமளவல்லியம்மாளும் சோர்ந்து போய் அப்படியே சாய்ந்து விட்டார்கள். மோகனரங்கனுக்குப் போலீசாரே அனுகூலமாக இருந்து, தங்களை வஞ்சித்து அழைத்து வந்து, கமிஷனரது கச்சேரிக்குள் வைத்துக் கொண்டு அந்தக் கலியாணத்தை மோசக்கருத்தாக நடத்தி இருக்கிறாள் என்ற நிச்சயம் கல்யாணி யம்மாளது மனதில் ஏற்பட்டது. அவள் பொருட்டு அவ்வளவு பிரமாதமான காரியங்களையும் ஏற்பாடுகளையும் மோசத்தையும் செய்யக்கூடிய மனிதன் யாராக இருக்கலாம் என்ற யோசனையும் வியப்பும் அடைந்த கல்யாணியம்மாள், தாங்கள் அந்த இடத்தில் அந்த ராத்திரியில் எதையும் செய்ய முடியாதென்ற நிச்சயத்தை அடைந்தவளாய்க் கோமளவல்லியை ஒரு சோபாவின் மேல்

படுக்க வைத்துத் தானும் அவளுக்குப் பக்கத்திலிருந்த ஒரு நாற்காலியின் மேல் உட்கார்ந்து கொண்டே இருந்தாள். தனது சரீரம் விண்ணில் இருந்ததோ மண்ணில் இருந்ததோ என்பது தெரியாமல் பதறிக் கொண்டிருந்தது ஆனாலும், அளவு கடந்த களைப்பினால் உட்கார்ந்திருந்தாள். அவ்வாறு பொழுது கழிந்து கொண்டே போனது. அன்றைய ராத்திரி முழுதும் பக்கத்த ஹாலில் மனிதர் நடமாடிய ஓசை கேட்டுக் கொண்டே இருந்தது. கோமளவல்லி என்னும் மெல்லியாள் அத்தனை மன வேதனைகளையும் சகிக்க மாட்டாதவளாய் சாய்ந்தபடியே கடுந்துயிலில் ஆழ்ந்துவிட்டாள். கல்யாணியம்மாள் மாத்திரம் விழித்த கண்களை மூடாமல் கடிகாரத்தைப் பார்த்த வண்ணமே உட்கார்ந்திருந்தாள். தான் மறுநாட் காலையில் என்ன செய்கிறதென்றும் பந்தோபஸ்துக்கு வந்த இடத்தில் பெண்ணை இழந்துவிட்டுத் திரும்பிப் போய்த் தான் தங்களது மனிதர் முகத்தில் எப்படி விழிப்பதென்றும், தானே திருமாங்கலியத்தை ஆசீர்வதித்துக் கொடுத்ததன் மேல் நடத்தப்பட்ட அந்தக் கலியாணத்தை இனி தான் எப்படி மறுப்பதென்றும் பலவாறு எண்ணமிட்டவளாய்க் கல்யாணியம்மாள் அன்றிரவு முழுதும் நரக வேதனை அடைந்தவளாக உட்கார்ந்திருந்தாள். தான் நல்ல பூஜை செய்து நல்ல பெண்ணைப் பெற்றிருந்தால், அவளது கலியாணம் எவ்வளவு சிறப்பாகவும் வைபோகமாகவும் நடந்திருக்கும் என்றும், தான் முன் ஜென்மத்தில் மகா கொடிய பாவமியற்றி இருந்ததால், தனது மூத்த குமாரியினது கலியாணம் அவ்வளவு கேவலமாகவும், திருட்டுத்தனமாகவும் நடந்ததோடு, தானும் அந்த இரவு முழுதும் அவ்வாறு நரக வேதனை அனுபவிக்க நேர்ந்ததென்றும், தனது புத்திரியின் கலியாணம் சாப்பாடுகூட இல்லாத விநோதக் கலியாணமாக முடிந்ததே என்றும் நினைத்து நினைத்துக் கரைகடந்த சஞ்சலத்தில் ஆழ்ந்து கிடந்தாள். கடைசியில், அந்த மகா பயங்கரமான இரவு கழிந்து போகப் பொழுதும் புலர்ந்தது. சூரிய வெளிச்சம் அந்த ஹாலுக்குள் நன்றாகத் தெரிந்தது. கோமளவல்லியம்மாளும் விழித்துக் கொண்டாள். கல்யாணியம்மாள், தனது ஆசனத்தை விட்டு எழுந்து வாசற் கதவண்டை போய் இன்னொரு முறை கதவைத் தட்டி கோபாலா கோபாலா என்று அழைத்துப்

பார்த்தாள். எவ்வித மறுமொழியும் கிடைக்கவில்லை. அவளது ஆச்சரியமும் கவலையும் உச்ச நிலையை அடைந்தது. தங்கள் இருவரையும் அவர்கள் எதற்காக அப்படி உயிரோடு கடத்தி வைத்திருக்கிறார்கள் என்றும், எவ்வளவு நேரம் அப்படி வைத்திருப்பாளோ என்றும் கல்யாணியம்மாள் நினைத்து விவரிக்க ஒண்ணாத பரம சங்கடமான நிலைமையை அடைந் தவளாய் மிகவும் தளர்ந்து, அதற்கு மேல் தான் என்ன செய்வ தென்பதை உணராதவளாகச் சிறிது நேரம் கலங்கி மயங்கி நின்றாள்.

அப்போது கோமளவல்லி சற்று தூரத்திலிருந்த கோமளவல்லி யம்மாள் எதையோ கண்டு திடுக்கிட்டு வியப்போடு தனது தாயை நோக்கி, "அம்மா! இங்கே வாருங்கள்; அக்காள் போனவழி இதோ இருக்கிறது" என்று மிகுந்த பதைபதைப்போடு கூற, அதைக் கேட்ட கல்யாணியம்மாள் ஒருவித நம்பிக்கையை அடைந்த வளாய் எழுந்து விரைவாக ஓடினாள். துரைஸானியம்மாள் உட்கார்ந்து கொண்டிருந்த சோபாவிற்கருகில், சுவரோரமாக நாலைந்து பீரோக்கள் வரிசையாக வைக்கப்பட்டிருந்தன. சுவருக்கும் பீரோவுக்கும் இடையில் ஓர் ஆள் போவதற்குத் தேவையான இடைவெளி இருந்தது. ஆனால் அந்த பீரோக்கள் எல்லாம் ஒன்றிற்கொன்று இடைவெளியின்றி ஒட்டினாற் போல வைக்கப்பட்டிருந்தன. கடைசியில் இருந்த பீரோவிற்கப்பால் போய், அதற்கும் சுவருக்கும் மத்தியில் இருந்த இடைவெளிக்குள் நுழைந்து சென்றால், அங்கே சுவரில் ஒரு வாசலும் கதவும் இருந்தன. அந்தக் கதவு, ஐந்து பீரோக்களுக்கும் நடுவில் இருந்தமையால் இரண்டு கோடியிலிருந்து பார்ப்பவருக்கும் அது தெரியாமல் இருந்தது. உட்புறத்தில் நுழைந்து பார்ப்பவருக்கே அது தெரியக்கூடியதாக இருந்தது. ஏதோ ஒருவித சந்தேகங்கள் கொண்ட கோமளவல்லியம்மாள் மெதுவாக நடந்து அந்த இடை வெளியில் போய் பார்த்தாள். அவ்விடத்தில் கதவு காணப்பட்டது. அவள் அந்தக் கதவின் மேல் கையை வைக்க, அது திறந்து கொண்டது. எதிர்பக்கத்து ஹால் தெரிந்தது. அதைக் கண்ட வுடனே மிகுந்த மகிழ்ச்சியடைந்த கோமளவல்லியம்மாள் உள்ளே வந்து முன் கூறப்பட்ட தனது தாயை அழைக்க அவளும்

ஆவலோடு ஓடி அந்த இடைவெளிக்குள் மெல்ல நுழைந்து அங்கே இருந்த கதவைத் திறந்து கொண்டு பக்கத்து ஹாலுக்குள் நுழைந்தாள். கோமளவல்லியும் கூடவே தொடர்ந்து சென்றாள். மறைவான வாசற்படி அங்கே இருக்கிற தென்பது முதலிய விவரங்கள் யாவும் துரைஸானியம்மாளுக்கு முதலிலேயே தெரிவிக்கப்பட்டிருக்க வேண்டும் என்பதை அவள் அப்பால் போவதற்காகவே மின்சார விளக்கு வெளிப்புறத்தில் இருந்த படியே யாரோ ஒருவரால் நிறுத்தப்பட்டிருக்க வேண்டும் என்றும், அவர்கள் நிச்சயித்துக் கொண்டவர்களாய்ப் பக்கத்து ஹாலை அடைந்தனர்.

அப்போது அவர்களது ஆச்சரியமும், திகைப்பும், கவலையும் அச்சமும் முன்னிலும் பதின்மடங்கு அதிகரித்தன. ஏனென்றால், அந்த ஹாலில் ஒரு மனிதர்கூடக் காணப்படவில்லை. கலியாணப் பந்தலோ போனவிடந் தெரியவில்லை. வாழை மரங்கள் தோர ணங்கள் முதலிய சகலமான வஸ்துக்களும் சொப்பனம் போல அந்தரத்யானமாகி விட்டன. கலியாணம் அங்கே நடந்ததென்ற குறிப்பே அவ்விடத்தில் காணப்படவில்லை. அவர்கள் பிரமித்து மலைத்து தூக்கத்தில் நடப்பவர்கள் போலவும் நடைப்பிணங்கள் போலவும் நடந்து அந்த ஹால் முழுதும் பார்த்துக் கொண்டே அதன் வெளிவாசலின் வழியாக முன் பக்கத்துத் தாழ்வாரத்திற்கு வந்து சேர்ந்தனர். அவ்விடத்திலும் ஒரு போலீஸ் ஜெவானாகிலும் அல்லது வேறே எந்த மனிதராகிலும் காணப்படவில்லை. அவர்கள் அந்தக் கட்டிடத்தை ஒரு பிரதக்ஷிணம் சுற்றிவந்து யாராகிலும் மனிதர் இருக்கிறார்களோ என்று பார்க்கிறார்கள். ஓர் ஈ, காக்கை கூடத்தென்படவில்லை; என்ன செய்வார்கள் அவர்கள் இருவரும்! மலைத்து ஸ்தம்பித்து அப்படியே சிறிது நேரம் நின்ற பின்னர், அந்த பங்களாவை விட்டு, அதற்கு நாற்புறத்திலிருந்த ராஜ பாட்டைக்கு வந்து நாற்புறங்களிலும் திரும்பித் திரும்பிப் பார்த்தனர். முதல் நாளிரவில் தொங்கவிடப்பட்டிருந்த பலகையும் காணப்படவில்லை. என்ன ஆச்சரியம்! என்ன விநோதம்! முதல் நாளிரவில் தாங்கள் கண்ட காட்சிகள் எல்லாம் நாடகத்தின் காட்சிகள் போல மறைந்து போன அதிசயமென்ன! அது உண்மையில் போலீஸ் கமிஷனரது கச்சேரியாக இருக்குமானால்,

வாசப்பலகை எப்போதும் சாசுவதமாகத் தொங்கிக் கொண்டிருக்கும் ஆகையால், அது கமிஷனரது கச்சேரியல்ல என்பது நிச்சயமாயிற்று. முதல் நாளைய நாடகத்தில் தோன்றிய அத்தனை போலீசாரும் உண்மையான போலீசார் என்பதைப்பற்றி எவ்வித சந்தேகமும் இல்லை என்றும், அவர்கள் எல்லோரும் மோகனரங்கனுக்காக அவ்வளவு பாடுபட்டுத் தங்களை வஞ்சித்து அந்த பங்களாவுக்குக் கொணர்ந்து காரியத்தை முடித்திருக்கிறார்கள் என்றும் கல்யாணி யம்மாள் நிச்சயப்படுத்திக் கொண்டாள். அவர் அந்த ராஜ பாட்டையின் இருபுறங்களையும் நோக்க, நெடுந்தூரத்திற்கப்பால் இரண்டொரு பங்களாக்களும், இடையில் தோப்புகளும் வயல்களும் இருந்தன, அது எந்த இடம் என்பதை அவர்கள் அறியக்கூட வில்லை. அந்தப் பாதையும் நிர்மானுஷ்யமாகத் தோன்றியது. தாங்கள் அவ்விடத்திலிருந்து தங்களது பங்களாவிற்கு எப்படிப் போகிறதென்ற கவலையும் அச்சமும் கொண்டவர்களாக அவர்கள் தவித்திருந்த சமயத்தில், ஓர் ஆள் மண்வெட்டியைத் தோளில் மாட்டிக் கொண்டு வந்து அந்த பங்களாவிற்குள் நுழைந்தான்.

அவனைக் கண்ட கல்யாணியம்மாள் மிகுந்த மகிழ்ச்சியடைந் தவளாய், அவனை நோக்கி, "அடேய் ஆளே! இது எந்த இடம்?" என்று வினவினாள்.

அவர்கள் தக்க பெரிய மனிதர்களது வீட்டுப் பெண்பிள்ளை என்பதை உணர்ந்து கொண்ட அந்த ஆள் மிகவும் வணக்கமாக பேசத் தொடங்கி, "இந்த ஊருக்குப் பேரு அடையாறு இம்பாங்க ஏன் சாமி? ஒங்களுக்கு என்னா ஒணும் இந்த வங்களாவெ நீங்க கொடக்கூலிக்கு எடுக்கப் போறீங்களா?" என்றான்.

**கல்யாணியம்மாள்:-** அப்படியானால் இந்த பங்களாவிலே இப்போது யாரும் இல்லையா?

**ஆள்:-** இல்லீங்க. இதுவரைக்கும் இதுலே சுந்தரம்புள்ளெ யின்னு ஒரு போலீசுக்காரரு இருந்தாரு. அவுரு இதெ உட்டுட்டு பட்டணம் போயி மூணுநாலு நாளாவது. இது இப்ப காலியாத் தான் இருக்குது. நேத்து ஒரு நாளைக்கு மாத்ரம் யாரோ போலீசுக்காரரு இதெ எடுத்து ஒரு கண்ணாளம் பண்ணினாவளாம். அவுகளும் விடியக் காத்தாலே போயித்தாங்க.

**கல்யாணியம்மாள்:-** நீ இங்கே தோட்ட வேலை செய்கிறவனா?

**ஆள்:-** ஆமாங்க; நான் தோட்டவேலெயும் சேஞ்சுக்கணும் காவலும் காத்துக்கணும்.

**கல்யாணியம்மாள்:-** கலியாணம் செய்தவர்கள் யார் என்பதும் அவர்கள் எங்கே இருக்கிறார்கள் என்பதும் உனக்குத் தெரியுமா?

**தோட்டக்காரன்:-** தெரியாதுங்க.

**கல்யாணியம்மாள்:-** இந்த பங்களாவினுடைய சொந்தக்காரர் எங்கே இருக்கிறார்?

**தோட்டக்காரன்:-** அவுரு ஒரு வக்கீலைய்யா; அவரோடெ பேரு சம்பந்த முதலியாரு. அவுரு இருக்கறது வண்ணாரப்பேட்டை.

**கல்யாணியம்மாள்:-** சரி; அதிருக்கட்டும். நாங்கள் தேனாம்பேட்டைக்குப் போக வேண்டும் இங்கே வாடகை வண்டி ஏதாவது நடக்குமா?

**தோட்டக்காரன்:-** ஏதுங்க? இது ஒரு அத்துவானக் காடு. இஞ்சே வண்டி கிண்டி ஒண்ணும் அம்பிடாதுங்க — என்றான்.

இதைக் கேட்ட கல்யாணியம்மாள் சிறிது நேரம் யோசனை செய்த பின்னர் அவனை நோக்கி, "அப்பா அடே! நீ எங்களுக்கு ஓர் உபகாரம் செய்கிறாயா? செய்தால், உனக்கு சரியானபடி இனாம் கொடுக்கிறோம்" என்று நயமாகக் கூறினாள்.

தோட்டக்காரன், "ஓ செய்யறேனுங்க; என்ன ஆவணும் சொல்லுங்க" என்று மிகுந்த உற்சாகத்தோடு கேட்க, கல்யாணியம்மாள், "நாங்கள் தேனாம்பேட்டைக்குப் போக வேண்டும். அதற்கு ஒரு வண்டி வேண்டியிருக்கிறது. நீ உடனே புறப்பட்டுத் தேனாம்பேட்டைக்குப் போ. அப்படிப் போகும் போது வழியில் ஏதாவது வாடகை வண்டி அகப்படுமானால், அதையே அழைத்துக் கொண்டு வா. அகப்படாவிட்டால், தேனாம்பேட்டையில் உள்ள மாரமங்கலம் சமஸ்தானத்து பங்களா எங்கே இருக்கிறதென்று விசாரித்துக் கொண்டு அங்கே போய், பங்களாவிலிருக்கும் ஆள்களைக் கண்டு, "உங்களுடைய எஜமானியம்மாள் அடையாற்றில் இருக்கிறார்கள்; உடனே ஒரு பெட்டி வண்டி கொண்டு வரச்

சொன்னார்கள்" என்று சொல். அவர்கள் கொண்டு வருவார்கள். நீயும் அதிலேயே உட்கார்ந்து கொண்டு வந்து சேர்; நாங்கள் அது வரையில் இந்த பங்களாவில் இருக்கிறோம். எல்லாவற்றிற்கும் இந்தப் பணத்தைக் கையில் வைத்துக்கொள்" என்று கூறிய வண்ணம், தனது மடியில் சொருகிக் கொண்டிருந்த பையில் இருந்து ஒரு ரூபாய் நோட்டை எடுத்து நீட்ட, அந்தத் தோட்டக் காரன் அப்படியே செய்வதாகச் சம்மதித்து, அந்த நோட்டை வாங்கித் துணியில் முடிந்து கொண்டு மண்வெட்டியை பங்களா விற்குள் வைத்துவிட்டு, அவர்களையும் பங்களாவில் இருக்கச் செய்து, ஓட்டமாக ஓடத் தொடங்கினான்.

அதன் பிறகு இரண்டு நாழிகை நேரம் கழிந்தது. தோட்டக்காரன் ஒரு வாடகைப் பெட்டிவண்டியோடு திரும்பி வந்து சேர்ந்தான். உடனே கல்யாணியம்மாளும், கோமளவல்லியம்மாளும் அதற்குள் உட்கார்ந்து கொண்டனா; அந்தத் தோட்டக்காரனைத் தங்களோடு கூட வரும்படி அழைத்துக் கொண்டு காலை சுமார் 10 மணிக்குத் தங்களது பங்களாவிற்கு வந்து சேர்ந்தார்கள். வண்டிக்காரனுக்கு சத்தப் பணமும், தோட்டக்காரனுக்குச் சன்மானமும் கொடுத் தனுப்பிய பின் கல்யாணியம்மாள் கோமளவல்லியோடு தனது அந்தப்புரத்திற்குப் போய்ச் சேர்ந்தாள். தாங்கள், கசாப்புக் கடைக்காரனை நம்பும் ஆடு போலப் போலீஸ் இன்ஸ்பெக் டரையே கடைசி வரையில் நம்பி இருந்து, சகல விதத்திலும் ஏமாற்றப்பட்டு முடிவில் துரைஸானியம்மாளையும் இழந்து அவமானப்பட்டு வர நேர்ந்ததைப் பற்றிய துக்கமும், வெட்கமும், அழுகையும் நெஞ்சை அடைத்துக் கொண்டு பொங்கி எழுந்தன. இருந்தாலும், தனது உண்மையான மனநிலைமையை வெளியில் காட்டிக்கொள்ளாமலும், துரைஸானியம்மாள் திரும்பி வரவில்லை என்பதைப் பணிமக்கள் கவனிக்காதபடியும் கல்யாணியம்மாள் கோமளவல்லியை அழைத்துக் கொண்டு அதிக விசையாக உள்ளே நுழைந்துவிட்டாள். என்றாலும், பொன்னம்மாள் முதலிய சில முக்கியமான மனிதர்கள், அவர்கள் வந்ததைக் கண்டு கொண்டார்கள் ஆதலால், அவர்கள் திரும்பி வந்ததைப் பற்றி மிகுந்த மகிழ்ச்சி அடைந்தவர்களாய் ஓடோடியும் வந்து உபசார வார்த்தைகள் சொல்லத் தொடங்கினர். எதிரிகள் முதல் நாள் இரவில்

பங்களாவில் புகுந்து ஏதேனும் துன்பமிழைத்தார்களோ என்ற கேள்வியைக் கல்யாணியம்மாள் முதலில் கேட்க, பொன்னம்மாள் ராத்திரி பங்களாவில் எவ்விதக் கலகமும் நடக்கவில்லை என்றும் அவர்கள் மோட்டார் வண்டியில் போன பிறகு ஒரு நாழிகைக் கெல்லாம் சிவஞான முதலியாரும், போலீஸ் கமிஷனரும், வேறே சில போலீஸ் ஜெவான்களும் வந்து நெடுந்தூரம் வரையில் பங்களாவில் காத்திருந்த பின்னர், மோட்டார் வண்டியில் போனவர்களைத் தேடிக் கொண்டு பல இடங்களிற்கும் போயிருக் கிறார்கள் என்றும் கூறினாள்.

உடனே கல்யாணியம்மாள், போலீஸ் கமிஷனரினது கச்சேரிக்கும் மைலாப்பூரில் உள்ள வக்கீல் வீட்டிற்கும் போய்த் தேடிப் பார்த்து சிவஞான முதலியாரைக் கையோடு அழைத்து வரும்படி ஆளை வண்டியில் வைத்து அனுப்பிய பின், கோமளவல்லியை ஸ்நானம் சாப்பாடு முதலியவைகளை செய்து கொண்டு, தனது அந்தப் புரத்தில் போய் இருக்கும்படி சொல்லி அனுப்பிவிட்டு, அவளும் ஸ்நானம் முதலிய காரியங்களை விரைவாக முடித்துக் கொண்டு திரும்பி வந்து மிகவும் அலுத்துப் போய்த் தனது கட்டிலில் ஏறிப் படுத்தாள். அவளது மனம் பச்சைப் புண்ணாக இருந்தது; தேகம் கட்டிலடங்காமல் தவித்துத் தள்ளாடியது. தான் மிகவும் அருமையாக வளர்த்த மூத்த புத்திரி அவ்வாறு போய் விட்ட துக்கம் அவளால் சிறிதும் சகிக்கக் கூடாததாக இருந்தது. விசனம் பிரம்மாண்டமான காற்றாற்று வெள்ளம் போல அவளது மனதில் பொங்கி எழுந்தது. கண்களில் கண்ணீர் தாரைதாரையாக வழிந்தோடுகிறது. எதற்கும் கலங்காத அதி தீரத்தன்மை வாய்ந்த அந்தச் சீமாட்டி தனது புத்திரியை இழந்த சோகத்தைத் தாங்க மாட்டாமல் கேவலம் ஒரு குழந்தை போல மாறித் தனது சயனத்தில் படுத்துப் புரண்டு கரைந்து விம்மிவிம்மி அழுது பாகாய் ஓடிக் கொண்டிருந்தாள். அந்தச் சமயத்தில் கல்யாணியம்மாளது மனதில் தனது புத்திரி போய்விட்ட ஆறாத் துயரத்தைத் தவிர, வேறே எந்த நினைவும், எந்தக் கவலையும் உண்டாகவில்லை. அவ்வாறு அவள் ஒரு நாழிகை நேரம் வரையில் நெருப்பின் மேல் கிடந்து வெதும்புபவள் போல இருக்க, பக்கத்தில் நின்ற பொன்னம்மாள், முதல் நாளிரவில் நடந்த விவரங்களை எல்லாம்

அறிந்து கொண்டு, அவளது கால்களைப் பிடித்துவிட்ட வண்ணம், பல வகையான ஆறுதல் கூறிக் கொண்டிருந்தாள். அவளது வார்த்தைகளைச் சிறிதும் காதில் வாங்காமல் வேதனைக் கடலில் ஆழ்ந்து கிடந்த கல்யாணியம்மாள் அப்படியே கடுமையான நித்திரையில் ஆழ்ந்துவிட்டாள். அவ்வாறு துயின்றவள் பிற்பகல் மூன்று மணிக்கு எழுந்து உட்கார்ந்து தனது கண்களை விழித்துக் கொண்டு பார்க்க, வக்கீல் சிவஞான முதலியார் சற்று தூரத்தில் ஒரு நாற்காலியின் மேல் உட்கார்ந்து ஏதோ பத்திரிகையைப் படித்துக் கொண்டிருக்கக் கண்டாள். சடக்கென்று கட்டிலைவிட்டுக் கீழே குதித்தவளாய் "வாருங்கள்; வாருங்கள். நீங்கள் வந்து நிரம்ப நேரமாகக் காத்திருக்கிறீர்கள் போலிருக்கிறது. இங்கே இருந்த பொன்னம்மாள் எங்கே போய்விட்டாள்? அவளை விட்டு என்னை எழுப்பச் செய்திருக்கக் கூடாதா?" என்று மிகுந்த கிலேசத்தோடு கூறி உபசரித்தாள்.

★ ★ ★

29—வது அதிகாரம்

## புளுகு மூட்டை

அதைக் கேட்ட சிவஞான முதலியார், "பரவாயில்லை, நான் வந்து அதிக நேரமாகவில்லை. இப்போது தான் அரை நாழிகைக்கு முன் வந்தேன். இதற்கு முன் காலையில் சுமார் 11-மணிக்கு ஒரு தடவை வந்தேன். பொன்னம்மாள் எல்லா விவரங்களையும் என்னிடத்தில் சொன்னதன்றி, அப்போது தான் நீங்கள் அலுத்துப் போய்த் தூங்க ஆரம்பித்ததாகவும் சொன்னாள். சரி; நடந்ததெல் லாம் நடந்துவிட்டது. அலுத்துப் போய்த் தூங்குகிற உங்களை எழுப்பி என்ன ஆகவேண்டும் என்று நினைத்துக் கொண்டு, நான் உடனே போலீஸ் கமிஷனரிடம் போய் நடந்த விவரங்களை எல்லாம் சொல்லிவிட்டு மைலாப்பூருக்குப் போய் ஸ்நானம் போஜனம் முதலிய காரியங்களை எல்லாம் பார்த்துக் கொண்டு இப்போது தான் வந்தேன். பொன்னம்மாள் இங்கே இதுவரையில் இருந்தவள் இப்போது தான் சாப்பிடப் போனாள்" என்று மிகுந்த விசனத்தோடு பேசினார்.

அதைக் கேட்ட கல்யாணியம்மாள் மிகுந்த வெட்கமும் துக்கமு மடைந்து, "அப்படியானால், ராத்திரி நடந்த வெட்கக் கேட்டை எல்லாம் போலீசாருக்குச் சொல்லி விட்டீர்களா; இந்தச் சங்கதி ஊர் முழுதும் பரவி, ஜனங்கள் எல்லோரும் நம்மைப் பற்றி இழிவாகப் பேசி ஏளனம் செய்து நகைப்பார்களே! அடாடா! பெண்ணை இழந்த விசனத்தோடு ஊரார் சிரிக்கும்படியான தலைகுனிவுக்கும் நாம் ஆளாக வேண்டுமா?" என்று உரிமையோடு அவரைக் கண்டிப்பவள் போலக் கூறினாள். உடனே சிவஞான முதலியார், "அப்படி நானே இந்தச் சங்கதியை வெளிப்படுத்துவேனா? நேற்று ராத்திரி நானும் தாதியுமாகப் போலீஸ் கமிஷனருடைய கச்சேரிக்குப் போய், மோட்டார் வண்டியில் நீங்கள் வந்தீகளா என்று விசாரித்தேன். எவரும் வரவில்லை என்பதை நான் அறிந்து கொண்டதோடு நேற்று இங்கே வந்திருந்த போலீஸ் இன்ஸ்பெக்டர், ஜெவான்கள் முதலிய எல்லோரும் போலீசைச் சேர்ந்தவர்கள் அன்று எனறும், எல்லோரும் வேஷக்காரர்கள் என்றும், கடைசி வரையில் நம்மை மோசம் செய்து விட்டார்கள் என்றும் அறிந்து கொண்டேன். அவர்கள் உங்களை எங்கே கொண்டு போனார் களோ என்ற பயமும் கவலையும் கொண்ட நான் போலீஸ் கமிஷனரிடத்தில் எல்லா சங்கதிகளையும் ரகசியமாகச் சொல்ல, அவர் உடனே சில ஜெவான்களோடு இந்த பங்களாவுக்கு வந்தார். எதிரிகள் இங்கே வந்து ஏதாகிலும் துன்பம் செய்வார்களோ என்று நாங்கள் பார்த்துக் கொண்டிருந்தோம். அதன் பிறகு உங்களைத் தேடும் பொருட்டு அவர்கள் எல்லா ஸ்டேஷன்களுக்கும் செய்தி அனுப்பி, மிகுந்த பிரயாசை எடுத்துக் கொண்டார். இன்று காலை வரையில் இந்த ஊரில் உள்ள எல்லாப் போலீசாரும் உங்களைத் தேடி அலைந்து கொண்டிருந்தார்கள். இன்று காலையில் நீங்கள் வந்து விட்டதைக் கேட்டவுடனே நான் இங்கே வந்தேன்; விவரங் களை பொன்னம்மாள் சொல்ல அறிந்து கொண்டேன்; உடனே கமிஷனரிடத்தில விஷயத்தைத் தெரிவித்தேன். உங்களைத் தேட வேண்டாம் என்று அவர் உடனே எல்லா ஸ்டேஷன்களுக்கும் செய்தி அனுப்பினார். பெண் போய்விட்ட விஷயத்தை வெளியிட வேண்டாம் என்று நானே அவரிடத்தில் கேட்டுக் கொண்டேன்; அவரும அதற்கு இணங்கி விட்டார். ஆனால் போலீசார் என்ற

பெயரை வைத்துக்கொண்டு இவ்வளவு அபாரமான மோசத்தைச் செய்திருக்கும் அந்த மனிதர்களைக் கண்டு பிடிக்க வேண்டும் என்ற எண்ணத்தோடு அவரே நேரில் புறப்பட்டு அடையாற்றுக்குப் போயிருக்கிறார். இந்த விஷயத்தைப் போலீசார் வெளியிடுவார்கள் என்று நீங்கள் கவலைப்படத் தேவையில்லை" என்றார்.

அந்த வரலாற்றைக் கேட்ட கல்யாணியம்மாள் கரைகடந்த திகைப்பும் குழப்பமுமடைந்து, "என்ன ஆச்சரியம்! நேற்று வந்த இன்ஸ்பெக்டர் முதலிய எல்லோரும் உண்மையான போலீஸ் காரர்கள் என்றும், அந்த மோகனரங்கனுக்காக இப்படிப்பட்ட உதவி செய்கிறார்கள் என்றும் அல்லவா நான் நினைத்தேன். அவர்கள் வேஷக்காராகளா! ஆகா! இப்படிப்பட்ட அதிகயமான சம்பவத்தைப் பற்றி நான் பிறந்தது முதல் இதுவரையில் காதாலும் கேட்டதே இல்லை; அவர்கள் எவ்வளவு சாமர்த்தியமாக நடந்து கொண்டிருக்கிறார்கள்! இப்படிப்பட்ட தந்திரங்களை எல்லாம் செய்திருக்கிறார்கள்! அந்தப் போலீஸ் இன்ஸ்பெக்டரும், ராஜாயி என்பவளும் எப்படிப்பட்ட சாகசங்கள் செய்தார்கள்! அடாடா! நேற்று நடந்த விஷயமெல்லாம் ஒரு நாடகம் போல இருக்கிறதே யன்றி நிஜமாக நடந்தது போல எனக்குத் தோன்றவில்லையே" என்றாள்.

சிவஞான முதலியார், "நேற்றைய தினம் நான் சொன்ன சங்கதி உங்களுக்கு நினைவிருக்கலாம். போலீஸ் வேலையிலிருந்து தள்ளப்பட்டுப் போன சுந்தரம் பிள்ளை என்ற ஒருவனும் அவனுடைய வைப்பாட்டியும் சேர்ந்து கொண்டு தந்திரமாக ஜனங்களை ஏமாற்றி வழிப்பறி முதலிய காரியங்களைச் செய்து வருகிறார்கள் என்று சைதாப்பேட்டை சப் இன்ஸ்பெக்டர் சொன்னார் அல்லவா? அடையாற்று பங்களாவில் உங்களிடத்தில் தோட்டக்காரன் சொன்ன சங்கதியைப் பார்த்தால், அந்த பங்களாவி லிருந்த சுந்தரம் பிள்ளையே இவர்களுக்கு அனுகூலமாக வந்திருப்ப தாகத் தெரிகிறது. அவன் போலீஸ் இலாகாவில் இருந்த போது இன்ஸ்பெக்டர், ஜெவான்கள் முதலியோர் உபயோகிக்கக் கூடிய பல உடைகளையும் கத்தி துப்பாக்கி முதலிய சாமான்களையும் திருடி ஒளித்து வைத்துக கொண்டிருப்பதாகவும் அந்த சப் இன்ஸ்

பெக்டர் நேற்றைய தினம் என்னிடத்தில் சொன்னார்கள். அவன் தன்னுடைய வசத்தில் பல ஆயுதங்களையும் தயாராக வைத்திருப்ப தாகவும் தெரிகிறது. மோட்டார் வண்டியை வாடகைக்கு வாங்கி இருப்பான். அந்த பங்களாவை அவன் இதுவரையில் வைத்திருந்து இப்போது வாரண்டுக்காக பயந்து கொண்டு அதைக் காலி செய்து விட்டு எங்கேயோ போயிருக்கிறான். நான் இன்றைய தினம் அதன் சொந்தக்காரரான வக்கீல் வீட்டுக்குப் போய் அவரைக் கண்டு பேசினேன். அந்த பங்களா இன்னமும் அந்த சுந்தரம் பிள்ளையின் வசத்திலேயே இருப்பதாக அவர் சொன்னார். இந்த விவரங்களை யும், நேற்று ராஜாயி என்ற பெண் துருக்கச்சியாக வந்ததையும் யோசித்துப் பார்த்தால், அவள் அவனுக்கு வைப்பாட்டியாக இருக்கிறாள் என்று நாம் நினைக்க வேண்டி இருக்கிறது. சைதாப் பேட்டை ரோட்டில் நம்மிடத்திலிருந்து சொத்து மூட்டையை அபகரித்துக் கொண்டு போனவளும் அந்த ராஜாயியாகத்தான் இருக்க வேண்டும் என்று நான் நினைக்கிறேன்; நேற்று இன்ஸ் பெக்டராக வந்தவன் அந்த சுந்தரம் பிள்ளையாகத்தான் இருக்க வேண்டும்" என்றார்.

அதைக் கேட்ட கல்யாணியம்மாள் சிறிது யோசனை செய்து, "ஆம்; அப்படித் தான் இருக்க வேண்டும். நேற்றைய தினம் கலியாணம் நடந்த போது, அந்த ராஜாயியும், இன்னொரு புருஷனும் நின்று கன்னிகாதானம் செய்து கொடுத்தார்கள். அந்த மனிதனுக்கும், நேற்று வந்த இன்ஸ்பெக்டருக்கும் பலவிதத்தில் ஒற்றுமை இருப்பதாக இப்போது தெரிகிறது. அதுவும் தவிர, சைதாப்பேட்டைப் பாதையில் இன்ஸ்பெக்டர் போல வந்த வளுடைய சாயல் பருமன் முக அமைப்பு முதலியவைகளும் ராஜாயியின் சாயல் முதலியவைகளும் ஒன்றாகவே இருக்கின்றன. ஆகையால, அவர்கள் இருவருமே இந்தக் காரியங்களை எல்லாம் செய்தவர்கள் என்பதைப் பற்றி சந்தேகமில்லை. என்ன நம்முடைய கஷ்டகாலம்! துரைஸானியின் தலைவிதி இப்படியா முடிய வேண்டும். அடாடா! கேவலம் கொள்ளைக்காரர்களான அந்த மனிதர்களோடு தானா இவள் சம்பந்தம் செய்து கொள்ள வேண்டும்! ஐயோ! தெய்வமே! என் வாயில் நீ இப்படியா மண்ணைப் போட வேண்டும். ஆகா! என் வயிறு எரிகிறதே!" என்று மிகவும் நயமாகக் கூறினாள்.

சிவஞான முதலியார், "அவர்கள் பேரில் வாரண்டு பிறந்திருக்கிறது. அவர்கள் போலீசாருடைய பெயரைக் கெடுத்துக் கொண்டிருக் கிறார்கள் ஆகையால், போலீசார் அவர்களைப் பிடிக்காமலும் சிறைச் சாலைக்கு அனுப்பாமலும் தூங்கமாட்டார்கள். இந்த மோகனரங்கம் அவர்களுக்கு அநுசரணையாக இருந்தான் என்று, அவனையும் தண்டித்து தண்டனைக்கு ஆளாக்கிவிடுவார்கள். அதன் பிறகு தான் நம்முடைய குழந்தையின் கதி பரிதாபகரமாகி விடும். ஆகையால் நாம் இந்த விஷயத்தை இனி அஜாக்கிரதையாக விட்டுவிடக் கூடாது. போலீஸார் இன்னம் இரண்டொரு நாளைக்குள் அந்த சுந்தரம் பிள்ளை முதலியோரைப் பிடித்துக் கொள்வது நிச்சயம். அப்போது, அவர்களோடிருக்கும் நம்முடைய குழந்தையைக் கொணர்ந்து எவரும் அறியாதபடி நம்மிடம் சேர்த்துவிடும்படி நான் போலீசாரிடத்தில் சொல்லி இருக்கிறேன். அப்படிச் செய்வதாக அவர்கள் வாக்களித்திருக்கிறார்கள். ஆகையால் நாமும் இந்த விஷயத்தில் எச்சரிப்பாக இருக்க வேண்டும். குழந்தை இப்போது பங்களாவில் இருக்கிறதாகவே எல்லோருக்கும் நாம் சொல்லி வைக்க வேண்டும். பெண் உங்களோடு திரும்பி வரவில்லை என்பதை அறிந்தவள் பொன்னம்மாள் ஒருத்தி தான் என்று நினைக்கிறேன். இதை வெளியிட வேண்டாம் என்று நான் அவளிடம் சொல்லி வைத்திருக்கிறேன். அதோடு, அவள் இங்கே தான் இருக்கிறாள் என்று வேலைக்காரர்களிடத்தில் எல்லாம் சொல்லி வைக்கும்படியும் அவளை எச்சரித்திருக்கிறேன்" என்றார்.

அதைக் கேட்ட கல்யாணியம்மாள் கரைகடந்த துயரத்திலாழ்ந் தவளாய், "அந்தப் பாவிகள் தாலி முதலியவைகளை எல்லாம் கட்டி பெண்ணை அநியாயமாகக் கெடுத்து விட்டார்களே! இனிமேல் அவளைக் கொண்டு வந்து வைத்துக் கொண்டு நாம் என்ன செய்கிறது. அவளை இனிமேல் எவனுக்கும் கட்டிக்கொடுக்கவும் வகையில்லை. அக்கிரமத்துக்கு பயப்படாமல், நாம் யாருக்காவது அவளை மறுபடியும் கட்டிக்கொடுக்க எத்தனித்தாலும், அவள் நம்முடைய சொல்படி அடங்கி நடக்கக்கூடியவளல்ல. கலியாணம் செய்து கொடுக்காமலே அவளை நாம் வீட்டில் வைத்துக் கொண் டிருந்தால், ஊரார் என்ன தான் சொல்லமாட்டார்கள்! அவளும் சரியான நடத்தை உடையவளாக இருக்க வேண்டாமா? என்னவோ;

இதனால் நம்முடைய குடும்பத்துக்கு என்றென்றைக் கும் நீங்காத இழிவும் தலைகுனிவும் உண்டாகிவிட்டன. பையன் செய்த காரியங்களைவிட பெண் செய்த காரியம் என்னால் கொஞ்சமும் சகிக்கக் கூடாததாக இருக்கிறது. ஏது! இனிமேல் என்னுடைய உயிர் நிற்காது போலிருக்கிறது. இப்படிப்பட்ட அவமானங்களைப் பொறுத்துக் கொண்டு உயிர் வாழ்வதும் ஒரு வாழ்வாகுமா? நான் வெகு சீக்கிரத்தில் ஏதாகிலும் மார்க்கம் செய்து என்னுடைய உயிரை மாய்த்துக் கொண்டுவிடப் போகிறேன். அந்தத் தறுதலைப் பையன் தேவடியாள் வீடே கதியாகக் கிடக்கிறான். அவன் அநியாயமாக அழிந்து போய்விட்டவன்தான். அவன் இனி நல்ல வழிக்குத் திரும்பப் போகிறதில்லை. இந்த சனஸ்தானம் இவ்வளவோடு சீர்குலைந்து நாசமடைந்துவிடப் போகிறது. எப்படியாவது பிரயாசைப்பட்டு என்னுடைய சின்னக் குழந்தை கோமளவல்லியை மாத்திரம் எங்கேயாவது நல்ல இடமாகப் பார்த்து இன்னம் சில தினங்களுக்குள் கட்டிக்கொடுத்து விடுங்கள். அதன் பிறகு நான் உயிரையாவது விட்டுவிடுகிறேன்; இல்லா விட்டால் காசிராமேசுவரம் முதலிய இடங்களுக்காவது தேசாந்தரம் போய் விடுகிறேன்" என்று மிகுந்த துயரத்தோடு கூறிக் கண்ணீர் விடுத்தழுதாள்.

அந்தச் சீமாட்டியினது பரிதாபகரமான நிலைமையைக் கண்டு கலக்கமும் உருக்கமும் அடைந்து சிவஞான முதலியார் அவளுக்கு தேறுதல் கூறும் பொருட்டு ஏதோ வார்த்தைகள் சொல்ல ஆரம்பித் தார். அப்போது அந்த அந்தப்புரத்தின் வாசற்கதவு திறக்கப்பட்டது. ஒரு வேலைக்காரன் முதலில் உள்ளே நுழைந்தான்; ஏதாகிலும் விசேஷ காரியம் இருந்தால் மாத்திரம்; பணிமக்கள் அவ்வாறு அனுமதியின்றி வருவது வழக்கம் ஆதலால், தனக்கு என்ன விதமான புதிய துன்பம் வரப்போகிறதோ என்ற அச்சமும் கவலை யும் கொண்ட கல்யாணியம்மாள் திடுக்கிட்டு வாசற்பக்கம் நோக்க, அது போல சிவஞான முதலியாரும் திரும்பிப் பார்த்தார்; முதலில் உள்ளே நுழைந்த வேலைக்காரனுக்குப் பின்னால், பெருத்த பிரபுவைப் போலக் காணப்பட்ட ஒருவர் பிரசன்னமானார். அவருக்குச் சுமார் 45-வயதிருக்கலாம். அவர் நல்ல சிவப்பான மேனியும் அழகிய வசீகரமான முகமும் பெற்றிருந்தார்; விலை

உயர்ந்த துல்லியமான ஜரிகை வஸ்திரங்களையும், தங்கச் சங்கிலி உள்ள கடிகாரத்தையும், விலையுயர்ந்த மோதிரங்களையும் அவர் அணிந்திருந்தார்; கன்னங்கரேலெனக் கருத்திருந்த மீசைகள் அவரது முகத்திற்கு ஒருவித கம்பீரத்தையும் வீரத்தையும் முரட்டுத் தனத்தையும் உண்டாக்கின ஆனாலும், அவரது செவிகளில் நக்ஷத்திரங்கள் போலச் சுடர்விட்டெரிந்த வைரக்கடுக்கன்கள் அந்த முகத்தில் ஒருவித இனிமையையும், குளிர்ச்சியையும், ஜ்வலிப்பை யும் உண்டாக்கின. அவரது உடம்பின் மிருதுத்தன்மையும், இயற்கையான வசீகரமும், அவர் பிறப்பு முதலே செல்வாக்கி லிருந்து வந்தவர் என்பதைக் காண்பித்தன. அவருக்குப் பின்னால், ஒரு ஸ்திரீயும் தொடர்ந்து வந்தாள். அந்த மாதின் வயது சுமார் 35-இருக்கலாம். சிவந்த கட்டான கொழுத்த சரீரமும், வசீகரமான பரந்த முகமும் பெற்றிருந்த அந்த மாது உச்சி முதல் உள்ளங்கால் வரையில் சிறந்த ஆபரணங்களையும் ஜரிகைகள் நிறைந்த பட்டாடைகளையும் அணிந்து ஒரு ராஜாத்தி போல நடந்து வந்தாள். அவள் இயற்கையிலேயே செல்வமும் செழிப்பும் வாய்ந்தவள் என்பதை, அவளது விலாப்பக்கங்களிலும் ஏற்பட்டிருந்த அழகிய சதை மடிப்புகளும், அன்ன நடையைப் பழித்த உத்தமஜாதி நடையும், பிறரைக் காணும் போது தானாகவே ஏற்படும் நாணம், மடம், அச்சம், பயிர்ப்பென்ற விலைமதிப்பற்ற குணங்களும், முகத்தின் களையும், மான் போன்ற கபடமற்ற பார்வையும் நன்றாக விளக்கின. அந்தப் பெண்மணிக்குப் பின்னால் நான்கு தாதிகள் பெருத்த பெருத்த வெள்ளித் தட்டுகளில் தாம்பூலம், கற்கண்டு, சர்க்கரை, பழவகைகள், பனாரீஸ் பட்டுப் புடவை, விலையுயர்ந்த ரவிக்கைகள் முதலிய ஏராளமான சுபகாரிய சாமான்களை எடுத்துக் கொண்டு வந்தனர். அவர்களுக்குப் பின்னால், அந்த பங்களாவின் தாதிகளுள் சிலரும் தொடர்ந்து வந்தனர்.

அவ்வாறு எதிர்பாரா வகையாக வந்த விருந்தாளிகளையும், வரிசைகளையும் கண்ட கலயாணியம்மாள் பெருத்த வியப்பும் பிரமிப்பும் பேரச்சமும் நடுக்கமும் அடைந்தவளாய் அப்படியே ஸ்தம்பித்து நிற்க, ஜெமீந்தாரினது உறவினரான மனிதர் வருவதைக் கருதியும், முக்கியமாக, யாரோ பெரிய மனிதர் வீட்டுப் பெண்

போல் வருவதைக் கருதியும், சிவஞான முதலியார் விரைவாகத் தமது ஆசனத்தை விட்டெழுந்து மிகுந்த வணக்க வொடுக்கத்தோடு ஒரு பக்கமாக ஒதுங்கி நின்ற வண்ணம், முன்னால் வந்த மனிதருக்கு நமஸ்காரம் செய்து, "வாருங்கள் வாருங்கள். இப்படி உட்காருங்கள்" என்று மிகுந்த அன்போடு உபசரித்து, அவரை ஒரு சாய்மான சோபாவில் உட்கார வைக்க, அது போலவே, கல்யாணி யம்மாள் தனது இயற்கையான நாணத்தையும் கிலேசத்தையும் உத்தம ஜாதி ஸ்திரீகளினது வசீகரமான தன்மைகளையும் தோற்றுவித்து, விருந்தாளியாக வந்து ஸ்திரீயை அந்தரங்கமான அன்போடு உபசரித்ததன்றி, கட்டிலிற்கு மறைவில் போடப் பட்டிருந்த ஒரு சோபாவில் அவளை உட்காரச் செய்தாள். அவர்களோடு வந்த தாதிகள் தாங்கள் கொண்டு வந்த வரிசைகளை எல்லாம் மிகவும் மரியாதையாகவும் வணக்க வொடுக்கத்தோடும் கல்யாணியம்மாளுக்கெதிரில் நீட்ட, அந்தச் சீமாட்டி தனது சிரத்தின் அசைப்பால் அவைகளை ஏற்றுக் கொண்ட வண்ணம் புன்னகையாகத் தனது தாதிகளை நோக்கி, அவர்கள் அந்தத் தட்டுகளை வாங்கி ஒரு பக்கத்தில் வைத்தனர்.

விருந்தினராக வந்த அந்த மனிதர் சிவஞான முதலியாரை உட்காரச் செய்து, "இந்த சமஸ்தானத்தின் போஷகர்களில் ஒருவரான வக்கீல் முதலியாரும் எஜமானியம்மாள் அவர்களும் பேசிக் கொண்டிருப்பதாக வேலைக்காரர்கள் சொன்னார்கள். நாங்கள் தங்களுடைய சமூகத்தை அறிந்து கொள்ளாமலே உள்ளே வந்து விட்டோம். அதனால் தங்களுக்கு வேலைக் குந்தகம் ஏற்பட்டிருக்கும்" என்று உபசார வார்த்தை கூறிய வண்ணம் தமது சட்டைப் பையிலிருந்து ஒரு கடிதத்தை எடுத்து நீட்டினார். அதை மிகுந்த மரியாதையோடு வாங்கிய முதலியார் அந்தக் கடிதத்தைப் பார்த்தவுடன், அதைக் கொண்டு போய்க் கல்யாணியம்மாளிடம் கொடுக்கும்படி ஒரு தாதியிடம் நீட்ட, அவள் அவ்வாறே கொண்டு போய்க் கொடுத்தாள். அந்தக் கடிதத்தைக் கல்யாணியம்மாள் வாங்கிப் பார்க்கவே, அவளது முகம் சடக்கென்று மாறுபட்டுப் பிரேதக்களை அடைந்தது. அடிவயிற்றில் பெருத்த நெருப்பு விழுந்தது; மூளை குழம்ப, அறிவு மழுங்கியது; தேகம் வெடவெட வென்று நடுங்க ஆரம்பித்தது. ஆனாலும், அவள் ஏதோ அவசர

மான ஒரு காரியத்தை அப்போதே நினைத்துக் கொண்டவள் போல தாதி பொனனம்மாளை அழைத்துக் கொண்டு தனது இரும்புப் பெட்டியண்டை ஓடி அதற்குள் இருந்த ஏதோ ஒரு வஸ்துவை அவளிடம் கொடுத்து, ஏதோ செய்தி சொல்லி அனுப்பி விட்டு, மறுபடி ஓடி வந்து கட்டிலண்டை நின்றாள். அந்தச் சீமாட்டி அவ்வாறு போய்விட்டு வருவதற்குள், அவள் தனது சஞ்சலங்களை எல்லாம் ஒருவாறாக அடக்கிக் கொண்டவளாய் சிவஞான முதலியாரைப் பார்த்து மிருதுவாகப் பேசத் தொடங்கி, "இவர்கள் தான் ராமலிங்கபுரத்து எஜமானரா?" என்று ஐயவினா வாகக் கேட்க, உடனே அந்த விருந்தாளி, "இல்லை. நான் அவர் களுடைய தம்பி; அதோ உட்கார்ந்திருப்பது என்னுடைய சம்சாரம்; என்னுடைய தமயனாா தேக அசௌக்கியமாக இருப்பதால், அவர்கள் வரச் சரிப்படவில்லை. பெண்ணையும் பார்த்துவிட்டு, தாங்கள் கொடுப்பதாக எழுதியிருக்கும் லக்னப் பத்திரிகையையும் வாங்கிக் கொண்டு வரும்படி அவர்கள் எங்களை அனுப்பினார்கள்" என்று சொன்னார்.

அந்த வார்த்தைகள் பெருத்த இடிபோலப் பாய்ந்து கல்யாணி யம்மாளது மனதைத் தாக்கியது. அந்த அசந்தர்ப்பமான பெருத்த அவகேட்டிலிருந்து தான எப்படித் தப்புகிறது என்ற மலைப்பும் அச்சமும் கொண்ட அநதச் சீமாட்டி சந்தோஷமும் இனிமையும் ஒருவிதக் கிலேசமும் தோற்றிய முகத்தினளாய், "தங்களை எல்லாம் பார்க்க நேர்ந்தது நிரம்ப சந்தோஷமாயிற்று. இன்னமும் தங்களுடைய தமயனார், அவர்களுடைய தேவியார் முதலிய எல்லோரையும் பார்க்கும்படியான ஒரு பாக்கியம் வெகு சீக்கிரத்தில் கடவுளின் கிருபையால் எங்களுக்குக் கிடைக்கும் என்று நம்பு கிறேன். அங்கே இருந்து மனுஷ்யாள் இனறைய தினம் அவசியம் வருவார்கள எனறு நாங்கள் எதிர்பார்த்தோம். இதுவரையில் வரவிலலை ஆகையால், உடனே அவசரத் தந்தியொன்று அனுப்ப வேணடும் என்று இபபோது தான் நாங்கள் யோசனை செய்து கொண்டிருநதோம்; அதற்குள் தாங்களும் வந்தீர்கள்' என்றாள்.

அதைக் கேட்ட ராமலிங்கபுரம் இளைய ஜெமீந்தார், சந்தோஷத் தினால் மலர்ந்த முகத்தினராய்க் கல்யாணியம்மாளை நோக்கி, "தங்களுடைய கடிதம் எப்போது வரப் போகிறதென்று நாங்கள்

எதிர்பார்த்திருந்தவர்கள் ஆயிற்றே. அப்படி இருக்க, நாங்கள் வராமல் இருப்போமா? இன்னும் தாங்கள் தந்தியொன்று அனுப்ப வேண்டுமா? லக்னப் பத்திரிகை தயாராக இருக்கிறதல்லவா?" என்று இனிமையாகக் கூறினார். கல்யாணியம்மாள், ஏதோ ஒரு புளுகைச் சொல்கிறாள் என்றும், அவள் தாறுமாறாகப் பேச்சில் மாட்டிக் கொள்வாளோ என்றும் சிவஞான முதலியார் நினைத்துப் பெரிதும் தத்தளித்திருந்தார். அப்போது கல்யாணியம்மாள் இளைய ஜெமீந்தாரை நோக்கி, "இன்று காலையில் நாங்கள் லகனப் பத்திரிகை தயார் செய்வதாகத்தான் எண்ணியிருந்தோம். நேற்று ராத்திரி பெண்ணின் உடம்புக்குக் கொஞ்சம் அசௌக்கியம் ஏற்பட்டது. இன்று காலையில் அவள் குணமடைந்து விடுவாள் என்று நினைத்தோம். ஆனால், அவளுடைய அசௌக்கியம் அதிகப்பட்டிருக்கிறது; வைத்தியர் வந்து பார்த்து, முகூர்த்த நாள் குறிப்பதைக் கொஞ்சம் ஒத்தி வைக்கும்படி சொனனார். இநத விஷயத்தைத் தங்களுக்குத் தந்தி மூலமாகத் தெரிவித்து, மறுபடி யும் நாங்கள் எழுதும் கடிதத்தைப் பார்த்துக் கொண்டு புறப்பட்டு வரலாம் என்று தங்களைக் கேட்டுக் கொள்ள நினைத்தோம். இன்று பகலுக்குள் மனிஷ்யாள் வராவிட்டால், தங்களை அனுப்பலாம் என்று எண்ணினோம்" என்று நயமாகக் கூறினாள்.

அதைக் கேட்ட ஜெமீந்தார், "ஓகோ! அப்படியா! பெண்ணுக்கு உடம்பு அசௌக்கியமாகவா இருக்கிறது! சரி; அப்படியானால் குணமடைந்த பிறகு முகூர்த்த நாள் வைத்துக் கொள்ளுவோம்; பெண் தேக அசௌக்கியத்தோடு இருப்பது நிச்சயந்தானே? அது தான் உண்மையான காரணமா? அல்லது, வேறே ஏதாவது குந்தக முண்டா? அப்படி இருந்தாலும் மனசைவிட்டுச் சொல்லி விடுங்கள்; நாங்கள் இந்த ஆசையை விட்டுவிடுகிறோம்" என்று புன்னகை யோடு நயமாகக் கூறினார்.

அதைக் கேட்ட கல்யாணியம்மாளது நெஞ்சம் திடுக்கிட்டு, பல வகையில் சந்தேகப்பட்டது. இருந்தாலும், அந்தச் சீமாட்டி அவரை நோக்கி, "என்ன அப்படி பேசுகிறீர்களே! நாங்கள் இவ்வளவு தூரம் எழுதிவிட்டு இனி பிறழ்வோமா? அது ஒருகாலுமில்லை. பெண் தேக அசௌக்கியமாக இருப்பதே காரணம்; வேறொரு காரணமும்

இல்லை. குணப்பட்ட உடனே மறுபடியும் அவசியம் உங்களுக்குக் கடிதம் எழுதி அனுப்புகிறோம்" என்றாள்.

அதைக் கேட்ட ஜெமீந்தார், "நான் அப்படி சந்தேகமாகக் கேட்பதைப் பற்றித் தாங்கள் ஆயாசப்படக் கூடாது. அதற்கும் ஒரு காரணமிருக்கிறது. தங்களுடைய கடிதம் எங்களுக்குக் கிடைத்த அதே தபாலில் எங்களுக்கு இன்னொரு கடிதமும் வந்தது; அதில் இருந்த விஷயங்களைப் பார்த்த முதல், மனசில் ஒருவித சஞ்சலம் இருந்து வந்தது. அதனால் நான் அப்படிக் கேட்க நேர்ந்தது; அந்தக் கடிதம் இதோ இருக்கிறது பாருங்கள்" என்று கூறிய வண்ணம் தனது சட்டைப் பையிலிருந்த இன்னொரு கடிதத்தை எடுத்து நீட்ட, ஒரு தாதி அதை வாங்கி கல்யாணியம்மாளிடத்தில் கொடுத்தாள்.

கல்யாணியம்மாள் அந்தக் கடிதத்தைப் பிரித்துப் பார்க்க, அதன் எழுத்துக்கள் துரைஸானியம்மாளால் எழுதப்பட்டவை யாக இருக்கக் கண்டு பெருத்த கவலையும் கலக்கமும் அடைந் தவளாய் அதைப் பார்க்கலானாள். அது அடியில் வருமாறு எழுதப்பட்டிருந்தது:-

மதுரை ஜில்லாவில் உள்ள ராமலிங்கபுரம் ஜெமீந்தார் அவர்கள் சமூகத்துக்கு,

மாரமங்கலம் ஜெமீந்தாருடைய மூத்த புத்திரியான துரைஸானி யம்மாள் என்ற பெண்ணை உங்களுடைய மூத்த குமாரருக்குக் கலியாணம் செய்து கொள்ள வேண்டும் என்று நீங்கள் பிரஸ்தா பித்த சமயத்தில் மாரமங்கலம் ஜெமீந்தாரிணியம்மாள் இடத்தி லிருந்து இன்று உங்களுக்கு ஒரு கடிதம் வருகிறது. அவர்கள் இந்தக் கலியாணத்துக்கு இணங்கி விட்டதாகவும், முகூர்த்தப் பத்திரிகை வாங்கிக் கொண்டு போக மனிதரை அனுப்பும்படி யாகவும் எழுதி இருக்கிறார்கள்.

அந்த விஷயத்தில் ஒரு ரகசியமான சங்கதியை நீங்கள் அறிந்து கொள்ள வேண்டியது அதியாவசியமாக இருக்கிறது. மாரமங்கலத் தாருடைய பங்களாவில் மோகனரங்கன் என்ற ஓர் அழகான யௌவனப் புருஷன் இருக்கிறான். துரைஸானியம்மாள் என்னும்

அந்தப் பெண், அந்த வடிவழகனிடத்தில் அபாரமான மோகங் கொண்டு அதே பைத்தியமாக இருப்பதன்றி, அவனைத் தவிர, வேறு எவனையும் கலியாணம் செய்துகொள்ள மாட்டேன் என்று மறுத்து விட்டாள். இன்று பகலில்; அந்தப் பையனும், பெண்ணும் அவளுடைய அறையில் தனிமையாக இருந்த சமயத்தில், ஜெமீந் தாரிணியம்மாள் அதை நேரில் கண்டு, பெண்ணைக் கண்டிக்க, பெண் வீட்டைவிட்டே போகிறேன் என்று சொல்ல, அதன் மேல் அந்த அம்மாள் பயந்து கொண்டு, பெண்ணை அறைக்குள் வைத்துப் பூட்டிவிட்டு உங்களுக்கு உடனே கடிதம் எழுதி இருக்கிறார்கள். அந்தப் பையனையும், இந்த பங்களாவை விட்டு எங்கேயோ அனுப்பி விட்டார்கள். அந்தப் பெண் தன்னுடைய உயிர் போவதானாலும் அந்த மோகனரங்கனைத் தவிர வேறொரு வனைக் கலியாணம் செய்து கொள்ளக் கூடாதென்றும் வற்புறுத் தினால், ரகசியமாக ஓடிப் போவதற்கும் உறுதி செய்து கொண் டிருக்கிறாள். நீங்கள் நாளைய தினமே ஒரு மனுஷ்யாளை ரகசியமாக அனுப்பிப் பார்த்தால், பெண்ணைச் சிறையில் வைத்திருப்பது தெரியும். பெண்ணினிடத்தில் பேசிப் பார்த்தாலும், அவள் உண்மையை வெளியிட்டு விடுவாள். ஆகையால், நீங்கள் உடனே மனிஷ்யாளை அனுப்பி விசாரித்துப் பார்த்துக் கொண்டு, உங்களுடைய முடிவைத் தெரிவியுங்கள். அவசரப்பட்டுக் காரியம் செய்வீர்களானால், உங்களுக்கு அவமானமும் பணச் செலவும் ஏற்படுவதொன்று தான் நிச்சயமாக மிஞ்சும். பெண் கலியாணப் பந்தலுக்கு வரப் போகிறதில்லை.

இபபடிக்கு,
ஓர் எதிர்பாரா நண்பன்

– என்று எழுதப்பட்டிருந்த கடிதத்தைப் படித்துக் கொண்டு போன போதே, கல்யாணியம்மாள் துரைஸானியம்மாளே அதை எழுதி அனுப்பி இருக்க வேண்டும் என்பதை முன்னிலும் அதிக உறுதியாக நிச்சயப்படுத்திக் கொண்டாள். அந்த மகா அசங்கியமான கடிதத்தைப் படித்துக் கொண்டே போவது கல்யாணியம்மாளுககு விஷத்தை மேன்மேலும் தின்பது போல இருந்தது. அதை முடித்த உடனே அந்த அம்மாளது மனம் எப்படி இருந்திருக்கும் என்பதை யூகித்துக் கொள்ள வேண்டுமேயன்றி, விவரித்துச் சொல்வது பரம

அசாத்தியமான காரியம். சகிக்க இயலாத அவமானத்தினால், அந்தச் சீமாட்டியினது எண்சாண் உடம்பும் ஒரு சாணாகக் குன்றிப் போய்விட்டது. முகம் மிகவும் விகாரமடைந்து கீழே கவிழ்ந்தது. அவள் இரண்டொரு நிமிஷ நேரம் திகைத்து திக்பிரமை கொண்டு பேச்சு மூச்சற்றுக் நின்றாள். ஆனால், தான் அவ்வாறு நிற்பது சந்தேகத்திற்கு இடங்கொடுக்கும் என்று நினைத்தவளாய் அந்த அம்மாள் ஜெமீந்தாரை மிகவும் விசனமாக நோக்கி, "இந்தக் கடிதம் எழுதியனுப்பிய மனதரை என்னவென்று சொல்வது! ஒரு வீட்டில் பெண் இருந்தால், அதை யாராவது ஒருவருக்குத் தான் கட்டிக் கொடுக்க முடியும். பெண் பார்க்க வரும் எல்லோருக்கும் ஒருத்தி எப்படி பெண்டாட்டியாவாள்? யாராவது ஒருவர் தான் சந்தோஷம் அடைவார்கள். மற்ற எல்லோரும் விசனப்படத்தான் நேரும். அதை மனசில் வைத்துக் கொண்டு, இப்படி எல்லாம் அயோக்கிய மான காரியம் செய்தால், அவர்கள் மனித வகுப்பையே சேர்ந்தவர் ஆகமாட்டார்கள். இதை எழுதியது யார் என்பது எனக்கு நன்றாகத் தெரியும். அதை வெளியிட எனக்கு மனமில்லை. ஏனென்றால், இப்படிப்பட்ட அயோக்கிய மனிதனும் நம்மைப் போல் ஜெமீந்தார் என்று பெயர் வைத்துக் கொண்டிருக்கிறானே என்று நீங்கள் காறித் துப்புவீர்கள். இந்த மனிதனுக்கு நாற்பது வயதாகிறது. இவனைக் கட்டிக் கொள்ள என்னுடைய பெண் சம்மதிக்கா விட்டால், அதற்காக இப்படியெல்லாம் எழுதிக் கலைத்தால், பெண்ணைக் கொண்டு வந்து இவனுடைய காலில் தள்ளுவார்கள் என்று நினைத்தான் போலிருக்கிறது. எங்களுடைய மனசுக்குப் பிடித்த இடம் கிடைக்காவிட்டால், பெண்ணைக் கிணற்றிலாவது குளத்திலாவது தள்ளுவோமேயன்றி இப்பேர்ப்பட்டவனுக்குக் கொடுக்கவே மாட்டோம். இந்தக் கடிதம் முழுதும் கட்டுப்பாடாக எழுதப்பட்ட பொய்க கடிதம். எங்களுடைய குழந்தை சகலமான நற்குணங்களும் நிறைந்த தங்கமான பெண்; நான் கீறின கீற்றைத் தாண்டி நடப்பவளன்று. தங்களுக்கு இஷ்டமானால், என்னோடு வந்து பெண்ணைப் பார்க்கலாம். அவள் காயலாவாகப் படுத்துக் கொண்டிருக்கிறாள். ஆனாலும் அவள் இப்படிப்பட்ட காரியத்தைச் செய்யக் கூடியவளா என்பது பார்வையிலேயே தெரியும்" என்று அழுத்தமாகவும் உறுதியாகவும் உருக்கமாகவும் கூறினாள்.

அதைக் கேட்ட இளைய ஜெமீந்தார் திருப்தியடைந்து அவள் சொன்ன ஒவ்வொரு வார்த்தையும் நிஜமானதாக இருக்கும் என்றே நம்பினவராய், "ஓகோ! அப்படியா சங்கதி! யாராவது விரோதிகள் தான் இப்படி எழுதியிருப்பார்கள் என்று என்னுடைய தமயனாரும் சந்தேகப்பட்டார். அதுவே நிஜமாயிற்று. அப்படியானால், நாங்கள் உத்தரவு வாங்கிக் கொள்கிறோம். குழந்தை குணமடைந்த உடனே தயவு செய்து கடிதம் எழுதுங்கள்" என்றார்.

அப்போது கட்டிலிற்கப்பால் இருந்த அவரது மனைவி கல்யாணி யம்மாளை நோக்கிப் புன்னகை செய்து மிருதுவான குரலில் பேசத் தொடங்கி, "சரி; இவ்வளவு தூரம் வந்ததுதான் வந்தோம். குழந்தையைப் பார்த்துவிட்டுப் போகிறோம்" என்று நயமாகக் கூறினாள்.

அதைக் கேட்ட கல்யாணியம்மாளினது அடிவயிற்றில் நெருப்பு விழுந்தது. மனம் அபாரமான கவலையை அடைந்தது. அந்த அம்மாள் அதுகாறும் முழுதும் பொய்களையே மிகுந்த துணிவோடு பேசிக் கொண்டு வந்ததைக் கண்டு சிவஞான முதலியார் தமக்குள்ளாக அஞ்சி நடுநடுங்கி இருந்தார், அவர்கள் பெண்ணைப் பார்க்க வேண்டும் என்ற உடனே அவரது நாடி அடியோடு வீழ்ந்து போய்விட்டது. கல்யாணியம்மாளுக்கு மறுபடியும் பெருத்த அவமானம் ஏற்படுவது நிச்சயம் என்றும், அவள் அதிலிருந்து எப்படித் தப்புவாளோ என்றும் நினைத்து அபாரமான கவலை கொண்டு தவித்திருந்தார்.

உடனே கல்யாணியம்மாள், "சரி; இனி உங்களுடைய இஷ்டத்துக்கு மாறாக நான் நடக்க மாட்டேன். வாருங்கள் போவோம்" என்று கூறிய வண்ணம் துடியாக முன்னால் நடந்தாள். விருந்தாளியாக வந்த இளைய ஜெமீந்தாரினது மனைவியும் உடனே எழுந்து கல்யாணியம்மாளுக்குப் பின்னால் நடந்தாள். அவர்களைத் தொடர்ந்து ஜெமீந்தாரும் சிவஞான முதலியாரும் சற்று தூரத்தில் வந்த தாதிகளுள் இருவர் மாத்திரம் சிவஞான முதலியாரினது உத்தரவின் மேல் அவர்களோடு கூடவே வந்தனர். அவ்வாறு அவ்விடத்தை விட்டுப் புறப்பட்டவர்கள் எல்லோரும் கோமளவல்லியம்மாள் இருந்த அந்தப்புரத்தண்டை

போய்ச் சேர்ந்தனர். கல்யாணியம்மாள் இளைய ஜெமீந்தாரினது மனைவியோடு முதலில் உள்ளே நுழைந்து அங்கே கிடந்த கட்டிலண்டை சென்றாள், சிவஞான முதலியாரும் ஜெமீந்தாரும் உள்ளே நுழைந்து சற்று தூரத்தில் விலகி நின்றபடியே கட்டிலை நோக்கினர். அந்தச் சமயத்தில் சிவஞான முதலியாரது மனம் பட்டபாடு என்னவென்று சொல்வது! அடுத்த நிமிஷத்தில் தங்களது யோக்கியதையும் மானமும் போய்விடப் போகின்றனவே என்ற அச்சமும் கவலையும் கொண்டவராய்க் குன்றிப் போய் அவர் நின்றார்.

அப்போது அங்கே கிடந்த கட்டிலின் மேல் ஒரு விநோதக் காட்சி காணப்பட்டது. கால் முதல் தலை வரையில் ஒரு சால்வையால் நன்றாக மூடிக் கொண்டு கோமளவல்லியம்மாள் படுத்திருந்தாள். அவளது முகம் முழுதும் மஞ்சள் பற்றுப் போடப்பட்டிருந்தது. அவளது பக்கத்தில் பொன்னம்மாள் உட்கார்ந்து உடம்பைப் பிடித்து விட்டுக் கொண்டிருந்தாள். அந்த நிலைமையில் கல்யாணியம்மாளும் ஜெமீந்தாரின் மனைவியும் கட்டிலை நெருங்கிய போது, கோமளவல்லியம்மாள் அப்பா அம்மா என்று முக்கி முனகி அப்புறம் இப்புறம் புரண்டு நிரம்பவும் வேதனைபட்டுக் கொண்டிருந்தாள். கட்டிலண்டை நெருங்கிய கல்யாணியம்மாள் மிகுந்த விசனமும் இரக்கமும் உருக்கமும் தோன்ற கோமளவல்லியம் மாளினது முகத்தைத் தடவிக் கொடுத்தபடி, "அடீ பொன்னம்மா! குழந்தைக்கு இப்போது உடம்பு எப்படி இருக்கிறது?" என்று கேட்க, அவள், "மின்னெக்கி இப்ப கொளந்தே ரொம்பக் கஸ்டப் படுதுங்க. இன்னொரு தரம் டாக்குட்டரெ இட்டாந்தா நல்லதுங்க; வாய் ஓயாமே முக்குது மொனகுது; பல்லெ நறநறன்னு கடிக்குது; ஒடம்பெப் போட்டு முறுக்கிக்குது; தாவம் தாவமின்னு பறக்குது. ஜன்னி தோசத்துக் குறியெல்லாம் காணுது" என்று மேன்மேலும் அடுக்கிக் கொண்டே போனாள். அதைக் கேட்ட கல்யாணியம் மாளினது கண்களில் இருந்து கண்ணீர்த் துளிகள் மளமளவென்று உதிர்ந்தன. அவள் மிகவும் பதறிப் போனவளாய், வாத்சல்யத் தோடு கோமளவல்லியை நோக்கி, "கண்ணூ துரைஸானியம்மா! கண்ணைத் திறந்து பார்; உடம்பு என்ன செய்கிறது? இதோ பார்; ராமலிங்கபுரத்திலிருந்து உன்னைப் பார்க்க வந்திருக்கிறார்கள்"

என்றாள். அதுகாறும் கண்களை மூடிக் கொண்டு, சாகப் போகிறவள் போலக் கிடந்த கோமளவல்லியம்மாள், ராமலிங்க புரத்திலிருந்து மனிதர் வந்திருக்கிறார்கள் என்ற சங்கதியைக் கேட்ட உடனே திடுக்கிட்டுத் தனது கண்களைத் திறந்து புருவத்தை உயர்த்தி விகாரப் பார்வையாக நாற்புறங்களிலும் தனது விழியைச் சுழற்றினாள்; தனக்கருகில் நின்று கொண்டிருந்த இளைய ஜெமீந் தாரிணியைப் பார்த்தவுடனே புன்முறுவல் செய்து அவர்களது வருகையைப் பற்றி சந்தோஷப்படுகிறவள் போலக் காட்டிக் கொண்டு ஒருவிதக் கிலேசமுற்றவளாய் எழுந்திருக்க முயன்றாள். அதைக் கண்ட கல்யாணியம்மாள் மிகுந்த வாஞ்சையோடு அவளைத் தடவிக் கொடுத்து, "படுத்திரு! எழுந்திருக்க வேண்டாம்; இவர்கள் வித்தியாசமாக எண்ண மாட்டார்கள். நாம் கடிதம் எழுதினோம் அல்லவா? அதற்காக, லக்கினப் பத்திரிகை வாங்கிக் கொண்டு போக வந்திருக்கிறார்கள். பத்திரிகையை எழுதிக் கொடுக்கலாமா? இவர்கள் வீட்டுக் குழந்தையைக் கட்டிக் கொள்ள உனக்குச் சம்மதந்தானா? உன் மனசில் உள்ளதை மறைக்காமல் வெளியிடு" என்றாள்.

அதைக் கேட்ட கோமளவல்லியம்மாள் மிகுந்த நாணமடைந்த வளாகக் காணப்பட்டாள் ஆனாலும், மகிழ்ச்சியும் புன்னகையும் தோன்றிய முகத்தினளாய், "நீங்கள் எல்லோரும் பார்த்து என்னை எங்கே கட்டிக் கொடுத்தாலும் அதை நான் சந்தோஷமாக ஏற்றுக் கொள்ள வேண்டியவள். உங்களுடைய இஷ்டம் போலச் செய்யலாம். இதைப்பற்றி என்னைக் கேட்கவும் வேண்டுமா! எனக்கு அவ்வளவு சுதந்தரமும் அதிகாரமும் வந்துவிட்டனவா!" என்று கூறிய வண்ணம் அயர்ந்து மயங்கிக் கண்களை மூடிக் கொண்ட வண்ணம் தனது கைகள் இரண்டையும் நீட்டித் தனது தாயை மிகுந்த வாத்சல்யத்தோடு கட்டி அணைத்த வண்ணம் உறக்கத்தில் ஆழ்ந்து விட்டாள்.

உடனே கல்யாணியம்மாள் தனது புதல்வியினது முகத்தை அன்போடு தடவிக் கொடுத்து அதைத் தலையணையில் நன்றாக வைத்துப் போர்த்திய பின் பொன்னம்மாளைப் பார்த்து, "சரி; குழந்தையை அதிகமாக அலட்டக் கூடாது. நீ ஜாக்கிரதையாக பார்த்துக் கொண்டிரு. டாக்டருக்கு ஆள் அனுப்புகிறேன். இவர்கள்

நின்று கொண்டிருக்கிறார்கள்" என்று கூறிய வண்ணம் ஜெமீந் தாரிணியின் பக்கம் திரும்பினாள்.

கோமளவல்லியினது அழகையும், நற்குணத்தையும், அடக்க ஒடுக்கம் பணிவு முதலிய உத்தம லக்ஷணங்களையும், அவள் தனது தாயினிடத்தில் வைத்துள்ள வாத்சல்யத்தையும் கண்டு, விருந்தாளிகள் இருவரும், அவள் நல்ல உத்தமஜாதிப் பெண் என்றும், தங்களுக்கு வந்த கடிதம், கல்யாணியம்மாள் சொன்ன படி, யாரோ ஒரு பகைவனால் எழுதப்பட்ட அபாண்டமான பொய்க் கடிதம் என்றும் எண்ணிக் கொண்டதன்றி, அப்படிப் பட்ட அருங்குணமணி தங்களது வீட்டிற்கு நாட்டுப் பெண்ணாக வரப்போவதைப் பற்றி அளவில்லாத பெருமையும், சந்தோஷ மும், ஆனந்தமும் அடைந்தவர்களாயினர். அந்த விநோதக் காட்சி யைக் கண்ட சிவஞான முதலியாரது மனம் கரைகடந்த ஆனந்தத் தினால் பொங்கிப் பூரிப்படைந்தது; கல்யாணியம்மாள் மகா தந்திர சாலியென்றும், புதிதாக வந்தவர்களை மிகவும் சாமர்த்தியமாக ஏமாற்றிவிட்டாள் என்றும், உண்மையிலேயே தேக அசௌக்கி யத்தோடிருந்த கோமளவல்லியம்மாளை துரைஸானியம்மாள் என்று ஆள்மாறாட்டம் செய்து விட்டாள் என்றும் நினைத்து மிகுந்த உற்சாகமும் துணிவும் அடைந்தவராக நின்றார். உடனே கல்யாணியம்மாள் விருந்தினரையும் மற்றவரையும் அழைத்துக் கொணடு அவ்விடத்தை விட்டுத் தனது அந்தப்புரத்திற்குப் போய்ச் சேர்ந்தாள்.

அப்போது, இளைய ஜெமீந்தார் மிகுந்த திருப்தியும் சந்தோஷ மும் ஜ்வலித்த முகத்தினராய்க் கல்யாணியம்மாளை நோக்கி, "எங்களுக்கு நேரமாகிறது; நாங்கள் உத்தரவு வாங்கிக் கொள்ளு கிறோம். குழந்தையின் உடம்பை ஜாக்கிரதையாகப் பாருங்கள்; உடனே முகூர்த்தப் பத்திரிகை தயாரித்து அனுப்புங்கள். நாங்கள் இதே உறுதியாக எண்ணிக் கொண்டிருப்போம்; அந்தக் கடிதம் எவனோ ஓர் அயோக்கியனால் எழுதப்பட்டதென்பதைப் பற்றிக் கொஞ்சமும் சந்தேகமில்லை" என்றார்.

அதைக் கேட்ட கல்யாணியம்மாள் உடனே அவர்கள் இருவருக் கும் சந்தனம், தாம்பூலம், பழங்கள், புடவை, வேஷ்டி முதலிய

வைகளை வழங்கி பதில் மரியாதை செய்து அவர்களுக்கு விடை கொடுக்க, அவர்கள் மிகுந்த மகிழ்ச்சி அடைந்தவர்களாய் அவ் விடத்தை விட்டுச் சென்றனர்.

வெளிவாசல் வரையில் அவர்களோடு கூடவே போய், வழி அனுப்பி அவர்களை வண்டியில் ஏற்றிவிட்டு சிவஞான முதலியார் மிகுந்த சந்தோஷமும் உற்சாகமும் கொண்டவராகத் திரும்பி வந்து சோர்ந்தார். கல்யாணியம்மாள் களைத்துப் போய் ஒரு சாய்மான நாற்காலியில் சாய்ந்திருந்தாள். அப்போது உள்ளே வந்த சிவஞான முதலியார் அந்த அம்மாளை நோக்கிப் புன்னகை செய்தவராய், "பேஷ்! நல்ல தந்திரம் செய்தீர்கள்! உங்களுடைய சாமர்த்தியம் யாருக்கும் வராது! முதலில் நான் நிரம்பவும் பயந்துவிட்டேன். கோமளவல்லியம்மாளுக்கு உடம்பு அசௌக்கியமாக இருக்கிற தென்பதும் எனக்குத் தெரியாது; துரைஸானியம்மாளுக்குப் பதிலாகக் கோமளவல்லியம்மாளைக் காட்டப் போகிறீர்கள் என்பதும் எனக்குத் தோன்றவில்லை, ஆகையால், நான் எவ்வளவு தூரம் பயந்து நடுங்கிவிட்டேன் தெரியுமா? நல்ல வேளையாக, எல்லாம் நன்மையாகவே முடிந்து போயிற்று. இல்லாவிட்டால், நமக்கு எவ்வளவு பெருத்த அவமானம் ஏற்பட் டிருக்கும் தெரியுமா? என்னவோ அந்தக் கடவுள் தான் உங்களுக்குச் சமயத்தில் இந்தப் புத்தியைக் கொடுத்தார்" என்று கூறிய வண்ணம் ஒரு நாற்காலியின் மேல் உட்கார்ந்தார்.

அந்தச் சமயத்தில் அந்த அந்தப்புரத்தின் பின்புற வாசற்கதவு திறக்கப்பட்டது; பொன்னம்மாள் முன்னும் கோமளவல்லியம் மாள் பின்னுமாக உள்ளே நுழைந்தார்கள். போர்வை, பற்று முதலிய எதுவும் கோமளவல்லியின் மேல் காணப்படவில்லை. அவள் வந்ததைக் கண்ட கல்யாணியம்மாள் தனது நாற்காலியை விட்டெழுந்து பாய்ந்து குழந்தையைக் கட்டித் தூககி முத்தமிட்டு, "ஆ! என் கண்ணெ! என் தங்கமே! உனக்குச் சமானமான பெண்ணை இந்த உலகத்தில் வேறே யாராவது பெற்றிருப்பாகளா என்பதே சந்தேகம்! மூத்த பெண்ணினால் எனக்கு ஏற்பட இருந்த அவமானத்திலிருந்து நீ என்னைக் காப்பாற்றாவிட்டால், இந்நேரம் நான் நாக்கைப் பிடிங்கிக் கொண்டு இறந்து போயிருப்பேன்.

பொன்னம்மாளிடத்தில் நான் இரண்டொரு வார்த்தை தான் சொல்லி அனுப்பினேன்; நீ அந்த மாதிரி நடப்பாயோ மாட்டாயோ என்று நான் கடைசி வரையில் பயந்து கொண்டே இருந்தேன்; நல்ல வேளையாக நீ சரியாகவே நடந்து கொண்டாய்; எனக்கு வந்த இத்தனை துன்பங்களுக்கும் துயரங்களுக்கும் மத்தியில் நீ ஒருத்தி தான் எனக்கு ஒப்பற்ற நிதிக்குவியல் போல இருந்து, என் மேல் அளவற்ற வாஞ்சை வைத்து எனக்கு உண்டாகும் சுகதுக்கங் களை எல்லாம் உன்னுடைய சுகதுக்கங்களாக மதித்து நடந்து கொள்ளுகிறாய். பெற்றவரின் மனம் போல நடந்து கொள்ளும் குழந்தைகளே உத்தம ஜாதிக் குழந்தைகள். அவர்களுக்கு ஈசுவரன் ஒரு குறைவையும் வைக்கமாட்டான். நீ நல்ல இடத்தில் வாழ்க்கைப் பட்டு, தீர்க்க சுமங்கலியாகவும் அமோகமாகவும் வாழ வேண்டும். அந்தப் பெண்ணும பிள்ளையும் இனி எக்கேடு கெட்டாலும் எனக்குக் க்வலையில்லை. நீ மாத்திரம் எப்போதும் இதே மாதிரி பரிசுத்தமான நடத்தை உடையவளாக இருக்க வேண்டும்" என்று கூறிய வண்ணம் இன்னொரு தரம் வாத்சல்யத்தோடு அவளை ஆலிங்கனம் செய்து உச்சி முகந்து விடுத்தாள். கோமளவல்லி யம்மாள் வியாதியாய் இருப்பதாக அவ்வளவு சாகசம் செய்தாள் என்பதை அப்போதே உணர்ந்த சிவஞான முதலியார் வியப்பும் திகைப்பும் கரைகடநத மகிழ்ச்சியும் அடைந்தவராகச் சிறிது நேரம் இருந்த பின் தமக்கு நேரமாகிறதென்று சொல்லி விடைபெற்றுக் கொண்டெழுந்தார்.

அந்தச் சமயத்தில் அவரது பார்வை அவருக்குப் பக்கத்திலிருந்த மேஜையின் மீது உடைக்கப்படாமல் கிடந்த ஒரு ரிஜிஸ்டர் காகிதத் தின் மேல் சென்றது. அதன்மேல், அனுப்பு:- அருணகிரிப் பிள்ளை, பி.ஏ. பி.எல்., வக்கீல் மைலாப்பூர் என்று எழுதப் பட்டிருந்ததைக் கண்டு, சிவஞான முதலியார் மிகவும் வியப்புற்று, "இதென்ன வக்கீல் நோட்டீஸ் மாதிரி இருக்கிறதே! இது எப்போது வந்தது?" என்று கேடட வண்ணம் அதைக் கையில் எடுத்தார். அதைக் கேட்டு திடுக்கிட்டுத் திரும்பிப் பார்த்த கல்யாணியம்மாள், "ஓகோ! அது நேற்றைக்குக் காலையில் வந்ததாயிற்றே. நக்ஷத்திரத் தரகனுடைய கடிதத்தை வாசித்தபின் வேறே எதையும் படிக்காமல் நான் வைத்து விட்டேன. அவைகளுள் இந்த ரிஜிஸ்டர் கடிதமும்

ஒன்று போலிருக்கிறது. எங்கே? இப்படிக் கொடுங்கள். படித்துப் பார்க்கலாம்" என்றாள். உடனே சிவஞான முதலியார் அதைக் கொடுக்க, கல்யாணியம்மாள் வாங்கிப் பிரித்து உள்ளே இருந்த காகிதத்தை எடுத்துப் படிக்கலானாள்.

★ ★ ★

30—வது அதிகாரம்

## பிராயச்சித்தம்

அவ்வாறு வக்கீல் நோட்டீஸைப் பிரித்து வைத்துக் கொண்டு தனது மனத்திற்குள்ளாகவே சிறிது தூரம் படித்துக் கொண்டு போன கல்யாணியம்மாள் அதில் மகா விபரீதமான சங்கதி அடங்கி இருக்கக் கண்டு, பெருத்த திகிலும் கவலையும் கொண்டாலும் அந்த விஷயம் சிவஞான முதலியாருக்குத் தெரிந்தால், தனக்கு அவமானம் ஏற்படக்கூடிய சங்கதியாதலால், அதை அவருக்குச் சொல்லாமல் எப்படி மறைக்கிறதென்று யோசனை செய்தவளாய், அப்படியே மயங்கி விழுபவள் போலத் தனது நாற்காலியிற் உட்கார்ந்து கண்மூடிச் சாய்ந்து, தனது வலக்கரத்தால் நெற்றியை அழுத்திக் கொண்டாள். அவ்வாறு இரண்டொரு நிமிஷ நேரம் இருந்த பிறகு அந்த அம்மாள் கண்களை விழித்துக் கொண்டு சிவஞான முதலியாரைப் பார்த்து, "இந்த இரண்டு தினங்களாக ஏற்பட்ட அல்லல்களினாலும் கவலைகளினாலும் எனனுடைய மனசு புண் போல இருக்கிறது. நாலைந்து வரிகள் படிக்கும் முன் மயக்கம் வருகிறது. இதில் என்ன அவசரமான சங்கதி இருந்தாலும் இருக்கட்டும். இன்றைக்கு வைத்திருந்து காலையில் பார்த்துக் கொள்ளலாம். இன்றைய கணக்குக்கு நாம் அனுபவித்த வேதனைகள் போதுமானவை. இதைப் படித்து இன்னுமொரு புதிய சங்கடத்தை விலைக்கு வாங்க வேண்டாம். இதை நாளைய கணக்குக்கு வைத்துக் கொள்வோம்" என்று உருக்கமாகவும் பரிகாசமாகவும் கூறினாள்.

அதைக் கேட்ட சிவஞான முதலியார் அதைப் பற்றி எவ்வித சந்தேகமும் கொள்ளாதவராய் விடைபெற்றுக் கொண்டு எழுந்து போய்விட்டார்.

உடனே கல்யாணியம்மாள் சிற்றுண்டி, காப்பி முதலியவை களைத் தருவித்து கோமளவல்லியம்மாளுக்கும் கொடுத்துத் தானும் உண்டபின் புஸ்தகம் படித்துக் கொண்டிருக்கும்படி தனது புதல்வியைப் பக்கத்திலிருந்த கூடத்திற்கு அனுப்பிவிட்டு ஓய்ந்து தளர்ந்து தனது பஞ்சணையின் மேற் படுத்த வண்ணம் வக்கீல் நோட்டீஸை எடுத்து வைத்துக் கொண்டு மனதிற்குள்ளாகவே படிக்கலானாள். அதை மறுநாள் படித்துக் கொள்ளலாம் என்று சற்று நேரத்திற்கு முன் சிவஞான முதலியாரிடத்தில அலட்சியமாகக் கூறினாள் ஆனாலும், அவளது மனம் அதே நினைவும் கவலையும் கலக்கமும் அடைந்திருந்தமையால், தான் தனியாக விடுபட்டவுடனே அதை எடுத்து வைத்துக் கொண்டு படிக்கத் தொடங்கினாள்; அது அடியில் வருமாறு எழுதப்பட்டிருந்தது:-

சென்னை மைலாப்பூரில் இருக்கும் வக்கீல் அருணகிரிப் பிள்ளை (பி.ஏ., பி.எல்.,) இடத்திலிருந்து தேனாம்பேட்டையில் உள்ள மாரமங்கலம் ஜெமீந்தாரிணியான மகா-ரா-ரா-ஸ்ரீ கல்யாணி யம்மாள் அவாகளுக்கு,

அம்மாள்!

சென்ற சில மாதகாலமாக உங்களுடைய பங்களாவிற்கு வந்து உங்களுடைய புத்திரிகளுககு வீணை கற்றுக் கொடுத்து வந்த மதனகோபாலன் என்னும் எனது கட்சிக்காரர் மீது நீங்கள் துர்எண்ணங் கொண்டு அவர் உங்களுடைய அந்தப்புரத்திற்குள் தனியாக வந்திருந்த ஒரு சமயத்தில், நீங்கள் அவரிடத்தில் மோகா வேசமான வார்த்தைகளை உபயோகித்து அவருடைய தேக சம்பந்தத்திற்கு ஆசைப்பட்டுப் பலவகையான முயற்சிகள் செய்த தாகவும் அவர் அதற்கிணங்காமல் தப்பித்து ஓடிவிட்டதாகவும் அவர் எனக்கு எனக்கு அறிவிக்கிறார்.

அதன் பிறகு மறுநாள பிற்பகலில் நீங்கள் அவர் தொழில் செய்யும் பங்களாக்களுக்கெல்லாம் போய், அவரைப் பற்றி அவதூறும் அபாண்டமுமான வார்த்தைகளைச் சொல்லி அவரை அவர்கள் எல்லோரும் வேலையில் இருந்து உடனே விலக்கும்படி செய்து அவருக்கு மான நஷ்டமும், பொருள் நஷ்டமும் உண்டாக்கி இருப்பதாகவும் அவர் அறிவிக்கிறார்.

அதன் பிறகு இந்த விஷயமாக அவர் உங்கள் பேரில் மேல் நடவடிக்கை எடுத்துக் கொள்ளப் போவதாக அவருடைய நண்பர் ஒருவர் மூலமாக உங்களுக்குத் தெரிவிக்க, நீங்கள் அவர்களுக்குத் திருப்திகரமான மறுமொழி சொல்லாமல் அவரை அனுப்பிவிட்ட தாகவும் அதன் பிறகு நீங்கள் கிருஷ்ணாபுரத்து இளைய ஜெமீந் தாரான துரைராஜா என்பவருக்கு, துரையம்மாள் என்ற பொய்க் கையெழுத்திட்டு, ரகசியமான இரண்டு கடிதங்கள் எழுதியதாகவும், அதன் பிறகு நீங்கள் ரென் பென்னெட்டு கம்பெனியிலிருந்து வெள்ளைக்காரியின் உடையொன்று வாங்கித் தரித்துக் கொண்டு பார்க் உத்யான வனத்திற்கு வந்து துரைராஜாவைச் சந்தித்து எனது கட்சிக்காரர் வீட்டைவிட்டு ஆறுமாத காலத்துக்கு வெளியில் வர முடியாதபடி அவருக்குத் தேகத்துன்பம் உண்டாக்கும்படி தூண்டியதாகவும், அதன்படி அவர், ஒரு நாள் இரவில் எனது கட்சிக்காரரைத் துப்பாக்கியால் சுட்டு, அவருடைய உயிருக்கே அபாயம் நேரக்கூடிய நிலைமையை உண்டாக்கி விட்டதாகவும், அதன் பலனாக என்னுடைய கட்சிக்காரர் இன்னமும் அபாயகர மான நிலைமையில் இருப்பதாகவும் தெரிவிக்கிறதோடு, மேலே குறிக்கப்பட்ட குற்றங்கள் யாவற்றையும் தாங்கள் செய்தது உண்மைதான் என்று மெய்ப்பிப்பதற்குப் போதுமான சாட்சிகள் இருப்பதாகவும் அவர் தெரிவிக்கிறார்.

ஆகையால், இந்த நோட்டீஸ் கிடைத்த ஒருவார காலத்திற்குள், நீங்கள் அவர் பேரில் சொன்ன அவதூறு பொய்யானதென்றும், அவர் எவ்விதமான தவறும் செய்யவில்லை என்றும் பத்திரிகை யின் வாயிலாக பகிரங்கமான மன்னிப்புக் கேட்டுக் கொள்வதோடு, அவருக்கு ஏற்பட்ட தேகத் துன்பத்திற்கும், உத்தியோக நஷ்டத் திற்கும், மான நஷ்டத்திற்கும் அவருக்கு இரண்டு லட்சம் ரூபாய் நஷ்ட ஈடு செலுத்த வேண்டும். இந்த வாயிதாவிற்குள் இப்படிச் செய்யத் தவறினால் உங்கள் பேரில் சிவில் தரப்பிலும் கிரிமினல் தரப்பிலும் வியாஜ்ஜியம் தொடரப்படும் என்பதை இதன் மூலமாக நான் அறிவித்துக் கொள்ளுகிறேன்.

இங்ஙனம்,

***அருணகிரி பிள்ளை***

***வக்கீல்.***

– என்று எழுதப்பட்டிருநத வக்கீல் நோட்டீசை கல்யாணியம்மாள் இரண்டு மூன்று தரம் படித்துப் படித்துப் பார்த்தாள். அதுவரையில் தனக்கு நேர்ந்த எத்தனையோ துன்பங்களைக் காட்டிலும், அந்தப் புதிய துன்பமே தனது யோக்கியதையையும், தான் விலைமதிப் பற்றதாக மதித்துக் காப்பாற்றி வரும் தனது கற்பையும் அடியோடு தொலைத்துவிடக் கூடிய மகா பயங்கரமான அபாயமாக தோன்றியது. தான் குற்றவாளியோ, அல்லது, குற்றவாளியல்லவோ என்பது ஒரு பொருட்டல்ல; அந்த அசங்கியமான விஷயம் கச்சேரி வரையில் போய் அடிபடடு, தன்னைப் பற்றி ஊர் சிரிக்கும் படியான நிலைமையை உண்டாககுமே என்பதை நினைக்க நினைக்க அநதச் சீமாட்டியினது தேகம் பதறியது. பெருத்த திகிலும், கலக்கமும், குலை நடுக்கமும் உண்டாயின. அந்த மகா வெட்கக் கேடான சங்கதியைத் தான் சிவஞான முதலியார் முதலிய வக்கீல் எவரிடத்திலாகிலும் வெளியிட்டு, அவர்கள் என்ன யோசனை சொல்லுகிறார்கள் என்பதைக் கேட்பதற்கும் அவளது மனம் இடந்தரவில்லை. தேள் கொட்டிய திருடன் போல தனது சங்கடத்தை வெளியிடவும் மாட்டாமல் மறைக்கவும் மாட்டாமல் கல்யாணியம்மாள் தவிக்கலானாள். தனது புத்திரியை இழந்த விசனத்தோடு அவள் குமாஸ்தாவோடு ஓடிப்போனாள் என்று உலகத்தார் சொல்லப் போகும் ஏச்சும் கல்யாணியம்மாளுக்குப் பெரிதாகத் தோன்றவில்லை. அத்தனை வருஷ காலமும் நல்ல பெயரெடுத்து சுத்தமாக இருந்தவளும், விதவை நிலைமையில் இருப்பவளும், வயது வந்த இரண்டு பெண்களுக்குத் தாயாக இருப்பவளுமான தானே அப்படிப்பட்ட கேவலமான இழிவிற்குப் பாத்திரமாவது அவளுக்கு சொற்பமும் இயலாத பேரிடியாக இருந்தது. ஆகவே, தான் எப்பாடுபட்டாகிலும் அந்த விஷயம் கச்சேரி வரையில் போகாமல் தடுத்துவிட வேண்டும் என்றும், அப்படிச் செய்ய முடியாவிட்டால் விஷத்தைத் தின்றாகிலும் தான் உயிரை விட்டுவிட வேண்டும் என்றும் கல்யாணியம்மாள் தனக்குள் முடிவு கட்டிக் கொண்டாள். பசவண்ண செட்டியார், துரைராஜா, மைனர் முதலியோர் அனைவரும் மதனகோபால னுக்கு அந்தக் காரியத்தில் அனுசரணையாக இருந்து விஷயங் களை ஒப்பிப்பார்கள் என்பதும் நிச்சயமாகத் தெரிந்தது. மதன

கோபாலன் சகலமான நற்குணங்களும், பெருந்தன்மை, தயாளம், இரக்கம் முதலிய நலன்களும் நிரம்பப்பெற்ற உத்தம புருஷன் ஆதலால், அவன் தனது விஷயத்தில் க்ஷமை காட்டுவதானாலும், அவனுக்கு அநுசரணையாக இருப்போர் அவனது மனதைக் கலைத்து விடுவார்கள் என்ற நினைவும் கவலையும் எழுந்து அந்த அம்மாளை வதைத்தன. கச்சேரிக்குப் போவதான பெருத்த அவமானத்திலிருந்து தப்புவதற்கு எவ்வளவு அதிகமான பணத் தொகை செலவானாலும், அதைப் பற்றிக் கவலையில்லை என்றும், தன்னால் மதனகோபாலனுக்கு ஏற்பட்ட பொருள் நஷ்டத்தைக் கருதி அவனுக்கு எவ்வளவு பணம் தேவையானாலும் கொடுத்து விடுவது ஒரு பொருட்டல்ல என்றும் அவள் நினைத்தாள். ஆனால், தான் அவனது விஷயத்தில் சொன்ன அவதூறை மறுத்துப் பொய்யென்று இப்போது உடனே ஒப்புக் கொள்வதை விடத் தனது உயிரையே விட்டுவிடலாம் என்ற நினைவே உறுதியாக உண்டாயிற்று. பசவண்ண செட்டியாரோ பெருத்த தனிகராகக் காணப்படுகிறார். அவர் பொருளை மாத்திரம் கருதி அந்த நோட்டீஸை அனுப்பியவரல்ல, தாம் பிடித்த வீம்பைச் சாதித்தே தீரவேண்டும் என்ற நினைவினாலும், மதனகோபாலன் மீது சொன்ன அவதூறு பொய் என்பதை ஒப்புக் கொண்டே தீரவேண்டும் என்ற பிடிவாதத்தினாலுமே அந்த நொண்டிச் செட்டியார் அந்த நோட்டீஸை அனுப்பச் செய்திருப்பதால், தான் பணத்தினால் மாத்திரம் அவரைத் திருப்தி செய்வது பலியாக் காரியமாகத் தோன்றியது. ஆகவே, தான் அந்தப் பரமசங்கடமான நிலைமையில் என்ன செய்வதென்பதை உணரமாட்டாதவளாகத் தாமரை இலைத் தண்ணீர் போலத் தத்தளித்து நெடுநேரம் வரையில் கல்யாணியம்மாள் தனது சயனத்திலேயே படுத்திருந்தாள்.

அவ்வாறு இரவு எட்டரை மணி நேரமாயிற்று. அப்போது ராத்திரி போஜனத்திற்கு அழைப்பதற்காகப் பொன்னம்மாள் அங்கே வந்து சாப்பாட்டு வேளை ஆகிவிட்டதென்று தெரிவித்தாள்.

அதைக் கேட்ட கல்யாணியம்மாள் மிகுந்த விரக்தியோடு பேசத் தொடங்கி, "அடி போடீ! எனக்கு சாப்பாடும் வேண்டாம்; ஓர் இழவும் வேண்டாம். தினம் தினம் வேளைக்கு வேளை இந்தப்

பாழும் வயிற்றுக்குக் கொட்டிக் கொட்டி இந்த உடம்பை வளர்த்து என்ன சுகத்தைக் கண்டு விட்டோம். எனக்கு இந்தப் பூமியிலேயே இருக்கப் பிடிக்கவில்லை. எனக்குக் கொஞ்சம் விஷம் சம்பாதித்து கொடுக்கும்படியாக உன்னிடத்தில் நான் எத்தனை தடவையோ கேட்டிருக்கிறேன். அதை நீ கவனிக்கவே இல்லை" என்றாள்.

உடனே பொன்னம்மாள் அன்பாகக் கடிந்து, "ஏம்மா அப்படி சொல்றீங்க! நீங்க ஏம்மா வெசத்தெத் திங்கணும்? ஒங்கிளுக்கு தீம்பு நெனெக்கறானுவளே அவுங்களுக்கல்லவா வெசத்தெக் குடுக்க ணும். ஒங்கிளுக் கென்னம்மா அப்பிடிப்பட்ட தலெயெளுத்து வந்திச்சு. சோத்துக்கில்லியா? துணிக்கில்லியா? அவிசாரி ஆயிட் டீங்களா? அந்த ஆண்டவன் கிருவையாலெ நீங்க எப்படிப்பட்ட ஒசந்த பதவியிலே இருக்கறீங்க. நீங்க ஏம்மா சாவணும்? ஒரு பொண்ணு என்னமோ கெட்டகாரியம் பண்ணிபுட்டா அத்தோடே மத்தவங்கள்ளாம் செத்தாபூடுவாங்க. இன்னம் சின்னக் கொயந்தெ எங்கெ இருக்குது. நீங்க செத்துப்பூட்டா, அந்த கொயந்தையே ஆரம்மா கவனிப்பாங்க? அதுவும் கெட்டுப்பூடாதா? அத்தெ ஒரு நல்ல எடத்துலெ மின்னாலே கட்டிக்குடுங்க. சாவற காரியத்தெ அப்பாலெ வச்சுக்குவோம்" என்று உரிமையாகக் கண்டித்துப் பேசினாள். உடனே கல்யாணியம்மாள், "கோமளவல்லியம்மாள் இப்போது எங்கே இருக்கிறாள்?" என்றாள்.

***பொன்னம்மாள்:-*** சாப்பாட்டெ முடிச்சுக்கினு படுக்கெக்கி பூடிச்சு.

***கல்யாணியம்மாள்:-*** சரி; நல்ல காரியம். எனக்கு சுத்தமாக பசியே இல்லை. நான் பேசாமல் படுத்துக் கொள்ளுகிறேன். அது இருக் கட்டும். நேற்றைய தினம் காலையில் நீ ஆலந்தூருக்குப் போன அந்த விஷயம் எப்படி முடிந்ததென்பதை எனக்குச் சொல்லவே இல்லையே! பாலாம்பாளைத் தூக்கிக் கொண்டு போக வேண்டாம் என்று கருப்பாயியிடத்தில் சொல்லிவிட்டு வந்தாயா?

***பொன்னம்மாள்:-*** நான் ஆலந்தூருலெ அம்பட்டக் கருப்பாயி வூட்டுக்குப் போனேன். அவ ஊட்டுலெ இல்லெ. திரும்பி வருவா வருவா இன்னு காத்திருந்தேன். ராத்திரி 7-மணிக்கிக் கட்டெயன் கொறவன் அவளெத் தேடிக்கினு அங்கனெ வந்தான். மைலாப்பூர்

பங்களாவுக்குப் போயி உளவு பாத்துக்கினு இருக்கறத்துக்காவ கட்டெயன் அவளெ நேத்துப் பகல்லெயெ அனுப்பிச்சானாம். அவுனும் நேத்து ராத்திரி 8-மணிக்கு மைலாப்பூருக்குப் போனானாம். கருப்பாயி அம்பிடல்லியாம். அவளெத் தேடிக்கினு அவன் திரும்பி வந்துட்டான் வாலாம்பாளெத் தூக்கியாறவாணா முன்னு நான் அவங்கிட்ட ஒடனெ சொல்லிப்புட்டு ராத்திரி முளுதும் அவ ஊட்டுத் திண்ணெயிலெயே படித்துக் கெடந்துப் புட்டு இன்னெக்கிக் காத்தாலெதான் வந்தேன். கருப்பாயி எங்ஙன போனான்னு தெரியலெ. ஆனா, நான் போன சங்கதியெ கட்டெயங்கிட்டச் சொல்லிபுட்டேன். அவுங்க இன்னமெ வாலாம் பாளெ ஒண்ணும் செய்ய மாட்டாங்க. அதெப்பத்தி பயப்படத் தேவெயில்லெ.

***கல்யாணியம்மாள்:-*** (மிகவும் ஆத்திரமாகவும் அதிருப்தியாகவும் பேசத்தொடங்கி) நீசெய்கிற ஒவ்வொரு காரியத்திலேயும் இப்படித் தான் உறுதியாகப் பேசி பேசி பயப்பட வேண்டாம் என்று சொல்லி என் கழுத்தை அறுக்கிறாய்! உன் பேச்சைக் கேட்டு நான் ஒன்று செய்யப் போனால் அது வட்டியும் முதலுமாகப் பிரமாத மாக வந்து விளைகிறது. ஏதாவது ஒரு துன்பத்தை விலக்குவதற் காக நான் ஒரு காரியம் செய்தால், அது பிள்ளையார் பிடிக்கக் குரங்காய் முடிந்த கதை ஆகிறது. ஆரம்பத்தில் நீயும் அந்தக் கருப்பாயியும் கூடி என்னை மோசம் செய்து அந்த அம்பட்டப் பையனைக் கொண்டு வந்து என் வீட்டில் சேர்த்து வைத்தீர்கள். அவனால் எனக்கு வந்திருக்கும் அவமானங்களும் இழிவுகளும் கணக்கு வழக்கில்லை. அன்றைய தினம் அந்த துரைராஜாவின் விஷயத்தில் நீ ஏதோ குயுக்தி செய்யப் போக, குட்டிகுலைத்து நாயின் மேல் வைத்தது போல, அதுவும் இப்போது என்மேல் வந்து விளைந்திருக்கிறது. எனக்கு உண்டாக இருந்த ஒரு சின்ன அவமானத்தை விலக்குவதற்காக, நீ ஏதோ ஒரு காரியம் செய்யப் போக, அந்த அவமானத்தைவிட ஆயிரம் மடங்கு அதிகமான தலை குனிவும் இழிவும் மானக்கேடும் இப்போது வரும் போலிருக் கிறது; அந்த மதனகோபாலன் என்மேல் கச்சேரியில் வியாஜ்ஜியம் தொடரப் போகிறானாம். நான் கச்சேரிக்கு இழுபட்டு, அங்கே போய் நின்று அவமானப்படப் போகிறேன். ஊரார் எல்லாரும்

என்னைப் பார்த்துக் கைகொட்டிச் சிரித்துக் காறித் துப்பப் போகிறார்கள். அவர்களோடு நீயும் சேர்ந்து கொண்டு சந்தோஷப் படு—என்று மிகவும் குரூரமாகவும் குத்தலாகவும் மொழிந்தாள்.

அதைக் கேட்டு ஆத்திரமடைந்த பொன்னம்மாள், "ஆகா! அப்பிடியா சேதி! நோட்டீசா குடுத்திருக்கறான்! அந்த மோளக்கார நாயிக்கு அம்பிட்டு கிருவம் வந்திடுச்சா! இருக்கட்டும். அவனுக்காச்சு நமக்காச்சு; ஒரு கை பார்த்துப்புலாம்; தொரெராசா சுட்டத்துலெ அவன் தப்பிப் பொளச்சிக்கினான்னு பாத்துக்கிட்டானா இப்படி அந்தக் கட்டெயன் கொறவனே உட்டு, ஒரே ராத்திரீலே அந்த மோளக்கார நாயெக் கோளிக்குஞ்செக் கசக்கறாப்பலெ கசக்கிச் சாறு காச்சிப்புடச் சொல்றேன். நீங்க பயப்படாதீங்க. அவன அந்தக் கச்சேரிக்குள்ளறவே நொளய முடியாமெச் செய்யத்துக்கு நானாச்சு. நீங்க ஏம்மா இப்பிடி வெசனப் பட்றீங்க? நாளெக் காத்தாலெயே நான் போயி அந்தக் கட்டெயன் கிட்ட ஏற்பாடு பண்ணிபுட்டு வாறேனுங்க. நீங்க சொம்மா இருங்க" என்றாள்.

***கல்யாணியம்மாள்:-*** (மிகவும் பதைத்து விசனமுற்று) சிவ சிவா! நன்றாகச் சொன்னாய்! பொன்னம்மா! போதும் நீ செய்கிற உபகார மெல்லாம். நாம் என்னென்ன அக்கிரமங்கள் செய்தோமோ இப்படிப்பட்ட எதிர்பாராத துன்பங்களுக்கெல்லாம் ஆளாகித் தவித்து நிற்கிறோமே! இன்னமுமா அக்கிரமத்தில் இறங்குகிறது! வேண்டாமம்மா! உனக்கு ஆயிரங்கோடி நமஸ்காரம். நீ எதையும் செய்யாமல் சும்மா இருந்தால், அதுவே போதுமானது. ஐயோ பாவம்! அந்த மதனகோபாலனைக் கொல்ல யாருக்காவது மனம் வருமா? அடி பாவி முண்டை! நல்ல வார்த்தை சொன்னாயடி! அவனுக்குத் தீங்கு நினைத்து அதிலிருந்து நான் படுகிற பாடும், அடைகிற துன்பங்களும், துயரமும், அவமானங்களும் கொஞ்சமா நெஞ்சமா? ஒரு பாவமுமறியாத தங்கமான பையன் பேரில் நாம் அபாண்டமான பழியைச் சுமத்தினோமே; அவன் வயிறு பற்றி எரிந்ததனால் அல்லவா அந்தப் பாவமும் பழியும் நம்மை விடாமல் பலவகையாக வந்து பீடிகையும் கொண்டு ஆட்டுகின்றன. இதற்குத் தக்க பிராயசித்தம் செய்து அந்தப் பாவத்தை நாம் போக்கிக் கொள்வதை விட்டு அவனுக்கு இன்னமுமா கேடு

நினைக்கிறது? அவனுடைய உடம்பில் ஒட்டிய சிறு தூசிக்கும் நான் கேடு நினைக்க மாட்டேன். அவன் என்னைக் கச்சேரிக்கு இழுத்து எவ்வளவு அதிகமான இழிவுக்கும் அவமானத்திற்கும் என்னை ஆளாக்கினாலும், அவனுக்கு நான் எவ்விதத் தீங்கும் நினைக்க மாட்டேன். அவன் குணத்திலும் அமைப்பிலும் மற்ற எல்லா விஷயங்களிலும் நம்முடைய கோமளவல்லிம்மாளைப் போலவே இருக்கிறான் என்பதை நினைக்க நினைக்க அவன் விஷயத்தில் என் மனசில் உண்டாகும் வாத்சல்யம் இவ்வளவு அவ்வளவென்று சொல்லி முடியாது. அவனை நினைக்கும் போதெல்லாம் என் மனமும் தேகமும் கட்டுவிட்டு நெகிழ்ந்து உருகிப் போகின்றன. அவன் விஷயத்தில் நான் அவ்வளவு அபார மான பிரேமை வைத்திருந்தும், நான் என்னுடைய பதற்ற குணத் தினாலும் என்னுடைய கற்பைப்பற்றி பிறர் ஏதாவது தவறாக நினைத்துக் கொள்ளப் போகிறார்களே என்ற பயத்தினாலும், அவன் பேரில் அபாண்டமான அவதூறைச் சொல்லிவிட்டேன். அந்த வதையே இப்படி வந்து என்னுடைய குடும்பத்தைப் பிடித்துக் கொண்டு சீர்குலைக்கிறது. ஆகையால், நீ சொல்லும் துன்மார்க்கங்களில் இறங்க எனக்கு இஷ்டமில்லை. இப்படிப்பட்ட துஷ்டக்காரியங்களில் உன் மனம் செல்லும்படி நீ விடுவாயானால், நான் உன்னை இனி என் பக்கத்திலேயே சேர்க்கமாட்டேன். நான் கண்டித்துச் சொல்லுகிறேன். எனக்குத் தெரியாமல், நீ இந்த மதன கோபாலனுக்கு ஏதாவது தீம்பு நினைக்கப் போகிறாய்; ஜாக்கிரதை- என்று மிகவும் கண்டிப்பாகவும் கடுமையாகவும் கூறிப் பொன்னம் மாளை வெளியே அனுப்பினாள்.

அதன் பிறகு கல்யாணியம்மாள் அன்றிரவு முழுதும் பசி, தாகம், தூக்கம், சிரமம் முதலிய எதையும் பொருட்படுத்தாமல், அதே கவலையாகப் படுத்திருந்து, அந்தப் பெருந் துன்பத்தில் இருந்து தான் எப்படித் தப்புவதென்று நினைத்து வேதனைக் கடலிலாழ்ந் தும், இடையிடையே மைனரது துன்மார்க்கச் செயல்களைப் பற்றியும், துரைஸானியம்மாளால் ஏற்பட்ட அவமானத்தைப் பற்றியும் சிந்தித்தும் விசனித்தும், அவர்களால் தனக்கு இனி மேலும் என்னென்ன தீம்புகளும், அவமானமும் இழிவும் உண்டாகுமோ என்று கவலையுற்றும் நரக வேதனையில் ஆழ்ந்து

கிடந்தாள். அதற்கு முந்திய நாளிரவில் அடையாற்று பங்களாவில் அவள் பட்ட பாட்டைவிட இந்த இரவில் பன்மடங்கு அதிகமான கலவரக் கடலில் அவள் மூழ்கியிருந்தாள். அந்தக் கொடிய இரவும் கழிநதது; கல்யாணியம்மாள் மிகவும் மெலிந்து தளர்ந்திருந்தமை யால் தனது சயனத்திலிருந்து தட்டித் தடுமாறி எழுந்து தனது காலைக் கடன்களை முடித்துக் கொண்டு உடனே, தனது பெட்டி வண்டியைப் பூட்டச் செய்து, பொன்னம்மாளோடு அதற்குள் உட்கார்ந்து கொண்டு வண்டியை கோமளேசுவரன் பேட்டைக்கு ஓட்டச் செய்தாள்.

அவ்வாறு சென்ற பெட்டிவண்டி அரை நாழிகை நேரம் கோமளேசுவரன் பேட்டை **நாகப்ப முதலி தெருவிலிருந்த சுந்தர விலாஸ்** என்னும் மெத்தை வீட்டின் வாசலில் போய் நின்றது. வேலைக்காரப் பொன்னம்மா அந்த வீட்டிற்குள் போனாள். அந்த வீட்டின் சொந்தக்காரா அப்போது தான் அங்கே வந்து சில வேலைக்காரர்களை விட்டு வீட்டுக்குள் சுவர்களுக்கு வெள்ளை யடித்துக் கொண்டிருந்தார். பொன்னம்மாள் அவரைக் கண்டு அந்த வீட்டிலிருந்த வீணை வித்துவானான மதனகோபாலன் இருக்கிறானா என்று கேடக, அவன் அந்த வீட்டை காலி செய்துவிட்டு இரண்டு நாட்களுக்கு முன் மைலாப்பூர் கடற்கரையில் உள்ள மனோகர விலாஸ் என்னும் பங்களாவிற்கு இடம் மாற்றிக் கொண்டு போய்விடடதாக அந்த வீட்டின் சொந்தக்காரர் சொல்ல, அதை கேட்டுக் கொண்டே பொனனம்மாள் வெளியே போய் வண்டிக்குள் ஏறிக்கொண்டு, மைலாப்பூர் கடற்கரைக்கு ஓட்டும்படி உத்தரவு செய்துவிட்டு தான் அங்கு அறிந்து வந்த விவரத்தைக் கல்யாணி யம்மாளிடத்தில் கூறினாள். வண்டி உடனே அவ்விடத்தை விட்டுப் புறப்பட்டு மைலாப்பூரை நோக்கிச் சென்று அரை நாழிகை நேரத்தில் கடற்கரையை அடைந்தது. வண்டிக்காரன் மனோகர விலாஸம் என்ற பங்களா எங்கே இருக்கிறதென்று விசாரித்த வண்ணம் வண்டியை ஓட்டிக் கொண்டு போய் சற்று தூரத்தில் கடற்கரையின் மேலிருந்த அந்த பங்களாவைக் கண்டுபிடித்து அதன் வாசலில் வண்டியை நிறுத்தினான். பொன்னம்மாள் கீழே இறங்கி அந்த பங்களாவிற்குள நுழைந்தாள். பெட்டி வண்டியின் ஜன்னற் பலகைகளின் இடைவெளிால் அந்த பங்களாவை

நோக்கிய கல்யாணியம்மாள் வியப்பும் திகைப்பும் அடைந்தாள். ஒரு மகாராஜாவினது அரண் மனை போல இருந்த மகா உன்னதமான அந்த மாளிகையில், கேவலம் ஏழையான மதன கோபாலன் இருக்கிறான் என்பதை அவளது மனம் நம்பவே யில்லை. அந்த இடத்தில் யாராகிலும் மகாராஜா இருக்க வேண்டும் என்றும், அவர்களது குடும்பத்தைச் சார்ந்த எவருக்காவது வீணை பயிற்றிவைக்கும் பொருட்டு மதனகோபாலன் நியமிக்கப்பட்டிருக்க வேண்டும் என்றும், அவன் குடியிருப்பதற்கும் அந்த பங்களாவில் ஏதாவது ஒரு பக்கத்தில் இடம் கொடுக்கப்பட்டிருக்க வேண்டும என்றும் அந்த அம்மாள நினைத்துக் கொண்டாள்.

"ஆகா! நான் இவனுடைய பிழைப்பைக் கெடுத்து இவன் தொழில் செய்து வந்த இடங்களை எல்லாம் இழக்குமபடி செய்தேனே! அதனால் இவனுககு என்ன குறை ஏற்பட்டது? கோமளேசுவரன் பேட்டையில் ஒரு சாதாரணமான வீடடில் இருந்தவன் இப்போது ஒரு மகாராஜன் இருக்கத்தக்க அரண்மனை யில் இருக்கிறான்; முன்னைவிட இன்னமும் அதிகப் பெருமை வாய்ந்த யாரோ ஒரு தனிகரால் அபிமானிக்கப் பட்டிருக்கிறான். நானோ துன்பங்களை அனுபவித்தவளாய்த் தற்கொலை செய்து கொள்ள வழி தேடிக் கொண்டிருக்கிறேன். மனிதரை மனிதர் கெடுத்து விடுவது அவ்வளவு சுலபமான காரியம் ஆனால், இநத உலகம் கால் நிமிஷ நேரம் நிலைத்து நிற்குமா? இந்த பங்களாவைப் பார்த்து என்னுடைய பங்களாவையும் பார்த்தால், அதைக் கேவலம் ஒட்டன் தொமபனுடைய குடிசைக்கே சமானமாகச் சொல்ல வேண்டும். மதனகோபாலன் தன்னுடைய குணங்களி னாலும், அபாரமான வித்தை விசேஷத்தாலும் எங்கே போனாலும் சிறந்து விளங்குவான் என்பதற்குத் தடையே இல்லை; கற்றார்க்குச் சென்றவிடமெல்லாம் சிறப்பென்பது பொய்யாகுமா?" என்று அவள் தனக்குத் தானே எண்ணமிட்டுக் கொண்டிருந்தாள்.

அந்தச் சீமாட்டி அவ்வாறிருக்க, வண்டியை விட்டிறங்கி பங்களா விற்குள் நுழைந்த பொன்னம்மாள் அதற்குள் முன் தாழ்வாரத்தில் நின்று கொண்டிருந்த ஒரு வேலைக்காரனைக் கணடு, மதன கோபாலன் என்ற வீணை வித்துவான் இருக்கிறானா என்று

வினவினாள். மதனகோபாலன் கிருஷ்ணாபுரம் ஜெமீந்தாரினது அபிமான புத்திரனாக மதிக்கப்பட்டு அந்த பங்களாவின் எஜமான் போல இருந்து வந்தானாகையால், அவர் சாதாரணமான வீணை வித்துவானாக இருந்தான் என்பது அந்த வேலைக்காரர்களுக்குத் தெரியாது. ஆகவே, அந்த வேலைக்காரன் வீணை வித்துவான் எவனும் அந்த பங்களாவில் இல்லை என்றும், அது கிருஷ்ணா புரத்து ஜெமீந்தாரது பங்களாவென்றும் மறுமொழி கூறினான். அதைக் கேட்டு, மேலே எவ்வித மறுமொழியும் சொல்லமாட்டாமல் சிறிது தயஙகிய பின் பொன்னம்மாள் திரும்பி நடந்து, ராஜ பாட்டையில் நிறுத்தப்பட்டிருந்த வண்டியண்டை வந்து நின்று, தான் அறிந்து வந்த விவரத்தைச் சொல்ல, அதைக் கேட்ட கல்யாணியம்மாள் பெரிதும் திகைப்படைந்தவளாய், "கிருஷ்ணா புரத்து ஜெமீந்தாருக்குத் தேனாம்பேட்டையில் அல்லவா ஒரு பங்களா இருக்கிறது? இது யாரோ ஒரு மகாராஜனின் அரண்மனை போல இருக்கிறதே! ஒருகால், வட இந்தியாவில் கிருஷ்ணாபுரம் என்று ஏதாவது சமஸ்தானம் இருக்குமோ! அப்படி இருந்தால, கோமளேசுவரன் பேட்டையில் சங்கதி சொன்னவன் உன்னிடத்தில் பொய்யையா சொன்னான? மனோகர விலாஸ் என்று இந்தத் தகட்டில் எழுதப்படடிருக்கிறது. இது ஆச்சரியமாக இருக்கிறதே! மதனகோபாலன் வீணைவித்துவான் என்பது ஒருவேளை இந்த வேலைககாரனுக்குத் தெரியாதிருக்குமோ?" என்று பலவாறு ஐயமுற்றுத் தயங்கி மேலே என்ன செய்வதென்பதைப் பற்றி சிறிது நேரம் சிந்தித்து, "பொன்னம்மா! நாம் ஒரு காரியம் செய்வோம். மைலாப்பூரில் வக்கீல் அருணகிரிப் பிள்ளையினிடத்தில் கேட்டு விசாரிப்போம். அவர் மதனகோபாலனுடைய வக்கீல் ஆகையால் அவனுடைய இருப்பிடம் அவருக்குத் தெரிந்திருக்கும்; வண்டியைத் திருப்பி ஊருக்குள் விடச்சொல்" என்றாள். வண்டி உடனே மைலாப்பூர்ப் பக்கம் திருப்பப்பட்டு நாலைந்து கஜதூரம் சென்றது. அதற்குள் அந்த பங்களாவில் இருந்து யாரோ கையைத் தட்டி அவர்களைக் கூப்பிட்ட வண்ணம் ராஜபாட்டைக்கு ஓடிவந்ததாகத் தெரிந்தது. உடனே வணடி நிறுத்தப்பட்டது. அடுத்த நிமிஷம் மதனகோபாலனே ஓடி வந்து வண்டியண்டையில் நின்றான்.

சற்று முன் பங்களாவிற்குள் யாரோ ஒரு பெண்பிள்ளை வந்து வீணை வித்துவானைப் பற்றி விசாரித்ததாக வேலைக்காரன் மதன கோபாலனிடத்தில் சொல்ல, அவன் தானே எழுந்து விரைவாக வெளியிலே ஓடிவந்தான். ஆனால், அவன் கல்யாணியம்மாள வந்தாளென்று கனவிலும் நினைக்காதவன் ஆகையால், வண்டிக்குள் உட்கார்ந்திருந்த கல்யாணியம்மாள் அவனைக் கண்டு அன்பாகப் புன்னகை செய்ததைக் கணடவுடனே அவன் திடுககிட்டுத் திகைப்பும் அச்சமும் அடைந்தவனாய் ஸ்தம்பித்துச் சிறிது நேரம் அப்படியே நின்றுவிட்டான். அந்தச் சீமாட்டியம்மாள் தனனிடத்தில் கரைகடந்த பிரேமையும் அபிமானமும் வைத்தவள் என்பதை அவன் நன்றாக உணர்ந்தவன் ஆகையால், அவள் அந்தரங்கத்தில் செய்த தவறை வெளியிட்டு, அவளுக்கு நோட்டீஸ் அனுப்பி, தான் மிகவும் கொடுமையாக நடந்து கொணடதைப் பற்றி மிகுந்த கிலேசமும், இன்னதென்று விவரிக்க முடியாத சஞ்சலமும் அடைந்தவனாகத் தனது சிரத்தைக் கீழே கவிழ்த்துக் கொண்டான். அவனது முகம் சந்தோஷத்தினால் மலராமல் வெட்கத்தினால் விகாரப்பட்டது. அவன் மகா தயாள குணமும், ஜீவகாருண்யமும் உடையவன் ஆகையால், தன்னால் ஒரு ஸ்திரீ யினது மனம் புண்படலாயிற்றே என்ற இரக்கமும், சங்கடமும எழுந்து அவனை வதைத்தன. அவன் அவ்வாறு தத்தளித்து நின்றதைக் கண்ட கல்யாணியம்மாள் பொன்னம்மாளினது முகத்தைப் பார்க்க, அவள், "அம்மணீ! நீங்க பேசறத்துக்குள்ளற நானும் வண்டிக்காரனும் அலெ ஓரமாப் போயிப் பாத்துப்புட்டு வாறோம்" என்று கூறிய வண்ணம் வண்டிக்காரனை அழைத்துக் கொண்டு சுமார் 50-கஜத்திற்கப்பால் இருந்த மணற்பரப்பிற்குப் போய்விட்டாள்.

உடனே கல்யாணியம்மாள் மதனகோபாலனை நோக்கிப் புன்னகை செய்து, "அப்பா மதனகோபாலா, சாட்சிக்காரனுடைய காலில் விழுவதைவிட, சண்டைக்காரனுடைய காலில் விழுவது நல்லதென்று ஜனங்கள் சொல்லுவார்கள். அதுபோல நானும் வந்திருக்கிறேன், நான் என்ன குற்றம் செய்திருந்தாலும் மன்னித்துக் கொள்ளப்பா!" என்று மனப்பூர்வமாகவும் உருக்கமாகவும் கூறினாள்.

அந்த அம்மாள் தன்னிடத்தில் மிகுந்த பகைமையும் ஆத்திரமும் பாராட்டிக் கொண்டு வநதிருப்பாளோ என்றும், அவளிடத்தில் இருந்து தான் எப்படித் தப்பிப் போகிறதென்றும் எண்ணி அதுகாறும மிகுந்த சஞ்சலமுற்றிருந்த மதனகோபாலன் அவளது எதிர்பாராத அன்பையும் பணிவான சொல்லையும் உணரவே, தான் அவளுக்கு என்ன மறுமொழி சொல்லுகிற தென்பதை அறியாமல் அவன் தத்தளித்துக் கீழே குனிநதான். அவனது மனம் முன்னிலும் அதிகரித்த நெகிழ்வை அடைந்தது. பரமவிரோதி யானாலும், காலில் விழுந்து மன்னிப்புக் கேடபானாகில் அவனை க்ஷமிக்க வேண்டுவதே உத்தமலக்ஷணம் என்பதை அவன் அறிவான் ஆனாலும், தனது இளம் பிராயத்திலிருந்து தன்னை வளர்த்துப் பிள்ளையைக் காட்டிலும் அதிக வாத்சல்யத்தோடு பாதுகாத்துக் காப்பாற்றி வரும் கிருஷ்ணாபுரத்து ஜெமீந்தார் வேணடும் எனறே செய்திருக்கும் அந்தக் காரியத்தில் அவரது அனுமதியின்றித் தான் எவ்விதமான ஏற்பாட்டிற்கும் இணங்கக் கூடாதெனற எண்ணம அவனது மனதில் எழுந்து போராடியது. இல்லாதிருந்தால, அவன், தான எல்லாவற்றையும் மறந்து விட்ட தாகவும், மேல் நடவடிக்கை நடத்துவதை நிறுத்திவிடுவதாகவும் சொல்லிவிடக்கூடிய தயாள குணமுடைய மனிதனே. ஆனாலும் அவன் எந்த வழியிலும் போகமாட்டாமல் மௌனமாக நின்றான்.

உடனே கல்யாணியம்மாள் முன்னிலும் அதிக அன்பாகப் பேசத் தொடங்கி, "அபபா! மதனகோபாலா! என்னோடு பேசக் கூடாதென்று கூடவா உறுதி செய்து கொண்டிருக்கிறாய்? கேவலம் கொலைக் குற்றம் செய்த மனிதராக இருந்தாலும், அவர்களிடத்திலும் பேசுவார்களே; நானென்ன அதைவிடப் பெரிய குற்றமா செய்துவிட்டேன்! நான் வணடியில் உட்கார்ந்து கொணடிருக்கிறேன். நீ பாட்டையில் நின்று கொண்டிருப்பதைக் காண என் மனம் சகிக்கவிலலை. ஆனால, உன்னை வண்டிக்குள் உடகார வைத்துக் கொணடால், அதை காணும் மூட ஜனங்கள் ஏதாவது வித்தியாசமாக நினைத்துக் கொள்வார்கள். முதலில் நீயே என்னைப் பற்றித் தவறாக நினைத்துக் கொள்வாய். உலகம் அப்படிக் கெட்டுப் போயிருக்கிறது. எங்கே பார்த்தாலும் விபசார குணமே மலிந்து போயிருக்கிறது. உலகத்தில் நல்லது கெட்டது

தெரியாமல் எல்லாம் பிசரிக்கொண்டு கிடக்கிறது. ஒருவனிடத்தில் ஒருத்தி துன்மார்க்கமான எண்ணத்தோடு அன்பைக் காட்டி உபசரிக்கிறாளா என்பதற்கும் அவனிடத்திலுள்ள நல்ல நடத்தை யையும, கல்வித் திறத்தையும், புத்தி விசேஷத்தையும், அழகை யும் கண்டு கபடமற்ற அன்பும் பிரியமும் வைத்து சந்தோஷப் பட்டு உபசரிக்கிறாளா என்பதற்கும் வித்தியாசமே தெரியாதபடி உலகம் கெட்டுப் போய்விட்டது. குழந்தாய்! – உன்னைக் கூப்பிடும் போதெல்லாம், குழந்தை என்ற பதம் தானாகவே என் வாயில் வந்து நிற்கிறது. என்னுடைய குழந்தைகளைக் காணும் போது என் மனசில் எப்படிப்பட்ட வாத்சல்யம் சுரக்கிறதோ அதே வாத்சல்யம் உன்னை நான் காணும் போதெல்லாம என் மனசில் சுரக்கிறது. அதனால் குழந்தை என்ற பதமே முனனால வநது உதட்டில் நிற்கிறது. உனனை நான் எந்த நிமிஷத்தில கண்டேனோ அதுமுதல் இது பரியந்தம் நான உனனிடத்தில் வித்தியாசமான எண்ணம் கொண்டிருந்தால், அந்த ஈசுவரன் என்னுடைய இரண்டு குழநதைகளையும் கொண்டு போகட்டும். நானும் கண்ணவிந்து சீரழிந்து ஆயிரங் காலத்துக்குத் திண்டாடித் தெருவில் நிற்பேன். பிரமாணமாகச் சொல்லுகிறேன்; உன்னை நான் ஒரு குழந்தை என்று நினைத்ததைத் தவிர, வேறே விதமாக நினைக்கவே இல்லை. அப்படி நான் நினைக்க, முக்கியமாக ஒரு எண்ணம இருக்கிறது. நான் முன்னே சொன்ன சகலமான அம்சங்களும் உன்னிடத்தில் பொருந்தியிருப்பதோடு, உன் முகமும் கண்களும் என்னுடைய இரண்டு பெண் குழந்தைகளினுடைய முகம் போலவும் கண்கள் போலவும் தத்ரூபம் அப்படியே இருப்பதால், உன்னை நான் காணும்போதெல்லாம் என் மனம் என்னை மிஞ்சி ஒருவிதப் பரவசமடைந்து உருகிப்போகிறது. அதே காரணத் தினாலே தான் நான் அன்றைய தினம் மெய்ம்மறந்து உன்னை ஆலிங்கனம் செய்ய ஓடிவந்தது. நீ அதை வித்தியாசமாக நினைத்து விட்டாய். ஏனென்றால் உலகம் அப்படிக் கெட்டிருக கிறது. அதோடு, நான் சொல்லும் காரணம் விவேகிகளுக்கனறி மற்றவருக்கு உண்மையாகப் படாது!" என்று கல்லும் கரையும படியான குரலில் மொழிந்தாள். அதற்கு அநுசரணையாக அவளது கண்களினின்று கண்ணீர்த் துளிகள் மளமளவென்று கீழே வீழ்ந்தன.

அவளது உருக்கமான சொற்களையும் பரிதாபகரமான நிலைமை யையும் கண்டு விவரிக்க இயலாதபடி தத்தளித்த மதனகோபாலன் தான் அதற்கு மேலும் பேசாமல் நிற்பது தவறென்று நினைத்துத் துணிவடைந்தவனாய், "அமமணீ! தாங்கள் சொல்வதெல்லாம் உண்மை என்று என் மனசு நமபிவிட்டது. ஆனால், ஒரே ஒரு சந்தேகம் என் மனசில் எழுந்து போராடுகிறது. நான் அன்றைய தினம் தங்களிடத்தில் வந்து, தகாத வார்த்தைகளைச் சொல்லி ஏதோ துன்மார்க்கத்தில் பிரவேசித்ததாகத் தாங்கள் மற்ற எல்லா பங்களாக் களிலும் வெளியிடடீர்களே! அப்படி நான் அணுப்பிரமானம் வார்த்தையிலாவது நடத்தையிலாவது தங்களிடத்தில் தவறாக நடந்ததுண்டா? அது எனகேகே சந்தேகமாக இருக்கிறது. ஏனென் றால் அன்றைய தினம் என் மனம் அவ்வளவு அதிகமாகக் குழம்பி இருந்தது. அந்த விஷயத்தை மாத்திரம் தாங்கள் சொல்லுங்கள்" என்று பணிவாகக் கேட்டான்.

உடனே கல்யாணியம்மாள், "குழந்தாய்! நீ மகா பரிசுத்தமான மனசை உடையவன் என்பது முக்காலும் சத்தியம். வார்த்தையா லும செய்கையாலும் மாத்திரமல்ல; மனசால் கூட, நீ என்னிடத்தில் தவறான எண்ணம் கொண்டிருக்க மாட்டாய் என்பது உறுதியான சங்கதி. அந்த விஷயத்தில் நான் சொன்னது சுத்தமான பொய் தான்; அதை ஒப்புக் கொள்ளுகிறேன். அதைத் தவிர, வெள்ளைக்காரி யாகப் போய்ச் செய்த காரியமெல்லாம் நான் செய்ததல்ல. அது நடந்த பிறகே எனக்குத் தெரிந்தது. அதில் நான் சம்பந்தப்பட வில்லை என்பதை நான் ருஜுப்படுத்தக் கூடும். ஆனால், உன் விஷயத்தில் நான் அவதூறு சொன்னதற்கு ஒரு காரணம் இருக்கிறது. அன்றைய தினம் கடைசியில், நீ திமிறிக் கொண்டு ஓடிய போது, நான் பின்னால் துரத்திக் கொண்டு வந்தேன் அல்லவா? அந்தச் சமயத்தில் என்னுடைய பெண்கள் இருவரும் வநது நமமைக் கண்டு கொண்டார்கள். அவர்களுள் மூத்தவள் மகா துர்க்குணங்கள் நிறைந்தவள் ஆகையால், அவள் என்னுடைய கற்பைப்பற்றி சந்தேகப்பட்டு வேலைக்காரர்களிடத்தில் எல்லாம் சொல்லிப் புரளிச் செய்வாள் என்ற அச்சத்தினாலும், நீயும் என்னுடைய நடத்தையை வித்தியாசமாக நினைத்து மீனாக்ஷியம் மாள் முதலியோரிடத்தில வெளியிட்டு விடுவாயோ என்ற கவலை

யினாலும் நான் அந்த அவதூறை உன் பேரில் சொல்லி விட்டேன். அந்தக் குற்றம் மாத்திரம் மிகவும் பெரியது தான், உன்னுடைய அக்காள், தங்கை, அல்லது தாய் உன் விஷயத்தில் ஏதாவது குற்றம் செய்தால் அதை நீ எப்படி மன்னிப்பாயோ அது போலவே என்னையும் ஒரு தாய் போல் மதித்து நீ க்ஷமித்துக் கொள. என்னால் உன்னுடைய உத்தியோகங்கள் போன விஷயத்தில் இரண்டு லட்சமல்ல நான்கு லட்சம் ரூபாய் வேண்டுமானாலும் இந்த நிமிஷத்தில் நான் செக் எழுதிக் கொடுத்துவிடுகிறேன். நீ இதற்காக என்னைக் கச்சேரிக்கு இழுப்பதும், பத்திரிகை மூலமாக இதை மறுக்கும்படி என்னைக் கட்டாயப்படுத்துவதும், உன்னுடைய தயாள குணத்துக்குக் கொஞ்சமும் தகாத காரியம்; அப்படிச் செய்தே தீரவேண்டும் என்று நீ வற்புறுத்துவாயானால், என்னிடத்தில் பாஷாணம தயாராக இருக்கிறது. அதைத் தின்று உடனே என்னுடைய உயிரை விட்டுவிட உறுதி செய்து கொண்டிருக்கிறேன்" என்று மிகவும் பணிவாகவும் நயமாகவும் கூறினாள்.

அதைக் கேட்ட மதனகோபாலன், "அம்மணி! தாங்கள் சொன்ன விஷயங்களை எல்லாம் நான் வேதவாக்கியமாக நம்பிவிட்டேன். இந்த விஷயத்தில நானே எஜமானாக இருந்தால், தங்களுடைய பரிதாபகரமான முகத்தை நான் சற்றுமுன் பார்த்த போதே தாங்கள் என்னை மன்னிப்புக் கேட்பதற்குப் பதிலாக, இநத நோட்டீஸ கொடுத்ததற்காக நானே தங்களுடைய மன்னிப்பைக் கேடடுக் கொண்டு, தங்களை அனுப்பி இருப்பேன். ஆனால் என்னை அபிமான புத்திரனாக வளர்த்துக் காப்பாற்றி வரும் பெரியவருடைய உத்தரவின்படி இந்தக் காரியம் நடந்திருக்கிறது. ஆகையால், அவர்களுடைய தகவலில்லாமல் நான் எதையும் செய்ய சக்தியற்ற வனாக இருக்கிறேன. அவர்கள் இப்போது பங்களாவில் இல்லை. அவர்கள் திரும்பி வந்தவுடனே தாங்கள் இங்கே வந்து என்னிடம் கூறிய விவரங்களை எல்லாம் அவர்களிடத்தில் தெரிவித்து, நானும் தங்களுக்காகப் பரிந்து பேசி என்னாலான வரையில் முயற்சி செய்து பார்க்கிறேன். நேற்று நடந்த சம்பவத்திலிருந்து தங்கள் விஷயத்தில் அவர்களும் மிகுந்த அனுதாபத்தோடு தான் இருக்

கிறார்கள். அவர்களுடைய மனசு இப்போது மாறினாலும் மாறலாம்" என்று மிகுந்த அன்போடு கூறினான்.

அதைக் கேட்ட கலயாணியம்மாளது முகம் சடக்கென்று மாறுபட்டது. "நேற்று நடந்த சம்பவம்" என்று மதனகோபாலன் சொனனதிலிருந்து, தனது பங்களாவில் துரைஸானியம்மாளினது சமபந்தமாக நடந்த விஷயங்கள் எல்லாம் ஊர் முழுதும் பரவியிருக் கிறதென்று எண்ணிக் கொண்ட கல்யாணியம்மாள் மிகுந்த கிலேசமுமம சஞ்சலமும் அடைந்தவளாகச் சிறிது நேரம் தத்தளித் திருந்த பின் மறுபடியும் அவனை நோக்கி, "உன்னை அபிமான புத்திரனாக வளர்த்து வருபவர்கள் யார்?" என்று நயமாகக் கேட்க, மதனகோபாலன், "அவர்கள் தான், கிருஷ்ணா—இல்லை—பசவண்ண செட்டியார்" என்றான்.

அதைக் கேட்ட கல்யாணியம்மாளது தேகம் முன்னிலும் அதிகமாகக் குன்றியது. அவள் அவனை நோக்கி, "நேற்று நடந்த சம்பவத்துக்குப் பின்னால் அவா என் விஷயத்தில் அனுதாபப் படுகிறார் என்றாயே! அது என்ன விஷயம்?" என்று வினவினாள்.

உடனே மதனகோபாலன் வியப்புற்று அவர்களை உற்று நோக்கி, "என்ன ஆச்சரியம்! தாங்கள் பேசுவதைப் பார்த்தால், நேற்று நடந்த விஷயம தங்களுக்குத தெரியாது போலிருக்கிறதே! இங்கே நடந்த விபரீதச் சங்கதியைத் தங்களிடத்தில் யாரும் சொல்ல வில்லையா? அது தங்களுக்கு அவசரமாகவும் அவசியமாகவும் தெரிய வேண்டிய சங்கதியல்லவா!" என்றான்.

அவன பேசிய பதைப்பிலிருந்து மிகுந்த சஞ்சலமும் கலக்கமும் அடைந்த கல்யாணியம்மாள், "எனக்கு ஒரு சங்கதியும் தெரியாதே! என்ன நடந்தது? எங்கே நடந்தது?" என்று மிகவும் பதறிக் கேட்டாள்.

உடனே மதனகோபாலன், "ஆகா! அந்தச் சங்கதியைக் கேடடால் தாங்கள் நிரம்பவும் விசனப்படுவீர்கள். அதை நான் எப்படி வெளியிடப போகிறேன்" என்று பீடிகை போடடுச் சிறிது நேரம் மௌனம் சாதித்தவனாய், "அம்மணீ! தங்களுடைய குமாரர் மைலாப்பூர் போலீஸ் ஸ்டேஷனில் இருக்கிறார். தாங்கள்

காலதாமதமின்றி நேராக அங்கே போங்கள். எல்லா விஷயங்களும் நன்றாக வெளியாகும். அங்கே இப்போது விசாரணை நடக்கிறது. அதற்காகத்தான் பசவண்ண செட்டியார் போயிருக்கிறார்" என்றான்.

அவன் சொன்ன வார்த்தையைக் கேட்கவே கல்யாணியம் மாளினது மனம் ஒரு விதத்தில் அமைதியடைந்தது ஆனாலும், இன்னொரு விதத்தில் ஆவல் கொண்டது. தன்னுடைய பங்களாவில் நிகழ்ந்த விஷயங்களைப் பற்றி அவன் பேசவில்லை என்பதும், அவைகள் அவர்கள் வரையில் எட்டவில்லை என்பதும் அவளது முக்கியமான கவலை. தன்னை அவமானப்படுத்த வேண்டும் என்று நினைத்துப் பலவகையில் முயற்சிகள் செய்து வருகிறான் என்பதை அவன் துரைராஜாவுக்கு எழுதிய கடிதத்தி லிருந்து தெரிந்து கொண்டது முதல், அவனது விஷயத்தில் அவள் மிகுந்த அருவருப்பும் கோபமுமடைந்திருந்தவளாதலால் அவன் சிறைச் சாலையில் அடைக்கப்பட்டிருக்கிறான் என்பதைக் கேடட வுடனே, அவள் அவ்வளவாகக் கவலைப்படாமல், அவன் பலவிடங்களிலும் மாட்டிக் கொண்டு துன்பப்பட்டால் அவனுக்கு நல்ல புத்தி வரும் என்ற நினைவைக் கொண்டவராய், அதை அலட்சியமாக மதித்து, "ஓகோ அப்படியா! அந்தப் பெரியவர் போலீஸ் ஸ்டேஷனிலா இருக்கிறார்! இருக்கட்டும்; எப்படியாவது கெட்டழியட்டும. துஷ்டப் பிள்ளைக்கு ஊரார் தான் புத்தி சொல்ல வேண்டும்" என்று மறுமொழி கூறினாள். அதைக் கேடட மதனகோபாலன், "அம்மணி! அவர் எவ்வளவு தான் கெட்டவராக இருந்தாலும், இந்தச் சமயத்தில் தாங்கள் இப்படி அசிரத்தையாக இருப்பது பிசகு. அவா செய்திருக்கும் குற்றம் சாதாரணமான குற்றமல்ல. அதனால் அவருக்கும் உங்களுக்கும் மகா விபரீதமான அபாயம் நேரும் போலிருக்கிறது. தாங்கள் முதலில் அந்த விஷயத்தைக் கவனியுங்கள. மற்ற விஷயத்தை சாவகாசமாகப் பேசிக் கொள்வோம்" என்று மிகுநத கவலையும் அச்சமுமம கலக்கமும் தோன்றக் கூறினான்.

அவன் அவ்வாறு பேசியதைக கேட்ட பிறகே, கல்யாணியமம மாளினது மனதில் பெருத்த திகில் உண்டாயிற்று; அவள் அவனை நோக்கி, "அவன் அப்படி என்ன விதமான விபரீதக் குற்றத்தைச்

செய்து விட்டான்? அதையாவது நீ சொல். மற்ற விவரங்களை நான் போலீஸ் ஸ்டேஷனில் அறிந்து கொள்ளுகிறேன்" என்றாள்.

உடனே மதனகோபாலன், "அம்மணீ! அதை வாயால் சொல்லவும் எனக்குப் பயமாக இருக்கிறது. அவர் யாரோ ஒரு கிழவியை நேற்று சாயுங்காலம் கத்தியால் குத்திக் கொன்று விடடார். அவரைக் கையும் மெய்யுமாகப் பிடித்துக் கொண்டார் களாம். அவருக்கு மரண தணடனை நிச்சயமாகக் கிடைக்கும் என்று ஜனங்கள் சொல்லிக் கொளளுகிறார்கள். ஆகையால், தாங்கள் உடனே போய் அதற்குத் தகுந்த வக்கீலை அமர்த்தித் தக்க ஏற்பாடு செய்யுங்கள். நோடடீஸ் விஷயம இருக்கடடும்" என்று உருக்க மாகவும் வறபுறுத்தியும கூறி, கடற்கரையில் இருந்த பொன்னம் மாளையும் வணடிக்காரனையும நோக்கி, விரைவாக வரும்படி கையைத் தடடிச் சைகை செய்தான்.

அவன் சொன்ன வார்த்தைகளைக் கேட்கவே, கல்யாணியம் மாள் அளவிலடங்காத அச்சமும், திகிலும், கலக்கமும், கவலையும் அடைந்தவளாகப் பதைபதைத்திருக்க, பொன்னம்மாளும் வண்டிக்காரனும் விரைவாக வந்து வண்டியில் ஏறினார்கள். உடனே கல்யாணியம்மாள் வண்டியை சிவஞான முதலியாரது ஜாகைக்கு அதிக விசையாக ஓட்டுமபடி சொல்ல, வண்டி உடனே புறப்பட்டு ஓடத் தொடஙகியது. கல்யாணியம்மாள் மதனகோபாலனை நோக்கி, "அப்பா மதனகோபாலா! நான் போய்விட்டு வருகிறேன். நான் சொன்ன விஷயத்தில கவனம் இருக்கட்டும்; பெரியவரை எப்படியாவது சரிப்படுத்துவது உன்னைச் சோந்த பொறுப்பு" என்று சொல்லிக் கொண்டே சென்றாள்.

★ ★ ★

31–வது அதிகாரம

## இந்திர ஜாலம் – சல் ஓடிப்போ!

இருபத்தேழாவது அதிகாரத்தின் முடிவில் மைனர் அம்படடக் கருப்பாயியைக் கத்தியால் குத்திவிட்டு ஓடியதும், கிருஷ்ணாபுரம் ஜெமீந்தாரும், ஆட்களும், ஒரு போலீஸ் ஜெவானும் அவனைப்

பிடித்துக் கொண்டதும் சொல்லப்பட்டன அல்லவா? அவ்வாறு அவர்கள் தன்னைக் கையும் மெய்யுமாக பிடித்துக் கொண்டு விட்டார்கள் என்ற கலக்கமும் பிரமிப்பும் பேரச்சமும் குலை நடுக்கமும் அடைந்தவனாய் மைனர் மருண்டு மருண்டு திருட்டு விழி விழித்துக் கொண்டு பேசமாட்டாமல் நடுநடுங்கி நிற்க, போலீஸ் ஜெவான், மைனர் செய்த கொலையின் விவரத்தை ஜெமீந்தாரிடத்திலிருந்து கேட்டறிந்து கொண்டான். உடனே ஜெமீந்தார் அங்கே இருந்த தமது ஆட்களுள் சிலரை நோக்கி, தமது பங்களாவிற்கு ஓடி, குத்தப்பட்ட கிழவி இன்னமும் உயிரோடிருந் தால், அவளை உடனே எடுத்துத் தமது மோட்டார் வண்டியில் வைத்து ஆஸ்பத்திரிக்குக் கொண்டு போய் போட்டுவிட்டு அந்த விவரங்களையும், தாங்கள் குற்றவாளியை அழைத்துக் கொண்டு நேராகப் போலீஸ் ஸ்டேஷனிற்கு வந்து கொண்டிருப்பதாகவும், மைலாப்பூர் போலீஸ் ஸ்டேஷனுக்குப் போய்ச் சொல்லுமபடி கூறி அனுப்ப, ஆட்கள் அவ்வாறே பங்களாவை நோக்கி ஓடி, ஐந்து நிமிஷ நேரத்தில் கிழவியை மோட்டார் வண்டியில் படுக்க வைத்துக் கொண்டு, ராயப்பேட்டை வைத்தியசாலைக்குப் போயினர். அவ்வாறு வண்டியில் போனவர்கள் அந்தக் கிழவியினது உயிா இன்னமும் துடித்துக் கொண்டிருப்பதாகவும் அவள் வெகு சீக்கிரத்தில் இறந்து போய்விடுவாள் என்றும் சொல்லிக் கொண்டே காற்றாகப் பறந்து போயினர். ஜெமீந்தாரும், போலீஸ் ஜெவானும் மிகுதி இருந்த நான்கு ஆட்களும் மைனரை அழைத்துக் கொண்டு அந்த ராஜபாட்டையின் வழியாகவே மைலாப்பூரை நோக்கி நடந்தனர். அவ்வாறு ஐந்து நிமிஷ நேரம் நடக்க, அதுகாறும் கிலியினால் கலங்கியிருந்த மைனர், அதற்குள் ஒருவாறு தெளிவும் துணிவும் அடைந்தவனாய்த் தனது மடியில் இருந்த கத்தியை எடுத்து மெதுவாகக் கீழே போட்டான். அதைக் கண்ட ஓர் ஆள் கீழே குனிந்து கத்தியைக் கையிலெடுத்துக் கொண்டான். மைனர் உடனே திமிறத் தொடங்கி போலீஸ்காரனைப் பார்த்து, "அடேய்! எனனை ஏனடா பிடித்துக் கொண்டிருக்கிறீர்கள்? அவள் யாரோ பைத்தியக்காரக் கிழவி அவளை நான் எதற்காகவடா கொல்லப் போகிறேன்? எனனை யார் என்று பார்த்துக் கொண்டீர்கள்? நான் மாரமங்கலம் ஜெமீந்தாரல்லவா? என்னுடைய பங்களா அதோ

எதிரில் தெரிகிறது பார். அதிலிருந்து நான் உலாவுவதற்காக இப்போது தானே வெளியே வந்தேன். நீங்கள் என்னைப் பிடித்துக் கொண்டீர்களே? என்ன வயணம் ஒன்றும் புரியவில்லை போலிருக்கிறது? என்னை விடுங்கள்; நான் பங்களாவுக்குப் போகிறேன்" என்று கூறித் தன்னை விடுவித்துக் கொள்ள முயல, போலீஸ்காரன், "அடெ போ ஓய்! உன்னைத் தெரியும் எங்களுக்கு. இந்தச் சரக்கெல்லாம் இங்கே விலை போகாது. நட! ஸ்டேஷனுக்கு" என்று கூறி அதட்டிய வண்ணம் அவனைக் கெட்டியாகப் பிடித்துக் கொண்டு இழுக்க, அவன வர மாட்டேன் என்று பிரமாதமான முரண்டல் செய்யத் தொடங்கினான். போலீஸ் ஜெவான் மற்ற ஆள்களைப் பார்த்து, "நீங்களும இதுவரைக் கொஞ்சம் பிடித்துக் கொள்ளுங்கள்; மோட்டாரில போனவர்கள், ஸ்டேஷனுக்குப் போய் இந்தச் சங்கதியைச் சொனனால், சப் இன்ஸ்பெக்டராவது வேறே யாராவது விலங்கை எடுத்துக கொண்டு உடனே புறப்பட்டு இன்னமும் கொஞச நேரத்திற்குள வநதுவிடுவார்கள. அதுவரையில் பிடித்துக் கொள்ளுங்கள்" எனறான். உடனே ஆட்களும் மைனரைப் பிடிக்கப் போக, மைனர் வீராவேச மடைந்தவனாய், "அடேய! நாய்களா! நீங்கள் யார் என்னைத் தொடுவதற்கு? என்னைத் தொட உங்களுக்கு அதிகாரமே இல்லை. தொட்டால் நாளைக்கு பலி போட்டுவிடச் சொல்லுவேன்" என்று கூறிய வணணம் மிகுந்த கோபத்தோடு அவர்களை உதைக்கவும் குத்தவும் முயல, அவன் ஜெமீந்தாரினது வீட்டுப் பிள்ளையாயிற்றே என்ற மரியாதையினால் அவர்கள் அதிக பலவந்தம் செய்யாமல் தயங்கி நிற்க, மைனர் போலீஸ் ஜெவானது பிடியை விலக்கிக் கொள்ள முயன்று கொண்டிருக்கையில், ஜெமீந்தார் தென்புறத்தில் தற்செயலாகப் பார்த்து, "அதோ குதிரையில் வந்துவிட்டார்!" என்று வியப்போடு கூறினார். அதைக் கேட்ட யாவரும் திடுக்கிட்டு முன்புறத்தில் பார்க்க, மைனர் முன்னிலும் அதிகமாகத் திமிறத் தொடங்கினான். இரண்டொரு நிமிஷ நேரத்தில் குதிரை அவாகளிருந்த இடத்திற்கு வந்து சோந்தது. அதன் மேல் ஒரு போலீஸ் சார்ஜண்டு துரை உட்கார்ந்திருந்தார். அவரது வலது கையில், வெள்ளிப் பூண் கட்டப்பட்ட மெல்லிய ஒரு பிரம் பிருந்தது. இடது கையில் ஒரு பீடியை வைத்துக் குடித்துக்

கொண்டபடி வந்து சேர்ந்து, "அடேய் ஜெவான்! என்ன தகரார்! (Hallo Constable! What is the row about?)" என்று இங்கிலீஷ் பாஷையில் அடித்தொண்டையால் மிகவும் தணிவாகக் கேட்டுக் கொண்டு நெருங்க உடனே ஜெவான் அந்த சார்ஜண்டை நோக்கி நிமிர்ந்து நின்று சலாம் செய்து, அந்தக் கொலையின் விஷயத்தையும், குற்றவாளி இன்னான் என்பதையும், அவன் தகரார் செய்வதையும் இரண்டொரு வார்த்தையில் கூற, உடனே துரை ஆத்திரமும கோபமும் தோற்றுவித்துத் திட்டிய வண்ணம் குதிரையை விட்டுக் கீழே இறங்கி வந்து தமது இடது கையால் மைனரை இறுகப் பிடித்துக் கொண்டு, "போ! நட கழுதை! என்ன போக்கிரித்தனம் செய்தாய்!" என்று கூறிய வணணம் தமது கையில் இருந்த பிரம்பால் மைனரது பின்புறத்தில் சுளீர் சுளீர் என்று நாலைந்து அடிகள் கொடுத்து, பூட்ஸ் போட்ட காலைப் பின்பககத்தில் பிரயோகப்படுத்த, மைனர் அதற்கு மேல் எந்த முரணடலும் செய்யாமல் அடங்கிப் போய்த் தான் அந்தக் கொலைக் குற்றத்தைச் செய்யவில்லை என்றும், தான் இன்னான் என்றும் தன்னை அவர்கள் அக்கிரமமாகப் பிடித்துக் கொண்டிருக்கி றார்கள் என்றும், பக்கத்திலிருக்கும் தனது பங்களாவிலிருந்து உலாவ வந்த தன்னை அவர்கள் பிடித்துக் கொண்டார்கள் என்றும் கூற, போலீஸ் சார்ஜண்டு அதை ஒப்புக் கொள்ளாமல், அவனை அதட்டியும், அடித்தும், அவன் உண்மையைச் சொல்லா விட்டால், நகத்தின் இடுக்குகளிலெல்லாம் ஊசிகளைச் சொருகப் போவ தாகவும், வேறே பலவகையான சித்திரவதை செய்துவிடுவ தாகவும் சொல்லிக் கொண்டே வர, மைனர் பெருத்த திகிலும் குலை நடுக்கமும் அடைந்து என்ன செய்வதென்பதை அறியாமல் மயங்கினவனாக நடந்தான்.

அப்போது அவர்கள் எல்லோரும் மைனரிருந்த பங்களாவினது வாசலை அடையவே, உடனே போலீஸ் சார்ஜாண்டு, "ஏ மைனர்! நீ இவர்களுக்கெதிரில் நிஜத்தைச் சொல்ல யோசிக்கிறாய் போலிருக் கிறது. இவர்கள எல்லாரும் இங்கேயே இருக்கட்டும. நானும் நீயும் பங்களாவுக்குள் தனியாக ஓரிடத்துக்குப் போவோம். அங்கேயா வது நீ உண்மையைச் சொல்லிவிடு" என்று கூறிய வண்ணம்,

மற்ற எல்லோரையும் வெளியில நிறுததிவிட்டு மைனரை மாத்திரம் அழைத்துக கொண்டு பங்களாவுக்குள் சென்றார். கொலை செய்து விட்டு வரும்படி மைனரை வெளியில் அனுப்பினவளான பாலாம்பாள் மேன்மாடத்தில் நின்றபடி எல்லா விஷயங்களையும் கவனித்து உணர்ந்து கொண்டு மிகவும் தவித்தவளாய்த் தனது பங்களாவிற்குள் மைனரும் சார்ஜண்டு துரையும் வருவதைக் கண்டு கதிகலங்கி நின்று கொண்டிருந்தாள். அப்போது அவர்கள் இருவரும் மேன்மாடத்தில் அவளிருந்த இடத்திற்கே போய்ச் சேர்ந்தனர். உடனே சார்ஜண்டு துரை மைனரை நோக்கித் தணிவான குரலில், "ஐயா! இவாகளெல்லாரும் நீர் கொலை செய்ததை நேரில் கண்டு பிடித்துக் கொணடிருக்கிறார்கள். நீர் எப்படி வாதித்தாலும் இனி தப்ப முடியாது. உமக்கு அவசியம் மரண தண்டனை கிடைத்தே தீரும். நீர் என்னிடத்தில் நிஜத்தைச் சொல்லிவிடும். இதோ நிற்கும் உம்முடைய சம்சாரத்தைப் பார்த்தால், எனக்கு மிகவும் பரிதாபமாக இருக்கிறது. நீர் தக்க பெரிய மனிதா் வீட்டுப் பிள்ளை என்பது நன்றாகத் தெரிகிறது. நீர் உண்மையைச் சொல்லி விட்டால் நான் உமக்கு என்னாலான உதவியைச் செய்கிறேன்" என்று நயமாகப் பேசினார். அது வரையில் முரட்டு மிருகம் போல நடந்து கொண்ட அந்த சார்ஜண்டு துரை உண்மையில் நலல மனிதா் என்றும், தான் ஏதாவது லஞ்சம் கொடுத்து அவரைச் சரிப்படுத்தி விடலாம் என்றும், அதன் பொருட்டே அவா தன்னைத் தந்திரமாக உள்ளே அழைத்து வந்திருக்கிறார் என்றும் நினைததவனாய், உடனே கீழே விழுந்து அவரது காலைப பிடித்துக் கொண்டு, "ஐயா! நான ஏதோ ஆத்திரத் தில் இதைச் செய்து விட்டேன். இநத ஆபத்திலிருந்து நீ தான் என்னைக் காப்பாற்றிவிட வேண்டும். நான் உம்முடைய விருப்பம் போல நடந்து கொள்ளுகிறேன்" என்று கூறிக் கெஞ்சி மன்றாட, பாலாம்பாளும் உடனே துரையினது காலில் விழுந்து வேண்டிக் கொள்ள ஆரம்பித்தாள். அதைக் கண்ட துரை, "சரி; எழுந்திருங்கள்; நான் உம்மைத் தப்ப வைக்கிறேன்" எனறு கூறி, அவர்களை எழுந்திருககச் செய்த பிறகு மைனரைப் பார்த்து, "இப்போது இந்த பங்களாவில் எவ்வளவு பணம் இருக்கிறது?" என்றார். மைனர், "நோட்டாக ஐயாயிரம் ரூபாய் இருக்கிறது" என்றான்.

அதைக் கேட்ட துரை தமது முகத்தை அதிருப்தியாகச் சுளித்துக் கொண்டு, "அது எந்த மூலைக்கு ஆகும்? நான் கமிஷனர் துரைக் கெல்லாம் பங்கு கொடுக்க வேண்டும். குறைந்தது ஒரு லட்சமாவது கொடுப்பதானால் பேசும்; அதுவும் இப்போதே வர வேணடும். வந்தால், உம்மை உடனே விடடுவிட்டுப் போய்விடும்படி ஜெவானை அனுப்பி விடுகிறேன்" என்றார். அதைக் கேடட மைனர், "என்னுடைய தாயார் தேனாம்பேட்டையில் இருக்கிறார்கள். நான் அங்கே போனால் லட்சம் ரூபாயை ஒரே நொடியில் வாங்கிக் கொடுத்து விடுவேன். நீங்களோ இப்போதே கேடகிறீர்கள். ஒரு காரியம் செய்யுங்கள். இப்போது இங்கே இருக்கும் நகைகள் எல்லாம் சுமார் ஆயிரம் ரூபாய் பெறும்; எல்லா நகைகளையும், ஐயாயிரம் ரூபாய் நோட்டுகளையும் வாங்கிக கொளளுஙகள்; அவ்வளவோடு இப்போது என்னை விட்டு விடுங்கள். நான் உடனே என்னுடைய தாயாரிடத்துக்குப போய், பாக்கி இருபதினாயிரத்தையும் வாங்கி உங்களிடத்தில் கொண்டு வந்து சேர்த்துவிடுகிறேன். என்னுடைய வார்த்தையை நம்புங்கள்" என்று உறுதியாகக் கூறி மிகவும் மன்றாடினான்.

துரை அந்த ஏற்பாட்டிற்கு இணங்க, உடனே ஐயாயிரம் ரூபாய் நோட்டுகளும் வந்து சேர்ந்தன. அதுவரையில் பாலாம்பாள் மைனரிடத்திலிருந்து அபகரித்துப் பல பெட்டிகளில் வைத்திருந்த சகலமான நகைகளும், ஒரு பொடடுப் பொடிகூட மிச்சமில்லாமல் வெளிப்பட்டன. பாலாம்பாள் அணிந்து கொண்டிருந்த மூக்குப பொடடு முதல் கால் மெடடி வரையில் உள்ள ஆபரணங்கள யாவும் ஒரு நிமிஷத்தில் க்ஷவரமாயின. எல்லா வஸ்துக்களையும் இரண்டு சிறு சிறு மூடடைகளாக மைனர் கட்டி சார்ஜண்டு துரையினிடத்தில் நீட்ட, அவர் அவர்கள் இருவருக்கும் மிகவும் பிரியமாகவும் வணக்கமாகவும் சலாம் செய்து, மூட்டைகளை வாங்கித் தமது கால்களிடையில் துடைப்பக்கங்களில் இருந்த பெருத்த பைகளுக்குள் நுழைந்துக் கொண்டவராய், "சரி; வாருங்கள்; வெளியே இருப்பவர்கள் சந்தேகப்படாமல் நான் நடநது கொள்ள வேண்டும்; உம்முடைய கைகளைச் சேர்த்து ஒரு துணியால் கட்டி அழைத்துக் கொண்டு வெளியே போய், ஜெமீந் தாரையும ஆட்களையும் அனுப்பிய பிறகு நானும் ஜெவானும்

உம்மைக் கொஞ்ச தூரம் அழைத்துக் கொண்டு போய்விட்டு விடுகிறோம்" என்று கூற, அதற்கிணங்கிய மைனர், பக்கத்தில் இருந்த ஒரு துணியை எடுத்து முறுக்கிக் கொடுக்க, பாலாம்பாளும் துரையும் சேர்ந்து மைனரது கைகள் இரண்டையும் முதுகுப் பக்கத்தில் கொணாந்து சேர்த்து இறுகக் கட்டிவிட்டனர். அதைக் கணடு சிரித்துக் கொண்ட சார்ஜணடு துரை மைனரை உடனே அழைத்துக கொண்டு வெளியில் வந்தார்.

அவ்வாறு வந்தவர் மிகவும் கோபமான கடுகடுத்த முகத்தோடு ஜெவானையும் மற்றவர்களையும் நோக்கி, "இவன் வழிக்கு வர மாட்டான் போலிருக்கிறது. நான் எவ்வளவு தூரம் நயமாகச் சொல்லியும் இவன் கேளாமல், என்னை ஏமாற்றிவிட்டுக் கொல்லைப் பககமாக ஓட ஆரம்பித்தான். இவனைப் பிடித்துக் கொணடு வந்தேன். இனிமேல் இவன் எவ்வித இடக்கும் செய்ய முடியாது. அடேய் ஜெவான்! நீ இவனைப் பிடித்துக் கொள்" என்று கூறிய வண்ணம மைனரை ஜெவானிடத்தில் ஒப்புவித்தவ ராய்த் தமது குதிரையின் மீதேறி உட்கார்ந்து கொண்டு, "சரி; நடவுங்கள்" என்றார். உடனே ஜெவான் மைனரைப் பிடித்துக் கொணடு நடக்கலானான்; மற்ற எல்லோரும் கூடவே தொடர்ந்து சென்றனர்.

அவ்வாறு அவர்கள் சுமார் 20-கஜ தூரம் சென்றனர். ஜெமீந் தாரையும், மற்ற ஆட்களையும் அனுப்பி விடுவதாகச் சொன்ன சார்ஜணடு துரை அபபடிச் செய்யவில்லையே என்று மிகுந்த சந்தேகங் கொண்டவனாய், மைனர் போய்க் கொண்டிருந்தான். அப்போது அநத சார்ஜண்டு துரை, "அடேய் ஜெவான்! இனிமேல் இவன் திமிறமாட்டான். இவனை நேராகப் போலீஸ் ஸ்டேஷ னுக்குக் கொண்டுபோ; நான் இந்த ஜெமீந்தாருடைய பங்களா வுக்குப் போய், கொலை நடந்த இடம் முதலிய விவரங்களை எல்லாம் பார்த்துக் கொணடு வருகிறேன்" என்று கூறிய வண்ணம் தமது குதிரையைத் திருப்பி வயிற்றில் காலால் இடித்து விசையாக ஊக்க, அது நாற்கால பாய்ச்சலில் பாய்ந்தோடத் தொடங்கியது. சார்ஜண்டு துரை தனது வாக்குறுதியை நிறைவேற்றாமல் சொத்துக் களை எல்லாம் அபகரித்துக் கொண்டு போகிறான் என்ற சந்தேகம் மைனரது மனதில் உண்டாயிற்று. அவன் ஏக்கமும், கலக்கமும்,

விசனமும் அடைந்தவனாகத் திரும்பித் திரும்பிப் பார்த்த வண்ணம் செல்ல, ஜெமீந்தார் தாமும் திரும்பிப் போய் சார்ஜண்டுக்கு, எல்லா வற்றையும் காட்டி அழைத்துக் கொண்டு வருவதாகச் சொல்லி விட்டுத் திரும்பி நடந்தார்; ஆட்கள் எல்லோரும் ஜெவானோடு சென்றனர்.

சார்ஜண்டு துரையோ அவ்விடத்திலிருந்து குதிரையை அதிக வேகமாக ஓட்டிக் கொண்டு போனார். அந்த இடத்திலிருந்து கிருஷ்ணாபுரம் ஜெமீந்தாரது பங்களா சுமார் கால்மயில் தூரத்தில் இருந்தது; ஜெமீந்தார் தமக்கு முன்னால் போய்க் கொண்டிருநத சார்ஜண்டைப் பார்த்த வண்ணம் ஓட்டமாகச் சென்றார். சார்ஜண்டு துரை அந்த பங்களாவின் வாசலில் குதிரையை நிறுத்தாமல் அப்பாலும் ஓட்டிப் போனதாகத் தெரிந்தது. அதைப் பற்றி ஜெமீந் தார் வியப்புற்றவராய் நடந்த சமயத்தில், குதிரை தலைகால் தெரியாமல் ஓடியதாகையால், அதன் முன்னம் கால்கள மடங்கிப் போகவே, குதிரை முன்பக்கத்தில் சடக்கென்று உட்கார்ந்து போயிற்று; சார்ஜண்டு துரை குதிரையின் முதுகிலிருந்து குபீரென்று கிளம்பிவிடப்பட்டு முன்புறத்தில் நாலைந்து கஜதூரத் திற்கப்பால் போய், தலைகுப்புற வீழ்ந்த வேகத்தில், அவரது நெற்றி, மூக்கு, மார்பு முதலிய இடங்களில் பலமாக அடிபட்டது. அவரது தலையில் இருந்த தொப்பி ஒரு தோல்வாரினால் மோவா யோடு சேர்த்துக் கட்டப்பட்டிருந்தமையால், அந்தத் தொப்பி குறுக்கிட்டே அவரது உயிரைக் காப்பாற்றியது. இல்லையானால், அவர் வீழ்ந்தவுடனே அவரது உயிர் நீங்கியிருக்கும். அப்படி இருந்தும் முகத்தில் பட்ட அடியினால் பொறிகலங்கிப் போகவே அவர் மூர்ச்சித்து அசையாமல் அப்படியே தரையில் கிடந்தார்; அந்தச் சமயத்தில் அந்த பங்களாவில் வாசலில் வந்து நின்று, ஜெமீநதாரது வருகையை எதிர்பார்த்திருந்த மதனகோபாலன் சார்ஜண்டுக்கு நேரிட்ட விபத்தைக் கண்டு ஓடோடியும் சென்று, மூர்ச்சித்து வீழ்ந்து கிடந்த அவரைத் திருப்பிப் படுக்கவைத்து அவரது உடம்பில் தாறுமாறாகச் சுற்றிக் கொண்டிருந்த கடிவாள வாரை அப்புறப்படுத்தி அந்தக குதிரையைப் பிடித்துக் கொண்டு போய், பங்களாவின் மதிட்சுவருக்குள் இருந்த ஒரு தென்னை மரத்தில் கட்டிவிட்டு ஓடிவந்தான். அதற்குள் ஜெமீந்தாரும் அங்கே வந்து

சேர்ந்து சார்ஜண்டு துரையின் கைநாடியைப் பிடித்துப் பார்த்து அவர் உயிரோடு தான் இருப்பதாகவும் ஆனால் மூர்ச்சித் துக் கிடப்பதாகவும் அறிந்து கொண்டார். அவரது முகத்தில் சில இடங்களில் இருந்து வழிந்த இரத்தத்தைத் தனது வஸ்திரத்தில் ஒற்றித் துடைத்துவிட்டு மதனகோபாலனும், ஜெமீந்தாரும் அவரைத் தூக்கி எடுத்துக் கொண்டு தங்களது பங்களாவிற்குள் சென்றனர். சார்ஜண்டு துரை நன்றாக கொழுகொழுத்த கனமான தேகத்தை உடையவர் ஆதலால், அவரைத் தூக்கிக் கொண்டு போவதற்குள், அவர்கள இருவருக்கும் வேர்த்து விருவிருத்து இறைப்புண்டாகிவிட்டது. அவர்கள் இருவரும் பெரும்பாடு பட்டு அந்தத் துரையைச் சுமந்து கொண்டு போய் தனியான ஓர் அறையில் சொகுசாக இருந்த ஒரு மஞ்சத்தின் மேல் விடுத்தனர்.

அவர்கள் யாரோ ஒரு துரையை அவ்வாறு தூக்கிக் கொண்டு வந்ததைக் கண்டு மோகனாங்கியும் ஏனைய ஆட்களும் மிகுந்த அச்சமும் கவலையும் கொண்டவர்களாய் ஓடோடியும் வந்தனர். ஜெமீந்தார் அந்த துரை இன்னார் என்பதைப் பற்றிய விவரங்களை எல்லோருக்கும் சொன்னவராய், உடனே தண்ணீரும் விசிறியும் கொண்டு வரச் செய்தார். உடனே ஓர் ஆள் விசிறி கொண்டு வந்து துரையின் முகத்தில் விசிறத் தொடங்கினான். அவரது தலையில் நசுங்கிக் கிடந்த தொப்பியை எடுத்துவிடும்படி ஜெமீன்தார் சொலல, மதனகோபாலன் தொப்பியை விலக்கினான். விலக்கவே, அவர்களது ஆச்சரியமும் திகைப்பும் அளவிலடங்காதனவாகப் பெருகின. ஏனென்றால், வெள்ளைக்கார துரைகள் உச்சந்தலையில் அரை அங்குல நீளம் மயிரை வெட்டிவிட்டு, மற்ற பாகங்களை மழுங்கச் சிரைத்திருக்கும் வழக்கத்திற்கு மாறாக அந்த துரையின் தலையில் ஒரு பெண்பிள்ளையின் மயிர் போல நீண்ட கருத்த அழகிய தலை மயிர் வகிர்ந்து வாரிப் பின்னப்பட்டு, உச்சியில் அடை போல எடுத்துக் கட்டப்பட்டிருந்தது! அது என்ன அற்புதம் என்று நினைத்த அவர்கள, அநத துரை அவ்வாறு தலைமயிர் வைத்திருந்த காரணமென்ன என்பதை அறியமாட்டாமல் பிரமித்துப் போயினர். இருந்தாலும் மதனகோபாலன், ஒரு துணியில் தண்ணீரை நனைத்து அவரது முகத்தில் தடவ, இன்னொருவன் விசிறியால் வீசிக்கொண்டே இருந்தான். மதனகோபாலன் தண்ணீரை முகத்தில் விடவிட, முகத்தில்

தடவப்பட்டிருந்த அழகிய கருத்த மீசைகள் கையோடு வந்து விட்டன. முற்றலான முகம் போல அதுகாறும் காணப்பட்ட அவரது முகம் நல்ல யௌவனப் பருவத்தைக் காட்டியது. வெண்மையாகத் தோன்றிய அவரது நிறம், எலுமிச்சம் பழ நிறத்துக்கு வந்தது. அந்த அற்புதமான மாறுபாட்டைக் கண்ட யாவரும் அளவிறந்த பிரமிப்பும் குழப்பமும அடைந்தவராய் ஸ்தம்பித்துப் போயினர்.

அப்போது சார்ஜண்டு துரை மூர்ச்சை தெளியாமல் கிடந்தமை யால், ஜெமீந்தார் அந்த துரையின் உடம்பை இறுக்கிப் பிடித்துக் கொண்டிருந்த கால்சட்டை மேல்சட்டை பூட்ஸ் முதலியவற்றை விலக்கும்படி சொல்ல, இரண்டு வேலைக்காரர்கள் அவைகளை விலக்கினார்கள். ஆகா! என்ன விந்தை! என்ன ஜெகஜ்ஜால வித்தை! சார்ஜண்டு துரையின் உடைகளுக்குள் ஒரு யௌவனப் பெண்ணின் சரீரம் மறைந்து கொண்டிருந்தது! அவள் கட்டழகும், உருட்சிதிரட்சி வாய்ந்த உறுப்புகளும் பெற்றவளாகக் காணப்பட் டாள். அவளது கழுத்து முதல் கணைக்கால் வரையில் உறுதியான பனியன் சடடையால் மூடப்படடிருந்த காட்சி, தாராசசாங்கத்தில் எண்ணெய தேய்க்கும் சமயத்துக் காட்சி போல இருந்தது. ஆனால் நன்றாக அகன்றிருந்த அவளது அழகிய மார்பினிடையில் மலைப் பள்ளத்தாக்கு போல இருந்த சரிவான பள்ளத்தை வெல்வெட்டி னால் உள்ளங்கை அகலத்தில் தைக்கப்பட்டிருந்த ஒரு சிறிய பஞ்சுமெத்தை நன்றாகத் தூர்த்து மேடுபள்ளமின்றி சமப்படுத்திக் கொண்டிருந்தது.

அவ்வாறு இந்திரஜால மகேந்திர ஜாலத்தில் ஒரு வஸ்து வேறொரு வஸ்துவாகக் காணப்படும் மாறுபாடு போல இருநத அந்த விநோதக் காட்சியைக் கண்ட ஜெமீந்தார் முதலிய எல்லோரும முற்றிலும் ஸ்தம்பித்து சித்திரப் பதுமைகள் போல அப்படியப படியே நின்றுவிட்டனர். அது ஒரு பெண்பிள்ளை என்பது தெரிந்த உடனே அதுகாறும் அவளைத் தீண்டிக் கொண்டிருநத ஆண்பாலார் யாவரும் தூர விலகினர். மதனகோபாலன் தனது கரத்தில் இருந்த தண்ணீரை ஒரு வேலைக்காரியிடத்தில் கொடுத்து அவளது முகத்தில் ஒற்றிக் கொண்டிருக்கும்படி சொல்லிவிட்டு, இன்னொருவளைக் கொண்டு அவளது வாயைத் திறந்து

தண்ணீரில் சிறிதளவு உள்ளே வார்க்கச் செய்தான். அவ்வாறு, வாய்க்குள் விடப்படட குளிர்ந்த ஜலம் தொண்டையில் படவே, அந்தப் பெண் தனது கண்களை விழித்துக் கொண்டு விழிகளை நாற்புறங்களையும் சுழற்றிப் பார்த்து மருள மருள விழித்தவளாய் அஙகிருந்தோரது முகஙகளை எல்லாம் உற்று நோக்கினாள்; அப்போது அந்த வேலைக்காரி தண்ணீர் பாத்திரத்தை அவளது வாயில் வைத்துச் சிறிதளவு தண்ணீர் பருகுவித்தாள். உடனே அந்த யௌவனப் பெண் தனது கண்களை மறுபடியும் மூடிக் கொண்டு ஐந்து நிமிஷ நேரம் அயர்ந்திருந்தவள் முன்னிலும் அதிகத் தெளிவடைந்து கணகளை நன்றாக விழித்துக் கொண்டு ஜெமீந்தாரையும் மற்றவர்களையும் நோக்கி திகிலும், கலக்கமும் நடுக்கமும் அடைந்தவளாய் மறுபடியும் கண்களை மூடிக் கொண்டாள். அப்போது ஜெமீந்தார் அந்தப் பெண்ணைத் தலைமுதல் கால் வரையில் இரண்டு தரம் கவனித்துப் பார்த்தவராய் மிகுந்த பிரமிப்பும் திகைப்பும் அடைந்து அவளது முகத்தின்மேல் வைத்த விழியை வாஙகாமலே இருந்தார். அந்த முகம் அவருக்கு மிகவும் அதிகமாகப் பழகிய சொந்த மனிதரது முகமாகக் காணப்பட்டது. அவள் தமது சொந்த உற்வினர்களுள் ஒருத்தி போலக் காணப்பட்டாள. ஆனால், அவள் எவ்விடத்தில் இருந்தவள், அவளுக்கும் தமக்கும எவ்விதமான பாந்தவ்வியம் எனபவை மாத்திரம் தெரியவில்லை. அவர் மிகவும் ஆழ்நது சிந்தித்து அவளது முகத்தையும் சரீரத்தையும் கூாந்து கூர்ந்து பார்க்கிறார்; கைவிரல்களினால நெற்றியை அழுத்திக் கொளளுகிறார். அவ்வாறு அவர் ஐநது நிமிஷ நேரம் தத்தளித்திருக்க, அவரது மனதில ஒருவித ஞாபகம உணடாயிற்று; பதினைந்து வருஷ காலத்திற்கு முன் இறந்து போன தமது அழகான யௌவன மனைவியினது முகமும், உடம்பும், சாயலும் எப்படி இருந்தனவோ அப்படியே இநதப் பெண்ணின் முகம் முதலிய யாவும் இருந்தனவென்ற நிச்சயம் ஏற்பட்டது. இறந்து போய்விட்டதாகத் தாம் நினைத்துக் கொண்டிருந்த தமது அரிய மனைவி தான் உயிர்பெற்றுத் திருமபி வந்துவிட்டாளோ என்ற எண்ணம் தோன்றியது. அந்தப் பெண்ணினது முகத்தைப் பார்க்கப் பார்க்க, அவரது மனமும் தேகமும கரைகடந்து பதறி வாத்சல்யத்தின்

மேலீட்டால் கட்டுவிட்டு நெக்குநெக்குருகிப பாகாய்க் கரையத் தலைப்பட்டன. தமது மனைவிக்குத் தமது கையால் கொள்ளி வைத்துக் கொளுத்தியிருக்க, பதினைந்து வருஷங்களுக்குப் பிறகு அதே யௌவனப் பருவமுடையவளாக அவள் எப்படித் திரும்பி வரமுடியும் என்ற சந்தேகமும், ஒருகால் இந்தப் பெண் அவளது தங்கையாக இருக்குமோ என்ற சந்தேகமும் கொண்டார். தமது மனைவிக்கு சொந்தத் தங்கையு மில்லை; ஒன்றுவிட்ட தங்கை களுமில்லை என்பதை அவர் நிச்சயமாக அறிந்தவர் ஆதலால், இவள அந்தக் குடும்பத்தைச் சேர்ந்த வேறே யாராகவாகிலும் இருப்பாளோ என்று சந்தேகித் தார். அவளது வடிவ ஒற்றுமையைப் பற்றிய சந்தேகமும், வியப்பும் ஒருபுறம் அவரை வருத்தியதோடு, அவள் போலீஸ் சார்ஜண்டு துரை போல வேஷம் போட்டுக் கொண்டு வந்த வகையென்ன என்ற ஐயமும் வியப்பும் அளவுகடந்து வதைத்தன. அவள் முதலில் வந்த போது துடைப் பக்கங்கள் சாதாரணமாக இருந்ததையும், மைனரை அழைத்துக் கொண்டு அவனது பங்களாவிற்கு போய்விட்டுத் திரும்பி வந்த பிறகு இரண்டு துடைப் பக்கங்களிலும் பெருத்த பெருத்த புடைப்புகள் இருந்ததையும் ஜெமீந்தார் கண்டு, அதைப்பற்றி ஒருவாறு ஐயமுற்றிருந்தாா ஆகையால், கால் சட்டைகளின் பைகளுக்குள் அவர் தமது கையை நுழைத்து அவற்றிற்குள்ளே இருந்த முட்டைகளை எடுத்து அவிழ்த்துப் பார்த்தார்; அவைகள் முற்றிலும் நோட்டுகளாகவும் விலையுயர்ந்த ஆபரணங்களாகவும இருக்கக் கண்டாா. காணவே, அவைகள் மைனரால கொடுக்கப் பட்ட லஞ்சப் பொருள்கள் என்பது சந்தேகமறத் தெரிந்தது. போலீஸ் இலாகாவின் உத்தியோகங்கள் பெண்பிள்ளைகளுக்குக் கொடுக்கப்படுவன அல்ல ஆகையால், அவள் அவ்வாறு வேஷந்தரித்து வந்தது. ஜனங்களை ஏமாற்றிப் பொருள் பறிப்பதன் பொருட்டாகிலும், அல்லது, போலீஸ் சார்ஜண்டைப் போல வரவேண்டும் என்ற வீண் பெருமை, அல்லது, பைத்தியக் கார அவாவின் பொருட்டாகிலும் இருக்க வேண்டும் எனறு ஜெமீந்தார் பலவித யூகங்கள் செய்யலானார். அவ்வளவு அபூர்வமான கட்டழகும் யௌவனமும் வாய்ந்த அதன் அணங்கு, ஸ்திரீகளுக்குரிய நாணம், மடம், அச்சம், பயிர்ப்பென்னும்

லட்சணங்களை எல்லாம் காற்றில் தூற்றி விட்டு, ஆண்மக்களும் செய்ய அஞ்சத்தக்க அவ்வளவு பெருத்த மோசத்திலும் துணிகர மான செய்கையிலும் இறங்கியது அவரால் சகிக்க இயலாத அற்புதமாகத் தோன்றி அவரது மனதை வதைத்தது. அவளது மனம் அப்படிப்பட்ட துன்மார்க்கத்தில் இறங்கியதைக் குறித்து அவர் பெரிதும் இரக்கமும் விசனமும் அடைந்தவராய் அந்தப் பெண்ணினது முகத்தையே உற்று நோக்கிய வண்ணம் இருந்தார். மதனகோபாலன் வியப்பினாலும் பிரமிப்பினாலும் ஸ்தம்பித்து ஊமையன் போல உட்கார்ந்திருந்தான்.

அந்தச் சமயத்தில் அந்தப் பெண் மறுபடியும் தனது கண்களைத் திறந்து கொண்டு அவர்களை நோக்கினாள். அவள் சகிக்க இயலாத வெட்கமும், சங்கடமும், திகிலும் கொண்டிருக்கிறாள் என்பதை அவளது முகம் நன்றாகக் காட்டியது. அவள் ஜெமீந்தாரை நோக்கி, "ஐயா! தாங்கள் செய்வது நியாயமான காரியந்தானா? நான் கீழே வீழ்ந்ததைக் கண்டு தாங்கள் என்னை இங்கே கொண்டு வந்து உபசரித்து, என் உயிரைக் காப்பாற்றியது நல்ல தரும விஷயந் தான். ஆனால், என்னுடைய பணங்களும் நகைகளும் இருக்கும் பையை எடுத்துப் பிரித்துப் பார்ப்பது நியாயமாகுமா? அவைகளில் ஏதாவது ஒன்று காணாமற் போனால், அதை யார் எடுத்தார்கள் என்று நினைக்கிறது?" என்று கூறிய வண்ணம் தனது கால சட்டையையும் மேல் சட்டையையும் எடுத்துத் தனது தேகத்தை மறைத்துக் கொள்ள முயன்றாள். அவளது கிலேசத்தைக் கண்ட மதனகோபாலன் உடனே அப்பால் போய், விலையுயர்ந்த ஒரு சால்வையைக் கொணர்ந்து பிரித்து அவள்மீது போர்த்தினான்.

அப்போது ஜெமீந்தார் அவளை நோக்கி இரக்கமாகவும் விசனமாகவும் பேசத் தொடங்கி, "பெண்ணே! உன்னைப் பார்த்தால், தக்க பெரிய மனிதருடைய வீட்டுப் பெண் போல இருக்கிறாய்! நீ இப்படிப் போலீஸ் சார்ஜண்டு துரை போல வேஷம் போட்டுக் கொண்டு வரவேண்டிய காரணம் என்ன? இப்படி வந்து மைனருடைய சொத்துகளை எல்லாம் அபகரித்து வந்த காரணமென்ன? இந்தக் காரியங்கள் எல்லாம் உன்னைப் போன்ற பெண்பிள்ளைகள் செய்யக்கூடியவைகளா? நான் இப்போது உடனே போலீசாரை வரவழைத்து உன்னை

அவர்களிடத்தில் ஒப்புவித்து விட்டால், நீ அநியாயமாகப் பெருத்த தண்டனைக்கு ஆளாகிவிடுவாயே! அப்புறம் இந்தப் பணமும் நகையும் மைனரை அல்லவா சேர்ந்துவிடும். அவைகளை எல்லாம் உணராமல் கேள்வி கேட்க ஆரம்பித்துவிட்டாயே! இவ்வளவு சாமர்த்தியம் செய்த நீ பெருத்த முட்டாள் என்றே நான் நினைக்கிறேன்! கண்ணே! உன் முகத்தைப் பார்க்கப் பார்க்க எனக்கு ஒருவித இரக்கமும் விசனமும் உண்டாகின்றன. உனக்கு எங்களால் ஏன்ற உதவியைச் செய்ய வேண்டும் என்ற அவா உண்டாகிறதேயன்றி, உன்னைத் தண்டனைக்கும் அவமானத் துக்கும் ஆளாக்க எங்களுக்கு விருப்பமுண்டாகவில்லை. நீ உன்னுடைய வரலாறுகளை எல்லாம் ஒளியாமல் எங்களிடத்தில் சொல்லிவிடுவாயானால், நீ இனியாவது நல்ல வழிக்கு வரும படியான மார்க்கத்தை நான் தேடுகிறேன். மறைப்பாயானால், நான் தாக்ஷண்ணியம் பாராமல், உன்னை உடனே போலீசாரிடமே ஒப்புவித்து விடுவேன்" என்று கண்டிப்பாகவும் அன்பாகவும் கூறினார்.

அதைக் கேட்ட அந்த ஸ்திரீ மிகுந்த கிலேசமும் அச்சமும் அடைந்தவளாய்ச் சிறிது நேரம் மௌனமாக இருந்து, "ஐயா! தாங்கள் சொன்னது நியாயமான சங்கதி. தாங்கள் மனசு வைத்தால் என்னை இப்போது அவமானத்துக்கும் தண்டனைக்கும் ஆளாக்கி என்னைத் தொலைத்துவிடலாம். பல நாளைய திருடன ஒரு நாள அகப்படடுக் கொள்வதுண்டு. நான் அப்படி அகப்படமாடடேன என்று இதுவரையில் நான் நினைத்து இறுமாப் படைந்திருந்தேன். ஆனால் நான் இன்றைய தினம் வசமாக மாட்டிக் கொண்டேன; தாங்கள் என்னை அதிகாரிகளிடத்தில் காட்டிக் கொடுப்பதில்லை என்று உறுதியாகச் சொன்னால் நான் என்னுடைய வரலாறுகளை எல்லாம் உடனே சொல்லி விடுகிறேன்" என்றாள்.

***ஜெமீந்தார்:-*** அந்த உறுதியை நான் தான் ஏற்கனவே சொல்லி விட்டேனே. நீ பயப்படாமல் எந்தச் சங்கதியையும் சொல்லலாம — எனறார்.

அந்த ஸ்திரீ, "ஐயா! நான் யார் என்பதும், என்னுடைய தாய் தகப்பன்மார் எவர்கள் என்பதும் எனக்கே இதுவரையில் தெரிய

வில்லை. ஆனால் எனகது ஒரு தம்பி இருக்கிறான். அவனும் நானும் இளங்குழந்தைகளாக இருந்த போதே எங்களுடைய தாயும தகப்பனும் எங்களை அநாதைகளாக விட்டு இறந்து போய் விட்டார்களாம். மைலாப்பூரில் உள்ள ஒரு வக்கீல் எங்கள் மேல் இரக்கம் கொண்டு, எங்களை சைதாப்பேட்டையில் உள்ள அவருடைய குடியானவன் ஒருவன் வீட்டுக்கு அனுப்பி அங்கேயே வைத்து வளர்க்கச் செய்தார். எங்களுக்கு ஆன செலவுகளை எல்லாம் அவரே கொடுத்து எங்கள் இரண்டு பேரையும் 7-வது வகுப்பு வரையில் படிக்க வைத்தார் அதன் பிறகு என்னுடைய தம்பியை ஒரு குமாஸ்தா உத்தியோகத்திலும் என்னைப் பள்ளிக்கூடத்து வாத்திச்சி வேலையிலும் அவரே அமர்த்தினார். அவ்வளவோடு, அவர் எங்களுக்கு உதவி செய்வதை நிறுத்திக் கொண்டார். நான் அடையாற்றில் சொற்ப சம்பளத்தில் வாத்திச்சியாக இருந்து வந்தேன் ஆனாலும், எனக்குப் பணத்தின் மேலும, நகைகளின் மேலும, உலகத்தில் உள்ள இனிமையான பெணகளின் மேலும் பிரமாதமான பேராசை தோன்றியதன்றி, என்னுடைய எண்ணங்களும், நடையுடை பாவனைகளும் அசாத்தியமாகவும் அமிதமாகவும் இருந்து வந்தன. அந்தச் சமயத்தில அந்த ஊரில சுந்தரம் பிள்ளை என்ற ஒருவர் ஹெட்கான்ஸ்டேபில் வேலையில் இருந்தார். அவர் மகா சாமர்த்தியமும் அழகுமுடையவர். அவர் எனனிடத்தில் அடிக்கடி வந்து வேடிக்கையாகவும் சாதுர்யமாகவும் பேசி எனக்கு வேண்டிய பண உதவிகளை எல்லாம் செய்து வந்து என் மனசைக் கவர்நது விட்டார். என்னைக் கணடிக்கும்படியான பெரியோர் எவரும் இல்லாமையால் நான அவருடைய பிரியப்படி நடந்து கடைசியில் என் வேலையை விட்டுவிடடு அவருடைய சவரக்ஷ ணையில் போய்விட்டேன். அதன் பிறகு அவருக்குப் போலீஸ் உத்தியோகம போய்விட்டது; ஆனால் அவர் மகா தந்திரமும் தைரியமும வாய்நதவர் ஆகையால், அவர் போலீஸ் உடுப்புகளில் பலவற்றை அபகரித்தும் புதிதாகச் செய்தும் வைத்துக் கொண்டார் எனக்கும் அவர் பல தந்திரங்களைப் போதித்தார். அவரும் நானும் போலீஸ் இன்ஸ்பெக்டர் போலவும், சார்ஜண்டு போலவும், ஹெடகான்ஸ்டேபில் போலவும், கமிஷனர்

போலவும், ஒரு நாளைக்கு ஓரிடமாக போய் பலவகையில் பொருள் தேடிக் கொண்டு வருவதை வழக்கமாக வைத்துக் கொண்டிருக்கிறோம். 27-மயில் சுற்றளவுடைய இந்தப் பெருத்த பட்டணத்தில் எத்தனையோ போலீஸ் ஸ்டேஷன்கள் இருக்கின்றன. அவைகளில் எத்தனையோ இன்ஸ்பெக்டர்களும், சப் இன்ஸ்பெக்டர்களும், சார்ஜண்டுகளும் இருக்கிறார்கள். ஆகையால், எங்களைக் காணும் உண்மையான போலீசார், நாங்களும் ஏதோ ஒரு ஸ்டேஷனைச் சேர்ந்த போலீசார் என்று நினைத்துக் கொண்டு போவது வழக்கமாகையால், நாங்கள் அவர்களுடன் கூட இருந்தே கொள்ளையடித்து வருகிறோம். எங்களிடத்தில் பல ஆட்களும் இருக்கிறார்கள். நாங்கள் சில குதிரைகளையும் வண்டிகளையும் மறைவான ஓரிடத்தில் வைத்திருக்கிறோம். இன்றைய தினம் நான் போலீஸ் சார்ஜண்டாக மைலாப்பூர்ப் பக்கம் வந்தேன். அவர் இன்ஸ்பெக்டராக வணணாரப்பேட்டைப் பக்கம் போயிருக்கிறார். நான் இங்கே வந்த இடத்தில் மைனர் அகப்பட்டுக் கொண்டார். நான் அவரைத் தப்பவைப்பதாகச் சொல்லி அவரிடத்தில் இந்தப் பொருள்களை எல்லாம் அபகரித்தது போலவே. நாங்கள் இருவரும் வெகு சுலபத்தில் பல இடங்களில் அபகரித்து வந்திருக்கிறோம். இதுதான் உண்மையான வரலாறு; நீங்கள் எங்களை இனி எந்த வழியில் விட்டாலும் சம்மதந்தான்" என்று இறைஞ்சிய வண்ணம் கூறினாள்.

அந்த வரலாற்றைக் கேட்ட மதனகோபாலனும் ஜெமீந்தாரும் திகைப்பும் வியப்பும் திக்பிரமையும் கொண்டு பலே! சபாஷ்! என்று மூக்கின் மேல் விரலை வைத்தனர். ஜெமீந்தார் தாம் என்ன சொல்வதென்பதை அறியாமல் சிறிது நேரம் இருந்தபின் அவளை நோக்கி, "பெண்ணே! உன்னுடைய பெயரென்ன?" என்று அன்பாக வினவினார். அவள், "என் பெயர் ராஜாயி அம்மாள்" என்றாள்.

**ஜெமீந்தார்:-** ஆகா! எவ்வளவு உயர்வான பெயர்! ஒரு பெருத்த மகாராஜாவின் பட்டமகிஷிக்கு வைக்க வேண்டிய பெயரை வைத்துக் கொண்டிருக்கிறாய். அது போலவே, ஒரு ராஜாத்திக்கு இருக்க வேண்டிய உன்னத அழகும் உன்னிடத்தில் இருக்கிறது. ஆனால் உன்னுடைய புத்திமாத்திரம் கேவலம் கொள்ளைக்காரியின் புத்தியாக அமைக்கப்பட்டிருக்கிறது! அடாடா! என்ன விபரீத

புத்தி! என்ன விபரீத புத்தி! சரி; உன் பெயர் இருக்கட்டும். உன்னுடைய தம்பியின் பெயர் என்ன?

***ராஜாயி:-*** அவனுடைய பெயர் மோகனரங்கன்.

***ஜெமீந்தார்:-*** அதுவும் அழகான பெயராகத்தான் இருக்கிறது! ஆனால் அவனுடைய புத்தி எப்படி இருக்குமோ? அவனுடைய திருவிளையாடல்களை எல்லாம் பார்த்தால் அதுவும் தெரிந்து போய்விடுகிறது. சரி; அவன் இப்போது எங்கே இருக்கிறான்?

***ராஜாயி:-*** அவன் இதுவரையில் மாரமங்கலம் ஜெமீந்தார் வீட்டில் ஒரு குமாஸ்தாவாக இருந்தான். இப்போது அவனும் எங்களிடத்திற்கு வந்து சேர்ந்துவிட்டான்.

***ஜெமீந்தார்:-*** ஏன் வந்துவிட்டான்? உங்களுக்குப் பக்கபலமாக இருக்கட்டும் என்று அவனையும் அழைத்துக் கொண்டீர்களோ?

***ராஜாயி:-*** இல்லை இல்லை. அவன் மிகவும் பயந்தவன்; அவனுக்குச் சமயோசிதமான தந்திரமும் சாமர்த்தியமும் சுத்தமாக இல்லை; அவனை அந்த ஜெமீந்தாரம்மாளே அனுப்பிவிட்டாள்.

***ஜெமீந்தார்:-*** சரி; அவனும் அவ்விடத்தில் அக்காளுடைய தொழிலைச் செய்திருப்பான். அதற்காக அவர்கள் ஓட்டியிருப் பார்கள்.

***ராஜாயி:-*** அதெல்லாம் ஒன்றுமில்லை; அவன் நிரம்பவும் அழகாக இருப்பான். அந்த ஜெமீந்தாருடைய மூத்த பெண் துரை ஸானியம்மாள் என்று ஒருத்தி இருக்கிறாள். அவள் இவனைப் பார்த்து மோகித்து இவனையே கட்டிக் கொள்வேன் என்று ஒரே பிடிவாதமாக இருந்தாள். அவளும் என் தம்பியும் தனியாக இருந்த போது, அவளுடைய தாய் கண்டு, என் தம்பியை அனுப்பி விட்டாள்! நாங்கள் எங்களுடைய சாமர்த்தியத்தைக் காட்டி, அவர்களை எல்லாம் ஏமாற்றி, பெண்ணைக் கொண்டு போய் நேற்றைக்கு முந்தியநாள் இரவில் என் தம்பிக்குக் கட்டி அவளையும் எங்களிடத்திலேயே வைத்துக் கொண்டிருக்கிறோம் – என்று அவர்கள் பெண்ணைக் கொண்டு போய்க் கலியாணம் செய்த வரலாறுகளை எல்லாம் விவரமாகக் கூறினாள்.

அதைக் கேட்ட ஜெமீந்தாரும், மதனகோபாலனும் முன்னிலும் ஆயிரமடங்கு அதிகமான பிரமிப்பும் ஆச்சிரியமும் அடைந்து ஸ்தம்பித்துப் போய் கால் நாழிகை நேரம் நின்றனர். உடனே மதன கோபாலன், "அடாடா என்ன ஆச்சரியம்! துரைஸானியம்மாள் கள்ளம் கபடம் முதலிய துர்க்குணங்களையே அறியாத மகா நுட்ப மான புத்தியை உடையவளாயிற்றே! அவளுடைய கதி இப்படியா முடிந்தது! ஐயோ பாவம்! மைனரோ இப்படியானான். அந்தப் பெண் அப்படிப் போய்விட்டாள். கல்யாணியம்மாளுடைய நிலைமை நிரம்பவும் பரிதாபகரமாக ஆகிவிட்டதே!" என்று மிகுந்த விசனமும் உருக்கமும் தோன்றக் கூறினான்.

ஜெமீந்தார், "ஏழை அழுத கண்ணீர் கூரிய வாளையொக்குமெ என்பது பொய்யாகுமா? ஊரார் வயிற்றெரிச்சல் சும்மா விட்டு விடுமா? கல்யாணியம்மாளுக்கு இந்த அவமானமெல்லாம் போதாது; அவள் பரிசுத்தமான குணமுடையவளாக இருந்தால் தானே பிள்ளைகளும் அப்படி இருப்பார்கள்; தாய் ஓரடி பாய்ந்தால் குட்டி ஒன்பதடி பாய்கிறது; ராஜாயி அம்மா! இதெல்லா மிருக்கட்டும். உன்னையும் உன் தம்பியையும் உத்தியோகங் களில் யாரோ ஒரு வக்கீல் அமர்த்தினதாகச் சொன்னாயே! அந்த வக்கீல் சைதாப்பேட்டையில் இருப்பவரா? அவர் அதன் பிறகு உங்களைக் கவனிக்கவே இல்லையா?" என்றார்.

***ராஜாயி:-*** அவர் இதோ இந்த மைலாப்பூரில் இருக்கிறார். நாங்கள் வேலையில் அமர்ந்த பின் அவர் எங்களைக் கவனிக்கவில்லை.

**ஜெமீந்தார்:-** அவருடைய பெயரென்ன?

***ராஜாயி:-*** அவரை சிவஞான முதலியார் என்பார்கள்.

**ஜெமீந்தார்:-** (மிகவும் திடுக்கிட்டு) ஹா! யார்? சிவஞான முதலி யாரா? இதோ கச்சேரித் தெருவில் இருக்கிறாரே, அந்த சிவஞான முதலியாரா?

***ராஜாயி:-*** ஆம். அவர் தான் - என்றாள்.

அதைக் கேட்ட ஜெமீந்தார் அளவு கடந்த கலக்கமும் குழப்பமும் துயரமும் அடைந்து, கால் நாழிகை நேரம் சிந்தனையில் ஆழ்ந்திருந் தவராய் மறுபடியும் அவளை நோக்கி, "பெண்ணே! இப்போது உங்கள் இருவருடைய வயசும் என்ன ஆகிறது?" என்றார்.

***ராஜாயி:-*** எனக்குச் சரியாக இருபதாகிறது. என் தம்பிக்குப் பதினெட்டாகிறது.

***ஜெமீந்தார்:-*** (முனனிலும் அதிக வியப்பும் திகைப்புமடைந்து) ஹா! அப்படியா! அந்த வழக்கில் உங்களை சைதாப்பேட்டைக்கு அனுப்பினதாகச் சொன்னாயே, அதுவரையில் நீங்கள் யாருடைய வீட்டில் இருந்தீர்கள்?

***ராஜாயி:-*** அந்த வக்கீல் வீட்டிலேயே இருந்ததாகத் தான் சொற்ப மாக நினைவுண்டாகிறது.

***ஜெமீந்தார்:-*** அவர் உங்களை அனுப்பிய போது உங்களுக்கு எவ்வளவு வயசிருககும்.

***ராஜாயி:-*** எனக்கு ஒரு சுமார் ஆறு வயசிருக்கலாம். என் தம்பிக்கு நாலு வயசிருக்கலாம்.

***ஜெமீந்தார்:-*** அவர் உங்களை அனுப்பினாரே; என்ன காரணத் தினால் அனுப்பினாா என்பது இப்போது உனக்கு ஞாபகம் இருக்கிறதா?

***ராஜாயி:-*** அப்போது நடந்த சங்கதி எல்லாம் எனக்குக் கனவு போல இருக்கிறது; இந்த சிவஞான முதலியார் அப்போது இந்த வீட்டில் இல்லை; வேறே ஒரு வீட்டில் இருந்தார். அந்த வீட்டில் இன்னொரு குடித்தனக்காரர் இருந்தார். அவரும் வக்கீல் வேலை செய்தவர் என்று தான் நான் சந்தேகிக்கிறேன். அவருக்கும் இரண்டு குழந்தைகள் இருந்தன. ஊரில் அப்போது வாந்திபேதி பிரமாத மாகப பரவி இருந்தது. திடீரென்று அந்த இரண்டு குழந்தைகளும் வாந்திபேதி கண்டு ஒரே நாளில் இறந்து போய்விட்டன. எங்களுக் கும் அந்த வியாதி உண்டாகிவிடும் என்று பயந்து சிவஞான முதலியாா அன்றைய தினமே எங்களை சைதாப்பேட்டைக்கு அனுப்பிவிட்டார்.

***ஜெமீந்தார்:-*** ஓகோ! அப்படியா சங்கதி! நீங்கள் சைதாப்பேட் டையில் யாருடைய வீடடில் இருநதீர்கள்?

***ராஜாயி:-*** செங்குந்தர் வீதியில் அண்ணாமலை முதலியார் என்ற ஒருவருடைய வீட்டில் இருந்தோம்.

***ஜெமீந்தார்:-*** அங்கே போன பிறகு நீங்கள் மறுபடியும் வக்கீலின் வீட்டுக்குத் திரும்பி வந்ததுண்டா?

***ராஜாயி:-*** வரவே இல்லை. அவருடைய வீடு இரண்டு கட்டுள்ள பந்தோபஸ்தான வீடு. அங்கே அவர் எங்களை வெளியிலே விடாமல் இரண்டாவது கட்டிலேயே வைத்துப் பூட்டிவைத்திருந் தார். எங்களுடைய தகப்பனுக்கு விரோதியான பங்காளிகள் சிலர் இருப்பதாகவும், நாங்கள் வீட்டை விட்டு வெளியில் வந்தால், அவர்கள் எங்களைத் தூக்கிக் கொண்டு போய்க் கொன்று போட்டு விடுவார்கள் என்றும் சொல்லி அவர் பயமுறுத்திக் கொண்டு வந்தார். ஒரு வாத்தியார் மாத்திரம் இரண்டாவது கட்டுக்கு வந்து கொஞ்ச நேரம் இருந்து எங்களுக்குப் பாடம் சொல்லிக் கொடுத்து விட்டுப் போய்விடுவார். அப்போது அந்த அண்ணாமலை முதலி யாரும் கூடவே இருப்பார். வக்கீல் சிவஞான முதலியார் எப்போ தாவது வந்து எங்களைப் பார்த்து, "நீங்கள் நன்றாகப் படித்து சீக்கிரம் வேலைக்குப் போய்விட வேண்டும். நான் இனி அதிக காலம் பணங்கொடுத்து உங்களை சவரக்ஷிக்க முடியாது" எனறு சொல்லிவிட்டுப் போவார்; அதன் பிறகு எங்களுக்கு வயசு வந்த வுடனே எங்களை வேலையில் அமர்த்தி வைத்துவிடடு, "அநாதை யாக அகப்பட்ட உங்கள மேல் நான் இரக்கம் கொண்டு இத்தனை வருஷகாலம் காப்பாற்றிப் படிப்பும் சொல்லிக் கொடுத்து வேலை யிலும் வைத்துவிட்டேன். இனிமேல உஙகளுடைய காரியங் களை எல்லாம் நீங்களே பார்த்துக் கொள்ளுங்கள்" என்று சொல்லி விட்டுப் போய்விட்டார். அதன் பிறகு நான் அடையாற்றில் இருந்த படி இந்தத் துறையில் இறங்கினேன். என் தம்பி தேனாம்பேட்டை யில் இருந்து இரண்டு மூன்று நாளைக்கு முன் எங்களிடம் வந்து சேர்ந்தான்-என்றாள்.

அவளது வரலாற்றை எல்லாம் கேட்டு வந்த கிருஷ்ணாபுரம் ஜெமீந்தாரது மனம் கரைகடந்த ஆத்திரமும், வீராவேசமும கொண்டு பதறியது. அவரது தேகம் கட்டிலடங்காமல் துடித்தது. கோபத்தினாலோ துயரத்தினாலோ என்பது தெரியாதபடி அவரது பெண்கள் கோவைப் பழம் போலச் சிவந்து போயின. மீசைகள் படபடவெனத் துடித்தன. அவர் எழுந்து அந்த அறையில் அங்கு மிங்கும் உலாவினார்; அடிக்கடி நெடுமூச்செறிந்து கர்ச்சித்தார்;

அவரது விபரீதமான தோற்றத்தைக் கண்டு மதனகோபாலன் பெரிதும் அச்சமும் கலக்கமும் அடைந்து, அவர் அவ்வாறு சஞ்சலம் அடைய வேண்டிய காரணம் என்னவென்று சிந்தனை செய்யலானான். ராஜாயி அம்மாள், தான் பயந்து கொண்டு தனது வரலாறுகளை எல்லாம் வெளியிட்டு விட்டோமே என்றும், அவர் தங்களை எல்லாரையும் தண்டனைக்குக் கொண்டு போய் விடுவாரோ என்றும் அஞ்சி அவரது முகத்தைப் பார்த்த வண்ணம் இருந்தாள். அவ்வாறு கால் நாழிகை நேரம் கழிந்தது. அப்போதும் ஜெமீந்தாரது கொதிப்பு அடங்கியதாகத் தோன்றவில்லை. அவர் ராஜாயியிடத்தில் நெருங்கி, "பெண்ணே! உனக்கும் உன்னுடைய தம்பிக்கும் நேர்ந்த இந்தக் கதியைப் பற்றியும், நீங்கள் இப்படிப் பட்ட தகாத காரியங்களைச் செய்வதைப் பற்றியும், என் மனம் படுகிறபாட்டை அந்தக் கடவுள் தான் அறிய வேண்டும். நீங்கள் ஒரு கோடீசுவரனுடைய வயிற்றில் ஜனித்திருந்தும், உங்களுடைய தலையெழுத்து நீங்கள் இப்படித் திண்டாடித் தெருவில் நின்று கேவலம் இழிவான செய்கைகளைச் செய்து வயிறு வளர்க்கும்படி செய்ததே என்பதை நினைக்க நினைக்க என் மனம் பதறுகிறது, பெண்ணே! உங்களுடைய பிறப்பின் வரலாறெல்லாம் எனக்கு நன்றாகத் தெரியும்; நீங்கள இருவரும் ஒரு கோடீசுவரருக்குப் பிறந்த குழநதைகள். அவா சில காரணஙகளினால் உங்களை இந்த வககீலின் போஷணையில வைத்துப் போனார். இந்த வக்கீல், நீங்கள் இருவரும் வாந்தி பேதியினால் இறந்து போய்விட்டீர்கள் என்று அவருக்குச் செய்தி அனுப்பிவிட்டு உங்கள் பொருட்டு அனுப்பப்பட்டிருந்த ஐந்து லட்சம் ரூபாயையும் அபகரித்துக் கொண்டு, உங்களை ஏமாற்றி அநியாயமாக இப்படி பரதேசி ஆண்டிகளாக ஓட்டிவிட்டிருக்கிறான். அந்தப் படுபாவி மாத்திரம் இப்போது இங்கே இருப்பானானால், அவனை நான் குத்திக் கொன்று அவனுடைய குடல்களை மாலையாகப் போட்டுக் கொண்டிருப்பேன்! இருக்கட்டும்; அவன் எங்கே தப்பினான்; அவனுக்குச் சேர வேணடிய மரியாதையை நான் எப்படியும் செய்தே தீருவேன்" என்று ஆத்திரத்தோடு கூற, அவரது கண்களில் இருந்து கண்ணீர் குபீரென்று பொங்கி வெளிப்பட்டது. அவர் ஒரு குழந்தை போல விம்மிவிம்மி அழுது தமது வஸ்திரத்தால் முகத்தை மூடிக் கொண்டார்.

அவர் சொன்ன எதிர்பாராத புதிய விஷயத்தைக் கேட்ட ராஜாயி அம்மாள் அளவிலடங்காத வியப்பும் திகைப்பும் ஆவலும் கொண்டவளாய்ச் சடக்கென்று எழுந்து உட்கார்ந்த வண்ணம் மிகவும் மரியாதையாகவும் பணிவாகவும் பேசத் தொடங்கி, "ஐயா! தாங்கள் சொல்வதைக் கேட்க, இப்போது நான் கனவு காண்கிறேனோ, அல்லது, இந்த சம்பாஷணை உண்மையிலேயே நடக்கிறதோ என்பது எனக்கு சந்தேகமாக இருக்கிறது. நாங்கள் கோடீசுவரருடைய குழந்தைகள் என்பது உண்மைதானா? எங்களுடைய தாயும் தகப்பனும் இப்போது எங்கே இருக்கிறார்கள்? இவ்வளவு தூரம் கெட்டுப் போன எங்களை அவர்கள் இனிமேல் சேர்த்துக் கொள்வார்களா? நாங்களும் தாய் தகப்பனைப் பார்க்கும்படியாக இனி இந்த ஜென்மத்தில் நேரப் போகிறதா?" என்று மிகவும் உருக்கமாகவும் ஆவலாகவும் கூறினாள்.

அதைக் கேட்ட ஜெமீந்தார், "குழந்தாய்! உஙகளுடைய தாய் நீங்கள் குழந்தைகளாக இருக்கையிலேயே இறந்து போய் விட்டாள். உங்களுடைய தகப்பனார், உங்களுடைய தாயையும், உங்களையும் இழந்த துயரத்தைச் சகிக்கமாட்டாமல் ஏக்கங் கொண்டு பித்தன் போலவும் நடைப்பிணம் போலவும் இருந்து கொண்டிருக்கிறார். அவர் ஒரு சமஸ்தானத்தின் ஜெமீந்தார். அதோடு அவர் ஒரு பெருத்த வியாபாரமும் செய்து வருகிறார். அவரிடத்தில் இப்போது ரொக்கமாக மாத்திரம் இரண்டு கோடி ரூபாய் இருக்கிறது. இருந்தும் என்ன உபயோகம்? அவர் எல்லாவற்றையும் தருமத்துக்கு எழுதி வைத்துவிட்டு வெகு சீக்கிரத்தில் சந்நியாசம வாங்கிக் கொள்ள எண்ணியிருக்கிறார். நீங்கள் செய்யும தொழிலை அவர் அறிந்தால், அவரது இருதயம் வெடித்துப் போய் விடும். இருந்தாலும், நீங்கள் இந்தத் தொழிலையே அடியோடு ஒழித்து நல்ல நடத்தை உடையவர்களாய் மாறிவிடுவதாக உறுதி சொல்ல வேண்டும். அதோடு, நீ, அந்த சுந்தரம் பிள்ளை, உன்னுடைய தம்பி, அவனுடைய புதிய சம்சாரம் ஆகிய மூவரும் உடனே இங்கே வரும்படி செய்யவேண்டும். அப்படி நீ நடந்து கொள்வாயானால், உன் தகப்பனார் இருக்குமிடத்தை நான் காட்டுவதோடு உங்களை எல்லாம் மன்னித்து அவர் ஏற்றுக் கொள்ளும்படி செய்கிறேன்" என்றார்.

உடனே ராஜாயியம்மாளினது முகம் அளவிறந்த மகிழ்ச்சியினால் இளகி ஜ்வலித்தது. அவர் எவ்விதம் நடந்து கொள்ளச் சொல்லுகிறாரோ அவ்வாறு தான் இனி நடந்து கொள்வதாக உறுதி கூறினாள்.

அந்தச் சமயத்தில், ஒரு வேலைக்காரன் ஓடிவந்து, மைலாப்பூரில் இருந்து போலீஸ் சப் இன்ஸ்பெக்டரும் பல ஜெவான்களும் வநதிருப்பதாகவும, அவாகளைக் கூப்பிடுவதாகவும் தெரிவித்தான்.

அவர்கள் கொலை நடந்த இடத்தைப் பார்க்க வந்தார்களோ, அல்லது, மைனர் லஞ்சம் கொடுத்ததாகச் சொன்னதன் மேல் அந்த சார்ஜண்டைத் தேடிக் கொணடு வந்தார்களோ என்ற சந்தேகமும் ஐயமும் ஜெமீந்தாரினது மனதில் எழுந்தன. அவர் உடனே அந்த ஆளை எச்சரித்து, சார்ஜணடு துரையின் குதிரையைப் போலீசார் காணாமல் மறைத்து விடும்படியும், சார்ஜண்டு அங்கே வரவில்லை என்று எல்லோரும் சொல்லும்படி எச்சரித்து வைக்கும்படியும் சொல்லியனுப்பிவிட்டு, அந்த உடைகளை எல்லாம் ஓர் இரும்புப் பெட்டியில் வைத்துப் பூட்டிவிட்டு, மோகனாங்கியை அழைத்து ராஜாயியை ரகசியமான ஓரிடத்தில் மறைத்து வைக்கும்படியும் அவளுக்கு சேலை முதலிய உடைகள் அணிவிக்கும்படியும் ஏற்பாடு செய்துவிட்டு, மதனகோபாலனை அழைத்துக் கொண்டு, பங்களாவிற்கு வெளியே ராஜபாட்டையில் இருந்த போலீசாரை நோக்கிச் சென்றாா.

★ ★ ★

32–வது அதிகாரம்

## கிணறு வெட்டப் பூதம் புறப்பட்டது

**மை**னரும் பாலாம்பாளும் சேர்ந்து கருப்பாயியை நன்றாக அடித்துக் கைகால்களை எல்லாம் கட்டித் தென்னஞ் சோலையின் பின்புற வாசலின் வழியாகத் தூக்கிக் கொணர்ந்து சமுத்திரத்தில் போட்டு விட்டு, அவள் அன்றோடு இறந்து போய் விடுவாள் என்று நிச்சயப்படுத்திக் கொண்டு, உள்ளே போய்விட்டார்கள் அல்லவா? அதன் பிறகு மறுநாள் மாலையில் கிருஷ்ணாபுரம் ஜெமீந்தாரினது பங்களாவிற்குள் படுத்துத் தனது வரலாற்றைச்

சொல்லிக் கொண்டிருந்த கருப்பாயியை மைனர் குத்தினான் என்பதில், இரண்டொரு கேள்விகள் பிறக்கலாம். அவள் தப்பிப் பிழைத்து அந்த பங்களாவில் இருக்கிறாள் என்பது அவனுக்கு எப்படித் தெரிந்தது? அப்படித் தெரிந்தாலும், அவள் தனது வரலாற்றைச் சொல்லிக் கொண்டிருந்த அதே சமயத்தில் அவன் வந்து குத்த எப்படி சரிபட்டது என்ற கேள்விகள் உண்டாகலாம.

அவர்கள் தென்னஞ் சோலைக்குள் கருப்பாயியை அடித்துச் சித்திரவரை செய்ததும், அவன் பிறகு கைகால்களைக் கட்டி அலைகளுக்குள் எறிந்ததும் வேறே எவருக்கும் தெரியாதென்றே அவர்கள் இருவரும் அன்றைய இரவு முழுவதும் நினைத்துக் கொண்டிருந்தனர். தங்களிடத்திலிருந்த பத்திரத்தை அபகரித்து வரும்படி கட்டையன் குறவன் கருப்பாயி முதலியோரிடத்தில் கல்யாணியம்மாள் ஏற்பாடு செய்திருக்கிறாள் என்பதை துரைஸானி யம்மாளால் ரகசியமாக அனுப்பப்பட்ட கடிதத்திலிருந்து அறிநது கொண்ட மைனரும் பாலாம்பாளும் யோசனை செய்து அன்றைய பகலிலேயே பத்திரத்தை ரிஜிஸ்டர் செய்து விட்டார்கள் என்பதை நமது வாசகர்கள் அறிந்து கொண்டிருக்கலாம். ஆகவே, அன்றைய தினம் இரவில் அந்தப் பத்திரத்தை மறைத்து வைக்காமல், பாலாம் பாள் வேண்டும் என்றே அதை கட்டையனிடத்தில் கொடுத்து விட்டாள். ஏனெனில், அந்தப் பத்திரம் ரிஜிஸ்டர் செய்யப்பட்டுப் போனதென்பதைக் கல்யாணியம்மாள் உணர்ந்து கொணடு அவமானமும் ஏமாற்றமும் அடைய வேண்டும் என்ற எண்ணத்தி னால் பாலாம்பாள் சொன்ன யுக்தியின் மேல், அவர்கள் அவ்வாறு செய்தனர். ஆகவே, முதல் நாளிரவில் பத்திரம் அபகரிக்கப்பட்டுப் போனதைப் பற்றி அவர்கள் சிறிதும் கவலைப்படாமல், கல்யாணி யம்மாளைத் தாங்கள் வென்றுவிட்டோம் என்ற நினைவினால் மகிழ்ச்சி அடைந்திருந்தனர். அதன் பிறகு, மறுநாளைய மாலையில் கருப்பாயி தென்னஞ் சோலைக்குள் ஒளிந்து கொண்டிருந்ததை மேன்மாடத்திலிருந்த பாலாம்பாளே கண்டு கொண்டாள். உடனே அவளது மனதில் ஒரு சந்தேகம் உண்டாயிற்று. பத்திரம் ரிஜிஸ்ட ராகி விட்டதைக் கண்ட கல்யாணியம்மாள் மறுபடியும் வேறே ஏதாகிலும் தந்திரம் செய்கிறாளோ என்றும், தன்னையே கொனறு விடும்படி ஒருகால் அவர்களைத் தூண்டி இருப்பாளோ என்றும்

பலவாறு யூகித்து பாலாம்பாள், உடனே மைனரிடத்தில் அந்தச் சங்கதியைச் சொல்ல, தாங்கள் கருப்பாயியை எப்படியும் கொன்று விடவேண்டும் என்று அவர்கள் தீமானித்துக்கொண்டு தென்னஞ் சோலைக்குள்ளே சென்று அவளைப் பிடித்து முன்னே விவரிக்கப் படடபடி அடித்துச் சித்திரவதை செய்தனர்.

அந்த அடிதடிச் சண்டையின் கடைசியில், கருப்பாயி மைனரைப் பார்த்து, "நீ என்னுடைய பிள்ளை" என்று சொன்னதை அவர்கள் இருவரும் ஒரு பொருட்டாகவே எண்ணவில்லை. ஏனெனில், நானே உண்மையான மைனரென்று அவன் உறுதியாக எண்ணி இருந்ததன்றி, குழந்தைப் பருவத்திலிருந்து எல்லோராலும் அப்படியே மதிக்கப்பட்டு வந்ததால், அதைப் பற்றி அவர்கள் சந்தேகிக்க ஏதுவில்லாதிருந்தது. கருப்பாயி அடியைப் பொறுக்க மாட்டாமல், அவ்வாறு பிதற்றித் தங்களைத் தாறுமாறாகத் தூற்றுகி றாள் என்றும், அவளது சொற்களுக்கு அர்த்தமே இல்லை என்றும் அவர்கள் இருவரும் நினைத்திருந்தனர். அன்றிரவு முழுதும் அவர்கள் ஒருவாறு மகிழ்ச்சி அடைந்தவர்களாகப் படுத்திருந்தனர் ஆனாலும், கருப்பாயிக்குப் பரிந்து கொண்டு கட்டையன் குறவன் வந்து தங்களைக் கொன்று போட்டுவிடுவானோ என்ற அச்சம் மாத்திரம் அப்போதைக் கப்போது மைனரது மனதில் தோன்றிக் கொணடிருநதது. ஆனால், அவளது பிணம் சமுத்திரத்தின் அலைகளினால் உருட்டபபட்டு மீன்களுககு இரையானாலும் ஆகலாம், அல்லது, நெடுந்தூரத்திற் கப்பால் ஒதுக்கப்பட்டாலும் படலாம் ஆதலால், அவளைத் தாங்கள் தான் கொன்றோம் என்பது வெளியாக வகையில்லை என்றும், ஆகையால் கட்டையன் குறவன் தங்களிடததில் கோபங்கொண்டு பழிவாங்க நினைக்க மாட்டான் என்றும் பாலாம்பாள் யோசனை சொன்னாள். அவ்வாறு அவர்கள இருவரும் அன்றைய இரவைப் போக்கினர்.

மறுநாளைய காலையில், வேலைக்காரர்களின் மூலமாக ஒரு புதிய செய்தி அவர்களுக்கு எட்டியது. கைகால்கள் கட்டப்பட்டு சமுத்திரத்தில் கிடந்த ஒரு கிழவியை முதல் நாளைய சாயுங்காலம் ஒருவர் கண்டெடுத்து பக்கத்திலுள்ள மனோகர விலாஸத்தில் கொண்டு வந்து போட்டிருப்பதாகவும், அவள் பிழைத்துக் கொண்டதாகவும், இன்னமும் ஸ்மரணை சரியாகத் திரும்பாத

வளாகக் கிடப்பதாகவும் வேலைக்காரர்கள் கூறினர், அதைக் கேட்ட மைனரும் பாலாம்பாளும் திடுக்கிட்டு அந்த விஷயத்தில் பெருத்த கவலையும் அச்சமும் கொண்டனர். அவளை அடித்துக் கட்டி சமுத்திரத்தில் போட்டது தாங்கள் தான் என்பதை கருப்பாயி வெளிப்படுத்தியே தீருவாள் என்ற நினைவும், அப்படி அவள் வெளியிடுவாளாகில், கொலை செய்ய முயன்ற குற்றம் தங்கள் மீது சுமரும் என்ற நினைவும் அச்சமும் உடனே தோன்றின. ஆனால், தாங்கள் அவ்வாறு செய்ததை எவரும் பார்க்கவில்லை ஆகையால், தக்க சாட்சியமில்லை என்று சர்க்காரில் ஒருகால் தங்களை விட்டுவிட்டாலும், அந்த விஷயத்தைக் கேள்வியுறும் கட்டையன் குறவன் தங்களை எப்படியும் கொன்றே தீருவான் என்ற ஒரு பெருத்த திகில் அவர்களது மனதில் உண்டாகிவிடடது. அதனால் அவர்கள் இருவரும் நெடுநேரம் வரையில் சகிக்க இயலாத கவலை கொண்டவர்களாய் வருந்தி இருந்து, கடைசியில் அவளைக் கொன்றுவிடுவதே உசிதமானதெனத் தீர்மானித்துக் கொண்டனர். அவ்வாறு, தாங்கள் அவளைக் கொல்வது தங்களது வேலைக்காரர்களுக்குத் தெரியக்கூடாதென்றும், அந்தப் பகல் கழிந்தவுடனே இரவில் மைனரே நேரில் போய் அந்தக் கொலையை நடத்த வேண்டும் என்று தீர்மானம் செய்யப்பட்டது. ஆனால், அவள் அன்றைய பகலிற்குள் அந்த பங்களாவை விட்டுப் போய்விடுகிறாளோ என்பதையும், போலீசார் அழைக்கப் படுகிறார்களோ என்பதையும் கவனிக்கும்படி, அவர்கள் தந்திரமாக ஓர் ஆளை அனுப்பி அந்த பங்களாவிற்கெதிரில் நிறுத்தி வைத்திருந்தனர். வேறோர் ஆளையும் தந்திரமாக அந்த பங்களா விற்குள் அனுப்பி, கருப்பாயி என்ன நிலைமையில் இருக்கிறாள் என்பதையும், எந்த இடத்தில் படுத்துக் கொண்டிருக்கிறாள் என்பதையும் அறிந்து கொண்டனர். இரவும் வந்தது; உடனே இருளும் சூழ்ந்து கொண்டது. பாலாம்பாள் மைனரிடத்தில் ஒரு பீச்சாங்கத்தியைக் கொடுத்து அவனை அனுப்பிவிட்டு, மேன் மாடத்திற்குப் போய், ஜன்னலின் வழியாகப் பார்த்துக் கொண்டே இருந்தாள். மைனர் கத்தியும் கையுமாக இருளில் மனோகர விலாஸ பங்களாவிற்குள் நுழைந்து ஏராளமாக நிறைந்திருந்த பூந்தொட்டி களின் மறைவில் ஒளிந்தொளிந்து எவரும் தன்னைக் காணாதபடி

ஓசையில்லாமல் நடந்து போய், முன் விவரிக்கப்பட்டபடி கருப்பாயியைக் குத்திவிட்டு ஓடி வந்துவிட்டான். ஆனால், அவளிருந்த ஹாலில் வேறே மனிதர் இருக்கிறார்கள் என்பதை அவன் உணர்ந்து கொண்டான் ஆனாலும், தான் அந்தப் பூத்தொட்டிகளின் மறைவில் மறைந்து மறைந்து தப்பித்துக் கொள்ளலாம் என்ற அசட்டுத் துணிவைக் கொண்டு அந்தக் கொடிய காரியத்தைச் செய்துவிட்டுத் திரும்பியோடுகையில் சுலபமாகப் பிடிபட்டுப் போனான். அவ்வாறு பிடிபட்ட பின், அவனும் பாலாம்பாளும், சார்ஜண்டு துரை போல வந்த ராஜாயி அமமாளால் வெகு சுலபத்தில் ஏமாற்றப்பட்ட விஷயம் முன்னரே விரிவாகக் கூறப்பட்டது. தனது பங்களாவிலிருந்த சொத்துகளை எல்லாம் அபகரித்துக் கொண்டு தன்னைத் தப்பவைப்பதாகச் சொன்ன சார்ஜண்டு துரை அவ்வாறு செய்யாமல் போய் விடுவாரோ என்றும், அல்லது, ஒருகால் அவர் கமிஷனர் துரை யினிடத்தில் சிபார்சு செய்து தன்னை விடுவிப்பாரோ என்றும் பலவாறு நினைத்துக் கலவரமடைந்தவனாக மைனர் மைலாப்பூர் போலீஸ் ஸ்டேஷனிற்குப் போய்ச் சேர்ந்தான். கிருஷ்ணாபுரம் ஜெமீந்தாரினது மோட்டார் வண்டியில் கருப்பாயியை வைத்துக் கொண்டு போன ஆட்கள், அவளை ராயப்பேட்டை வைத்திய சாலையில் விட்டுவிட்டு விரைவாக மைலாப்பூருக்குப் போய், அந்த ஊர்ப் போலீஸ் சப் இன்ஸ்பெக்டர் தமது ரைட்டரை அவ் விடத்தில் வைத்துவிட்டு மைனர் வந்தவுடனே அவனை லாக்கப் பில் பந்தோபஸ்தாக அடைத்து வைக்கும்படி சொல்லி விட்டு, அதே மோட்டார் வண்டியில் ஏறிக்கொண்டு ராயப்பேட்டை வைத்தியசாலைக்குப் போய்ப் பார்க்க, கருப்பாயி பிழைக்க மாடடாள் என்றும, இன்னம் ஒரு நாழிகைக்குள் இறந்து போய் விடுவாள் என்றும், அவள ஏதோ வாக்குமூலம் கொடுக்க விரும்பு கிறாள் என்றும் டாக்டர் துரை சொல்ல, அதைக் கேட்ட சப் இனஸ் பெக்டா, உடனே டெலிபோன் மூலமாக மாஜிஸ்டிரேட்டை அழைத்துப் பேசி, உடனே புறப்பட்டு அங்கே வருமபடி கேட்டுக் கொண்டார். துாமரணமாக இறப்போர் சொல்லும் வாக்குமூலத்தை மாஜிஸ்டிரேட்டு தான் வாங்க வேண்டும் என்பதும், அப்படி வாங்கப்படட வாக்குமூலம் கச்சேரிகளில் சரியான சாட்சியமாக

ஒப்புக்கொள்ளப் படலாம் என்பதும் சட்டமாதலால், அவ்வாறு அழைக்கப்பட்ட மாஜிஸ்டிரேட்டு உடனே தமது மோட்டார் வண்டியில் ஏறி அதிக விசையாக வண்டியை ஓட்டிக் கொண்டு அங்கே வந்து சேர்ந்தார். அதற்குள் டாக்டர் கருப்பாயிககுத் தேவையான சிகிச்சைகளைச் செய்து, அவளைப் பிழைக்கவைப்ப தற்குத் தமமாலேன்ற முயற்சிகளை எல்லாம் செய்து பார்த்துக் கொண்டிருந்தார்; அப்போது கருப்பாயி சாதாரணமாகப் பேசிக் கொண்டிருந்தாள் ஆனாலும் தனக்கு அந்தியகாலம நெருங்கி விட்டதாகையால் தான் சொல்வதை எல்லாம் உடனே எழுதிக் கொள்ளும்படி அவள் வற்புறுத்திக் கொண்டிருந்தாள். அப்போது அங்கே வந்த மாஜிஸ்டிரேட்டு, தம்மோடு டாக்டர், சப் இன்ஸ்பெக் டர் ஆகிய இருவரை மாத்திரம் வைத்துக் கொண்டு அவளது வாக்கு மூலத்தை அப்படியே ஒரு காகிதத்தில் எழுதிக் கொண்டார். அந்த வாக்குமூலம் முடிவதற்குள் கருப்பாயி பன்முறை களைத்துக் கண்மூடி வீழ்ந்து வீழ்ந்து விழித்துக் கொண்டு பேசிக் கொண்டே போகக் கடைசியில் அவளது சுவாசம் வாயால் வரத்தொடங்கியது. அதன் பிறகு பத்து நிமிஷ நேரத்தில் அவளது பிராணன் போய் விட்டது.

அவள் கொடுத்த வாக்குமூலத்தில் அபூர்வமான சங்கதிகளும் ஆச்சரியகரமான ரகசியங்களும் அடங்கியிருந்தமையால், அதன் விவரங்களை எல்லாம் விசாரணை காலம் வரையில் வெளியிடக் கூடாதென மாஜிஸ்டிரேட்டும் மற்றவரும் தீர்மானித்துக் கொண்டனர். அநத வாக்குமூலத்தில் டாக்டர் சப் இன்ஸ்பெக்டர் ஆகிய இருவரது கையெழுத்துகளும் வாங்கப்பட்டதன்றி, அது ஒரு கெட்டியான காகித உறைக்குள் வைத்து அரக்கு முத்திரை வைக்கப பெற்றது. அதன் பிறகு மாஜிஸ்டிரேட்டும் சப் இன்ஸ் பெக்டரும் அவ்விடத்தை விட்டுப் போயினர். டாக்டர் உடனே அந்தப் பிணத்தைக் கொளுத்திவிடும்படி அனுப்பிவிட்டார்.

கருபபாயி வாக்குமூலம் கொடுத்த போதே அதை சப் இன்ஸ் பெக்டரும் தமது கைக்குறிப்புப் புஸ்தகத்தில் எழுதிக் கொண்டிருந் தார் ஆதலால், அதில் குறிக்கப்பட்ட விஷயங்களைப் பற்றித் தாம் விசாரணை செய்து சாட்சியங்களைச் சேகரிக்க வேண்டும் என்ற எண்ணத்தோடு நேராக மனோகர விலாசத்திற்குச் சென்றார்.

அப்போது தான் சார்ஜாண்டு துரையின் ரூபத்திலிருந்து வெளிப் பட்ட ராஜாயியம்மாளுக்கும் ஜெமீந்தாருக்கும் நடந்த சம்பாஷணை முடிவுற்றது. சப் இன்ஸ்பெக்டரும் அவரோடு வந்த ஜெவான் களும் பங்களாவிற்குள் போய், கருப்பாயி படுத்திருந்து குத்தப் பட்ட இடம் முதலியவற்றைப் பார்த்துக் கொண்டதன்றி, மதன கோபாலன், சில ஆட்கள் ஆகிய சிலரது வாக்குமூலங்களையும் வாங்கிக் கொண்டு, அவ்விடத்தை விட்டுப் புறப்பட்டார். கருப்பா யியின் வாக்குமூலத்திலும் மதனகோபாலனது வாக்குமூலத்திலும், மைனரும், பாலாம்பாளும கருப்பாயியை அடித்துக் கட்டிக் கடலில் போடட விவரமெல்லாம சொல்லப்பட்டிருந்தமையால், பாலாம்பாள் உடந்தைக் குற்றவாளி என்பது நிச்சயமாகப்பட்டதாகையால், சப் இன்ஸ்பெக்டா நேராக ***சாயுஜ்ய நிலையத்திற்குப்*** போய் பாலாம் பாளையும் கைது செய்து அழைத்துக் கொண்டு மைலாப்பூர் ஸ்டேஷனுக்குப் போயச் சேர்ந்தார். சேர்ந்தவர் குற்றவாளிகள் இருவரையும் ஒருவரோடொருவர் பேசமுடியாத படி தனித்தனி யான அறைகளில் விடுத்துப் பூட்டினர்.

குற்றவாளிகள் இருவரும் தாங்கள் எவ்விதக் குற்றத்தையும் செய்யவில்லை என்றும், தங்களுக்குக் கருப்பாயி என்பவளையே தெரியாதாகையால், அவளைத் தாங்கள் கொல்லவே நியாய மில்லை என்றும் சொலலிவிட்டனர். மைனர், மதனகோபாலன் என்னும் வீணைவித்துவான் அயோக்கியத்தனமாக நடந்து கொணடதைக் கருதி தான் அவனைத் தங்களது பங்களாவில் இருந்து நீக்கிவிட்டபடியாலும், அதை உணர்ந்த மற்ற எல்லா பங்களாக்களிலும் உள்ள ஜனங்களும் அவனை விலக்கிவிட்ட படியாலும், அநதப் பகைமையைப் பாராட்டி அதற்காகப் பழிக்குப் பழி வாங்க வேண்டும் என்னும் கருத்தோடு, அவனே அந்தக் கிழவியைக் குத்திவிடடு அப்படிப்பட்ட அபாண்டமான கட்டுக் கதையைச் சொல்லுகிறான் என்று கூறினான். ஆனால், கருப்பாயி யும் தனக்கு விரோதமாக வாக்குமூலம் கொடுத்திருக்கிறாள் என்பதையே மைனர் அறியாவதவன் ஆகையால் அவன் யாவற்றையும் மதனகோபாலன் மீது போட்டு, தான் எளிதில் தப்பித்துக் கொள்ளலாம் என்று நினைத்துக் கொண்டிருந்தான். ஆகையால் அவன் தான் குற்றம் சுமத்தப்பட்டிருந்த விஷயத்தைத்

தனது தாய்க்காகிலும் வக்கீல் சிவஞான முதலியாருக்காகிலும் சொல்லி அனுப்பாமல் சும்மா இருந்துவிட்டான். போலீசார் அநத விஷயங்களை வெளியிடாமல் தமது விசாரணைகளைப் பரம ரகசியமாக நடந்திவந்தமையாலும், கிருஷ்ணாபுரம் ஜெமீந்தாரினது பங்களா தேனாம்பேட்டையில் இருந்து வெகுதூரத்திற் கப்பால் இருந்தமையாலும், அந்த விஷயம் கல்யாணியம்மாளுக்கு எட்டவே ஏதுவில்லாமல் இருந்தது. ஆகவே, அவள் மறுநாட காலையில் மதனகோபாலனைப் பார்த்த போது, அவன் சொல்லத் தெரிந்து கொள்ளும்படி ஆகிவிட்டது. மைனரும், பாலாம்பாளும இருந்த சாயுஜ்ய நிலயம் என்ற பங்களாவிலிருந்த சிப்பந்திகள் எல்லோருமு, மைனரும், பாலாம்பாளும் தப்பிவர மாட்டார்கள் என்பதை உணர்ந்து கொண்டார்கள் ஆகையால், அந்த பங்களாவி லிருநத ஆடைகள், பாத்திரங்கள், பண்டங்கள் முதலிய சகலமான பொருட்களையும் ஆளுக்குக் கொஞ்சமாகப் பங்கு போட்டு எடுத்துக் கொண்டு அந்த இடத்தை அன்றைய இரவிலேயே துடைத்துக் காலி செய்துவிட்டு, போன இடந் தெரியாமல ஓடிப் போயினர். ஆகவே, மைனருக்கும் பாலாம்பாளுக்கும் அவர்களது உடம்பில் இருந்த துணிகளும் அவர்கள் செய்த கொலைக் குற்றமுமே ஆஸ்திகளாக மிஞ்சி நின்றன.

அவர்கள் அப்படிப்பட்ட பரிதாபகரமான நிலைமையில் இருக்க அந்த இரவு கழிந்தது. மறுநாட் காலை முதல் இரண்டு நாடகள் வரையில் போலீசார் தங்களது விசாரணைகளை எல்லாம் மிகவும் துடியாக நடத்திப் பற்பல ஊர்களுக்குத் தந்தியும் ஆள்களையும் அனுப்பி அதை அதிக விமரிசையாகவும் மிகவும் ரகசியமாகவும் நடத்தினார்கள. மாஜிஸ்டிரேட்டுக்கும் ஜட்ஜிக்கும் பற்பல அவசர மான அறிக்கைகளை அனுப்பினார்கள். குற்றவாளிகள் இருவரும் மறுநாட் காலை 10-மணிக்கு விசாரணைக் கைதிகள் இருக்க வேண்டிய சிறைச்சாலைக்கு அனுப்பப்பட்டார்கள். கொலைக் குற்றம் நடந்த தினத்திற்கு மறுநாட் காலையில் கல்யாணியம்மாளும் சிவஞான முதலியாருமு போலீஸ் ஸ்டேஷனுக்குப் போய் மைனரை விட்டுவிடுவதற்காகத் தாங்கள் லட்சக்கணக்கில் பணம் கொடுப்பதாகச் சொல்லி நெடுநேரம் போலீசாரிடம் கெஞ்சி மன்றாடியதெல்லாம் அவமாயிற்று; அவன் மீது சுமத்தப்பட்டிருந்த

குற்றத்தின விவரம முதலியவற்றையாகிலும் தங்களுக்குச் சொல்லும்படி அவர்கள் வேண்டிக் கொண்டதும் பயனற்றுப் போயிற்று. அவர்கள் இருவரும் நிரமபவும் கீர்த்தி வாய்ந்த பெருத்த பெருத்த இரண்டு பாரிஸ்டர்களை உடனே அமர்த்திக் கொண்டு நேராக மாஜிஸ்டிரேட்டினது கச்சேரிக்குப் போய் மைனரை ஜாமீனின் மேல் விடும்படியாகவும், போலீசாரின் அறிக்கைகளுக் கெல்லாம் நகல் கொடுக்கும்படியாகவும் வாதாடச் செய்தார்கள். அந்த முயற்சியும் பலியாமல் போயிற்று. அதன பிறகு அந்த பாரிஸ்டர்கள் இருவரும் அந்த விஷயமாக ஹைகோர்ட்டிற்கு அப்பீல் செயதாாகள; குற்றவாளி கையும் மெய்யுமாகப் பிடிபட் டிருப்பதால், ஜாமீனில் விடுவது சட்ட விரோதம் என்றும், மாஜிஸ் டிரேட்டு செய்த தீர்மானம் சரியானதென்றும் ஹைகோர்ட்டார் அபிப்பிராயப்பட்டு மனுவைத் தள்ளிவிட்டார்கள். ஆகவே, அவர்கள் மைனரது விஷயத்தில், எவ்வித உதவியும் செய்ய மாட்டாமல் விசாரணைத் தேதியையே எதிர்பார்க்க நேர்ந்தது. கல்யாணியம்மாளுக்கு அதுகாறும் வந்த எத்தனையோ இடர்களை விட, அது ஒன்றே இமயமலை போல மிகவும் பெருத்த அபாய மாகவும் அவமானமாகவும் தோன்றியதன்றி, அவ்வளவோடு தங்களது குடும்பத்திறகே முடிவு காலம் ஏற்பட்டுவிட்டதாகவும் மதித்துவிட்டாள். தனது சமஸ்தானத்தை எல்லாம் விற்றாகிலும் மைனரது உயிரைக் காப்பாற்ற வேண்டும் என்ற ஓர் உறுதியை அவள் செய்து கொண்டாள் ஆனாலும், அவளது பொருட்களைப் பெற்றுக்கொள்ள வக்கீல்களைத் தவிர வேறே எவரும் ஒருப்பட வில்லை. ஆனால், நிரம்பவும் ஏராளமான பணத்தை வாரி இறைத்ததன் பலனாக அவர்கள் ஒரே ஒரு விஷயத்தைத் தெரிந்து கொண்டனர். அந்த வழக்கு மூன்றாவது நாள் ஹைகோர்ட் ஜட்ஜியின் முன்னால் விசாரிக்கப்படப் போகிறதென்பதொன் றையே அவர்கள் தெரிந்து கொண்டார்கள். அன்றைய தினமாகிலும் தாங்கள நாலைந்து வக்கீல்களையும் பாரிஸ்டர்களையும் நியமித்து மைனரை விடுவிக்கச் செய்ய வேண்டும் என்று அவர்கள் உறுதி செய்து கொண்டிருந்தனர். கருப்பாயி மரணாந்த காலத்தில் வாக்கு மூலம் கொடுத்திருக்கிறாள் என்பதையாகிலும், அவள் கிருஷ்ணா புரத்து பங்களாவில் வெளியிட்ட விஷயங்களையாகிலும் அவர்கள் அறிந்து கொள்ளாமலே இருந்தனர். ஆனால், அவர்களுக்கு ஒரு

விஷயம் மாத்திரம் பெருத்த விந்தையாகத் தோன்றியது; என்னவெனில், கொலை, கூட்டுக்கொள்ளை முதலிய பெருத்த வழக்குகளில், முதலில் மாஜிஸ்டிரேட்டினது கச்சேரிகளில் ஒரு பிரதம விசாரணை நடப்பது வழக்கம்; அப்போது இரண்டு கட்சிகளின் சாட்சியங்களும் வெளியாவதோடு, இருதிறத்தாரும் வாதிப்பார்கள்; அதன்பிறகு மாஜிஸ்டிரேட்டு குற்றவாளியை விடுதலை செய்தாலும் செய்யலாம், அல்லது, மேல் நியாயஸ் தலமான ஜட்ஜி கோர்ட்டில் மறுபடியும் முடிவான விசாரணைக் காக அனுப்பினாலும் அனுப்பலாம். அந்த மேல் நியாயஸ் தலத்தில், மறுபடியும் அடியிலிருந்து எல்லா சாட்சிகளும் விசாரிக்கபபடுவார்கள். வாதங்களும் எதிர் வாதங்களும் நடை பெறும்; அதன் பிறகு ஜட்ஜி மரண தண்டனையோ அல்லது இதர தண்டனைகளையோ விதிப்பது சாதாரணமாக நடக்க வேண்டிய சட்ட முறை. அதற்கு மாறாக இந்த வழக்கு மாஜிஸ்டிரேட்டினால் ஒரு முறை விசாரிக்கப்படாமல் நேராக ஜட்ஜியினாலேயே விசாரிக்கப்படக் காரணம் என்ன என்பதும் அவாகளுக்குத் தெரியாமல் இருந்தது.

அது எப்படி நேர்ந்ததென்பதை நாம் சுருக்கமாகச சொல்வது அவசியமாக இருக்கிறது. செனனை ஹைகோர்ட்டில் கிரிமினல் வழக்குகளை எல்லாம் விசாரிப்பதை வருஷத்தில் நானகு மாதங்களிலே தான் வைத்துக் கொண்டிருக்கிறார்கள். மாஜிஸ்டி ரேட்டினால முடிவான விசாரணையின் பொருட்டு ஜட்ஜிகது அனுப்பபப்படும் வழக்குகள் பிப்ரவரி, ஏப்ரல், ஆகஸ்டு, நவம்பர் ஆகிய நான்கு மாதங்களிலே தான் ஜட்ஜியினால் எடுத்துக் கொள்ளப்படுவது வழக்கம். மைனர் கொலைக் குற்றம் செய்த காலம் ஏப்ரல் மாதக் கடைசியாகையால், அந்த வழக்கை மாஜிஸ்டி ரேட்டு விசாரணைக்கு எடுத்துக்கொண்டு அதை முடித்து மேலே அனுப்புவதற்குள் ஏப்ரல் மாதம் முடிந்து போய்விடும் ஆதலால், ஜட்ஜி மனுச்செய்து அந்த வழக்கை அவரே நேராக எடுத்துக் கொணடு அந்த ஏப்ரல்மாத செஷன்ஸிலேயே முடித்துவிட வேண்டும் என்று கேட்டுக் கொண்டனர்.

அவ்வாறு கேடடுக் கொண்டதற்கு அவர்கள் பலவகையான காரணங்களும் காட்டினர். குற்றவாளி மிகுந்த தனவந்தரும்

செல்வாக்கும் உடையவர் ஆதலால், ஏப்ரல் முதல் ஆகஸ்டு வரையில் நான்கு மாத காலத்திற்குள், அவர்களது மனிதர்கள் பலவகையில் முயன்று, சாட்சிகளைக் கலைத்து விடுவார்கள் ஆகையால், நீதித் தவறு ஏற்படடுவிடும என்பது முதலாவது காரணம். அந்த வழக்கைப் பிரதமத்தில் விசாரிக்க வேண்டிய மாஜிஸ்டிரேட்டு, இறந்து போனவளிடத்தில் மரணாந்த காலத்தில் வாக்குமூலம் வாங்கி இருப்பது பற்றி அவரே அந்த வழக்கில் ஒரு சாட்சியாக வரவேண்டியிருந்ததால், அந்த வழக்கை ஜட்ஜியே விசாரிப்பது மாஜிஸ்டிரேட்டின் கண்ணிய பதவிக்கு ஏற்றதாக இருக்கும் என்பது இரண்டாவது காரணம், மாரமங்கலம் சமஸ்தானத்தின் உண்மையான ஜெமீந்தார் தம்முடைய சொத்துகளையும உரிமைகளையும் அனுபவிக்க முடியாமல் அநியாயமாக விலக்கி வைக்கப்பட்டு வருவதால், அவரை இன்னமும் அநாவசியமாக விலக்கிவைப்பது அநீதி என்பது மூன்றாவது காரணம். இன்னமும் இவை போன்ற பல காரணங்களையும் சர்க்கார் வக்கீல் எடுத்துக் காட்டி எழுதி நேரில் கொடுத்த மனுவை ஜட்ஜி துரை ஒப்புக் கொணடு அவ்வாறே மாஜிஸ்டிரேட்டுக்கு உத்தரவும் சாட்சிகளுக்கு சம்மன்களுமை பிறப்பிக்குமபடி ஆக்ஞாபித்து விட்டார்.

போலீசார் அந்த வழக்கின் விஷயத்தில் மிகுந்த ஊக்கமும் உற்சாகமும் உடையவர்களாய்ப் பெரும்பாடு பட்டதன்றி, அதன் விசாரணை தினத்தை ஒரு கலியாண தினத்தை எதிர்பார்ப்பது போல மிகவும் ஆவலோடும் மகிழ்ச்சியோடும் எதிர்பார்த்திருந் தனர். ஆனால் குற்றவாளிகளுக்குமை மைனரைச் சேர்ந்த மனிதர் களுக்குமை அது ஒரு பெருத்த இழவு வீழ்ந்தது போல இருந்ததன்றி, அவர்கள் அந்த விசாரணை திணத்தை ஒரு கருமாந்தர தினம் போல மிகுந்த கவலையோடும் அசசத்தோடும் விசனத்தோடும் எதிர்பார்த் திருநதனர்.

கடைசியாக அந்த விசாரணை தினம் வந்து சேர்ந்தது. சென்னை ஹைகோர்டடு ஜட்ஜியின கச்சேரியில் அன்றைய தினம் ஒரு சுமாா பதினாயிரம் ஜனங்கள் கூடித் தேனடையில் ஈக்கள், மொய்ப்பது போல அடர்ந்து நெருங்கிவிட்டனர். சர்க்கார் வக்கீல், மைலாப்பூர் சப் இனஸ்பெக்டர் முதலிய ஏராளமான போலீஸ் உத்தியோகஸ் தர்கள் வந்து ஒரு பக்கத்தில் நிறைந்திருந்தனர். இன்னொரு

பக்கத்தில் வக்கீல் சிவஞான முதலியாரும், மகா கீர்தத்தி வாய்ந்த **பாரிஸ்டர் குரோட்டன் துரையும்,** இன்னும் மூன்று பிரபல பாரிஸ்டர் களும் வந்து உட்கார்ந்திருந்தனர். குற்றவாளிகள் நிறுத்தப்படும் கூண்டில் மைனரும், பாலாம்பாளும் வெட்கமும் துக்கமும் கவலையும் வடிவெடுத்து வந்தவர்கள் போல் நின்று கொண்டிருந் தனர். ஜனங்களுள போக்கிரிகளாக இருந்த சிலர் பாலாம்பாளையும் மைனரையும் பார்த்துப் புரளி செய்து கொண்டிருந்தனா. மற்றும் சிலா் அவளது அற்புதமான அழகைக் கணடு மோகமுற்றனா; வேறு சிலர் அவர்களது பரிதாபகரமான நிலைமையைக் கணடு இரங்கினர். ஆகவே அவர்கள் வெட்கித் தலைகுனிந்து நின்றனா. அப்போது, சரியாகப் பதினொரு மணிக்கு ஜட்ஜி துரை வந்து சேர்ந்தார்; வந்தவுடனே மைனரது வழக்கு விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

சர்க்கார் வக்கீல் அந்த வழக்கினது சாராம்சத்தை மிகவும் சுருக்க மாக எடுத்துச் சொல்லத் தொடங்கி, "நியாயாதிபதிகளே! ஜூரிப் பிரபுக்களே! நீங்கள் இதுவரையில் எத்தனையோ வேடிக்கையான வழக்குகளை விசாரித்திருப்பீர்கள். இருந்தாலும், இதைப் போன்ற அவ்வளவு விநோதமான வழக்கை இதுவரையில் காதாலும் கேட்டிருக்க மாட்டீர்கள். இதில் சில வேடிக்கையான ரகசியங்கள் வெளியாகப் போகின்றன ஆகையால், இன்றைய தினம் உங்களுக்கு நல்ல தமாஷான பொழுது போககு ஏற்படும் என்பதில் சந்தேகமே இல்லை. அதன் பொருட்டு நீங்கள எல்லோரும், மகா திறமை வாய்ந்த நமது மைலாப்பூா சப் இன்ஸ் பெக்டருக்கு நன்றி செலுத்துவீர்கள் என்று நான் நிச்சயமாகச் சொல்லக்கூடும்; இந்த வழக்கில் முதல் குற்றவாளியாக வந்திருக்கும யௌவனப் புருஷா் இதுகாறும் மாரமங்கலம் மைனராக இருந்து வந்த ஒரு வேஷதாரி. இன்றைய தினம் அவருடைய வேஷம கோர்ட்டாருக் கெதிரிலேயே கலையப் போகிறது. அந்தச் சமயததிலே தான நீங்கள நிரம்பவும் ஆனந்தமடையப் போகிறீர்கள்."

**ஜட்ஜி:-** (சந்தோஷமாக சிரித்துக் கொண்டு) இப்படிப்பட்ட பொது ஸ்தலத்திலா வேஷத்தைக் கலைக்கிறது? அந்தக் காரியம் மாத்திரம் வேண்டாம் – என்றார்.

அதைக் கேட்டு எல்லோரும் சிரிக்கிறார்கள்.

***சர்க்கார் வக்கீல்:-*** (புன்னகையாகச் சிரித்துக் கொண்டு) வேஷம் என்றால் வஸ்திரமல்ல. அப்படிப்பட்ட தப்பிதத்துக்கு நான் பாத்திர னாவேனா? கோர்ட்டார் மன்னித்துக் கொள்ள வேண்டும். இவருடைய வேஷம் என்பதற்கு என்ன அர்த்தமென்பது சாட்சி களின் வாக்குமூலத்தால் வெகு சீக்கிரத்தில் விளங்கிப் போகும் ஆதலால் அதைப்பற்றி நான் அதிக விளக்கமாகப் பேசி கோர்ட்டா ருடைய காலத்தை வீணாக்க இஷ்டமில்லை. இரண்டாவது குற்றவாளி இதுவரையில் நாடகத்தில் வேஷதாரியாக இருந்து இப்போது சொற்ப காலமாக ஒரு புதிய வேஷத்தோடு இந்த யௌவனப் புருஷருக்கு தருமபத்தினியாக இருந்துவரும் ஒரு தாசி யம்மாள்.

***பாரிஸ்டர் குரோட்டன் துரை:-*** (கனைத்துக் கொண்டெழுந்து) நமது நண்பரான சர்ககார் வக்கீல் இப்படிப் பேசுவதை நாங்கள் முற்றிலும் ஆடசேபிக்கிறோம். மைனர் நிரம்பவும் கண்ணியமான பெரிய மனிதர். சாட்சிகளின் விசாரணை நடக்குமுன், அவரைப் பற்றி இழிவாகப் பேசி, கோர்ட்டாருடைய மனதில் கெட்ட அபிப்பி ராயம் ஏற்படும்படி செய்வது சட்ட விரோதம். கோர்ட்டார் அதற்கு இடங் கொடுக்கக்கூடாது.

***சர்க்கார் வக்கீல்:-*** உள்ளதைச் சொன்னால் நொள்ளைக் கண்ணனுக்கு நோப்பாடென்பது போல இருக்கிறது நமது நண்பர் சொல்வது; நான் சொல்வதெல்லாம் சாட்சிகளால் ருஜுவாகப் போகும் உண்மையான சங்கதிகளே தவிர, பொய்யான அவ துாறல்ல. சாட்சிகளால் வெளியாகப் போகும் சங்கதிகளின் சாராம் சத்தை நான் முன்னால் சொல்லுகிறேன். அதை எடுத்துச் சொல்லாமல் நான் சும்மா இருந்தால், எனக்கு இவ்விடத்தில் என்ன ஜோலி இருக்கிறது! எதிர்க்கட்சியின் பாரிஸ்டரான நமது நண்பருடைய வேலையும் இலகுவாகிவிடும். குற்றவாளிகளை அவர் விடுவித்துக் கொண்டு போவதும் சுலபமாகிவிடும்.

***ஜட்ஜி:-*** சரி; சணடை வேண்டாம். சங்கதியை மேலே சொல்லலாம்.

***சர்க்கார் வக்கீல்:-*** (கிலேசத்தோடு) நான் சண்டை போடவில்லை. எதிர்க்கட்சியின் பாரிஸ்டருடைய ஆட்சேபனைக்கு சமாதானம்

சொன்னேன். கோர்ட்டார் உத்தரவுப்படி மேலே சொல்லுகிறேன். கொல்லப்பட்ட பெண்பிள்ளை அம்பட்ட ஜாதியைச் சேர்ந்தவள் ஆனாலும் அவள் தலைக்ஷவரம் செய்கிற தொழிலைவிட்டு பிறருடைய பணப் பெட்டிகளை எல்லாம் க்ஷவரம் செய்கிற தொழிலைக் கையாடி வந்தவள். அவளை இந்தக் குற்றவாளிகள் இருவரும் சேர்ந்து அடுத்த உலகத்துக்கு அனுப்பியது இந்த உலகத்துக்கு உபகாரமான காரியந்தான். ஏனென்றால் இனியாவது பணப்பெட்டிகள் க்ஷவரமாகாமல் மிஞ்சும். இருந்தாலும் நமது பினல்கோர்ட் சட்டமானது மிகவும் பொல்லாதது. அதன்படி உலகத்தில் மனிதரைக் கொல்ல அதிகாரம் பெற்றவர்கள் இரண்டு பேர்கள் தான். எமதருமராஜன் ஒருவன்; இன்னொருவர் செஷன்ஸ் ஜட்ஜி.

***ஜட்ஜி:-*** (வேடிக்கையாக நகைத்து) ஜட்ஜிகள் எல்லாம் எமதரும ராஜாக்களானால், நமது நண்பரைப் போன்ற வக்கீல்களை எல்லாம் என்னவென்று சொல்லுகிறது? எமதூதர்கள் என்று சொல்லலாமா? – என்றார்.

ஜனங்கள் எல்லோரும் நகைக்கிறார்கள்.

***சர்க்கார் வக்கீல்:-*** (சந்தோஷமாக) ஆம், தடையென்ன! அப்படித் தான் சொல்ல வேண்டும். தருமராஜனுக்கு அநுசரணை யாக இருப்பது எல்லோருக்கும் கிடைக்கக்கூடிய பதவியா!

***ஜட்ஜி:-*** சரி; காலதாமதமாகிறது; குற்றம் கொலைக் குற்றம. மேலே விஷயத்தைச் சொல்லுங்கள்.

***சர்க்கார் வக்கீல்:-*** (சந்தோஷமாக) இதோ ஆய்விட்டது. முதல் குற்றவாளி அம்பட்டக் கருப்பாயியைக் கொலை செய்த குற்றமும், இரண்டாவது குற்றவாளி கொல்ல முயன்ற குற்றமும் செய்திருக் கிறார்கள். இவர்கள் இன்ன கருத்தோடு இந்தக் கொலையை நடத்தினார்கள் என்ற விஷயத்தை நான் இப்போது எடுத்துச் சொன்னால், அது மிகவும் அதிகமாக விரியும் ஆகையால் அதை ஒரே தடவையாக சாட்சிகளைக் கொண்டே வெளிப்படுத்தி விடுகிறேன். இனி விசாரணையைத் தொடங்குவோம்; முதல் சாட்சி மதனகோபாலன் என்பவரை அழைக்கச் செய்யலாம-எனறு கூறிய வண்ணம் தமது ஆசனத்தில் உட்கார்ந்து கொண்டார்.

மைனர் ஒரு வேஷதாரி என்பதைத் தாம் ருஜுப்படுத்தப் போவதாக சர்க்கார் வக்கீல் சொன்னதைக் கேட்க, அதுகாறும் கருப்பாயினது வார்த்தையைப் பெருட்படுத்தாமல் இருந்த மைனரும், பாலாம்பாளும் கலக்கமும் அச்சமும் கொள்ளலாயினர். அதுகாறும் அந்த விஷயத்தைப் பற்றி சொற்பமும் சந்தேகங் கொள்ளாதிருந்த சிவஞான முதலியாரும் அவரது பக்கத்து பாரிஸ் டர்களும் திகைப்பும் கவலையும் கொள்ளலாயினர்; அந்தச் சமயத்தில் மதனகோபாலன் அழைக்கப்பட்டு, விசாரணைக் கூண்டின் மேல் நிறுத்தப்பட்டான். அவனது அற்புதமான அழகையும், கம்பீரமும வசீகரமும் நிறைந்த தோற்றத்தையும் கண்ட ஜட்ஜியும் மற்ற எல்லோரும் ஒருவித வியப்பும் சந்தோஷ மும் கொண்டவர்களாய், அவன் யாரோ ஒரு மகாராஜனது புத்திரனாக இருக்க வேண்டும் என்ற அபிப்பிராயம் அடைந்தனர். விசாரணை குமாஸ்தா அவனிடத்தில் பிரமாணம் வாங்க, உடனே சர்க்கா வக்கீல் அவனது வாயமூலமாக அடியில் வரும் விஷயங் களைக் கிரகித்தார்:- என் பெயர் மதனகோபாலன். என்னுடைய தகப்பனார் யார் என்பது எனக்குத் தெரியாது. எனக்குச் சுமார் இருபது வயசிருக்கலாம். நான் இன்ன வருஷம் பிறந்தேன் என்பது எனக்கு நிச்சயமாகத் தெரியாது. மைசூரிலிருந்து சந்தனக்கட்டை வர்த்தகம் செய்து வரும் கிருஷ்ணாபுரம் ஜெமீந்தார், சிறு பிராயத்தி லிருந்து என்னையும் என் தங்கையையும் ஒருவரிடத்திலிருந்து வாங்கி அபிமான புத்திரன் புத்திரியாக மதித்து வளர்த்து வருகிறார். அவர் தம்முடைய சம்சாரத்தையும இழந்து அநாதையாக இருந்தமையால், எங்களை வாங்கி வளர்த்து வருகிறார். அவர் இப்போது இந்த ஊரில் மைலாப்பூர் கடற்கரையின் மேலிருக்கும் **மோகன விலாஸம்** என்ற பெரிய பங்களாவை விலைக்கு வாங்கி அதில் இருந்து வருகிறார். நானும் என்னுடைய தங்கையும் அவர் களோடு கூடவே இருந்து வருகிறோம். சென்ற சில தினங்களாக எனக்கு உடம்பு அசௌக்கியமாக இருந்தமையால், நான் படுத்த படுக்கையாக இருந்து பலவீனமான நிலைமையில் இருந்தேன். இன்றைக்கு நான்காவது நாள சாயுங்காலம், கிருஷ்ணாபுரம் ஜெமீந் தார் வெளியே போய் கொஞ்ச தூரம் உலாவிவிட்டு வரும்படியாக அனுமதி கொடுத்து என்னை அனுப்பினார். நான் ராஜபாட்டை

வழியாகவே சுமார் அரைமயில் தூரம் நடந்தேன். அதற்குள் அஸ்தமன சமயமாகிவிட்டது. இருள் சூழத் தொடங்கியது. அந்தச் சமயத்தில் நான் திரும்பிக் கடலின் அலையோரமாகவே வந்து கொண்டிருந்தேன். இந்த மைனரும் பாலாம்பாளும் குடியிருக்கும் **சாயுஜ்ய நிலையம்** என்ற பங்களாவின் பின்புறச் சுவரும், அதன் பக்கத்திலிருந்த தென்னஞ் சோலையின் மதிலும் அலை ஓரமாக இருந்தன. என்னுடைய காலில் ஒரு காயம் கட்டப் பட்டிருந்தமை யால், அதில் அலை மோதாமலிருக்க வேண்டும் என்ற நினை வினால் நான் சுவரோரமாக நடந்து வந்து கொண்டிருக்கையில, தென்னஞ் சோலைக்குள்ளிருந்து ஒரு பெருத்த கூக்குரல் கேட்டது. இதோ இருக்கும் குற்றவாளிகள் இருவரும், கொலை செய்யப் பட்ட கிழவியை அடித்து வதைத்துக் கொண்டிருந்தார். அடிக்க வேண்டாம் என்று அவள் எவ்வளவு தூரம் கெஞ்சி மன்றாடியும் உபயோகமில்லாமல் போயிற்று. அந்தக் கிழவி இவர்களுடைய பங்களாவில் இருந்து முதல் நாள் ஏதோ ஒரு பத்திரத்தை எடுத்துக் கொண்டு போய்விட்டதாகவும், மறுநாள் அந்தத் தென்னந் தோப்புக்குள் அவள் வந்து ஒளிந்து கொண்டிருந்ததாகவும் பாலாம்பாள் சொல்லிச் சொல்லி மேன்மேலும் அவளை அடிக்க, மைனரும் அவளுக்குப் பரிந்து வந்து கிழவியைக் காலால் எட்டி எட்டி உதைப்பதாகத் தெரிந்தது. அந்த அடிகளைப் பொறுக்க மாட்டாமல் அவள் பெருத்த கூக்குரல் செய்து, இந்த மைனர் தன்னுடைய மகன் என்றும், தானே இவரை ஜெமீந்தார் ஆக்கிய தாகவும் சொல்லி கிழவி திட்ட ஆரம்பித்தாள். உடனே இவர்கள் இருவரும் முன்னிலும் அடிக்க, அவள் உடனே கீழே வீழ்ந்து விட்டதாகத் தெரிந்தது. அவள் இறந்து போய்விட்டாள் என்றும், அவளுடைய பிணத்தை என்ன செய்வதென்றும் இவர்கள் பேசிக் கொண்டனர். பாலாம்பாள் அதை பூமிக்குள் புதைத்து விடலாம் என்றாள். அப்படிச் செய்தால், யாராவது கண்டு கொள்வார்கள் என்றும், ஆகையால் அவளுடைய கைகால்களை எல்லாம் கட்டிச் சமுத்திரத்தில் போட்டுவிட வேண்டும் என்றும் மைனர் சொன்னார். பாலாம்பாள் ஓடிப் போய்க் கயிறு கொண்டு வந்ததாகத் தெரிந்தது. உடனே இவர்கள் அவளுடைய கைகால்களை எல்லாம் கட்டித் தூக்கிக் கொண்டு அந்த மதில் சுவரிலிருந்த ஒரு வாசற் கதவைத்

திறந்து கொண்டு வெளியே வந்தார்கள். நான் உடனே வேகமாகப் போய், சுவரின் மூடக்கில் மறைந்து பார்த்துக் கொண்டிருந்தேன். இவர்கள் இருவரும் அவளைத் தூக்கிக் கொண்டு வந்து அலையில் எறிந்து விட்டு உள்ளே போய்க் கதவை மூடித் தாளிட்டுக் கொண்டார்கள். நான் உடனே திரும்பி வந்து அலைகளில் விழுந்து நெடுந்தூரத்துக் கப்பால் இருந்த கிழவியைக் கண்டுபிடித்து மிகுந்த சிரமப்பட்டுக் கரையில் கொண்டு வந்து சேர்த்தேன். அவளுக்கு அப்போது உயிர் இருநததாகத் தெரிந்தது; ஆகையால் அவளைத் தூக்கிக் கொண்டு எங்களுடைய பங்களாவை நோக்கிப் போனேன். நான் மிகவும் பலவீனமாக இருந்தவனாகையால், சமூத்திரத்தி லிருந்து அவளைத் தூக்கிக்கொண்டு மணலில் நடந்த போது எனக்குக் கண்கள் இருண்டு போய்விட்டன. மயக்கம் வந்து விட்டது. நான் அவளைப் போட்டுக் கொண்டு கீழே வீழ்ந்து விட்டேன் – என்றான்.

அந்த வரலாற்றைக் கேட்ட மைனரும் பாலாம்பாளும் திடுக் கிட்டுப் பெருத்த திகிலும் குழப்பமும் அடைந்தனர். ஏனென்றால், தாங்கள் ரகசியத்தில் செய்ததாக நினைத்திருந்த சங்கதிகள் யாவற்றையும் மதனகோபாலன் ஒளிந்திருந்து கேட்கிறானே என்ற பெருத்த அச்சமும் கவலையும் உண்டாகிவிட்டன. அவனது பாரிஸ்டர்களுக்கும் அந்த வரலாறு தெரியாதாகையால் அவர்களும் ஒருவாறு கவலை கொண்டிருந்தனர்.

உடனே மதனகோபாலன் மேலும் பேசத் தொடங்கினான்:-

அதன் பிறகு நான் கண்களைத் திறந்து பார்த்த போது, எங்களு டைய பங்களாவில் நான் ஒரு படுக்கையில் விடப்பட்டிருந்தேன். அந்தக் கிழவியும் படுக்க வைக்கப்பட்டிருந்தாள். கிருஷ்ணாபுரம் ஜெமீந்தாரும் வேலைக்காரர்களும் எங்களுக்கு உபசரணைகள் செய்து கொண்டிருந்தார்கள். அவர்கள் எங்களைத் தேடிக்கொண்டு வந்ததாகவும், மணலில் நாங்கள் இருவரும் கிடக்கக்கண்டு தூக்கிக் கொண்டு வந்ததாகவும் அவர்கள் சொல்ல நான் தெரிந்து கொண்டேன். அன்றைய ராத்திரியும், மறுநாள் பகல் முழுதும் நானும் அந்தக் கிழவியும் படுக்கைகளில் இருந்தோம். கிழவி இரண் டொரு தடவை எழுந்து மைனரைப் பற்றிய வரலாறுகளை

எல்லாம் ஜெமீந்தாரிடத்தில் சொல்லிக் கொண்டிருந்தாள். மாரமங்கலம் சமஸ்தானத்து ஜெமீந்தாரிணியம்மாளுடைய ஆண் குழந்தையை சில வருஷங்களுக்கு முன் கட்டையன் குறவன் என்ற ஒருவன் திருடிக் கொண்டு போய் வேறே யாரோ ஒருவனிடத்தில் விற்றுவிட்டதாகவும், அந்தக் குழந்தையின் உடம்பிலே ஒரு மச்சம் இருந்ததாகவும் இந்த அம்பட்டச்சியும் இன்னொருத்தியுமாகக் கூடி, இவளுடைய மகனான இந்த மைனருடைய உடம்பில் யாரோ ஒரு டாக்டரைக் கொண்டு, திராவகத்தின் உதவியால், மச்சம் போல சுடச்செய்து, அந்த அம்மாளுடைய பிள்ளை தான் என்று கொண்டு போய்க் கொடுத்து விட்டதாகவும், அந்தப் பிள்ளைதான் இந்த மைனர் என்றும், அந்த ஜெமீந்தாரிணியம்மாளுடைய உண்மையான பிள்ளை யாரிடத்தில் விற்கப்பட்டதென்ற விவரம் எழுதப்பட்ட ஒரு துண்டுக் காகிதத்தை அவள் எங்கேயோ வைத்திருப்பதாகவும், தான் போய் அதை எடுத்து, அதன் மூலமாக அந்த உண்மையான பிள்ளையைக் கண்டு பிடிக்கப் போவதாகவும், அந்தக் கிழவி சொல்லிக் கொண்டிருந்தாள். அப்போது சாயுங்காலம் ஏழரை மணி இருக்கலாம. பங்களாவின் வெளியில் இருள் சூழ்ந்திருந்தது. அந்தக் கிழவி வாசற்படிக்குப் பக்கமாக இருந்த ஒரு கட்டிலில் இருந்தாள். அப்போது இந்த மைனர் குபீரென்று உள்ளே பாய்நது தமது கையில் இருந்த ஒரு கத்தியால் அந்தக் கிழவியின் மார்பில் குத்திவிட்டு ஓடிப்போய் விட்டார். உடனே ஜெமீந்தாரும் ஆட்களும் வெளியே ஓடினார்கள். அதன் பிறகு அவர்கள் மைனரைப் பிடித்துப் போலீசாரிடத்தில் ஒப்புவித்து வந்ததாகச் சொன்னார்கள். ஆனால் அதை எல்லாம் நான் பார்க்கவில்லை. இவ்வளவு தான் எனக்குத் தெரியும் – என்று மதனகோபாலன் வாக்குமூலம் கொடுத்தான்.

உடனே ஜட்ஜி, பாரிஸ்டர் குரோட்டன் துரையை நோக்கி முதலாவது சாட்சியான மதனகோபாலனை குறுக்கு விசாரணை செய்யும்படி சொல்ல, அதைக் கேட்ட பாரிஸ்டர் குரோட்டன் துரை மிகவும் ஆடம்பரமாக எழுந்து நின்று, "கோர்ட்டார் அவர்களுக்கு ஒரு மனு; இந்த வழக்கில் போலீசார் எல்லாக் காரியங்களையும் பரம ரகசியமாக நடத்தி இருக்கிறார்கள். யார் யார்

சாட்சிகளாக வரப் போகிறார்கள் என்பதும், ஒவ்வொருவரும் எந்த விஷயத்தை ருஜுப்பிக்கப் போகிறார்கள் என்பதும் எங்களுக்குத் தெரியவில்லை. நாங்கள் கோரிய எவ்வித நகலும் கொடுக்கப்பட வில்லை. இப்போது சர்க்கார் கட்சியின் சாட்சிகள் எல்லோரும் தங்களுடைய வாக்குமூலங்களைக் கொடுக்கட்டும். அதன் பிறகு நாங்கள் எங்களுடைய கட்சிக்காரர்களோடு கொஞ்ச தூரம் கலந்து யோசித்து, அவர்கள் சொல்லும் சமாதானங்களை அறிந்து கொண்டு குறுக்கு விசாரணையை நடத்துகிறோம். இந்தக் குற்றமோ மகா பயங்கரமான கொலைக் குற்றம் இதை ஒருதலைச் சார்பாகவே நடத்திக் கொண்டு போய் குற்றமற்றவர்களை மரண தண்டனைக்கு ஆளாக்குவது கேவலம் அநியாயமான காரியம் என்பது கோர்ட்டார் அவர்களுக்குத் தெரிந்த விஷயம். இருட்டி லிருந்து ஒரு மனிதனை முதுகுப் பக்கத்தில் குத்திக் கொல்லுவது போல, போலீசார், தங்களுடைய விசாரணைகளை நேருக்கு நேர் நடத்தாமல், ஒளிமறைவாக நடத்தி இருப்பது ஆண்மைத்தனமும் நீயுமாகாது. நாங்கள் எங்களுடைய கட்சிக்காரர்களோடு பேசுவதற் குக்கூட எங்களுக்கு அனுமதி கிடைக்கவில்லை. இதுவரையில் எந்த வழக்கிலும் இப்படிப்பட்ட ஒழுங்கீனமும் கொடுமையும் நடந்திராதென்பதை விஷயங்களே எடுத்துப் பேசும். ஆகையால், கோர்ட்டார் அவர்கள குறுக்கு விசாரணையைக் கடைசி வரையில் நிறுத்தி வைக்கத் தயைகூர்ந்து அனுமதிக்க வேண்டும்" என்று நயமாகவும் கம்பீரமாகவும் கேட்டுக் கொண்டார்.

உடனே ஜட்ஜி, "எல்லா சாட்சிகளுடைய குறுக்கு விசாரணை களையும் நாம் கடைசியில் வைத்துக் கொள்வதைவிட இப்போது இவர் சொன்ன வாக்குமூலம் சம்பந்தப்படுகிற வரையில் என்னென்ன கேள்விகளைக் கேட்கலாமோ, அவைகளைக் கேட்டு விடுங்கள்; மற்றவைகளை மாத்திரம் பின்னால் வைத்துக் கொள்ளலாம்" என்றார்.

பாரிஸ்டர் குரோட்டன், "மறுபடியும் நாங்கள் குறுக்கு விசாரணை செய்யலாம் என்று கோர்ட்டார் அனுமதிக்கிற நிபந்தனையின் மேல் நாங்கள் இப்போதும் கூடுமான வரையில் குறுக்கு விசாரணை செய்யத் தயாராக இருக்கிறோம்" என்று ஜட்ஜியை நோக்கிக் கூறியபின், சாட்சிக் கூண்டின் மேல் நின்று

கொண்டிருந்த மதனகோபாலனை நோக்கி, "ஐயா! நான் இப்போது உம்மை அதிகமாகத் தொந்தரவு செய்ய போகிறதில்லை. சில்லரையாக இரண்டொரு கேள்விகளைக் கேட்டு நிறுத்திக் கொள்ளுகிறேன். நான் கேட்பதற்கு உண்டு, அல்லது, இல்லை என்று சுருக்கமாகப் பதில் சொல்லும்" என்றார்.

***பா. குரோட்டன்:-*** இதுவரையில் நீர் என்ன தொழில் செய்து வந்தீர்?

***மதன:-*** (சிறிது தயங்கி) நான் அநேக பங்களாக்கில் வீணை கற்றுக் கொடுத்து வந்தேன்.

***பா. குரோட்டன்:-*** பெருத்த ஜெமீந்தார்களுக்குப் புத்திரிகளாகவோ, அல்லது, அபிமான புத்திரர்களாகவோ இருப்பவர்கள் இப்படிப்பட்ட மேளக்காரத் தொழில் செய்வதை நீர் பார்த்திருக்கிறீரா?

***மதன:-*** நான் பார்த்ததில்லை.

***பா. குரோட்டன்:-*** நல்லது; நீர் இருக்கும் மனோகர விலாஸ் பங்களாவை விலைக்கு வாங்கி அதிலிருந்து வருகிறவர் கிருஷ்ணாபுரம் ஜெமீந்தாரா, அல்லது, அவருடைய கூட்டாளியான பசவண்ண செட்டியாரா?

***மதன:-*** இருவரும்.

***பா. குரோட்டன்:-*** (சிறிது குழம்பிப் போய்) சரி; அதிருக்கட்டும். நீர் நாலைந்து தினங்களாக அசௌக்கியமாக இருப்பதாகவும், காலில் ஏதோ புண் கட்டப்பட்டிருந்ததாகவும் சொன்னீரே; அந்தப் புண் எப்படி உண்டாயிற்று?

***மதன:-*** ஒரு நாள் ராத்திரி நான் தேனாம்பேட்டையில் உள்ள ஒரு பங்களாவில் எனக்கு அறிமுகமான ஒரு மனிதரைப் பார்க்கப் போனேன். அப்போது எங்கும் இருளாக இருந்தது. அந்த பங்களாவின் சொந்தக்காரரும் போலீசாரும் என்னைக் கண்டு திருடன் என்று சந்தேகப்பட்டு துப்பாக்கியால் சுட்டுவிட்டார்கள். அதனால், காயம் உண்டாயிற்று; உடம்புக்கு அசௌக்கியமும் ஏற்பட்டது.

***பா. குரோட்டன்:-*** ஓகோ அப்படியா! அவர்கள் சுடும் போது அந்தப் பங்களாவின் ஒரு பக்கத்தில் நீர் இருந்தீர்?

***மதன:-*** பங்களாவின ஒரு பக்கத்தில் தோப்பிருக்கிறது. அந்தத் தோப்புக்குள் நான் இருந்த போது சுட்டார்கள்.

***பா. குரோட்டன்:-*** அதன் சொந்தக்காரரும் சேர்ந்து சுட்டதாகச் சொன்னீரே; அப்படியானால், அவருக்குத் தெரியாமல் தானே நீர் அந்தத் தோப்புக்குள் போனீர்?

***மதன:-*** ஆம்.

***பா. குரோட்டன்:-*** நல்லது; அப்படியானால் நீர் எந்த வழியாகத் தோப்புக்குள் போனீர்?

***மதன:-*** வேலியில் ஒருவழி இருக்கிறது. அதன் வழியாகப் போனேன்.

***பா. குரோட்டன்:-*** அவ்வளவு இருளில் திருட்டு வழியாகப் போனீரே; அங்கே நீர் சந்தித்ததாகச் சொல்லும் மனிதர் ஆண் பிள்ளையா, அல்லது, பெண்பிள்ளையா?

***மதன:-*** பெண்பிளளை.

***பா. குரோட்டன்:-*** அவருக்கு வயசு எவ்வளவிருக்கும்?

***மதன:-*** பதினைந்து. அல்லது பதினாறு இருக்கும்.

***பா. குரோட்டன்:-*** பங்களாவின் சொந்தக்காரருக்கும் அந்தப் பெண்ணுக்கும் என்ன உறவுமுறை?

***மதன:-*** தங்கை.

***பா. குரோட்டன்:-*** சரி; நல்லது. அதிருக்கட்டும்; அந்த பங்களா எந்த ஜெமீந்தாருடைய பங்களா?

***மதன:-*** அதை மாத்திரம் நான் சொல்ல முடியாது?

***பா. குரோட்டன்:-*** அது கிருஷ்ணாபுரம் ஜெமீந்தாருடைய பங்களா அல்லவா?

***மதன:-*** கிருஷ்ணாபுரம் ஜெமீந்தாருடைய பங்களாவென்று உங்களுக்கு யார் சொன்னது?

***பா. குரோட்டன்:-*** நான் கேட்பதற்கு நீர் பதில் வேண்டுமேயன்றி நீர் கேட்பதற்கு நான பதில் சொல்வதற்காக வரவில்லை. நான்

கேட்பதற்கு ஆம் அல்லது இல்லை என்ற ஏதாவது ஒரு பதிலைச் சொல்லும்.

**மதன:-** அந்தக் கேள்விக்கும் நான் பதில் சொல்ல முடியாது.

**பா. குரோட்டன்:-** அந்த பெண்ணின் பெயரையாவது சொல்ல லாமா?

**மதன:-** அதையும் வெளியிட முடியாது.

**பா. குரோட்டன்:-** சரி! இருக்கட்டும்; நீர் அதைச் சொல்ல வேண்டாம்; தேனாம்பேட்டை போலீஸ் சப் இன்ஸ்பெகடர் வந்து உமக்காக இந்தக் கேள்விகளுக்குப் பதில் சொல்லுவார். அது போகட்டும். நீர் இப்போது எந்த வீட்டிலாவது வீணை கற்றுக் கொடுக்கிறீரா?

**மதன:-** இல்லை.

**பா. குரோட்டன்:-** ஏன்?

**மதன:-** எல்லோரும் நிறுத்திவிட்டார்கள்.

**பா. குரோட்டன்:-** எல்லோரும் ஒரே நாளிலா நிறுத்திவிட்டார்கள்?

**மதன:-** ஆம்.

**பா. குரோட்டன்:-** எல்லோரும் அப்படிக் கட்டுப்பாடாக உம்மை விலக்க வேண்டிய காரணமென்ன?

**மதன:-** காரணம் இன்னதென்று எவர்களும் சொல்லவில்லை.

**பா. குரோட்டன்:-** அவர்கள் சொல்லாவிட்டாலும், உம்முடைய மனசில், அதன் காரணம் என்னவாக இருக்கலாம் என்ற நினைவு கூட உண்டாகவில்லையா?

**மதன:-** அது என் பேரில் ஒருவர் பொய்யாகச் சொனன அவதூறின் மேல் ஏற்பட்டிருக்க வேண்டும் என்று நான் நினைத்தேன்.

**பா. குரோட்டன்:-** அபபடி அவதூறு சொன்னது யார்?

**மதன:-** அவர்கள் யார் என்பதை வெளியிட எனக்கு இஷ்ட மில்லை.

**பா. குரோட்டன்:-** ஐயா! நான் கேட்ட முக்கியமான சில கேள்வி களுக்குப் பதில் சொலல முடியாதென்றும், இஷ்டமில்லை என்றும் நீர் சொல்லுகிறீர். அதனால், உம்முடைய நடத்தையைப் பற்றி மிகவும் கேவலமான யூகங்கள் செய்ய இடமுண்டாகும். நீர் உண்மையை வெளியிட்டுவிட்டால், உம்மைப்பற்றி எவ்விதச் சந்தேகமும் கொள்ள இடம் ஏற்படாது. அதைக் கவனித்துப் பதில் சொல்லும்.

**மதன:-** அதைக் கவனித்தே சொல்லுகிறேன். இதனால் என்னைப் பற்றி எவ்வளவு கேவலமான யூகங்கள் ஏற்படக்கூடியதாக இருந் தாலும், அதைப் பற்றி எனக்குக் கவலை இல்லை.

**பா. குரோட்டன்:-** நீர் தவறான நடத்தைகளில் பிரவேசிப்பவர் என்ற யூகத்தை எல்லோரும கொள்ளுமபடியாக இருந்தால், நீர் சொன்ன சாட்சியத்துக்கு மதிப்பு ஏற்படாமல் போய்விடும். அது என்னுடைய கட்சிக்காரர்களுக்கு அனுகூலமாக முடிந்து போம். அதையும் கவனித்து பதில் சொல்லும்.

**மதன:-** நான் சொன்ன சாட்சியத்துக்கு மதிப்பு ஏற்படாவிட்டால், அதைப் பற்றி நான் கொஞ்சமும் விசனப்படப் போகிறதில்லை. எனக்குத் தெரிந்த விஷயங்களில் சொல்லக்கூடியதைச் சொல்லி விட்டேன். அதனால் யாருக்கு அநுகூலம் ஏற்பட்டாலும் ஏற்படட்டும்.

**பா. குரோட்டன்:-** சரி! உமமுடைய இஷ்டப்படியே ஆகட்டும். நீர் அந்தக் கிழவியைச சமுத்திரத்திலிருந்து எடுத்தீரே; அப்போது இருளாகத் தானே இருநதது?

**மதன:-** இல்லை; அவ்வளவு அதிகமாக இருண்டிருக்கவில்லை. மனிதரை அடையாளங் கண்டுபிடிக்க முடியாமல் மங்கலா இருந்தது?

**பா. குரோட்டன்:-** ஓகோ! அப்படியானால் உமக்குப் பக்கத்தில் யாராவது நினறால் அவருடைய முகத்தின் அடையாளம் தெரியா தல்லவா?

**மதன:-** ஒரு சுமார் 10-கஜ தூரத்துக்கப்பால் வருகிறவர்களுடைய முகம் தெரியாது.

**பா. குரோட்டன்:-** சரி; அந்தக் கிழவியை இரண்டு பேர் தூக்கிக் கொண்டு வந்து அலையில் போட்டதாகவும், அப்போது நீா சுவரின் முடக்கில் ஒளிந்து கொண்டிருந்ததாகவும் சொன்னீரே; அப்போது அவர்களை நீா பார்த்தீரா?

**மதன:-** ஆம்; எட்டிப் பார்த்துவிட்டு விரைவாகத் தலையை அப்பால் இழுத்துக் கொண்டேன்.

**பா. குரோட்டன்:-** நீர் மறைந்திருந்த இடத்துக்கும் அவர்கள் நின்று அவளை அலையில் போட்ட இடத்துக்கும் எவ்வளவு தூரம் இருக்கும்?

**மதன:-** சுமார் 20-கஜ தூரம் இருக்கும்.

**பா. குரோட்டன்:-** அப்படியானால், அவர்கள் இந்த மைனரும் பாலாம்பாளும் தான் என்பதை அப்போது நீர் தெரிந்து கொள்ள வில்லையே?

**மதன:-** இல்லை.

**பா. குரோட்டன்:-** நல்லது; அதற்கு மறுநாள் சாயுங்காலம் அந்தக் கிழவியை யாரோ குத்திவிட்டு ஓடினதாகவும் மற்றவர்களும் துரத்திக் கொண்டு ஓடினதாகவும் சொன்னீரே. நீர் ஏன ஓடவில்லை?

**மதன:-** நான் எழுந்திருந்து ஓடமாட்டாமல் மிகவும் பலவீனமான ஸ்திதியில் படுத்துக் கொண்டிருந்தேன். அதனால் நான் உடனே எழுந்து ஓட முடியவில்லை.

**பா. குரோட்டன்:-** நீர் எங்கே படுத்துக் கொண்டிருந்தீர்?

**மதன:-** அந்தக் கிழவியின் தலைப்பக்கத்தில் நாலைந்து கஜ தூரத்துக்கு அப்பால் போட்டிருந்த ஒரு கட்டிலில் படுத்திருந்தேன்.

**பா. குரோட்டன்:-** அவள் பக்கத்தில் காலை நீட்டிப் படுத்திருந்தீரா அல்லது தலையை வைத்துப் படுத்திருந்தீரா?

**மதன:-** தலையை வைத்துப் படுத்திருந்தேன்.

**பா. குரோட்டன்:-** அப்படியானால், "ஐயோ! அப்பா! குத்திப் புட்டானே!" என்று அவள் கத்திய பிறகு தானே நீர் திரும்பி அவள் பக்கம் பார்த்தீர்?

**மதன:-** ஆம்.

**பா. குரோட்டன்:-** அப்படியானால், நீர் அவருடைய முதுகுப் பக்கத்தைத் தானே பார்த்தீர்?

**மதன:-** ஆம்.

**பா. குரோட்டன்:-** சரி; அதிருக்கட்டும். நீர் அன்றைய தினத்துக்கு முன் எப்போதாவது இந்த மைனரைப் பார்த்ததுண்டா?

**மதன:-** ஒரே ஒரு தடவை பார்த்திருக்கிறேன்.

**பா. குரோட்டன்:-** எந்தச் சமயத்தில், எங்கே பார்த்தீர்?

**மதன:-** நான் இநத ஊருக்கு வந்த ஆரம்பத்தில், இவர்களுடைய பங்களாவில், முதல் நாள் வீணை வாசித்த போது, இவர் அங்கே வந்து உட்கார்ந்து பாட்டைக் கேட்டார். அப்போது தான் பார்த்தேன்.

**பா. குரோட்டன்:-** ஓகோ! அப்படியா! இவர் கடைசி வரையில் கேட்டுக் கொண்டு இருந்து, உமக்குச் சன்மானம் செய்து அனுப்பினாரா?

**மதன:-** இவர் கடைசி வரையில இருந்தார்; ஆனால் சன்மானம் ஒன்றும் செய்யவில்லை.

**பா. குரோட்டன்:-** உமமைச் சும்மாவா அனுப்பிவிட்டார்?

**மதன:-** இவர் ஒன்றும் பேசவே இல்லை. நான் வாசித்துவிட்டு, இவருடைய தாயாரிடத்தில் அனுமதி பெற்றுக் கொண்டு வந்து விட்டேன்.

**பா. குரோட்டன்:-** நீா அந்த இடத்தைவிட்டுப் போன போதுகூட இவர் சும்மாவே எதிரில் உடகார்ந்திருந்தாரா?

**மதன:-** ஆம்.

**பா. குரோட்டன்:-** நிரம்ப நல்லது. நீர் இந்த மைனரை இதற்கு முன் ஒரே நாள் பார்த்தீர். அப்போது நீர் வீணை வாசித்துக் கொண்டிருந்தீர். அந்தச் சமயத்தில் உமக்கெதிரில் வந்து உட்கார்ந்த இவர் திரும்பி எழுந்து போகவில்லை; ஆகையால் இவருடைய முதுகுப் பக்கத்தை நீர் அப்போது பார்க்கவில்லை என்பது

நிச்சயமாகிறது. ஆகையால், அந்தக் கிழவியைக் குத்திவிட்டு ஓடிய மனிதருடைய முதுகுப் பக்கத்தைப் பார்த்து, அவர் மைனர் என்று சொல்ல சாத்தியப் படாதல்லவா?

**மதன:-** ஆம்; சாத்தியப்படாது தான் - என்றான்.

உடனே பாரிஸ்டர் குரோட்டன் துரை ஜட்ஜிகளை நோக்கி, "சரி; குறுக்கு விசாரணை இப்போது இவ்வளவோடு நிற்கட்டும்; மற்ற கேள்விகளைப் பின்னால் கேட்கிறேன்; இரண்டாவது சாட்சியைக் கூப்பிடலாம்" என்றார்.

ஜட்ஜி சர்க்கார் வக்கீலை நோக்கி, "இப்போது செய்யப்பட்ட குறுக்கு விசாரணையில் வெளியான விஷயங்களைப் பற்றி நீங்கள் மறுபடியும் இந்த சாட்சியை விசாரிக்க வேண்டுமானால், விசாரிக்க லாம்" என்றார்.

**சர்க்கார் வக்கீல்:-** இந்த சாட்சி எப்படியும் மறுபடி வரப் போகிறார். அப்போது எல்லாக் கேள்விகளையும் ஒரு முட்டாகக் கேட்டுக் கொள்ளுகிறேன். அடுத்த சாட்சி கிருஷ்ணாபுரம் ஜெமீந் தாரை விசாரிக்கலாம் – என்று நயமாகக் கூறினார்.

அதை ஒப்புக் கொண்ட ஜட்ஜி இரண்டாவது சாட்சியை அழைக்கும்படி அனுமதிக்க, சேவகன், "கிருஷ்ணாபுரம் ஜெமீந் தார்! கிருஷ்ணாபுரம் ஜெமீந்தார்! கிருஷ்ணாபுரம் ஜெமீந்தார்!" என்று மூன்று தரம் கூப்பிட்டான்.

உடனே வக்கீல் சிவஞான முதலியார் அந்த ஹால் முழுதும் தமது பார்வையைச் செலுத்தி கிருஷ்ணாபுரம் ஜெமீந்தார் எங்கே இருக்கிறார் என்று உற்று நோக்கினார். அந்தச் சமயத்தில், பசவண்ண செட்டியார் என்று பொய்ப் பெயர் வைத்திருந்த ஜெமீந்தார் கச்சேரி மண்டபத்திற்குள் நுழைந்து சாட்சியினது கூண்டில் ஏறி நின்றார். அவரைக் கண்ட சிவஞான முதலியார் பெருத்த திகிலும் குழப்பமும் அடைந்தார்; கிருஷ்ணாபுரம் ஜெமீந்தாரே பசவண்ண செட்டியார் என்று பெயர் வைத்துக் கொண்டு வந்திருப்பவர் என்ற விஷயம் உடனே அவருக்கு விளங்கியது. யௌவனமும், அழகும் வாய்ந்தவராக இருந்த அந்த ஜெமீந்தார் பதினைந்து வருஷ காலத்தில் இளைத்து உருமாறி

தீக்ஷை வளர்த்து, முற்றிலும் வேறாக மாறிப் போய்விட்டாரே என்ற வியப்பும், அவர் தம்மிடத்திலும் உண்மையை வெளியிடா மல் மறைத்துப் பேசியதிலிருந்து தாம் செய்த வஞ்சகச் செயல் களை எல்லாம் அவர் கண்டு கொண்டிருப்பாரோ என்ற திகிலும் கவலையும் கொண்டவராய் வாய்திறந்து பேசமாட்டாமல் மிகுந்த பிரமிப்படைந்து, அப்படியே நாற்காலியில் சாய்ந்துவிட்டார்.

கிருஷ்ணாபுரம் ஜெமீந்தார் உடனே பிரமாணம் செய்விக்கப் பட, சர்க்கார் வக்கீல் அவரது வாய்மூலமாக அடியில் வரும் விஷயங்களை கிரகித்தார்:-

நான் கிருஷ்ணாபுரத்தின் ஜெமீந்தார். சென்ற 15-வருஷ காலமாக நான் மைசூரிலிருந்து சந்தனக்கட்டை வியாபாரம் செய்து வருகிறேன். ஜெமீந்தாரியில் வருஷம் ஒன்றுக்கு லட்சம் ரூபாய் வருமானம உணடு. அவைகளை எல்லாம் பார்த்துக் கொள்வதற் காக, சர்வாதிகாரம் பெற்ற ஓர் ஏஜெண்டை நியமித்து, அவரைக் கொண்டு அதன் காரியஙகளைப் பார்த்து வருகிறேன். சந்தனக் கட்டை வியாபாரத்தில் வருஷம் ஒன்றுக்கு ஐந்து லட்சம் ரூபாய் லாபம் கிடைக்கும்; சுமாா 15-வருஷ காலத்துக்கு முன் என்னுடைய சம்சாரம் இறந்து போனவுடன், நான் சித்தசுவாதீனம் இல்லாதிருந் தமையால், டாக்டர் என்னை தூரதேசமாகிய மைசூரில் இருக்கும் படிச் சொன்னார் ஆகையால நான் போயிருந்தேன். என்னுடைய குழந்தைகள் இரண்டும் மைலாப்பூரில் உள்ள என்னுடைய சிநேகிதரான சிவஞான முதலியாருடைய சவரக்ஷணையில் இருந்தன. கொஞ்ச காலத்துக்குப் பின் அந்தக் குழந்தைகள் இரண்டும் வாந்திபேதியால இறந்து போய்விட்டன என்று அவர் எழுதிவிட்டார். ஆகையால் நான் இந்த ஊருக்கே வராமல் இதுவரையில் அங்கேயே இருந்தேன். இப்போது நான் இங்கே வந்து சுமார் ஒருவார காலம் இருக்கலாம். மைலாப்பூரில் கடற்கரையின் மேல் உளள மனோகர விலாசம் என்ற பங்களாவை நான் அறுபது லட்சத்துக்கு வாங்கி சில தினங்களாக அதிலிருந்து வருகிறேன். முதல் சாட்சியாக வந்த மதன கோபாலன் என்பவனும், அவனுடைய தங்கையும என்னோடு கூட இருந்து வருகிறார்கள். என்னுடைய சொந்தக் குழந்தைகள் இறந்து போன செய்தியைக் கேட்ட பிறகு நான் அதே ஏக்கமாக இருந்தேன். அப்போது அந்த ஊரில் ஒரு நாடகக் கம்பெனியார் ஆடிக் கொண்டிருந்தார்கள்.

அதன் சொந்தக்காரரான சின்னையா நாயுடு என்பவருக்கும் எனக்கும் பழக்கமுண்டு. ஒரு நாள் அவர் என்னிடத்தில் பேசிக கொண்டிருந்த காலத்தில், தம்முடைய கம்பெனியில் பிடில் வாசித்து வந்த சங்கீத வித்வான் மாரடைப்பினால் இறந்து போய்விட்ட தாகவும், அவருடைய குழந்தைகள் இருவரையும் கவனிக்க யாரு மில்லாமையால், அவர்கள் இருவரும் அநாதைகளாக இருப்ப தாகவும் சொன்னார். நான் உடனே அந்தக் குழந்தைகளை வரவழைத்துப் பார்த்தேன். இரண்டு குழந்தைகளும் அதே மாதிரி அழகுடையவர்களாக இருந்தமையால், அந்த அநாதைக் குழந்தை களை நானே வளர்ப்பதாகச் சொல்லி வாங்கி, என்னுடைய அபிமான புத்திரனாகவும் புத்திரியாகவும் மதித்து அவர்களை வளர்த்து வருகிறேன். அந்தப் பையனே மதனகோபாலன்; அவனை நான் என்னுடைய சொந்தப் பிள்ளை போல பாவித்து வருகிறேன். அவன் வீணை வாசிப்பதில் நல்ல தேர்சசி அடைந்திருக்கிறான. சென்ற சில மாசகாலமாக, மதனகோபாலனையும் அவனுடைய தங்கையையும் இந்த ஊருக்கு அனுப்பி வைத்தேன்; ஏனென்றால், நானும் இந்த ஊருக்கே வந்துவிட உத்தேசித்து இருந்தமையாலும் அவர்களைக் கொஞ்ச காலம் பார்க்காமல் இருந்தால் என்னுடைய சொந்தக் குழந்தைகளைப் பற்றிய நினைவும் விசனமும் ஒருகால மறைந்து போகுமோ என்பதைப் பார்க்கும் பொருட்டும், அவர்களை முன்னாக அனுப்பி வைத்தேன். வந்த இடத்தில அவன், சில பெரிய மனிதர்களின் வீட்டுப் பெண்களுக்கு வீணை கற்றுக் கொடுக்க வேண்டும் என்று அவர்கள் வற்புறுத்தியதைக் கருதி, அந்த வேலையில் அமர்ந்தான். அவன் அபார ஞானமுள்ள வித்துவான் ஆகையால் அந்த வித்தையைப் பலருக்கும் தானம் செய்யலாம் என்ற நினைவினாலும், அதனால், தானும் அதிகக் கைதேர்ச்சியும் கீர்த்தியும் அடையலாம் என்ற எண்ணத்தினாலும், அவன் அந்த அலுவலில் அமர்ந்தானேயன்றி கேவலம் பணத்தை மாத்திரம் கருதி அதைச் செய்யவில்லை. அவன் இப்போது என்னுடைய பங்களாவிலேயே இருந்து வருகிறான்; என்னுடைய சொத்தில் பெரும் பாகத்தை நான் அவனுக்குக் கொடுக்க உத்தேசித் திருக்கிறேன். சில தினங்களாக, அவன் தேக அசௌக்கியப்பட்டுப் படுக்கையில் இருந்து குணமடைந்து வந்தான்! ஒருநாள் சாயுங்காலம்

சமுத்திரக் கரையோரமாகப் போய் உலாவிக் கடற்காற்று வாங்கிவிட்டு வரும்படி அவனை நான் வெளியில் அனுப்பினேன். அப்படிப் போன பையன் ராத்திரி ஆனபிறகும் வந்து சேரவில்லை. என் மனசில் சந்தேகம் உதித்தது, நான் உடனே சில ஆள்களை அழைத்துக் கொண்டு, கையில் லாந்தர்களோடு வெளியில் போய், கடற்கரையோரமெல்லாம் அவனைத் தேடிக் கொண்டு போன போது சற்றுத் தூரத்தில் மணலின் மேல், அவனும் ஒரு கிழவியும் மூர்ச்சித்துக் கிடக்கக் கண்டோம். இருவரும் தண்ணீருக்குள் விழுந்தவர்கள் போலக் காணப்பட்டனர். துணிகள் எல்லாம் ஈரமாக இருந்தன; கிழவியினுடைய கைகால்கள் எல்லாம் கட்டப்பட்டிருந்தன. அவைகளை நாங்கள் அவிழ்த்துவிட்டு, மதனகோபாலனையும், அந்தக் கிழவியையும் என்னுடைய பங்களாவுக்கு எடுத்துக் கொண்டு வந்து, படுக்கைகளில் விட்டு, டாக்டரை வரவழைத்து, அவர்களுக்குத் தேவையான சிகிச்சைகளைச் செய்து அன்றிரவு முழுதும் அரும்பாடுபட்டுக் கண் விழித்திருந்து, அவர்களுடைய மூர்ச்சையைத் தெளிவித்தோம்; மறுநாட் காலையில் கிழவி சௌக்கியமடைந்து எழுந்து படுக்கையில் உட்கார்ந்து, இந்த மைனருடைய வரலாற்றைச் சொல்ல ஆரம்பித்தாள். இந்த மைனர் தனக்கும் ஒரு குறவனுக்கும் பிறந்த பிள்ளை என்றும், மாரமங்கலம் ஜெமீந்தாருடைய உண்மையான குழந்தை காணாமல் போய் விட்டபடியால், இவரை மைனராக மாற்றிவிட்டதாகவும், இவர் இந்த பாலாம்பாளோடு சேர்ந்து கெட்டுப் போவதைத் தடுப்பதற்காக ஏதோ ஓர் அலுவலாக அவள இவர்களுடைய பங்களாவின் தோட்டத்துக்குள் போய் ஒளிந்து கொண்டிருந்ததாகவும், அந்தச் சமயத்தில் அவளை இவர்கள் இருவரும் கண்டு கொண்டு, பிடித்து அடித்து உதைத்து வதைத்ததாகவும், தான் உடனே மூர்ச்சித்து வீழ்ந்து விட்டதாகவும், அவள் சொல்லிக் கொண்டிருந்தவள் சோர்ந்து படுத்துவிட்டாள்; பிறகு அவள் சாயுங்காலம் மறுபடியும் எழுந்து, மாரமங்கலத்தின் உண்மையான மைனரை 1000-ரூபாய்க்கு விற்றவன் கட்டையன் குறவன் என்றும், அவனை வாங்கினவனுடைய பெயர் விலாசம் எல்லாம் அடங்கிய ஒரு துண்டுக் காகிதம் தன்னிடத்தில் இருப்பதாகவும், அதைத் தான் ஓரிடத்தில் ஒளித்து வைத்திருப்பதாகவும், அந்த விஷயம் தன்னைத் தவிர வேறே யாருக்கும் தெரியாதென்றும், தான் உடனே போய்,

அந்தக் காகிதத்தை எடுத்து, அதன் உதவியால் உண்மையான மைனரைக் கண்டுபிடித்து, இவரை ஜெமீந்தார் பதவியிலிருந்து விலக்கப் போவதாகவும், உண்மையான மைனருடைய உடம்பில் ஒரு மச்சம் இருப்பதாகவும், அதைப் போல ஒரு டாக்டருடைய உதவியைக் கொண்டு தன்னுடைய பிள்ளையான இந்த மைன ருடைய மார்பை திராவகத்தால் சுட்டு மச்சம் உண்டாக்கியதாகவும் அவள் சொல்லிக் கொண்டிருந்த சமயத்தில், இந்த மைனர் திடீரென்று உள்ளே நுழைந்து, அவளுடைய மார்பில் கத்தியால் குத்திவிட்டு ஓடினார். நானும் என்னுடைய ஆள்களும் துரத்திக் கொண்டு போய், சமுத்திரத்து மணலில் ஓடிக் கொண்டிருந்த இவரைப் பிடித்துக் கொண்டோம். அந்த சமயத்தில் ராஜபாட்டை யில் போய்க் கொண்டிருந்த ஒரு போலீஸ்காரனும் எங்களோடுகூட வந்து இவரைப் பிடித்துக் கொண்டார். இவருடைய இடுப்பில் சொருகப்பட்டிருந்த கத்தியில் இரத்தம் கசிந்து கொண்டிருந்தது. நாங்கள் பிடித்தவுடன் இவர் திகில் கொண்டு மருண்டு மருண்டு விழித்தார். இவரைப் பிடித்துப் போலீசார் உடனே கைதி செய்தார்கள். அவ்வளவு தான் எனக்குத் தெரியும் – என்று கிருஷ்ணாபுரம் ஜெமீந்தார் வாக்குமூலம் கொடுத்தார்.

உடனே ஜட்ஜி பாரிஸ்டர் குரோட்டனை நோக்கி, "குறுக்கு விசாரணை செய்யலாம்" என்றார்.

பாரிஸ்டர் குரோட்டன் துரை உடனே எழுந்து, "இந்த சாட்சியை நான் அதிகமாக விசாரிப்பதற்கு ஒன்றுமில்லை; அத்யாவசியமான இரண்டொரு கேள்விகளே போதுமானவை" என்று கூறிய வணணம் ஜெமீந்தாரை நோக்கி, "ஐயா! தாங்கள் தங்களுடைய பெருத்த சமஸ்தானத்தையு, தங்களுடைய அரண்மனை முதலிய வசதியான இடங்களையும், மற்ற சுகசௌகரியங்களையும் விட்டு மைசூருக்குப் போக வேண்டிய காரணமென்ன?" என்றார்.

***கி. ஜெமீந்தார்:-*** மிகுந்த அழகும், நற்குண நல்லொழுக்கமும, என்னிடத்தில் அளவற்ற வாத்சல்யமும் வைத்திருந்த என்னுடைய யௌவன சம்சாரம் இறந்து போய்விட்டாள். அந்தத் துக்கம் என்னால் சகிக்கக் கூடாமல் போய்விட்டது. ராப்பகல் அதே நினைவாக இருந்து ஆறாத்துயரத்தில் நான் ஆழ்ந்துகிடந்த

படியால், எனக்குச் சித்தப்பிரமை ஏற்பட்டுப் போய்விட்டது. நான் என்னுடைய ஊரில் இருந்தால் அவளுடைய நினைவு உண்டாகிக் கொண்டே இருக்கும் என்றும், ஆகையால், நான் எங்கேயாவது தூரமான தேசத்தில் போய் இருந்து கொள்வது நல்லதென்றும் டாக்டர் சொன்னார். அதனால் தான் மைசூருக்குப் போனேன்.

*பா. குரோட்டன்:-* அப்படியா! நல்லது; தங்களுடைய குழந்தைகள் இறந்து போய்விட்டன என்று வக்கீல் சிவஞான முதலியார் எழுதிய செய்தியை உணர்ந்த உடனே தங்களுடைய துக்கம் முன்னிலும் பன்மடங்கு அதிகமாகப் பெருகியிருக்க வேண்டுமே?

*கி. ஜெமீந்தார்:-* ஆம்; அதைச் சொல்லவும் வேண்டுமா! ஏற்கெனவே என்னுடைய மனம் உடைந்து போயிருந்தது. குழந்தைகள் இறந்து போன சங்கதி தெரிநதவுடனே என்னுடைய உயிர் அநேகமாகப் போயவிட்டது. அதுமுதல் நான் நடைப் பிணம் போல இருந்து வருகிறேன்.

*பா. குரோட்டன்:-* (மிகவும் துக்கிப்பதாக நடித்து) ஐயோ பாவம்! அருமையாக இருந்த சம்சாரமும் குழந்தைகளும் போய்விட்டால், அது சாதாரணமாகப் பொறுக்கக்கூடிய விஷயமே அல்ல. தாங்கள் 7, 8-மாசத்துக்கு முன் இநத மதனகோபாலனையும் அவனுடைய தங்கையையும் இந்த ஊருக்கு அனுப்பியதுகூட அந்த மனோ வியாதியினாலே தானோ?

*கி. ஜெமீந்தார்:-* ஆம், அந்த விசனம் இன்னமும் மாறாமலே இருந்து வருகிறது. இந்த மதனகோபாலனையும், இவனுடைய தங்கையையும் பார்க்கும் போதெல்லாம், என்னுடைய குழந்தைகள் சம்சாரம் முதலியோரை இழந்த துயரம் என்னை வதைப்பதால், சொற்பகாலம் அவர்களை இந்த ஊருக்கு அனுப்பிப் பார்க்கலாம் என்றும் நினைத்து அனுப்பி வைத்தேன்.

*பா. குரோட்டன்:-* அப்படியா! நல்ல காரியம் செய்தீர்கள்; பதினைந்து வருஷ காலமாக ஒருவருடைய மனசு புண்பட்டு வருந்துவதெனறால், அந்த மனசு அழுத்தமான மனசாக இருந்தாலன்றி, அது நல்ல நிலைமையில் இருக்காது. தாங்களோ தங்களுடைய சமசாரம இறந்தகாலம் முதலாகவே பைத்தியங் கொண்டவர்

ஆகிவிட்டீர்கள். தங்களுடைய மனநிலைமை மிகவும் கேவலமாகத் தான் இருக்கும். அதிருக்கட்டும். நான் தங்களிடத்தில் இன்னொரு கேள்வி கேட்க விரும்புகிறேன். தங்களுக்குப் பைத்தியம் பிடித் திருப்பதாக டாக்டர் சொல்ல, அதன்மேல் தங்களை எல்லோரும் மைசூருக்கு அனுப்பினார்கள் அல்லவா. அதன் பிறகு, தங்களுக்கு அந்தப் பைத்தியம் நீங்கிவிட்டதாக எந்த டாக்டராவது சொன்னாரா?

*கி. ஜெமீந்தார்:-* எனக்கு வைத்தியம் செய்த டாக்டரும் சொன்னார். பைத்தியம் நீங்கிவிட்ட தென்பது எனக்கே தெரிகிறது.

*பா. குரோட்டன்:-* உங்களுக்கே தெரிகிறதென்பது இருக்கட்டும். உங்களுடைய பைத்தியம் நிவர்த்தியாகிவிட்டதாக டாக்டர் சொன்னதற்கு எழுத்து மூலமான ஆதாரம் ஏதாவது தங்களிடத்தில் இருக்கிறதா?

*கி. ஜெமீந்தார்:-* இல்லை.

*பா. குரோட்டன்:-* சரி; நிரம்ப நல்லது. அந்தச் சங்கதி அப்படியே இருக்கட்டும். இறந்து போன கிழவியைத் தாங்கள் இதற்கு முன் எப்போதாவது பார்த்ததுண்டா?

*கி. ஜெமீந்தார்:-* இல்லை.

*பா. குரோட்டன்:-* மாரமங்கலம் ஜெமீந்தாரிணியம்மாளைப் பற்றி இப்படிப்பட்ட அபூர்வமான சங்கதிகளைச் சொன்ன அந்தக் கிழவி பைத்தியக்காரியா, அல்லது, நல்ல நிலைமையில் உள்ள அறிவோ டிருப்பவளா என்பதைத் தாங்கள் நிச்சயமாக அறிந்து கொண்டீர்களா?

*கி. ஜெமீந்தார்:-* இல்லை.

*பா. குரோட்டன்:-* மூர்ச்சித்து, அறிவு பிறழ்ந்து கிடந்து விழித்துக் கொண்டு அவள் பேசிய விஷயமெலலாம், மூளைக்குழப்பத்தினா லுண்டான உளறலாக இருக்கவும் கூடுமல்லவா?

*கி. ஜெமீந்தார்:-* அபபடியும் இருக்கலாம்.

*பா. குரோட்டன்:-* தாங்கள் பதினைந்து வருஷமாக மைசூரில் இருந்து இங்கே வந்து ஒருவாரமாகிற தல்லவா; இந்தக் காலத்தில் தாங்கள் இந்த மைனரைப் பார்த்ததில்லையே?

**கி. ஜெமீந்தார்:-** இல்லை.

***பா. குரோட்டன்:-*** அபபடியானால் அன்றைய தினம் ராத்திரி தாங்களும் ஆள்களும் இவரைப் பிடித்துக் கொண்டதாகச் சொல்லு கிறீர்களே; அப்போது தானே இவரைத் தாங்கள் முதன் முதல் பார்த்தீர்கள்?

**கி. ஜெமீந்தார்:-** நான் இங்கே வந்த பிறகு ஒருநாள் மாரமங்கலம் பங்களாவின் பக்கமாக ஸாரட்டில் போய்க் கொண்டிருந்த சமயத்தில், இவர் அந்த பங்களாவில் இருந்து வந்தார். என்னுடைய வண்டிக்காரன் இவர் இனனார் என்று சொன்னான். அதிலிருந்து நான் தெரிந்து கொண்டேன்.

***பா. குரோட்டன்:-*** ஓகோ! சரி சரி! அதிருக்கட்டும்; அந்தக் கிழவி படுத்திருந்து குத்தப்பட்ட இடத்துக்கும், ராஜபாட்டைக்கும் எவ்வளவு தூரம் இருககும்.

**கி. ஜெமீந்தார்:-** அரை பர்லாங்கு தூரமிருக்கலாம்.

***பா. குரோட்டன்:-*** அந்த அரை பர்லாங்கு தூரத்திலும் பெருத்த பெருத்த பூத்தொட்டிகளும், மரங்களும் இருக்கின்றன அல்லவா?

**கி. ஜெமீந்தார்:-** ஆம்; இருக்கின்றன.

***பா. குரோட்டன்:-*** கிழவியைக் குத்திய மனிதன் சரியான சமயம் பார்த்து உள்ளே வந்து குத்துகிறதானால் அவன் அதற்கு முன் அந்தப் பூததொட்டிகளின் மறைவில் தானே மறைந்து இருக்க வேண்டும்?

**கி. ஜெமீந்தார்:-** ஆம்; அப்படித்தான் இருந்திருக்க வேண்டும்.

***பா. குரோட்டன்:-*** அபபடியானால், ராக்காலத்தில் ஒரு மனிதன் அந்தப் பூத்தொட்டிகளின் மறைவில் ஒளிந்து கொண்டால், அவன் இருப்பது பிறருக்குத் தெரியாதல்லவா?

**கி. ஜெமீந்தார்:-** தெரியாது.

***பா. குரோட்டன்:-*** நல்லது. அதிருக்கட்டும். கிழவியைக் குத்தி விட்டு ஓடிய மனிதன் பாதையோடு ஓடி ராஜபாட்டையை அடைந்தானா? அல்லது, பூத்தொட்டிகளினிடையில் புகுந்து ஓடி ராஜபாட்டையை அடைந்தானா?

**கி. ஜெமீந்தார்:-** பூத்தொட்டிகளினிடையில் புகுந்துதான் மறைந்து ஓடினான்.

**பா. குரோட்டன்:-** ஓகோ! சரி தான்; அதிருக்கட்டும். கொலை செய்த மனிதன் ராஜபாட்டைக்குப் போய்ச் சேர்ந்து, அங்கிருந்து சமுத்திரத்துக்குள் ஓடிய போது நீங்கள் பின்னால் எவ்வளவு தூரத்தில் ஓடினீர்கள்?

**கி. ஜெமீந்தார்:-** சுமார் 20-கஜத்துக்குப் பின்னால் ஓடினோம்.

**பா. குரோட்டன்:-** சரி; கொலை செய்துவிட்டு ஓடிய மனிதன் பூச்செடிக்குள் மறைந்து மறைந்து ஓடினதாகச் சொன்னீர்களே. அப்படிக் கொலை செய்துவிட்டு ஓடிய மனிதன் தான் ராஜபாட்டையிலிருந்து சமுத்திரத்துக்குள் ஓடினான் என்பதை நீங்கள் நிச்சயமாகச் சொல்ல முடியுமா?

**கி. ஜெமீந்தார்:-** அந்த மனிதன் பூத்தொட்டிகளுக்குள் மறைந்து ஓடிக் கடைசியில் ராஜபாட்டைக்குப் போய் அங்கே இருந்து ஓடியபடியால், அவன் ஒரே மனிதனாகத் தான் இருக்க வேண்டும்.

**பா. குரோட்டன்:-** இந்தக் கொலையைச் செய்வதற்காக வந்த மனிதன் தனக்கு உதவியாக இன்னொரு மனிதனை அழைத்து வரக்கூடும். ஒருவன் பூத்தொட்டிகளினிடையில் மறைந்திருக்க, மற்றொருவன் கட்டிடத்துக்குள் வந்து குத்தியிருக்கலாம். குத்திவிட்டு ஓடியவன பூச்செடிக்குள் மறைந்து தோட்டத்துக்குள்ளேயே இருந்திருக்கலாம. உதவிக்காக வந்தவன் பயந்து கொண்டு வெளியில் ஓட, அவனையே நீங்கள் கொலையாளி என்று பிடித்துக் கொண்டிருக்கலாம் அல்லவா?

**கி. ஜெமீந்தார்:-** அப்படியும் இருக்கலாம். அப்படியானால், இந்த மைனர் அந்தக் கொலைகாரனுக்கு உதவியாக வந்தவன் என்றா சொல்லுகிறீர்கள்?

**பா. குரோட்டன்:-** இவர் கொலைகாரனோடு கூட வந்தாரா இல்லையா என்பது இப்போது கேள்வியல்ல. கொலை செய்துவிட்டுப் பூத்தொட்டிகளுக்குள் ஓடிய மனிதன் இந்த மைனர் தானா என்பதை நீங்கள் சந்தேகமற உறுதியாகச் சொல்ல முடியாதலலவா? — என்றார்.

கிருஷ்ணாபுரம் ஜெமீநதார் தமது நெற்றியில் கையை வைத்து அழுத்திக் கொண்டு சிநதனை செயகிறார்.

**பா. குரோட்டன்:-** அதிருக்கட்டும். அந்த மனிதன் கொலை செய்து விட்டு ஓடியதைக் கண்டு, தாங்கள் கூச்சலிட்ட பிறகு தானே, தங்களுடைய ஆடகள் அங்கே வந்தார்கள்.

**கி. ஜெமீந்தார்:-** கொலைகாரன் குத்திவிட்டு வெளியில் ஓடியதைக் கண்டவுடனே நான் கூச்சலிட்டுக் கொண்டு பின்னால் தொடர்ந்து ஓடினேன். எனக்குப் பின்னால் ஆள்கள் வந்து என்னைத் தாண்டி முன்னால் ஓடித் துரத்தினார்கள்.

**பா. குரோட்டன்:-** அப்படியானால், அந்தக் கொலைகாரன் கிழவி இருந்த கட்டிடத்தை விட்டு வெளியில் வந்து பூத்தொட்டிகளுக் குள் நுழைந்த பிறகு தானே ஆள்கள் வந்தார்கள்?

**கி. ஜெமீந்தார்:-** ஆம்.

**பா. குரோட்டன்:-** அப்படியானால், கொலை செய்தவன் தான் பூச்செடிக்குள் ஓடினான் என்று, தாங்கள் சொன்னதிலிருந்து வேலைக்காரர்கள் தெரிந்து கொண்டார்களேயன்றி, அவர்கள் நேரில் அதைக் கண்டுணரவில்லையே?

**கி. ஜெமீந்தார்:-** இலலை.

**பா. குரோட்டன்:-** ரிமப நல்லது; இன்னம் ஒரே ஒரு விஷயம். அதை மாத்திரம் சொலலிவிடுங்கள். கிழவியைக் குத்திய கத்தி மிகவும் கூர்மையான கத்தியாகத்தானே இருந்தது?

**கி. ஜெமீந்தார்:-** ஆம்.

**பா. குரோட்டன்:-** நீங கள் மைனரைப பிடித்த போது அந்தக் கத்தி எங்கே இருந்தது.

**கி. ஜெமீந்தார்:-** அவர் அதை அவருடைய இடுப்பில் சொருகிக் கொண்டிருந்தார்.

**பா. குரோட்டன்:-** கொலை செய்துவிட்டு செடிகளுக்குள் விழுந்து தடபுடலாக ஓடுகிற மனிதன் அதை எறிந்துவிட நினைப் பானா, அல்லது, அதைக் கையிலே வைத்துக் கொண்டே போவானா? அப்படி எடுத்துக் கொண்டு போவதாகவே வைத்துக்

கொண்டாலும், ஓடுகிற ஓட்டத்தில் கூர்மையான பீச்சாங்கத்தியை இடுப்பில் சொருகிக் கொள்ள எப்படி சாத்தியப்படும்? அதை மாத்திரம் தயவு செய்து தாங்கள் சொல்ல வேண்டும்.

***கி. ஜெமீந்தார்:-*** நாங்கள் போய் இவரைப் பிடித்த போது இரத்தம் கசிந்த கத்தி இவருடைய மடியில் சொருகப்பட்டிருந்தது. ஆகையால், இவர் செடிகளின் மறைவில் ஓடிய போது அதை மடியில் சொருகிக் கொண்டிருக்க வேண்டும் என்று தான் நினைக்க வேண்டியிருக்கிறது.

***பா. குரோட்டன்:-*** மனிதன் செய்ய சாத்தியமிலலாத ஒரு காரியத்தை நாம் சாத்தியம் என்று நினைப்பதைவிட இவரைப பிடித்தவர்கள் அந்தக் கத்தியை இவருடைய மடியில் சொருகி வைத்தார்கள் என்று எண்ணிக் கொள்ளுவது நிரம்பவும பொருத்த மான யூகமல்லவா?

***கி. ஜெமீந்தார்:-*** நாங்களேன் அப்படிச் செய்ய வேணடும்? எங்களுக்கும் இவருக்கும் பகைமை உண்டா?

***பா. குரோட்டன்:-*** கத்தியைச் சொருகி வைத்து இவரைப பிடித்ததி லிருந்து, ஏதோ பகைமை இருப்பதாகத் தான் எண்ண வேண்டி யிருக்கிறது.

***கி. ஜெமீந்தார்:-*** நான் மாத்திரம் சொல்லவில்லையே! என்னோடு வந்த எத்தனையோ மனிதர்களும் இருக்கிறார்களே! அவர்கள் எல்லோரும் கண்ணாரக் கண்ட விஷயந்தானே இது.

***பா. குரோட்டன்:-*** அவர்கள் எல்லோரும் தங்களுடைய வேலைக் காரர்கள் அல்லவா?

***கி. ஜெமீந்தார்:-*** ஆம்; வேலைக்காரர்கள் தான். அவர்களோடு ஒரு போலீஸ் ஜெவானும் இருந்தானே!

***பா. குரோட்டன்:-*** அதிருக்கட்டும்; அந்த இருட்டில் இந்த மைனரை நீங்கள் பிடித்துக் கொண்டீர்களே. அப்போது இவரை முதலில் யார் பிடித்ததென்பது தங்களுக்கு நினைவிருக்கிறதா?

***கி. ஜெமீந்தார்:-*** எல்லோரும் கும்பலாகப் போய்ப் பிடித்துக் கொண்டோம். ஆகையால் இன்னார் தான முதலில பிடிததாாகள என்று சொல்ல முடியாது.

**பா. குரோட்டன்:-** சரி; சொல்ல வேண்டாம். மைனருடைய மடியில் கத்தி இருந்தது அந்த இருட்டில் உங்களுக்கு எப்படி தெரிந்தது?

**கி. ஜெமீந்தார்:-** (சிறிது யோசித்து) அப்போ தெரியவில்லை. ராஜபாட்டையில் இருந்த விளக்கண்டை வந்த பிறகு தான், நாங்கள் கத்தியைக் கண்டோம் – என்றார்.

அதைக் கேட்ட பாரிஸ்டர் குரோட்டன் துரை, "சரி; அப்படியானால் மைனர் ஓடிய போதே அவருடைய மடியில் அந்தக் கத்தி இருந்ததா, அல்லது, அவரைப் பிடித்துக் கொண்டபின் அந்தக் கும்பலில் யாராவது அவருடைய மடியில் சொருகிவிட்டார்களா என்ற விஷயம், அந்த இருளில் போலீஸ் ஜெவானுக்கு நிச்சயமாகத் தெரிய நியாயமில்லை; சரி; இந்தக் குறுக்கு விசாரணையை இவ்வளவோடு நான் இபபோது நிறுத்திக் கொள்கிறேன். வேண்டுமானால் பிறகு பார்த்துக் கொள்ளலாம்" என்று கூறிய வண்ணம் கீழே உடகார்ந்து கொணடார்.

உடனே கிருஷ்ணாபுரம் ஜெமீந்தார் கூண்டை விட்டிறங்கி அப்பால் சென்றார். மதனகோபாலனும், கிருஷ்ணாபுரம் ஜெமீந்தாரும் வாக்குமூலம கொடுதத உடனே அதைக் கேட்டிருந்த ஜனங்கள் எல்லோரும், மைனர் கொலை செய்தது நிச்சயமென்று தீர்மானித்துக் கொண்டனா; ஆனால், பாரிஸ்டர் குரோட்டன் துரை குறுக்கு விசாரணை செய்த பிறகு அவாகளது தீர்மானம் கலகலத்துப் போகத் தொடங்கியது. மைனர் ஒருவேளை குற்றமற்றவனாக இருப்பானோ என்ற எண்ணமும் தோன்ற ஆரமபித்தது. அதன் பிறகு கிருஷ்ணாபுரம் ஜெமீந்தாரது ஆட்களில் முக்கியமான இருவரும், கடற்கரையில் மைனரை ஒப்புக் கொண்ட போலீஸ் ஜெவானும் ஒருவர் பின் ஒருவராக வந்து வாக்குமூலம் கொடுததனர். அவாகளது வாக்குமூலம் கிருஷ்ணாபுரம் ஜெமீநதாரது வாக்குமூலத்திற்கு அநுசரணையாகவே இருந்தது. உடனே பாரிஸ்டர் குரோடடன் துரை மிகவும் தந்திரமாக அவர்களையும் குறுக்கு விசாரணை செயது, அவர்களது வாக்குமூலத்தையும் பயனற்றதாகவும சநதேககரமானதாகவும் ஆக்கிவிட்டாா. அதைக கணட ஜனங்களை யாவரும் பாரிஸ்டர்

குரோட்டன் துரையின் அபார சக்தியையும் அதிதீக்ஷண்ய புத்தியையும் கண்டு பெரிதும் வியப்பும் மகிழ்ச்சியும் பூரிப்பும் அடைந்தனர். அந்த வழக்கின் விவரமொன்றும் அந்த பாரிஸ்டருக்குத் தெரியாதிருக்கையிலேயே, அவர், சாட்சிகள் கையும் மெய்யுமாகக் கண்டதாகச் சொன்ன வாக்குமூலங்களை எல்லாம் சின்னாபின்னப் படுத்தி, மைனா கொலை செய்தானோ இல்லையோ என்ற சந்தேகத்தை எல்லோரும் கொள்ளும்படி செய்துவிட்டதைக் கண்டு யாவரும் அவரது அற்புதமான திறமையைப் பற்றி வெகுவாக மெச்சத் தொடங்கினார்கள். மைனர் விடுதலை அடைந்து விடுவான் என்ற ஓர் எண்ணமும் ஜனங்களினது மனதில் தோன்றியது. வெட்கத்தினாலும், துக்கத்தினாலும், திகிலினாலும் குன்றித் துவண்டு தள்ளாடி நின்ற குற்றவாளிகள் இருவரும் ஒருவாறு துணவடைந்தனர்; அவர்களது முகம் தெளிவடைந்தது. உடனே ராயப்பேட்டை வைத்தியசாலையின் அதிகாரியான பெரிய டாக்டர் அடுத்த சாட்சியாக வரவழைத்து விசாரிக்கப்பட்டார். அவர் அடியில் வருமாறு வாக்குமூலம் கொடுத்தார்:-

நான் ராயப்பேட்டை வைத்தியசாலையின் பெரிய சர்ஜன் மூன்று நாளைக்கு முன் சிலர் ஒரு கிழவியை மோட்டார் வண்டியில் வைத்து ராத்தி சுமார் எட்டுமணி சமயத்தில் என்னுடைய வைத்திய சாலைக்குக் கொண்டு வந்தார்கள். உடனே என்னுடைய ஜாகைக்கு டெலிபோன் மூலமாகச் செய்திவர, நான் என்னுடைய மோட்டார் வண்டியில் உட்கார்ந்து உடனே வைத்தியசாலைக்கு வந்து அந்தக் கிழவியைச் சோதனை செய்து பார்த்தேன். அவளுடைய மார்பில் கத்தியால் குத்தப்பட்ட ஒரு பெருத்த ரணமிருந்தது. அந்த ரணத்தின் மேல் சர்க்கரை சுண்ணாம்பு ஆகிய இரண்டையும் குழப்பி அடைபோலப் பூசப்பட்டிருந்ததன்றி துணிகளினால் கட்டப்பட்ட கட்டுகளும் இருந்தன. அப்படி இருந்தும், அப்போதும் இரத்தம் கசிந்து கொண்டிருந்தது. அந்தக் கிழவியின் சேலை முழுதும் உதிரத்தில் தோய்ந்து கிடந்தது. நான் பார்த்த போது அவளது கண்கள் மூடப்பட்டிருந்தன. உயிர் இருந்தது. இருதயம் வேலை செய்து கொண்டிருந்ததானாலும் மெதுவாக அடித்துக் கொண்டிருந்தது. நான் உடனே அந்த

ரணத்தை ஆராய்ச்சி செய்து பார்த்தேன். மார்பெலும்புகளுள் ஒன்று ஒடிந்து போயிருந்தது. வலது ஈரல்வை வரையில் கத்தி சென்றிருந்ததானாலும், அதன்மேல் எவ்விதக் காயமும் படவில்லை. ஆகையால், அவளைப் பிழைக்க வைத்து விடலாம் என்ற ஒரு தைரியம் எனக்கு உண்டாயிற்று. ஆகையால், நான் உடனே அவளுக்கு ஒரு மருந்தைக் கொடுத்து, ஒடிந்து போயிருந்த எலும்பை எடுத்துவிட்டு மார்பின் பிளப்பை ஒன்றாகச் சேர்த்து விரைவாகத் தையல் போட்டு, அதன் மேலே நல்ல மருந்தை வைத்துக் கட்டிவிட்டு அவளுக்குக் குளிர்ச்சியான பானம் கொடுத்துப் பருகச் செய்து ஒரு கட்டிலின் மேல் விடச் செய்தேன். உடனே அவள் தனது கண்களைத் திறந்து கொண்டு பேசத் தொடங்கி, தன்னுடைய உயிர் அரைமணிக்கு மேல் நிற்காதென் றும், தான் முக்கியமான சில ரகசிய சங்கதிகளை வெளியிட வேண்டும் என்றும், அதை எழுதிக் கொள்ள வேண்டும் என்றும் சொன்னாள். அவளது நாடியும் வரவரத் தளர்வடைந்து வந்ததைக் காண, அவள பிழைக்க மாட்டாள் என்ற ஒரு நினைவும் என் மனசில் உண்டாகிக் கொணடே இருந்தது. அவள் மேன்மேலும் வற்புறுத்திக் கொண்டே இருந்தாள். அப்போது அங்கே வந்து சேர்ந்த மைலாப்பூர் சப இனஸ்பெக்டர் பிரசிடென்சி மாஜிஸ்டி ரேட்டுக்கு டெலிபோன மூலமாகச் செய்தியனுப்ப, கால்மணி நேரத்தில் அவர் மோட்டார் வண்டியில் வந்து சேர்ந்தார். அப்படி வந்தவர், என்னையும சப் இன்ஸ்பெக்டரையும தவிர, மற்றவர் களை எல்லாம் வெளியில் அனுப்பிவிட்டுக் கிழவி சொன்ன விஷயங்களை எல்லாம் எழுதிக் கொண்டார். அவள் வாக்குமூலம் கொடுக்கும் போதே சோர்ந்து கண்களை மூடி உறங்கினவள் வாக்குமூலம் முடியும் போது மயங்கி விழுந்து மறுபடியும் உணர்வு பெறவில்லை; உடனே சுவாசம் வாயால் வரத்தொடங்கி யது. பிறகு பத்து நிமிஷத்தில் அவளுடைய பிராணன் போய் விட்டது. மாஜிஸ்டிரேட்டு வாங்கிய வாக்குமூலத்தில் நானும் சப் இன்ஸ்பெக்டரும் கையெழுத்து வைத்தோம்; அது ஒரு கெட்டி யான உறைக்குள் போடப்பட்டதன்றி அந்த உறையின் ஒட்டு களில் அரக்கு முத்திரைகள் வைக்கப்பட்டன. அந்த முத்திரைகள் எங்கள் வைத்தியசாலையைச் சேர்ந்த முகரினால் (Seal) வைக்கப்

பட்டன; அந்த முகர் என்னுடைய கைப்பெட்டியில் எப்போதும் பூட்டிவைக்கப் பட்டிருப்பது. அந்த முகரினால் அரக்கு முத்திரைகள் வைக்கப்பட்ட பின், அந்த உறையை எடுத்துக் கொண்ட மாஜிஸ் டிரேட்டும், அவரோடு சப் இன்ஸ்பெக்டரும் போய்விட்டார்கள்; நான் அதன் பிறகு பிணத்தைக் கொளுத்தும்படி அனுப்பி விட்டேன். எனக்கு இவ்வளவு தான் தெரியும் - என்று சாஜன் துரை வாக்குமூலம் கொடுத்தார.

அப்போது விசாரணை குமாஸ்தா, ஜட்ஜிகளின் மேஜை மீதிருந்த ஓர் உறையை எடுத்து சர்ஜனிடத்தில் காட்ட, அது தான் வாக்குமூலமிருந்த உறையென்றும், அரக்கு முத்திரைகள் வைக்கப் பட்டபடி சரியாகவே இருக்கின்றன என்றும் அவர் கூறினார்.

உடனே ஜட்ஜி குரோட்டன் துரையின் முகத்தைப் பார்க்க, அந்தக் குறிப்பை உணர்ந்து கொண்ட பாரிஸ்டா புன்னகை தவழ்ந்த முகத்தோடெழுந்து, "பெருமை வாய்ந்த நமது நண்பரான சர்ஜன் துரை அவர்கள் சொன்ன ஒவ்வொரு வார்த்தையையும் நாம் வேதவாக்கியமாக மதிக்கக் கடமைப்பட்டிருக்கிறோம் ஆகையால், அதில சந்தேகப்பட்டு நாம் கேட்பதற்கு அதிகமாக ஒன்றுமில்லாவிட்டாலும் தேகக்கூறுகளை அவ்வளவாக அறிந்து கொள்ளாத நம் போன்ற சாதாரண ஜனங்களுக்கு ஏற்படும் இரண்டொரு சந்தேகங்களை நாம் கேட்டு அவருடைய அபிப்பிரா யத்தை உணர்ந்து கொள்ளுவதைப் பற்றி அவர் ஆயாசப்பட மாட்டார் என்பதை நான் உறுதியாக நம்பி, இரண்டொரு சினன சங்கதிகளைக் கேடக விரும்புகிறேன்" என்று நயமாகப பீடிகை போட்டுக் கொண்டு நின்றவராய் சர்ஜன் துரையை நோக்கி, "ஐயா! அந்தக் கிழவிக்கு எதனால் மரணம நேர்ந்ததென்று தாங்கள் அபிப பிராயப்படுகிறீர்கள்?" என்றார்.

***சர்ஜன் துரை:-*** கூாமையான நீண்ட ஆயுதம் மார்பில் குத்தப்படட தால் மரணம் நேர்ந்ததென்று நான் அபிப்பிராயப்படுகிறேன்.

***பா. குரோட்டன்:-*** மன்னிக்க வேண்டும். என்னுடைய கேளவி அதல்ல. அவளுடைய தேகத்தில் எத்தனையோ கருவிகள இருக்கின்றனவே; அவைகளுள், எதன் சேதத்தினால் அவளுடைய உயிர் நின்றது?

**ச. துரை:-** அவள் மிகவும் வயதாகித் தளர்ந்த கிழவியாகையால், அவளுடைய உடம்பிலிருந்த உதிரத்தில் பெரும்பாகமும் சேதமாகி விடவே, இருதயம் தானாக நின்றிருக்க வேண்டும் என்று அபிப்பி ராயப் படுகிறேன்.

**பா. குரோட்டன்:-** நிரம்பவும் நல்லது. குத்தப்பட்ட பின எவ்வளவு நேரத்துக்குப் பிறகு அவள உங்களிடம் வந்திருப்பாள்?

**ச. துரை:-** அரைமணி நேரத்துக்குள்ளாகவே வந்திருக்கலாம்.

**பா. குரோட்டன்:-** அவளுடைய தேகத்திலிருந்த இரத்தமெல்லாம் அநேகமாக வந்துவிட்டதாகச் சொன்னீர்களே; கத்தியால் குத்தப் பட்ட நேரம் முதல், அங்கிருந்தவர்கள சர்க்கரை முதலியவைகளைக் கட்டியதற்குள்ளாகத் தானே அந்த ரத்தத்தில் பெரும்பாகமும் வெளிப்பட்டிருக்க வேண்டும்?

**ச. துரை:-** ஆம்.

**பா. குரோட்டன்:-** சரி; அதிருக்கட்டும். ஒருவருக்குச் சாதாரணமாக ரத்தக்காயம் பட்டால், அதைப் பார்ப்போருக்கு மயக்கம் வந்து விடுகிறதே; அது எதனால?

**ச. துரை:-** பயத்தினால் மூளையும் உணாவும் கலங்கிப் போவதால் மயக்கம் வருகிறது.

**பா. குரோட்டன்:-** கண்ணால் பார்க்கும் மற்றவருடைய நிலைமை அப்படியானால், இரத்தம் சிந்தும் தேகத்தையுடைய மனிதருக்கு அப்படிப்பட்ட குழப்பம அதிகமாக ஏற்படுமல்லவா?

**ச. துரை:-** அவர்களுக்கு நிரம்பவும அதிகமாக ஏற்படும். அவர்கள் முற்றிலும் ஸ்மரணை தப்பிப் போய்விடுவாாகள்.

**பா. குரோட்டன்:-** இப்போது கொலையுண்ட கிழவி மிகவும வயதாகித் தளர்நதிருந்தவள். அவளுடைய மார்பில் பெருத்த குத்துக் காயம் ஏற்பட்டது. எலும்பு முறிந்து போய்விட்டதன்றி, இரத்தமும் அநேகமாய சேதமாகிவிட்டது. ஆகையால் அவளும் ஸ்மரணை தப்பியிருந்த நிலைமையில் தானே வைத்தியசாலைக்குக் கொண்டு வரப்பட்டாள்?

**ச. துரை:-** ஆம்.

**பா. குரோட்டன்:-** அதன் பிறகு தாங்கள் கொடுத்த மருந்தினால் விழித்துக் கொண்டு பேசினாளோ?

**ச. துரை:-** ஆம்.

**பா. குரோட்டன்:-** அப்போது அவளுடைய உயிர் கொஞ்சங் கொஞசமாகப் போயக்கொண்டே இருந்ததென்று சொலலலாம் அல்லவா?

**ச. துரை:-** இருதயத்தின் கட்டு படிப்படியாகத் தளர்ந்து கொண்டு தான் வந்திருக்க வேண்டும். அதனால் இரத்த ஓட்டமும் குறைவு பட்டுக் கொண்டே போகும். இரத்தம் குறைவுபடுமானால், ஒவ்வொரு கருவியும் தளாந்து சோர்ந்து போகத் தொடங்கும் ஆகையால் உயிர் கொஞ்சங் கொஞ்சமாகப் போய்க் கொண்டே இருந்ததாகத் தான் சொல்ல வேண்டும்.

**பா. குரோட்டன்:-** நிரம்ப நல்லது. அந்தக் கிழவி குத்தப்பட்ட உடனே அதிக இரத்தம் வெளிப்பட்டுப் போனதனால் ஏற்கெனவே மயங்கி ஸ்மரணை தப்பிப் போய்விட்டாள். அந்த நிலைமையில் அவளுடைய ரத்த ஓட்டம் குறைந்து கருவிகள் எல்லாம் ஓய்ந்து போவதால், அவளுடைய உயிர் போய்க் கொண்டே இருந்தது. அப்போது அவளுடைய மூளையும் கலங்கிக் குழம்பித் தளர் வடைந்து கொண்டிருந்தது. அந்தச் சமயத்தில் தாங்கள் கொடுத்த மருந்தினால், கொஞ்சம் தெளிவடைந்து தானே அவள் பேசினாள்?

**ச. துரை:-** ஆம்.

**பா. குரோட்டன்:-** அவள் அந்தச் சமயத்தில் அடைந்தது மிகவும் சொற்பமான தெளிவாக இருக்குமா? அல்லது, அவளுடைய இயற்கைத் தெளிவு முழுதும் ஏற்பட்டிருக்குமா?

**ச. துரை:-** அந்தச் சமயத்தில் அவளுக்கு ஏற்பட்ட தெளிவு, அவளுடைய இயற்கைத் தெளிவில் நூறில் ஒருபாகம் இருக்கும் என்று சொல்லலாம்.

**பா. குரோட்டன்:-** ஓகோ! அவ்வளவு தானா? அப்படியானால், அவள் அதன் பிறகு, மாஜிஸ்டிரேட்டின் முன்பாக வாக்குமூலம் கொடுத்த போது, முன்னிருந்த தெளிவும் குறைவுபட்டுத் தானே இருக்கும்.

**ச. துரை:-** ஆம்.

**பா. குரோட்டன்:-** அவள் வாக்குமூலம் கொடுத்த போது முதலி லிருந்து முடிவு வரையில் தெளிவாகவே இருந்து கொடுத்தாளா?

**ச. துரை:-** இல்லை இலலை. அவள் இரணடு வாக்கியம் பேசுவாள்; உடனே மயங்கி விழுவாள்; மறுபடியும் பேசுவாள்; அப்படிப் பல தடவைகள மயங்கி விழுந்தாள். வாக்குமூலம் முடியும் முன் அவளே முடிந்து போய்விட்டாள்.

**பா. குரோட்டன்:-** அநேகமாக உயிர் போன நிலைமையில் அவள் கொடுத்த இந்த வாக்குமூலத்தை அவள் தெளிவான உணர் வோடு கொடுத்த வாக்குமூலம் என்று நாம் நினைக்கலாமா?

**ச. துரை:-** அப்படி நினைக்க முடியாது. மனமும் அறிவும் மிகவும் குழம்பித் தெளிவற்றிருந்த நிலைமையிலே தான் இந்த வாக்கு மூலம் கொடுக்கப்படடதாக நான் அபிப்பிராயப்படுகிறேன்.

**பா. குரோட்டன்:-** நிரம்பவும் நல்லது. அதிருக்கட்டும்; கள், சாராயம் முதலிய லாகிரி வஸ்துக்களினால் மனிதருடைய மூளை குழம்பித் தெளிவற்றுப் போகிறதே. அந்த நிலைமைக்கு இதை ஒப்பிடலாமா, அல்லது, அதைவிட இது கேவலமாக இருக்குமா?

**ச. துரை:-** குடிமயக்க நிலைமையைவிட இந்த நிலைமை மிகவும் கேவலமாக இருக்கும் எனறே நான் அபிப்பிராயப்படுகிறேன்.

**பா. குரோட்டன்:-** அப்படியானால், குடிகாரன் சம்பந்தா சம்பந்த மின்றித் தாறுமாறாகப் பிதற்றுவதற்கு எவ்வளவு மதிப்புண்டோ அவ்வளவு மதிப்புக்கூட அவளுடைய வாக்குமூலத்துக்கு ஏற்பட நியாயமில்லை என்றல்லவா அருத்தமாகிறது?

**ச. துரை:-** நியாயமாகப் பார்த்தால், அப்படித்தான் நாம் நினைக்க வேண்டும்.

**பா. குரோட்டன்:-** (புன்னகையும் மகிழ்ச்சியும் தோற்றுவித்தவ ராய்) நிரம்ப சந்தோஷம; எங்களுடைய முக்கியமான சந்தேகத் தைத் தாங்கள் தீர்த்து வைத்ததைப்பற்றி நான் மிகுந்த நன்றியறிதல் உள்ளவனாக இருக்கிறேன். இவ்வளவு தான் கேள்வி; நான் தங்களை இதற்கு மேல சிரமப்படுத்தவில்லை – என்று கூறிய

வண்ணம் தமது ஆசனத்தில் அமர்ந்து கொண்டார். ஒரே வெடியில் இரண்டு பறவைகளைச் சுடுவது போல, பாரிஸ்டர் குரோட்டன் துரை தமது அபார தந்திரத்தினால் சர்ஜன் துரையின் வாக்குமூலத்தைக் கெடுத்ததன்றி, அடுத்தாற் போல வரவிருந்த மாஜிஸ்டிரேட்டு வாசிக்கப் போகும் கருப்பாயியினது வாக்குமூலத்தையும் உபயோகமற்றதாக்கி விட்டதைக் கண்ட ஜனங்களும வக்கீல்களும் மற்றவரும் கரைகடந்த வியப்பும் மகிழ்ச்சியும் அடைந்து, மகா விந்தையான அந்த வழக்கு எப்படித் தான் முடியுமோ என்ற ஆவல் கொண்டவராய், முன்னிலும் அதிக சுவாரஸ்யமாக அந்த விசாரணையை உற்றுக் கவனித்துக் கொண்டிருந்தனர்.

அடுத்தாற் போல, பிரசிடென்சி மாஜிஸ்டிரேட்டு துரை சாட்சிக் கூண்டினமேல் வந்து நின்று பிரமாணம் செய்து, அடியில் கண்டபடி வாக்குமூலம் கொடுக்கலானார்:-

நான் எழும்பூரில் உள்ள **சீப் பிரசிடென்சி மாஜிஸ்டிரேட்டு.** மூன்றாவது நாளிரவு சுமார் 8-மணி சமயத்தில், ராயப்பேட்டை வைத்திய சாலையில் இருந்து மைலாப்பூர் சப் இன்ஸ்பெக்டரும், சர்ஜன் துரையவர்களும் டெலிபோன் மூலமாக என்னைக் கூபபிட டார்கள். நான் என்னுடைய மோட்டார் வண்டியில் ஏறி உடனே போனேன். ஒரு கிழவி கத்தியால குத்தப்பட்டு மரணகாலத்தில இருந்தாள். அவள் வாக்குமூலம் கொடுக்க விரும்பினாள் ஆகையால் சப் இன்ஸ்பெக்டரையும் சர்ஜன் துரையையும மாத்திரம் அவ்விடத்தில் வைத்துக் கொண்டு நான் தனியாக இருந்து அந்தக் கிழவி சொன்னதை எழுதிக் கொண்டேன், இடையிடையில், அவள் பேசமாடடாமல் மயங்கி மயங்கிச் சோர்ந்து படுத்திருந்து மறுபடியும் விழித்துப் பேசிக் கொண்டே இருந்தவள் வாக்குமூலம் முடியும் சமயத்தில மரணாவஸ்தைப்பட்டு இறந்து போய் விட்டாள். அவள் கொடுத்த வாக்குமூலத்தில நான கையெழுத்து வைத்து, சப் இன்ஸ்பெக்டர், சர்ஜன் துரை ஆகிய இருவருடைய கையெழுத்துகளையும் பெற்றுக் கொண்டு, அதை உறைக்குள் போட்டு ஒட்டி மேலே அரக்கு முத்திரை வைத்து, அதையும் போலீசாரால் அனுப்பப்பட்ட மற்ற தஸ்தாவேஜுகளையும் சேர்த்து ஏற்கனவே இந்தக் கச்சேரிக்கு அனுப்பிக் கொண்டிருக்கிறேன் – என்றார்.

அந்தச் சமயத்தில் விசாரணை குமாஸ்தா ஒரு தஸ்தாவேஜை எடுத்து அவரிடத்தில் கொடுத்து, அதுதானா அவரால் முத்திரை வைத்து அனுப்பப்பட்ட உறை என்று கேட்க, மாஜிஸ்டிரேட் அதைத் தமது கைகளில் வாங்கி உற்றுப் பார்த்து அதுதான் என்றும், அது தம்மால் அனுப்பப்பட்டபடியே இருப்பதாகவும் கூறினார். அந்த உறையைத் திறந்து அதற்குள் இருந்த வாக்கு மூலத்தை எடுத்து படிக்கும்படி ஜட்ஜி சொல்ல, உடனே மாஜிஸ் டிரேட்டு, உறையின் ஒரு புறத்தைக் கிழித்து உள்ளே இருந்த வாக்குமூலத்தை எடுத்துப் படிக்கலானார். அந்த அம்பட்ட கிழவி மிகவும் அபூர்வமான ரகசிய சங்கதிகளை வெளியிட்டிருக்கிறாள் என்ற வதந்தி ஊர் முழுதும் பரவிப் போயிருந்தமையால், ஜனங்கள் எல்லோரும் பேச்சு மூச்சின்றி நிச்சப்தமாக இருந்து அதைக் கவனிக்க ஆயத்தமாயினர்.

மாஜிஸ்டிரேட்டு அந்த வாக்குமூலத்தைப் படிக்க, அது அடியில் வருமாறு இருந்தது:- தொரெகளே! பதினஞ்சு பதினாறு வருசத்துக்கு மின்னெ, நான் நல்ல வயசுப் பொம்புள்ளெயா இருந்தப்ப, நான் தேனாம்பேட்டையிலே இருக்கற செமீந்தாரு ஊட்டுங்களுக் கெல்லாம் போயி, மருத்துவம் பாக்கறது வளமையிங்க. எனக்கு அப்ப ஒரு புருசன் இருந்தான். அவன் குடுகுடு கெயவன்; அவன் மேலே எனக்குப் பிரியமில்லெ. இன்னொரு கொறவன் இருந்தான். அவனுக்கும் எனக்கும் ஒரு ஆம்புள்ளெக் கொயந்தே பொறந்திருந்திச்சு; கட்டெயனுன்னு ஒரு திருடன் இருக்கறானல்ல. அவனோடெ கூடச் சேர்ந்துக்கினு என்னேடெ கள்ளப்புருசனும் திருடப்போற வளமையிங்க. அவன் ஒரு ராவுலெ வந்து, மாரமங்கலம் செமீந்தாரு ஊட்டுக் கொயந்தெயெத் திருடிக் கொன்னு போட்டுட, அந்தக் கொயந்தெயோடெ சித்தப்பாருமவன் கட்டெயங்கிட்ட அஞ்சாயிரம் ரூபா கொடுத்தானுன்னும், அதுக்காவக் கட்டெயன் பொறப்பிட்டுப் போயிருக்கானுன்னும் எங்கிட்டச் சொன்னான். ரெண்டுமூணு நாளெக்கிப் பொறவாலெ கட்டெயன் கொறவன் எங்க ஊட்டுக்கே வந்து சங்கதியெல்லாஞ் சொன்னான். தான் போயி புள்ளெயத் திருடிக்கினு வந்த சமயத்துலெ, அது கந்தருவக் கொயந்தெ கணக்கா இருந்ததெக் கண்டு, அதெக் கொல்ல மனம்

வராமெ யாருக்கிட்டவாச்சும் வித்துப்புடலாமின்னு, அதெ எடுத்துக்கினே வந்தானாம். பாதயோடெ போன ஒரு ஐயா அந்தக் கொயந்தெயெப் பாத்து ஆசெப்பட்டு ஆயிரம் ரூபா குடுத்து அதெ வாங்கிக்கினு போயித்தாருன்னும், தான் கொயந்தெயெக் கொன்னுப் புட்டதாவ சின்னத்தொரெ ஐயாகிட்டச் சொல்லி அடெயாளங் காட்டி ஏமாத்தி, பாக்கி பணத்தெயும் வாங்கிப்புட்ட தாகச் சொல்லி நொம்ப சந்தோசமா இருந்து அந்நெக்கி ராவெல்லாம் எங்க ஊட்டுலெயெ குடிச்சுப்புட்டுப் படுத்திருந்தான். புள்ளெயெ வாங்கின ஐயா எழுதிக் குடுத்தாருன்னு சொல்லி ஒரு சின்ன ரோகாவெ எங்கிட்டக் குடுத்துப் பத்தரமா வச்சிருக்கச் சொன்னான். அதெ அப்பாலெ அவன் மறந்தே பூட்டான். பதினெஞ்சு இருவது நாளெக்கிப் பொறவாலே நான் ஒரண்டே மருத்துவம் பாக்கறத்துக் காவத் தேனாம்பேட்டெக்கிப் போயிருந்தேன். அப்ப மாரமங்கலம் வங்களாவுலெ, காணாமெப் போன கொயந்தயோடெ அம்மாளும் பொன்னம்மாங்கற ஒரு தாதியும் வந்திருந்தாவளாம். அந்தப் பொன்னம்மா நான் மருத்துவச்சி இங்கற சங்கதியெ அறிஞ்சுக்கினு என்னெத் தனியா அளெச்சிக்கினு போயி மாரமங்கலத்தாரு ஊட்டுப் புள்ளெ திருட்டுப் பூடிச்சுங்கற சங்கதியெ எங்கிட்டச் சொல்லி, மூணு வயசுலெ அநாதெப்புள்ளே ஏதுவாச்சும் அம்பிட்டுக் கொண்டாந்து குடுத்தா, அஞ்சாயிரம் ரூபா தாரேனுன்னு சொன்னா. என் மனசுலெ அப்ப ஒரு ரோசனை உண்டாச்சு. எனக்கும் கொறவனுக்கும் பொறந்த புள்ளெக்கி அப்பகிட்டத்தட்ட மூணு வயசு ஆயிருந்திச்சு; அதெயெ குடுத்துப்புட்டு அஞ்சாயிரம் ரூவாயெயும் தட்டிக்கிடலாமுன்னு எண்ணிக்கிட்டேன்! ஒடனெ அவளெக் கையோடெ இட்டுக்கினு எங்க ஊட்டுக்குப் போயி என்னொடெ புள்ளெயெக் காட்டினேன். அந்தப் பொன்னம்மா கொயந்தெயெ உத்துப் பாத்து, "இதெயெ நான் வாங்கிக்கிறேன். ஆனா இதுலெ ஒரு சங்கதி; ஜெமீந்தாரம்மா திருட்டுப் போன தன்னோடெ சொந்தக் கொயந்தெயயே தேடிக் கொண்டாரணுமின்னும், அப்பிடிக் கொண்டாந்தா அஞ்சாயிரம் ரூவா குடுக்கறேனுன்னும் சொல்லி இருக்காங்க. நாங்க தேடாத எடமெல்லாம் தேடிப் பாத்தோம். எங்கெங்கனெயோ பொலம் வெசாரிச்சுப் பார்த்தோம்; ஒண்ணும்

சரிப்படல்லெ. அம்மா அதே வெசனமாக் கெடக்கறாங்க. புள்ளெ வராமப் போனா, இன்னம் ரெண்டு மூணு நாள்ளே அவுங்க செத்துப்பூடுவாங்க போலெ இருக்குது. அதுக்காவத்தான் இந்த ரோசனெ பண்ணினேன். அந்த அம்மா தன்னொடெ புள்ளெயெத் தவுர மத்த எந்தப் புள்ளெயும் கையாலெகூடத் தொடமாட்டாங்க; அதுவும் அம்பட்டச்சியோடெ புள்ளெயின்னு தெரிஞ்சா, கண்ணாலே கூடப் பாக்கமாட்டாங்க. அந்த அம்மாளோடெ புள்ளெ நல்ல செழுப்பா குண்டா இருந்திச்சு. இது கருப்பா எளெச்சுப் போயி இருக்குது. ஆனா, மொகம் மாத்ரம் கொஞ்சம் சரியா இருக்குது. நான் இதெக் கொண்டு போயிக் குடுத்து இதுதான் திருட்டுப் போன கொயந்தெ, சரியான ஆகாரம் இல்லாமெ இது கொறவன் ஊட்டுலெ இருந்ததுனாலே, கருத்து எளச்சு இப்பிடி உருமாறிப் போச்சுன்னு சொல்லிப்புட்றேன். ஆனா அவுங்க நம்பராப்பலெ நாம்ப ஒரு வேலெ செய்யணும். திருட்டுப் போன புள்ளெயோடெ மாருலெ மாம்பிஞ்சு கணக்கா ஒரு மச்சம் இருந்திச்சு. அந்த மாதிரி நீயே சுட்டுக் குடுக்கணும்" இன்னு எங்கிட்டச் சொன்னா. அதெயெல்லாம் நான் ஒப்பிக்கினேன். ஆனா, மாங்காப்பிஞ்சு மாதிரி நாம்ப சுட்டா அது சரியா வராதுன்னு எனக்குத் தோனிச்சு. எனக்குத் தெரிஞ்ச டாக்குட்டரு ஒருத்தரு சைதாப்பேட்டேலெ இருக்கறாரு. அவரொடெ பேரு கேசவலு நாயுடு. அவுரு வைத்தியம் செய்யற ஊட்டுகள்ளெ மருத்துவம் பாக்கறத்துக்காவ அவுரு என்னெக் கூப்பிடுவாரு. அதனாலே அவுருக்கும் எனக்கும் பளக்கமுண்டு. என்னொடெ கொயந்தெயெ, அவுருக்கிட்டக் கொண்டு போயி, மாருலே மாங்காப்பிஞ்சு போலெ தெராவகத்தாலெ சுட்டுக் கருப்பாக்கிக் குடுக்கச் சொன்னேன். அவுரு என்னாத்துக்குன்னு கேட்டாரு; அது என்னொடெ கொயந்தெயின்னும், அதுக்கு அடிக்கடி மாந்தம் வருதுன்னும், அதுக்காவ, அப்பிடிச் சுட்டா மாந்தமே வராதுன்னும் ஒரு பொய் சொன்னேன். ஒடனே அந்த டாக்குட்டரு அப்பிடியே சுட்டுக் குடுத்தாரு. ஒடனே நான் புள்ளெயெக் கொண்டாந்து, பொன்னம்மாக்கிட்டக் காட்டினேன். அந்த மாங்காப்பிஞ்சு மச்சம் அவ சொன்னாப்பலெ சரியா அமெஞ்சு போச்சுன்னு சொல்லி, அந்தப் பொன்னம்மா நொம்ப

சந்தோசப்பட்டா. அன்னெக்கி ராவுலே நானே அந்தக் கொயந்தெயெ எடுத்துக்கினு போயி, அதெத் திருடியாந்த கட்டெயன் கொறவன் என்னோடெ செநெகிதகாரனுன்னும், அதெ நான் வாங்கியாந் தேனுன்னும் சொல்லிப் புள்ளெயக் குடுத்தேன். அந்தக் கொயந்தே சுத்தமா வேறெயா இருந்தத்தெப் பத்தி அவுங்க ரொம்ப நேரம் சந்தேவப்பட்டாங்க. அது கேவுரு கூளு தின்னத்துனாலே அப்பிடிக் கருத்து எளச்சி உருமாறிப் போச்சின்னு நான் சொல்ல, அதுக்கு மேலே பொன்னம்மா அந்த மச்சத்தெக்காட்டி, அந்தக் கொயந்தெதான் திருட்டுப் போனதுான்னு சொல்லி சத்தியம் பண்ணினா. அதுக்கு மேலெ தான் அந்த செமீந்தாரம்மா அதெ ஒப்பிக்கின்னு கட்டெயனுக்கின்னு அஞ்சாயிரம் ரூவாயும், எனக்கின்னு நூறு ரூவாயும் குடுத்து அனுப்பிச்சாங்க. நான் நொம்ப சந்தோசமா ஊடு போயிச் சேந்தேன். அன்னெக்கி ராவுலெ அந்தப் பொன்னம்மா திரியும் அங்கனே வந்து தனக்கு ஏதாச்சும் பணம் குடுக்கணுமின்னு கெஞ்சினா. நான் ஒடனே அந்தப் பணத்துலே பாதியெ எடுத்து அவளுக்குக் குடுத்து அனுப்பிச்சுட்டேன்; அப்ப எம்மனசுலெ இன்னொரு பயமுண்டாச்சு. கட்டெயன் கொறவன் அந்த அம்மாக்கிட்டப் போயி ஏதாச்சும் பணம் பேசிக்கினு, நெசக் கொயந்தே இருக்கற எடத்தெச் சொல்லிப்புட்டா வம்பாப்பூடு மேன்னு நெனெச்சு நான் என்னா பண்ணினேன்னா, அவன் குடுத்த ரோகாவெ ஒரு மொந்தெக்குள்ளற போட்டு, வாயெ அடச்சு, எங்க வூட்டுக்காமரா உள்ளுலெ மாடத்துக்கு மேலெ சொவத்தெத் தோண்டி அதுக்குள்ளற வச்சுப் பொதெச்சுப் புட்டேன். அந்த ரோகாவெ மறந்தேபூட்டான். அதுக்குப் பத்து வருசத்துப் பொறவாலே எங்க ஊட்டுக்காரக் கெயவன் எறந்து பூட்டான். அவன் போன ரெண்டு வருசத்துக்குப் பொறவாலே, என்னோடெ கள்ளப்புருசன் ஒரு கொள்ளெக் கேசுலெ மாட்டிக்கினு ஏளு வருசம் தண்டென ஆயி செயிலுக்குப் பூட்டான். அதுக்குள்ளற எங்கிட்ட இருந்த பணத்தை எல்லாம் நான் குடிச்சே தீத்தேன். அப்பாலெ கையிலெ ஒரு காசுகூட இல்லாமெ நான் நொம்பக் கஸ்டப்பட்டேன். சோறில்லாமெ ரெண்டு நாளு மூணு நாளு சேந்தாப்பலே பட்டினி கெடப்பேன். இடுப்புலெ கட்டத் துணியில்லெ. எம் மனசுலே ஒரு ரோசனே உண்டாச்சு. அப்ப,

அந்த செமீந்தாரம்மா மாரமங்கலத்துலெ இருந்து தேனாம்பேட்டெக்கி வந்திருந்தாவ. நான் ஒருநா அந்த அம்மா தனியா இருந்தப்ப நேருலெ போயி, "அம்மா! நான் யாருன்னு ஒங்கிளுக்குத் தெரியிதா? இப்ப நான் ஏளெயாப் பூட்டேன்; எனக்கு ஏதாச்சும் பணங்குடுத்து ஒத்தாசெ பண்ணுங்க" இன்னு கேட்டேன். அந்த அம்மா நொம்ப மூறுக்காகப் பேசி என்னெ அதட்டி, "நீ யாருடீ? இஞ்சே ஏண்டி வந்தே? போ வெளியே; அரிசி குடுக்கச் சொல்றேன்; வாங்கிக்கினு போ" இன்னு சொல்லி என்னெத் தொரத்தினாங்க. எனக்கு ஒடனே கோவம் வந்துடிச்சு; ஒடனே நான் உள்ளத்தேச் சொல்லிப்புட்டேன். எம்மவனெத்தான், சுட்டு அடையாளம் உண்டாக்கிக் குடுத்ததுன்னும், அந்த அம்மா நான் கேக்கற போதெல்லாம் எனக்குப் பணம் குடுக்காமெப் போனா அந்தச் சங்கதியெ வெளிப்படுத்திப் புடுவேனுன்னும் நான் சொன்னேன். அவுங்க ஒடனே பொன்னம்மாளெக் கூப்பிட்டு விசாரிக்க, அவளும் நெசந்தானுன்னு ஒப்பிக்கினா; தான் என்னாத்துக்காவ அப்பிடிச் சேஞ்சாங்கற நாயத்தையும் எடுத்துச் சொன்னா. அதுக்கு மேலெ அந்த அம்மா பயந்து போனாங்க. நான் அந்த ரவசித்தெ வெளியே சொல்லாமெ இருந்தா அப்பப்ப பணம் குடுக்கறதாவச் சொல்லி எனக்குப் பணம் குடுத்து அனுப்பிச்சாங்க; பன்னண்டு வருசம் சொந்தபுள்ளெயின்னு வளத்த பொறவாலெ, அதெத்தள்ளறது சரியல்லவுன்னு அவுங்களும் வெளிக்கு அதெக் காட்டாமெயே வச்சிருந்தாங்க. நான் அடிக்கடி போயி அந்தம்மாளெ மெரட்டி நூறு எரநூறு புடிங்கியாந்துடுவேன்; அப்பிடியே இதுவரெயிலெ காலந் தள்ளிப்புட்டேன்.

என்னோடெ மவனெ நான் இப்ப ஏளெட்டு வருசமாப் பாக்கல்லெ; அவன் பெரியவனா வளந்து பூட்டானல்ல: அதுனாலெ அவனோடெ அடயாளமும் தெரியல்லெ; பத்துப் பதினஞ்சு நாளெக்கி மின்னெ ஒருநா அந்தப் பையன் எங்க வூட்டுக்கு வந்து பக்கத்துலெ இருந்த வாலாம்பா இங்கற நாடவக்காரியெ வசப்படுத்திக் குடுக்கணுமின்னு கேட்டான். நான் ஆவட்டுமுன்னு சொல்லி ராத்திரி வரச் சொன்னேன். கட்டெயன் கொறவன் வந்து அவனெக் கொன்னு போட்டுட்டு அவங்கிட்ட

இருந்த பணத்தெ யெல்லாம் அடிச்சுக்கப் பாத்தான்; ஆனா அந்தப் பையனோடெ அடையாளம் அவனுக்கு என்னமாவோ தெரிஞ்சி சிருந்திருச்சு. அவன் மாரமங்கலம் மைனராச்சே இன்னு கட்டையன் சொன்னான். ஒடனே எனக்கு நெனப்பு வந்திச்சு. அவன் எம்மவ னாச்சேங்கற சங்கதியெ நான் நெனச்சுக்கினேன். அவனெக் கொல்லவும் மனம் வல்லெ. கொன்னுப்புட்டா, செமீந்தாரம்மா கிட்ட் பணம்புடுங்க முடியாமெப் பூடுமேங்கற, கவலெயும் உண்டாச்சு. கட்டெயனெக் கெஞ்சிக் கூத்தாடி அப்பாலெ இட்டுக்கினு போனேன். அதுக்குள்ளற பையன் தப்பிச்சு ஓடிப் பூட்டான்; கட்டெயன் என்னெப் புடிச்சுக்கினான். நான் ஒடனே போயி, செமீந்தாரம்மாக்கிட்டப் பணம் வாங்கியாந்து கட்டெய னுக்குக் குடுத்தேன். அதுக்குப் பொறவாலெ எம்மவன் எப்பிடியோ அந்த வாலாம்பாளேப் புடிச்சுக்கினு அவளுக்கு ஒரு பத்தரத்தெ மொள்ள எடுத்தாரணுமின்னு செமீந்தாரம்மா கட்டெய னையும் என்னெயும் அனுப்பிச்சாங்க. நாங்க போயிக கொண் டாந்து குடுத்து ஆளுக்குப் பதினாயிரம் ரூபா வாங்கிக்கினோம். அந்தப் பத்தரத்தை மைனர் ரிசித்திரி ஆப்பீசுலெ பதிஞ்சிருந் தானுன்னு சங்கதி தெரிஞ்சு, அந்த அம்மா மயங்கி உளுந்துட்டாங்க வாலாம்பாளெத் தூக்கிக்கினு போயி எங்கனெயாச்சும் ஒளிய வச்சுப்புட்ற தூன்னு கட்டெயன் தீர்மானம் பண்ணிக்கினு இன்னெக்கி உருமத்துலே என்னெ இட்டுக்கினு போயி, எம்மவனும் வாலாம்பாளும் இருந்த வங்கலாவுக்குப் பக்கத்துலெ தென்னஞ் சோலை இருக்குது. அவன் மதிளுமேலெ ஏறி உக்காந்துக்கினு என்னெத் தூக்கி உள்ளற உட்டுப்புட்டு திரியும் வாறேனுன்னு சொல்லிப்புட்டுப் போனான்; அங்கனெயே அதுக்குள்ளற போயி நான் மறஞ்சிருந்தேன். அவுங்க ரெண்டுபேரும் என்னெக் கண்டுக்கினு ஓடியாந்து என்னெப் புடிச்சு அடிச்சு ஒதெச்சுக் குத்தி குத்துசுரும் கொலெ உசிருமாக்கி கையெயும் காலெயும் கட்டி சமுத்தரத்துலெ போட்டாங்க கிட்டுணாபுரம் செமீந்தாரு ஊட்டுப் பையன் என்னெ எடுத்தாராம். அவுங்க வங்களாவுலெ என்னெக் கட்டுலுலெ படுக்கவச்சு எனக்கு மருந்தெல்லாம் குடுத்தாங்க; நான் தேறி எந்திருச்சு உக்காந்து இந்த சங்கதியெல்லாம் கிட்டுணாபுரம்

செமீந்தாருகிட்டவும் பையன் கிட்டவும் சொல்லிக்கினு இருந்த சமயத்துலெ எம்மவன் உள்ளற ஓடியாந்து எம்மாருலெ குத்திப்புட்டு ஓடி—

— என்று அறைகுறையாக நிறுத்தப்பட்டிருந்த மரணாந்த வாக்கு மூலத்தை மாஜிஸ்டிரேட்டு துரை படித்துக்காட்டி, "இவ்வளவு தான் அவள் சொன்னாள். உடனே அவளுக்கு வாய் வழியாக சுவாசம் வரத்தொடங்கியது. அவள் கொஞ்ச நேரத்தில் இறந்து போய்விட்டாள்" என்றார்.

***சர்க்கார் வக்கீல்:-*** மறுநாள் காலையில் தாங்கள் இந்தக் கேஸ் சம்பந்தமாக எங்கேயாவது போயிருந்தீர்களா?

***மாஜிஸ்டிரேட்:-*** ஆம்; போலீசாருடைய வேண்டுகோளின்படி ஆலந்தூரில் உள்ள அநதக் கிழவியின் வீட்டுக்குப் போனோம். எங்கள் முன்னிலையில் கிராமமுன்சீப்பு ஆள்களை அழைத்து அவள் குறித்த சுவரை இடித்துப் பார்க்கச் செய்தார். அந்த இடத்தில் ஒரு மொந்தை இருந்தது. அதன் வாய் மூடப்பட்டிருந்தது. அதை விலக்கிப் பார்க்க உள்ளே ஒரு காகிதத்துண்டு கிடந்தது அதை எடுத்துப் பார்த்தேன் அதில் தமிழில் ஏதோ ஒரு மேல்விலாசம் எழுதப்பட்டிருந்தது. அந்தக் காகிதம் அநேக வருஷங்களுக்கு முன் வைக்கப்பட்டது போலப் பழுத்து மடகிப் போயிருந்தது. அதில் இருந்த விலாசத்தை சப் இன்ஸ்பெக்டர் குறித்துக் கொண்டார். நான் உடனே அந்த மொந்தையையும் காகிதத்தையும் இந்தக் கேசின் ரிகார்டுகளுக்கு சம்பந்தப்படுத்தி இந்தக் கோர்ட்டாருக்கு அனுப்பிக் கொண்டிருக்கிறேன்.

***சர்க்கார் வக்கீல்:-*** அந்த விலாசத்தில் இருந்த பெயர் முதலியவை தங்களுக்கு நினைவிருக்கின்றனவா?

***மாஜிஸ்டிரேட்:-*** இல்லை.

***சர்க்கார் வக்கீல்:-*** (ஜட்ஜிகளின் மேஜை மீதிருந்த அந்தத் துண்டுக் காகிதத்தை வாங்கிக் காட்டி) இதைப் பாருங்கள். இந்தக் காகிதந் தானே மொநதைக்குள் இருந்தது?

***மாஜிஸ்டிரேட்:-*** ஆம்; இதுதான் — என்றார்.

அவ்வாறு மாஜிஸ்டிரேட்டினால் படிக்கப்பட்ட வாக்குமூலத்தில் கருப்பாயியால் வெளியிடப்பட்டிருந்த அதியாச்சரியகரமான ரகசியங்களை எல்லாம் கேட்ட ஜட்ஜிகளும், ஜூரிமார்களும், வக்கீல்களும், சகலமான ஜனங்களும் அளவிறந்த வியப்பும் திகைப்பும் பிரமிப்புமடைந்து கொஞ்ச நேரம் வரையில் அப்படி யப்படியே ஸ்தம்பித்துப் போயிருந்தனர்.

பசவண்ண செட்டியாரே கிருஷ்ணாபுரம் ஜெமீந்தார் என்பதைக் கண்டவுடன் மயங்கி சற்றுமுன் நாற்காலியில் சாய்ந்த சிவஞான முதலியார் சிறிது தெளிவடைந்து கருப்பாயியினது வாக்குமூலத் தைக் கேட்டுக் கொண்டு வந்தார். மைனர் அம்பட்டக் கருப்பாயி யின் மகன் என்பதும், கல்யாணியம்மாள் அந்த விஷயத்தைத் தம்மிடத்தில்கூட வெளியிடாமல் அதுகாறும் மறைத்து வைத்திருந் தாள் என்பதும் தெரியவே, சிவஞான முதலியார் மிகுந்த கலக்கமும் குழப்பமும் அடைந்து கனவு நிலைமையில் இருப்பவர் போலச் சிறிது நேரம் வரையில் உணர்வற்று முட்டுக்கல் போல உட்கார்ந் திருந்தார்; ரகசியம் அவ்வளவு தூரம் வெளியான பிறகு மைனர் அம்பட்டச்சியின் பிள்ளையல்ல என்று தாம் ருஜூப்பிக்க முடியா தென்பது அவருக்குத் தெளிவாக விளங்கியது. அவன் உண்மை யில் இன்னான் என்ற விஷயம் அவ்வாறு கச்சேரியில் பகிரங்கமான பிறகு அவனுக்கு அந்த சமஸ்தானமும் ஜெமீந்தார் என்ற பட்டமும் நிலையாவென்பதை உடனே யூகித்துக் கொண்ட முதலியார் தாமும் குரோட்டன் முதலிய பாரிஸ்டர்களும் அவ்வளவு பாடு பட்டு அவனை மீட்பது அநாவசியம் என்று நினைத்தவளாய், பாரிஸ்டர் குரோட்டன் துரையின் காதோடு தமது காதை வைக்க, "சரியம் மிஞ்சிப் போய்விட்டது. இவனை நாம் கொலைக் குற்றத்தி லிருந்து தப்ப வைத்தாலும், இவன் அம்பட்டச்சியின் மகன் என்ற சங்கதியை நாம் பொய்யாக்க முடியாது; ஆகையால் இவனைத் தப்ப வைத்தும் உபயோகமில்லை. நீங்கள் சும்மாவிட்டு விடுங்கள். இவனுடைய தலைவிதியின்படி முடியட்டும். இனி நமக்குக் கவலை இல்லை" என்றார். அதைக் கேட்ட பாரிஸ்டர் குரோட்டன் துரை தமக்குள்ளாகவே மிகுந்த மகிழ்ச்சியடைந்தார். அவரது கட்டணம் முன் பணமாகவே கொடுக்கப்பட்டுப் போனமையால்,

சொற்பப் பிரயாசையோடு பணம் முழுதும் ஜீரணமாகிப் போனதைப் பற்றி அவர் பெரிதும் ஆனந்தம் எய்தினார்.

அந்தச் சமயத்தில் ஜட்ஜி துரை மைனரைத் தமக்கருகில் அழைத்து வரச் செய்து, அவனது மார்பில் காணப்பட்ட மச்சத்தைப் பார்க்க, ஜட்ஜியும், ஜூரிப்பிரபுக்களும், சர்க்கார் வக்கீலும் அதைப் பார்த்துக் கொண்டனர். உடனே மைனர் முன்போலக் கைதிக் கூண்டில் கொண்டு போய் நிறுத்தப்பட்டான். அப்போது மைனர் நடைப்பிணம் போல இருந்தான் என்று சொல்வதே பொருத்த மாகும். மதனகோபாலன் முதல் மாஜிஸ்டிரேட்டு வரையில் உள்ள சாட்சிகள் யாவரும் வாக்குமூலம் கொடுத்ததையும், பாரிஸ்டர் குரோட்டன் துரை ஒவ்வொருவரையும் குறுக்கு விசாரணை செய்து அவர்களது வாக்குமூலங்களைச் சின்னா பின்னாமாக்கி யதையும் கேட்டுக் கொண்டே வந்த மைனர் மிகுந்த துணிவும் உற்சாகமும் அடைந்தவனாய், பாரிஸ்டர் குரோட்டன் துரை முதலியோர் தன்னை எப்படியும் தப்பவைத்து விடுவார்கள் என்று நினைத்துக் கொண்டிருந்தான். தான் அம்பட்டக் கருப்பாயியின் மகன் என்பதை அவன் அதுகாறும் நம்பாமல், தான் உண்மையில் கல்யாணியம்மாளது மகன் என்றே அவன் உறுதியாக எண்ணிக் கொண்டிருந்தான். ஆனால் கருப்பாயியின் வாக்குமூலத்தைக் கேட்ட உடனே அவனது மனதில் பெருத்த திகிலும், அளவு கடந்த அவமானமும், அபாரமான கவலையும் எழுந்துவிட்டன. அவள் சொல்லி இருந்த சகலமான விவரங்களும் பொருத்தமாகவும் திருத்த மாகவும் தோன்றின. தனது மார்பிலிருந்த மச்சம் முதற்கொண்டு சகலமான விவரங்களையும் அவள் அறிந்து வெளியிட்டதில் இருந்து அவள் சொன்ன ஒவ்வொ ரக்ஷரமும் மெய் என்பது பிரத்தியக்ஷமாகத் தெரிந்தது. தான் அம்பட்டச்சியின் மகன் தான் என்ற எண்ணம் அவனது மனதில் உறுதியாக எழுந்து வேரூன்றிப் போயிற்று. அதுகாறும் தான் பெருத்த சமஸ்தானாதிபதியின் புத்திரன் என்று அவன் தன்னைப்பற்றி மிகவும் பெருமையாக எண்ணிக் கொண்டிருந்த நினைவுகள் எல்லாம் பறந்து போயின. தனக்கும் அந்த சமஸ்தானத்துக்கும் இனி எவ்விதச் சம்பந்தமும் இல்லாமல் போகுமானால், தான் ஓட்டாண்டியாகப் பிச்சை எடுக்க நேருமே என்றும், தன்னை அம்பட்டச்சி மகன் என்று உலகத்தார்

இகழ்ந்து விலக்குவார்களே என்றும் நினைத்த மிகவும் கலங்கினான்; அவனது மூளை குழம்பியது. அறிவு மழுங்கியது. கண்கள் இருண்டன; ஜட்ஜி அவனது மச்சத்தைச் சோதனை செய்வதற்காக அழைத்த போது, அவனது பக்கத்தில் நின்ற போலீ சார் அவனை இழுத்துக் கொண்டு போய்த் திரும்பி இழுத்து வந்து நிறுத்தும்படியான மகா கேவலமான நிலைமையை அடைந்து துவண்டு தள்ளாடிச் சோர்ந்து கூண்டின் மேல் சாய்ந்து விட்டான்.

பிரசிடென்சி மாஜிஸ்டிரேட்டு சாட்சிக் கூண்டின் மேல் நின்று கொண்டிருந்தார். மைனரது மச்சத்தைப் பார்த்த பிறகு ஜட்ஜி பாரிஸ்டர் குரோட்டன் துரையை நோக்கி, "ஏதாவது கேள்விகள் உண்டா?" என்றார்.

அதைக் கேட்டு எழுந்து நின்ற பாரிஸ்டர் குரோட்டன் துரை ஜட்ஜியை நோக்கி, "இந்த வழக்கோ மைனர் ஒரு கிழவியைக் கொலை செய்து விட்டதாகக் கொண்டுவரப் பட்டிருக்கிறது; இப்போது படிக்கப்பட்ட மரணாந்த வாக்குமூலத்தில், அந்தக் கிழவியால் இந்த வழக்குக்கு சம்பந்தப்படாத குடும்ப விவகாரங் களும், சிவில் சம்பந்தமான விஷயங்களும் சொல்லப்பட்டிருக் கின்றன. இந்த மைனர் உண்மையான மைனர்தானா என்ற கேள்வியைப் பற்றி விரிவாக இப்போது விசாரித்துக் கொண்டு போவதற்கு இந்தக் கோர்ட்டாருக்கு எவ்வித அதிகாரமும் இருப்ப தாகத் தோன்றவில்லை. இப்போதைய வழக்குக்கும் அதற்கும் எவ்விதச் சம்பந்தமிருப்பதாகவும் தோன்றவில்லை; போலீசார் கொலைக் குற்றத்தை ருஜுப்படுத்துவதை விட்டு, மாரமங்கலம் ஜெமீந்தாரியின் நிஜமான வார்சுதார் யார் என்பதை நிஷ்கரிக்க எத்தனிப்பதாகத் தோன்றியது; இந்த மைனரின் போஷகர்கள் என்னை நியமித்தது இந்தக் கொலை சம்பந்தமாக வாதிக்கும்படியே யன்றி வேறே சிவில் பாத்தியதைகளைப் பற்றியல்ல. அந்த விஷயத்தில் எனக்குத் தேவையான தகவல்கள் ஒன்றும் கிடைக்க வில்லை ஆகையால், குருடனைப் போல, இருட்டில் தடவ என் மனம் இடந்தரவில்லை. வார்சு பாத்தியத்தைப் பற்றி வாதிக்க வேண்டாம் என்று இந்த மைனருடைய போஷகர்கள் எனக்குத் தெரிவிக்கிறபடியால், நான் அந்த விஷயத்தில் வாதாடத் தயாராக

இல்லை. மிகுதி இருக்கும் சாட்சிகள் எல்லோரும் எந்த விஷயத்தை ருஜுப்படுத்தப் போகிறார்கள் என்பதை அறிந்து கொண்ட பிறகு, தேவையானால், நான் குறுக்கு விசாரணை செய்கிறேன். அதற்குக் கோர்ட்டார் தயை கூர்ந்து அனுமதி கொடுக்க வேண்டும். இதில் ஒரு கட்சியார் சகல ஆயுதங்களையும் தரித்துச் சண்டை செய்கிறார்கள்; இன்னொரு கட்சியாருக்குக் கை கால்கள் உடம்பு முதலிய சகலமான அங்கங்களும் கட்டிப் போடப்பட்டிருக்கின்றன என்று சொல்வது புனைந்துரைத்தல ஆகாது. இப்படி இரண்டு கட்சிக்காரர்கள் சண்டையிடுவது தருமயுத்தமாகாது. இவ்வாறு செய்யவும் சட்டம் இடங்கொடுக்கவே இல்லை. சட்டங்கள் எல்லாம் நீதியே வடிவெடுத்து வந்தபடி அமைக்கப்பட்டிருக் கின்றன. ஆகையால் ஜட்ஜி துரையவர்கள் இருதிறத்தாரையும் சம பலத்தோடு வைத்துக் கொண்டு இந்தப் பெயரை நடத்தி வைத்து, சட்டங்களின் கண்ணியத்துக்கு இழுக்குண்டாகாமல் காப்பாற்ற வேண்டும்" என்றார்.

அதைக் கேட்ட ஜட்ஜி, "சரி; குறுக்கு விசாரணை கடைசியில் ஆகட்டும். அடுத்த சாட்சியை விசாரிப்போம்" என்றார். உடனே சேவகன், "டாக்டர் கேசவலு நாயுடு!" என்று மூன்று தரம் கூப்பிட, தொப்பி கால்சட்டை மேல்சட்டை பூட்ஸ் கைத்தடி முதலிய சின்னங்களோடு ஒருவர் உள்ளே வந்து கூண்டின் மேல் ஏறி நின்றார். உடனே அவரது விசாரணை தொடங்கியது.

அந்த விசாரணையின் விவரங்களை எல்லாம் எடுத்துச் சொல்லு முன், நாம் இன்னொரு முக்கியமான விஷயத்தை விரித்துச் சொல்வது அவசியமாக இருக்கிறது. அந்த விசாரணை நடந்த போது கல்யாணியம்மாள் எங்கே இருந்தாள் என்ற சந்தேகம் நமது வாசகர்களின் மனதில் உண்டாகலாம் மகா பாக்கியவதியான அந்தச் சீமாட்டி, மைனர் கொலைக் குற்றத்திற்காக சிறைப்படுத்தப் பட்டிருக்கிறான் என்ற விபரீதமான செய்தியை மதனகோபால னிடத்தில் அறிந்து கொண்ட உடனே, சிவஞான முதலியாரது ஜாகைக்குப் போய், விஷயங்களை அவரிடத்தில் தெரிவித்து, அவரையும் அழைத்துக் கொண்டு, போலீஸ் ஸ்டேஷனுக்குப் போய், விவரங்களை அறிய முயன்றதும், அவ்விடத்தில் தங்களது

முயற்சி பலியாமற் போனதைக் கண்டு பெருத்த பணத்தொகை களைச் செலவு செய்து, பிரபலமான பாரிஸ்டர்களை அமர்த்தி பிரசிடென்சி மாஜிஸ்டிரேட்டின் கச்சேரியிலும், ஹைகோர்ட்டிலும் வாதாடச் செய்து மைனரை ஜாமீனில் விடவும், நகல்கள் பெறவும், முயற்சித்தும், எல்லா முயற்சிகளும் பயனற்றுப் போனதும், கடைசியாக அவர்கள் விசாரணைத் தேதியை மிகுந்த ஆவலோடு எதிர்பார்த்திருந்ததும் முன்னரே தெரிந்த விவரங்கள். மைனர் கொலைக் குற்றத்தில் அகப்பட்டுக் கொண்டிருக்கிறான் என்ற செய்தியை அறிந்த பிறகு கல்யாணியம்மாளுக்குத் தனது மூத்த குமாரத்தி ஓடிப்போன துன்பமும் ஒரு பொருட்டாகவே தோன்ற வில்லை. ஒரு பெருத்த காட்டானை ஒரு மனிதனை வளைத்துக் கொண்டு துரத்துகையில், பாம்பென்றும், தேளென்றும், முள்ளென்றும், புதரென்றும் அஞ்சாமல், அந்த மனிதன் எப்படி விழுந்து பயந்து ஓடுவானோ அதுபோல மைனருக்கு நேர்ந்த விபத்திற்கு முன் மற்றவை மிகவும் அற்பமாகத் தோன்றின. கருப்பாயி ஏதோ ரகசியங்களை வெளியிட்டிருக்கிறாள் என்ற வதந்தியும் உலாவி அவள் வரையில் எட்டியதாகையால், அந்த விஷயத்திலும் அவள் திகில் கொண்டு குலை நடுக்கம் அடைந்திருந் தாள்; மைனர் கொலைக் குற்றத்திற்காக தண்டனை அடைந்தால், அதோடு தன்னுடைய வம்சமே பூண்டற்றுப் போய்விடுவதன்றி, சகல செல்வமும் பராதீனமாகி விடுமே என்ற பெருத்த கவலையும் உண்டாகிவிட்டது. அதோடு, தான் அம்பட்டச்சியின் மகனை வைத்துப் பிள்ளை என்று வளர்த்து அவ்வளவு காலம் உலகத் தையே ஏமாற்றி வந்த விஷயம் வெளியாகி விடுமானால், அதன் பிறகு தனது மானமே போய்விடும் ஆதலால் தான் எந்த மனிதரின் முகத்திலும் விழிக்க முடியாமல் போய்விடுமே என்ற பெரும் பீதியும் உண்டாகிவிட்டது. ஆகையால், தனது சமஸ்தானத்தையே அடமானம் வைத்தாகிலும், மைனரது உயிரையும், தனது மானத்தையும் காப்பாற்ற வேண்டும் என்று தீர்மானித்துக் கொண்ட கல்யாணியம்மாள் பாரிஸ்டர்களுக்கு லட்சக் கணக்கில் பணத்தை வாரி இறைத்ததன்றி, போலீசாருக்கும், நியாயாதிபதி களுக்கும் ஏராளமான தொகைகளைக் கொடுக்கவும் ஆயத்தமாக இருந்தாள். ஆனால் அந்த இடங்களில் அவர்களது பிரயத்தனம்

பலிதமாகாமல் போயிற்று. ஆகையால், விசாரணை தினத்தன்று தனது கதி எப்படி முடியுமோ என்பதைப் பற்றி அளவு கடந்த சஞ்சலமும், கவலையும் ஏக்கமும் அடைந்து அதே தியானமாகக் கிடந்து அந்தச் சீமாட்டி சோர்ந்து கலங்கி மிகவும் பரிதாபகரமான நிலைமையில் இருந்தாள். விசாரணை தினத்தன்று, தானும் ஹைகோர்ட்டுக்குள் வந்தால் அவ்விடத்தில் அசங்கியமான விஷயங்கள் ஏதேனும் வெளிப்படுவதைக் கேட்டு, ஜனங்கள் தன்னைப் புரளி செய்வார்கள் என்று நினைத்து அங்கே வராமல், ஹைகோர்டிற்கு அண்டையில் ஆரம்பமாகும் தம்புச்செட்டித் தெருவில் இரண்டாவது மெத்தை வீடு காலியாக இருந்ததை உணர்ந்து அதற்கு ஒருமாத வாடகை கொடுத்து, அதை சுவாதீனப் படுத்திக் கொண்டு அங்கே வந்து இருந்து கொண்டாள். கச்சேரியில் நடக்கப் போகும் விசாரணையின் விவரங்களை எல்லாம் தான் உடனுக்குடன் அறிந்து கொள்ள வேண்டும் என்றும், தனக்கு அவமானம் வரக்கூடிய முக்கியமான விஷயம் வெளியாகிவிடு மானால், தான் அவ்விடத்திலேயே தனது பிராணனை விட்டு விடுவதென்றும் தீர்மானித்துக் கொண்டாள்; சுருக்கெழுத்துப் பரீட்சையில் (Short hand) தேறிய இரண்டு குமாஸ்தாக்களையும், பல ஆட்களையும் தயாராக வைத்துக் கொண்டாள். சுருக்கெழுத்து குமாஸ்தாக்களில் ஒருவன் விசாரணை நடக்கும் ஹாலிலிருந்து, அங்கே பேசப்படும் ஒவ்வொரு வார்த்தையையும், ஒவ்வொரு சாட்சியினது வாக்குமூலத்தையும் தனித்தனி காகிதங்களில் எழுதுவதென்றும், அவனுக்குப் பக்கத்தில் ஆட்களிருந்து உடனுக்குடன் அந்தக் காகிதங்களை வாங்கிக் கொண்டு போய், வழிநெடுக அஞ்சலாக நிறுத்தப்பட்டிருந்த ஆட்கள் மூலமாக அனுப்பி இரண்டாவது நம்பர் வீட்டிலிருந்த கல்யாணியம்மா ளிடத்தில் சேர்ப்பதென்றும், அங்கே மேன்மாடத்தின் ஓர் அறையில் அவளும், அவளுக்கெதிரில் இன்னொரு சுருக்கெழுத்து குமாஸ்தாவும் இருப்பதென்றும் காகிதங்கள் வரவர உடனுக்குடன் அந்த குமாஸ்தா படித்து அவளுக்கு மொழி பெயர்த்துச் சொல்வ தென்றும் ஏற்பாடுகள் செய்யப்பட்டிருந்தன. மைனர் தனது மகன் என்ற விஷயத்தை அம்பட்டக் கருப்பாயி வெளியிடுவாள் என்ற ஒரு சந்தேகம் கல்யாணியம்மாளினது மனதில் இருந்தது. ஆனால்,

அவள் சாதாரணமாக அதை வெளியிட்டால் அதை எவரும் நம்பாமல் அவளை ஒரு பைத்தியக்காரி என்று மதிப்பார்கள் என்ற எண்ணமும் அந்தச் சீமாட்டிக்கு உண்டாயிற்று. ஆனால், அந்த ரகசியம் நன்றாக ருஜுவாகிப் போம்படி அவள் எல்லா விவரங் களையும் எடுத்துச் சொல்ல மாட்டாள் என்ற ஒரு நம்பிகை மாத்திரம் கல்யாணியம்மாளுக்கு இருந்தது. அவள் அத்தனை வருஷ காலத்திற்குள் தன்னிடத்தில் கணக்கின்றி பணத்தை ஆயிரம் ஆயிரமாக அபகரித்துப் போனவளாதலால், அவள் அந்த விசுவா சத்தை மறந்து, தன்னைக் காட்டிக் கொடுக்க மாட்டாள் என்ற உறுதி இருந்து வந்தது; தனது மகன் மீது அவளுக்கு ஆத்திரமிருந் தாலும், அவள் அதைத் தன்மீது காட்ட, அவளுக்கும் தனக்கும் எவ்விதப் பகைமையுமில்லை ஆகையால், கருப்பாயி தன்னைக் காட்டிக் கொடுக்க மாட்டாள் என்ற மனோதிடம் மாத்திரம் அந்தச் சீமாட்டியின் மனதில் இருந்தது. ஆகையால் அவள் மாறி மாறி நம்பிக்கையும், அவநம்பிக்கையும் கொண்டவளாய், மேலே குறிக்கப்பட்ட ஏற்பாடுகளுடன் விசாரணை தினத்தனறு இரண்டாவது இலக்கமுள்ள வீட்டில் இருந்தாள். அந்த வீட்டின் அடிக்கட்டு ஏராளமான பஞ்சுப்பொதிகள் நிறைந்த பஞ்சுக் கிடங்காக இருந்ததன்றி, அந்த வீட்டின் நடைக்கடுத்த இரண்டாவது கதவு மூடிப் பூட்டப்பட்டிருந்தது. நடையிலிருந்து மேலே சென்ற படிக்கட்டுகளின் வழியாகவே அந்த வீட்டின் மேன் மாடத்திற்குப் போக வேண்டும். அந்த மேன்மாடத்தை மாத்திரம் கல்யாணியம்மாள் வாடகைக்கு வாங்கிக் கொண்டு அதற்குள் இருந்தாள். அந்த இரண்டாவது உப்பரிகைக்கு மேல், கைப்பிடிச் சுவருள்ள மொட்டை மெத்தை இருந்தது. அந்த மொட்டை மெத்தைக்குப் போக, கல்யாணியம்மாள் இருந்த உப்பரிகையில் இருந்து படிக்கட்டுகள் இருந்தன. அந்த விசாரணையில் மைனர் அம்பட்டச்சியின் மகன் என்பது ருஜுவாகிவிடு மானால், தான் உடனே அந்தச் சுருக்கெழுத்து குமாஸ்தாவை ஏதாவது ஓர் அலுவலின் மேல் வெளியில் அனுப்பிவிட்டுத் தான் மாத்திரம் மூனறாவது அநதஸ்தாகிய மொட்டை மெத்தைக்குப் போய் அங்கே பின்புறத்திலிருந்த தோட்டத்தில் விழுந்து தனது உயிரைவிடடு விடுவதென்பது அந்தச் சீமாட்டியினது தீர்மானம்.

அந்த மொட்டை மெத்தை தரையிலிருந்து சுமார் ஒன்றரைத் தென்னை உயரமிருந்ததாகையால், அதிலிருந்து மனிதர் விழுந்தால், அவரது எலும்புகூட மிஞ்சாமல் நொறுங்கித் தூளாகி விடும். அதன் பொருட்டே அந்தச் சீமாட்டி அதிகமான ஆட்களை அந்த உப்பரிகையில் வைத்துக் கொள்ளாமல், தான் அழைத்தால் வரவேண்டும் என்று உத்தரவு செய்து, யாவரையும் வீட்டின் வாசலில் உட்கார வைத்திருந்தாள். கச்சேரியில் விசாரணை தொடங்கியவுடனே அந்தச் சங்கதி அஞ்சல் மூலமாக அவளுக்கு இரண்டே நிமிஷத்தில் எட்டியது. கச்சேரியில் இன்னார் இன்னார் வந்திருக்கிறார்கள்; மைனரும் பாலாம்பாளும் எப்படி இருக்கிறார் கள் என்ற விவரங்களை எல்லாம் சுருக்கெழுத்து குமாஸ்தா எழுதி அஞ்சல் மூலமாக அனுப்ப அனுப்ப, அந்த விவரங்களை எல்லாம் அந்தச் சீமாட்டி உணர்ந்து கொண்டாள். ஆகவே, அவள் அந்தக் கச்சேரியில் இருந்து கண்கூடாக எல்லாவற்றையும் பார்ப்பவள் போலவே விஷயங்களை உணர்ந்து கொண்ட வண்ணம் மேலே என்ன நடக்கும் மேலே என்ன வரும் என்ற பேராவல் கொண்ட வளாக உட்கார்ந்திருந்தாள். முதலில் மதனகோபாலனது வாக்கு மூலம் வந்தது. தன் பொருட்டாகத் தென்னஞ் சோலையில் ஒளிந்திருந்த கருப்பாயியை, மைனரும் பாலாம்பாளும் சேர்ந்து அடித்து வதைத்த விவரங்களை உணர, கல்யாணியம்மாளது மனமும் கண்களும் கலங்கின; கண்ணீர் மளமளவென்று பொங்கி வழிந்தது; அவள் மைனரையும் பாலாம்பாளையும் தனது மனதிற் குள்ளாகவே வெறுத்துத் தூற்றினாள். அதன் பிறகு மதனகோபாலன் காலில் புண்பட்டு பலவீனமாக இருந் நிலைமையில், தனது உயிரை மதியாமல் கடலில் விழுந்து அந்தக் கிழவியை எடுத்து வந்ததை உணர, அவளது நெஞ்சம் பாகாயுருகியது. மறுநாளைய மாலையில் மைனர் கருப்பாயியைக் கத்தியால் குத்தினான் என்ற விவரத்தை உணர, அவளது தேகம் கிடுகிடென்று ஆடியது. மைனர் மரண தண்டனை அடைவது நிச்சயம் என்ற எண்ணம் அவளது மனதில் உண்டாகிவிட்டது. அவள் பெருத்த குழப்பமும் கலக்கமும் கொள்ளலானாள். அந்த நிலைமையில் பாரிஸ்டர் குரோட்டன் செய்த குறுக்கு விசாரணை விவரங்களைக் கேட்கவே, அவளது உயிர் திரும்பியது. மனதில் ஒருவித நம்பிக்கை உண்டா

யிற்று. தனது கட்சியின் பாரிஸ்டரது அபார சக்தியை மெச்சி, அவர் அந்த வழக்கில் தமது கட்சி வெற்றி பெறும்படி செய்தால், தாம் பேசிய தொகையைப் போல இரண்டத்தனை தொகை தான அவருக்குக் கொடுக்க வேண்டும் என்ற தீர்மானம் செய்து கொண்டாள். குரோட்டன் துரையின் குறுக்கு விசாரணையில் மதனகோபாலனது வாக்குமூலம் முக்கியமான இடங்களில் உபயோகமற்றுப் போனதாலும், மதனகோபாலன், அவன் மீது அவதூறு சொல்லி அவனது அலுவலை இழக்கச் செய்தவளான தனது பெயரை வெளியிடாமல் மறைத்ததைக் காண, அவளது மனதில் மதனகோபாலன் விஷயத்தில் ஏற்பட்ட நன்றியறிதல் வாத்சல்யம் முதலியவற்றின் பெருக்கு அளவற்றதாக இருந்தது. பிள்ளையிருந்தாலும் அப்படிப்பட்ட உத்தம குணங்கள் நிறைந்த பிள்ளை இருக்க வேண்டும் என்றும், சகலமான இழிகுணங்களும் நிறைந்த கேவலம் துஷ்டனான மைனரைத் தனது பிள்ளை என்று சொல்லத் தனக்கு விதி ஏற்பட்டிருந்ததே என்றும், அந்தச் சீமாட்டி நினைத்து வருந்தி உருகியிருந்த சமயத்தில் கிருஷ்ணாபுரம் ஜெமீந்தாரினது வாக்குமூலமும், வேலைக்காரர்கள், போலீஸ் ஜெவான் முதலியோர்களினது வாக்குமூலங்களும், சர்ஜன் துரையின் வாக்குமூலமும் பாரிஸ்டர் குரோட்டன் செய்த குறுக்கு விசாரணையின் விவரங்களும் வரவர எப்படியும் தனது பாரிஸ்டர் மைனரைக் கொலைக் குற்றத்திலிருந்து தப்ப வைத்துவிடுவார் என்ற உறுதியும் நம்பிக்கையும் எழுந்து கல்யாணியம்மாளது மனதில் மேலாடிக் கொண்டிருந்தன. அதற்கு அடுத்தாற் போல பிரசிடென்சி மாஜிஸ்டிரேட்டு கருப்பாயியின் வாக்குமூலத்தை வாசிக்கப் போகிறார் என்ற செய்தி கிடைத்தது. அப்போது தான் கல்யாணியம்மாளினது தேகம் கட்டிலடங்காமல் பதறியது; மனதில் பலவகையான உணர்ச்சிகள் கொந்தளித் தெழுந்து அவளது மார்பையே படீரென்று கிழித்தெறிந்து விடுமோ எனத் தோன்றின. அதற்கு மேல் என்ன விபரீதம் நேருமோ, அந்தக் கிழவி தனது மரணாவஸ்தையில் என்னென்ன விவரங்களை வெளியிட்டிருப்பாளோ என்ற கவலைகள் மகா உக்கிரமாகப் பெருகி அவளது உணர்வையும் அறிவையும் கலக்கிச் சின்னா பின்னமாக்கிக் கொண்டிருந்தன. அவள் தனது ஆசனத்தில்

உட்கார்ந்திருக்க மாட்டால் எழுந்து நெடுமூச்செறிந்தவளாகத் தானிருந்த விடுதியில் உலாவத் தொடங்கினாள். கொஞ்ச நேரத்தில் கருப்பாயியின் மரணாந்த வாக்குமூலத்தினது விவரம் கொஞ்சம் கொஞ்சமாக வரத் தொடங்கியது; தான் அம்பட்டச்சியின் மகனை வாங்கி வளர்த்த விவரங்களை எல்லாம், அன்னிய மனிதனான அந்தச் சுருக்கெழுத்து குமாஸ்தா படித்து விவரித்துச் சொன்னதைக் கேட்க, அவளது எண்சாண் உடம்பும் ஒரு சாணாகக் குன்றியது. அவனது வாய்மூலமாக அந்த விஷயங்களை அறிந்து கொள்வதும் அத்யாவசியமாக இருந்தது. அவன் அந்த விஷயங்களை வாயில் வைத்துப் பேசியதைக் கேட்பதும் கன்னகடூரமாகவும் வெட்கக் கேடாகவும் இருந்தது. இருந்தாலும் கருப்பாயி தனது ரகசியங்களை எல்லாம் ஒன்றுகூட விடாமல் வெளிப்படுத்தி விட்டாள் என்பதை உணர உணர, அவளது நினைவு முழுதும் கலவரப்பட்டுப் போய் விட்டது. பெருத்த பிரமிப்பும் திகிலும் ஏற்பட்டுவிட்டன. எந்த ஒரு முக்கியமான ரகசியம் வெளிவரக்கூடாதென்று நினைத்து, அதற்குத் தகுந்தபடி அவள் ஆயத்தமாக இருந்தாளோ, அந்த விஷயம் பகிஷ்காரமாக வெளியாகி விட்டதைக் காணவே, அந்தச் சீமாட்டி அப்படியே மயங்கி நாற்காலியில் உட்கார்ந்தபடி அரைக் கால் நாழிகை நேரம் வரையில் உணர்வற்றவளாக இருந்தாள். அவள் அயர்ந்து தூங்குகிறாள் என்று எண்ணிக் கொண்ட குமாஸ்தா மேலே வாசிக்காமல், அவளது முகத்தைப் பார்த்த வண்ணம் உட்கார்ந்திருந்தான். சிறிது நேரத்தில் அவளது மயக்கம் தெளிய, அவள் கண்களை விழித்துக் கொண்டவளாய் அவனை நோக்கி, "ஐயா! எனக்கு உடம்பு அசௌக்கியமாக இருக்கிறது, கிறுகிறுப்பும் மயக்கமும் வருகின்றன. தயவு செய்து நீர் கடைக்குப் போய் இரண்டு சோடாபுட்டிகள் வாங்கிக் கொண்டு வாரும்" என்று கூறி, மேஜையின் மீதிருந்த பணத்தில் ஒரு ரூபாயை எடுத்து, அவரிடத்தில் போட அவர் அதை எடுத்துக் கொண்டு வெளியே போய் விட்டார்.

உடனே கல்யாணியம்மாள் தனது ஆசனத்தை விட்டெழுந்தாள்; தான் அம்பட்டச்சியின் மகனை வாங்கிப் பிள்ளையாக வளர்த்துப் பெருத்த மோசம் செய்தவள் என்பது உலகம் முழுதும் பரவி விட்டது போல அப்போதே அவளது மனதிற்குத் தோன்றவே,

எந்த மனிதரது முகத்திலும் விழிப்பதற்கு அவளது மனம் இடந்தர வில்லை. தான் முன்னரே செய்து கொண்டிருந்த தீர்மானத்தை நிறைவேற்றுவதைத் தவிர உய்யும் வகை வேறேயில்லை என்பதை உணர்ந்துகொண்ட அந்தச் சீமாட்டி விரைவாகச் சென்று அந்த மெத்தையிலிருந்து கீழே இறங்கும் படிகளின் மேலே இருந்த கதவை மூடி உட்புறத்தில் தாளிட்டுக் கொண்டவளாய விசையாக நடந்து, மூன்றாவது அந்தஸ்தாகிய மொட்டை மெத்தை யின் படிகளில் தடதடவென்றேறி மேலே சென்றாள். அந்த சமயத்தில் கல்யாணியம்மாள் தனது உயிரையே ஒரு திரணமாக மதித்துத் தனது மனதிற்கு மிகுந்த திடத்தை ஊட்டிக் கொண்ட வளாய், "ஐயோ! தெய்வமே! என்னுடைய குடும்பம் இப்படியா சீர்குலைந்து, ஊரார் பழித்துச் சிரிக்கும்படியான ஏளனத்துக்கு ஆளாகி அநியாயமாக அழிந்து போக வேண்டும்! சே! என்ன உலகம்! என்ன சொந்தக்காரர்! என்ன பிள்ளை! என்ன பெண்! மனிதன் நல்ல வழியில் போனாலும் துன்பம் வருகிறது; கெட்ட வழியில் போனாலும் துன்பம் வருகிறது; எவ்வளவோ அபாரமான செல்வத்தையும் செல்வாக்கையும் பிள்ளைக் குட்டிகளையும வைத்திருந்தும், ஈசுவரனுக்குப் பயந்து ஒழுங்கான வழியில் நடந்தும், நான் என்ன சுகத்தைக் கண்டேன்! ஒன்றுமில்லை. ஒவ்வொன்றினாலும் மலைமலையான அபாயங்களும் துன்பங் களுமே வந்து நேர்ந்தனவன்றி, நிம்மதியாக அப்பாடா என்று கவலையின்றி நான் படுத்தறியேன்! அப்பப்பா! உலகம் பொல்லாது! முக்காலும் பொல்லாது! நரகமென்று சொல்வதற்கு இனி வேறே இடமே இல்லை ஒரு நிமிஷ நேரமாவது இந்தப் பாழும் உலகத்தில் இருக்கப்படாதப்பா! மற்ற எல்லோரும் கெட்டுப் போனாலும், என்னுடைய செல்வக்குழந்தையான கோமளவல்லி ஒருத்தி தான் கடைசி வரையில் தாய்க்கடங்கி ஒழுங்கான நடத்தையோடிருந்தவள். அவள் உறுதியான மனசுடையவள் ஆகையால், அவள் இனியும் கெடவே மாட்டாள். மனிதரை மனிதர் எவ்வளவு தூரந்தான் தாங்கிவிட முடியும். அவரவர்கள் தம்தம் புத்தியைக் கொண்டுதான் பிழைத்துப் போக வேண்டும். நான் இன்றைய தினம் வாந்தி பேதியால் திடீரென்று இறந்து போனால் கோமளவல்லி என்ன செய்வாள்? அவள்

பிழைக்க மாட்டாமல் செத்தா போய்விடப் போகிறாள்; யார் இருந்தாலும், யார் இறந்தாலும் உலகம் இருந்து கொண்டுதான் இருக்கிறது; மனிதர் வாழையடி வாழையாக வளர்ந்து பெருகி ஒருவரைவிட ஒருவர் அதிமேதாவியாகவும் சமர்த்தராகவும் இருந்து முன்னேற்ற மடைந்து அரும்பெருங் காரியங்களைச் செய்து கொண்டு தான் இருக்கிறார்கள். ஆகையால், இந்தக் கோமளவல்லியைப் பற்றித் தான் நான் எதற்காகக் கவலைப்பட வேண்டும்! அவரவர் தலை விதிப்படி தான் எதுவும் நடக்கும். எவ்வளவோ பந்தோபஸ்தாகக் காப்பாற்றப்பட்ட துரைஸானியை ஒரு நொடியில் கொண்டுபோய் விட்டார்களே, நானிருந்து கோமளவல்லியைப் பாதுகாக்க முடியவில்லையே என்று கவலைப்படுவதில் என்ன உபயோகம்! எவருக்கும் தன் தன் பலமே பலம். ஈசுவரா! இவ்வளவு காலந் தான் நான் இந்த உலகத்தில் இருக்க வரம் வாங்கி வந்தேன். இங்கே இருந்து நான் அனுபவித்த சுகம் போதும்; இனியாகிலும் என்னை உன் பொன்னடியில் சேர்த்துக்கொள்" என்று பலவாறு நினைத்த வண்ணம் ஒரே பாய்ச்சலாகப் பாய்ந்தோடிக் கைப்பிடிச்சுவரிலேறி அந்த வீட்டின் பின்புறத் தோட்டத்திற்குள் குப்புற வீழ்ந்து விட்டாள்.

★ ★ ★

அந்தச் சீமாட்டியினது நிலைமை அப்படி இருக்க, ஹைகோர்ட்டில் விசாரணை நடந்து கொண்டே போனது. சைதாப்பேட்டை டாக்டர் சாட்சிக் கூண்டின் மேல் வந்து நிற்க, சர்க்கார் வக்கீல், அவரது வாய்மூலமாக அடியில் கண்ட விஷயங்களை வரவழைத்தார்:-

என் பெயர் டாக்டர் கேசவலு நாயுடு! நான் இங்கிலீஷ் முறைப்படி வைத்தியப் பரீட்சையில் தேறி சைதாப்பேட்டையில் வாசமாக இருந்து சென்ற 30-வருஷ காலமாக வைத்தியம் செய்து வருகிறேன். என்னுடைய பரீட்சை முடிந்த பிறகு நான் ஐரோப்பாவில் பிரான்ஸு தேசத்தின் தலைமை நகரமாகிய பாரிஸ் தேசத்துக்குப் போய், மனிதருடைய உடம்பின் மேல்தோல்

சம்பந்தமான சகலமான வியாதிகளைப் பற்றியும் பிரத்தியேகமாகப் படித்துத் தேர்ச்சியடைந்த மகா நிபுணர்களான சில டாக்டர்களிடத் தில் பாடங்கற்றுக் கொண்டு வந்தவன். தோலின் மேலுண்டாகும் குஷ்டம், கிரந்தி முதலிய மேகநீர் சம்பந்தமான சகல வியாதிகளையும் அதிசுலபத்தில் விலக்க அநேக முறைகளை நான் தெரிந்து கொண்டு வந்து கையாடி வருகிறேன். ஆலந்தூரிலிருந்த அம்பட்டக் கருப்பாயி என்பவளை எனக்குப் பல வருஷ காலமாக தெரியும். அவள் மருத்துவம் செய்வதில் மிகவும் திறமை வாய்ந்தவள். சைதாப்பேட்டையில் உள்ள வீடுகளில் பிரசவம் நேரும் போதெல்லாம், ஜனங்கள் அநேகமாக இவளையே அழைத்துக் கொண்டிருந்தனர். ஆனால் அவள் சென்ற பல வருஷங்களாக பெருத்த குடிகாரியாகி, யார் கூப்பிட்டாலும் வராமல் அலட்சியம் செய்யத் தொடங்கவே, ஜனங்கள் அவளைக் கூப்பிடுவதை நிறுத்தி விட்டார்கள். சுமார் பதினைந்து வருஷ காலத்துக்கு முன் அவளுக்கு ஓர் ஆண் குழந்தை இருந்ததாக எனக்கு நினைவுண்டாகிறது. அவளோடு கூட அந்தக் குழந்தையும் வருமாதலால், நான் அதை அடிக்கடி பார்த்திருக்கிறேன்; ஒரு நாள் அவள் அந்தக் குழந்தையை என்னுடைய வீட்டுக்குக் கொண்டு வந்து அதனுடைய மார்பில் மாம்பிஞ்சு போல திராவகத்தால் சுட்டுக் கொடுக்கும்படி கேட்டுக் கொண்டாள். எதற்காக அப்படிச் செய்யச் சொல்லுகிறாய் என்று நான் அவளிடம் கேட்டேன். அந்தக் குழந்தைக்கு அடிக்கடி மாந்தம் வருவதாகவும், அந்த மாதிரி சுட்டால் மாந்தம் நின்று போய் விடுமென்றும் ஒரு சாமியார் சொன்னதனால் அப்படிச் செய்து பார்க்க விரும்புவதாகச் சொன்னாள்; நம்முடைய பழைய காலத்துச் சிகிச்சைகள் அநேகத்தில் எனக்கு நிரம்பவும் நம்பிக்கையுண்டு. அந்த மாதிரி சில இடங்களில் சுடுவதால் ஜன்னி, பக்கவாதம், காக்கை வலிப்பு முதலிய கொடிய வியாதிகள் எல்லாம் நீங்கியதை நான் அனுபவத் தில் கண்டிருக்கிறேன். ஆகையால், அவள் சொன்னதிலும் ஏதாவது சூட்சுமமிருக்கலாம் என்ற நம்பிக்கை கொண்டு நான் அம்மாதிரியே ஒரு திராவகத்தின் உதவியால், அவள் காட்டிய அளவுப்படி ஒரு மாம்பிஞ்சு மாதிரி மார்பில் சுட்டு அந்தப் பாகத்தைக் கருப்பாக்கிக் கொடுத்தேன். அது தான் அவளை நான்

கடைசி முறையாகப் பார்த்தது; அதன் பிறகு அவள் எங்கே இருந்தாள் என்பதும் என்ன தொழில் செய்தாள் என்பதும் எனக்குத் தெரியாது. அந்த அம்பட்டக் கருப்பாயியின் மகனுடைய முகச்சாயல் போலத்தான் இவருடைய முகமும் தோன்றுகிறது; ஆனால் அந்தப் பையன் தான் இவர் என்பதை நான் நிச்சயமாகச் சொல்ல முடியாது — என்றார்.

உடனே சர்க்கார் வக்கீல் கேசவலு நாயுடுவைக் கீழே இறங்கிப் போய் மைனரது மார்பிலிருந்த வடுவைப் பார்த்துவிட்டு வரும்படி சொல்ல, அவர் அப்படி போய்ப் பார்த்துவிட்டுத் திரும்பி வந்து சாட்சிக் கூண்டின்மேல் நின்ற வண்ணம் மேலும் வாக்குமூலம் கொடுக்கலானார்:- இந்த மனிதருடைய மார்பிலிருக்கும் வடுவை நான் இப்போது பார்த்தேன். நான் கருப்பாயியின் மகனுடைய மார்பில் சுட்டதனால் உண்டான வடுவைப் போலத்தான் இந்த வடு இருக்கிறது. இவருடைய தேக அமைப்பும், முகச்சாயலையும், இந்த வடுவிருப்பதையும் கவனிக்க, அந்தப் பையனே வளர்ந்து இந்த ரூபத்துக்கு வந்திருக்க வேண்டும் என்றே எண்ண வேண்டி இருக்கிறது. அந்தப் பையனே இவர் என்பதை அநேகமாய் நிச்சய மாகச் சொல்லலாம் என்று டாக்டர் கேசவலு நாயுடு வாக்குமூலம் கொடுத்து முடித்தார். அவர் சொன்ன வரலாற்றைக் கேட்க, கருப்பாயியினது வாக்குமூலத்திலிருந்த விவரங்கள் எல்லாம் நிஜமானவை என்பது எல்லோர் மனதிலும் உறுதியாகிவிட்டது. கருப்பாயியின் மரணாந்த வாக்குமூலம் கேவலம் பிறற்றலென்று ருஜுப்படுத்திய பாரிஸ்டர் குரோட்டன் துரை பட்ட பாடெல்லாம் வீணாயிற்று என்று ஜனங்கள் தங்களுக்குள்ளாகப் பேசிக் கொண்டனர்.

உடனே ஜட்ஜி சர்க்கார் வக்கீலை நோக்கி, "மகா படிப்பாளியான நமது நண்பர் பாரிஸ்டர் குரோட்டன் துரை, குறுக்கு விசாரணை களை எல்லாம் கடைசியில் வைத்துக் கொள்ளலாம் என்று கேட்டுக் கொள்வதால், இன்னம் மிகுதி இருக்கும் சாட்சியையும் விசாரித்து விடலாம். அடுத்த சாட்சியை அழைப்போம்" என்றார்.

உடனே சேவகன்; "மைசூர் சின்னையா நாயுடு! மைசூர் சின்னையா நாயுடு! மைசூர் சின்னையா நாயுடு" என்று மூன்று தரம்

கூப்பிட்டான். அடுத்த நிமிஷத்தில் சின்னையா நாயுடு என்பவர் உள்ளே வந்து சாட்சிக் கூண்டின் மேல் ஏறி நின்றார். அவர் தக்க பெரிய மனிதர் போல, உயர்வான ஆடைகளை அணிந்திருந்ததன்றி, தோற்றத்திலும் உண்மையான பெரிய பிரபுவைப் போலவே இருந்தார். அவர் அவ்வாறு வந்ததைக் கண்ட யாவரும், மைசூரில் உள்ள அந்த மனிதர் சென்னையில் நடந்த கொலை விஷயமாக என்ன சங்கதியைச் சொல்லப் போகிறார் என்ற வியப்பும் சந்தேகமு மடைந்தனர். விசாரணை மண்டபத்தின் ஒரு புறத்தில் உட்கார்ந்து கொண்டிருந்த கிருஷ்ணாபுரம் ஜெமீந்தார் சின்னைய்யா நாயுடு வந்ததைக் கண்டு திடுக்கிட்டு, மிகவும் ஆச்சரியமுற்று, தன்னிடத் தில் மதனகோபாலனையும் மோகனாங்கியையும் ஒப்படைத்த மனிதர் அந்த சின்னையா நாயுடு என்பதைப் போலீசார் எப்படித் தெரிந்து கொண்டிருப்பார்கள் என்றும், அவரை அப்போது எதற்காக சாட்சியாக வரவழைத்திருக்கிறார்கள் என்றும் சந்தேகித்து பிரமித்து அப்படியே உட்கார்ந்திருந்தார். அவரது தேகம் என்ன காரணத்தினாலோ படபடவென்று துடித்தது. உள்ளம் பூரித்துப் பொங்கி எழுந்தது; இன்னதென்று சொல்லவியலாத பல வேதனை களால் பெரிதும் சஞ்சலமுற்றவராக அவர் உட்கார்ந்திருந்தார். சாட்சிக் கூண்டின்மேல் ஏறி நின்ற சின்னையா நாயுடு பிரமாணம் செய்விக்கப்பட, அவரது வாய்மூலமாக சர்க்கார் வக்கீல் அடியில் கண்ட விஷயங்களை வருவித்தார்:-

என் பெயர் சின்னையா நாயுடு. நான் மைசூரில் ஸ்திரமாக வாசம் செய்து வருகிறேன். எனக்கு மைசூரில் ஒரு பெரிய பங்களாவும், மூன்று மெத்தை வீடுகளும், 20-காணி நஞ்சை நிலமும் இருக்கின் றன. என்னுடைய ஆஸ்திகள் எல்லாம் ஒருசுமார் 5-லட்சம் ரூபாய் பெறும்; நான் சர்க்காருக்கு நிலவரி வருமானவரி எல்லாம் சேர்த்து வருஷத்தில் ஆயிரம் ரூபாய்க்கு மேல் கிஸ்தி செலுத்துகிறேன். அதுவும் தவிர, நான் இப்போது தாலூகா போர்டிலும், ஜில்லா போர்டிலும் மெம்பராக இருந்து வருகிறேன்; என்னுடைய ஆஸ்தி முழுதையும் நானே சுயமாகச் சம்பாதித்தேன். இந்த சென்னை ராஜதானி மைசூர் ராஜ்ஜியம் ஆகிய இரண்டிலும் முக்கியமான பட்டணங்களில் எல்லாம் என்னுடைய கம்பெனியார் நாடகம் ஆடியிருக்கிறார்கள். அந்தக் கம்பெனியை வைத்து நான் ஒரு

பிடில் வித்துவானுடைய சொந்தவூர் தஞ்சை ஜில்லாவில் உள்ள **திருக்கோடிகாவல்.** அவருக்கு நான் மாதம் ஒன்றுக்கு 100-ரூபாய் சம்பளம் கொடுத்து வந்தேன். அவர் இறந்து போவதற்குப் பத்து வருஷ காலத்துக்கு முன்னே தொடங்கி என்னுடைய கம்பெனியில் அவர் வேலையில் இருந்து வந்தார். அவர் வேலையில் அமர்ந்த காலத்தில் கலியாணமாகாத பிரம்மசாரியாக இருந்தார். என்னிடத்தில் வந்து மூன்று வருஷம் பணம் சேர்த்து ஒரு பெண்ணைக் கலியாணம் செய்து கொண்டார். எங்களுடைய கம்பெனி எந்த ஊருக்குப் போனாலும் அவர் அங்கே குடும்ப சமேதராகவே வருவார். ஏனென்றால், அவருடைய சம்சாரத்துக்கும் எவ்வித உறவினரும் உயிரோடில்லை. ஆகையால் அவர் தம்முடைய சம்சாரத்தையும் தம்மோடு கூடவே அழைத்து வந்தார். கொஞ்ச காலத்துக்குப ·றகு அவருக்கு ஒரு பெண் குழந்தை பிறந்தது. அதன் பிறகு ஆறுமாத காலத்தில் அவருடைய சம்சாரம் விஷ பேதியினால் இறந்து போய்விட்டாள். அவர் அந்தக் குழந்தையைப் பார்த்துக் கொள்வதற்காகவும், தமக்க ஆகாரம் சமைத்துப் போடு வதற்காகவும் ஒரு வேலைக்காரியை ஏற்படுத்தி அந்தக் குழந்தையை வளர்த்து வந்தார். அந்தக் குழந்தைக்கு ஒரு வயசான போது நாங்கள் தஞ்சாவூரில் நாடகம் ஆடிக் கொண்டிருந்தோம். அந்த ஊருக்கு ஆறு மயில் தூரத்துக்கு வடக்கில் திருவையாறு என்ற ஒரு மகா க்ஷேத்திரமிருக்கிறது. அந்த ஊரினிடையில் காவிரி யாறு போகிறது. அந்த ஊரில் உள்ள சிவஸ்தலத்துக்கு ஜனங்கள் தினந்தினம் ஏராளமாகப் போவது வழக்கம். தென் தேசத்தின் சங்கீத நிபுணரும் சங்கீத கர்த்தாவுமான பிரம்மஸ்ரீ தியாகராஜ சுவாமிகள் வசிக்கும் பாக்கியத்தைப் பெற்ற அந்த ஊரில் அவரது காலம் முதல் பாடகர்களும், வீணை வித்துவான்களும் ஏராளமாகப் பிறந்து கீர்த்தி பெற்றிருந்து வருவதை அறிந்த எங்களுடைய பிடில் வித்துவான், அந்த ஊரில் உள்ள ஒரு பிரபல சங்கீத வித்துவானிடம் அடிக்கடி போயிருந்து விட்டு வருவதுண்டு. அப்படி அவர் போய் விட்டு ஒருநாள் திரும்பி வருகையில், ஒரு முரட்டு மனிதன் மூன்று வயசுள்ள அழகான ஒரு குழந்தையை எடுத்துக் கொண்டு வந்ததைக் கண்டு சந்தேகங் கொண்டு அவனுடைய வரலாற்றை விசாரிக்க, அவன் தானிருப்பது பக்கத்தில் உள்ள மாரமங்கலம்

என்றும், தான் வழியோடு வரும் போது அந்தக் குழந்தை வழியில் அழுது கொண்டிருந்ததைக் கண்டு எடுத்துப் போவதாகவும், யாராவது ஆயிரம் ரூபாய் கொடுத்தால் அதைக் கொடுத்துவிடுவதா கவும் சொன்னான். அவர் அந்தக் குழந்தையின் ஆசை கொண்டு, அவனை அழைத்துக் கொண்டு தஞ்சாவூருக்கு வந்தார்; அவரது கைவசத்தில் அப்போது எண்ணூறு ரூபாய் இருந்தது; என்னிடத்தில் இன்னோர் இருநூறு ரூபாய் கடனாக வாங்கி அவனுக்குக் கொடுத்து அவனை அனுப்பிவிட்டார். அவருடைய விலாசத்தை எழுதிக் கொடுக்குமபடி அந்த முரட்டாள் கேட்க, பிடில் வித்வான் ஒரு துண்டுக் காகிதத்தில எழுதிக் கொடுத்து அவனை அனுப்பி விட்டார். அந்தக் குழந்தையை நான் வாங்கிப் பார்த்து அதன் அபரிமிதமான அழகைக் கண்டு அது ராஜவம்சத்தைச் சேர்நத குழந்தை என்று அனுமானித்துக் கொண்டேன். அதன் மார்பில் மாம்பிஞ்சு போல ஒரு மச்சமிருக்கக் கண்டேன். அந்தக் குழந்தை தான் மதனகோபாலன். அவனுடைய உடம்பில் அந்த மச்சம் இன்னமும் இருக்கிறது. அந்த பிடில்வித்துவான் அந்தக் குழந்தையை மிகவும் அன்பாக வளர்த்து வந்தார். கேட்போர் களுக்கு அது விலைக்கு வாங்கப்பட்ட குழந்தை என்று சொல்ல அவருக்கு இஷ்டமில்லை. ஆகையால் அவர் அதனை சொந்த பிள்ளை என்றே சொல்லி வளர்த்து வந்தார். கம்பெனியில் உள்ளோர் யாவரும், நானும்கூட அப்படியே சொல்ல வேண்டும் என்று அவர் கேட்டுக் கொண்டிருந்தார். நாங்கள் எல்லோரும் அப்படியே சொல்லி வந்தோம். பையனும், பெண்ணும் சொந்த அண்ணன் தங்கையென்றே நினைத்துக் கொண்டு வளர்ந்து வந்தனர். பிடில் வித்துவான் இறந்த பின், நான் அவர்களைக் கிருஷ்ணாபுரம் ஜெமீந்தாரிடத்தில் ஒப்புவித்த காலத்தில், அவர் அவர்களுடைய வரலாற்றைப் பற்றி விரிவாகக் கேட்கவில்லை குழந்தைகள் அநாதைகள் என்ற உடனே அவர் அவ்வளவோடு திருப்தியடைந்து வாங்கிக் கொண்டார். பையனுடைய வரலாற்றைச் சொல்வது அநாவசியம் எனறும், அப்படிச் சொன்னால், பையன் மேல் அவருக்கு மதிப்புக்குறைவும் அன்புக் குறைவும் ஏற்பட்டு விடுமோ என்று நினைத்து, நான் அந்த ரகசியத்தை அவரிடம் சொல்லவில்லை. அவா அவர்கள் சொந்த அண்ணன் தங்கை

என்றே மதித்து இதுவரையில் வளர்த்து வந்தார். அந்தப் பையன் பிடில் வித்துவானிடத்தில் ஐந்தாறு மாசகாலம் இருந்தவுடனே, மூன்றாவது வயசிலேயே, அவனுக்கு அபாரமான சங்கீத ஞானம ஏற்பட்டுவிட்டது. அதை உணர்ந்த கிருஷ்ணாபுரம் ஜெமீந்தாா அவன் பிடில் வித்துவானுடைய பிள்ளை ஆகையால், அவனுக்கு அபாரமான சங்கீத ஞானம் ஏற்பட்டுவிட்டது. அதை உணர்ந்த கிருஷ்ணாபுரம் ஜெமீந்தார் அவன் பிடில் வித்துவானுடைய பிள்ளை ஆகையால், அவனுக்கு அவ்வளவு அபாரஞானம் இயற்கையிலேயே இருக்கிறதென்று எண்ணி, அவனை மைசூர் **சேஷண்ணாவிடத்தில்** விட்டு வீணை பயிற்றிவைத்தார்; இவ்வளவு தான் எனக்குத் தெரியும் – என்று சின்னையா நாயுடு வாக்குமூலம் கொடுத்தார்.

***சர்க்கார் வக்கீல்:-*** (அவரை நோக்கி) அந்த பிடில் வித்துவான உமக்கெழுதிக் கொடுத்த ஒப்பந்தப் பத்திரத்தைக் கொண்டு வரும் படி சம்மன் வந்ததே. அதை கொண்டு வந்தீரா?

***சி. நாயுடு:-*** இதோ கொண்டு வந்திருக்கிறேன். (ஒரு பத்திரத்தை விசாரணை குமாஸ்தாவிடத்தில் கொடுக்கிறார்)

***ச. வக்கீல்:-*** இந்தப் பத்திரம் அவளுடைய கையாலேயே எழுதி ரிஜிஸ்டர் செய்யப்பட்டதா?

***சி. நாயுடு:-*** ஆம்.

***ச. வக்கீல்:-*** (கருப்பாயியின் மொந்தையிலிருந்த துண்டுக கடிதத்தை எடுத்துக் காட்டி) இது யாருடைய எழுத்தென்பதைப் பார்த்துச் சொல்லும்.

***சி. நாயுடு:-*** இது பிடில் வித்துவான் குழந்தையை விற்றவனுக்கு எழுதிக் கொடுத்த துண்டு காகிதம். இந்த எழுத்தும் நான் இப்போது தாக்கல் செய்த பத்திரத்தின் எழுத்தும் ஒரே மாதிரியாக இருக்கிறது பார்த்தீர்களா - என்றார்.

உடனே ஜட்ஜி துரை சின்னையா நாயுடுவை வெளியில் போய் இருக்கும்படி சொல்லி அவரை அனுப்பிவிட்டு, இராயப்பேட்டை வைத்தியசாலை சாஜன் துரையையும் மதனகோபாலனையும்

மறுபடியும் கூப்பிடும்படி உத்தரவு செய்ய, அவர்கள் இருவரும் திரும்பவும் உள்ளே வருவிக்கப்பட்டனர். சர்ஜன் துரை சாட்சிக் கூண்டில் நிற்க வைக்கப்பட்டு மறுபடியும் பிரமாணம் செய்விக்கப் பட்டார்.

மதனகோபாலனை ஜட்ஜி தமக்கருகில் வரவழைத்து அவனது மார்பிலிருந்த மச்சத்தை உற்றுப் பார்த்தபின், சாட்சிக் கூண்டில் நின்ற சர்ஜன் துரைக்கெதிரில் அவனை நிற்கச் செய்து, "ஐயா! சர்ஜனன் துரையவர்களே! உங்களுக்கு முன்னால் நிற்கும் யௌவனப் புருஷனுடைய மார்பிலிருக்கும் மச்சத்தையும், கைதிக் கூண்டில் நிற்கும் சிறுவருடைய மார்பிலிருக்கும் மச்சத்தை யும் தயை செய்து ஒத்திட்டுப் பாருங்கள்" என்றனர். உடனே சர்ஜன் துரை மதனகோபாலனை அழைத்துக் கொண்டு மைனர் இருந்த இடத்திற்குப் போய் இருவரையும் பக்கம் பக்கமாக நிறுத்தி, இருவரது மச்சங்களையும் உற்று நோக்கி, தமது மடியிலிருந்த ஒரு பூதக்கண்ணாடியை எடுத்துக் கண்ணில் வைத்துப் பார்த்து அரை நாழிகை நேரம் வரையில் ஆராய்ச்சி செய்து, இரண்டையும் பென்சலால் அளந்து பார்த்தபின் திரும்பவும் சாட்சிக் கூண்டின் மேல் ஏறி நின்றவராய், "கோர்ட்டார் அவர்களுடைய உத்தரவுப்படி இரண்டு மச்சங்களையும் ஒத்திட்டு ஆராய்ந்து பார்த்தேன்; இரண்டும் ஒரே நீள அகலமுடையவனாக இருக்கின்றன. ஒருவனுடைய மார்பில் மச்சம் எந்த இடத்தில் இருக்கிறதோ அதே இடத்தில் மற்றவருடைய மார்பிலும் அது இருக்கிறது. இப்படி இருவருக்கும் பிறப்பிலேயே மச்சம் இருப்பது சந்தேகம். ஆகையால ஏதோ காரணத்தை முன்னிட்டு, ஒருவருடைய மச்சத்தைப் போல இன்னொருவருக்கு மனிதரால் செயற்கையாக உண்டாக்கப்பட்டிருக்க வேண்டும என்று நினைக்கிறேன்" என்றார்.

**ஜட்ஜி:-** யாருடையது இயற்கையானது, யாருடையது மனிதரால் உண்டாக்கப்பட்டது என்பது தெரிகிறதா?

**சர்ஜன்:-** தெரிகிறது. கைதிக்கூண்டில் இருப்பவருடைய மச்சம் சுடப்பட்ட தழும்பு போல இருக்கிறது. மற்றவருடையது இயற்கை யாக உண்டான மச்சமாக இருக்கிறது — என்றார்.

அவ்வளவோடு சர்ஜன் துரை வெளியில் அனுப்பப்பட்டார். மைசூர் சின்னையா நாயுடுவின் வாக்குமூலம் முடிந்தவுடனே அங்கிருந்த ஜட்ஜி வக்கீல்கள் மற்ற ஜனங்கள் ஆகிய எல்லோர் மனதிலும் கொஞ்ச நெஞ்சம் மிகுதியாயிருந்த சந்தேகங்கள் யாவும் தீர்ந்து போயின. கருப்பாயியின் வாக்குமூலத்தில் ஓர் அக்ஷரங் கூடத் தவறில்லை என்றும், மதனகோபாலனே உண்மையான மாரமங்கலம் மைனர் என்றும், மற்றவன் அம்பட்டக் கருப்பாயிக் கும் கொறவனுக்கும் பிறந்தவள் என்றும், தனது ரகசியத்தை அவள் வெளியிட்டு விடுவாள் என்கிற பயத்தினாலோ, அல்லது, தானும் பாலாம்பாளும் சேர்ந்து கருப்பாயியை அடித்துக் கட்டி சமுத்திரத்தில் போட்ட விஷயத்தை அவள் வெளியிட்டு விடுவாள் என்ற பயத்தினாலோ மைனர் அவளைக் கொன்றது உண்மை என்றும், சகலமான ஜனங்களும் அபிப்பிராயப்பட்டனர்.

உடனே ஜட்ஜி பாரிஸ்டர் குரோட்டன் துரையை நோக்கி, "சர்க்கார் பக்கத்து சாட்சிகளின் விசாரணை தீர்ந்து போய்விட்டது. தாங்கள் குற்றவாளிகளிடத்தில் கலந்து பேசி, அவர்கள் சொல்லும் சமாதானங்களைக் கேட்டுக் கொண்டு, குறுக்கு விசாரணை செய்யலாம். அதன் பொருட்டு தங்களுக்கு அவகாசம் வேண்டு மானால், இந்த விசாரணையை நாளைய தினம் வரையில் நிறுத்தி வைப்பதன்றி, தாங்கள் கைதிகளோடு பேசுவதற்கும் வசதி செய்து கொடுக்கிறோம். ஒருதலைச் சார்பாக விசாரணை நடத்தப்பட்ட தென்ற பழிக்கு ஆளாக நாங்கள் ஒருநாளும் இடந்தரமாட்டோம்" என்று அன்பாகவும் மனப்பூர்வமாகவும் கூறினார். அந்தச் சமயத்தில் சிவஞான முதலியார் சடக்கென்று எழுந்து பாரிஸ்டர் குரோட்டன் துரையின் காதில் ரகசியமாக ஏதோ சில வார்த்தை களைச் சொல்ல, உடனே, பாரிஸ்டர் குரோட்டன் துரை எழுந்து நின்று சந்தோஷமாகப் புன்னகை செய்த முகத்தோடு ஜட்ஜிகளை நோக்கி, "வக்கீல்களும், பாரிஸ்டர்களும் கூலிக்காரர்களுக்குச் சமமானவர்கள் என்று சொல்வது அதிகமாகப் பொய்யாகாது. அவர்களை நியமிக்கிறவர்கள் என்ன வேலை செய்யச் சொல்லுகி றார்களோ அதைச் செய்ய அவர்கள் கடமைப் பட்டிருக்கிறார்கள். அதற்கு மேல் அதிகமாகச் செய்ய அவர்களுக்கு எவ்வித அதிகாரமு

மில்லை. நாங்கள் இந்தக் குற்றவாளிகளின் போஷகாகளால் நியமிக்கப்பட்டோம். அவர்கள் ஒரு விஷயம் சொல்லுகிறார்கள; அது எங்களுக்கு நியாயமாகவே தெரிகிறது. இறந்து போன மாரமங்கலம் பெரிய ஜெமீந்தார் எழுதிவைத்துள்ள உயிலின்படி போஷகர்கள் உண்மையான மைனருக்காக எவ்வளவு பணம் வேண்டுமானாலும் செலவு செய்ய அதிகாரம் பெற்றிருக்கிறார்கள்; இது வரையில் இந்த முதல் குற்றவாளி தான் உண்மையான மைனர் என்று நம்பி, அவரைத் தப்பவைக்கும் பொருட்டு ஏராளமான பணத்தை வாரி இறைத்தார்கள்; அவர் உண்மையான மைனரல்ல என ருஜுவாகி இருக்கிறதென்று அவர்கள் அபிப்பிரா யப் படுவதால், இனிமேல் அவர் பொருட்டு பணம் செலவழிக்கத் தங்களுக்கு எவ்வித அதிகாரமும் இல்லை என்று போஷகர்கள் சொல்லி விட்டார்கள்; ஆகையால் எங்களுக்குக் கூலியுமில்லை; வேலையுமில்லை. இந்த வழக்கில் எங்களுக்கு இனி எவ்விதச் சம்பந்தமுமில்லை. எனக்கு வேறொரு ஜட்ஜியின் கச்சேரியில் அவசரமான ஜோலி இருப்பதால், நான் உத்தரவு பெற்றுக் கொள்ளுகிறேன்" என்று கூறி ஜட்ஜி துரைக்கு வந்தனம் செய்து விட்டு, அந்த மண்டபத்தை விட்டு வெளியேறிவிட்டார்.

அந்த மகா விநோத சம்பவத்தைக் கண்ட யாவரும் முன்னிலும் பன்மடங்கு அதிக வியப்பும் திகைப்பும் அடைந்து அந்த அபூர்வமான வழக்கு எப்படித்தான் முடியுமோ என்று பேராவல் கொண்டு நின்றனர்.

உடனே ஜட்ஜி துரை மைனரை நோக்கி, "ஐயா! இப்போது சாட்சிகள் யாவரும் கொடுத்த வாக்குமூலங்களைக் கேட்டுக் கொண்டிருந்தீரே; நீர் இந்தக் கொலைக் குற்றத்தைச் செய்ததுண்டா இல்லையா?" என்றார்.

அப்போது மைனரது மனநிலைமை இன்னவிதமாகத் தான் இருக்கிறதென்பதை எழுதுவது மகா அசாத்தியமான காரியம். தான் கருப்பாயியின் மகன் என்று சொல்லப்பட்டதை அவள் ஆரம்பத்தில் பொருட்படுத்தாமல் இருந்தான் ஆகையால், தான் அவளைக் கொலை நியாயமில்லை என்று நம்பி ஜட்ஜி தன்னை விட்டுவிடுவார்கள் என்று மைனர் உறுதியாக நம்பி இருந்தான்.

கருப்பாயியின் வாக்குமூலத்தின் பிறகு, தான் உண்மையான மைனரல்ல என்ற நிச்சயம் அவனது மனதிலேயே உண்டாகி விட்டது. டாக்டர் கேசவலு நாயுடு, மைசூர் சின்னையா நாயுடு, மச்சத்தைப் பரீட்சித்த சர்ஜன் முதலியோர்களது வாக்குமூலங் களைக் கேட்ட பிறகு எல்லா விஷயங்களும் உண்மை என்பது அவனுக்கே தெளிவாகிவிட்டது. கடைசியாக பாரிஸ்டர் குரோட் டன் துரை பேசிவிட்டுப் போன பிறகு அவனது நாடி முற்றிலும் வீழ்ந்து போய்விட்டது. அந்த துரை முடிவு வரையில் இருந்து சாட்சிகள் எல்லோரையும் குறுக்கு விசாரணை செய்து, வாதாடி இருந்தாலாகிலும் தான் தப்பிப் பிழைக்கலாம் என்ற சொற்ப நம்பிக்கையாகிலும் இருக்கும். இப்போது தான் தப்புவதும் சந்தேகமாகத் தோன்றியது. தப்பி வந்தாலும், தன்னை மைனர் என்று தனது போஷகர்கள் ஒப்புக்கொள்ள மாட்டார்கள் என்பதும் நிச்சயமாகத் தெரிந்தது. ஆகையால் தான் இனி என்ன செயவ தென்பதைப் பற்றி அவனது மனம் பதறித் தவித்தது அதுகாறும் அபாரமான செல்வத்திலும் செல்வாக்கிலும் இருந்து சுகமநுபவித்து, எல்லோராலும் வணங்கப்பட்டிருந்த தான் கொலைகாரன் என்றும் அம்பட்டச்சிக்கும் கொறவனுக்கும் பிறந்த இருபிறப்பு ஜாதியான் எனறும் பெயரெடுத்துப் பரம தரித்திரனாய், உலகத்தில் இருப் பதைவிட, உயிரை விட்டுவிடுவதே நல்லதென அவனுக்குத் தோன்றியது. அவன் தான் செய்த தவறுகளை எல்லாம் அந்தச் சமயத்தில் மனதார உணர்ந்தான்; தனது சொந்தத் தாயையே தான் கொன்றுவிட்டதைப் பற்றி அவனது மனம் வருந்தியது. அவனது மனம் புண்பட்டு இரத்தம் சிந்தியது. கேவலம் கீழ்ச்சாதியில் பிறந்த தன்னை, ஐசுவரியலக்ஷ்மி மகா உன்னதமான பதவியில் வைக்க, அதை வகித்துக்கொள்ள மாட்டாமல், தான் தனது அதம குணங் களினால் கேவலம் இழிந்த நடத்தைகளை மேற்கொண்டு தானே தன்னைத் தனது பழைய நிலைமைக்குக் கொண்டு வந்ததன்றி, தனது உயிருக்கே சேதம் வரக்கூடிய மகாபயங்கரமான ஸ்திதிக்குத் தான் வந்துவிட்டதை நினைத்து நினைத்து அவன் கரைகடந்த துயரமும் வேதனையும் அடைந்து தத்தளித்து இரண்டொரு நிமிஷ நேரம் யோசித்தான். தனது தாயைத் தான் கொன்ற குற்றமே தன்னை அடித்துவிட்டதென்ற எண்ணம் தோன்றியது. இனிதான

இருப்பதைவிட இறப்பதே நன்மையானதென்று அவன் உறுதி செய்து கொண்டு ஜட்ஜியை நோக்கி, "ஜட்ஜி துரைகளே! நான் இந்தக் குற்றத்தைச் செய்தது வாஸ்தவந்தான். சாட்சிகள் சொன்ன தெல்லாம் நிஜமான சங்கதிகளே" என்று மிகவும் விசனத்தோடு கலங்கிக் கூறினான்.

அவனது பரிதாபகரமான நிலைமையைக் கண்ட ஜனங்களினது கண்களில் கண்ணீர் மளமளவென்று உதிர்ந்தது. "ஐயோ பாவம்!" என்று சிலர் தமது அநுதாபத்தை வெளியிட்டனர். அப்போது ஜட்ஜி மறுபடியும் மைனரைப் பார்த்து மிகுந்த அநுதாபமும், இரக்கமும் தோன்ற, "ஐயா! இதை விளையாட்டாக நினைத்துப் பேசாதீர். இப்படி ஒப்புக் கொள்வதால், உமக்கு எப்படிப்பட்ட தண்டனை பலிதமாகும் என்பதை நீர் எண்ணி உண்மையாகப் பேசும்; பயந்து கொண்டு உளறவேண்டாம். நீர் இந்தக் குற்றத்தை உண்மையில் செய்யாமலிருந்தால் செய்யவில்லை என்று சொல்லும். உமக்கு சாட்சிகளிருந்தால் அவர்களுடைய ஜாப்தா ஒனறு கொடும. அவர்களை நாங்கள் வருவித்து விசாரித்து அதன் பிறகு முடிவு செய்கிறோம. உமக்கு வக்கீல் சக்தியில்லாவிட்டால், சர்க்கார் செலவில் நாங்கள உம்முடைய பக்கத்தில் பேச ஒரு வக்கீல் அமர்த்துகிறோம்" எனறு மிகவும் அன்பாகவும் விசனமாக வும் கூறினார். மைனர் அப்போதும் பிடிவாதமாகப் பேசத் தொடங்கி, "இல்லை இல்லை. நானே அவளை உண்மையில் கொன்றவன். எனக்கு சாட்சிகள் ஒருவருமில்லை. கொலைக் குற்றம் செய்தவனுக்கு மரண தண்டனை கிடைக்கும் என்பதை அறிந்தே நான் பேசுகிறேன்" என்று அழுத்தமாகக் கூறினான்.

அதைக் கேட்ட ஜட்ஜி, மைனருக்குப் பக்கத்தில் தத்தளித்துத் திருட்டு விழிவிழித்து மகாசங்கடமான நிலைமையில் நின்ற பாலாம் பாளை நோக்கி, "ஏ பெண்ணே! நீ என்ன சொல்லுகிறாய்? நீயம் இந்த மனிதரும் சேர்ந்து கருப்பாயியை அடித்து வதைத்துக் கட்டி சமுத்திரத்தில் போட்டது கொலை செய்ய முயற்சித்த குற்றமாகிறது. அதை நீ செய்ததுண்டா இல்லையா?" என்றார்.

பாலாம்பாள், "நான் எவ்விதக் குற்றமும் செய்யவில்லை" என்று உடனே கூறினாள். ஜடஜி, "உனக்கு சாட்சிகள் யாராவது இருந்தால் அவர்களுடைய விலாசத்தைச் சொல்" என்றார்.

பாலாம்பாள், "இந்த மைனர் தான் எனக்கு சாட்சி" என்றாள்.

உடனே மைனர் ஜட்ஜியை நோக்கி, "ஆம்; இவளுக்கு நான் தான் சாட்சி; இவளும் என்னோடுகூட இருந்து என்னுடைய தாயை அடித்துச் சித்திரவதை செய்தாள். நாங்கள் இருவரும் சேர்ந்து தான் அவளைக் கட்டி, தூக்கிக் கொண்டு போய் சமுத்திரத் தில் போட்டோம்" என்றான்.

அதைக் கேட்ட ஜட்ஜியும் மற்றவர்களும் இரக்கமாக நகைத்தனர். உடனே ஜட்ஜி மறுபடியும் பாலாம்பாளை நோக்கி, "பெண்ணே! உனக்கு இவ்வளவு அநுகூலமாக வாக்குமூலம் கொடுக்கும் இந்த மனிதரையா நீ சாட்சியாகக் கோரப் போகிறாய்? இவரைத் தவிர வேறே சாட்சிகள் இல்லையா" என்றார்.

பாலாம்பாள், "வேறே சாட்சிகளில்லை. நான் தான் சாட்சி" என்றாள். அவ்வளவோடு அநத மகா புதுமையான வழக்கின் விசாரணை முடிவு பெற்றது. உடனே சர்க்கார் வக்கீல் எழுந்து நின்று பாரிஸ்டர் குரோட்டன் துரை குறுக்கு விசாரணை செய்த சில சாட்சிகளை எல்லாம் ஒருவர் பின்னொருவராக வரவழைத்து புனர்விசாரணை செய்த பிறகு, மிகவும் ஆடம்பரமாக வாதாடித் தமது கட்சியின் சாட்சிகள் ருஜுப்படுத்திய விஷயங்களை எல்லாம் எடுத்துக் காட்டி எல்லா அம்சங்களைப் பற்றியும் விஸ்தாரமாக விரித்துப் பேசி முடித்தார். அவரது வாதத்தில் சாட்சிகள் சொன்ன விஷயங்களை எல்லாம் திரும்பவும் சொல்ல வேண்டி வருமாதலாலும், ஜட்ஜியின் தீர்மானத்திலும் எல்லா விஷயங் களும் வருகின்றனவாதலாலும், அவரது வாதத்தை எல்லாம் அப்படியே சொல்வது மிகையாதலன்றி வாசகர்களுக்கும் துன்பகரமாக இருக்குமென எண்ணி, அதை விவரிக்காமல் விடுகிறோம்; சர்க்கார் வக்கீல் தமது வாதத்தை முடித்துக் கீழே உட்கார்ந்தவுடன், ஜட்ஜி ஜூரிமார்களை நோக்கி, "உங்களுடைய அபிப்பிராயமென்ன? கைதிகள் குற்றவாளிகளா அல்லவா?" என்றாா. அவர்கள் தங்களுக்குள் அரை நாழிகை நேரம் வரையில் யோசனை செய்து, "கைதிகள் குற்றவாளிகளே" என்று கூறினர்.

உடனே ஜட்ஜி யோசனை செய்து தமது தீர்மானத்தை எழுதி முடித்தார். அதன் சாரம்சம் அடியில் வருமாறு:-

நாம் இதுவரையில் எத்தனையோ வேடிக்கையான வழக்கு களைப் பரிசீலனை செய்திருக்கிறோம் ஆனாலும், அவைகள் எல்லாவற்றிலும் இது மிகவும் அபூர்வமானதாக இருக்கிறது; இந்த விசாரணையில் எதிர்பாராத புதிய விஷயங்கள் எல்லாம் வெளியா யின. முதற் குற்றவாளியின் கட்சியிலிருந்து மகா திறமை யோடு வாதித்த பாரிஸ்டர் குரோட்டன் துரை இந்த விசாரணையின் முடிவு வரையில் இருந்திருப்பாரானால், அவரது விசேஷ புத்தியின் பலன் நமக்குப் பரிபூரணமாகக் கிடைத்திருக்கும். அவர் இந்த வழக்கி லிருந்து இடையில் விலகிககொளள நேர்ந்தது நிரம்பவும் விசனிக்கக் கூடிய சமபவம்; இருந்தாலும், அவர் எடுத்துக்காட்டிய முக்கிய மான ஓர் ஆட்சேபத்துக்கு நாம் சமாதானம் சொல்லக் கடமைப் பட்டிருக்கிறோம். மாரமங்கலம் சமஸ்தானாதிபதியின் உண்மை யான பிள்ளை யார் என்பதை இப்போது விசாரிப்பதற்கு இந்தக் கோர்ட்டாருக்கு அதிகாரமில்லை என்பதையும், அது சிவில் சம்பந்தமான விஷயம் என்பதையும் நாம் ஒப்புக் கொள்ளு கிறோம்; யார் உண்மையான வார்சுதார் என்ற விஷயத்தை நாம் இப்போது முடிவு கட்டி அந்தப்படி சமஸ்தானத்தின் சன்னத்தை அவர் பேருக்கு மாற்ற நமக்கு அதிகாரமில்லை என்பதையும் நாம் ஒப்புக் கொள்ளுகிறோம். அந்த அதிகாரம் ஜில்லா கலெக்டரைச் சேர்ந்த தென்பது நமக்குத் தெரியாத விஷயமல்ல. இருந்தாலும், நாம் இந்த வாாசு விஷயத்தை எதற்காகப் பரிசீலனை செய்ய நேர்ந்த தென்றால், இநத மைனர் அவருக்கு எவ்விதச் சம்பந்தமு மில்லாத எவளோ ஒரு கிழவியைக் கொன்றுவிட்டார் என்றால், அதற்கு அர்த்தமில்லாமல் போகிறதன்றி, அவர் பைத்தியம் பிடித்த வராக இருந்தாலன்றி, அப்படிச் செய்ய நியாயமில்லையென நினைக்கக் கூடியதாக இருக்கிறது. அந்தக் கிழவியை இவர் ஏதோ ஓர் உள்கருத்தோடு தான் கொன்றிருக்கிறார் என்பதையும், அதனால் அவருக்கு என்ன அநுகூலம் ஏற்படுவதைக் கருதி அப்படிக் கொன்றார் என்பதையும், சர்க்கார் கட்சியார் ருஜுப்படுத் தாவிட்டால, இவர் பேரில கொலைக்குற்றம் சுமத்த சட்டம் இடங் கொடுககாது. ஆகவே, இவருக்கும் அவளுக்கும் உள்ள சந்பந்தமோ, உறவு முறைமையோ, அல்லது வேறுவிதத் தகராறோ என்ன என்பதை சர்க்கார் கட்சியார் முன்னாக

ருஜுப்படுத்தியே தீர வேண்டும். கருப்பாயி இவர்களுடைய பங்களாவின் தென்னஞ் சோலையில் ஒளிந்திருக்க, இவர்கள் அவளைக் கண்டுபிடித்து அடித்துச் சித்திரவதை செய்த சமயத்தில், தான் இவருடைய தாய் என்பதை அவள் வெளியிட்டவுடனே, இவர்கள் அதிக உக்கிரமாக அவளை அடித்துக் கீழே வீழ்த்திக் கைகால்களை எல்லாம் கட்டி சமுத்திரத்தில் எறிந்துவிட்டார்கள்; இவர்கள் அவளை அவ்வளவு கொடூரமாக நடத்தி அப்படிப்பட்ட கொலை செய்வதற்கு, அவள் இவருடைய தாய் என்பதை வெளியிட்டதே காரணமாக இருக்க வேண்டுமன்றி, அவள் முதல் நாள் ரிஜிஸ்டரான பத்திரத்தை எடுத்துக் கொண்டு போனதையும், மறுநாள் வந்து ஏதோ உத்தே சத்தோடு ஒளிந்திருந்ததையும் எண்ணி இவர்கள் அவ்வளவு கொடிய கொலையைச் செய்திருப் பார்கள் என்று நினைக்க முடியாது. ஒரு கிழவி சமுத்திரத்திலிருந்து எடுக்கப்படடு கிருஷ்ணாபுரம் ஜெமீந்தாருடைய பங்களாவில் இருக்கிறாள் என்ற விஷயம், அதற்கு சமீபத்திலுள்ள இவர் களுடைய பங்களாவுககு எட்டியே இருக்க வேண்டும். மறுநாள் இவர்கள் அதை கேட்டிருப்பாாகள். அதன் பிறகு இவர்களுக்கு பயமுண்டாகிவிட்டது. தாங்கள் அவளைக் கொல்ல முயன்றோம் என்பதை அவள் வெளியிடுவாள் என்ற பயமும, அவள தும்முடைய தாய் என்பதையும் அவள் அவசியம் வெளிப்படுத்து வாள் என்ற பயமும் உண்டாக, அதனாலே தான் இந்த மைனர் மறுநாள் மாலையில் கிருஷ்ணா புரத்து ஜெமீந்தாருடைய பூஞ்சோலையில் மறைந்திருந்து, அவள் முக்கியமான ரகசியத்தை வெளியிடப் போகும் சமயத்தில் அவளைக் குத்தினார் என்பது பகிஷ்காரமாகத் தெரிகிறது. அதுவும் தவிர, இறந்து போன கிழவி தனது வாக்குமூலத்தில், தான் இவருடைய தாய் என்றும், அதை வெளியிட்டதன் மேலே தான் தன்னை இவர்கள் கொன்றார்கள் என்றும் கூறியிருக்கிறாள். ஆகையால் அவள் தாய், இவர் பிளளை என்பது எவ்வளவு தூரம் உண்மையானது என்பதையும, அந்தக காரணத்தைக் கொண்டே இவர் இந்தக் கொலையைச் செய்திருப் பாரா என்பதையும் கோர்ட்டார் பரிசீலனை செய்வது கட்டாய மான பொறுப்பாகிவிட்டது.

கருப்பாயியின் பிள்ளையான இவர் கல்யாணியம்மாளுக்கு எப்படிப் பிள்ளையானார் என்பதை விளக்குவதற்குக் கல்யாணியம்மாளுடைய உண்மையான பிள்ளை எப்படி மறைந்து போனார் என்பதும், அதைக் கருப்பாயி எப்படி அறிந்து கொண்டு தன் மகனைக் கொணர்ந்து கொடுத்தாள் என்பதும் அவசியமாகத் தெரிய வேண்டிய விஷயங்கள். ஆகையால், இந்த மைனர் அவளை என்ன கருததோடு கொன்றார் என்பதற்கு, மாரமங்கலம் சமஸ்தானாதிபதியின் உண்மையான மைனர் காணாமற் போனது முதல், இவர் வேஷதாரி மைனராக்கப்பட்டது வரையில் உள்ள விஷயங்கள் யாவும் இந்தக் கோர்ட்டாருக்குத் தெரிய வேண்டிய முககியமான அம்சங்களாகிவிட்டன. ஆகவே, அதற்கும் இதற்கும் நெருக்கமான சம்பந்தம் இருககிறதென்று நாங்கள் அபிப்பிராயப் படுகிறோம்.

சுருங்கச் சொல்லுமிடத்து, இவர்கள் இருவரும் முதல் நாளைய சாயுங்காலம அவளைக் கொல்ல முயன்ற குற்றத்தைச் செய்திருக் கிறாாகள்; மறுநாள் சாயுங்காலம் முதல் குற்றவாளி கிழவியைக் கொலை செய்த குற்றம செய்திருக்கிறார். இந்த விஷயம் சாட்சி களால் ருஜுவாகி இருககிறது. பாரிஸ்டர் குரோட்டன் துரை சாட்சி களைக் குறுக்கு விசாரணை செய்தததில், அவர்களுடைய வாக்கு மூலத்துக்கு மதிப்பில்லாமல் செய்ய அவர் முயற்சித்திருக்கிறார். ஆனால், அவர் யாருக்காகப் பரிந்து பேசினாரோ அவரே குற்றத்தை ஒப்புக் கொண்டுவிட்டார் ஆகையால், பாரிஸ்டர் குரோட்டனுடைய விசாரணைகள் யாவும் பயனற்றுப் போய் விட்டன. ஆகையால் கொலை செய்த குற்றத்துக்காக சட்டப்படி ஏற்பட்டுளள பூரணமான தண்டனையை முதற் குற்றவாளிக்கும, கொலை செய்ய முயற்சித்த குற்றத்துக்கு ஏற்பட்ட தண்டனையை இரண்டாவது குற்றவாளிக்கும் செய்து வைக்க நாம் கடமைப்பட்ட வர்களாகி விட்டோம். ஆனால், நமது தீர்மானத்தை முடிக்கும் முன், இந்த வழக்கில் வெளியான ஒரு முக்கியமான விஷயத்திலும் நம்முடைய அபிப்பிராயத்தை வெளியிட வேண்டியிருக்கிறது. கல்யாணியம்மாளுடைய உண்மையான பிள்ளை மதனகோபாலன் என்பதும், அவர் இத்தனை வருஷ காலமாகத் தம்முடைய சொத்து

சுதந்தரங்களை எல்லாம் அனுபவிக்கமாட்டாமல் இருந்து வந்தார் என்பதும், இந்த முதல் குற்றவாளியான கருப்பாயியின் குமாரர் இத்தனை வருஷகாலம் அக்கிரமமாக மைனரின் ஸ்தானத்தில் இருந்து வந்திருக்கிறார் என்பதும், ஆனால் கல்யாணியம்மாள அந்த விஷயத்தில் கருப்பாயி பொன்னம்மாள் ஆகிய இருவர்களா லும் ஏமாற்றப்பட்டுப் போனார் என்பதும் சந்தேகமற ருஜுவாகி இருக்கின்றன. அந்த சமஸ்தானத்தின் சன்னத்தை மதனகோபாலன் என்பவர் பேரில் மாற்றுவதற்கு ஜில்லா கலெக்டர் துரை கடமைப் பட்டவர் ஆதலால், அவர் அவ்வாறு உடனே மாற்றுவது சட்ட சம்மதம் என்பதை நாம் அவருக்குச் சிபார்சு செய்கிறோம். ஆனால், கல்யாணியம்மாள பல வருஷங்கள் வரையில முதல குற்றவாளியே தமது பிள்ளை என்று மதித்து வந்து, பிறகு உண்மையை அறிந்து கொண்டிருக்கிறார். ஆனால அப்படிப பட்ட நிலைமையில், எந்த மனிதரானாலும், தாம் அதுகாறும செய்து வந்தது பெருத்த தவறென்பதை பகிறங்கப்படுத்த மாட்டார்கள். ஆகையால், அதற்குப் பின்னாலும் அநத அம்மாள் இந்த ரகசியத்தை மறைத்து வைத்தது மன்னிக்கத்தக்க குற்றம் என்று நாம் அபிப்பிராயப்படுகிறோம். வேலைக்காரியான பொன்னம்மாளே இந்த மோசக்கருத்து நடப்பதற்கு மூலாதாரமான வளாக இருந்தாலும், அவள் தனது எஜமானியம்மாள் மீது வைத்த அளவிறந்த அபிமானத்தினால் அப்படிச் செய்தாளேயன்றி, தனது சொந்த லாபத்தை உத்தேசித்து அப்படிச் செய்ததாகத் தோன்ற வில்லை. அவள் அப்படிச் செய்தது சட்டப்படி குற்றமாகு மானால், போலீசார் அவள் மீது பிரத்தியேகமான ஒரு வழக்கை நடத்த இதன் மூலமாக அநுமதிக்கப்படுகிறார்கள். இது நிற்க, இனி நாம் இந்தக் குற்றவாளிகளுக்கு இன்னின்ன தண்டனை என்று சொல்வ தொன்றே மிஞ்சி நிற்கிறது, சட்டத்தைக் கண்டிப்பாக நிறைவேற்றுவதானால், குற்றவாளிக்கு மரண தண்டனையே உரியதாகும்; இவர் இத்தனை வருஷ காலம் மைனராக இருந்தது இவருடைய குற்றமல்ல. பிறருடைய மோசத்தினால் இவர் அப்படி இருக்க நேர்ந்தது. அப்படிப்பட்ட பெருத்த பதவிக்கு தான் இயற்கையிலேயே உரியவர் என்று இவர் நினைத்திருக்க, அந்தக கிழவி திடீரென்று தோன்றி இவா தனனுடைய பிள்ளை எனறால,

இவருக்கு அவள் மீது பெருத்த ஆக்கிரோஷமும் பகைமையும் கடுங்கோபமும் உண்டாவது மனித இயற்கைதான். அதோடு இந்தக் குற்றத்தைச் செய்ததாக இவரே ஒப்புக் கொண்டிருப்பதை யும், இவர் அறியாத சிறிய பிள்ளை என்பதையும் கருதி, இவருடைய விஷயத்தில் காருண்யம் பாராட்டி இவரை நாம் தீவாந்தர சிக்ஷைக்கு ஆளாக்கி இருக்கிறோம். கிழவியைக் கொலை செய்ய முயற்சித்த குற்றத்துக்காக பாலாம்பாளுக்கு இரண்டு வருஷக் கடினகாவல் சிக்ஷை விதித்திருக்கிறோம் – என்று எழுதப் பட்டிருந்த தீர்மானம் படிக்கப்பட்டது.

உடனே ஜெவான்கள் குற்றவாளிகளை அழைத்துக் கொண்டு போக முயல, போலி மைனர் பெருத்த கூச்சலிட்டு முரண்டி ஜட்ஜியை நோக்கி, "ஐயா! எனக்கு தீவாந்தர சிக்ஷை வேண்டாம். எனக்கு மரண தண்டனையே கொடுத்து விடுங்கள்; நான் இனி மேல் உயிரோடிருக்க மாட்டேன. எப்படியும் நீங்கள் என்னைக் கொன்றே தீரவேண்டும்; கிழவியைக் கொன்றதாக நானே ஒப்புக் கொள்ளுகிறேன். அப்படி இருக்க, என்னைக் கொன்றுவிட வேண்டுமேயன்றி எனக்குக் கருணை காட்ட உங்களுக்கு அதிகாரம் ஏது?" என்று கூறிக் கூச்சலிட்டான். பாலாம்பாள், "ஐயா தொரைகளே! நான் இந்தக் குற்றத்தையே செய்யவில்லை. இந்த மைனர் தான் அடித்துக் கொன்றான். நான் பக்கத்திலிருந்து பார்த்துக் கொணடிருந்தேன். என்னை அநியாயமாகத் தண்டிக்கிறீர் களே; நான் ஜெயிலுக்கு வரமாட்டேன்" என்று கூக்குரலிட்டுப் பிரலாபிக்கத் தொடங்கினாள். ஜட்ஜி துரை ஜெவான்களைப் பார்த்து அவர்களைக் கொண்டு போகும்படி சைகை செய்ய அவர்கள் கைதிகள் இருவரையும் தொட்டு பலவந்தமாக இழுத்துக் கொண்டு போயினர். ஜடஜியும் உடனே தமது ஆசனத்தை விட்டு எழுந்து சென்றார்.

அதே சமயத்தில் கிருஷ்ணாபுரம் ஜெமீந்தார் ஓடோடியும் வந்து, மதனகோபாலனைக் கட்டியணைத்து ஆனந்தக் கண்ணீர் சொரிந்து, "அப்பா! குழந்தாய! சத்தியம் எப்படியும் வெல்லும் என்பது நிஜமாகிவிட்டது! பங்காளியின் சதிமோசத்தினால் நீ உனக்குச் சொந்தமான உன்னத பதவியிலிருந்து விலகியிருக்க

நேர்ந்தாலும், உன்னுடைய யோக்கியதைக்குத் தகுந்த இன்னொரு பெரிய இடத்துக்கே நீ வந்து சேர்ந்தது ஈசுவர கிருபையினால் என்றே நினைக்கிறேன். மாணிக்கக்கட்டி எங்கே போனாலும, அதற்குப் பூஜிதையே ஏற்படுமல்லவா? அதுபோலவே, உனக்கும் ஏற்பட்டது. குழந்தாய்! இவ்வளவு காலம் வரையில் இராமர் வனவாசம் செய்தது போல உன்னுடைய கிரகச்சாரத்தினால், நீ உன் தாயையும், தங்கைமார்களையும், சகலமான சம்பந்துகளை யும் விட்டிருக்க நேர்ந்தாலும், இப்போதாவது, உன்னுடைய பிறப்புரிமைகளை நீ திரும்ப அடைவதற்கு ஈசுவரன் கிருபை செய்ததைப் பற்றி நான் அடையும் ஆனந்தத்தை என்ன வென்று வெளியிடுவேன்! ஆகா! என்னுடைய தேகம் பூரித்துப் புளகாங்கிதமடைகிறது! கண்ணே! நீ சகலமான செல்வத்துடனும் வைபோகமாக நீடூழிகாலம் வாழ வேண்டும் என்று நான் ஜெகதீச னைப் பிரார்த்திக்கிறேன்" என்று கூறி ஆனந்தசாகரத்தில் ஆழ்ந்து நெக்குநெக் குருகி அவனை மனமார்ந்த ஆசையோடு இன்னொரு முறை கட்டித் தழுவ, அந்தச் சமயத்தில் மதனகோபாலன அது பொய்யோ மெய்யோ கனவோ நினைவோ என்ற சந்தேகத்தினால வதைபட்ட மனத்தினனாய், ஆனந்த மேலீட்டால் வாய் திறந்து பேசவும் மாட்டாமல் தத்தளித்து சுவர்க்க போகம் அனுபவிப் பவன் போல, இன்பசுகத்தில் அழுந்தி மிதந்தவனாய் அவரை நோக்கி, "தங்களைப் போனற பெரியவர்களுடைய ஆசீர்வாதமும் கிருபையும் என்மேல் பரிபூரணமாக இருக்க, எனக்கு என்ன குறை இருக்கப் போகிறது! இது வரையில் நான் மனிதனானதும், இப்போது நான் இந்தப் புதிய செல்வத்தையும் பதவியையும் அடைவதும் எல்லாம் நாங்கள் கொடுத்த பிச்சையே யொழிய வேறல்ல" என்று மிகவும் உருக்கமாகவும் மனப்பூர்வமான பய பக்தியோடும் கூறினான். அப்போது கச்சேரியிலிருந்த ஜனக் கும்பல் முழுதும், கல்லும் கரைந்துருகத் தக்கதாக இருந்த அந்தக் காட்சியைக் கண்டு, ஆனந்த பாஷ்பம் சொரிந்தவர்களாய் சமீபத்தில் வந்து மதனகோபாலனது அழகை நோக்கும் பொருட்டு ஒருவர் மீதொருவர் வீழ்ந்து மோதியடித்துக் கொண்டு முந்தினார் கள். அந்தச் சமயத்தில், "விலகுங்கள்; விலகுங்கள்" என்று கூறிய வண்ணம் வழிசெய்து கொண்டு வக்கீல் சிவஞான முதலியார்

மதனகோபாலனண்டையில் வந்து கைகுவிதுது அவனுக்கு நமஸ்காரம் செய்து, "ஏதோ இதுவரையில் காலவித்தியாசத்தினால், தாங்கள் தங்களுடைய சொந்த ஸ்தானத்தை விட்டு வேறே இடத்தில் இருக்க நேர்ந்தாலும், இப்போதாவது தாங்கள் எங்களிடம் திரும்பி வந்து சேருவது எங்களுக்கு நிரம்பவும் சந்தோஷமாக இருக்கிறது! நான் தங்களுடைய போஷகர்களுள் ஒருவனாகிய வக்கீல் சிவஞான முதலியார என்பது தங்களுக்குத் தெரிந்திருக்கலாம்" என்று அன்பாகவும் மரியாதையாகவும் கூறினார். அப்போதே கிருஷ்ணாபுரம் ஜெமீந்தாரது ஆலிங்கனத்திலிருந்து விடுபட்ட மதனகோபாலன் மிகுந்த பதைப்பும் ஆவலும் கொண்டவனாய் சிவஞான முதலியாரைப் பார்த்து, "ஐயா! என்னுடைய தாயார் எங்கே இருக்கிறார்கள்? அவர்களைப் பார்க்கவும் அவர்களோடு பேசவும் என்னுடைய மனம் துடிக்கிறது; தேகம் பறக்கிறது; அவர்களை அதிசீக்கிரத்தில் பார்க்காவிட்டால் நான் மயங்கிக் கீழே விழுந்து விடுவேன் போல இருக்கிறது. ஒரே நிமிஷத்தில் என்னை நீங்கள் என்னுடைய தாயாரின் சன்னிதானத்தில் கொண்டு போய்ச் சேர்க்க வேண்டும்" என்று கூறுவதற்குள் ஆவேசத்தினாலும், மன வெழுச்சியினாலும் அவனது வாய் குழறிப் போய்விட்டது. கைகாலகள் எல்லாம் முறுக்கல் கொள்ளுகின்றன. தேகம் தள்ளாடுகிறது. அவனது பரிதாபகரமான நிலைமையைக் கண்ட எல்லோரும் இன்பமும் துன்பமும அபாரமாகப் பெருகி எழுந்த உள்ளத்தினராய் பொங்கிப் பொருமினா. அவனும, கல்யாணியம்மாளும் சந்தித்துப் பேசும் மகா உருக்கமான சந்தோஷக் காட்சியைத் தாங்களும் காண வேண்டும் என்றெண்ணி பொதுஜனங்களும் அவர்களோடு கூடப் போகலாயினர். அந்தச் சமயத்தில் சிவஞான முதலியார் மதன கோபாலனை நோக்கி, "ஐயா! தஙகளுடைய தாயார் அதிக தூரத்தில் இல்லை. இதோ கச்சேரிக் கெதிரில் தம்புசெட்டித் தெருவில் உள்ள இரண்டாவது வீட்டில் வநதிருக்கிறார்கள். அவர்களுக்கு இங்கே நடந்த வர்த்தமானங்கள் எல்லாம் சுருக்கெழுத்து மூலமாக எட்டி இருக்கும் அவர்களும் தங்களைப் பார்க்க ஆவல் கொண்டிருப்பார்கள். வாருங்கள் போவோம" எனறு அவசரமாகக் கூற, மதனகோபாலன் தனது ஆவலினால் மெய்ம்மறந்தவனாய் ஓட்டமாகப் பாய்ந்து பாய்ந்து நடககலானான். சிவஞான முதலியார் மதன

கோபாலன் கிருஷ்ணாபுரம் ஜெமீந்தார் ஆகிய மூவரும் முதலில் செல்ல, அவர்களைச் சேர்ந்த சுற்றத்தினரும், தொடர்பினரும், பொது ஜனங்களுமான சுமார் ஐந்நூறு மனிதர்கள் பின்னால் தொடர்ந்து வந்தனர். அப்போது மதனகோபாலனது மனமும் தேகமும் ஆகாயத்தில் பறந்தனவென்று சொல்வதே பொருத்த மாகும். தனது தாயை எப்போது பார்க்கக் கிடைக்கும் என்ற ஆவல் மின்சார சக்தி போல அவனைப் பிடித்து மிகமிக விசையாகத் தள்ளிக் கொண்டே போனது. இரண்டு நிமிஷ நேரத்தில் எல்லோரும் தம்புசெட்டித் தெருவிலிருந்த அந்த ஜாகையை அடைந்தனர்.

★ ★ ★

33—வது அதிகாரம்

## அன்பிற்குமுண்டோ அடைக்கும்தாழ்

அந்த ஜாகையின் வாசல் திண்ணையில் வேலைக்காரர்களும் சுருக்கெழுத்து குமாஸ்தாவும் உட்கார்ந்திருந்தனர். இரண்டு சோடாப்புட்டிகள் திண்ணையில் இருந்தன. டாக்டா கேசவலு நாயுடுவின் வாக்குமூலம் முதல் ஜட்ஜியினது தீர்மானம் வரையில் உள்ள விவரங்கள் எல்லாம் அடங்கிய சுருக்கெழுத்துக் காகிதங்கள யாவும் குமாஸ்தா தமது கையில் வைத்துக் கொண்டிருந்தார். சிவஞான முதலியார் முதலிய சகலமான ஜனங்களும் அங்கே வந்ததைக் கண்ட சுருக்கெழுத்து குமாஸ்தாவும் வேலைககாரர் களும் எழுந்து வணக்கமாக நிற்க, உடனே சிவஞான முதலியார் குமாஸ்தாவை நோக்கி, "எஜமானியம்மாள் என்ன செய்கிறார்கள்? உள்ளே இருக்கிறார்களா?" என்று மிகுந்த ஆவலோடு கேட்க, உடனே மேற்படி குமாஸ்தா, "எஜமானியம்மாள் உள்ளே தான இருக்கிறார்கள். அவர்களுக்கு மயக்கம் வருகிறதென்று இரண்டு சோடாப்புட்டிகள் வாங்கிக் கொண்டு வரும்படி என்னை அனுப்பி னார்கள். நான் கடைக்குப் போய் புட்டிகளை வாங்கிக் கொண்டு வந்து பார்த்தேன், மெத்தையின் கதவு மூடி உட்புறத்தில் தாளிடப் பட்டிருக்கிறது. ஒருவேளை படுத்துத் தூங்குகிறார்களோ என்னவோ ஒன்றும் தெரியவில்லை. சுமார் இரண்டு நாழிகை

நேரமாக நான் இங்கேயிருந்து அடிக்கடி மேலே போய் கதவை அழுததிப் பார்த்துவிட்டு வருகிறேன்" என்றார்.

அதைக் கேட்ட சிவஞான முதலியார் மிகவும் வியப்படைந்து, "அப்படியானால், நாங்கள் அனுப்பிய விசாரணை விவரக் காகிதங் களை எல்லாம் நீர் அவர்களுக்குப் படித்துக் காட்டவில்லையா?" என்றார். சுருக்கெழுத்து குமாஸ்தா, "கருப்பாயியின் மரணாந்த வாக்குமூலத்தை நான் படித்த வரையில் அவர்கள் நல்ல நிலைமை யிலே தான் இருந்தாாகள. அந்த வாக்குமூலத்தைப் படித்தவுடன், அவர்கள் பைத்தியங் கொண்டவர் போல மாறிவிட்டார்கள்; எழுந்து அங்குமிங்கும் போய்த் தடுமாறித் தவித்தார்கள்; உடனே நாற்காலியில் படுத்துத் தமக்கு மயக்கம் வருகிறதென்றும், இரண்டு சோடாப்புட்டிகள் வாங்கிக் கொண்டு வரும்படியும் சொல்லி என்னைக் கீழே அனுப்பினார்கள. நான் கீழே வந்து சோடாப்புட்டீ களோடு போய்ப் பாாக்கிறேன். மேன்மாடத்தின் கதவு உட்புறத்தில் தாளிடப்பட்டிருக்கிறது; அதுமுதல் கதவு திறக்கப்படவே இல்லை" என்றார்.

அந்த வரலாற்றைக் கேடட சிவஞான முதலியார், மதனகோபா லன், கிருஷ்ணாபுரம ஜெமீந்தார் முதலிய எல்லோரும் பலவித சந்தேகமும் கவலையும் கொள்ளலாயினர். உடனே கிருஷ்ணாபுரம் சுருக்கெழுத்து குமாஸ்தாவை நோக்கி, "உள்ளே அவர்களைத் தவிர வேறே தாதிகள் யாராவது இருக்கிறார்களா?" என்றார்.

சுருகசெழுத்து குமாஸ்தா, "வேறே யாருமில்லை. அவர்களும் நானுமே தனியாக இருநதோம்" என்றார்.

கிருஷ்ணாபுரம் ஜெமீந்தார், "அப்படியானால், இது சந்தேகாஸ் பதமாகத் தான் இருக்கிறது. உண்மையாக அவர்களுக்கு மயக்கம் வந்திருந்தால், அந்த நிலைமையில் அவர்கள் தாமிருந்த இடத்தை விட்டுக் கதவு வரையில் வர முடிந்திருக்காது; அப்படி முடிந்திருந் தாலும், கதவை உட்புறத்தில் தாளிட எவ்வித முகாந்திரமுமில்லை. இப்படிப்பட்ட ஆபத்தான விசாரணை சமயத்தில் பட்டப்பகலில் அவர்களுக்குத் தூக்கம் வந்திருக்கும் என்று நினைக்கவும் முடியாது. அவர்கள சுயஉணர்வோடு இருந்திருப்பார்களானால், இந்த

விசாரணையின் மிகுதி விபரங்களை அறிந்து கொள்ளாமல் இரண்டு நாழிகை நேரமாகக் கதவை மூடிக் கொண்டு படுத்திருக்க மாட்டார்கள். ஆகையால், உள்ளே ஏதோ விபரீதம் நடந்திருக்கிற தென்றே நினைக்க வேண்டி இருக்கிறது. கதவை மூடித் தாளிட்டுக் கொண்டு ஒருவேளை விஷத்தைக் கிஷத்தைத் தின்றிருப்பார்களோ என்ற சந்தேகம் உண்டாகிறது" என்றார்.

அதைக் கேட்ட மதனகோபாலன் திடுக்கிட்டு மிகுந்த பதைப்பும், கலக்கமும், ஆவலும் அடைந்து, "ஐயோ! என்னுடைய அம்மாளை நான் உயிரோடு பார்க்கப் போகிறேனா! ஈசுவரா! என் விஷயத்தில் இதுவரையில் சதிசெய்து, நான என தாயாரைப் பார்க்காமல் பிரித்து வைத்த நீ, நான் நிரந்தரமாகவே அவர்களைப் பார்க்க முடியாமல் செய்துவிட நினைக்கிறாயோ! அப்படிச் செய்தால், நான் இனி இந்த உயிரை ஒரு நொடியும் சுமந்திருப்பேன் என்று நினைக்காதே!" என்று கூறிப் பிரலாபிக்கத் தொடங்கினான்.

உடனே சிவஞான முதலியார், "சரி; மேலே போய்க் கதவை இடித்துப் பார்ப்போம்" என்று கூறிய வண்ணம், மற்ற எல்லோரையும் வாசலிலேயே இருக்கச் செய்து கிருஷ்ணாபுரம் ஜெமீந்தார், மதனகோபாலன், சுருக்கெழுத்து குமாஸ்தா, சில வேலைக்காரர்கள் முதலியோருடன் படிகளின் வழியாக ஏறி மேன்மாடத்திற்குச் சென்றார். சென்று, வேலைக்காரர்களை விட்டுக் கதவை இடிக்கச் செய்ய உட்புறம் நிச்சப்தமாக இருந்தது. கதவில் ஏதேனும் இடை இருக்கிறதோ என்று அவர்கள் ஆராய்ந்து பார்த்தனர். ஒன்றும் காணப்படவில்லை; அவர்கள் முன்னிலும் அதிக வலுவாக ஓங்கிக் கதவை இடித்து உரக்கக் கூவிப்பார்த்தனர். மறுமொழியே கிடைக்க வில்லை. ஆகையால், உட்புறத்தில் ஏதோ விபரீத சம்பவம் நிகழ்ந் திருக்கிறதென்ற நிச்சயம் எல்லோரது மனதிலும் எழுந்தது; அளவிற்கு மிஞ்சிக் குடித்தவன் முகவிகாரம் அடைந்து தத்தளித்துத் தள்ளாடி விழுந்து பிதற்றுவது போல, மதனகோபாலன் கலவர மடைந்து மிகவும் பரிதாபகரமான நிலைமைக்கு வந்துவிட்டான். வேலைக்காரர்கள் எல்லோரும் பதறிப் போயினர்; அவர்களுள் சிலர் கீழே இறங்கி நாலைந்து வீடுகளிற்கப்பால் இருநத இரும்புக் கடை ஒன்றிற்கு ஓடி உளி, வெட்டிரும்பு, சுத்தியல் முதலிய

ஆயுதங்களை வாங்கிக் கொண்டு ஓடிவந்து மேன்மாடக் கதவைப் பலவந்தமாகத் திறந்துவிட்டனர். உடனே அங்கிருந்தோருள் இரண்டு தாதிகள் மாத்திரம் உள்ளே சென்று மேன்மாடம் முழுதும் பார்த்துவிட்டு மிகுந்த வியப்படைந்தவர்களாய், "எஜமானியம் மாள் எங்கேயும் காணோமே!" என்றனர். உடனே, அங்கிருந்தோர் யாவரும் பதறிப் போய, அடக்க முடியாத ஆத்திரத்தோடு உள்ளே நுழைந்து எல்லா இடங்களையும் ஆராய்ச்சி செய்து பார்த்த பின், அங்கே இருந்து மொட்டை மெத்தைக்கு ஏறிய படிக்கட்டைக் கண்டு, அதன் வழியாக மேலே ஏறி மொட்டை மெத்தையை அடைந்து, மிகுந்த ஆவலோடும் திகிலோடும் நாற்புறங்களிலும் திரும்பிப் பார்த்தனர். கல்யாணியம்மாள் எவ்விடத்திலும் காணப் படவில்லை உடனே பெருத்த திகில் ஒவ்வொருவரது மனதிலும் எழுந்து சுருக்கென்று தைத்தது. கல்யாணியம்மாள் மொட்டை மெத்தையிலிருந்து கீழே விழுநது உயிரை விட்டிருக்க வேண்டும் என்ற எண்ணம் உண்டாகி, வேதனை செய்யத் தொடங்கியது. வீட்டினது முன்புறத்தில அவள் விழவில்லை என்பது நிச்சயமாகத் தெரிந்தது. அதற்கு இரண்டு பக்கங்களிலும் வீடுகளிருந்தமை யால், மிகுதியிருந்ததான பின்புறத் தோட்டத்திலே தான் கல்யாணி யம்மாள் விழுந்திருக்க வேண்டும் என்பது நிச்சயமாயிற்று. உடனே, எல்லோரும் பின்புறமாக ஓடி மொட்டை மெத்தையின் கட்டைச்சுவரில் கையை வைத்துக் குனிந்து கீரோ பார்த்தனர்; பார்க்கவே, ஆகா! என்ன கொடுமை! என்ன பரிதாபம்! மிகவும் கிடுகிடு பாதாளமாகத் தோன்றிய தரையில் கல்யாணியம்மாளது தேகம் அலங்கோலமாகக கிடந்தது அவர்களது திருஷ்டிக்குத் தெரிந்தது. "ஐயோ! அம்மாள் அதோ விழுந்து கிடக்கிறார்களே!" என்று வேலைக்காரர்கள் மிகுந்த வியப்போடு கூறினர். அங்கிருந்த எல்லோரது உடம்புகளும் பதறிப் போய் கிடுகிடென்று ஆடின. திகிலும் நடுக்கமும் உசசி மயிரைப் பிடித்து உலுக்கின. அவ்வளவு உச்சியிலிருந்து விழுந்த கல்யாணியம்மாள் அதுகாறும் உயிரோ டிருக்கக் கூடாதா என்ற சந்தேகமும், உடனே அவளிடத்தில் ஓடிப் பார்க்க வேணடும் என்ற பெருத்த ஆவலும், வீராவேசமும் எல்லோரினது மனதிலும் எழுந்து அவர்களைத் தூண்டின. அப்படியே கீழே குதித்து விடலாமா என்ற பைத்தியக்கார

நினைவும் மூர்க்கமும் சிலருக்கு உண்டானதானாலும் அப்படியே குதித்தால், தங்களது எலும்பு கூட மிஞ்சாதென்ற பேரச்சம் அவர்களைப் பின்னுக்கிழுத்தது. அப்போது, "கீழே இறங்கித் தோட்டத்துக்குப் போவோம்" என்று கிருஷ்ணாபுரம் ஜெமீந்தார் சொல்ல ஆரம்பிக்க, அந்தச் சமயத்தில் மதனகோபாலன், "ஐயோ! என்னம்மா! இப்படியும் மோசம் செய்யலாமா! என்னைப் பிள்ளை என்று ஏற்றுக்கொள்ள உங்களுககு மனமில்லையா! அல்லது, நான் கேவலம் வீணை வாசிக்கிறவனாக இருந்தவ னெனற இழிவைக் கருதி என முகத்தில் விழிக்க மனமிலலையா? ஐயோ! அம்மா! என்னை உண்மையான வார்சுதாரன் என்று ஒப்புக்கொள்ளாவிட்டாலும் அதைப்பற்றி நான் கவலைப்பட மாட்டேன்! உங்களுடைய சமஸ்தானத்தில் எனக்கு ஒரு செல்லாக்காசும் இல்லை என்று நீங்கள் சொல்வதானாலும், அதற்கும் நான் இணங்குவேனே! நீங்கள் உயிரோடிருந்து என்னைத் தங்களுடைய பிள்ளை என்று ஒப்புக் கொண் டிருந்தால், அது ஒன்றையே நான் குபேரசம்பத்தாக எண்ணி, நான் என்னுடைய பழைய நிலைமையிலேயே இருந்து, எப்போதாவது உங்களைப் பார்க்கும்படியும் ஆனந்தத்தை அடைந்து கொண் டிருப்பேனே! இப்படியும் மோசம் செய்யலாமா! என் விஷயத்தில் உங்களுக்கு இவ்வளவு வர்மமா! உங்களுடைய வயிற்றில் வந்து பிறந்தும் நீங்கள் உயிரோடிருந்த வரையில் உங்களுக்கு நான் எவ்விதத்திலும் உபயோகப்படாத மகா பாதகன் ஆகிவிட்டேனே! ஈன்ற தாய்க்குப் பயன்படாத இந்தப் பாழும் உடம்பை நான் தூக்கிச் சுமப்பதில் இனி யாருக்கு லாபம்! அம்மா! நான் உஙகளை விடமாட்டேன். இந்த உலகத்தில் நான் உங்களைப் பாாத்துப் பேசக் கொடுத்து வைக்காவிட்டாலும், அடுத்த உலகத்திலாவது நீங்கள் என்னைப் புத்திரன் என்று ஒப்புக்கொள்ளுங்கள். இதோ நானும் வருகிறேன்" என்று பலவாறு பிரலாபித்து நைந்துருகி அழுது அனலிடு மெழுகாய் ஒடிக்கொண்டிருந்த மதனகோபாலன் குபீரென்று கைப்பிடிச்சுவரின் மீது பாய்ந்து தோட்டத்திற்குள் குதித்து விட்டான். அதைக் கண்ட யாவரும், "ஐயோ! ஐயோ! மதனகோபாலனும் கீழே விழுந்து விட்டானே! அடே பாவீ! இவனும் மோசம் செய்துவிட்டானே!" என்று கூறிக கொண்டே

தடதடவென்று விசையாக மெத்தையை விட்டுக் கீழே இறங்கி ஓடி வந்தார்கள். எல்லோரும் இரண்டாவது மாடத்தை விட்டுக் கீழே இறங்கி, அடிவாசலுக்கு வந்த சமயத்தில் இன்னொரு பயங்கரமான சம்பவம் நிகழ்ந்தது. மதனகோபாலனும் கீழே வீழ்ந்துவிட்டான் என்பதை உணர்ந்த கிருஷ்ணாபுரம் ஜெமீந்தார் தாமும் குதித்து விடலாமா என்று எண்ணினார் ஆனாலும், ஒருவேளை மதன கோபாலன் உயிரோடிருக்கலாகாதா என்ற நம்பிகையினால் தூண்டப்பட்டவராய் மெய்ம்மறந்து மேலே இருந்து கீழே ஓடி அடிவாசலிற்கு வந்தார். அதுகாறும் அவருக்கிருநத மனோதிடம் எல்லாம் அந்த இரண்டு நிமிஷத்திற்குள் விலகிப் போகவே, அவர் ஸ்மரணை தப்பி வேரற்ற மரம் போல திடீரென்று தரையில் வீழ்ந்து விட்டார். அங்கே வந்த சிவஞான முதலியாரும், மற்ற மனிதர்களும் நடையிலிருந்த உள்கதவைத் திறந்து கொண்டு, அடிக்கட்டின் வழியாகப் பின்புறத் தோட்டத்திற்குப் போக முயல, நடைக்கதவு மூடி வெளிப்புறத்தில் பெருத்த பூட்டினால் பூட்டப் பட்டிருந்ததன்றி, அதன்மேல் ஒரு துணி கட்டி அரக்கு முத்திரைகள் வைக்கப்பட்டிருந்தன. ஆகவே, அந்தச் சமயத்தில் என்ன செய்வ தென்பது தோன்றாமையால், அவர்கள் பைத்தியங் கொண்டவா கள் போல அங்குமிங்கும் ஓடித்தவிக்கிறார்கள். அப்போது அந்த வீட்டின் பக்கத்திலிருந்த வெற்றிலை பாக்குக் கடைக்காரன், "இது பஞ்சுக்கிடங்கு; இது நிறையப் பஞ்சுப்பொதிகள கிடக்கினறன. இது கோவிந்தப்ப நாயக்கன் தெருவில உளள நரசிம்மலு செட்டி யாருடையது. யாராவது அங்கே ஓடித் திறவுகோலை வாங்கிக் கொண்டு வாருங்கள்" என்றான். அநதச் சமயத்தில் அங்கே பைசைகி லில் வந்து வேடிக்கை பார்த்தவாகளுள் ஒருவர் உடனே அந்த வண்டியில ஏறி உடகார்ந்து கொண்டு தலைதெறிக்க ஓடினார். இன்னொருவர் அடுத்த தெருவிலிருந்த ஒரு டாக்டரை அழைத்து வரும் பொருட்டு காற்றாகப் பறந்தார். வேறொருவர் சற்று தூரத்தில் நின்று கொண்டிருந்த இரண்டு மோட்டார் வண்டிகளை அமர்த்தி அழைத்துக் கொணடு வந்தார். வாசலிலிருந்த சிலர் கிருஷ்ணாபுரம் ஜெமீந்தாரைத் தூக்கிக் கொண்டு போய் ஒரு மறைவில் விடுத்து, ஈரத்துணியைக் கொணர்ந்து முகத்தைத் துடைத்து விசிறி

கொண்டு வீசினார்கள். சிவஞான முதலியார் முதலிய மற்ற எல்லா ஜனங்களும் நெருப்பின் மேல் நிற்பவர் போலத் துடிதுடித்து நிற்கிறார்கள்.

அவ்வாறு பதினைந்து நிமிஷ நேரம் சென்றது. திறவுகோலுக்குப் போனவர் திரும்பி வந்து சேர்ந்தார். அதற்குள் சிலர் பூட்டின் மேல் இருந்த அரக்கு முத்திரைகளையும் துணிக்கட்டையும் விலக்கித் தயாராக வைத்திருந்தனர். அடுத்த நிமிஷத்தில் பூட்டு விலக்கப் பட்டது. கதவைத் தள்ளிக்கொண்டு ஜனங்கள் எல்லோரும் ஆவேசம் கொண்டவர்கள் போல உள்ளே ஓடுகிறார்கள். அவ்வளவு உச்சியலிருந்து விழுந்ததால் இருவரும் சின்னாபின்ன மாக நொறுங்கிப் பரமவிகாரமாகவும் கோரமான தோற்றத்தோடும் இருப்பதைத் தாங்கள் பார்க்க வேண்டுமே என்று எல்லோருக்கும் ஒரு பக்கத்தில் மனம் கூசியது. உட்புறம் முழுதும் பஞ்சுப்பொதி கள் குவிந்து மலை போலக் கிடந்தனவாதலால், அவர்கள செல்வதற்கு வழிகூடக் கிடைப்பது அரிதாகிவிட்டது. அப்படி இருந்தும், பலர் மிகவும் பிரயாசைப்பட்டு, வழி செய்து கொணடு உள்ளே நுழைந்து, பின்புறத்து வாசலைத் திறந்து கொல்லைப் பக்கத்தை அடைந்தனர். ஆகா! என்ன அதிர்ஷ்டம்! என்ன பாக்கியம்! என்ன ஆனந்தம்! கல்யாணியம்மாளும், மதனகோபா லனும் அசைவற்றுக் கைகால்களை எல்லாம் விரித்துக் கொண்டு பிணம் போலக் கிடந்தனரானாலும், அவர்களது உடம்பில் அடிப் பட்ட காயங்கள் ஒன்றும் தோன்றவில்லை. அப்படி இருந்ததற்கு தெய்வானுகூலமாக ஒரு வசதி ஏற்பட்டிருந்தது. அந்தப் பஞ்சுப் கிடங்கில், சில வருஷங்களுக்கு முன் வாங்கி அடைக்கப்பட்டு கடடுக்கடையாக இருந்த ஐம்பது மூட்டைகளில் இருந்த பஞ்சுகள் மட்கிக் கட்டிதட்டிப் போயிருந்தமையால், அந்தக் கிடங்கின் சொந்தக்காரர் ஆள்களைக் கொண்டு அந்த மூட்டைகளை எல்லாம பின்புறக் கொல்லையில் தள்ளிப் பிரித்துவிட்டு, கட்டுதட்டி இருந்தவைகளை எல்லாம் உடைத்துவிட்டு, இரண்டு மூன்று நாட்களாக வெயிலில் காயவிட்டிருந்தார். அந்தப் பஞ்சு ஒரு சுமார் 10-கஜ தூரம் வரையில் பரப்பப்பட்டிருந்ததன்றி, தரையிலிருந்து நான்கு முழ கனமுடையதாக இருந்தது. கல்யாணியம்மாளையும்

மதனகோபாலனையும் காப்பாற்ற வேண்டும் என்றே தெய்வம் அந்த மூட்டைகளை மடகிப் போகச் செய்து அங்கே மெத்தை போலப் பரப்பிவைக்கத் தூண்டியதோ எனறு எல்லோரும் நினைத்து வியப்புறும்படி, அந்தப் பஞ்சுப்பரப்பு அவர்களுக் கெதிரில் காணப்பட்டது. அதைக் கண்ட ஜனங்கள் மிகுந்த ஆவேசமும் நம்பிக்கையும் அடைந்து, பஞ்சுப்பரப்பின் மீதேறி அவாகள் இருவரும் கிடந்த இடத்தை அணுகினர். அந்தச் சமயத்தில், ஒரு டாக்டரும் அங்கே வந்து குதித்தார். அவரைக் கண்டவுடனே எல்லோரும் விலகி அவருக்கு வழிவிட, அவர் விரைவாகப் பாய்ந்து, முதலில் கல்யாணியம்மாளது இருதயத்தின் மீதும், பிறகு மதனகோபாலனது இருதயத்தின் மீதும், நாடி பார்க்கும் கருவியை வைத்துப் பார்த்தார். உடனே அவரது முகம் சந்தோஷத்தினால் மலர்ந்தது. அவர்கள் இறந்து போய்விட்டார்களோ என்று கவலை கொண்டிருந்த ஜனங்கள் எல்லோரும் டாக்டரது முகக்குறிப்பில் இருநது, அவர்களது உயிர் இருப்பதாக நிச்சயித்துக் கொண்டவர்களாய், மிகுந்த களிப்பும் ஆனந்தமும் அடைந்தனர். அப்போது டாக்டர் சிவஞான முதலியாரை நோக்கி, "இவர் களுடைய உயிருககு அபாயம நேரிடுமோ என்ற பயமே வேண்டாம. கீழே இவ்வளவு கனமாகப் பஞ்சு போடப்பட்டு இருந்தாலும், இவர்கள நிரம்பவும் உச்சியிலிருந்து விழுந்தார்கள் ஆகையால் திகிலும் அதிர்ச்சியும் உண்டானதால், மூச்சடைத்துப் போய்ப் பொறி கலங்கி இருக்கிறது. அதோடு, இவ்வளவு கனமான மனிதர்கள் அவ்வளவு உயரத்திலிருந்து வேகமாகக் கீழே வந்ததில், இவர்களுடைய உடம்புக்குள் இருக்கும் சுவாசாசயம், வயிறு, ஈரல், குடல்கள் முதலிய உறுப்புகள் எல்லாம் கொஞ்சம் மேலே ஏறி ஸ்தான பேதப்பட்டிருக்கின்றன. ஆகையால், இவர்களை இரண்டு மூன்று பேர் சேர்த்து மெதுவாகத் தூக்கி நிற்க வைத்து கக்கத்தில் கையைக் கொடுத்து தரையைவிட்டு உயர்த்தி இரண்டு மூன்று தரம் குலுக்கிய பின் படுக்க வைக்க வேண்டும். மேலே ஏறி இருக்கும் கருவிகள் எல்லாம் கீழே இறங்கிப்போம். உடனே மூச்சுண்டாக்க நாம் வேறோர் உபாயம் செய்வோம்" என்றார். உடனே தாதிகளுள் நால்வர் கல்யாணியம்மாளையும், சில வேலைக்காரர்கள் மதன கோபாலனையும் தூக்கி மெதுவாக

இரண்டு மூன்று முறை குலுக்கி, அவர்களது உடம்பில் உள்ள கருவிகள் எல்லாம் கீழே இறங்கி அதனதன் ஸ்தானத்திற்கு வரும்படி செய்து கீழே படுக்க வைத்தனர். டாக்டர் தமது கையில் கொணர்ந்திருந்த ஒரு திராவகத்தை எடுத்து, அவர்களது நெற்றிப்பூட்டில் தடவி, வாயைத் திறந்து தொண்டையிலும் விடுத்த பின், அவர்களது வயிற்றில் கையை வைத்து அழுத்தி அழுத்தி எடுக்க, வயிறு அதற்கு மேலே இருந்த சுவாசாசயத்தை அழுத்தி, மூச்சுக் காற்றை வெளிப்படுத்தியது. அவ்வாறு மூச்சுக் காற்று வெளிப்பட்டவுடனே வெளியிலிருந்த புதுக்காற்று உள்ளே சென்றதாகையால், சுவாசம் மெதுவாக வரத் தொடங்கியது. அதைக் கண்ட ஜனங்களினது சந்தோஷத்திற்கும் ஆனந்தத்திற்கும் அளவு சங்கியை இல்லை என்றே சொல்ல வேண்டும். அவர்கள் இருவரும் பிழைப்பது நிச்சயம் என்ற நம்பிக்கை உடனே உண்டாகிவிட்டது. டாக்டர் வயிற்றை அழுத்தி அழுத்தியே சுவாசம் நன்றாக வரும்படி செய்தபின், சிவஞான முதலியாரை நோக்கி, "சரி; இவர்களைப் பற்றி இனிமேல் பயமில்லை! மூச்சு இனி நிற்காது. ஆனால், பொறிகலங்கிப் போயிருப்பதால, இவர்களை மோட்டார் வண்டியில் வைத்து உடனே ஜாகைக்குக் கொண்டு போய், கோதுமைத் தவிட்டை வறுத்து, தலை முதலிய இடங்களிலெல்லாம் ஒற்றிடம் கொடுத்துக் கொண்டே இருந்தால், ரத்த ஓட்டம் சீர்ப்பட்டுவிடும்; உடனே ஸ்மரணையும் திரும்பிப் போகும். ஆகையால், கால தாமசம் செய்யாமல் தூக்குங்கள்" என்றார். அதற்குள் கிருஷ்ணாபுரம் ஜெமீந்தார் தெளிவடைந்து எழுந்து மிகுந்த ஆவலோடு கொல்லைப் பக்கம் ஓடிவந்து, கல்யாணியம்மாளும் மதனகோபாலனும் பிழைத்திருக்கிறார்கள் என்ற நற்செய்தியைக் கேள்வியுற்று, மிகுந்த களிப்பும், ஆனந்தமும், ஆவேசமும் கொண்டவராய், மதனகோபாலனைத் தூக்கிய மனிதரோடு சேர்ந்து கொண்டார்.

அதன் பிறகு இரண்டு நிமிஷ காலத்தில், கல்யாணியம்மாள் ஒரு மோட்டாரில் வைக்கப்பட்டாள். சிவஞான முதலியாரும, தாதி களும அதில் ஏறி உட்கார்ந்து கொண்டனர். இன்னொரு வண்டி யில் மதனகோபாலன விடப்பட்டான். அதன்மேல் கிருஷ்ணாபுரம்

ஜெமீந்தாரும், அவரது ஆட்கள் சிலரும் ஏறிக்கொண்டனர். உடனே கிருஷ்ணாபுரம் ஜெமீந்தார் சிவஞான முதலியாரை நோக்கி, "இவர்கள் ஸ்மரணை தெளிந்து எழுந்தவுடனே ஒருவரை ஒருவர் பார்ப்பது நல்லதல்ல. இவர்கள், மிகுந்த ஆவலோடும் வாத்சல்யத்தோடும் ஒருவரோடொருவர் கண்டு பேசுவார்கள். இவர்கள் இப்படி மெலிவடைந்திருக்கும் நிலைமையில் ஒருவரை ஒருவர் பார்க்கும்படி நாம் விடலாகாது. இவனை நான் என்னுடைய பங்களாவுக்குக் கொண்டு போகிறேன். நீங்கள் அந்த அம்மாளை அவர்களுடைய பங்களாவுக்குக் கொண்டு போய் ஆகவேண்டிய சிகிச்சைகளை ஜாககிரதையாகச் செய்யுங்கள்" என்று கூறிய வண்ணம், தாம் இருந்த மோட்டாரைத் தமது பங்களாவான **மனோகர விலாசத்திற்கு** விடச் செய்தார். அப்படியே அந்த மோட்டாா வண்டி மைலாப்பூரை நோக்கிச் சென்றது. கல்யாணி யம்மாள் இருந்த மோட்டார் வண்டி தேனாம்பேட்டையை நோக்கிச சென்றது.

அன்றைய தினம் நடந்த விசாரணை மிகவும் விரிவானதாகை யால், காலையில் தொடக்கப்படட அந்த விசாரணை முடிவு பெற மாலை நேரம் வரையில் பிடித்தது. அதற்குமேல், மற்ற சம்பவம் எல்லாம் நிகழ்ந்தமையால், மோட்டார் வண்டிகள் பங்களாக்களுக் குப் போய்ச் சேர்ந்த போது விளக்குகள் கொளுத்தப்பட்டுப் போயிருந்தன. மதனகோபாலனை மோட்டாரில் வைத்துச் சென்ற கிருஷ்ணாபுரம ஜெமீந்தாரும மற்றவர்களும், வண்டி மனோகர விலாசத்தில் போய் நின்றவுடனே, ஒரு கட்டிலைத் தூக்கிக் கொணர்ந்து மோட்டார் வண்டியின் பக்கத்தில் வைத்து மதனகோ பாலனைத் தூக்கி அதன்மேல் படுக்கவைத்து அசையாமல் கட்டி லோடு அவனைத் தூக்கிக் கொண்டு உள்ளே போயினர். அந்த விபரீதக் காட்சியைக் கண்ட மோகனாங்கியும், மற்ற வேலைக்காரர் களும் பெருத்த வியப்பும் திகைப்பும் அடைந்து பதறிப் போய், "என்ன! என்ன!" என்று கேட்டுக் கொண்டே அங்கே வந்து கூடினா. கிருஷ்ணாபுரம் ஜெமீந்தாரோடு கூட வண்டியில் வந்த சிலர், கச்சேரியில் சொல்லப்படட தீர்மானத்தையும், மதனகோபா லன் தனது தாய் வீழ்நதிருநததைக் கண்டு தானும் வீழ்ந்ததையும்

இரண்டொரு வார்த்தையில் சுருக்கமாகக் கூற, அதைக் கேட்ட யாவரும் முன்னிலும் ஆயிரம் மடங்கு அதிகரித்த பிரமிப்பும் களிப்பும் அடைந்தனர். சிலர் ஒற்றிடம் தயாரிப்பதற்காக ஓடினர். மோகனாங்கியின் மனநிலைமை இன்னதென்பதைச் சொல்வது அசாத்தியமான காரியமாய் இருந்தது. அவன் தனது உயிருக்கே தீங்கிழைத்துக் கொள்ள முயற்சித்ததையும், அவன் அவ்வாறு உணர்வற்றுப் பிணம் போலக் கிடந்ததையும் உணர. அவளது மனம் சித்திரவதைக்கு உள்ளாகி சகிக்க இயலாமல் தடுமாறித் தவித்தது. அவன் பிழைப்பானோ மாட்டானோ என்ற ஐயமும் கவலையும் பேராவலும் பொங்கி எழுந்து கரைகடந்த சஞ்சலத்தில் அவளை ஆழ்த்திவிட்டன. ஆனால், அதுகாறும், அவன் தனது சொந்த சகோதரன் என்று தான் நினைத்திருந்தது பொய்யாகிப் போனதையும், தனக்கும் அவனுக்கும் எவ்விதச் சம்பந்தமும் இல்லாமற் போனதையும் காண, அவளுக்கு இந்த உலகமே பாழடைந்து போனதாகத் தோன்றியது. தனக்கு உயிருக்குயிராக இருந்த தனது நற்குணச் சகோதரனை உயிருடன் வேறொருவருக் குப் பறிகொடுத்து விட்டுத் தான் அநாதையாகி இருப்பதைவிடத் தான் தனது உயிரை மாய்த்துக் கொள்வதே நன்மையாகத் தோன்றியது. ஆனால், அவன் மகா உன்னதமான பதவிக்குரிய வன ஆன விஷயம் ஒருபுறத்தில் கரைகடந்த குதூகலத்தையும் பிரம்மாநந்தத்தையும் சுரக்கச் செய்து கொண்டிருந்தது. அவ்வாறு ஒன்றிற்கொன்று முரண்பட்ட பலவகையான உணர்ச்சிகளாலும் எண்ணங்களாலும் மாறிமாறி இன்பமும் துன்பமும் அடைந்தவ ளாகத் தத்தளித்த மோகனாங்கி அங்குமிங்கும் ஓடி, வேலைக்காரர் கள் தயாரித்துக் கொடுத்த தவிட்டு மூட்டையை வாங்கி, மதன கோபாலனது சிரத்திலும், உடம்பிலும் வைத்து வைத்து ஒற்றிடம் கொடுக்கத் தொடங்கினாள். கிருஷ்ணாபுரம் ஜெமீந்தாருக்குக் கைகால் ஆடாமல் போய்விட்டன. தாம் என்ன செய்வது என்பதை உணராமல், அவர் மிகுந்த கவலையும் விசனமும் அடைந்தவராய், மதனகோபாலனது பக்கத்தில் கிடந்த ஒரு நாற்காலியில் ஓய்ந்து உட்கார்ந்துவிட்டார். மதனகோபாலனே மாரமங்கலம் சமஸ்தானத்தின் உண்மையான மைனர் என்ற விஷயத்தைக் கேட்ட முதல், அதனால் ஏற்பட்ட சந்தோஷப்

பெருக்கையும் ஆனந்த ஊற்றையும் தாங்கலாற்றாது அவரது இருதயம் படீரென்று தெறித்துவிடுமோ என நினைக்கத்தக்க அதிவிம்மிதமான நிலைமையில் அவர் கிடந்து மிதந்து, மதன கோபாலன் தப்பிப் பிழைத்து எழுந்திருக்க வேண்டுமே என்ற கவலையும் சஞ்சலமும் அடைந்தவராய், மற்றவர் செய்யும் பணி விடைகளையும், மதனகோபாலனது முக மாறுதல்களையும் கவனித்த வண்ணம் வீற்றிருந்தார். அவ்வாறு மோகனாங்கியும், மற்றவரும் வறுக்கப்பட்ட தவிட்டு ஒற்றிடம் கொடுத்துக் கொண்டே போக, இரவு சுமார் ஒன்பது மணி சமயத்தில் மதன கோபாலன் தனது கண்களை விழித்துக் கொண்டு பார்க்கத் தொடங்கினான். அவனது விழிகளின் இளக்கம், மூளையின் குழப்பத்தையும் கலக்கத்தையும் காண்பித்தது; நாழிகை ஏறஏற அவர்கள் கொடுத்த ஒற்றிடத்தின் சூட்டை அவன் உணர்ந்ததாகத் தோன்றியது. அரை நாழிகைக்குப் பிறகு அவன் வாயைத் திறந்து பேசும் திறமையை அடைந்து, அவர்கள் ஒற்றிடம் கொடுத்த போதெல்லாம், "உஸ் அப்பா! சுடுகிறது. அதிகமாக அழுத்த வேண்டாம்" என்று சொல்ல ஆரம்பித்தான். அப்போது அவனுக் காகக் காய்ச்சித் தயாராக வைக்கப்பட்டிருந்த கொழுமோரை மோக னாங்கி எடுத்து, "அண்ணா! வாயைத் திறந்து இதைக் கொஞ்சம் சாப்பிடு!" என்று, அன்பாகவும உருக்கமாகவும் கூற, அவன் வாயைத் திறந்து, அந்த மோரில் சிறிதளவு உட்கொண்டான். அவ்வாறு பருகப்பட்ட மோரினால், அவனுக்கு மிகுந்த மனோதிட மும் மனத்தெளிவும உண்டாயின. உடம்பும் சரியான நிலைமைக்கு வந்தது. "ஒற்றிடம் போதும், இனிமேல் வேண்டாம். என்னால் தாங்க முடியவில்லை" என்று கூறிய வண்ணம் மதனகோபாலன் எழுந்து உட்கார்ந்து திண்டில் சாய்ந்தபடி தனது கண்களை நன்றாகத் திறந்து தனது முகத்தை நாற்புறங்களிலும் திருப்பி உற்று நோக்கி, "நான் எங்கே இருக்கிறேன்? இங்கே படுத்திருந்த என்னுடைய அம்மாள் எங்கே? மொட்டை மெத்தையிலிருந்து விழுந்த நான் எப்படிப் பிழைத்தேன்?" என்றார்.

அதைக் கேட்ட கிருஷ்ணாபுரம் ஜெமீந்தார், "அப்பா குழந்தாய்! என்ன காரியம் செய்தாய்! இபபடியும் கீழே விழுந்து உயிரைவிட

நினைப்பதுண்டா! என்னவோ நல்ல வேளைதான் நீயும் தப்பிப் பிழைத்தாய்; உன்னுடைய தாயாரும் தப்பிப் பிழைத்தார்கள்" என்று அன்பாகக் கூறினார். மதனகோபாலன், "ஆ! எனனுடைய அம்மாள் உயிரோடிருக்கிறார்களா! எங்கே இருக்கிறார்கள்? என்னை அழைத்துக் கொண்டு போய் அவர்களை நான் பார்க்கும் படி செய்யக்கூடாதா? என்னுடைய மனம் தவிககிற தவிப்பைக் கண்டு தங்களுக்கு மனம் இரங்கவில்லையா?" என்று மிகவும் உருக்கமாகவும் விசனமாகவும் கூறினான். அப்போது அவனது கண்களிலிருந்து கண்ணீர் பெருகி வழிந்து தாரை தாரையாக ஓடத் தொடங்கியது. அதைக் கண்ட மோகனாங்கி பதறிப் போய் அவனுக்கருகில் நெருங்கி வந்து, "அண்ணா! அழவேணடாம்; அழ வேண்டாம்" என்று கூறித் தனது சேலைத் தலைப்பால் வாத்சல்யத் தோடு அவனது கண்ணீரைத் துடைத்து விட்டாள. அப்போது கிருஷ்ணாபுரம் ஜெமீந்தார் அவனைப் பார்த்து மிகுந்த மகிழ்ச்சியும் அன்பும் புன்னகையும் ஜ்வலித்த முகத்தோடு, "அப்பா குழந்தாய்! உன்னுடைய தாயைப் பார்க்க வேண்டும் என்று உன் மனம் எவ்வளவு பாடுபடுகிற தென்பது, நீ வீட்டின் உச்சியிலிருந்து கீழே விழுந்து தற்கொலை செய்து கொள்ள முயற்சித்ததிலிருநதே நன்றாகத் தெரிந்து போய்விட்டது. இப்போது ராத்திரி பத்துமணி சமயமிருக்கும். நாம் இப்போது மனோகர விலாசத்தில் இருக்கி றோம். உன்னுடைய அம்மாள் தேனாம்பேட்டையில் இருக்கிறார் கள். நீ ஆண்பிள்ளை ஆகையால் சீக்கிரமாகத் தெளிவடைந்து விட்டாய்; அவர்கள் பெண்பிள்ளை; அவர்கள் இன்னமும அசௌக்கியமாகவே படுத்துக் கொண்டிருப்பாாகள் என்று நினைக்கிறேன். அப்படிப்படட நிலைமையில், நீ இப்போது அவர்களிடம் போனால், அவர்களுடைய மனதில் ஏற்படும் பெருத்த களிப்பையும் ஆனந்தத்தையும் தாங்கமாட்டாமல் அவா களுடைய பிராணன் போனாலும் போய்விடும். உன்னுடைய தாயை நீயே கொன்றவனாகி விடுவாய். ஆகையால, எப்படியா வது நீ நாளைய காலை வரையில் பொறுத்துக் கொள். அதற்குள் அவர்களுடைய உடம்பும் திடப்பட்டுப் போகும்; அதிகாலையில் நீ போய் அவர்களைப் பார்க்கும்படி செய்கிறேன்" என்றாா.

அதைக் கேட்ட மதனகோபாலன் மிகுந்த அதிருப்தியும் விசனமும அடைந்தவனாகத் தனது முகத்தைக் கைகளில் புதைத்த வண்ணம் கீழே குனிந்து கொண்டான். அவன் மிகவும் வருந்தி அழுகிறான் என்பதைக் கண்ட கிருஷ்ணாபுரம் ஜெமீந்தார், அதற்கு மேல் அவனை எப்படி சமாதானப்படுத்துவது என்பதை அறிய மாட்டாமல் மோகனாங்கியின் முகத்தைப் பார்க்க, அவள் அந்தக் குறிப்பை அறிந்து கொண்டு, மதனகோபாலனை அன்போடு தடவிக் கொடுத்து, "அண்ணா! அண்ணா! உனக்கு உண்டாயிருக் கும பெருத்த பாக்கியத்தைப் பற்றி என்னிடத்தில் ஒரு வார்த்தை யாவது சந்தோஷமாகப் பேசக்கூடாதா? உன்னுடைய அம்மாளி டத்தில் நீ போய்ச் சேர்ந்த பின் எங்களை எல்லாம் மறந்து விடுவாயா? கேவலம் அநாதையான ஏழைப் பெண் நம்மை அண்ணா என்று அழைக்கலாயிற்றா என்று கோபித்துக் கொள் வாயா? அல்லது, வாய் திறந்து ஒரு வார்த்தையாவது பேசுவாயா?" எனறு மிகுந்த வாத்சல்யத்தோடும் விசனத்தோடும் கேட்க, அவளது சொற்கள் மதனகோபாலனது மனதில் சுருக்கென்று தைத்தன. மட்டுக்கடங்கா வாத்சல்யமும் அபிமானமும் அவனது உள்ளத்தில் உடனே பொங்கி எழுந்தன. அவன் மிகுந்த ஆவலோடும் ஆசையோடும் மோகனாங்கியை இழுத்துத் தனக்கருகில் உட்கார வைத்து முதுகில் தடவிக் கொடுத்து, "அம்மா! மோகனா! உன் வாயிலிருந்து இப்படிப்பட்ட கொடுமையான சொற்களும் வந்தனவா! எனக்கு எபபடிப்பட்ட சங்கநிதி பதுமநிதியே கிடைப்பதானாலும் எப்படிப்பட்ட தாயாரும் தங்கைமார்களும் வந்து வாய்ப்பதானாலும், நான் அறிவு பெற்ற முதல் இத்தனை வருஷ காலம் வரையில், உன்னை நான் எனனுடைய சொந்தத் தங்கையாக மதித்து உன்பேரில் வைத்த வாத்சல்யமும் பிரேமையும் மாறுமா? நீ என்னை அண்ணா என்று கூப்பிடாமல், வேறே விதமாகக் கூப்பிட்டால், அதைக் கேட்க என் மனம் சகிககுமா? எனக்கு எபபடிப்பட்ட பாக்கியம் கிடைத்தாலும், அதற்கு நான் உனனையும சம்பாத்தியஸ்தியாக ஆக்கியே தீருவேன என்பதை நீ உறுதியாக எண்ணலாம். உன் மனம் வருந்துமானால், நான் உடனே என் உயிரையே விட்டுவிடுவேன என்பதை நீ நிசசயமாக நம்பலாம். இப்படிப்பட்ட சந்தேகத்தை நீ

இனி கொள்ளத் தேவையில்லை, இதுவரையிலும் நான் உனக்கு எப்படி, "அண்ணா" வாக இருந்தேனோ அதுபோல இனிமேலும் நான் உனக்கு அண்ணாதான்; நம்முடைய உறிவு முறைமையில் வித்தியாசம் ஏற்பட்டிருக்கிறதென்கிற நினைவையே நீ உன் மனசிலிருந்து விலக்கிவிடு. நான் என் தங்கையினிடத்தில் வைத்திருக்கும் வாத்சல்யம் அபாரமாக இருப்பதால், அதை அனுபவிக்க ஒரு தங்கை போதாதென்று எனக்கு இன்னமும் இரண்டு தங்கைகளை ஈசுவரன் கொடுத்தார். அதைத் தவிர வேறில்லை" என்று கல்லும் கரைந்துருகும் வண்ணம் வாஞ்சை யாகக் கூறி, அவளை அன்போடு இன்னொரு முறை தடவிக் கொடுத்தான். அவனது சொற்களைக் கேட்ட மோகனாங்கியும், கிருஷ்ணாபுரம் ஜெமீந்தாரும் ஆனந்த பரவசமடைந்து பூரித்துப் புளகாங்கிதம் உற்றனர்.

அவர்கள் அப்படிப்பட்ட ஆனந்த நிலைமையில் மனோகர விலாசத்தில் இருக்க, தேனாம்பேட்டையில் என்ன நடந்ததென் பதை நாம் கவனிப்போம்; கல்யாணியம்மாளையும் மற்றவர்களை யும் எடுத்துச் சென்ற மோட்டார் வண்டி கால்மணி நேரத்தில் தேனாம்பேட்டையில் உள்ள மாரமங்கலம் ஜெமீந்தாரது பங்களாவை அடைந்தது. உடனே கல்யாணியம்மாள் ஒரு கட்டிலில் எடுத்துவிடப்பட்டு அசையாமல் அவளது அந்தப்புரத் தில் கொண்டு போய்ச் சேர்க்கப்பட்டாள். அவர்களது பங்களாவில் இருந்த பணிமக்களில் பெண்மக்கள் பெரும்பாலோரும், ஆணமககள் சிலரும், கோமளவல்லியும் அன்றைய வழக்கு எப்படி முடியுமோ என்றும், மைனர் விடுதலை அடைவானோ அலலது தண்டனை அடைந்து விடுவானோ என்றும் பலவாறு நினைத்து மிகுந்த கவலையும் சஞ்சலமும் அடைந்து கசசேரிக்குப் போயிருந்த கல்யாணியம்மாள் முதலியோரினது வருகையைப் பெரிதும் ஆவலோடு எதிர்பார்த்து வழிமேல் விழி வைத்தவர் களாகக் காத்திருந்தனர். ஆனால், கல்யாணியம்மாள் அப்படிப்பட்ட விபரீதமான நிலைமையில் திரும்பி வருவாள் என்று அவர்கள் கனவிலும் நினைத்தவரல்லர். ஆதலால், அந்த மகா கோரமான காட்சியைக் கண்ட அவர்கள் எல்லோரும் திடுக்கிட்டு அளவிறந்த

வியப்பும் திகைப்பும் அடைந்து மைனர் ஒருவேளை மரண தண்டனை பெற்றதால், தங்களது எஜமானியம்மாள் மூர்ச்சித்திருக் கிறார்களோ என்று நினைத்து ஸ்தம்பித்து அப்படியப்படியே நின்றனர். தனது தாயினிடத்தில் அளவற்ற வாஞ்சையும் பயபக்தி விசுவாசமும் வைத்திருந்த நற்குணவதியான கோமளவல்லி பதறிப் போய், அவ்விடத்தில் சிவஞான முதலியார், சுருக்கெழுத்து குமாஸ்தா முதலிய அன்னியப் புருஷர்கள் இருப்பதையும் கவனியாமல், "என்ன! என்ன! ஏன் அம்மாள் இப்படி இருக்கிறார் கள்? கச்சேரியில் என்ன நடந்தது?" என்று கேட்டுக் கொண்டு ஓடோடியும் வந்து குதித்துத் தனது தாயின் அருகில் நின்று, தாயின் தேகத்தை ஆசையோடு கட்டிக் கொண்டாள். அங்கே இருந்த யாவரும் ஒரு நொடியும் காலதாமதம் செய்யாமல், கல்யாணியம் மாளுக்குரிய சிகிச்சை செய்வதில் தங்களது கவனத்தை எல்லாம் செலுத்திக் கொண்டிருந்தமையால், அவளது கேள்விக்கு எவரும் மறுமொழி கூறாமலே தங்களது அலுவலைக் கவனித்தனர். அவர்கள் தம்புசெட்டித் தெருவிலிருந்து வந்த போது கடைசியில் டாக்டர் சிவஞான முதலியாரைத் தனியாக அழைத்து, கல்யாணி யம்மாளது உடம்பை இறுக்கிக் கொண்டிருந்த ஆடையாபரணங் களை எல்லாம் விலக்கிவிட்டு ஒரேயொரு சிறிய வஸ்திரத்தை அணிவித்து ஒற்றிடங் கொடுத்துக் கொண்டு வரவேண்டும் என்றும், தாமும் கொஞ்ச நேரத்தில் மோட்டார் வண்டியில் வருவதாகவும், அதற்குள் அந்தச் சீமாட்டி தெளிவடைந்து கண்களைத் திறந்து கொண்டால், உடனே கொழுமோர் காய்ச்சிக் கொடுக்க வேண்டும் என்றும் சொல்லி இருந்தார் ஆகையால், சிவஞான முதலியார் அநத விவரங்களை எல்லாம் தாதி பொன்னம் மாள் முதலிய முக்கியமான வேலைக்காரிகளிடத்தில் தெரிவித்து அப்படியே சிகிச்சை நடத்தச் சொல்லிவிட்டு, அங்கே இருந்த ஆண்பிள்ளைகளை எல்லாம் வெளியில் போய் இருக்கும்படி அனுப்பிய பின் சுருக்கெழுத்து குமாஸ்தாவை அழைத்துக் கொண்டு பக்கத்திலிருந்த புஸ்தக சாலைக்குள் போய் உட்கார்ந்து கொண்டார. கல்யாணியம்மாள் அப்படிப்பட்ட சந்தேகமான நிலைமையில் இருக்கையில், அவருக்குத் தாம் வீட்டிற்குப் போக வேண்டும் என்ற விருப்பமே உண்டாகவில்லை ஆனாலும்

அன்றைய காலை முதல் மாலை வரையில் அவர் எவ்வித ஆகாரமும் கொள்ளாமல், கச்சேரியில் விசாரணையைக் கவனிக்க நேர்ந்தது பற்றி அவர் பசிதாங்களினால் மிகவும் களைப்போடு இருந்தார். அதுபோலவே அந்தச் சுருக்கெழுத்து குமாஸ்தாவும் தேகபாதைகளால் துன்பமுற்றிருந்தார். அதை உணர்ந்த சிவஞான முதலியார், அவரிடத்தில் மிகுதியிருந்த வாக்குமூலங்களையும், ஜட்ஜிகளின் தீர்மானத்தையும் தமிழில் மொழிபெயர்த்துக் கொடுத்து விட்டு அவரது ஜாகைக்குப் போகும்படி சொல்ல, அவர் இரண்டொரு நாழிகை சாவகாசத்தில் அவ்வாறே செய்து காகிதங் களை எல்லாம் கொடுத்துவிட்டு அனுமதி பெற்றுக் கொண்டு தமது வீட்டிற்குப் போய்ச் சேர்ந்தார். சிவஞான முதலியார் அந்த வாக்கு மூலங்களை எல்லாம், கல்யாணியம்மாளுக்குப் படித்துக் காட்டும் பொருட்டு உள்ளே அனுப்பிய பின் சமையலறைக்குப் போய் சொற்ப ஆகாரம் பார்த்துக் கொண்டு மறுபடியும் அதே இடத்திற்கு வந்து, கல்யாணியம்மாளது அப்போதைய தேகஸ்திதியைப் பற்றி விசாரித்த பின் ஒரு சாய்மான நாற்காலியில் படுத்திருந்தவர் சிறிது நேரத்தில் தூக்கத்தில் ஆழ்ந்துவிட்டார். அவரது நிலைமை அங்ஙன மிருக்க, தாதிகள் எல்லோரும் ஒன்றுகூடிக் கல்யாணியம்மாளுக்கு தவிட்டு ஒற்றிடம் கொடுத்துக் கொடுத்து, அவளது இரத்த ஓட்டத்தை துரிதப்படுத்தி மூளைக்குத் தெளிவை ஊட்டிக் கொண்டும், தேகத்தின் மரப்பை விலக்கிக் கொண்டும் இருந்தனர். மிகுந்த கவலையும், ஆவலும், கலக்கமும் அடைந்து பதறி உட்கார்ந்திருந்த கோமளவல்லியம்மாள் கச்சேரியில் என்ன நடந்த தென்று சில தாதிகளிடத்தில் கேட்க, அவர்கள் மைனருக்கும், பாலாம்பாளுக்குத் தண்டனை ஆகிவிட்டதென்றும், மதன கோபாலனே உண்மையான பிள்ளை என்று ருஜுவாகிவிட்ட தென்றும், கல்யாணியம்மாள் சில வாக்குமூலங்கள் வரையில் அறிந்து கொண்டவுடன் மேன்மாடத்திலிருந்து கீழே விழுந்து விட்டாள் என்றும், தீர்மானத்தைக் கேட்ட பின் மதனகோபாலன் தாயைப் பார்க்க ஆவல் கொண்டு ஓடி வந்தவன், அவள் வீழ்ந்து கிடக்கக் கண்டு தானும் வீழ்ந்து விட்டான் என்றும், அவனைக் கிருஷ்ணாபுரம் ஜெமீந்தார் மைலாப்பூரில் உள்ள அவரது ஜாகைக்கு எடுத்துக் கொண்டு போயிருக்கிறார் என்றும், பஞ்சுப்

பரப்பின் மேல் இருவரும் விழுந்தமையால் மரிக்காமல், மூச்சடை பட்டுக் கிடக்கிறார்கள் என்றும் கூறினார்கள். அந்த விவரங்களை எல்லாம் கேட்ட கோமளவல்லியம்மாள் அது கனவோ நினைவோ என்று சந்தேகித்து, அந்த விவரங்களை உண்மை என நம்பாதவ ளாகத் தனக்கெதிரில் வைக்கப்பட்டிருந்த தமிழ் வாக்குமூலங்களை யும், தீர்மானத்தையும் எடுத்துப் படித்துப் பார்த்து, தாதிகள் சொன்ன விவரங்கள் எல்லாம் உண்மையானவை என்பதை நிச்சயப்படுத்திக் கொண்டாள். அப்போது அவளது வியப்பும், பிரமிப்பும், சந்தோஷமும் அளவிலடங்காதனவாக இருந்தன. மதனகோபாலனே தனது சொந்த சகோதரன் என்பதை உணரவே, அவளது மனத்தில் மகிழ்ச்சியும் ஆனந்தமும் கரைகடந்து பொங்கி எழுந்தன. அவனைத் தான் எப்போது பார்க்கக் கிடைக்கும் என்ற ஆவலும், அவனும் தனது தாயும் உயிர் தப்பிப் பிழைக்க வேண்டுமே என்ற பெருத்த கவலையும் விசனமும் பெருகி அவளை மிகவும் சஞ்சலப்படுத்தி வதைத்துக் கொண்டிருந்தன. அவளும் ஏனைய பணிப் பெண்டீரும் தங்களது ஆகாரத்தையா வது, தூக்கத்தையாவது, களைப்பையாவது கவனியாமல் அரும் பாடுபட்டு கல்யாணியம்மாளுக்கு ஒற்றிடம் கொடுத்துக் கொண்டு, கச்சேரியில் நடந்த விசாரணை தீர்ப்பு முதலியவற்றின் விவரங் களை எல்லாம் இடையிடையே பேசிக் கொண்டும், மிகுந்த ஆவலும் கவலையும் நிறைந்தவராக அந்த இரவைக் கழித்துக் கொண்டே இருந்தனர். அவ்வாறு நெடுநேரமாயிற்று. மதனகோ பாலன் உறுதியான சரீரத்தை உடையவனாதலால் அவனுக்கு அதிசீக்கிரத்தில் தெளிவு ஏற்பட்டது. கல்யாணியம்மாளோ இயற்கையிலேயே மிகவும் நுட்பமான தேகத்தைப் பெற்று, அதிக உழைப்பின்றியே இருந்து வந்தவள்; சென்ற சில நாட்களாக, அந்தச் சீமாட்டிக்கு நேர்ந்த பெருத்த பெருத்த இடர்களின் கவலையினால், உண்ணாமலும் கண்ணுறங்காமலும் இருந்து முன்னிலும் அதிகமாக மெலிந்து தளர்வடைந்தவள்; கடைசியில் தனது மானம் போய்விட்டதே என்ற பெருத்த பீதியும், தான் அம்பட்டச்சியின் பிள்ளையை மைனராகச் செய்து வைத்திருந்தது பற்றித் தனக்கு சிறைச்சாலை வாசம் முதலிய ஏதேனும் சர்க்கார் தண்டனை ஏற்படுமோ என்ற பேரச்சத்தினாலும், உலப்பப்பட்ட

வளாகக் கீழே வீழ்ந்தவளாதலால், அந்த அம்மாளது உணர்வைத் திருப்புவது மிகவும் கடினமாக இருந்ததன்றி, அதற்கு அதிக நேரமும் பிடித்தது. ஆகவே, கல்யாணியம்மாள் தெளிவு பெற்றுக் கண்களைத் திறந்த போது விடியற்கால சமயமாகிவிட்டது. அவள் கண்களைத் திறந்து கொண்டு மருண்டு மருண்டு நாற்புறங்களிலும் திரும்பித் திரும்பிப் பார்க்கிறாள். அவளுக்கு எல்லாம் குழப்பமாக இருக்கிறது. தானிருந்த இடம் எதுவென்பதும், அப்போது இருக்கும் இடம் எதுவென்பதும் தெளிவுபடாமல் தான் கனவு காண்பதாக அவள் எண்ணிக் கொண்டிருந்தாள். அந்த நிலைமையில தாதிகள் சுடச்சுடக் கொழுமோர் கொடுத்துப் பருகுவிக்க, அந்த அமிர்தம் தேகத்தில் சம்பந்தப்படவே கல்யாணியம்மாள் அதிசீக்கிரத்தில் குணமடைந்து, "நான் எங்கே இருக்கிறேன்? உயிரோடிருக்கிறேனா? இறந்து போய்விட்டேனா?" என்று வினவிய வண்ணம் மெதுவாக எழுந்து உட்கார்ந்து திண்டில் சாய்ந்து, கோமளவல்லியையும், மற்ற தாதிகளையும் நோக்கு கிறாள்; தனது கண்களை நம்பாமல் கசக்கிவிட்டுக் கொள்ளுகிறாள்; தனது உடம்பில் ஏதேனும் காயங்கள் இருக்கின்றனவோ என்று பார்த்துக் கொள்ளுகிறாள. அப்போது கோமளவலலியம்மாள தனது தாய்க்கருகில் உட்கார்ந்து, அன்பாக அணைத்து, "அம்மா! நீங்கள் நம்முடைய பங்களாவிலே தானிருக்கிறீர்கள். பயப்பட வேண்டாம். என்னவோ நாங்கள் எல்லாம் செய்த பூஜா பலத்தினால் நீங்கள் இந்தப் பெருத்த கண்டத்துக்குத் தப்பிப் பிழைத்தீர்கள்" என்றாள்.

அதைக் கேட்ட கல்யாணியம்மாள் முனனிலும் அதிகக் குழப்பமும் கலக்கமும் அடைந்து, "என்ன இது! ஆச்சரியமாக இருக்கிறதே! நான் தம்புசெட்டித் தெருவிலிருந்த வீட்டிலிருந்து பாதாளத்தில் விழுந்தவள் எப்படித் தப்பினேன்! உடம்பில் ஓர் அடிகூடப் பட்டதாகத் தெரியவில்லையே! நான் பூமியில் விழும் முன் யாராவது என்னைப் பிடித்துக் கொண்டார்களா? அங்கே இருந்து நான் இவ்விடத்துக்கு எப்படி வந்தேன்" என்றாள்.

உடனே கோமளவல்லியம்மாள், "அம்மா! நீங்கள் கீழே தான் விழுந்து விட்டீர்கள். ஆனால் அந்த வீட்டின் கீழ்கட்டு பஞ்சுக்

கிடங்காம்; மட்கிப் போயிருந்த சில மூட்டைகளைப் பிரித்து அவர்கள் பின்புறத்தில் இடுப்புயரம் காயவைத்திருந்தார்களாம் அதன் மேல் நீங்கள் விழுந்து ஸ்மரணை தப்பிக் கிடந்தீர்கள். அங்கே இருந்து எடுத்து இங்கே கொண்டு வந்தார்கள்?" என்றாள்.

கல்யாணியம்மாள், "ஆ! என்ன ஆச்சரியம்! நான் எல்லாத் துனபங்களையும் பூர்த்தியாக அனுபவிக்காமல் உலகத்திலிருந்து தப்பிப் போய் விடுகிறேனே என்று நினைத்து அவர்கள் அந்தப் பஞ்சைப் பரப்பி வைத்தார்களா! ஆகா! என்ன என்னுடைய துர்பாக்கியம்! உலகத்தில் உள்ள எல்லோரும் பணம் வேண்டும் என்று அழுவார்கள; குழந்தை குட்டிகள், வீடு, வாசல், நிலம் முதலிய பாக்கியம் இல்லையே என்றழுவார்கள்; நானோ இந்த உலக வாழ்க்கையே வேணடாம் என்றும், இதைவிடடுத் தப்பி ஓடி விட்டால், அது போதும் என்றும் எணணிச் சாக நினைத்தால், அதுகூட எனக்குப் பலிதம் ஆகமாட்டேன என்கிறதே! இப்படிப் பட்ட மகா பாவியும் உலகத்தில் இருப்பார்களா! ஐயோ! என்ன கஷ்டம்! என்ன கஷ்டம்! சாகவும் மாட்டாமல், இருக்கவும் மாட்டாமல் இப்படி இருதலைக் கொள்ளி எறும்பு போலச் சித்திரவதைப் பட்டு நான் சீர்கெட்டழிய வேண்டும் என்று அந்தப் பாழும் தெய்வம் என் தலையில் எழுதிவிட்டதே! பெண்ணே கோமளவல்லீ! நான கீழே விழுந்து உயிரைவிடப் போன போது உன்னைப் பற்றி நினைத்துத் தான் விழுந்தேன்; நீ ஒருத்தி தான் என்னிடத்தில் உண்மையான பயபக்தி விசுவாசமுள்ளவள். எனக்கு இந்த உலகத்தில் இனிஒரு நொடியுமிருக்க இஷ்டமில்லை. நான் இருந்தால், எனக்கு என்றைக்கும் மாறாத மானக்கேடும் இழிவும் தலைகுனிவும உண்டாகும் ஆகையால், நீ உடனே எழுந்து போய், ஒரு வைர மோதிரத்தை எடுத்து, அதிலிருக்கும் கல்லை எடுத்துப் பொடியாக்கிக் கொண்டு வந்து கொடு; இந்த இரவு நீங்குவதற்குள் நான் பிராணனை விட்டுவிட வேண்டும். பொழுது விடிந்தால், நான மனிஷி எனறு பெயர் வைத்துக் கொண்டு வெளியில் வரமுடியாது; எங்கே! எழுந்துபோ கண்ணே! என்னுடைய சொல்லை மறுக்காதே! நீ ஆயிரங்காலம் தீர்க்க சுமங்கலியாக இருந்து அமோகமாக வாழ்வாய்" என்று அன்பாக

வற்புறுத்திக் கூறிக் கோமளவல்லியின் மோவாயில் தனது கையை வைத்துக் கெஞ்சி மன்றாட, அந்த வார்த்தைகளைக் கேட்டுப் பதறிப் போன கோமளவல்லி தனது தாயின் கையைப் பிடித்து மெதுவாக வருடிய வண்ணம், "அம்மா! ஏன் இப்படிக் கவலைப் படுகிறீர்கள்? கச்சேரியில் நடந்த விசாரணை நமக்கு அநுகூல மாகவே முடிந்திருக்கிறது அதனால் நமக்கு எவ்வித அவமானமும் ஏற்பட நியாயமில்லை. நீங்கள் பெருத்த சந்தோஷ சங்கதியைக் கேட்கப் போகிறீர்கள். சீதாதேவி அக்கினிப் பிரவேசம் செய்து யாதொரு களங்கமுமில்லாமல் எழுந்தது போல நீங்கள் இறந்து போய் மறுபடி புனர்ஜென்மம் எடுத்தீர்கள். உங்களைப் பிடித் திருந்த துர்பாக்கியம் எல்லாம் நேற்றோடு ஒழிந்து போய்விட்டது. இனிமேல் துன்பமே உங்களை அணுகாது. நீங்கள் கவலைப்பட வேண்டாம்" என்று பணிவாகவும் மரியாதையாகவும் கூறினாள்.

அதைக்கேட்ட கல்யாணியம்மாள் வியப்படைந்து, "கச்சேரியில் நடந்த விசாரணை நமக்கு அநுகூலமாகவா முடிந்துவிட்டது? அப்படியானால், மைனரை விட்டுவிட்டார்களா? என்மேல் எவ்விதக் குற்றமும் ஏற்படாமல் போய்விட்டதா?" என்று மிகுந்த ஆவலோடு கேட்க, கோமளவல்லியம்மாள், "அம்மா! மைனர் தீவாந்திர சிக்ஷையடைந்து விட்டார். அவர் உங்களுடைய சொந்தப் பிள்ளையல்லவாம்" என்றாள். கல்யாணியம்மாள், "ஆ! என்ன! தீவாந்திர சிக்ஷையா! அப்படியானால், இந்தக் குடும்பம் வார்சில்லாமல் நசித்துப் போகுமே! நீ சொல்வது நிஜந்தானா? இது தானா சந்தோஷ சங்கதி?" என்று அளவிலடங்கா வியப்போடு கேட்க, கோமளவல்லியம்மாள், "ஆம் அம்மா! அந்த மைனருக்கு தீவாந்திர சிக்ஷுதான் கிடைத்து விட்டது. ஆனால் வேறொருவர் உங்களுடைய நிஜமான பிள்ளை என்று ஜட்ஜி தீர்மானித்து விட்டார்" என்றாள்.

அதைக் கேட்ட கல்யாணியம்மாளது மனம் விவரிக்க சாத்திய மில்லாத சஞ்சலமும் மனவெழுச்சியும் அடைந்தது. அந்த ஒரு நிமிஷமும் மகா கொடிய நீண்ட கற்பகாலம் போலத் தோன்றியது; கல்யாணியம்மாள், "என்ன! என்ன! வேறொருவரா என் பிள்ளை? அந்தப் பிள்ளை எங்கே இருக்கிறதாம்?" என்று சகிக்க இயலாத

பதைப்போடு வினவினாள். எல்லா விஷயங்களையும் உடனே சொல்லிவிட்டால், தாய்க்கு அது சகிக்க முடியாமல் போய்விடும் என்ற நினைவினால் கோமளவல்லியம்மாள் அதுவரையில் வார்த்தைகளை அடக்கிப் பேசி வந்தவளாதலால், இன்னார் தான் சொந்தப்பிள்ளை என்பதை அதற்கு மேல் தான் மறைக்கலாமா கூடாதா என்று சிறிது நேரம் அவள் சிநதனை செய்தாள். ஏனெனில, தங்களது ஜாகைக்கு வந்து வீணை கற்றுக் கொடுத்து வந்த மதனகோபாலன் கடைசியாகத் தனது தாயினிடத்தில் ஏதோ துன்மார்க்கமான காரியத்தைச் செய்ய எத்தனித்து அதன் பொருட்டு வேலைக்கு வராமல் நின்று போனவனாதலால், அப்படி நடந்து கொண்டவனே சொந்தப்பிள்ளை என்பதை வாயில் வைத்துச் சொல்ல, அந்த யௌவன மடந்தைக்கு மனமில்லை. ஆகையால் அவள் தனது தாயை நோக்கி அன்பாகவும் பணிவாக வும் பேசத் தொடங்கி, "உங்களுடைய சொந்தப் பிள்ளை இன்னார் என்பதை ஜட்ஜி கண்டுபிடித்து விட்டார். ஆனால் அதை நான் சொன்னால் உங்களுடைய மனசுக்கு நம்பிக்கைப்படாது; ஆகையால் இதோ இருக்கும் பாக்கி வாக்குமூலங்களையும் ஜட்ஜியின் தீர்மானத்தையும் நான் படித்தே காட்டுகிறேன்; அதைக் கேட்டால உங்களுக்கு எல்லா விஷயங்களும் திருப்திகரமாகத் தெரிந்துபோம்" என்றாள்.

அபபோது, சகிக்க முடியாத ஆவலினாலும சங்கடத்தினாலும், வதைப்பட்டுத் துடிதுடிததிருந்த கல்யாணியம்மாள், "நீ எல்லா வற்றையும் படிக்கிற வரையில் என் மனம் பொறுக்காது. அவன் யார் என்பதை மாத்திரம் நீ சொல். பிறகு விவரங்களைப் படிக்கலாம்" என்றாள்.

கோமளவலலியம்மாள, "சொநதப் பிளளை நம்முடைய மதனகோபாலனாம்" எனறாள்.

கல்யாணியம்மாள் திடுககிட்டெழுந்து உடகார்ந்து, "யார்? யார்? இங்கே வீணை கற்றுக கொடுத்த பையனா?" என்று மிகுந்த ஆவலோடு கேடக, அவளது கைகாலகளும் தேகமும் ஆவேசத் தினால் வெடவெட வெனறு ஆடுகினறன. உள்ளம் பொங்கி எழுந்து விண்ணிலிருந்ததோ மண்ணிலிருந்ததோ என்பது

தெரியாமல் பறக்கிறது. இருதயம் பூரித்துப் படீரென வெடித்து போய்விடுமோ என்னும் நிலைமையில் இருக்கிறது! அதைக் கண்ட கோமளவல்லியம்மாள் மிகுந்த அச்சமும் கவலையும் கொண்டு, "அம்மா! பதற வேண்டாம். சாந்தப்படுத்திக் கொள்ளுங கள். உங்களுடைய பலவீனமான நிலைமையில் நீங்கள இப்படிப் பதறினால் அது உடம்புக்குக் கெடுதல் செய்யும். இங்கே வீணை கற்றுக் கொடுத்த மதனகோபாலன தான் சொந்த பிள்ளையாம்; ஜட்ஜி சொல்லுவது நிஜமா அல்லவா எனபதை நீங்கள் திருப்தி கரமாக அறிந்து கொள்வது அவசியமான விஷயம்; நான் படிக் கிறேன கேளுங்கள்" என்று கூறிய வண்ணம் டாக்டர் கேசவலு நாயுடுவின் வாக்குமூலத்தையும், சின்னையா நாயுடுவின் வாக்கு மூலத்தையும், ஜட்ஜியின் தீர்மானத்தையும் எடுத்து அதி விரைவாகப் படித்து, அதற்கு மேல் மதனகோபாலன மொட்டை மெத்தையிலிருந்து வீழ்ந்த விவரத்தை இரண்டொரு வார்த்தை களில் கூறினாள். அவள அவ்வாறு சொல்லி முடிக்கும் முன் கல்யாணியம்மாள் சடக்கென்று கட்டிலை விட்டுக் கீழே இறங்கினாள், அவளது அப்போதைய தோற்றம் மகா பயஙகர மான பைத்தியமும் ஆவேசமும் கொண்டவளது தோற்றம போல இருந்தது. அவளது தேகம் கட்டிலடங்காமல் துடிதுடித்துப் பறந்தது. அவளது பிரமாதமான ஆவேசத்தைக் கண்ட தாதிகளும் கோமளவல்லியம்மாளும் அஞ்சி நடுங்கி வாயைத் திறந்து வார்த்தை சொல்லவும் பயந்து நின்றனர். அப்போது அந்தச் சீமாட்டி பொன்னம்மாளை நோக்கி, "அடி பொன்னீ! உடனே ஓடி மோட்டார் வண்டியை வாசலில் நிறுத்தச்சொல்; மைலாபபூருககுப் போய் மதனகோபாலனைப் பார்க்க வேண்டும்" என்றாள். அவள் அந்த வாாத்தைகளைச் சொல்வதற்கு முன் அவளது நெஞ்சடைத்து பலவிடங்களில் வாய் குழறிப் போய் விட்டது. தேகம் புயற் காற்றில் அசைந்து சின்னாபின்னப்படும் மெல்லிய மாந்தளிர் போல ஆடி அசைந்து முறுக்கிக் கொள்ளுகிறது. அப்போது பொன்னம்மாள் மோட்டார் வண்டி தயாரிக்க ஓடினாள். தனது தாயின் பக்கத்தில் நின்று கொண்டிருந்த கோமளவல்லியம்மாள் பணிவாகவும் அச்சமாகவும் தனது தாயை நோக்கி, "அம்மா! உங்கள் உடம்பில் சிறிய மஸ்லின் துணி தான் இருக்கிறது.

சரியானபடி சேலை கட்டிக் கொள்ளுங்கள்" என்று கூறிய வண்ணம், கட்டிலில் கிடந்த விலையுயர்ந்த ஒரு பனாரீஸ் சேலையை எடுத்து உடுத்திவிட முயல, கல்யாணியம்மாள் தனது அவசரத்திலும் ஆத்திரத்திலும் அதைத் தானே வாங்கித் தாறுமாறாகச் சுற்றிக் கொண்டபடி, "அடி பொன்னீ! போட்டார் தயாராகிவிட்டதா?" என்று மிகவும் பதற்றமாக அதட்டிக் கேட்க, அந்தச் சமயத்தில், "அம்மா! அம்மா!" என்று யாரோ ஒருவர் கதறிப்பதறி அந்த அந்தப் புரத்தின் வாசலண்டை ஓடிவந்த ஓசை உண்டாயிற்று; அந்த அபூர்வமான குரலைக் கேடடு யாவரும் திடுக்கிடடு மருண்டு தங்களது கவனத்தையும் திருஷ்டியையும் வாசல் பக்கம் திருப்பி வியப்புற்று நிற்க; அடுத்த நிமிஷத்தில் மதனகோபாலன் தாயைப் பிரிந்த கன்று போல மிகுந்த வாஞ்சையும் ஆவலும் கரைபுரண் டோடவிட்ட முகத்தோடு, கல்யாணியம்மாளை நோக்கி ஓடி வந்தான். அப்படி வந்தவன் மதனகோபாலன் என்பதை உணர்ந்த நொடியில், கல்யாணியம் மாள் சன்னதங் கொண்டவள் போல ஒரே பாய்ச்சலாகப் பாய்ந்து, "வாடா! என் கண்ணே! என் முத்தே! என் தங்கமே" என்று கொஞ்சி அழைத்த வண்ணம் மதனகோபாலனை இறுகத் தழுவி உச்சி முகந்து முத்த மழை பொழிந்து, "அப்பா! மகனே! என் செல்வமே! என் பிள்ளைக் கலிதீர்த்த வள்ளலே! மாணிக்கமே! விலையில்லா நிதிக்குவியல் போன்ற இப்படிபபடட சற்புத்திரனை நான் பெற்றிருந்தும், இவ்வளவு காலம் பிரிந்திருக்க, நான் எப்படிப்பட்ட மகாபாதகம் செய்தேனோ! நான் யாருடைய பிள்ளையைப் பிரிநதேனோ! யாருடைய குடும்பத்தைக் கலைத்தேனோ! ஆகா! இப்போதாவது நம்மைச் சேர்த்து வைக்க, தெய்வத்துக்கு மனமிரஙகியதே! என்னபபா! என் சீராளா! மூன்றாவது பிராயத்தில் காணாமல் போன உன்னை நான் மறுபடி காணப் போகிறேனா என்று இரவு பகலாய் இரத்தக் கண்ணீர் சொரிந்து எவ்வளவு காலம் அழுதிருப்பேன் தெரியுமா! எமன் வாயில் பட்ட மார்க்கண்டேயன் மீண்டது போல நீ இப்போது வந்து சேர்ந்தாய்; அந்த மார்க்கண்டேயனைப் போல நீயும் என்றும் சிரஞ்சீவியாக வாழக்கடவை" என்று கூறினாள். அதற்குள் அந்தச் சீமாட்டியின் மனதில் பொங்கி எழுந்த பேரானந்த வெள்ளத்தினால், நெஞ்சடைந்து

வார்த்தைகள் திக்கிப் போயின; அவளது தேகம் ஆனந்த நிருத்தனம் செய்கின்றது; அநதப் பதினாறு வருஷ காலத்திலும் அந்தச் சீமாட்டி தனது புத்திரனால் எவ்வளவு களிப்பும் இன்பமும் எய்திருப்பாளோ அவ்வளவும் ஒன்றுகூடித் திரண்டு வட்டியும் முதலுமாக ஆயிரம் மடங்கு பெருகி அவனோடுகூட வந்ததோ என ஐயுறும்படி, கல்யாணியம்மாள் மெய்ம்மறந்து, அன்னியர் இருப்பதையும் உணராமல் மதன கோபாலனை ஒரு கைக குழந்தை போல எடுத்தெடுத்து மார்போடு அணைத்து உருகிப் பாகாயோடித் தனது கண்களிலிருந்து சப்த மேகங்களும வருஷிப்பது போல ஆனந்த பாஷ்பத்தை ஆறாகப் பெய்து அவனை நீராட்டுகிறாள்; தனது மனதிலிருந்து பொங்கிப் பொங்கி எழும் இன்பப் பெருக்கைத் தாங்கமாட்டாமல் பொங்கிப் பொருமி விம்மிவிம்மி அழுகிறாள். அது போலவே மதனகோபாலனும ஆனந்தக் கடலில் ஆழ்ந்து மிதந்து மெய்ம்மறந்து சுவர்க்க போகம் அநுபவிப்பவன் போலப் பூரித்துப் புளகாங்கிதம் அடைந்து வாய்பேசா ஊமையனாய் ஆனந்தக் கண்ணீரை ஆறாகப் பெருக விட்டுத் தாயோடு தாயாக ஐக்கியமாகி நின்றான். அவன், "அம்மா அம்மா" என்று அழைத்துக் கொண்டு ஓடிவந்த ஓசையைக் கேடடு அந்த பங்களாவிலிருந்த எல்லா ஜனங்களும் அந்த ஆனநதக் காட்சியைக் காண வேண்டும் என்ற ஆவல் கொணடு ஓடோடியும் வந்து கல்யாணியம்மாளது அந்தப்புரத்தில் கும்பலாகக்கூடி நெருங்கினர். பக்கத்திலிருந்த புஸ்தக மகாலில் நித்திராதேவியை அணைந்து படுத்திருந்த சிவஞான முதலியாரும் திடுக்கிட்டு விழித் தெழுந்து உள்ளே ஓடிவந்து நிற்கிறார். பதினாறு வருஷகாலம் பிள்ளையும் தாயும் பிரிந்திருந்து கூடிய, கல்லுங் கரைந்துருகும் படியான அந்த அரிய காட்சியை அங்கிருந்தோர் யாவரும் கண்டு களித்து நெக்கு நெக்குருகி விம்மிவிம்மி அழுது ஆனந்த பாஷ்பம் சொரிந்து பொங்கிப் பொருமி, "ஐயோ! என்னப்பா! இப்படிப்பட்ட ராஜாங்கத்தில் பிறந்த உனக்கு என்ன விதி வந்ததபபா!" என்று வாய் விடடுப் புலம்பிப் பிரலாபிக்கின்றனர். அவர்கள் பேசிய ஒவ் வொரு வார்த்தையையும் கேட்கும் போதெல்லாம் அவர்களுக்கு மயிர் சிலிர்த்து ஆனந்தம் பரவுகிறது; இன்பப் பெருக்கினால் நெஞ்சடைத்துப் போகிறது. அப்படிப்பட்ட நிலைமையில் ஜனங்

களிருககு, அப்போது தனது தாயின் மார்போடு ஒன்றியிருந்த மதன கோபாலன் தனது தாயை நோக்கி, "அம்மா! நான் ஜென்மம் எடுத்த தற்கு இன்றைய தினநதான சுபதினம். இத்தனை வருஷ காலம் தங்களை விட்டுப் பிரிந்து, தஙகள் முன்பாகவே கேவலத் தொழில் செய்து வந்த எனனைத் தஙகள் பிள்ளை என்று ஏற்றுக் கொள்வீர் களோ மாட்டீர்களோ எனறு நேற்று முழுதும் என் மனம்பட்ட பாடு சுவாமிக்குத் தான் தெரிய வேண்டும். நல்ல வேளையாக ஒப்புக் கொண்டீர்களே, இது ஒன்றே போதும். எனக்கு வேறே எந்தச் செல்வமும் ஒரு பொருட்டானதல்ல" என்றான். அதைக் கேட்ட கல்யாணியம்மாள, "அப்பா! கண்ணே! என்னுடைய வயிற்றில் ஜனித்த, விலையில்லா மாணிக்கமான உனக்குச் சமமான குழந்தை இந்த ஈரேழு பதிநாலு லோகத்திலும் கிடைப்பானா! எவர்க்கும் கிட்டாத இப்படிப்பட்ட பாக்கியத்தை நான் வேண்டாம் என்று சொல்வேனா! முப்பத்து முக்கோடி தேவாகளும், மும்மூர்த்திகளும், மற்றவரும் சேர்ந்து அரும்பாடு பட்டுக் கடைந்தெடுதத தேவாமிர்தத்தை, அது கேவலம் சமுத் திரத்தில் கிடந்ததென்று யாராவது ஏளனம் செய்து விலக்குவார் களா? என் ராஜாவே! என் குலத்தை விளக்க வந்த செல்வக் கொழுந்தே! உனக்குச் சமமானவன் நீயேயன்றி, இந்த உலகத்தில் வேறே எவனும் இருக்க மாட்டான என்பது முக்காலும் சத்தியம். அபபடிப்படட நிகரற்ற சிஙகக்குட்டி இருநது ஆண்டனுபவிக்க வேண்டிய இந்த ராஜாங்கத்தில் கேவலம் ஒரு நாய்க்குட்டியை இதுவரையில் உட்கார வைத்தோமே என்று என் மனம் எவ்வளவு தூரம் கொதிக்கிறது தெரியுமா? அந்த விஷயத்தில் நீ எங்கள் மேல் ஒருவேளை அருவருபபடைந்து எங்களைப் புறக்கணித்து விடுவாயோ என்று என மனம் படும்பாடு சுவாமிககுததான் தெரிய வேணடும்" எனறு உருக்கமாகக் கூறினாள். அதைக் கேட்ட மதனகோபாலன, "அம்மா! என்னுடைய ஸ்தானத்திலிருந்த அம்பட்டச்சியின் பிள்ளையை நான் ஒருநாளும் வெறுத்துத் தூஷிக்க மாட்டேன். அவன நமக்குப் பெருத்த உபகாரம் செய்திருக்கிறான். எனனைத் திருடன் அபகரித்துக் கொண்டு போன பிறகு அவன் மாத்திரம் இல்லாமல் இருந்தால், இந்நேரம் இந்த சமஸ்தானம் எல்லாம் பராதீனமாகிப் பங்காளியின்

வசப்பட்டிருக்கும், அப்படிப் போகாமல் அணை போட்டது போல அவன் இது வரையில் ஒரு காவல்காரன் காப்பது போல இருந்து இந்த சமஸ்தானத்தைக் காத்து என்னிடம் ஒப்புவித்தானே! அவனை இகழ்வது நன்றி கெட்ட காரியம் அல்லவா? அப்படிச் செய்ய என் மனம் ஒருநாளும் ஒருப்படாது" என்று மனப்பூர்வ மான உருக்கத்தோடு கூறினான. அவனது குணத்தழகைக் கண்ட ஜனஙகள எல்லோரும் விம்மிதம அடைந்து பூரித்து, "அடாடா! என்ன குணம்! என்ன மனசு!" என்று வியந்து கூறினா. அவனது வார்த்தையைக் கேட்டு உள்ளம் குளிர்ந்து மயிர் சிலிர்ககப் பெற்ற கலயாணியம்மாள மனம்நைந்து, "ஆகா! இப்படிப்பட்ட பெரும புத்தியும், தயாள குணமும் உனக்கு இருப்பதாலேதான் மலை போல வந்த ஆபத்தெல்லாம் பனிபோல விலகியது. கடைசியில உன்னுடைய சம்பத்து எல்லாம் உனக்கே வநது சோந்தது. இப்படிப்பட்ட இளகிய மனசிருநததால்தான, பெற்ற தாய் கீழே விழுந்து கிடந்ததைக் கண்டு தானும் தற்கொலை செய்து கொளள அநத மனசு எண்ணியது. தாய் இறந்தாள் எனறு கேட்டு, அதைச் சகியாமல் பிளளையும் தன்னைக் கொன்று கொண்டதாக நாம் இநதப் பூலோகத்தில எப்போதாவது கேட்டதுண்டா! தனனுடைய உயிரைக் காட்டிலும் விசேஷமாக என்னை மதிக்கும் இப்படிப் பட்ட அருங்குணச் செல்வனை நான் புத்திரன் என்று ஏற்றுக் கொள்ளாவிட்டால், எனக்கு ரெளரவாதி நரகம் அல்லவா சித்திக்கும். அப்பா! என் கண்மணியே! ஆகா! இந்த சமஸ்தானமும் மற்ற எல்லாச் சம்பத்தும் எனக்கிருப்பதைப் பற்றி நான் அவ்வளவாக சந்தோஷப்படவில்லை; விலையில்லா மணியாகிய நீ என் வயிற்றில் வந்து பிறந்ததைப் பற்றி நான் அடையும் பெருமையும் ஆனந்தமும் தேவேந்திர பதவியே எனக்குக கிடைப்பதானாலும் உண்டாகப் போகிறதில்லை" என்று மிகுநத ஆசையோடு மதனகோபாலனை இன்னொரு முறை ஆலிங்கனம் செய்து உச்சி முகந்தாள. உடனே மதனகோபாலன், "அமமா! தன வால் மயிரில் ஒன்று போனாலும் அந்த அவமானத்தைப பொறாமல் உயிரை விடும் கவரிமானைப் போல, நீங்கள் உயிரை விட்டாகிலும் மானத்தைக் காபபாறறிக கொள்ள முயன்றீகளே! அப்படிபபட்ட ஸதிரீ ரத்னமாகிய தங்களுடைய திருவயிற்றில

ஜெனித்த என்னிடத்தில் ஏதாவது நற்குணங்கள் இருக்குமானால், அவைகள் தங்களால் கொடுக்கப்படட பிச்சையேயன்றி வேறல்ல" என்று மிகவும் மனம்நைந்து கூறினான்.

அந்தச் சமயத்தில் கல்யாணியம்மாள், தனக்குச் சமீபத்தில் சிவஞான முதலியார் வந்து நின்றதைக் கண்டு நாணமும் வெட்கமு மடைந்து மதனகோபாலனை விடுவிக்க, அந்தச் சமயத்தில் அவன், தனக்கருகில் வந்து நின்ற கோமளவல்லியம்மாளை நோக்கி திடுக் கிட்டு, "ஆ! கோமளவல்லி நீயா நிற்கிறாய்!" என்று மிகுந்த ஆவலோடும ஆசையோடும் கேட்க, அந்த யௌவனப் பெண்மணி, "அண்ணா" என்று வீரிடடுக் கதறிய வண்ணம் கரை கடந்த வாஞ்சையோடும ஆவலோடும் பாய, மதனகோபாலன் தனது தங்கையைக கட்டியணைத்துச் சீராட்டி, "ஆ! என் தங்கமே! உனனுடைய அருமையான நற்குண நன்னடத்தையைப் பார்த்த போதெல்லாம் என் மனம் என்ன நினைத்தது தெரியுமா? இப்படிப் படட தஙகை ஒருத்தி எனககு இருக்கக்கூடாதா? என்று எத்தனை தரம் என் மனம் எண்ணி எண்ணி ஏங்கியது தெரியுமா! நீ எனக்கு உண்மையிலேயே தங்கையாக இருப்பதனாலே தான் என் மனசில் சுவாமி அந்த நினைவைக் கொடுத்தார் என எண்ண வேண்டியிருக்கிறது! அமமா! நீ நலல உத்தமி; நீ தீர்க்க சுமங்கலி யாக நீடுழி காலம் வழ ஈசுவரன் அருள் புரிவார்" என்றான்.

அதைக் கேட்ட கோமளவல்லியும் மற்ற எல்லோரும் தேவாமிரு தத்தைப் பருகுவோர் போல இனபமயமாக நிறைந்து ஆனந்த பாஷ்பம் சொரியலாயினர்.

அந்தச் சமயத்தில் அநத அந்தப்புரத்தின் வாசலில் வந்து, உள்ளே நுழைந்த கிருஷ்ணாபுரம் ஜெமீந்தார் மகிழ்ச்சியும், பூரிப்பும் புன்னகையும ஜ்வலித்த வதனத்தினராய் எல்லோரையும் பார்த்து உரக்கப் பேசத் தொடஙகி, "ஆகா! எனக்குப் பங்கில்லையா? நீங்கள் மாத்திரந்தானா எல்லா ஆனந்தத்தையும் அனுபவிக்கிறது? இது தருமநதானா? "காத்திருந்தவன் பெண்ஜாதியை நேற்று வந்தவன் கொண்டு போன கதையாக இருக்கிறதே!" என்று நயமாகவும் சந்தோஷமாகவும் பேசிய வண்ணம் உள்ளே வந்தார். அவர் வந்ததைக் கண்டு யாவரும் திடுக்கிட்டுத் தங்களது கவனத்தை

அவர்மீது திருப்பினர். ஆனால் அவரைக் கண்ட உடனே கல்யாணியம்மாளினது மனதில் ஒருவித அருவருப்புத தோன்றியது. ஏனெனறால், அவர் கிருஷ்ணாபுரம் ஜெமீந்தார் என்பது அப்போது அந்தச் சீமாட்டிக்குத் தெரியாதிருந்தது. சில நாட்களுக்கு முன் தன்னிடம் வந்து தன்னை மிரட்டிய பசவண்ண செட்டியாரே வந்திருப்பவன என்று கல்யாணியம்மாள் நினைதத தன்றி மதனகோபாலனுக்காக வக்கீல் நோட்டீஸ் வந்ததற் கெல்லாம் அவரே மூலாதாரமான மனிதர் என்று அந்த மாது சிரோன்மணி நினைத்தாள் ஆதலால, தனது விஷயத்தில் கொஞ்சமும் தயை தாக்ஷணியம் பாராமல் நடந்து கொண்ட அநத மனிதரைக் கண்டு, அவருக்குத் தனது அந்தப்புரத்தில் என்ன வேலை எனறும் தனது உத்திரவின்றி அவர் ஏன் உள்ளே நுழைந தார் எனறும் நினைத்து ஆயாசமடைந்து அவரை நோக்கி, "ஐயா செடடியாரே! உம்முடைய சரக்கை எல்லாம் விற்பதற்கு இனி நீர் வேறே கடை பார்க்க வேண்டுமு; அது இங்கே விற்பனை ஆகாது. தாயும் பிள்ளையும் எப்படியும் சேர்ந்து கொளளுவாாகள். நடுவிலிருந்து கலகம் செய்யும் மனிதருடைய பாடுதான திண்டாட்ட மாகி விடும். போதும் நீர் உறவு கொண்டாட வந்தது. தயவு செயது விடைபெற்றுக் கொள்ளும்" என்றாள்.

அவ்வாறு தனது தாய் கிருஷ்ணாபுரம் ஜெமீந்தாரிடத்தில் கடுமையான சொற்களை உபயோகித்ததைக் கண்ட மதனகோ பாலன திடுக்கிட்டு முகவாட்டமடைந்து தான் என்ன செயவ தென்பதை அறியாமல தத்தளிக்கலானான். சிவஞான முதலி யாரும், கச்சேரியில் அவரைப் பார்ததிருந்த வேலைக்காரர்களும் திகைப்பும் வியப்பும் அடைந்து ஊமைகள போல நின்றனர்.

அப்போது கிருஷ்ணாபுரம் ஜெமீந்தார் கொஞ்சமும் பதறாமலும் தமது சந்தோஷத்தை மாற்றாமலும், வந்த போதிருந்தது போலவே, சுமுகமாகப் பேசத் தொடங்கி, "அம்மணி! உங்களிடத்தில் இன்ன மும் வியாபாரம செய்ய என்னுடைய சரக்கென்ன விற்பனை ஆகாமல கடடுக்கடையாகக் கிடக்கிறதென்று பாாத்தீர்களா? உங்களிடத்தில் இன்னமும் யாா வியாபாரம் செய்வார்கள்? நீஙகள் தான் என்னிடத்தில் ஏற்கெனவே பட்ட கடனை இன்னமும

கொடுக்கவில்லையே! எனக்கு நீங்கள் கொடுக்க வேண்டிய கடனை முதலில் தீர்த்துவிட்டு அதன் பிறகு சரக்குக் கேளுங்கள்" என்றாா.

அவரது சொற்களைக் கேட்ட கல்யாணியம்மாள் திகைப்பும் வியப்பும் கோபமுமம அடைநது, "என்ன செட்டியாரே! உமக் கென்ன பைத்தியம் முற்றிப் போய்விட்டதா. **பூசை வேளையில் கரடியை விட்டு ஓட்டுவது போல, அழையாத வீட்டில் நுழைந்து வாய் புளித்ததோ மாங்காய் புளித்ததோ** என்று என்னென்னவோ உளறுகிறீரே! உம்மை யார் இந்த அந்தப்புரத்துக்குள் அனுமதி இல்லாமல வரச் சொன்னது? போமம வெளியில்" எனறு அதட்டிக் கூறினாள்.

அதைக் கேட்ட மதனகோபாலனது எண்சாண் உடம்பும் ஒரு சாணாகக் குன்றியது. அவன் மாறிமாறித் தாயையும் கிருஷ்ணாபுரம் ஜெமீந்தாரையும் பார்த்து அளவிறந்த சஞ்சலத்தோடு விழிக்கிறான். அப்போது கிருஷ்ணாபுரம் ஜெமீந்தார் முன்னிலும் அதிகரித்த சந்தோஷமும் புன்னகையும் அடைந்து, "அம்மணீ! நான் வெளியில் போகத் தடையில்லை. உங்களுடைய பிள்ளையை இநதப் பதினைந்து வருஷகாலமாக என பிள்ளையாக பாவித்து வளாத்து இன்றைய தினம் உங்களிடம ஒப்புவிக்க நான் இங்கே வந்தேன். இந்தக் காரியமாக நான் இந்த அந்தப்புரத்தில் வருவதற்கு நீங்கள் எனக்கு அனுமதி கொடுக்க மாட்டீர்களா? உங்களுடைய பிள்ளையைச் சரியான நிலைமையில் திரும்பவும் ஒப்புக் கொண்டு விட்டதாக நீங்கள் எனக்கு ரசீது கொடுங்கள்; அதன் பிறகு அதற்காக எனக்கு நீங்கள் சன்மானம் கொடுப்பது உங்களுடைய கண்ணியத்தையும் விருப்பததையும் பொருத்தது" என்று மெது வாகவும் நயமாகவும் பேசினாா.

அந்த வாாத்தையைக் கேட்ட மதனகோபாலனது மனம குளிர்ந்தது; முகமும் மலரத் தொடங்கியது.

ஆனால், கல்யாணியம்மாள் திடுக்கிட்டு வியப்புற்று, "என்ன! என்ன! என்னுடைய பிளளையை நீரா காப்பாற்றினீர்! நீர் யாரோ வழியில் போகிற ஒரு செட்டியார். உமக்கும் என் மகனுக்கும்

என்ன சமபந்தம்? நீர் கிருஷ்ணாபுரம் ஜெமீந்தாருடைய கூட்டாளி எனகிற ஓர் ஏதுவை வைத்துக் கொண்டு, உமகுச் சம்பநத மிலலாத விஷயங்களில எல்லாம் தலையிடுவது ஒழுங்கல்ல; தயவு செய்து மரியாதையாக வெளியில் போயவிடும். மகாராஜன அந்தக கிருஷணாபுரம ஜெமீநதார் அல்லவா என் பிள்ளைக்குத் தகப்பனாராக இருநது அவனை ஆளாக்கினார். அவர்கள் ஆயிரங காலம க்ஷேமமாக இருக்க வேணடும! ஆனால், இப்படிபபட்ட தங்கமான பிரபுவின் விஷயத்தில் தெய்வம் மாத்திரம சதி செயது விட்டது. அவாகளுடைய சமசாரம் குழந்தைகளை எல்லாம அநதச சதிகார தெய்வம் வாயில் போட்டுக கொண்டுவிட்டது; மகராஜா! என வயிறு குளிர்ந்த மாதிரி தர்மகுணசீலருடைய மனசும குளிர வேணடும. அநத வளளல மாத்திரம இப்போது எனக்கெதிரில வநது தரிசனம் கொடுப்பாரானால் நான் அவர்களுடைய காலில லட்சந்தரம் விழுந்து எங்களுக்கெல்லாம் புத்துயிர் கொடுத்த அநதச் சீமானை நான என்னுடைய குலதெய்வமாக வைத்து வணஙகு வேன" என்றாளா.

அதைக கேட்ட கிருஷ்ணாபுரம ஜெமீநதார், "ஓகோ! அப்படியா! அதிருக்கட்டும். நீங்களா கிருஷ்ணாபுரம் ஜெமீநதாரைத தெயவ மாகக் குமபிடுவேன எனகிறீகளே! அவரும் சோறநதுதான இநத மதன கோபாலன விஷயத்தில் வக்கீலைக் கொண்டு நோட்டீஸ அனுபபச செயதாா என்பதை நான ருஜூப்பித்தால, அதன் பிறகு நீஙகளா எனன செயவீர்களா? இப்போது என்னை வெளியில துரத்துவது போல அவரையும துரத்துவீர்களா, அல்லது அப்போதும அவரை தெய்வமாகவே வைத்துக் கும்பிடுவீர்களா?" எனறார். கல்யாணியமமாளா, "என் பிள்ளையின விஷயத்தில கைம்மாறு கருதாது எவ்வளவோ அபாரமான உதவியைச சொரிந்துள்ள அந்த வளளல் என் விஷயத்தில் எவ்வளவு தான தவறு செயதிருநதாலும், அதை நான் நினைக்கவே மாட்டேன. அவாகளா இநத நோட்டீஸ் விஷயததில் எனனுடைய பையனுககு நன்மையை நாடி மனப்பூர்வமான அபிமானத்தோடு தான செய்திருக்க வேண்டும் ஆகையால், அவர்கள் விஷயத்தில் என்னுடைய நன்றி விசுவாசம் முன்னிலும் அதிகரிக்குமேயன்றிக்

குறையாது. அவர்கள் செய்யும் காரியம் என் பிள்ளையின் நன்மையை நாடியது. உங்களைப் போன்றவர்கள் செய்வது வீண் கிருத்திரமம். அவ்வளவு தான் பேதம்" என்றாள். கிருஷ்ணாபுரம் ஜெமீந்தார் முன்னிலும் அதிக குதூகலமாகப் பேசத் தொடங்கி, "ஓகோ! அப்படியா ஒரே குற்றத்தை கிருஷ்ணாபுரம் ஜெமீந்தார் செய்திருந்தால் அவருக்கு ஸ்தோத்திரம் அதிகரிக்கிறது; செட்டியார் செய்திருந்தால் அவரை அடித்து வெளியில் ஓட்டுகிறது. அப்படியானால், சன்மானமோ தண்டனையோ கிடைப்பது மனிதரைப் பொருத்ததாக இருக்கிறதே ஒழிய குற்றத்தைப் பற்றியதல்ல. ஆனால், இதில் இன்னொரு சந்தேகம். கிருஷ்ணா புரம் ஜெமீந்தாரும், இந்த செட்டியாரும் ஒரே மனிதராக இருந்துவிட்டால், அப்போது தண்டனை கிடைக்குமா? சன்மானம் கிடைக்குமா?" என்றார்.

அந்த வார்த்தையைக் கேட்ட கல்யாணியம்மாளது மனதில் அப்போதே ஒருவித சந்தேகமுண்டாயிற்று. ஆனாலும் விஷயம் இன்னதென்பது நிச்சயமாகத் தெரியாமையால், சிறிது தடுமாறி மதனகோபாலனது முகத்தை நோக்க, அவன் "அம்மா! இவர்கள் தான் கிருஷ்ணாபுரம் ஜெமீந்தார். செட்டியார் என்பது இவர்கள் ஒரு காரணத்தை முன்னிட்டு வைத்துக் கொண்ட பொய்ப் பெயர்" என்று பணிவாகக் கூறினான்.

அதைக் கேட்ட கல்யாணியம்மாள் திடுக்கிட்டு **இடியோசையைக் கேட்ட நாகமென நடுநடுங்கி** அதிக விசையாக ஓடி கிருஷ்ணாபுரம் ஜெமீந்தார் காலில் விழுந்து கும்பிட்டு அவரது பாதத்தைத் தொட்டு வணங்கி, "ஆ! என் வள்ளலே! என் தெய்வமே! எங்கள் குடும்பத்தை நிலைநிறுத்திய தாதாவே! நாங்களும் எங்களுடைய சந்ததியாரும் அல்லும் பகலும் அநவரதமும் தங்களை நினைத்து நினைத்து நன்றியறிதல் செலுத்தக் கடமைப்பட்டவர்களாகி விட்டோம். இந்த உலகங்களை எல்லாம் சேர்த்து எனக்கு உதவுவது போலவும், எமன் வாயில் நுழைந்த உயிரை மீட்டுக் கொடுப்பது போலவும், தாங்கள் என் மகனை எனக்குக் கொடுத்து, இருளடைந்து கிடந்த என் மனசுக்கும் இந்த சமஸ்தானத்துக்கும் இன்பச்சுடர் காட்டவல்ல கதிரவனான என் மகனை வளர்த்து

மகாராஜன் போலவும், மன்மதன் போலவும், மகாவிஷ்ணு போலவும் உருப்படுத்தி, எனக்களித்த எங்கள் குலதெய்வமாகிய தங்கள் விஷயத்தில் நான் சற்றுமுன் அபசாரமான வார்த்தைகளை உபயோகித்ததை எல்லாம் மறந்து, என்னை க்ஷமித்தருள வேண்டும். என் குழந்தையை வளர்த்த விஷயத்தில் தாங்கள் ஏதோ சன்மானம் கேட்டீர்களே! தாங்கள் செய்த உதவிக்குச் சமமாக நான் கொடுப்பதற்கு இந்த உலகில் ஏதாவது பொருளிருக் கிறதா? என்னிடத்தில் உள்ள பொருட்களில் எல்லாம் அரிய பொருள் என்னுடைய உயிர்தான்; அதை எடுத்து இப்போதே தங்களுடைய காலடியில் வைத்துவிடட்டுமா? தங்களுக்கு விருப்ப மானால் சொல்லுங்கள். ஒரே நொடியில் கொடுத்து விடுகிறேன்" என்றாள்.

அதைக் கேட்ட கிருஷ்ணாபுரம் ஜெமீந்தார் பூரித்துப் புளகாங்கித மடைந்து நகைத்து, "சரி, சரி, எழுந்திருங்கள்; எழுந்திருங்கள். நீங்கள் சற்றுமுன் சொன்னபடி என்னைத் தெய்வமாகவே ஆக்கி விட்டீர்களே! ஆனால், எங்கேயாவது கோவில்கட்டி என்னைக் கொண்டு போய் அதற்குள் வைத்து, "இங்கேயே உட்கார்ந்திரு" என்று மாத்திரம் சொல்லிவிட வேண்டாம். உங்களுடைய உயிரைக் காப்பாற்ற நாங்கள் எல்லோரும் எவ்வளவோ பாடு பட்டோமே! அப்படி இருக்க, அந்த அரிய உயிரை நான் வாங்கிக் கொண்டால், அப்புறம் மதனகோபாலன், "அம்மா" என்று யாரைக் கூப்பிடுவான். உங்களிடத்தில் என்ன சன்மானம் பெறலாம் என்று நானும் யோசிக்கிறேன். ஒன்றும் தோன்றவில்லை. ஆகா! இந்தச் சமயத்தில் எனக்கு மாத்திரம் இங்கே ஓர் ஆண்குழந்தை இருந்தால், நான் என்ன செய்வேன் என்றால், "அம்மணி! நான் உங்களுடைய மூத்த பிள்ளையை உங்களுக்குத் திருப்பிக் கொடுத்தேனே. அதற்குச் சன்மானமாக உங்களுடைய மூத்த பெண்ணை என்னுடைய பிள்ளைக்குக் கட்டிக்கொடுங்கள்" என்று கேட்டிருப் பேன். இப்போது, எனக்குப் பிள்ளை இல்லை. இனி உண்டா னால், நான் கேட்டு வாங்கிக் கொள்ளுகிறேன்" என்று கூறி, சிவஞான முதலியாரைப் பார்த்துக் கண் சிமிட்டினார். அந்தப் பார்வை வக்கீலின் மனதில் சுருக்கென்று தைத்தது; அவர்

தத்தளித்துத் தடுமாறுகிறார். அந்த ஜெமீந்தாரது வார்த்தையைக் கேட்ட கல்யாணியம்மாளினது முகம் உடனே மாறுபட்டு மேகம் சூழ்ந்தது போலாயிற்று. ஓடிப் போன தனது மூத்த குமாரியான துரைஸானியைப் பற்றிய பிரஸ்தாபம் அதிகமாக வந்துவிடுமோ என்ற பயமும் கவலையும் உண்டாகிவிட்டன. உடனே அந்தச் சீமாட்டி வெட்கித் தலை குனிந்தாள்.

அதைக் கண்ட கிருஷ்ணாபுரம் ஜெமீந்தார், "அம்மணி! கவலைப் பட வேண்டாம். எனக்கு இப்போது பிள்ளையும் இல்லை குட்டியு மில்லை. இனி பிறக்கப் போவதுமில்லை, நீங்கள் என் பிள்ளைக்குப் பெண் கொடுப்பதை அப்புறம் பார்த்துக் கொள்வோம். மதன கோபாலன் பொருட்டும், உங்கள் பொருட்டும் கடவுள் செயலால் எல்லாம் சந்தோஷமாக முடிந்ததை உத்தேசித்தும், நான் நாளைய தினம் என்னுடைய புது பங்களாவில் ஒரு விருந்து நடத்த ஏற்பாடு செய்திருக்கிறேன். நீங்கள் உங்களுடைய புத்திரன் புத்திரிகளை அழைத்துக் கொண்டு வந்திருந்து என்னைக் கௌரவப்படுத்தி அந்த விருந்தை நடைபெறச் செய்ய வேண்டும். அந்தச் சன்மானத் தைத் தான் நான் இப்போது கோருகிறேன். மறுக்காமல் நீங்கள் ஒப்புக் கொண்டால் அதனால் என் மனசில் ஏற்படும் பிரம்மாநந்தம் உண்டல்லவா, அதுதான் தாங்கள் எனக்குச் செய்யத்தகுந்த பெருத்த சன்மானம்" என்றார்.

அந்தச் சமயத்தில் மதனகோபாலன் அ⁻றுகு இணங்கும்படி தனது தாயை இறைஞ்சிக் கேட்டுக் கொள்பவன் போல இரங்கிய முகமாகத் தனது தாயை நோக்க, கல்யாணியம்மாள் கிருஷ்ணாபுரம் ஜெமீந்தாரைப் பணிவாக நோக்கி, "இதுவரையில் தாங்கள் எப்படி மதனகோபாலனைப் பாதுகாத்து அவனுடைய நன்மைகளை உங்களுடைய பொறுப்பாகப் பார்த்து வந்தீர்களோ, அது போலவே இனியும் தாங்களே இருந்து இந்த சமஸ்தானத்தை அவன் ஆளும் விஷயத்தில் அவனுக்கு நல்ல புத்திமதிகள் சொல்லி எல்லாக் காரியங்களையும் நடத்தி வைக்கவேண்டும். நான் தங்களை என்னுடைய சொந்தத் தகப்பனார் போல மதிக்கிறேன். ஆகையால், தாங்கள் இனி எந்த விஷயத்திலும் எங்களுக்கு உத்தரவு பிறப்பிக்கலாம்; அதை நாங்கள் உடனுக்குடன் நிறைவேற்றி விடுகிறோம்" என்றாள்.

அதைக் கேட்ட கிருஷ்ணாபுரம் ஜெமீந்தார் ஆனந்தப்பரவச மடைந்து பூரித்துப் புன்முறுவல் செய்து, "ஆகா! இந்தக் கிழவனுக்குச் சாகிற காலத்தில் எவ்வளவு பெருமையப்பா! உங்களுக்கெல்லாம் உத்தரவு பிறப்பிக்க நான் என்ன மண்டலேசு வரனா? போகட்டும். நீங்கள் எல்லோரும் கொடுக்கும் பெருமையை நான் வகித்துக் கொள்ளுகிறேன்" என்று கூறிய வண்ணம் சிவஞான முதலியாரது பக்கம் திரும்பிப் புன்னகையோடு அவரது முகத்தைப் பார்த்துவிட்டு மறுபடியும் கல்யாணியம்மாளது பக்கம் திரும்பி, "அம்மணீ! என்னை நீங்கள் எப்போதும் பார்த்ததில்லை. அதனால், என்னை நீங்கள் செட்டியார் என்று தவறாக இதுவரையில் நினைத்துக் கொண்டிருந்தது இயற்கையான காரியம். ஆனால் எனக்கு அந்தரங்க நண்பரும் என்னோடு பாலிய காலமெல்லாம் அன்னியோன்னியமாகப் பழகினவருமான நம்முடைய வக்கீல் முதலியார் கூட சில நாட்களுக்கு முன் என்னை செட்டியார் என்றே மதித்து ஏமாறிப் போய்விட்டார். அது தான் எனக்கு மகா ஆச்சரியமாக இருக்கிறது! இருந்தாலும் பரவாயில்லை. இன்றைய விருந்துக்கு நான் இவரையும் அழைக்க வேண்டும் என்ற மரியாதையை இவர் எதிர்பார்க்க மாட்டார் என்று நினைக்கிறேன். நானும் இவரும் உடலிரண்டும் உயிரொன்றுமாக இருந்தவர்கள். ஆகையால் இந்த விருந்து இவருடைய விருந்து (சிவஞான முதலியாரைப் பார்த்து) என்ன முதலியாரே! விருந்துக்கு வருவீர்களா? உங்களுடைய வீட்டுக்கு வந்து நான் அழைக்க வில்லையே என்று வராமல் இருந்து விடுவீர்களா? நான் செட்டியாயிற்றே பழைய கணக்கு மூட்டையை அவிழ்த்துவிடப் போகிறேன் என்ற கவலையே வேண்டாம். எப்போது நான் செட்டி வேஷத்தைக் கலைத்தேனோ அப்போதே பழைய கணக்குகளையும் கலைத்து விட்டேன்" என்றார். அந்த வார்த்தைகள் ஆயிரம் ஈட்டிகள் கொண்டு குத்துவது போல சிவஞான முதலியாரது மனதில் சுருக்கென்று தைத்து ஊடுருவிப் பாய்ந்தன. அவரது முகத்தில் அசட்டுச் சிரிப்பு வழிந்தது. இருந்தாலும், அவர் கிருஷ்ணாபுரம் ஜெமீந்தாரிடத்தில் தாறு மாறாகப் பேசாமல், "இன்றைய தினம் கச்சேரிக்குப் போக வேண்டிய அலுவல்கூட இல்லை. ஆகையால் நான் அவசியம்

வருகிறேன். எனக்கு நீங்கள் மரியாதைகூடச் செய்ய வேண்டுமா?" என்றார்.

அதைக் கேட்ட ஜெமீந்தார், "சந்தோஷம்! முதலியாருக்கும் எனக்கும் இன்றைய நேற்றைய பழக்கமா! இதுவரையில் அவர் என் விஷயத்தில் செய்துள்ள உதவிகளுக்கு அளவு சங்கியை உண்டா! நான் பைத்தியம் கொண்டிருந்த போது, என்னுடைய குழந்தைகளைக் காப்பாற்ற இவர் எவ்வளவு பாடுபட்டிருக்கிறார் தெரியுமா? அதை எல்லாம் நான் மறந்தால், தவித்த வாய்க்குத் தண்ணீர்கூட எனக்கு அகப்படாது. அவரால் எனக்கு ஏற்பட்ட கணக்கில்லா நன்மைகளை எல்லாம் நான் இப்போது முகதாவில் புகழக்கூடாது. நிறை வயிறாக ஐந்தும் குளிர்ந்திருக்கும் சமயத்தில் இவரை வாயாரப் புகழ்ந்து மனதாரத் துதிக்க வேண்டும். சரி; பதினாறு வருஷகாலமாகப் பிரிந்த புத்திரனோடு தனியாகப் பேசி நீங்கள் ஆனந்தமடைவதை நான் இனியும் கெடுக்கக்கூடாது. இந்த விருந்து விஷயமான ஏற்பாடுகளைச் செய்ய நான் வேறே சில இடங்களுக்கும் அவசரமாகப் போக வேண்டும். எல்லோரும் தயவு செய்து உத்தரவு கொடுக்க வேண்டும்" என்று முதலியாரையும், கல்யாணியம்மாளையும், மதனகோபாலனையும் பார்த்துக் கூறி விடைபெற்றுக் கொண்டு வெளியில் போய்விட்டார்.

★ ★ ★

34—வது அதிகாரம்

## பலநாளைய திருடன்

மறுநாளைய பகல் பதினொரு மணி சமயமாயிற்று. மைலாப்பூரிலிருந்த மனோகர விலாசம் என்ற பங்களாவின் உட்புறத்திலிருந்து ராஜபாட்டை வரையிலும், ராஜபாட்டையின் இருபுறங்களிலும் சுமார் கால்மயில் தூரம் வரையிலும் மோட்டார் வண்டிகளும், ஸாரட்டுகளும், கோச்சு வண்டிகளும், புருஹம் வண்டிகளும், பெட்டி வண்டிகளும், குதிரை வண்டிகளும், ரிக்ஷா வண்டிகளுமே மயமாகக் காணப்பட்டன. அன்றைய தினம் மனோகர விலாசத்தில் கிருஷ்ணாபுரம் ஜெமீந்தார் தயாரித்திருந்த

விருந்தை உண்பதற்காக, அவர் ஆயிரக்கணக்கான சீமான்களையும் சீமாட்டிகளையும் அழைத்திருந்தார். சென்னப்பட்டணத்தில் உள்ள சகலமான வர்த்தகர்களும், ஜாகீர்தார்களும், பெருத்த பெருத்த உத்தியோகஸ்தர்களும் வந்து கூடித் தங்களது வாகனங்களையும் வண்டிகளையும் மேலே சொல்லப்பட்டபடி நெடுந்தூரம் வரையில் இரட்டை வரிசையாக நிறுத்தியிருந்தனர். கல்யாணியம்மாளும் சிவஞான முதலியாரும் மதனகோபாலனும் கோமளவல்லியும் அவர்களது முக்கியமான பணிமக்களும் காலை பத்து மணிக்கே வந்து சேர்ந்து விட்டனர். மனோகர விலாசத்தில் இருந்த மோகனாங்கியைப் பார்த்து, அவளிடத்தில் பழக்கம் செய்து கொள்ள வேண்டும் என்ற விருப்பம் கொண்டிருந்த கல்யாணியம்மாளை, மதனகோபாலன் மோகனாங்கி இருந்த விடுதிக்கு அழைத்துக் கொண்டு போக, கல்யாணியம்மாள் மோகனாங்கியிடத்தில் மிகுந்த அன்பும் பிரியமும் காட்டி, அவளையும் தனது இன்னொரு குமாரத்தி போல வைத்து நடத்துவதாகவும், அவளை விட்டு மதனகோபாலன் பிரிந்திருக்க முடியாதென்று சொல்வதனால், அவளும் தனது ஜாகைக்கே வந்துவிட வேண்டும் என்றும் கூறி, அவளை இன்ப சாகரத்தில் ஆழ்த்திக் கொண்டிருந்தாள். அவர்கள் அப்படி இருக்க, தேனாம் பேட்டையில் உள்ள கிருஷ்ணாபுரம் பங்களாவில் இருந்த மீனாக்ஷி யம்மாள் கண்மணியம்மாள் முதலியோரும் கிருஷ்ணாபுரம் ஜெமீந்தாரே பசவண்ண செட்டியாராக வந்தவர் என்பதையும், ஹைகோர்ட்டுத் தீர்மானத்தின் விவரங்களையும் கேள்வியுற்ற தன்றி, அன்றைய விருந்திற்கு வரவேண்டும் என்று ஜெமீந்தார் எழுதிய கடிதத்தையும் பெறவே, அவர்கள் இருவரும் மனோகர விலாசத்திற்கு வந்தனர். அந்த பங்களா ஒரு பெருத்த மகாராஜாவின் அரண்மனை போன் மகா பிரமாதமான மாளிகை ஆதலால், ஆயிரக்கணக்கில் வந்து கூடியிருந்த விருந்தினரான அத்தனை பெரிய மனிதர்களுக்கும் இருக்க மிகவும் வசதியான இடம் இருந்தது. சுமார் பதினாயிரம் மனிதர்கள் வரையில் உட்கார்ந்து விருந்துண்ணத்தக்க அவ்வளவு விசாலமான ஓர் ஆயிரக்கால் மண்டபத்தில் ஏராளமான தனிகர்கள் தலை வாழையிலை போட்டு அழகாக உட்கார்ந்து சம்பிரமமாக விருந்துண்டனர். இந்த

உலகத்தில் என்னென்ன காய்கறி சாதங்கள் இருந்தனவோ அவை அனைத்தும் மாதுரியமான பதார்த்தங்களாக மாறி இலைகளில் வந்து உட்கார்ந்து கொண்டிருந்தன. உலகத்தில் என்னென்ன பக்ஷண பலகாரங்கள் செய்ய மனிதர்கள் அறிந்திருக்கிறார்களோ அத்தனையும் அந்த இலைகளில் காணப்பட்டன. கனி வர்க்கங்கள் இனி உலகத்தில் வேறே இல்லை என்று எல்லோரும் சொல்லும் படியாக சகலமான பழங்களும் பரிமாறப்பட்டிருந்தன. சமையல் செய்வதற்கு ஐம்பது பரிசாரகர்களும், பரிமாறுவதற்கு நூறு பரிசாரகர்களும் நியமிக்கப்பட்டிருந்தமையால், அத்தனை முஸ்தீபு களும் அன்றைய காலை ஒன்பது மணிக்குள் முடிவுற்றிருந்தன. அத்தனை பரிசாரகர்களும் ஒருவர் பின் ஒருவராக வேஷங்கள் போல வந்து நெய்யையும், பாலையும், தேனையும், பாயாசத்தை யும், தயிரையும் மழை போலப் பொழிந்து, பத்துவகைக் குழம்பு, இருபதுவகைப் பச்சடி, முப்பதுவகைச் சித்திரான்னம், ஐம்பது வகை பக்ஷணபலகாரம், நூறுவகைக் கறிகள் முதலிய சகலமான பக்குவ பதார்த்தங்களையும் திரும்பத் திரும்பக் கொணர்ந்து சொரிந்து, அது அசுர போஜனமோ என யாவரும் நினைத்து வியப்புற்று, "வயிற்றில் இடமில்லை; போதும் போதும்" என்று கதறிக் கைகளை விரித்து இலையின் மேல் குப்புறப் படுக்கும்படி செய்து, அந்த விருந்தை எல்லோரும் தங்களது ஆயுட் காலம் வரையில் மறக்காமல் இருக்கும்படி செய்துவிட்டனர்.

அவ்வாறு அந்த அமோகமான விருந்து நடைபெற்ற பின் எல்லோரும் இன்னொரு பெருத்த மண்டபத்தில் வரிசையாகப் போடப்பட்டிருந்த ஆயிரக்கணக்கான சாய்மான சோபாக்களில் உட்கார வைக்கப்பட்டனர். பெண்பாலார் யாவரும், அண்டையில் மறைவாக இருந்த ஒரு விடுதியில் கூடி உட்கார்ந்திருந்தனர். அவர்களுள் கல்யாணியம்மாள், கோமளவல்லி, மோகனாங்கி, கண்மணி முதலியோரும் விருந்தினரான பல பெருமாட்டிகளும் நிறைந்திருந்தனர். கிருஷ்ணாபுரம் ஜெமீந்தார், சிவஞான முதலியார், மதனகோபாலன் முதலியோர் ஒன்றாக இருந்தனர். அப்போது விருந்தினர்க்கெல்லாம் பன்னீரும், கலவை கஸ்தூரிகள் முதலியவை நிறைந்த பரிமளகந்தமும், வாசனைத் தாம்பூலாதிகளும் சம்பிரமமாக

வழங்கப்பட்டபின், மிகவும் கீர்த்தி வாய்ந்த வீணை வித்துவான் ஒருவரால் மாலை நான்கு மணி வரையில் மகா அருமையான சங்கீதக் கச்சேரியொன்று நடைபெற்றது; அங்கே கூடியிருந்த யாவரும் அந்த விருந்தின் சிறப்பைப் பற்றியும், சங்கீதக் கச்சேரியின் மேன்மையைப் பற்றியும், முதல் நாள் முடிவுற்ற வழக்கைப் பற்றியும் பலவாறாக ஒருவரோடொருவர் தணிவான குரலில் சம்பாஷித்து மிகுந்த குதூகலமும் ஆனந்தமும் அடைந்தனர். அவர்களது கண்கள் அடிக்கடி மதனகோபாலனது மன்மதாகார மான அற்புத ரூபத்தையும், அபூர்வமான அழகையும் பார்த்துப் பார்த்துத் தாமும் விருந்துண்டன. விருந்தினரில் பலர் மதன கோபாலன் தனது தாயைவிட்டுப் பதினாறு வருஷ காலம் வரையில் பிரிந்திருந்து கடைசியில் தெய்வாநுகூலத்தால் வந்து கூடியதைப் பற்றி மிகவும் உருக்கமாகப் பேசிக் கொண்டிருந்தனர். வேறு சிலர் அந்த விருந்தையுண்டு அவ்வளவு நேரம் வரையில் அங்கிருந்தும், என்ன காரணத்தை முன்னிட்டு அந்த விருந்து நடைபெற்ற தென்பதை அறியாதவராக இருந்தனர். அப்படிப் பலவாறாக இன்புற்றிருந்த விருந்தினர் வீணைக் கச்சேரி முடிந்த பிறகு, ஒவ்வொருவராக எழுந்து கிருஷ்ணாபுரம் ஜெமீந்தாரிடத்தில், தாம் பேசுவதற்கு அனுமதி கேட்கத் தொடங்கினர். அதைக் கண்ட ஜெமீந்தார் உடனே எழுந்து நின்று கைகுவித்து எல்லோரையும் வணங்கி, "என்னுடைய பிரியமான நண்பர்களே! சீமான்களே! இன்றைய காலை முதல் உங்கள் எல்லோரையும் நான் கடுங்காவல் தண்டனையில் வைத்து, மிகவும் துன்பப்படுத்தி விட்டேன். ஆகையால், நீங்கள் இவ்விடத்தை விட்டுப் போவதற்கு ஆவல் கொள்வது இயல்புதான். சர்வசாதாரண மனிதனாகிய என்னை நீங்கள் ஒரு பொருட்டாக மதித்து, என்னுடைய வேண்டுகோளுக் கிணங்கி, இங்கே வந்து விஜயம் செய்து, இவ்வளவு தூரம் என்னைப் பெருமைப்படுத்தியதைப் பற்றி நான் அடையும் சந்தோஷத்துக்கு வேறே எந்த சந்தோஷமும் நிகராகாதென்று சொல்வது வஞ்சகப் புகழ்ச்சியாகாது. ஆனால் ஒரு விஷயம், இங்கே இப்போது விஜயம் செய்துள்ள பிரபுக்களுள் பலருடைய அடையாளம் எனக்குத் தெரியவில்லை. என்னுடைய ஆப்த

நண்பரான ஒருவர் கொடுத்த ஜாப்தாவை வைத்துக் கொண்டு நான் எல்லோரையும் வரவழைத்தேன். எனக்கு எப்படி அவர்களுடைய அடையாளம் தெரியவில்லையோ, அதுபோல அவர்களுக்கும் நான் யார் என்பதும், என்னுடைய குடும்ப வரலாறும், இந்த விருந்து இன்றைய தினம் எதன் பொருட்டு நடத்தப்பட்ட தென்பதும் தெரிந்திராவென்றே நான் நினைக்கிறேன். ஆகையால் நண்பர்கள் எல்லோரும் இன்னம் இரண்டொரு நிமிஷம் இருந்து இந்த விஷயங்களைச் தெரிந்து கொள்ள வேண்டுமாறு மன்றாடிக் கேட்டுக் கொள்ளுகிறேன். எனக்கு உயிர்த் தோழரும், பள்ளிக் கூடத்து நண்பரும், பரம உபகாரியுமான வக்கீல் சிவஞான முதலியார் என்னுடைய வரலாற்றைப் பற்றியும், இந்த விருந்து நடத்தப்பட வேண்டிய பிரமேயத்தையும், மிகவும் சுருக்கமாக இரண்டொரு வார்த்தையில் சொல்லுவார்; ஆகையால் பிரபுக்கள் எல்லோரும் தயைகூர்ந்து இரண்டொரு நிமிஷநேரம் அமர்ந்து கொள்ள வேண்டும்" என்று நயமாகக் கூறி உட்கார்ந்தார்.

உடனே சிவஞான முதலியார் மகிழ்ச்சியும், புன்னகையும், தற் பெருமையும் ஜ்வலித்த முகத்தினராக எழுந்து நின்று, "கனவான் களே! அருமையான நண்பர்களே! வாக்கு வன்மையோடு திறமையாகப் பேசி எல்லோரையும் சந்தோஷிக்கச் செய்யும் சக்திக்கும் எனக்கும் நிரம்பவும் தூரம். நான் **ஸ்மால்காஸ்** கச்சேரிகளில் பத்து ரூபாய், எட்டு ரூபாய் வீட்டு வாடகை பாக்கி வரவேண்டிய வழக்குகளில் வாதித்தறிவேனே அன்றி, இப்படிப் பட்ட பெருத்த கூட்டங்களில் நான் வாய் திறந்தும் அறியேன்; என்னுடைய ஆப்த நண்பரான கிருஷ்ணாபுரம் ஜெமீந்தார் என்னை இப்படித் திடீரென்று இழுத்து விடுவார் என்பது கொஞ்சமாவது எனக்குத் தெரிந்திருந்தால், நான் ஏதாவது எழுதி மனப்பாடம் செய்து கொண்டாவது வந்திருப்பேன். அதற்கும் சந்தர்ப்பமில்லாமல் போய்விட்டது. ஆனால், நான் இப்போது எடுத்துச் சொல்வதற்கும் அதிகமாக ஒன்றும் இல்லை. மாரமங் கலம் சமஸ்தானம் என்பது இந்த ராஜதானியில் உள்ள எல்லா சமஸ்தானங்களிலும் பெரிது; அது தஞ்சை ஜில்லாவில் உள்ளது; அதன் ஜெமீந்தாரை அந்த ஜில்லாவில் உள்ளோர் ஒரு மகாராஜன்

போலவே மதித்து வருகிறார்கள். சுமார் 15, 16-வருஷங்களுக்கு முன் ஒரு பெரியவர் அந்த சமஸ்தானத்தின் ஜெமீந்தாராக இருந்தார். அவர்களுடைய தம்பியின் குமாரன் சின்னதுரை என்பவன் கிழவரிடத்தில் பகைமை கொண்டு, சைதாப் பேட்டைக்குப் பக்கத்திலிருக்கும் ஈக்காட்டுத்தாங்கல் என்னும் ஊரில் உள்ள கட்டையன் என்னும் ஒரு குறவனைத் தூண்டி, கிழவருடைய ஆண் குழந்தையைக் கொன்றுவிடும்படி ஏற்பாடு செய்ய. அவன் குழந்தையை எடுத்துப் போய், மைசூர் சின்னையா நாயுடுவின் நாடகக் கம்பெனியில் பிடில் வித்துவானிடத்தில் ஆயிரம் ரூபாய் வாங்கிக் கொண்டு குழந்தையைக் கொடுத்து விட்டு வந்து தான் அதைக் கொன்றுவிட்டதாக சின்னதுரையிடத்தில் சொல்லி விட்டான். அந்தக் குழந்தையும், பிடில் வித்துவானுடைய சொந்தக் குழந்தையான ஒரு பெண்ணும் தகப்பன் இறந்த பிறகு அநாதை யாகிய நம்முடைய நண்பரான கிருஷ்ணாபுரம் ஜெமீந்தாருடைய போஷணையில் வந்து சேர்ந்து விட்டார்கள். புத்திரன் காணாமற் போன சோகத்தினால் மாரமங்கலம் ஜெமீந்தாரான பெரியவர் நோயாக விழுந்துவிட்டார். அவர்களுடைய சம்சாரம் இந்த ஊருக்கு வந்து குழந்தையைத் தேடச் செய்ய, அது எங்கும் அகப்படாமை யால், ஒரு வேலைக்காரி ஆலந்தூரில் உள்ள ஒரு அம்பட்டப் பெண் பிள்ளையின் குழந்தையைக் கொண்டு வந்து மோசடியாகக் கொடுத்துவிட்டாள். அந்தக் குழந்தை வளர்ந்து இதுவரையில் மைனராக இருந்து துன்மார்க்கங்களிலும் இறங்கிக் கடைசியாக, தனது சொந்தத் தாயையே குத்திவிடவே, அதிலிருந்து ரகஸியங்கள் எல்லாம் வெளியாகிவிட்டன. ஜெமீந்தாருடைய சொந்தப் பிள்ளை யான மதனகோபாலன் என்பவர் கடைசியாக கண்டுபிடிக்கப்பட்டு, நேற்று தினம் தம்முடைய தாயிடம் வந்து சேர்ந்தார். நேற்றைக்கு முந்திய நாள், இந்த விஷயங்கள் எல்லாம் ஹைகோர்ட்டில் வெளியாகி எங்கும் பரவியிருப்பதால், அதைப் பற்றி நான் அதிகமாகப் பேச வேண்டிய அவசியமில்லை. அந்த உண்மை யான குமாரரே இதோ இருப்பவர்; என்னுடைய நண்பரான கிருஷ்ணாபுரம் ஜெமீந்தார் இவரைத் தமது அபிமான புத்திரராக மிகவும் வாஞ்சையோடு வளர்த்தவர் ஆதலால், அந்த சந்தோஷத்தைப் பாராட்டும் பொருட்டு உங்களை எல்லாம்

அழைத்து இந்த விருந்தை நடத்தி வைக்கிறார். ஆனால், இவர் விஷயத்தில் மாத்திரம் ஈசுவரன் பெருத்த சதிசெய்து விட்டான். இவருடைய சமஸ்தானமாகிய கிருஷ்ணாபுரம் என்பது மார மங்கலத்துக்குப் பக்கத்தில் உள்ளது. வருமானத்தில் அதற்கு அநேகமாய்' சமமாகவே சொல்லலாம். இவரும் நானும் பள்ளிக் கூடத்துச் சிநேகிதர்கள். பாலியராக இருந்த போது இவர் மகா ரூபவதியான ஒரு பெண்ணைக் கலியாணம் செய்து கொண்டிருந் தார். அந்தப் பெண்ணினிடத்தில் இவருக்கு ஆண் குழந்தை ஒன்றும் பெண் குழந்தை ஒன்றும் பிறந்திருந்தன. இவர் அவர்கள் மூவரையும் உயிருக்குயிராக மதித்திருந்தார். திடீரென்று இவருடைய சம்சாரம் இறந்து போகவே இவருக்குச் சித்தப்பிரமை உண்டாகி விட்டது. டாக்டர் வேறே ஏதாவது தேசத்துக்குப் போயிருக்கும்படி இவரை வற்புறுத்த, இவர் தம்முடைய குழந்தைகளை என் வசத்தில் ஒப்புவித்துவிட்டு மைசூருக்குப் போய்ச் சேர்ந்தார். கொஞ்ச காலத்துக்குப் பிறகு இந்த ஊரில் உண்டான வாந்திபேதியால் அந்த இரண்டு குழந்தைகளும் ஒரே நாளில் இறந்து போய்விட்டன. அந்தச் சங்கதியைக் கேட்ட பின், இவர் இந்த ஊருக்கே வரக்கூடாதென்று மைசூரிலேயே இருந்து விட்டார். அந்தச் சமயத்திலே தான் பிடில்காரருடைய குழந்தைகளை இவர் வாங்கியது. இவருக்கு மைசூரில் பிரபலமான சந்தனக் கட்டை வியாபாரம் இருக்கிறது. அதோடு பெருத்த சமஸ்தானமும் இருக்கிறது; இதுவரையில் அங்கே இருந்தது போதும் என்று நினைத்து இங்கே வந்துவிட்டார். இந்த மாளிகை பெருத்த மகா ராஜனுடைய செல்வத்துக்குச் சமமாக இருக்கும் என்றே நாம் நினைக்க வேண்டும். ஆனால் இவ்வளவு பெருத்த செல்வத்தையும் அடைய இவர்களுடைய சொந்தக் குழந்தைகள் இல்லாமல் இறந்து போனது தான் அதிக துக்ககரமான விஷயம். இருந்தாலும் என்ன செய்கிறது? வகுத்தான் **வகுத்த வகையல்லாற் கோடி தொகுத் தார்க்கும் துய்த்தல் அரிது** என்று திருவள்ளுவர் சொல்லிய படி, ஒருவனுக்கு எவ்வளவு அதிகமான சம்பத்திருந்தாலும், அவன் அவ்வளவு சுகந்தான் அனுபவிக்கலாம் என்று கடவுள் விதித்திருக் கிறாரோ எவ்வளவு தான் கிடைக்கும் என்ற வேதாந்தத்தை தான் இவர் ஆறுதலாகக் கொள்ள வேண்டும். நெடுங்காலமாக இவர்

மறந்து போயிருந்த அந்த விசனகரமான விஷயங்களை நான் எடுத்துப் பேசுவது சரியல்ல. இவருடைய வரலாற்றைத் தெரிவிக்கும்படி இவரே என்னைக் கேட்டுக் கொண்டது பற்றி அதை நான் ஒருவாறாகக் குறிக்க நேர்ந்தது; என்னுடைய ஆப்த நண்பரான இவர் இனி இந்த ஊரிலேயே இருப்பார் என்பதைப் பற்றி நான் அடையும் சந்தோஷம் அபாரமானது. இந்த ஊரில் உள்ள முக்கியமான எல்லா கனவான் களோடும் பழக்கம் செய்து கொள்ள வேண்டும் என்பது இவருடைய முக்கியமான கருத்து; அதன் பொருட்டும் இந்த விருந்து தயாரிக்கப்பட்டது. தாங்கள் எல்லோரும் விஜயம் செய்து இவரோடு பழகிப்போய்விட்ட படியால் இந்த விருந்தின் நோக்கமும் கைகூடிவிட்டது. இனி என்னைப் போன்றவர்கள் மத்தியஸ்தமாக இருந்து பேச வேண்டிய அவசியமே இல்லை ஆகையால், இவ்வளவோடு நான் உட்கார்ந்து கொள்ளுகிறேன்" என்று கூறிவிட்டு சிவஞான முதலியார் உட்கார்ந்து கொண்டார். அங்கே கூடியிருந்தோர் யாவரும் அந்த வரலாற்றைக் கேட்டு மிகுந்த இரக்கமும் விசனமும் அடைந்து கிருஷ்ணாபுரம் ஜெமீந்தாரது விஷயத்திலும், மதன கோபாலனது விஷயத்திலும் மிகுந்த மதிப்பையும் பாராட்டத் தொடங்கி எழுந்த விடைபெற்றுக் கொண்டு போக எத்தனிக்க, அந்தச் சமயத்தில் அந்தக் கூட்டத்திலிருந்த ஒரு மனிதர் எழுந்து நின்று, "நண்பர்களே! எல்லோரும் கொஞ்ச நேரம் தயவு செய்து ஆசனங்களில் அமர வேண்டும்" என்று உரத்த குரலில் பேச, அதைக் கேட்ட எல்லோரும் திடுக்கிட்டு அந்தக் குரலுண்டான திசையில் திரும்பிப் பார்க்க, அவ்விடத்தில் மைலாப்பூர் வக்கீல் **அருணகிரிப் பிள்ளை** நின்று கொண்டிருந்தார். அவர் ஒருவேளை, அந்த விருந்துண்டதைப் பற்றி ஜெமீந்தாருக்கு நன்றியறிதல் கூற விரும்புகிறார் என்று நினைத்த எல்லோரும் உடனே கீழே உட்கார்ந்து கொண்டனர். அவர் எழுந்ததைக் கண்ட சிவஞான முதலியாரது முகம் சடக்கென்று மாறுபட்டு அவரது மனம் மிகுந்த சஞ்சலமடைகிற தென்பதைக் காட்டியது. அவரது தேகம் உட்கார்ந்திருக்க மாட்டாமல் தத்தளிக்கிறது. கிருஷ்ணாபுரம் ஜெமீந்தார் ஒன்றையும் அறியாதவர் போல வியப்போடு அருணகிரிப் பிள்ளையை நோக்குகிறார்.

அந்தச் சமயத்தில் அருணகிரிப்பிள்ளை மேலும் பேசத்தொடங்கி, "இவ்வளவு அன்பாக நம்மை எல்லாம் வருவித்து மகா சிரேஷ்ட மான இத்தனை உபசாரங்களையும் நடத்தி விருந்தளித்து நம்மை சந்தோஷப்படுத்திய ஜெமீந்தார் அவர்களுக்கு, நான் எனக்காகவும், இந்தக் கூட்டத்திலுள்ள எல்லோருக்காகவும், மிகுந்த வந்தனமும் நன்றியறிதலும் தெரிவித்துக் கொள்ளுகிறேன்; மாரமங்கலம் சமஸ்தானத்தின் உண்மையான மைனருக்கும் அவர்களது தாயாரான கல்யாணியம்மாள் அவர்களுக்கும் எத்தனையோ பெரிய இடர்கள் இதுவரையில் நேர்ந்திருந்தாலும், ஈசனருளால் அவைகள் எல்லாம் சூரியனுக்கு முன் இருள் போலப் பறந்து போயின. கடைசியில் அவர்கள் இப்போது பரம சந்தோஷம் அனுபவிக்கிறார்கள். அப்படி அனுபவிக்க அவர்களுக்கு உரிமையும் உண்டு. ஏனென்றால் வெயிலிலிருந்து வெதும்பிய வர்கள் நிழலுக்குப் போனால், அவர்களுக்கு அது பரமசுகமாக இருக்கும் என்பதை நாம் சொல்லத் தேவையில்லை. ஆனால் இந்த ஜெமீந்தார் அவர்களுடைய விஷயம் மாத்திரம் இப்போதும் மிக மிகப் பரிதாபகரமாகவே இருக்கிறது. இவர்கள் இத்தனை வருஷ காலம் துயரத்தில் ஆழ்ந்திருந்தும், அது இப்போதும் நீங்காமலேயே இருந்து வருகிறது. மனிதர்கள் காணாமல் போயிருந்தால் என்றைக் காகிலும் திரும்பி வந்துவிடுவார்கள் என்ற நம்பிக்கையுண்டு. இறந்து போனவர்கள் எப்படி வருவார்கள்? நானும் இவர்களைப் போல பெருத்த துக்கத்திற்கு ஆளாகி இருப்பவனாகையால் இவர் களுடைய துக்கம் எப்படி இருக்கும் என்பது எனக்கு நன்றாக உரைக்கிறது. சுமார் 15-வருஷ காலத்துக்கு முன் எனக்கும் இரண்டு குழந்தைகளிருந்து வாந்திபேதியால் ஒரே நாளில் இறந்து போய் விட்டார்கள். அந்த விசனம் எனக்கு இன்னமும் மாறவில்லை. என்னுடைய குழந்தைகள் இறந்த காலத்தில் நானும் நம்முடைய நண்பரான இந்த சிவஞான முதலியாரும் ஒரே வீட்டில் குடியிருந்து வந்தோம்; அப்போது அவருடைய வீட்டில் வளர்ந்த இந்த ஜெமீந்தாருடைய குழந்தைகள் இரண்டையும் நான் பார்த்திருக் கிறேன். இரண்டும் சுவர்ணப் பதுமைகள் போல இருந்தன. ஆனால், அந்தக் குழந்தைகள் இன்னமும் உயிரோடிருப்பதாக நான் இதுவரையில் எண்ணியிருந்தேன். அவைகள் இறந்து போய்

விட்டன என்று இப்போது தான் கேள்விப்படுகிறேன். என்னுடைய குழந்தைகள் இறந்த தினத்தன்று சிவஞான முதலியார் அந்தக் குழந்தைகளுக்கும் அந்தத் தொற்றுவியாதி வந்துவிடப் போகிறதே என்ற பயத்தினால், அவர்களை மைசூரிலிருக்கும் தகப்பனாரிடம் அனுப்பிவிட்டதாகச் சொன்னார். அவர்கள் மைசூரில் போய் இறந்துவிட்ட சங்கதி இப்போது தான் தெரிகிறது" என்று சிறிது நிறுத்தி, சிவஞான முதலியாரது முகத்தைச் சந்தேகமாக நோக்கினார்.

அந்தச் சமயத்தில் சிவஞான முதலியாரது முகத்தில் பிரேதக்களை உண்டானதாக எண்ண வேண்டும். அவரது உச்சி முதல் உள்ளங் கால் வரையில் ஒவ்வோரங்கமும் பெரும் பீதியினால் வெடவெட வென்று நடுங்குகிறது. வாய் குழறுகிறது. கண்கள் திருட்டு விழி விழிக்கின்றன. அப்போது கிருஷ்ணாபுரம் ஜெமீந்தார் எழுந்து அருணகிரிப் பிள்ளையை நோக்கி, "குழந்தைகள் மைசூருக்கு வர வில்லையே?" என்றார்.

அதைக் கேட்ட எல்லோரும் திடுக்கிட்டுத் திகைத்து சிவஞான முதலியாரது முகத்தை நோக்க, அவர் அதற்குமேல், தாம் சும்மா இருப்பது தவறென நினைத்து எழுந்து நின்று, "நான் குழந்தைகளை மைசூருக்கு அனுப்பியதாகச் சொல்லவே இல்லை. நம்முடைய நண்பரான அருணகிரிப் பிள்ளை ஞாபகப் பிசகினால் அப்படிச் சொல்லுகிறார்கள். அப்போது இந்த ஊரில் வாந்திபேதி அதிகமாக இருந்தது பற்றி சைதாப்பேட்டையில் உள்ள ஜாகைக்கு அனுப்பி இருந்தேன். அந்த ஊரிலே தான் குழந்தைகள் இறந்து போயின" என்று கூறினார்.

அதைக் கேட்ட அருணகிரிப் பிள்ளை, "ஓகோ! அப்படியா! இருக்கலாம். நான் மறதியாகச் சொல்லியிருக்கலாம்; எந்த ஊராக இருந்தால் என்ன? குழந்தைகள் இறந்து போய்விட்டன" என்றார்.

அதைக் கேட்ட சிவஞான முதலியார் ஒருவாறு மகிழ்ச்சியடையத் தொடங்க, அந்தச் சமயத்தில், அந்தப் பெருத்த கும்பலில் ஒரு மூலையில் மறைவாக உட்கார்ந்திருந்த வேறொரு மனிதர் சடக் கென்று எழுந்து நின்று, "நண்பர்களே! ஒரே ஒரு வார்த்தைக்கு மேல் நான் சொல்லப் போகிறதில்லை; தயவு செய்து உட்கார வேண்டும்" என்றார்.

உடனே ஜனங்கள் எல்லோரும் அந்தப் பக்கத்தில் திரும்பிப் பார்க்க, அவர் யாரோ புதிய மனிதராகக் காணப்பட்டார்; அவர் என்ன சொல்லப் போகிறாரோ என்று எல்லோரும் ஆவலுற்று அவரது வாயை நோக்கியிருக்க, அந்த மனிதரை அப்போதே பார்த்த சிவஞான முதலியார் திடுக்கிட்டுப் பேரச்சம் கொண்டார். அந்த மனிதர் சைதாப்பேட்டை **அண்ணாமலை முதலியார்** என்பதைக் கண்ட சிவஞான முதலியாருக்குக் குலைநடுக்கம் எடுத்தது. மூளை குழம்ப, அறிவு மழுங்கியது; தலை கிறுகிறென்று சுழன்றதால், அவர் எழுந்திருக்க மாட்டாமல் நாற்காலியில் சாய்ந்து விட்டார் ஆனாலும், அவரது முகம் அண்ணாமலை முதலியாரைப் பார்த்து விஷயத்தை வெளியிட வேண்டாம் என்று சைகை காட்டுவதுபோல இருந்தது; அவரது விபரீதமான நிலைமையைக் கண்ட எல்லா ஜனங்களும் பெருத்த வியப்பும் திகைப்பும் அடைந்து மாறி மாறி சிவஞான முதலியாரையும் அண்ணாமலை முதலியாரையும் கவனிப்பாக நோக்கியபடி பேச்சு மூச்சின்றி உட்கார்ந்திருந்தார்.

அப்போது சைதாப்பேட்டை அண்ணாமலை முதலியார், "ஐயா மார்களே! நான் இருப்பது சைதாப்பேட்டை, வக்கீல் சிவஞான முதலியார் என்னைத்தான் அண்ணாமலை முதலியார் என்றும், தம்முடைய நண்பர் என்றும் குறித்தது. இன்றைய தினம் ஒரு விருந்து நடத்தப் போவதாகவும், அவருடைய குழந்தைகளை நெடுங்காலம் வளர்த்த நன்றி விசுவாசத்தைக் காட்டும் பொருட்டு என்னையும் இந்த விருந்துக்கு அழைப்பதாகவும் சொல்லி, நான் அவசியம் வரவேண்டும் என்று வற்புறுத்திக் கேட்டுக் கொண்டார்கள். அதன் பொருட்டு இன்றைய தினம் இங்கே வந்தேன். வந்த இடத்தில் இப்போது சிவஞான முதலியாரும், அருணகிரிப் பிள்ளையவர்களும் பேசியதைக் கேட்டவுடன், சங்கதி பெருத்த மோசடியாக இருக்கிறது. நான் இங்கே வந்திருக்கிறேன் என்பதை அறியாமல் சிவஞான முதலியார் அப்படிப் பேசினாரா அல்லது மறதியினால் அப்படிப் பேசினாரா என்பது தெரியவில்லை. இந்த முதலியாருக்கும் எனக்கும் நெடுநாளையப் பழக்கமுண்டு. சுமார் பதினைந்து வருஷத்துக்கு முன், இவர் இரண்டு குழந்தைகளைக்

கொணர்ந்து என்னிடத்தில் விட்டு ரகசியமாக வளர்க்கச் சொன்னார். அந்தக் குழந்தைகளின் தகப்பனார் யாரோ ஒரு ஜெமீந் தார் என்றும், அவர் பைத்தியங் கொண்டு மைசூரில் இருப்பதாக வும், அந்த ஜெமீந்தாருடைய பங்காளிகள் ஆள்களை விட்டுக் குழந்தைகளைத் திருடிக்கொண்டு போய்க் கொன்றுவிட நினைப்ப தால், எவருக்கும் தெரியாமல் ரகசியமாக அவர்களை வைத்து வளர்த்து வரவேண்டும் என்றும் கேட்டுக் கொண்டார். நான் அந்தக் குழந்தைகளின் அற்புதமான அழகைக் கண்டு, அவைகளின் மேல் இரக்கங் கொண்டு அப்படியே வளர்த்தேன். அவர்களைப் போஷிப்பதற்குப் பிடித்த செலவை எல்லாம் வக்கீலே கொடுத்து வந்தார். சைதாப்பேட்டையில் உள்ள குண்டுராவ் என்ற ஓர் உபாத்தியாயரை அமர்த்தி, அவர் ஒவ்வொரு நாளும் வீட்டில் இரண்டாவது கட்டுக்குள் வந்து பாடம் கற்றுக் கொடுக்கும்படி செய்திருந்தோம். இப்போது சுமார் ஒன்றரை வருஷ காலம் இருக்கும். வக்கீல் முதலியார் வந்து, அந்தக் குழந்தைகளின் தகப்பனாரான ஜெமீந்தார் இறந்து போய்விட்டதாகவும், இனி மேல் அந்தக் குழந்தைகளுக்காக மாதாமாதம் பணம் கொடுக்க தமக்குச் சௌகரியப்படவில்லை என்றும், அந்த ஜெமீந்தாருடைய சமஸ்தானம் எல்லாம் கடனுக்காகப் பராரியாகிவிட்ட தென்றும், தாம் அந்தக் குழந்தைகளைக் கொண்டு போய் வேலையில் அமர்த்தப் போவதாகவும் சொல்லி, அவர்களை அழைத்துக் கொண்டு போய்விட்டார். அதன் பிறகு அந்தக் குழந்தைகள் எங்கே போனார்கள் என்பது எனக்குத் தெரியாது; இன்று காலையில் இந்த ஜெமீந்தார் வந்து, தாமே அந்தக் குழந்தையின் தகப்பனார் என்று சொன்னதைக் கேட்டவுடனே, எனக்க நிரம்பவும் ஆச்சரியமாக இருந்தது. இந்த ஜெமீந்தார் இறந்து போய் விட்டதாக வக்கீல் முதலியார் சொன்னார் என்பதை இவர்களிடம் தெரிவிக்க எனக்கு அச்சமாகவும், லஜ்ஜையாகவும் இருந்தது. எல்லாவற்றிற்கும் இங்கே வந்தால், நிஜம் வெளியாகும் என்று வந்தேன்; இப்போது எல்லாம் வெட்ட வெளிச்சமாகி விட்டது" என்று கூறி உட்கார்ந்து கொண்டார்.

அந்த விவரங்களைக் கேட்ட அங்கிருந்தோர் யாவரும் மிகுந்த பிரமிப்பும், மனக்கொதிப்பும் அடைந்து சிவஞான முதலியாரைப்

பலவாறு தூற்றலாயினர். சிலர், "மோசக்கார வக்கீல்" என்றனர். சிலர் "சோதாப்பயலை உதையுங்கள்" என்று அதட்டிக் கூறினர். வேறு சிலர், "திருட்டு நாயைக் கட்டி வைத்து செருப்பாலடியுங்கள்" என்றனர். மற்றும் சிலர், காறி எச்சிலை சிவஞான முதலியாரது தலையில் உமிழ்ந்தனர். முரட்டாள்களாக இருந்த வேறே சிலர் நெருங்கி நின்று, அவரை உபத்திரவிக்கத் தொடங்கினர். ஒருவன் அவரது தலைப்பாகையைத் தட்டிவிட்டான். வேறொருவன் அவரது விலாவில் ஒரு குத்துவிட்டான். பெரும்பாலோரான விருந்தினர், "வேண்டாம்; வேண்டாம். அவரை ஒன்றும் செய்யாதீர்; அவர் என்ன சமாதானம் சொல்லுகிறார் என்று கேட்போம். அவசரப்படாதீர்; அவர் என்ன உத்தரம் சொல்லுகிறார் என்று கேட்போம். பொறுங்கள்" என்று அதட்டிக் கூற, உடனே சிவஞான முதலியார் கண்ணீர் விடுத்தவராய் எழுந்து நின்று, "என்னை ஏன் அநாவசியமாக இப்படி உபத்திரவிக்கிறீர்கள்? இந்த அண்ணாமலை முதலிக்கும் எனக்கும் பகையுண்டு. அதனால் இவன் என்மேல் இல்லாத பொல்லாத பொய்யை எல்லாம் சொல்லுகிறான். அருணகிரிப் பிள்ளையும் நானும் ஆதியில் ஒரு வீட்டிலிருந்து சண்டை போட்டுக் கொண்டு பிரிந்து போய் விட்டோம், அவரும் இவனும் சேர்ந்து கட்டுப்பாடாக இப்படிப் பேசுகிறார்கள். குழந்தைகள் இறந்து போனது நிஜமே. சைதாப் பேட்டையில் யூனியன் ஆபீசில் இருக்கும் ஜனன மரணப் பதிவு ரிஜிஸ்டரைப் பார்த்தால், இது நிஜம் என்பது நன்றாகத் தெரியும், நீங்கள் எல்லோரும் என்னை இப்படி உபத்திரவிப்பது சரியல்ல" என்றார்.

அந்தச் சமயத்தில், அந்தக் கும்பலில் இருந்த இன்னொருவர் எழுந்து நின்று, "கனவான்களே! பொறுங்கள் பொறுங்கள்; நான் சொல்வதையும் கேளுங்கள்; என் பெயர் தான் **குண்டுராவ்.** நான் இந்த அண்ணாமலை முதலியார் வீட்டில் இத்தனை வருஷகாலம் வரையில் இரண்டு குழந்தைகளுக்குப் பாடம் கற்றுக் கொடுத்தது உண்மைதான். அந்தக் குழந்தைகள் வக்கீல் சிவஞான முதலியாரால் கொண்டு வந்து பங்காளிகளின் உபத்திரவத்துக்காக ஒளித்து வைத்திருக்கப்பட்ட குழந்தைகள் என்று அண்ணாமலை முதலியார்

சொல்லக் கேட்டிருக்கிறேன். சுமார் ஒன்றேகால் ஒன்றரை வருஷமாக, இவர் என்னை நிறுத்திவிட்டார். அப்புறம் நான் அந்தக் குழந்தைகளைப் பார்க்கவில்லை" என்று கூறி உட்கார்ந்தார். அப்போதும், சிவஞான முதலியார் குண்டுராவையும் தமது பகைவர் கோஷ்டியில் சேர்த்து, தாம் சொன்னதையே பிடிவாத மாகச் சொல்லி கிருஷ்ணாபுரம் ஜெமீந்தாரை நோக்கி, "என்ன! ஜெமீந்தாரே! உம்முடைய பங்களாவில் விருந்து சாப்பிட வந்தவர்கள் என்னை இப்படி அக்கிரமமாக உபத்திரவிப்பதை நீரும் பார்த்துக் கொண்டிருக்கலாமா? என்னுடைய உயிருக்குயி ரான சிநேகிதரான உம்மிடத்தில் நான் தவறாக நடக்க மாட்டேன் என்பது உமக்குத் தெரியாதா? அந்தக் குழந்தைகளை நானே சுடுகாட்டுக்குக் கொண்டு போய்க் கொளத்தி இருக்கிறேன். நான் உம்முடைய விருந்தாளியல்லவா? என்னை இவர்கள் உபத்திர விக்காமல் என்னைக் காப்பது உம்முடைய பொறுப்பல்லவா? இவ்வளவு தூரம் கட்டுப்பாடாகப் பேசுகிற இவர்கள் எல்லோரும் அந்தக் குழந்தைகள் இருவரையும் கொண்டு வந்து காட்டுவார் களானால், நான் எப்படிப்பட்ட சிக்ஷைக்கும் பாத்திரனாகிறேன்" என்றார்.

அதைக் கேட்ட கிருஷ்ணாபுரம் ஜெமீந்தார் கலகலவென்று நகைத்து, "சேச்சே! இவர் என்னுடைய உயிருக்குயிரான நண்பர் அல்லவா; இவர் அப்படிச் செய்திருக்கவே மாட்டார். இவரை ஒருவரும் உபத்திரவிக்க வேண்டாம்" என்ற வண்ணம் அங்கே சற்று தூரத்தில் மூடப்பட்டிருந்த ஒரு கதவுப் பக்கம் நோக்க, அங்கே ஆயத்தமாக நின்று கொண்டிருந்த ஒரு வேலைக்காரன் படேரென்று அந்தக் கதவைத் திறந்து கொண்டு அப்பால் போய், அவ்விடத்தில் இருந்த இன்னொரு விடுதியின் கதவைத் திறக்க, அவ்விடத்தில் இருந்து ஒரு வாலிபப் புருஷனும், ஒரு யௌவனப் பெண்ணும் வெளியில் வந்து, ஜனங்கள் கூடியிருந்த மண்டபத்தில் நுழைந்தார்கள். அவர்களைக் கண்ட விருந்தினர் யாவரும் அவர்களது கட்டழகைக் கண்டு ஸ்தம்பித்து, "ஆகா! கந்தருவக் குழந்தைகள் போல இருக்கிறார்களே! இவர்களா ஜெமீந்தாருடைய குழந்தைகள்!" என்று தங்களுக்குள் பேசிக் கொள்ள, அதே

சமயத்தில், அருணகிரிப் பிள்ளை, அண்ணாமலை முதலியார், குண்டுராவ் ஆகிய மூவரும் சடக்கென்று எழுந்த நின்று, "இவர்கள் தான் அந்தக் குழந்தைகள்" என்றனர். அவர்கள் சொல்லி வாய் மூடுவதற்குள், அங்கே கூடியிருந்த சில முரட்டாள்கள் சடேரென்று சிவஞான முதலியார் மீது பாய்ந்து அவரைப் பிடித்துக் கொண்டனர். ஒருவன் அவரது குடுமியைப் பிடித்து, "அடேய்! கழுதையின் மகனே! அந்தக் குழந்தைகளைக் கொண்டு போய் சுடுகாட்டில் கொளுத்தியவன் நீயல்லவா! உயிரோடிருப்பவரைக் கொளுத்திய தாகச் சொன்ன உன்னை இப்போது நாங்கள் உண்மையிலேயே உயிரோடு கொளுத்தி விடுகிறோம்" என்று கூறி அவரது குடுமியைப் பிடித்தபடி அவரது தலையை நாலைந்து முறை குலுக்க, அவரது குடுமி கையோடு வந்துவிட்டது. அதே சமயத்தில் சப்தமேகங்களும், இடி மின்னல் காற்றுகளோடு வருஷிப்பது போல அடிகளும், உதைகளும், குத்துகளும், எச்சில் தம்பலங்களும் அவர் மீது சரமாரியாகப் பொய்கின்றன; அவர், "ஐயோ! அப்பா! அடிக்கிறார் களே! கொல்லுகிறார்களே!" என்று கூக்குரலிட்டுத் துள்ளிக் குதித்துக் கதறியழுகிறார். மற்ற ஜனங்கள் யாவரும், அடிப்போரை விலக்க முயலுகிறார்கள். அந்தச் சமயத்தில் கிருஷ்ணாபுரம் ஜெமீந் தாரே அந்தக் கும்பலில் விழுந்து எல்லோரையும் நயந்து மோவாயைப் பிடித்துக் கெஞ்சி மன்றாடி சிவஞான முதலியாரை மாத்திரம் தனியாக விலக்கி அழைத்துக் கொண்டு சற்று தூரத்தில் போக, சிவஞான முதலியாரது உடம்பெல்லாம் இரத்த வெள்ளமாக ஓடுகிறது. அவர் மீதிருந்த பட்டுச்சட்டை, ஜரிகை வஸ்திரங்கள் முதலிய யாவும் நார்நாராகக் கிழிந்து தேர்ச்சிலைகள் போலத் தொங்குகின்றன. அந்த நிலைமையில், அவர், "ஐயோ அப்பா" என்று ஓலமிட்டழுத வண்ணம் கிருஷ்ணாபுரம் ஜெமீந்தாரது காலில் விழுந்து அவரது பாதங்களைப் பிடித்துக் கொண்டு, "ஐயா! நான் உம்முடைய விஷயத்தில் பெருத்த நம்பிக்கைத் துரோகமும் மகா கொடிய பாதகமும் செய்துவிட்டேன். நீர் அதற்காக என்னைக் கொன்றாலும் அது பாவமாகாது. நீர் என்னை எப்படி நடத்தினாலும் எனக்குச் சம்மதிதான்" என்று கூறிக் கண்ணீர் சொரிந்து கோவெனக் கதறியழ, அதைக்கண்ட ஜெமீந்தார், "ஐயா! சிவஞான முதலியாரே! உம்மை நான் உயிருக்குயிராக மதித்துப் பூரணமான நம்பிக்கை

வைத்ததற்கு நீர் இப்படிச் செய்தது மகா பாதகம் என்பதை இப்போதாவது ஒப்புக்கொண்டீரே! அது ஒன்றே போதுமானது. பணமென்பது மகா பொல்லாத வஸ்து. உறவு முறைமை, சிநேகம் முதலிய எந்தப் பாசமும் பணத்துக்கு முன்னால் நிற்குமா? ஒருகாலுமில்லை. இது உலக இயற்கை; நீர் எவ்வளவோ படித்திருந்தாலும், வக்கீல் உத்தியோகத்தில் எவ்வளவோ பணம் சம்பாதித்திருந்தாலும், உமக்குப் பூர்வீகமான சொத்து அதிகமாக இருந்தாலும், இப்படிப் பட்ட பணத்தாசையும், மோசக் கருத்தும் உமக்கு இல்லாமற் போகவில்லை. குற்றம் செய்தவரைத் தண்டிக்க, ஈசுவரனிருக்கிறான். ஆகையால், நான் உமக்கு எவ்விதமான தீங்கும் நினைக்கமாட்டேன். உம்மைப் பத்திரமாக வண்டியில் வைத்து உம்முடைய வீட்டில் கொண்டு போய்விடச் செய்கிறேன். இங்கே இருந்த சிலர் என்னுடைய அனுமதியில்லாமல் உம்மை உபத்திரவப்படுத்தி விட்டது எனக்கு நிரம்பவும் விசனமாக இருக்கிறது. எழுந்திரும்" என்று கூறி, அவரைத் தூக்கி நிறுத்தி வெளியில் அழைத்துக் கொண்டு போய், அங்கே இருந்த ஒரு மோட்டார் வண்டியில் உட்கார வைத்து, தமது ஆட்களில் நால்வரையும் பாதுகாப்பாக வைத்து, வண்டியை அவரது ஜாகைக்கு அனுப்பிவிட்டு உள்ளே வந்தார்.

அதற்குள், அங்கே கூடியிருந்த ஜனங்கள் எல்லோரும் எழுந்து நடந்து வெளிப்பட்டு, இடைவழியில் வந்த ஜெமீந்தாரிடத்தில் விடைபெற்றுக் கொண்டு வெளியில் போய் தத்தம் வாகனங்களில் ஏறிக் கொண்டு போகலாயினர். கிருஷ்ணாபுரம் ஜெமீந்தார் உள்ளே போவதற்குள் விருந்தினர் யாவரும் வெளியில் போய் விட்டனர். அப்போதும், அவ்விடத்தில் ஒரு மூலையில் நின்று கொண்டிருந்த ராஜாயியும், மோகனரங்கனும் அங்கே நடந்த பெருத்த கலகத்தையும், குழப்பத்தையும், அதன் காரணம் என்ன என்பதையும், தாங்கள் வந்தவுடனே சிவஞான முதலியாருக்கு அப்படிப்பட்ட அவமரியாதையும் துன்பமும் நேர்ந்த காரணம் என்ன என்பதை அறிந்து கொள்ள மாட்டாமல் திகைத்து நடுங்கி நின்ற சமயத்தில், மதனகோபாலன் அவர்களண்டையில் வந்தான். அவனைக் கண்ட ராஜாயி, "ஐயா இன்றைய தினம் விருந்து

நடக்கும் போது, எங்களுடைய தகப்பனார் யார் என்பதைக் காட்டுவதாக நீங்களும், பெரியவரும் சொன்னீர்கள். இப்போது எங்களையும் வெளியில் அழைத்துவரச் சொன்னீர்கள். நாங்கள் வந்தவுடனே சிவஞான முதலியாரை உபத்திரவப் படுத்தினார்கள். உடனே எல்லோரும் வெளியில் போய்விட்டார்களே. எங்களுடைய தகப்பனார் யார் என்பதைச் சொல்லவில்லையே! எங்களுடைய தகப்பனாரைப் பார்க்க வேண்டும் என்றும், அவருடைய இருப்பிடத்துக்குப் போக வேண்டும் என்றும், எங்களுடைய மனம் பதறுகிறது. அவர் இந்த விருந்துக்கு வரவே இல்லையா! அல்லது வந்து தான் போய்விட்டாரா?" என்று மிகுந்த ஆவலோடும் பதைப்போடும் கேட்க, உடனே மதனகோபாலன் மிகுந்த மகிழ்ச்சியோடு புன்னகை செய்து, "அம்மா! நீங்கள் இரண்டு மூன்று நாட்களாக உங்களுடைய தகப்பனாரை எத்தனையோ தடவை பார்த்து விட்டீர்கள்! நீங்கள் இப்போதும் அவர்களுடைய பங்களாவிலேதான் இருக்கிறீர்கள். இப்போது நடந்த விருந்தெல்லாம் உங்கள் பொருட்டாகச் செய்யப்பட்ட உங்களுடைய சொந்த விருந்து; நீயும் உன்னுடைய தம்பியான மோகனரங்கனுந்தான் இந்த அரண்மனையின் எஜமானர்கள். உங்கள் இருவரையும் இத்தனை வருஷம் மறைத்து வைத்திருந்த தற்காகத்தான் இப்போது சிவஞான முதலியாருக்கு மரியாதை கிடைத்தது" என்றான்.

அந்த வரலாற்றைக் கேட்ட ராஜாயியும், மோகனரங்கனும் கரை கடந்த வியப்பும், திகைப்பும், கட்டிலடங்காத ஆனந்தமும், ஆவேசமும் அடைந்து, "ஆ! என்ன! என்ன! நாங்கள் கிருஷ்ணா புரம் ஜெமீந்தாருடைய பிள்ளைகளா?" என்று மிகுந்த ஆவலோடு கேட்க, அந்தச் சமயத்தில் விருந்தினரை எல்லாம் அனுப்பிவிட்டு அளவிறந்த பதைப்போடும் ஆவேசத்தோடும் உள்ளே வந்த ஜெமீந்தார், கடைசியாக ராஜாயி சொன்னதற்கு மறுமொழியாக, "ஆம்! நான் தான் உங்களைப் பெற்ற தகப்பன்! என் செல்வக் குழந்தைகளா! எத்தனை வருஷ காலத்துக்கு முன் உங்களை விட்டுப் பிரிந்தேன்? ஆகா! சண்டாளன்! படுபாவி! உங்களை என்னென்ன கோலத்துக்கு ஆளாக்கினான்! அப்பா! மோகனரங்கம்!

கண்ணே ராஜாயி! எங்கே! ஓடிவாருங்கள்! என் தேகம் பதறுகிறது! ஓடிவந்து என்னைக் கட்டிக்கொள்ளுங்கள் உங்களை எல்லாம் எமனுக்கு ஆகாரமாகக் கொடுத்து விட்டேன் என்றும், இனி சந்நியாசம் வாங்கிக் கொள்ளலாம் என்றும் நினைத்திருந்த எனக்குப் புத்துயிர் கொடுத்த என் கண்மணிகளே வாருங்கள்!" என்று கூறி மிகவும் பதறிக் கதறி அவர்களை நோக்கி ஓடிவர, ராஜாயியும், மோகனரங்கனும், "அப்பா! இப்போதாகிலும் உங்களைப் பார்க்கக் கிடைத்ததே!" என்று கூறிய வண்ணம் ஒரே பாய்ச்சலாகப் பாய்ந்து தங்களது தந்தையைக் கட்டித்தழுவிக் கொள்ள, மூவரும் தங்களது மனதில் காட்டாற்று வெள்ளம் போலப் பொங்கி எழுந்த குதூகலத்தையும், பேரின்ப சுகத்தையும் தாங்கமாட்டாமல் கோவெனக் கதறி வாய்விட்டலறித் தேம்பித் தேம்பிக் குழந்தைகள் போல அழுது பாகாய் உருகியோடினர்.

சற்றுமுன் சிவஞான முதலியார் சிக்ஷிக்கப்பட்ட போது ஏற்பட்ட குழப்பத்தையும், கலகத்தையும் கண்டு, அஞ்சி நடுங்கிக் கலவர மடைந்து பக்கத்து மண்டபத்தில் நின்ற கல்யாணியம்மாள், கோமளவல்லி, மீனாக்ஷியம்மாள், கண்மணியம்மாள் முதலியோரும், நூற்றுக்கணக்கான பணிமக்களும் அங்கே வந்து கூடி, கல்லும் கரைந்துருகத் தக்கதாக இருந்த அந்தச் சந்திப்பைக் கண்டு கலங்கிக் கண்ணீர் விடுத்தழுது நைந்திளகி நின்றனர். மதனகோபாலன் ஆனந்த சாகரத்தில் மிதந்து மயிர் சிலிர்க்க நின்று பேரின்பம் எய்தினான்.

அவ்வாறு அரை நாழிகை நேரம் வரையில் அந்த மண்டபத்தில் இருந்த எல்லோர் மனதிலும், ஆனந்தமே மயமாக இருந்து எல்லோரையும் மெய்ம்மறந்து போகும்படி செய்தது. தமக்கெதிரில் வந்து நின்ற கல்யாணியம்மாளைக் கண்ட கிருஷ்ணாபுரம் ஜெமீந்தார் தமது குழந்தைகளை விடுத்து, அந்தச் சீமாட்டியைப் பார்த்துப் புன்னகை செய்ய, உடனே கல்யாணியம்மாள், "அண்ணா! நேற்றைய தினம் எனக்குப் பங்கில்லையா என்று கேட்டீர்களே! எனக்குக் கிடைத்ததைவிட இரண்டு பங்கு ஆனந்தத்தை ஈசுவரன் தங்களுக்கு இன்றைய தினம் கொடுத்துவிட்டான். **ஊரார் பிள்ளையை ஊட்டி வளர்த்தால், தன் பிள்ளை தானே வளரும்** என்பது

தங்களுடைய விஷயத்தில் பரிஷ்காரமாகத் தெரிந்து விட்டது. அதுவும் தவிர, இதில் இன்னொரு விசேஷத்தைத் தாங்கள் கவனித்தீர்களா? என்னுடைய பிள்ளை எப்படித் தங்களி டத்தில் வந்திருந்தானோ அதுபோலத் தங்களுடைய பிள்ளையும் எங்களிடத்தில் கொஞ்ச காலமாகிலும் இருக்க நேர்ந்ததைக் கவனித் தீர்களா? எல்லாம்வல்ல சர்வேசுவரனே தோன்றாத் துணைவனாக இருந்து நம்முடைய காரியங்களை எல்லாம் நடத்தி இருக்கிறான் என்பது நன்றாகத் தெரிகிறதல்லவா?" என்றாள்.

அதைக் கேட்ட கிருஷ்ணாபுரம் ஜெமீந்தார், "ஆம் அம்மணீ! அதற்குச் சந்தேகமென்ன! எல்லாம் கடவுள் செயல்தான். அவனின்றி ஓர் அணுவும் அசையாதென்பது பொய்யாகுமா; ஆனால், இதில் இன்னொரு விஷயம்; தங்களுடைய புத்திரன் என்னிடத்தில் நடந்து கொண்ட மாதிரிக்கும், என்னுடைய புத்திரன் தங்களிடத்தில் நடந்து கொண்ட மாதிரிக்கும் எவ்வளவு வித்தியாச மிருக்கிறது பார்த்தீர்களா! சகலமான நற்குணங்களும் ஆண்மைத் தனமும் உருவெடுத்து வந்தது போலவும், ஸ்ரீராமச்சந்திரனே மறுபடி ஜனித்தது போலவும் தங்களுடைய செல்வக் குமாரன் வந்து பிறந்திருக்கிறான். என்னுடைய மகனோ, அடக்கி ஆளுவதற்குப் பெரியோர் இல்லாமையால் பல வழிகளில் சீர் குலைந்து கெட்டுப் போயிருக்கிறான். அப்படி இருந்தும், நான் அவனை மகன் என்று தான் ஏற்றுக் கொள்ள வேண்டியிருக்கிறது. அவன் இனியாவது மதனகோபாலனுடைய பழக்க வாசனை யினால் நல்வழிப்பட்டு ஒழுங்கான மனிதன் ஆவான் என்று நான் நம்புகிறேன். அவன் உங்கள் விஷயத்தில் ஒரு பெருத்த தவறு செய்திருக்கிறான். அது இன்னதென்பதை நான் இப்போது வெளியிட இஷ்டமில்லை. நேற்றைய தினம் நான் உங்களிடத்தில் சன்மானம் கேட்ட போது இந்த விஷயத்தை மனசில் வைத்துக் கொண்டு தான் பேசினேன். அந்த விஷயத்தில் உங்களுடைய மனம் நிரம்பவும் புண்பட்டிருக்கிற தென்பதை நான் அறிவேன். என் முகதாக்ஷண்யத்தைக் கருதி நீங்கள் அதை இனி பாராட்டாமல், என்னுடைய பையனை க்ஷமித்துக் கொள்ள வேண்டும். அந்த விஷயத்தில் நான் உங்களைக் கெஞ்சி மன்றாடி ஆயிரம் தரம்

கேட்டுக் கொள்ளுகிறேன். மதனகோபாலனும் அந்த விஷயத்தில் மோகனரங்கன் மேல் எவ்விதப் பகைமையும் பாராட்ட மாட்டான் என்று உறுதியாக நம்புகிறேன். அடேய் மோகனரங்கம்! வா இப்படி! அம்மாள் காலிலும், மதனகோபாலன் காலிலும் விழுந்து மன்னிப்புக் கேட்டுக்கொள்" என்று மிகவும் உருக்கமாகப் பேசினார்.

உடனே மோகனரங்கன் நிரம்பவும் கிலேசமடைந்தவனாய், முன்னால் வந்து கல்யாணியம்மாளது காலில் விழுந்து, "அம்மணி! மூடத்தனத்தினால் நான் தங்களிடத்தில் தவறுதலான காரியத்தைச் செய்து விட்டேன். என்மேல் வருத்தம் வைக்கக்கூடாது" என்று மிகவும் மனநைந்து கூற, அவனது கண்களில் கண்ணீர் பொங்கி மளமளவென உதிர்ந்தது. அதைக் கண்ட கல்யாணியம்மாள் மதனகோபாலன் முதலிய எல்லோரது மனமும் கண்களும் கலங்கின. கல்யாணியம்மாள் மிகுந்த அன்பும் மனநெகிழ்வும் அடைந்து, "அப்பா மோகனரங்கம்! போதும் எழுந்திரு; நீ உண்மையில் தங்கமான குணமுடையவன் தான். அந்தத் தவறைச் செய்ய முதலில் தொடங்கியவன் நீயல்ல என்பது எனக்கு நன்றாகத் தெரியும். இந்தத் தவறில் உன்னை இறக்கியது வேறே மனிதர் ஆகையால் இதில் உன் பேரில் பிசகில்லை. எழுந்திரு ராஜா!" என்று மிகவும் பரியமாகவும் பரிவாகவும் பேசி, அவனது கையைப் பிடித்துத் தூக்கிவிட்டாள்; உடனே மோகனரங்கன் மதனகோபாலனைக் கட்டியணைத்து, "நான் இதுவரையில் பெரியவருடைய எந்த வார்த்தைக்கும் மாறாக நடந்தவனல்ல. ஆனால், இந்த விஷயத்தில் மாத்திரம், நான் அவர்களுடைய விருப்பத்திற்கு மாறாக நடக்கிறதைப் பற்றி அவர்கள் என்னை மன்னிக்க வேண்டும். மோகனரங்கன் என்னைவிடப் பெரியவன்; அவன் என்னுடைய காலில் விழ, அப்படிப்பட்ட பிரமாதமான எந்தக் காரியத்தைச் செய்துவிட்டான். அவனுக்கு நாம் செய்து வைக்கக் கடமைப்பட்டுள்ள ஒரு காரியத்தைத் தானே அவன் செய்து கொண்டான். அதைப்பற்றி நாம் சந்தோஷப்படுவதைத் தவிர வேறுவிதமாக எண்ணுவதற்கில்லையே" என்று கூறி மோகன ரங்கனை இன்னொரு முறை கட்டித் தழுவினான். அதைக் கண்ட

கிருஷ்ணாபுரம் ஜெமீந்தாரும் கல்யாணியம்மாளும் ஆனந்த பரவசமடைந்து பூரித்துப் புளகாங்கிதம் அடைந்தனர்.

அந்தச் சமயத்தில் கிருஷ்ணாபுரம் ஜெமீந்தாரது திருஷ்டி, சற்று தூரத்தில் நின்று கொண்டிருந்த தமது தங்கையான மீனாக்ஷியம்மாள் மீது சென்றது. அப்போது கண்மணியம்மாள் பக்கத்திலிருந்த விடுதிக் கதவின் மறைவில் நாணித் தலைகுனிந்து நின்ற வண்ணம், அங்கே நடந்த சம்பவங்களை எல்லாம் ஆதியோடந்தமாகக் கவனித்தவளாய், அடிக்கடி கடைக்கண்ணால் மதனகோபாலனை பார்த்துப் பார்த்துப் பரவசமடைந்து பூரித்திருந்தாள்.

அப்போது கிருஷ்ணாபுரம் ஜெமீந்தார் தமது தங்கையை நோக்கி மிகவும் அன்பாகப் பேசத் தொடங்கி, "என்ன மீனாக்ஷி! ஏன் துரைராஜா வரவில்லை? அவனையும் அழைத்துக் கொண்டு வரும்படி நான் ஆளிடம் சொல்லி அனுப்பினேன்!" என்றார். அதைக் கேட்ட மீனாக்ஷியம்மாள், "அண்ணா! அவனை இரண்டு நாள்களாகக் காணோம். நேற்றைக்கு முந்திய நாள் தினம் ஹைகோர்ட்டில் நடந்த விசாரணையின் விவரங்களைத் தெரிந்து கொள்ளப் போனவன் அதன் பிறகு வீட்டுக்கே திரும்பி வரவில்லை. அவன் எங்கே போனான் என்பதே தெரியவில்லை. ஆள்களை விட்டுத் தேடக்கூடிய இடங்களில் எல்லாம் தேடிப் பார்த்துவிட்டோம். என்னவோ, ஏதோ என்று எனக்கு நிரம்பவும் கவலையாக இருக்கிறது" என்றாள்.

உடனே கிருஷ்ணாபுரம் ஜெமீந்தார், "சரி; எங்கேயாவது தேவடியாள் வீட்டிலிருப்பான். கையிலிருக்கும் பணம் தீர்ந்து போய், மறுபடியும் பணம் தேவையானால் தானே வருகிறான். அவன் என்ன குழந்தையா! எங்கேயாவது காணாமற் போய்விடுவானோ என்கிற பயமே இல்லை" என்றார். அதைக் கேட்ட மீனாக்ஷியம்மாள் முதலிய எல்லோரது தேகமும் குன்றியது. எல்லோரும் கிலேசமுற்றுக் கீழே குனிந்தனர்.

உடனே ஜெமீந்தார் மேலும் பேசத்தொடங்கி, "ஒருகால் இப்படி இருக்கலாம். தன்னுடைய ஆருயிர்த் தோழனாகிய அம்பட்டப் பையன் அந்தமான் தீவுக்குப் போகிறானே என்று விசனப்பட்டு

அவனைப் பார்க்க ஒருவேளை முயற்சி செய்து கொண்டிருப்பான்; எப்படியும் வந்துவிடுவான். அதைப்பற்றிக் கவலையில்லை. அது போகட்டும். எனக்குத் தெரியாமல், நீங்கள் குழந்தை கண்மணி யம்மாளுக்கு நிச்சயதார்த்த முகூர்த்தம் ஏற்படுத்திய தெய்வ சங்கல்பத்தினாலேயே தடைபட்டுப் போனதென்று நினைக்கிறேன். கண்மணியம்மாள் நல்ல உத்தமி. அவளுக்கு மாத்திரம் அந்தப் பையனுடைய முகத்தில் விழிக்கவே கூடாதென்ற உறுதி ஏற்கனவே ஏற்பட்டுவிட்டது. என்ன மீனாக்ஷி! ஹைகோர்ட்டில் ஏற்பட்ட தீர்மானத்தின் விவரங்களை எல்லாம் கேட்டாய் அல்லவா?" என்றார்.

உடனே மீனாக்ஷியம்மாள் சந்தோஷமாகப் புன்னகை செய்து, "ஹைகோர்ட்டாரும், நீங்களும், இந்த மதனகோபாலன் தான் உண்மையான மைனர் என்பதை இப்போது தான் கண்டுபிடித் தீர்கள். நம்முடைய குழந்தை கண்மணியின் மனசில் இந்தக் குறிப்பை ஏற்கெனவே ஈசுவரன் காட்டிவிட்டான். ஆரம்பத்தில் இருந்தே அவளுடைய பிரியமெல்லாம் இந்த மதனகோபாலன் மேலே தான் விழுந்துவிட்டது. இந்த விஷயத்தில் நான் என்ன சொல்லியும் கேளாமல் அவள் ஒரே பிடிவாதமாக இருந்து வந்தாள். கடைசியில் நாம் எல்லோரும் முட்டாளானோம்; அவள் திரிகாலக்ஞானமுள்ள முனீசுவரர் போல, பின்னால் நடக்கப் போவதை முன்னால் அறிந்தே அப்படி நடந்தாள் என்று நாம் எண்ண வேண்டியிருக்கிறது" என்று குதூகலமாகப் பேசினாள். அதைக் கேட்ட கிருஷ்ணாபுரம் ஜெமீந்தார் கரைகடந்த சந்தோஷ மடைந்தவறாய் நகைத்து, "அப்படியானால் கண்மணியம் மாளுடைய காட்டில் மழை பெய்தது குழந்தாய்! கண்மணி! கவலைப் படாதே! உன்னுடைய மனோபீஷ்டம் வெகு சீக்கிரத்தில் நிறைவேறப் போகிறது! யார் மனசு வைத்தாலும் என்னுடைய தலைவிதி மனசுவைக்க வேண்டாமா என்று அன்றைய தினம் ராத்திரி நீ மதனகோபாலனிடம் சொன்னது எனக்கு நன்றாக நினைவிருக்கிறது. இனி உன்னுடைய தலைவிதியும் மனசு வைத்து விட்டதென்றே நீ நிச்சயமாக நினைத்துக் கொள்ளலாம். எங்கே? ஏன் அப்படி நாணி மறைகிறாய்? நீ இனி எப்படி மறைந்

தாலும் உன்னை மதனகோபாலன் விட்டுவிடுவான் என்று நினைக்காதே? கண்மணீ! வெட்கப்படாதே! வா இப்படி; உனக்கு மாமியாராகப் போகும் இந்த அம்மாளுடைய காலைத் தொட்டு நமஸ்காரம் பண்ணு" என்று மிகுந்த வாஞ்சையாகவும் மனப்பூர்வ மான பிரியத்தோடும் கூற, உடனே கண்மணியம்மாள் தலை குனிந்து மடவன்னமென நடந்து வந்து கல்யாணியம்மாளுக்கு முன்னால் பணிவாகக் குனிந்து, அந்தச் சீமாட்டியினது பாதங்களைத் தொட்டுத் தனது கண்ணிற் ஒற்றிக் கொண்டவளாய் எழுந்திருக்க, உடனே கல்யாணியம்மாள் மிகுந்த பிரியத்தோடு அவளை இழுத்து ஆசையாக மார்போடணைத்து முத்தமிட்டு, "குழந்தாய்! உன்னுடைய மனோபீஷ்டம் நிறைவேறுங் காலம் வந்துவிட்டதனாலேதான், மதனகோபாலனுடைய ரகசியமெல்லாம் இப்போது வெளியானதென்றே நான் நினைக்கிறேன். உத்தம ஜாதி ஸ்திரீகளுடைய மனசில் ஈசுவரன் எப்போதும் சான்னித்யமாக இருந்து அவர்களை எப்போதும் சரியான வழியில் நடத்திக் கொண்டு போவான் என்பது நம்முடைய சாஸ்திரக் கொள்கை. அது போலவே உனக்கு நேர்ந்திருப்பதால் நீ நல்ல பதிவிரதா சிரோன்மணி என்பதற்கு வேறே எவ்வித ருஜூவும் தேவையில்லை. நீ உன் மனசைக் கொள்ளைக் கொண்ட மணாளனை அடைந்து என்றும் தீர்க்க சுமங்கலியாக இருந்து வாழப் போகிறாய்" என்று கூறி அவளை விடுத்தாள். அதன்பிறகு, கிருஷ்ணாபுரம் ஜெமீந்தார், அங்கே கூடியிருந்த கல்யாணியம்மாள் மீனாக்ஷியம்மாள் முதலிய உறவினர் யாவரும் நாலைந்து நாட்கள் வரையில் அந்த மனோகர விலாசத்திலேயே சந்தோஷமாக இருந்துவிட்டு போக வேண்டும் என்று கேட்டுக் கொள்ள, யாவரும் முழுமனதோடு அதற்கு இணங்கினர். அன்றைய இரவிலும் எல்லோருக்கும் பெருத்த விருந்து நடைபெற்றது. ஆனால் அங்கிருந்த எல்லோரது மனமும் பிரம்மானந்தமே நிறையப் பெற்றிருந்தமையால், சகிக்க இயலாத மனவெழுச்சியும் உற்சாகமும் அடைந்திருந்த யாவரும் அன்றைய தினம் ஊணையாகிலும் உறக்கத்தையாகிலும் நாடாமல் புதிதாக ஏற்பட்ட உறவினரோடு ஒருவருக்கொருவர் சம்பாஷித்துக் கொஞ்சிக் குலாவிக் குதூகலமாக இருந்தனர். அன்றைய தினம் இரவு கழிய மறுநாட் காலை வந்தது. கிருஷ்ணாபுரம் ஜெமீந்தார்

ஒரு நாழிகை போல மாறி எல்லோரிடத்திலும் தமாஷாகப் பேசிச் சிரித்து விளையாடிய வண்ணம் தமது பிரத்தியேக விடுதியில் இருக்க, அந்தச் சமயத்தில் தபால்காரன் வந்து ஒரு கடிதத்தை அவரிடத்தில் கொடுத்துவிட்டுச் சென்றான். அது எந்த ஊரில் இருந்து வந்திருக்கிறதென்பதை அறியும் பொருட்டு அவர் அதன் முத்திரையை நோக்க, தனுஷ்கோடி என்ற முத்திரை அதில் காணப் பட்டது; அந்த ஊரிலிருந்து தனக்குக் கடிதம் எழுதக் கூடியவர் யார் என்பதைப் பற்றி அவர் சிறிது நேரம் யோசிக்க ஒன்றும் தோன்றவில்லை. உடனே அவர் அந்தக் கடிதத்தைப் பிரித்து படிக்க, அது அடியில் வருமாறு எழுதப்பட்டிருந்தது:-

மகா-ா-ா-ஸ்ரீ, பெரிய அப்பா அவர்கள் பொற்பாத கமலங்களில் அடியேன் துரைராஜா அநந்தகோடி தண்டனிட்டு வணக்கமாக எழுதும் சேதி.

நேற்றைய தினம் ஹைகோர்ட்டில் விசாரணை நடந்த காலத்திலே தான், தாங்கள் இன்னார் என்பதை நான் அறிந்து கொண்டேன். அதற்கு முன் ஒருநாள் நாம் இருவரும் நம்முடைய பங்களாவில் சந்தித்துப் பேசிக் கொண்டிருந்த விஷயங்களைக் கருதி, நான் துப்பாக்கியால் சுட்டுக் கொண்டு இறந்து விடலாமா என்ற எண்ணம் என் மனசில் உண்டாயிற்று. ஆனால் அப்படிச் செய்யத் துணிவு உண்டாகவில்லை. இனி நான் பட்டணத்திலிருந்து உங்களுடைய முகத்தில் விழிப்பதற்கு யோக்கியதையற்றவன் ஆகி விட்டேன்; ஆகையால் இந்தத் தேசத்தையே விட்டு, எங்கே யாவது கொளும்பு கண்டி முதலிய தூரதேசங்களுக்குப் போய், கொஞ்ச காலமிருந்து என்னுடைய மனசைத் திடப்படுத்திக் கொண்டு எப்படியாவது உயிரை விட்டு விடுவதையே உறுதியாக வைத்துக் கொண்டு இங்கே வந்துவிட்டேன். நீங்கள் என்னைத் தேடாமல் இருக்க வேண்டும் என்று நான் என்னுடைய விலாசத்தை இந்தக் கடிதத்தில் எழுதவில்லை. நான் இதுவரையில் கெட்டலைந்து அநியாயமாக அழிந்து போய் விட்டதைப் பற்றி என் மனம் மிகவும் பரிதவிக்கிறது. இனி நான் தங்களோடு கூட இருந்தால் நல்ல வழிக்கு வந்திடுவேன் என எனக்குத் தோன்றினாலும், நான் தங்களுடைய முகத்தில் விழிக்க

அருகமற்றவனாகி விட்டேன். என்ன செய்கிறது. இனி பிழைகளை எல்லாம் மன்னித்துக் கொள்ளும்படி கெஞ்சி மன்றாடிக் கேட்டு திக்கு நோக்கி தெண்டனிடும்.

பணிவுள்ள குமாரன்,

துரைராஜா

– என்று எழுதப்பட்டிருந்த கடிதத்தைப் படித்த ஜெமீந்தார் மிகுந்த விசனமும் கலக்கமும் கொள்ளலானார். துரைராஜா என்பவன் இயற்கையில் ஈவிரக்கம், தயாளம், நற்குணம் முதலியவை வாய்ந்தவன் என்பதையும், ஆனால், அடக்குவோர் இல்லாமை யால், அதன் கூடாவொழுக்கங்களில் பிரவேசித்துக் கெட்டலை கிறான் என்பதையும், அவர் பன்முறை கேள்வியுற்றிருந்தார். அவன் தமது முகத்தில் விழிக்க வெட்கித் தற்கொலை புரிந்து கொள்ள நினைப்பதிலிருந்து, இன்னமும் அவனிடத்தில், கண்ணியமும், சுயமரியாதையும் இருப்பது தெளிவாகத் தெரிந்தது; ஆகையால், அவனைத் தாம் எப்படியும் தேடிப்பிடித்துக் கொணர்ந்து ஒரு கலியாணத்தைச் செய்து வைத்து நல்வழிப்படுத்தி விடலாம் என்ற எண்ணம் அவருக்கு உண்டாயிற்று. அதுவும் நிற்க, தமது தம்பியின் மகனைத் தாம் கவனியாமல் விட்டதனால் அவன் தற்கொலை புரிந்து கொண்டான் என்று உலகத்தார் தன்னைத் தூற்றுவார்கள் என்ற அச்சமும் தோன்றியது. ஆகையால், அவர் உடனே அவனை எப்படியும் திருப்பி அழைத்து வந்துவிட வேண்டும் என்று உறுதி செய்து கொண்டவராய் எழுந்து அங்கே இருந்த சமாசாரப் பத்திரிகைகளை ஆராய்ச்சி செய்தார். அவற்றில் விளம்பரப்படுத்தப்பட்டிருந்த கப்பல் புறப்படும் தேதி மணி முதலியவற்றைப் பார்த்தார். முந்திய நாள் தனுஷ்கோடியிலிருந்து எந்தக் கப்பலும் புறப்படவில்லை என்பது தெரிந்தது. அன்றைய தினம், மாலை மூன்று மணிக்குக் கொளும்புக்கு ஒரு கப்பல் புறப்படும் என்பதையும் அவர் தெரிந்து கொண்டார். ஆகவே துரைராஜா தனுஷ்கோடியிலே தான் இருக்க வேண்டும் என்று நிச்சயப்படுத்திக் கொண்டு உடனே அவசரத் தந்தியொன்றை எழுதி, அதை தனுஷ்கோடிப் போலீஸ் உத்தியோகஸ்தருக்கு அனுப்பி வைத்தார். அதில் துரைராஜாவினது அங்க மச்ச அடை

யாளங்களை எல்லாம் கண்டு, அந்த யௌவனப் புருஷன் பெருத்த பொருளைத் திருடிக்கொண்டு அக்கரை தேசத்திற்குப் போக முயல்வதால் அவனைப் பிடித்து வைத்திருந்தால், மறுநாள் தாம் நேரில் அங்கே வருவதாக அந்தத் தந்தியில் எழுதி அனுப்பி விட்டார். அவனைப் பிடித்த உடனே மறுதந்தி அனுப்பும்படி பணமும் கட்டி தமது விலாசத்தையும் எழுதியனுப்பிவிட்டு பதில் தந்தியின் வருகையை மிகுந்த ஆவலோடு எதிர்பார்த்திருந்தார்.

அவரது நிலைமை அப்படியிருக்க, மற்றவர்களும் வெவ்வேறு வகையில் தங்களது கவனத்தைச் செலுத்தியிருந்தனர். முதல் நாள் இரவில் கல்யாணியம்மாள் தனது இமைகளை மூடவே இல்லை. நெடுங்காலத்திற்கு முன்னர் தான் இழந்த புத்திரனைத் திரும்பவும் அடைந்ததையும், தன்மீது எவ்விதக் குற்றமும் இல்லையென்று ஜட்ஜி துரை தீர்மானித்து விட்டதையும், தங்களுக்கெல்லாம் பரம உபகாரியாக இருந்த கிருஷ்ணாபுரம் ஜெமீன்தார் அவரது மக்களை அடைந்ததையும், கடைசியில் தனது மூத்த புத்திரி அவரது குமாரனிடத்திலேயே போய்ச் சேர்ந்து அவ்வளவு அபாரமான குபேர சம்பத்துக்கும் எஜமானியானதையும் நினைத்து நினைத்து கல்யாணியம்மாள் பிரம்மாநந்த சுகத்தில் ஆழ்ந்து மிதந்து இரவெல்லாம் அதே உற்சாகமும், பூரிப்பும், மனவெழுச்சியும் அடைந்து தனது சயனத்தில் படுத்திருந்தாள். அதுபோலவே மதனகோபாலன் இன்னொரு சயன அறையில் படுத்து அதே விஷயங்களை நினைத்து நினைத்துப் பேராநந்த நிலைமையில் இருந்ததன்றி, தனது மனத்தைக் கொள்ளை கொண்ட நற்குண வதியான கண்மணியம்மாள் தனக்கு மனைவியாகும் விஷயம் பகிரங்கமாக்கப்பட்டு, மீனாக்ஷியம்மாள், கல்யாணியம்மாள் முதலியோரால் அங்கீகரிக்கப்பட்டதையும் நினைத்து நிகரற்ற சுவர்க்க போகம் அனுபவிப்பவன் போலப் பூரித்து மெய்ம்மறந்து, கண்மணியம்மாளது இனிய சுந்தர வடிவத்தையே இரவு முழுதும் சொப்பனத்தில் கண்ட வண்ணம் சயனித்திருந்தான். ஆனால், அவன் தனது மூத்த தங்கையான துரைஸானியம்மாளை அதுவரையில் பார்க்கவில்லை ஆதலால், அந்தக் குறை மாத்திரம் அவனது மனதில் உறுத்திக் கொண்டிருந்தது. தனது தாயான

கல்யாணியம்மாள் துரைஸானியின் மீது கொண்டிருந்த கோபத்தில் அவளைப் பார்க்கமாட்டேன் என்று சொல்லிவிடுவாளோ என்ற சந்தேகமும் இருந்து வந்தது. சுந்தரம் பிள்ளை அங்கப்ப நாயக்கன் தெருவில் வைத்திருந்த வீட்டில் இருந்த துரைஸானியம்மாளை அன்றைய காலையில் அழைத்து வருவதென்று கிருஷ்ணாபுரம் ஜெமீந்தார் ஏற்பாடு செய்திருந்தார். ஆகையால், தான் அதிகாலையில் எழுந்து தனது தாயின் சயனக் கிரகத்துக்குப் போய்த் தனது தங்கையான துரைஸானியம்மாளை மன்னித்து ஏற்றுக் கொள்ளும் படி கேட்க வேண்டும் என்ற தீர்மானத்தோடு சயனித்திருந்த மதனகோபாலன் அதிகாலையில் எழுந்து, தனது காலைக்கடன் களை முடித்துக் கொள்ள, பொழுதும் நன்றாக விடிந்தது. தனது தாய் அப்போது படுக்கையை விட்டு எழுந்திருப்பாள் என்று நினைத்து அவன் அங்கே சென்றான்; கல்யாணியம்மாள் பிரத்தியேகமான ஒரு சயனக் கிரகத்தில் படுத்திருந்தாள். அதன் வாசற்கதவு மூடப்பட்டிருந்தது. அதைக் கண்ட மதனகோபாலன் தனது தாய் ஒருவேளை தூக்கத்திலிருந்து விழிக்கவில்லையோ என்று சந்தேகித்தவனாய் இரண்டொரு நிமிஷ நேரம் அவ்விடத் திலேயே தயங்கி நிற்க, உட்புறத்தில் மனிதர் பேசிய குரலோசை கேட்டது. தனது தாய் மிகவும் ஆத்திரமாகப் பேசியதும் தெரிந்தது. அவ்வாறு, தனது தாய்க்கு ஆத்திரம் உண்டானதைக் காண, அவனது ·மனம் பதறியது. தனது தாயினிடத்தில் அப்படி யார் தவறாக நடந்து கொண்டவர் என்பதை அறிய ஆவல் கொண்ட மதனகோபாலன், உள்ளே என்ன பேசப்படுகிறதென்பதை கவனித்தான். அப்போது கல்யாணியம்மாள், "அடி பொன்னீ! நீ செய்த காரியத்தினால் என்னுடைய ஆயிசு காலமெல்லாம் அந்த அம்பட்ட நாய்க்குப் பணம் கொடுத்துக் கொடுத்துத்தான் என்னுடைய குடியே முழுகிப் போய்விட்டதே. அவர்கள் தாயும், மகனும் சேர்ந்து இவ்வளவு காலம் என்னைப் படுத்தி வைத்தபாடு ஈசுவரனுக்கே சம்மதமில்லாமல், கடைசியில் இரண்டு பேரும் மீளாமல் தொலைந்து போனார்களே. மழைவிட்டும் தூவானம் விடவில்லை என்பது போல, நீ இப்போது வந்து இன்னம் ஐயாயிரம் பதினாயிரம் கொட்டிக் கொடுத்து உன்னைப் போலீசார் ஒன்றும் செய்யாமல் மீட்டுவிடச் சொல்லுகிறாயே. பணமென்ன

எங்கள் வீட்டுக் கொல்லையில் காய்த்தா தொங்குகிறது. அதெல்லாம் ஒன்றும் கொடுக்க முடியாது. நீயும் ஜெயிலுக்குப் போய்ச் சேர். **துஷ்ட சகவாசம் பிராண சங்கடம்** என்றபடி, நீங்கள் எல்லாரும் இருப்பதனாலே தான் எனக்கு இப்படிப்பட்ட சங்கடங்கள் எல்லாம் வருகின்றன" என்று அதட்டிக் கூறினாள்.

அதைக் கேட்ட பொன்னம்மாள் கல்யாணியம்மாளது பாதத் தடியில் வீழ்ந்து, "தாயே! ஒங்கிளுக்காவ நான் இத்தெனெ காலமா எம்பிட்டோ பாடுபட்டவளாச்சே! இந்தக் கடெசிக்காலத்துலெ நீங்க என்னெ இப்பிடிக் கைவிட்டுபுட்டா, நான் என்ன செய்யறது! போலீசுக்காரன் கிட்ட என்னெக் காட்டிக்குடுக்காம நீங்களே கொண்ணுப்புடுங்க. கச்சேரியிலெ சரிச்சி தொரெகூட என்னெப் பத்தி நல்லா எளுதியிருக்காங்களே! ஒங்க மனசு மாத்தரம் எரங்கலியா! ஒங்களோடே சொந்தப்புள்ளெ நேத்து சொன்னத்தெ நீங்க கவனிக்கலியா! அந்த அம்பட்டச்சியோடெ மவனெ நான் இஞ்செ கொண்டாந்து வைக்காமெயிருந்தா நம்ப ராசாங்கமே போயிருக்குமே. அதெயாச்சும் ரோசனே பண்ணுங்க அம்மா! நீங்க என்னெப் பொறத்தியிலெ காட்டிக்குடுக்காமே நீங்களே கொண்ணு போட்டுடுங்க!" என்றாள்.

அதைக் கேட்ட கல்யாணியம்மாள் சிறிது நேரம் பேசாமலிருந்து, "நீ அப்படிச் செய்தது போனாலும் போகட்டும் என்றால், நீ செய்த இன்னொரு காரியத்தை மாத்திரம் நான் மறக்கவே மாட்டேன். வெள்ளைக்காரி போட்டுக் கொள்வதற்கு வேண்டிய உடைகளை எல்லாம், ரென்பென்னெட்டு கம்பெனியிலிருந்து வாங்கிக் கொடுக்கும்படியாக நீ கேட்டபோதே, நான் அதைப் பற்றி ஆட்சே பித்தேன். அந்த உடைகளை வைத்துக் கொண்டு நீ என்ன செய்யப் போகிறாய் என்பதைக் கடைசி வரையில் என்னிடத்தில் நீ சொல்லாமலே இருந்து என் கழுத்தை அறுத்துவிட்டாய். யாரோ ஒரு தேவடியாளுக்கு அந்த உடைகளை எல்லாம் போட்டு நீ அனுப்பியிருக்க, அந்த துரைராஜா என்மேல் சந்தேகப்பட்டு இங்கே வந்து என்னை எப்படிப்பட்ட அவமானத்துக்கு ஆளாக்கி னான். இப்போது அந்த உடைகள் என்னுடைய பிள்ளையினிடத் திலும் கிருஷ்ணாபுரம் ஜெமீந்தாரினிடத்திலும் இருக்கின்றன. நான்

தான் அப்படி வேஷம் போட்டுக் கொண்டு வந்தவள் என்று அவர்கள் உறுதியாக எண்ணிக் கொண்டிருக்கிறார்கள். அப்படி இல்லை என்று நான் ஆயிரந்தரம் சொன்னாலும் அவர்களுடைய மனம் நம்புமா? இந்த வெட்கக் கேடான விஷயத்தை முதலில் நான் எப்படி வாயில்வைத்து அவர்களிடத்தில் பேசுகிறது! என்னுடைய குழந்தையின் மனசில் என்னுடைய நடத்தையைப் பற்றி இந்தக் கெட்ட அபிப்பிராயம் இருந்து கொண்டே இருக்குமே. அதற்கு நான் இடங்கொடுக்கலாமா? விலக்க முடியாத இந்தத் துன்பத்தை எனக்கு உண்டாக்கி வைத்தவள் நீயல்லவா! ஆகையால், அந்த அதிக்கிரமச் செய்கைக்காகவாகிலும், உன்னை நான் கவனியாமல் போலீசார் என்ன வேண்டுமானாலும் செய்து கொள்ளட்டும் என்று விட்டுவிடப் போகிறேன்" என்றாள்.

உடனே பொன்னம்மாள் முன்னிலும் அதிகமாக இறைஞ்சிய குரலாக, "அம்மணீ! வெள்ளைக்கார உடுப்பெல்லாம் நீங்க போட்டுக்கினதல்ல இங்கற சங்கதியெ சொலபத்துலெ நாம்ப ருசுப் படுத்தலாமே. அன்னெக்கி அந்த உடுப்புங்க கம்பெனியிலெ யிருந்து ஒங்கவிட்ட வந்து, நீங்க எங்கிட்டக் குடுத்தீங்களே. அப்ப, அதுலெயிருந்த ரவுக்கையெ எடுத்து நீங்க வேடிக்கையாய்ப் போட்டுக்கினு பாத்தீங்களெ; ஒங்க களுத்துப் பெரிசா இருந்துச்சு. அந்த ரவுக்கையோடெ களுத்து சின்னதாயிருந்திச்சு. ஒங்களோடெ களுத்துலெ அதெமாட்ட முடியாமெப் போச்சே. அந்த சங்கதி ஒங்கிளுக்கு நெனெப்பில்லையா! அந்த அளவெ வச்சிக்கினே நீங்க அப்படிச் செய்யல்லேயின்னு சொல்லி நாம்ப நல்லா ருசுப் படுத்தலாமே" என்றாள்.

அவள் சொன்ன சமயோசிதமான யோசனையைக் கேட்ட கல்யாணியம்மாள் கரைகடந்த மகிழ்ச்சியும் குதூகலமுமடைந்து, "பலே பலே பேஷ்! பொன்னம்மா! நீ சுத்தமாக எழுத்து வாசனை அறியாதவளாக இருந்தும், உன்னுடைய சாமார்த்தியமும் புத்தி கூர்மையும் யாருக்கும் வராது. எழுந்திரு எழுந்திரு; பதினாயிர மல்ல லட்சமல்ல எவ்வளவு வணம் வேண்டுமானாலும் செலவு செய்து நான் உன்னை மீட்கிறேன். இப்போது தான் என் மனம் குளிர்ந்து உண்மையில் சந்தோஷமடைகிறது. நானும் சரியான

மனுஷி என்று இனிமேல் நான் என் அருமை மகனுடைய முகத்திலும் பெரியவருடைய முகத்திலும் விழிக்கலாம். பொன்னம்மா! உன்னுடைய புத்தி விசேஷத்தை நான் நிரம்பவும் மெச்சுகிறேன்! உன்னை நான் எப்போதும் கைவிட மாட்டேன்" என்று உறுதி கூறினாள். உடனே பொன்னம்மாள் மிகுந்த மகிழ்ச்சியும் ஆனந்தமும் அடைந்தவளாய் எழுந்து நிற்க, கல்யாணியம்மாள், "சரி; என்னுடைய குழந்தை இந்நேரம் எழுந்து, என்னைப் பார்க்க ஆவல் கொண்டிருப்பான். நேற்று ராத்திரி அவனைவிட்டுப் பிரிந்தது எனக்கு ஒரு யுகம் போல இருக்கிறது. நீயும் வா; அவன் இருக்கும் இடத்துக்குப் போவோம்" என்றாள். அது வரையில் கதவிற்கு வெளியில் இருந்தபடி அந்த சம்பாஷணை முழுதையும் ஒரு வார்த்தைகூட விடாமல் கேட்டிருந்த மதனகோபாலன் அவ்விடத்தை விட்டுத் தனது சயனக்கிரகத்தை நோக்கி விரைவாகப் போய்விட்டான். அவன் அதுகாறும் அந்த வெள்ளைக்காரி உடைகள் விஷயமாகத் தனது தாயின்மீது ஒருவித அருவருப்பைக் கொண்டிருந்தான் ஆனாலும், அதை மறக்க முயன்று கொண்டிருந்தான். ஆனால், தனது தாய் அந்த விஷயத்திலும் நிஷ்களங்கமானவள் என்பதை உணரவே, அவனது மனதில் உண்டான பெருமைக்கும், ஆனந்தத்திற்கும், பூரிப்பிற்கும் எல்லையில்லை என்றே சொல்ல வேண்டும். அந்த விஷயத்தில் தனது தாய் சுத்தமானவள் என்பதை கிருஷ்ணாபுரம் ஜெமீந்தாருக்கும் தான் சொல்லி அவரது அருவருப்பையும் விலக்க வேண்டும் என்ற எண்ணம் உண்டாயிற்று. ஆகவே, அவன் தனது சயன அறைக்குள் போனவுடனே, அங்கே மேஜையின் மீது மூட்டையாகக் கட்டி வைக்கப்பட்டிருந்த வெள்ளைக்காரி உடைகளை எடுத்து அவன் அங்கேயிருந்த ஓர் இரும்புப் பெட்டியில் வைத்து பத்திரப்படுத்தப் போன சமயத்தில், கல்யாணியம்மாள், "தம்பீ! அது என்ன மூட்டை? அவ்வளவு ஜாக்கிரதையாக இரும்புப் பெட்டியில் வைக்கிறாய்!" என்று கேட்டுக் கொண்டே அந்த அறைக்குள் வந்து நுழைந்தாள்.

தனது தாய் வந்ததைக் கண்டு திடுக்கிட்டு ஒருவிதக் கிலேசம் அடைந்த மதனகோபாலன் தான் என்ன மறுமொழி சொல்வதென்பதை உணராது சிறிது நேரம் தயங்கினான். அவன் எந்த

விஷயத்திலும் பொய்யையே பேசி அறியாதவன் ஆதலால், அதை மறைக்கவும் கூடாமல், வெளியிடவும் கூடாமல் சிறிது நேரம் தவித்திருந்து, "ஒன்றுமில்லை; நான் கொஞ்ச நேரத்துக்கு முன், எழுந்து நீங்கள் இருந்த இடத்துக்கு வந்து நீங்கள் தூங்குகி றீர்களா என்று கவனித்தேன். நீங்கள் யாரிடத்திலோ கோபமாகப் பேசியதைக் கண்டு உங்களுக்குக் கோபமூட்டியது யார் என்பதை கவனித்தேன்; அதன் பிறகு நீங்கள் சொன்னதை எல்லாம் நான் கேட்டுக் கொண்டிருந்தேன்; இந்த மூட்டையிலே தான் அந்த உடைகள் இருக்கின்றன. பெரியவருக்கு இவைகளை ரகசியமாகக் காட்டி, நான் இப்போது கேள்வியுற்ற விஷயங்களை எல்லாம் சொல்லி அவருடைய சந்தேகத்தையும் விலக்குவதற்காக இதைப் பத்திரப் படுத்துகிறேன்" என்றான்.

அதைக் கேட்ட கல்யாணியம்மாள் அந்தக் கடினமான விஷயத்தைத் தான் ருஜுப்படுத்த வேண்டிய துன்பமும் இழிவும் இல்லாமல், தெய்வத்தின் அருளால் எல்லாம் தானாகவே ஒழுக்குப் படுவதைக் கண்டு மிகுந்த சந்தோஷமும் இன்பமும் அடைந்து அந்த மூட்டையை வாங்கிப் பிரித்து, அதிலிருந்த ரவிக்கையை எடுத்து உடம்பில் போடமுயல, அதன் அளவு குறைவாகவே இருந்தமையால், உடம்பில் அதைப் போட முடியாமல் போய் விட்டது. தனது தாய், வாயால் சொல்லாமலே, தனக்கு அந்த விஷயத்தின் உண்மையை மெய்ப்பித்துக் காட்டுகிறாள் என்பதை உணர்ந்து அவன் மிகுந்த லஜ்ஜை அடைந்தவனாய்த் தவித்திருந்து கடைசியில் அம்மாள் உடைகளைக் கொடுக்க, வாங்கிப் பெட்டியில் வைத்துப் பூட்டிவிட்டு நிமிர்ந்தான்.

அப்போது, "அண்ணா! அண்ணா!" என்று மிகவும் பதைப் பாகவும் சந்தோஷமாகவும் குதூகலமாகவும் கோமளவல்லியம் மாள் அந்த அறைக்குள் ஓடி வந்தாள்; அவள் அவ்வாறு வந்ததைக் கண்ட மதனகோபாலனும், கல்யாணியம்மாளும் மிகுந்த வியப்பும் பிரமிப்பும் அடைந்து, அவள் என்ன செய்தி சொல்லப் போகிறாளோ என்ற ஆவலோடு அவளது முகத்தையே நோக்கினர். மதனகோபாலன் மாத்திரம் அந்த அறையில் இருக்கிறாள் என எண்ணி அவ்வாறு குதூகலமாக ஓடிவந்த கோமளவல்லி தனது

தாயும் அவ்விடத்தில் இருக்கக் கண்டு, பயந்து நடுங்கி சடக்கென்று தன்னை அடக்கிக் கொண்டு, மதனகோபாலனைப் பார்த்து ஏதோ சைகை செய்தாள். அதைக் கண்ட கல்யாணியம்மாள், "என்ன கண்ணு! ஏதோ சந்தோஷ சங்கதி சொல்ல வந்தவள் போல அண்ணனைக் கூப்பிட்டுக் கொண்டு ஓடி வந்தாய்! சடக்கென்று நிறுத்திவிட்டாயே! எனக்குத் தெரியாமல் அண்ணனுக்கு மாத்திரம் தெரியக்கூடிய சந்தோஷ சங்கதி அப்படி என்ன இருக்கிறது? பரவாயில்லை. அண்ணன் கோபித்துக் கொள்ள மாட்டான். சங்கதியைச் சொல்" என்று நயமாகவும் குதூகலமாகவும் கூறினாள். அதைக் கேட்ட கோமளவல்லியம்மாள் விஷயத்தைச் சொல்லவும் மாட்டாமல், மறைக்கவும் மாட்டாமல் பரம சங்கடப்பட்டு, திருட்டு விழி விழித்து மதனகோபாலனது உதவியை நாடுகிறவள் போல, அவனது முகத்தை நோக்க, அதைக் கண்ட கல்யாணியம்மாள் நிரம்பவும் வியப்புற்றுப் புன்னகை செய்த முகத்தினளாய் மதனகோபாலனை நோக்கி, "என்ன தம்பீ! உங்களுக்குள் ஏதோ ரகசிய சங்கதி இருக்கிறது போலிருக்கிறதே! நான் வெளியே போய் விட்டு அப்புறம் வரட்டுமா?" என்று நயமாகக் கேட்க, உடனே மதனகோபாலனும் ஒருவாறு கிலேசமுற்றுத் தத்தளித்துத் தயங்கித் தனது தாயினிடத்தில் அஞ்சுகிறவன் போலக் காட்டி, "உங்களுக்குத் தெரியாத சங்கதி என்ன இருக்கிறது! வேறொன்றுமில்லை. நம்முடைய துரைஸானியம்மாள் வந்திருக்கிறாளாம்; அதைத் தெரிவிக்கத்தான் தங்கைச்சி ஓடிவந்தது. நீங்கள் கோபித்துக் கொள்வீர்களோ என்று எனக்கும் பயம்; தங்கைச்சிக்கும் பயம். ஆகையால், முதலில் துரைஸானியம்மாளை இங்கே அழைத்து வந்து வைத்துக் கொண்டு உங்களிடம் கெஞ்சிக் கேட்டுக் கொண்டு, அதன் பிறகு அவளை உங்களிடம் அழைத்துவர நினைத்தோம். உங்களுக்குத் தெரியாதது ஒன்றுமில்லை. துரை ஸானியம்மாளுடைய முகத்துக்காக பார்க்காவிட்டாலும், நம்முடைய பெரியவருடைய முகத்துக்காக நீங்கள் அவளை க்ஷமிக்க வேண்டும். அவள் இனி பெரியவருடைய மருமகள் அல்லவா? அவர்களுடைய மருமகளிடத்தில் நீங்கள் இப்படிப் பட்ட அருவருப்பையும் கோபத்தையும் நெடுக வைத்திருப்பது அவருக்குச் சம்மதமாக இராது. அதுவும் தவிர, இந்த இரண்டு

தினங்களாக இந்த இரண்டு குடும்பங்களிலும் மகா சந்தோஷகர மான அனேக சம்பவங்கள் நிகழ்ந்திருக்கின்றன. சாதாரணமாக நம்முடைய தேசத்து ராஜாங்கத்தில் கூட சந்தோஷப் பிரமேயங் களைக் கருதி, மகா கொடுமையாக தண்டிக்கப்பட்ட குற்றவாளி களைக் கூட மன்னித்து விடுகிறார்கள். அப்படி இருக்க, ஏதோ குழந்தை புத்தியால் கொஞ்சம் பிசகிப்போன நம்முடைய குழந்தையை நீங்கள் இப்படி முழுதும் புறக்கணிக்கலாமா; எப்படி யாவது அவளை நீங்கள் க்ஷமித்து ஏற்றுக்கொண்டு தான் தீர வேண்டும்" என்று வற்புறுத்திக் கூறிக் கெஞ்சி மன்றாடினான். கல்யாணியம்மாள், "தம்பீ! அவளால் எனக்கு ஏற்பட்ட அவமானம் எவ்வளவென்பதை நீ தெரிந்து கொண்டால் இப்படிப் பேசமாட்டாய்; அவளை நான் ராமலிங்கபுரம் ஜெமீந்தாருடைய பிள்ளைக்குக் கட்டிக் கொடுப்பதாக அவர்களுக்குக் கடிதம் எழுதி யதை அறிந்து, அவளே, தான் கெட்டுப் போய் விட்டதாக அவர் களுக்கு ஒரு மொட்டைக் கடிதம் எழுதியிருக்கிறாளே! அவளுடைய நெஞ்சழுத்தத்தை என்னவென்று சொல்லுகிறது! அதன் பிறகு, ராமலிங்கபுரத்தார் பெண்ணைப் பார்க்க இங்கே வந்த போது, நான் எப்படிப்பட்ட அயோக்கியமான காரியம் செய்து மானத்தைக் காப்பாற்றிக் கொள்ள நேர்ந்தது தெரியுமா? நம்முடைய கோமள வல்லியம்மாளை நான் துரைஸானி என்று காட்டினேன்; இவளும் காயலாவாய்ப் படுத்திருப்பதாக நடிக்கும்படியாக நேர்ந்தது. அவளால் இத்தனை மானக்கேடும் துன்பமும் நேர்ந்தன. இனி அவளுடைய முகத்திலும் நான் விழிப்பேனா? அந்த ராமலிங்க புரத்தார் மறுபடியும் வந்தால் நான் என்ன சொல்லுகிறது?" என்று மிகவும் பதைப்பாக பேசினாள். அதைக் கேட்ட மதனகோபாலன் என்ன மறுமொழி சொல்வதென்பதை உணராமல் சிறிது நேரம் தயங்கி நிற்க, உடனே கோமளவல்லியம்மாள் மிகவும் பணிவாகப் பேசத் தொடங்கி, "அம்மா! நம்முடைய துரைஸானியம்மாளை நீங்கள் காப்பாற்றாவிட்டால், வேறே யார் காப்பாற்றப் போகி றார்கள்? அவள் உங்களுடைய வயிற்றில் பிறந்த குழந்தை யல்லவா? உங்களுடைய கை கண்ணில் பட்டுவிட்டால், கையைத் தண்டிப்பீர்களா! ஏதோ அவள் தவறு செய்திருந்தாலும், அது கடைசியில் மகா சிரேஷ்டமான சம்பந்தமாகவே முடிந்து

போய்விட்டது. இனிமேல், நாம் அதை எப்படி மறைத்துக் காரியத்தை முடிக்க வேண்டுமோ, அப்படிச் செய்தே தீரவேண்டும். எனக்கு ஒரு யோசனை தோன்று கிறது. அந்த மாதிரி செய்தால் எல்லாம் ஒழுங்காகிவிடும் என நினைக்கிறேன்" என்று பணிவாகவும் உருக்கமாகவும் கூறினாள். அவளது சொற்களைக் கேட்டு ஒருவாறு இரக்கங் கொண்ட கல்யாணியம்மாள், "என்ன யோசனை அது? சொல் பார்ப்போம்" என்றாள். கோமளவல்லியம் மாள், "இப்போது மோகனரங்கனுக்கும், துரைஸானியம்மாளுக்கும் ரகசியத்தில் கலியாணமாகி இருந்தாலும், அதை எவரும் அறியாராகையால், அவள் மோகனரங்கனுடைய பெண்ஜாதி என்று நாம் வெளிப்படையாகச் சொன்னால், கலியாணம் எப்போது நடந்ததென்ற கேள்வி பிறக்கும். ஆகையால், நாம் வெளிப்படையாக அவளுக்கும் மோகனரங்கனுக்கும் இன்னொரு தரம் கலியாணம் பண்ணியே தீரவேண்டும்; ராமலிங்கபுரத்தாரும் நம்மைப் பற்றி இழிவாகப் பேசாமலிருக்கும்படியாக நாம் முன்னே செய்தது போல இன்னொரு தந்திரமும் செய்ய வேண்டும்" என்றாள். கல்யாணியம்மாள் மிகுந்த சந்தோஷமடைந்து, "ஆம், மெய்தான்; துரைஸானிக்கு இன்னொரு தரம் வெளிப்படையாகக் கலியாணம் செய்ய வேண்டும் என்பது நல்ல யோசனைதான். மோகனரங்கனுக்குப் பெண்டாட்டியான அவளை இனி நாம் ராமலிங்கபுரத்தாருக்குக் கட்டிக் கொடுக்கலாம் என்று யோசனை சொல்லப் போகிறாயா?" என்று பதற்றமாகக் கேட்க, கோமள வல்லியம்மாள் புன்னகை செய்து, "இல்லையம்மா! நான் அப்படிப் பட்ட கெட்டகாரியத்தை மனசாலும் நினைப்பேனா! அதெல்லாம் ஒன்றுமில்லை. துரைஸானியம்மாள் மோகனரங்கனையே கட்டிக் கொள்ளட்டும்; என்னை நீங்கள் அன்றைய தினம் துரைஸானி யம்மாள் ஆக்கினீர்கள் அல்லவா; அதை எப்போதும் நிரந்தர மாகவே செய்து விடுங்கள். நான் தான் மூத்தவளான துரைஸானி யம்மாள் என்றும், அவள் இளையவளான கோமளவல்லி என்றும் சொல்லி விடுவோம்; நம்முடைய குடும்ப விஷயங்கள் எல்லாம் நம்முடைய வேலைக்காரர்கள் எல்லோருக்கும் தெரிந்து போய் விட்டன ஆகையால், அவர்களுக்கும் இந்த மாறுதலைச் சொல்லி

எச்சரித்து விடுவோம். நீங்கள் ராமலிங்கபுரத்தாருக்குக் கடிதம் எழுதியபடி நான்தான் மூத்த பெண் என்று சொல்லி என்னை அவர்களுடைய வீட்டில் கட்டிக் கொடுத்து விடுங்கள்; அவர்களும் என்னைப் பார்த்திருக்கிறார்கள் ஆகையால், அதைப்பற்றி சந்தேகப் படமாட்டார்கள். சின்னப் பெண்ணை கிருஷ்ணாபுரம் ஜெமீந் தாருடைய பிள்ளைக்குக் கொடுக்க இப்போதுதான் முடிவான தென்று நாம் இனி அவர்களுக்குச் சொல்லிவிடலாம். இப்படி நாம் செய்தால், துரைஸானியம்மாளைப் பற்றிய சங்கதி எல்லாம் மறந்து போகும். நான் கடைசி வரையில் மூத்தவள் என்றே சொல்லிக் கொண்டு இருந்து விடுகிறேன். எனக்கும் அக்காளுக்கும் வயசிலும், தோற்றத்திலும் அவ்வளவு அதிகமான வித்தியாசம் இல்லையாகையால், அவர்கள் சந்தேகிக்கப் போகிறதில்லை" என்றாள். அந்த யோசனையைக் கேட்ட கல்யாணியம்மாள் கட்டிலடங்காத மகிழ்ச்சியும், ஆவேசமும், ஆனந்தமும் அடைந்து ஒரே பாய்ச்சலாகப் பாய்ந்து கோமளவல்லியம்மாளை ஒரு குழந்தை போல வாரி எடுத்துக் கட்டித் தழுவி அவளது கன்னங்களில் வாய் ஓயாமல் முத்தமிட்டு, "ஆ! என் கண்ணே! என் முத்தே! என் தங்கமே! உன்னைப் போன்ற பெண்ணும் மதனகோபாலனைப் போன்ற பிள்ளையும் இரண்டு உலகங்கள் போல எனக்கிருக்க, இனி எனக்கு இந்திரன் சந்திரன் கூட இணையாக மாட்டார் என்றே எண்ணுகிறேன். கண்மணியே! நீ தீர்க்க சுமங்கலியாக இருந்து வாழக்கடவை!" என்று கூறி மனதார வாழ்த்தி அவளைவிட்டு, மதனகோபாலனை நோக்கி, "சரி குழந்தை சொன்னது நல்ல முதல்தரமான யோசனை; அது போலவே நாம் நடத்திடுவோம். ஆனால், துரைஸானியை மாத்திரம் நான் இப்போது பார்க்கமாட்டேன். இன்னம் ஒருமாச காலமாவது கழிந்து, என் மனசில் உள்ள அருவருப்பு நீங்கின பிறகு நான் அவளைப் பார்க்கிறேன். நேரமாகிறது; நான் பெரியவரைப் பார்க்க வேண்டும்" என்று கூறி விடை பெற்றுக் கொண்டு அந்த அறையை விட்டு வெளியில் போக, அந்த அறையின் இன்னொரு வாசற்படிக் கப்பால் நின்று, அங்கே நடந்த சம்பாஷணைகளை எல்லாம் கேட்டிருந்த துரைஸானியம்மாள் மிகுந்த ஆவலும்

குதூகலமும் அடைந்து கதவைத் திறந்து கொண்டு, "அண்ணா! அண்ணா!" என்று மிகுந்த வாத்சல்யத்தோடு மதனகோபாலனை விளித்தவளாய் ஓடிவந்து அவனைக் கட்டித் தழுவினாள்.

★ ★ ★

35–வது அதிகாரம்

## பஞ்சகல்யாணி

மேலே குறிக்கப்பட்ட சம்பவங்கள் எல்லாம் நிகழ்ந்த பிறகு அந்த இரண்டு குடும்பங்களினது விஷயங்களின் சிக்கல்கள் எல்லாம் தீர்ந்து ஒழுங்குப்பட சுமார் மூன்றுமாத காலமாயிற்று. கிருஷ்ணாபுரம் ஜெமீந்தார் தனுஷ்கோடிப் போலீஸ் தலைவருக்கு அனுப்பிய அவசரத் தந்திக்கு அன்றைய தினமே நல்ல மறுமொழி கிடைத்தது. கிழவர் அன்றைய மாலை வண்டியிலேயே ஏறி மறுநாள் தனுஷ்கோடிக்குப் போய்ச் சேர்ந்து, போலீஸ் கச்சேரியில் இருந்த துரைராஜாவைக் கண்டு நயமான வார்த்தைகளைக் கூறி, அவனைத் தைரியப்படுத்தி அழைத்து வந்து, மனோகர விலாசத்தி லேயே வைத்திருந்து அவனுக்கு நல்ல புத்திகளைச் சொல்லி, தமது சந்தனக்கட்டை வியாபாரத்தை அவனே நிர்வகிக்கும்படி செய்து, அவன் தனது துன்மார்க்கங்களை எல்லாம் விட்டு நல்ல வழியில் நடந்து கொண்டால், அவனுக்குப் பெருத்த திரவியம் கொடுப்ப தாகவும், அழகிலும், குணத்திலும், ஒழுக்கத்திலும் நிகரற்றவளான மோகனாங்கியை அவனுக்கே கட்டிக் கொடுப்பதாகவும் வாக்களித் திருந்தார். அவனும் அவ்வாறே உண்மையிலேயே திருந்திப் போய், அவனைப் போல நற்குணமுள்ள பிள்ளை வேறே இருக்க மாட்டான் என்று எல்லோரும் கொண்டாடத்தக்க புதிய மனிதனாகி விட்டான். மோகனாங்கி, சகலவித நலன்களும் சிறப்புகளும் வாய்ந்தவளாக இருந்தும், அவள் அநாதை என்பதும், ஒரு பிடில் காரனுடைய மகள் என்பதும் கச்சேரியில் ருஜுவாகி விட்டமை யால், அவளை வேறே தக்க இடத்தில் கலியாணம் செய்து கொடுக்க சாத்தியப்படா தென்பதைக் கிழவர் கண்டு கொண்டார். அதுவும் நிற்க, அவள் மைசூரில் பெண் பாடசாலையில் படித்திருந்த காலத்தில் ஓர் உபாத்தியாயர் அங்கிருந்த பெண்களில் பலரைப்

பொறுக்கி நாடகங்களுக்குப் பழக்கி அந்தப் பள்ளிக்கூடத்தில் வேடிக்கையாக நடித்துக் கொண்டு வந்தார். எல்லோரும் அந்த நடிகனின் திறமையை வெகுவாகப் புகழ்ந்து பேசியதிலிருந்து, அவர் அந்தப் பெண்களை அழைத்துக் கொண்டு அயல் ஊர்களுக் கெல்லாம் போய் **மைசூர் பாலிகா மனமோகன நாடகக் கம்பெனி** என்ற பெயரோடு ஆடிவந்ததன்றி, பெண்களையும் பாதுகாத்து வந்தார். கிருஷ்ணாபுரம் ஜெமீந்தார் நாடகத்தில் அதிக விருப்பங் கொண்டவர் ஆதலால், அதைப் பற்றி எவ்வித ஆட்சேபமும் சொல்லாது மோகனாங்கியைக் கொஞ்ச காலம் அதில் விட்டு வைத்திருந்து, கடைசியில் நிறுத்திவிட்டார். அவ்வாறு அவள் நாடகத்தில் சேர்ந்து ஆடியவள் என்பதை எவரேனும் அறிந்தால், அவளைக் கலியாணம் செய்து கொள்ளமாட்டார்கள் என்ற எண்ணமும் உதித்தமையாலும், துரைராஜா அவளிடத்தில் அதிக மோகங் கொண்டிருந்ததன்றி, அவ்வளவு சிரேஷ்டமானவளை அடைந்து விட்டால், அவனது பெண் பைத்தியம் நிவர்த்தியாகி விடும் என்று தோன்றியதாகையாலும், கிருஷ்ணாபுரம் ஜெமீந்தார் அவனுக்கே மோகனாங்கியைக் கலியாணம் செய்து கொடுத்து விடுவதென்று தீர்மானித்துவிட்டார். அதன் பிறகு ராஜாயி அம்மாளினது விஷயத்தையும் ஒருவாறு ஒழுங்குப்படுத்தினார். அவள் சுந்தரம் பிள்ளைக்கு வைப்பாட்டியாக இருந்தாள் என்பதை அவர் அறிந்து கொண்டார் ஆதலால், அவளை வேறே தகுதியான எவ்விடத்திலும் கலியாணம் செய்து கொடுக்கத் தோதுபடாமல் இருந்தது. சுந்தரம் பிள்ளை எவ்வித உறவினருமின்றி ஏகாங்கியாக இருந்தமையால், அவரது பிள்ளைப் பட்டத்தை மாற்றி அவரை **சுந்தரப் பாண்டிய தேவராக்கி**, நல்வழிப்படுத்தி, மைசூருக்குப் பக்கத்தில் உள்ள ஒரு சிறிய சமஸ்தானத்தை அவர் பேரில் வாங்கி, அவரை ஜெமீந்தாராக்கி, அவருக்கே ராஜாயியைக் கலியாணம் செய்து கொடுக்க முடிவு செய்தார். சுந்தரம் பிள்ளையும், ராஜாயியும், போலீஸ் உத்தியோகஸ்தர்கள் போல வேஷந்தரித்து அநேக வழிப்பறிகளையும், மோசங்களையும் நடத்தியதைப் பற்றி அவர்களது வீட்டில் சோதனை போட வாரண்டு பிறந்திருந்தது முன்னரே சொல்லப்பட்ட விஷயம் ஆகையால் ஜெமீந்தார் அவர்களது வசத்திலிருந்த பணத்தைத் தவிர, மற்ற சகலமான

பொருட்களையும் நெருப்பில் போட்டுக் கொளுத்தச் செய்து, போலீஸ் கமிஷனரிடத்தில் போய் ரகசியமாகப் பேசி, சில போலீசாரை அழைத்து வந்து வீட்டைச் சோதனைப் போடச் செய்து சந்தேகமான பொருட்கள் ஒன்றுமில்லை என எழுதச் செய்து அவர்கள் இருவரையும் தப்பவைத்தார். அது நிற்க, துரை ஸானியம்மாளது விஷயத்தில் கல்யாணியம்மாளுக்கிருந்த கோபத்தையும் ஜெமீந்தார் தணித்து, கலியாண தினம் வரையில், துரைஸானியம்மாள் மாரமங்கலத்து பங்களாவிலேயே இருக்கும் படி செய்தார்.

கிருஷ்ணாபுரம் ஜெமீந்தாரது ஏற்பாடுகள் இப்படி இருக்க, கல்யாணியம்மாள் தனது சமஸ்தானத்தை ஹைகோர்ட்டின் தீர்மானப்படி மதனகோபாலனது பேரிலேயே மாற்ற வேண்டும் என்று கலெக்டர் துரைக்கு மனுக்கொடுத்து, மகா கீர்த்தி வாய்ந்த பாரிஸ்டர் குரோட்டன் துரையை அமர்த்தி வாதாடச் செய்து, சமஸ்தானமும், சகலமான சொத்துக்களும் மதனகோபாலன் மீது பதிவாகும்படி செய்தாள். இன்னமும் ஹைகோர்ட்டுத் தீர்மானத் தில் பொன்னம்மாளின் மீது போலீசார் கிரிமினல் நடவடிக்கை எடுத்துக் கொள்ள ஜட்ஜி துரை அனுமதி கொடுத்திருந்த விஷயத் திலும் கல்யாணியம்மாள் அபரிமிதமான பொருளைச் செலவு செய்து, பாரிஸ்டர் குரோட்டனைக் கொண்டே போலீசாரிடத்தில் வாதாடச் செய்து, அந்தக் கிழவியை மீட்கச் செய்தாள்.

அவ்வாறு சகலமான வழக்குகளும் தீர்ந்து, அவர்கள் எல்லோரும் எவ்விதக் கவலையுமின்றி சந்தோஷமாக இருக்கத்தக்க நிலைமையை அடைய சரியாக மூன்றுமாத காலமாயிற்று; நான்காவது மாத ஆரம்பத்தில் மனோகர விலாசம் என்ற அந்த அரண்மனை இந்திர விமானம் போல அலங்கரிக்கப்பட்டு பிரமாதமான கலியாணக் கோலத்தோடு ஜ்வலித்தது. சுமார் லட்சம் ஜனங்களுக்கு மேல் கூடியிருக்கத் தகுந்த பெருத்த கொட்டகைப் பந்தல், இந்த உலகத்தில் உள்ளதும் இல்லாததுமான எல்லா அலங்காரங்களும் நிறைந்து, ஏதேனும் ஒரு பொருளைப் பார்த்தோர், சலிக்காமல், அதையே பார்த்துக் கொண்டிருக்கும்படியான அதியற்புத வனப்பு வாய்ந்து, சுவர்க்கலோகம் போல விளங்கியது. சக்கரவட்டமாக

அமைக்கப்பட்டிருந்த அந்தக் கொட்டகை பந்தலிற்குள் ஐந்திடங்களில் ஐந்து முத்துப் பந்தல்களும் கலியாண மேடைகளும் காணப்பட்டன. அந்த ஐந்து முத்துப் பந்தல்களின் கீழ், ஐந்து ஜதை யௌவனப் புருஷர்களும், யௌவன மடவன்னங்களும் அடிமுதல் முடிவரையில் வைரங்களும் ஜரிகைகளுமே நிறைந்து ஜெகஜ் ஜோதியாக மின்ன, தேவலோகத்து ஸதிபதிகள் போலத் தேஜோமயமாக உட்கார்ந்திருந்தனர். லட்சக்கணக்கான சீமான்களும் சீமாட்டிகளும் வந்துகூடி நெருங்கி இருந்தனர். பத்து ஜதை மேளங்களும், இருபது ஜதை பாண்டுகளும் அண்டம் செவிடு படும்படி தேவதுந்துபி போல ஜாம் ஜாமென்று முழங்குகின்றன. ஆயிரக்கணக்கில் வந்து கூடிய அந்தணர் யாவரும் வேதகீதம் பாடி ஐந்திடங்களிலும் ஒரே முகூர்த்தத்தில் திருமாங்கலிய தாரணம் செய்து வைக்கிறார்கள். கல்யாணியம்மாளும் கிருஷ்ணாபுரம் ஜெமீந்தாரும் தாம் எந்தப் பந்தலில் நிற்பதென்று அறியாமல், எல்லா இடங்களிலும் இருந்து ஆனந்த வெறி கொண்டு தலைகால் தெரியாமல் அங்குமிங்கும் ஓடி அலைகிறார்கள். ஒரு பந்தலில் துரைஸானியம்மாளும், மோகனரங்கனும் உட்கார்ந்து, இந்த உலகத்தில் தங்களைப் போல இரண்டு தரம் கலியாணம் செய்து கொண்டவர்களும், பரம ஏழைகளாய் இருப்பதாக எண்ணிக் காதலித்துத் தங்களுக்குத் தெரியாமலே லட்சாதிபதிகளானவர்களும் யாராகிலும் உண்டா என்று கேட்பவர் போல மிகுந்த மமதையும் குதூகலமும் கொண்டவர்களாகக் காணப்பட்டனர். இன்னொரு பந்தலில் ராஜாயி அம்மாளும் சுந்தர பாண்டிய தேவரும், ஒரு மண்டலேசுவரனும், அவனது பட்ட மகிஷியும் போல மகா கம்பீரமாக உட்கார்ந்து, சாமர்த்தியத்திலும், சாதுர்யத்திலும், பிறரை எத்துவதிலும் எங்களைப் போல யாராகிலும் இருப்பார்களா என்று கேட்பவர் போல, கருடப் பார்வை பார்த்தவராக உட்கார்ந்திருந் திருந்தனர். இன்னொரு பந்தலில் கோமளவல்லியம்மாளும் ராமலிங்கபுரம் ஜெமீந்தாரது மூத்த குமாரரும் மிகுந்த நாணமும் வெட்கமும் அடைந்தவர்களாய் உட்கார்ந்து, உத்தமமான ஸதிபதிகள் என்பதற்கு உதாரணமாக விளங்கி இருந்தனர். நான்காவது பந்தலில் துரைராஜாவும் மோகனாங்கியும் உட்கார்ந் திருந்தனர். ஆனால் அவர்களுள் மணவாளன், மணவாட்டியின்

அற்புத சிருஷ்டிக்குத் தகுந்தவன் அல்லவானாலும், குருட்டு யோகத்தினால், அவனுக்கு அந்தப் புண்யவதி வந்து வாய்த்தாள் என்று எல்லோரும் சொல்லத் தகுந்த ஜதையாக அவர்கள் விளங்கினர். மிகுதியிருந்த ஐந்தாவது முத்துப் பந்தலிலே தான் நமது கதாநாயகனான மதனகோபாலனும், அவனது தர்ம பத்தினியான சௌபாக்கியவதி கண்மணியம்மாளும், மகா விஷ்ணுவும், லக்ஷ்மிதேவியும் போலவும், ஸ்ரீ ராமனும் ஜானகி தேவியும் போலவும், எவ்விதக் குற்றம் கூறுவதற்கும் இடமின்றி, சகலமான உத்தம குணங்களிற்கும் இருப்பிடமென எல்லோரும் புகழத்தக்கபடி இனிது வீற்றிருக்க, நல்ல சுப முகூர்த்தத்தில் ஐந்து பந்தல்களிலும் திருமாங்கலிய தாரணம் நிறைவேறியது.

கல்யாணியம்மாளும், கிருஷ்ணாபுரம் ஜெமீந்தாரும், ஸதிபதி களான பதின்மரும் சாயுஜ்ய பதவியில் இருப்பவர் போல நித்யாநந்த சுகமநுபவித்துப் பூரித்துப் புளகாங்கிதமடைந்து இப்போதும் கலியாணங்களை நடத்திக் கொண்டே அமோகமாக இருக்கிறார்கள்.

---

# மதிப்புரை

ஆநந்த குணபோதினி தனது கமலம் 1 இதழ் 11–ல அடியில் வருமாறு எழுதுகிறது:–

## ஸௌந்தர கோகிலம்

*ஸ்ரீமான் வடுவூர் – கே. துரைசாமி ஐயங்காரவர்கள் பி.ஏ. இயற்றியது.*

ஒரு குடும்பத்தலைவரின காலததுக்குப் பிறகு அவரை நமபிய மனைவியும், அவரது புத்திரிகளும் ஆண் திக்கற்றுப் படும் பாடுகளையும் நேரும் சோதனைகளையும் இந்நூல் வெகு நனறாக எடுத்துரைக்கின்றது கண்ணபிரானின் உததம குணங்களும், உயிருக்குத் துணிந்து அபாயத்தி லிருந்து பிறரை விடுவிக்கும் திறனும், தன் கடமையைச் செயத அள வோடு திருப்தியேற்குந் தகைமையும் அவன்றன் காதல் நலமும், அவனுக்கு நேரும் இன்னல்களும், இதே விதமாகக் கோகிலாம்பாளின் தூய நடத்தைகளும், நிதான விவேகமும, அவளது காதலும், பிறகு நேரும் ஸம்பவங்களும், ஸௌந்தரவல்லியின உலகியலுணராத மெல்லிய தன்மையும், பிறரது வஞ்சனை வலையிலாழ்ந்து மயககுறும் பான்மையும் வாசகாகளின் மனத்தை வசீகரிக்கச் செய்கின்றன. போலீஸ் அதிகாரிகளின் அநீதங்களும் சுந்தரமூர்த்தியின் காமப்பேயும் அவனது துஷ்கிருத்தியங்களும் முனியன் முத்துசாமி போன்ற வேலையாட்களின் மோசச் செயல்களும் உலக சுபாவத்தை நன்றாக நினைபபூட்டுகினறன. கற்பக வல்லி, பூஞ் சோலையமமாள் இவர்களின கஷடங்களும், அவாகள் படும ஸஞ்சலங் களும் மிக்க சோகபாகமாகும் உத்தம வேலையாட்களுக்கு உதார்ணமாய் முருகேசனையும் கநதனையும் குறிபபிடலாம் வககீல ராமராவ் ஆபத் ஸகாயரான உததம புருஷராயினும் அத்தகையோருக்குததான் தொழிலுக்குத் தக்க வருமானததைக் காணோம்

இந்த நாவலின் இடையிலே இதற்குச் சம்பந்தமில்லாததாய்த் தோனறுகின்ற திவானின் சரித்திரம் அமிர்தபானம போன்று அத்யந்த ஸ்வாரஸ்யமாய் ருசிக்கின்றது. அவரது பெருந்தகைமையும் எளியோர் மாடடு அவா பாராட்டும் அன்பும், செயயும் அரிய உதவிகளும், தமது கையெழுத்து போனறு மோசக் கையொப்பமிட்டோனை ஆதரிக்கும பானமையும, போலீஸ் இன்ஸபெக்டரை வெகு சாதுர்யமாய் ஆழங்கண்டு அந்த அக்கிரமியை சிக்ஷிதது நிரபாரதிகளைக் காககும் பரிவும், அவரது பத்தினியின் கற்பிலக்கணமும், அந்தோ! இறுதியில் அம் மகாநுபாவரது

வாழ்க்கை பாழ்பட்டு அவர் துறவியாதலும், முடிவில மறைந்த தமது தந்தையைக காணபதுமான பாகங்களால் இந்நாவலின் மதிபபு வெகு சிலாக்கினையான உச்சிக்கு உயாந்து வாசகர்களைத திடுக்கிடடுப் போகும்படி செய்விக்கினறது. விருத்த விவாகத்தின் கோரமும், விவாகம் செய்து கொண்ட ஆடவர்க்கு அதனால் ஸஞ்சலப் பெருக்கேயன்றி ஒரு துளி இன்பமுமில்லையென்பதும் குஞ்சிதபாத முதலியாரால் இனிது புலனாகும்.

இந்நாவலின் மற்ற பகுதிகள் இனி வெளிவரும் மூன்றாம் பாகத்தில பூர்த்தி அடையுமென்று தெரிகிறது. ஆயினும் இவ்விரு பாகங்களினின்றே காலயூகங்கள் தோனறுகின்றன. கோகிலாவை மணத்தற்காகக் கணணபிரானைத தபாற்களவிற் சேர்த்த சுந்தரமூர்த்தியே அக்களவின் காரணஸ்தனாகலாம. சௌந்தரவல்லி தனது மெல்லிய தன்மையில் சுந்தரமூர்த்தியால் கற்பழிந்தும் கெடலாம்? கோகிலா தன் நற்கணவனான கண்ணபிரானை மணந்து இன்புறுதலும் கைகூடலாம். திவானின் மனைவி தன் புத்திரனைக் கண்டித்து நடத்தும் பான்மைக் குறிப்புக்கும் (இரண்டாம் பாகம் பககம் 122) கற்பக வல்லி கண்ணபிரானைக் கடிந்துரைக்கும் குறிப்புக்கும் (முதற் பாகம் பக்கம் 51 - 52) உள்ள ஒற்றுமையைக் கொண்டு திவானின் காணாமற்போன மனைவியும் குமாரனுமே கற்பக வல்லியும் கண்ணபிரானுமென்றும் நினைக்கலாம். இக்கண்ணபிரானுக்கும் சுந்தரமூர்த்திககும் கூட ஒரு உறவு நேர்ந்து கொள்ளுமோவெனவும் ஐயம். எவ்விதமோ இந்நாவலின் மூன்றாம் பாகம் மிக்க சமத்காரமாய் எழுதப் பட்டிருக்குமென்பது திண்ணமாதலின் ஆத்யந்த ஸ்வாரஸ்யமான இந் நாவலின் முடிவுக்காக அம்மூன்றாம் பாகத்தை ஆவலுடன் எதிர்நோக்கி நிற்கின்றோம். **ஆசிரியர்க்கு நமது வாழ்த்து.**